
THAIVEEDU JULY 2023 ஜூலை www.thaiveedu.com

# தாய்வீடு



கறுப்பு ஜூலை
40 ஆண்டுகள் ! – P. விக்னேஸ்வரன்



ஆர்ப்பாட்டமில்லாத அற்புதக் கலைஞன்
சாந்திநாதன்



ஐரோப்பிய வல்லரசுகளின் காலனித்துவ
ஆட்சிக்குட்பட்டிருந்த ஆபிரிக்கா -
ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை
– ரூபன் சிவராஜா

குருநாதர் புகழ் பாடிய கவிநாதர் பாரதி
– கிருங்கை சேதுபதி


NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law



Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com


Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated


Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
Dir 416.803.7344
www.reon.ca


RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com


MORTGAGE ALLIANCE
Best Rates & Advice You Can Trust!
Lic# 10530
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3


Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HomeLife Galaxy


உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)


MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com


Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage*


VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்

**நிறுவன வரைகலைஞர்**
கருணா

**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.

**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து)
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).

**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா(இங்கிலாந்து)
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.

**தட்டச்சு**
சாம் டானியல்.

**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.

**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா

**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.

**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.

**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253

**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0

Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## நாற்பதாண்டுகால வடு!

கறுப்பு ஜூலையின் கோர நிகழ்வுகள் நடந்தேறி நாற்பது ஆண்டுகள் கடந்துவிட்டன. அந்த இருளும் அச்சமும் நிறைந்த நாட்கள் ஈழத்தமிழரின் கூட்டு ஆன்மாவில் ஏற்படுத்திய வடுவும் வலியும் காலகாலத்துக்கும் ஆறாதது. இருந்தபோதும், அந்த நாட்களின் கோரங்களும் அது எமக்குக் கற்றுத்தந்த பாடங்களும் எமது நினைவிலிருந்து மெல்லமெல்ல அகன்று நாளடைவில் மறந்துபோய்விடுமோ என்ற அச்சம் இப்போது எழுகிறது.

1983 ஜூலை உலக ஊடகங்களால் எப்போதும் தவறாகவே சித்தரிக்கப்பட்டு வந்திருக்கின்றது. அதுவே ஈழ விடுதலைப் போரின் தொடக்கப்புள்ளி என்று மீண்டும் மீண்டும் தானே ஒப்பித்து அந்தத் தவறான தகவலையே உண்மையென்று நம்பிவிட்டது வெளியுலகு. 1970களிலேயே இலங்கைத் தீவிலே ஈழத்தமிழரின் உரிமைக்கான போராட்டம் ஆயுதப்போராட்டமாக மாறிவிட்டிருந்தது என்ற உண்மை இதனால் நசுக்கப்பட்டது. 1983 ஜூலை 23-ஆம் நாள் சனிக்கிழமை யாழ். திருநெல்வேலியிலே விடுதலைப் புலிகள் இயக்கத்தால் ஸ்ரீலங்கா இராணுவத்தின்மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்விளைவே கறுப்பு ஜூலை என்பது உலகம் மீண்டும் மீண்டும் உரைத்துக்கொண்டிருக்கும் இன்னொரு பொய். 1977, 1981 என்று தொடர்ந்த தமிழர்களின் மீதான திட்டமிட்ட வன்முறைகளின் அடுத்த கட்டமாகவே 1983-உம் திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதே உண்மை.

இந்த உண்மை இப்பொழுது பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாய் இருக்கின்றபோதும், தொடர்ந்தும் கறுப்பு ஜூலையை 'ஜூலைக் கலவரம்' அல்லது 'ஆடிக் கலவரம்' என்று குறிப்பிடும் மிகப்பெரும் தவற்றைத் தமிழர்களே இழைத்துவருவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆங்கிலத்திலும் கலவரம் எனப் பொருள்படும் 'riots' என்ற சொல்லே கறுப்பு ஜூலையை விவரிக்கவெனப் பொதுவான பயன்பாட்டில் உள்ளது. அரசின் ஆதரவோடும் அரச படைகளின் நேரடி ஈடுபாட்டோடும் அரச ஆதரவு வன்முறைக் கும்பல்களால், அரசுப் பிரமுகர்களினதும் அமைச்சர்களினதும் நேரடி மேற்பார்வையின்கீழ் ஒரு சிறுபான்மை இனத்தின் உயிர்கள் மீதும் உடமைகள் மீதும் குறிவைத்துக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் எப்படிக் கலவரம் ஆகும்? அதை இனவழிப்பு வன்முறை எனக் குறிப்பிடுவதே மிகச்சரியாக இருக்கும். இந்த நிகழ்வைச் சரியான சொல்லால் அடையாளப்படுத்துவது அதன் நினைவுகள் நீர்த்துப்போகாமல் பாதுகாப்பதற்கும் அது ஏற்படுத்திய பாதிப்பின் கனதியை அடுத்த தலைமுறைக்கு எடுத்துரைப்பதற்கும் முக்கியமானது. அவ்வகையிலே, ஆங்கிலத்திலே அண்மைக்காலமாக 'pogrom' என்ற மிகப்பொருத்தமான சொல் கறுப்பு ஜூலையை விவரிக்கவென அதிகரித்த முறையிலே பயன்பாட்டில் உள்ளமை நம்பிக்கையளிக்கிறது. வரலாற்றை ஆவணப்படுத்த துல்லியமான மொழி கையாளப்படுவது மிகமுக்கியம்.

நாற்பதாண்டுகளுக்கு முந்தைய ஓர் இனவழிப்புத் தாக்குதல், அதுவும் அதற்குப் பின்னரான கால் நூற்றாண்டில் இடம்பெற்ற இனவழிப்புப் போருடன் ஒப்பிடும்போது கோரம் குன்றியதாய்த் தோன்றும் ஒரு தாக்குதல், இன்றும் நினைவுகூரப்படவேண்டியதாய் இருப்பது சோகமானது. இந்த இனவழிப்புகளை முன்னின்று நடத்திய அமைச்சர்களும் ஆதரவு வழங்கிய அதிகாரிகளும் பல முறைகளில் பலரால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றபோதும், இந்த வன்முறைகளுக்கான முறையான பொறுப்புக்கூறலோ, தண்டனை வழங்கலோ, மன்னிப்புக்கோரலோ இன்றுவரை நிகழவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி, என்றும்போல் இன்றும் எட்டாக் கனியாகவே உள்ளது. திட்டமிட்டுக் கட்டவிழ்த்து விடப்பட்ட அந்த வன்முறையிலே கொல்லப்பட்ட உயிர்களின் எண்ணிக்கை பற்றியும் அழிக்கப்பட்ட உடமைகளின் பெறுமதி பற்றியும் ஊகங்களே எம்மிடம் எஞ்சியுள்ளனவேயன்றி, அவை பற்றிய முறையான கணக்கெடுப்புகள்கூட இல்லை. கறுப்பு ஜூலை என்றதும், கொழும்பிலும் அதையண்மித்த புறநகரங்களிலும் நிகழ்ந்த இனவழிப்பு வன்முறைகளே பலருக்கும் நினைவிலிருக்கின்றன. அதே நாட்களில் வடக்கிலும், கிழக்கிலும், குறிப்பாக மலையகத்திலும் நிகழ்த்தப்பட்ட கொடூரங்கள் பற்றித் தெரிந்திருப்பவர்களே குறைவு. அதனாலேயே, கறுப்பு ஜூலையை நினைவுகூர்வதோடு, அதை ஆவணப்படுத்துவதும் அதன் கோரமுகத்தின் முழுமையான வடிவத்தை உலகறியச் செய்வதும் முக்கியமானது.

இந்த நினைவுகூரலும் ஆவணப்படுத்தலும் இந்த இனவழிப்பு நிகழ்வு உலகின் மனச்சாட்சியிலிருந்து மறைந்துவிடுவதைத் தடுப்பதோடு, இதுபோன்றதொரு இனவழிப்பு இன்னொருமுறை எம்மீது நிகழ்த்தப்படுவதைத் தடுக்கவும் உதவலாம் என்ற பேரவாவும் எமக்குண்டு. ஏனெனில், இலங்கையில் கறுப்பு ஜூலை போன்றதொரு இனவழிப்பு மீண்டும் ஒருமுறை தமிழர்கள் மீதோ, ஏனைய சிறுபான்மை இனங்கள் மீதோ கட்டவிழ்த்துவிடப்படாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. இத்தகைய உத்தரவாதத்தையும் பாதுகாப்பையும் இலங்கையின் அரசிடம் எதிர்பார்க்க முடியாது என்ற தெளிவு மட்டுமே எம்மிடம் உண்டு. ஏனெனில் சிறுபான்மை இனங்களின் உரிமைகளை மட்டுமல்ல, அவர்களின் அடையாளங்களையும் பூர்வீகங்களையும்கூடக் குழிதோண்டி ஆழப் புதைத்து, அந்தப் புதைகுழிகளின் மேலும் புத்தர் சிலைகளை நிறுவுவதிலேயே இலங்கையின் மதவாத அரசு இன்றும் முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. இந்நிலையிலே எமது வரலாற்றை நினைவில் பேணுவதும் ஆவணப்படுத்துவதும் எமது பொறுப்பாகிறது.

# இம்மாதத் தாய்வீட்டில்...


**கறுப்பு ஜுலை**
**40 ஆண்டுகள்** 5
- P. விக்னேஸ்வரன்

**கறுப்பு ஜுலை**
**தெரிந்த நினைவுகள்! தெரியாத பின்னணி!** 14
- போல் ஜோசேப்

**ஹென்றி கிசின்ஞர் 100** 18
- ரதன்

**ஐரோப்பிய வல்லரசுகளின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த ஆபிரிக்கா - ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை** 22
- ரூபன் சிவராஜா

**நவீன காட்டுமிராண்டிகளுக்கு வனத்தலைவரின் கடிதம்!** 27
- சதீஸ் செல்வராஜ்

**அங்காதிபாதம் - 400**
**வைத்தியன் இயல்பு** 32
- பால. சிவகடாட்சம்

**இடைவெளி அடைப்பும் கசிவுத்தடுப்பும்** 34
- வேலா சுப்ரமணியம்

**வீட்டுக் காப்புறுதி** 36
- செந்தூரன் புனிதவேல்

**உணவும் உணர்வும்** 38
- வேதநாயகம் தபேந்திரன்

**சாட் ஜி.பி.ரி (ChatGPT) என்றால் என்ன?** 41
- சுப்ரமணியம் ஜெயசீலன்

**ஸ்பெயின் நாட்டின் கிரெனடா** 46
- குரு அரவிந்தன்

**கோவிந்த் நிஹலானி**
**ஆக்ரோஷ் முதல்...** 49
- ஓவியர் ஜீவா

**சப்த தீவுகளின் தலைமகன்**
**அமரர் ஏ.எல். தம்பிஐயா** 52
- வே. விவேகானந்தன்

**ஆர்ப்பாட்டமில்லாத**
**அற்புதக் கலைஞன் சாந்திநாதன்**
54
- கதிர் துரைசிங்கம்

**செயல் வீரர் சாந்திநாதன்** 56
- அ. புராந்தகன்

**சாந்திநாதா!** 57
அ. கந்தசாமி

**இனிய நண்பர் நாடகர் சாந்திநாதன் - சில நினைவுகள்** 58
- க. பாலேந்திரா

**மனவெளியில் சாந்தியண்ணா** 61
- செல்வன்

**மகாஜனக்கல்லூரியும்**
**நாடகநெறியாளர் சாந்திநாதனும்** 64
- குரு அரவிந்தன்

**சாந்திநாதன் என்ற ஆளுமை** 65
– ப. ஸ்ரீஸ்கந்தன்

**தெமோதரை குறிஞ்சிவாணனின்**
**துயரம் சுமக்கும் தோழர்களாய்!** 68
- மல்லியப்புசந்தி திலகர்

**இளவாலை விஜயேந்திரனின் கவிதைத் தொகுப்பு! - முக்கியத்துவமும் பயன்பாடும்** 71
- ரூபன் சிவராஜா

**குட்டி இளவரசன்** 74
- அஹமட் பிஸ்தாமி

**போரின் மறுபக்கம்**
**ஈழ அகதியின் துயர வரலாறு** 78
- நெல்லை ஜெயசிங்

**ஓட்டமாவடி அறபாத் சிறுகதைகள்:**
**உடைந்த கண்ணாடிகளில்**
**மறைந்திருக்கும் குருவிகள்** 82
- ஜிஃப்ரி ஹாஸன்

**பாலேந்திராவின் அரங்கக் கட்டுரைகள்** 85
- எஸ்.கே. விக்கினேஸ்வரன்

**சமுத்திரன் எழுத்துகள் - தொகுதி 3:**
**கலை, இலக்கிய, சமூக, அரசியல்**
**விமர்சனப் பார்வை** 89
- மைத்ரேயி சபாரட்ணம்

**சொல்லப்படாத கதைகள்** 92
பொ. கருணாகரமூர்த்தி

**நூலகர்களின் பணிகளைப் பதிவுசெய்யும் - 'நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்'** 96
- எஸ். சத்தியதேவன்

**மொழியரசியல்!** 100
- மா. சித்திவினாயகம்

**படைப்பும் பின்நவீனத்துவமும்** 102
- சண்முகம் வெற்றிவேல்

**மானாங்கேணி - திருகோணமலை நகரின்**
**அழிக்கப்பட்ட குளம்** 106
- செந்தூரன் காளிராசா

**ஈழமண்ணில் இந்திய இராணுவம்:**
**நூல்வழிப் பதிவுகள்** 108
- என். செல்வராஜா

**சோழமும் ஈழமும் - ஒரு வரலாற்றுத் தேடல்** 111
- வி. துலாஞ்சனன்

**மரக்குதிரை** 115
- த. ஜீவராஜ்
ஓவியம்: டிராட்ஸ்கி மருது

**தமிழ் நாட்டார் கதைகளில் கதையாடல், எதிர்க் கதையாடல் மரபு** 118
- வே. நரேஷ்

**ஸ்டாலின் மீதான அவதூறுகள் - 2**
**தரவுகளோடு ஆடும் தகிடுதத்தங்கள்** 127
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

**மட்டக்களப்புப் பயணத்தில் ஜேம்ஸ் கோடினர்** 134
ஆங்கிலத்தில்: வண. ஜேம்ஸ் கோடினர்
தமிழில்: சா. திருவேணிசங்கமம்

**ஆராய்ச்சி முறையியல் சொற்களஞ்சியம்** 138
- பேராசிரியர் ஐயதேவ உயன்கொட
தமிழில்: கந்தையா சண்முகலிங்கம்

**குருநாதர் புகழ் பாடிய கவிநாதர் பாரதி** 144
- கிருங்கை சேதுபதி
ஓவியம்: ஜீவா

**திருக்குறளில் தொல்காப்பிய அகத்திணை**
**மரபுகள் - ஓர் ஆய்வியல் நோக்கு** 150
- பொன்னையா விவேகானந்தன்

**பரிமேலழகரின் திறனாய்வு முறைமை** 154
- சு. வேணுகோபால்
ஓவியம்: ஜீவா

**கம்பனின் கருவூலம் திறந்து...** 160
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

**ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள் - புறத்திணைவியல்** 163
- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்** 167
- நா. சுப்பிரமணியன்

**பூமியை நனைத்த ஒரு மழைத்துளி** 174
- ஜெனார்த்தன்
ஓவியம்: செல்வன்

**சாம்பரில் திரண்ட சொற்கள்** 179
- தேவகாந்தன்
ஓவியம்: ஜீவா

**அவனைப் போன்ற இன்னொரு மனிதன்** 183
- ஜியுன் லீ
தமிழில்: என்.கே. மகாலிங்கம்
ஓவியம்: ஜீவா

**மிரட்டிப் போன மொங்கோலியப் பேரரசு** 194
- நிமால் நாகராஜா

# கறுப்பு ஜூலை
## 40 ஆண்டுகள்
### P. விக்னேஸ்வரன்

இலங்கையின் புதிய ஊடகம், அதிலும் நான் சிறுவயது முதற் கொண்டிருந்த, திரையில் கதைசொல்லும் சினிமாக் கலை ஆர்வத்தை ஈடுசெய்யக்கூடிய தொலைக்காட்சித்துறையில், பலவற்றைச் செய்யவேண்டுமென்ற ஆர்வத்துடன் ஆரம்பித்த எனது தொலைக்காட்சித் தொழில்வாழ்க்கையில் மிக உற்சாகமாக ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையிற்தான், இலங்கைத் தமிழர்களின் வாழ்க்கையைப் புரட்டிப்போட்ட அந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வு நடந்தேறியது. ஆம், அதுதான், 1983-ம் ஆண்டு கறுப்பு ஜூலை.

1958, 1977-ம் ஆண்டுகளிலும் இலங்கையில் தமிழ்மக்கள் இனக்கலவரத்தால் பெரிதும் பாதிப்புக்குள்ளானார்கள் என்றாலும், 1983-ம் ஆண்டு இடம்பெற்ற தமிழருக்கு எதிரான வன்முறையும் அதனைத்தொடர்ந்து உக்கிரமடைந்த உள்நாட்டுப் போரும், இலங்கைத் தமிழ்மக்கள் பெருமளவில் நாட்டை விட்டு வெளியேறி உலகநாடுகள் பலவற்றிலும் அவர்களைத் தஞ்சம்கோர வைத்தது. இந்தச் சரித்திர நிகழ்வை நேரடியாக அனுபவித்த தமிழ்மக்களுக்கு அதைத் தம் வாழ்நாளில் என்றுமே மறக்கமுடியாது.

1970-களின் பிற்பகுதியிலிருந்தே தமிழ் இளைஞர்களின் ஆயுதமேந்திய உரிமைப்போராட்டம் ஆரம்பித்துவிட்டது. அப்போதிருந்தே இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் இலங்கை இராணுவத்தின் கெடுபிடிகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்ட போதிலும் கொழும்பில் நிலைமை சீராகவே இருந்தது. வடக்குக் கிழக்குக்கு வெளியே வசிப்பவர்கள் ஏன், வடக்குக் கிழக்கில் வசிப்பவர்கள்கூட, அப்போது செய்திகள் மூலமாகத் தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படுவதையும் அவ்வப்போது கொல்லப்படுவதையும் அறிந்துகொண்டார்களே தவிர, அவை பரவலாகப் பொதுமக்களைக் கலவரமடையச்செய்து, அவர்களின் அன்றாட வாழ்க்கையைப் பாதிக்கும் சம்பவங்களாக இருக்கவில்லை. அவ்வப்போது கொழும்பிலிருந்து பேரூந்துகளில் வடக்குக்குச் செல்லும்போது யாழ்குடாநாட்டை அண்மித்ததும் சில இராணுவச் சோதனைச் சாவடிகளில் பயணிகள் இறக்கப்பட்டுச் சோதனை நடைபெறுவது மட்டுமே பொதுமக்களைப் பாதிக்கும் நிகழ்ச்சியாக அப்போது இருந்தது.

இந்த நிலையில்தான் 1983-ம் ஆண்டு, ஜூலை மாதம் 23-ம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணம், திருநெல்வேலிப் பகுதியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனத்தின்மீது தமிழ் இளைஞர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. அதில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்தச் செய்தி அன்றிரவு வானொலி, தொலைக்காட்சிச் செய்திகளில் தெரிவிக்கப்படவில்லை.

### 1983 ஜலை 24-ஆம் திகதி:

அன்று ஞாயிற்றுக்கிழமை. நான் ரூபவாஹினியில் நாட்டிய நாடகமொன்றை ஒளிப்பதிவு செய்வதற்கு ஏற்பாடு செய்திருந்தேன். வெள்ளவத்தை, சைவமங்கையர் கழக மாணவிகளின் ‘சத்தியவான் சாவித்திரி’ நாட்டிய நாடகம். அந்த நாட்டிய நாடகத்தைப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து நெறிப்படுத்தியவர், அப்போது கொழும்பில் பிரபல நடன ஆசிரியர்களில் ஒருவராக விளங்கிய ஹரிதேவி ஜயசுந்தர அவர்கள். நான் காலை ரூபவாஹினிக்குச் சென்றபோது, அங்கு அரங்கப் பிரிவினர் கலையகத்தில் நாட்டிய நாடகத்திற்கான அரங்கை அமைத்துக்கொண்டிருந்தார்கள். ஒளியமைப்பாளர் வின்சி பெரேரா ஒளியமைப்புக்கான வேலைகளைச் செய்துகொண்டிருந்தார். ரூபவாஹினியில் அப்போது காலை ஒளிபரப்பு நடைபெறுவதில்லை. எல்லோரும் தத்தமது பணிகளைச் செய்துகொண்டிருந்தார்கள். எனக்கு அப்போது முதல்நாள் யாழ்ப்பாணத்தில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்ட விடயம் தெரியாது. சிலவேளை, இலங்கை வானொலியின் காலைச்செய்தியில் சொல்லியிருக்கலாம். நான் காலைச் செய்தி கேட்கவில்லை. ரூபவாஹினியில் அன்று பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் அப்படியொரு செய்தியை அறிந்திருந்ததாகத் தெரியவில்லை. நாட்டிய நாடகத்தில் பங்குபற்றும் பிள்ளைகள், ஆசிரியர்கள் எல்லோரும் வந்து, ஒப்பனை-



களைப் பூர்த்திசெய்து, ஒளிப்பதிவு ஆரம்பமாகி நடந்து கொண்டிருந்தது.

மதிய உணவு இடைவேளையின்போது ரூபவாஹினிக் கன்ரீனில், முதல்நாள் யாழ்ப்பாணத்தில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்ட செய்தி பரவலாகப் பேசப்பட்டது. அதை ஒரு செய்தியாகவே கேட்டேன், பாரதூரமாகக் கருதவில்லை. எப்போதுமே கலையகத்தில் நாட்டிய நாடகம், நாடகம் போன்ற பெரிய நிகழ்ச்சிகளின் படப்பிடிப்பு நடந்து கொண்டிருக்கும்போது எமது கவனம் முழுவதும் அந்தத் தயாரிப்புப் பற்றியதாகவே இருக்கும். குறிப்பாகத், தயாரிப்பாளரான எனக்குப் புறஉலகமே மறந்துபோய்விடும். முற்றாக வேறு உலகத்தில் சஞ்சரிப்பேன். மதிய இடைவேளை முடிந்து மீண்டும் படப்பிடிப்பு ஆரம்பமாகியது. வேலையின்போது வெளியே நடப்பவைபற்றி நினைப்பதற்கு நேரமிருப்பதில்லை. ஐந்துமணியளவில் படப்பிடிப்பை சிறிதுநேர ஓய்வுக்காக நிறுத்தி, நடனமாடும் பிள்ளைகள் கன்ரீனுக்குச் சென்றுவிட, நானும் படப்பிடிப்புக் குழுவினரும் ரூபவாஹினி வரவேற்புக்கூடத்தில்நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது ரூபவாஹினி முன் நுழைவாயிலில் சலசலப்புத் தென்பட்டது. ரூபவாஹினியையும் வானொலி நிலையத்தையும் பிரிக்கும் வீதியில் ஒரு கூட்டம் கூடிநின்றது. நானும் ஒளியமைப்பாளர் வின்ஸியும் என்னவென்று பார்ப்பதற்காக அங்கு சென்றோம்.

அங்கு ரூபவாஹினியின் ஒளிபரப்புப் (transmitter) பிரிவின் தொழில்நுட்பவியலாளராகப் பணிபுரிந்த சிறீநிவாசனைச் சுற்றி ரூபவாஹினியின் நுழைவாயிலில் பணிபுரியும் பாதுகாவலர்கள் (security) நின்றுகொண்டிருந்தார்கள். எதிரே வானொலி நிலையத்தில் பணிபுரியும் ஒரு சிற்றூழியரைச் சுற்றிச் சிலர் நின்றார்கள். அந்த ஊழியர் ஆவேசமாகச் சிங்களத்தில் பேசிக்கொண்டே சிறீநிவாசனை நெருங்க முயன்று கொண்டிருந்தார்.

இலங்கையில், அனேகமாக ஆட்சியிலிருக்கும் அரசியற் கட்சிகளின் அடிமட்டத் தொண்டர்களே அரச திணைக்களங்களிலும் அரச கூட்டுத்தாபனங்களிலும் பியோன் எனப்படும் சிற்றூழியர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவது வழக்கம். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அவ்வாறு கட்சித்தொண்டர்களாக இருந்து சிற்றூழியர்களாகச் சேர்ந்தவர்கள், அந்தக் கட்சி ஆட்சியிலிருக்கும்போதே பெரிய பதவிகளுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

அன்று ரூபவாஹினிக்கு முன்னால் சிறீநிவாசனைத் தாக்க முயன்றுகொண்டிருந்த அந்தச் சிற்றூழியர் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரென்று நினைக்கிறேன். ஏனெனில், 1977-ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி அமோக வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றிய தேர்தல் முடிந்த மறுநாள், அதுவரை ஆட்சியிலிருந்த சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சிக்காலத்தில் தகவல் ஒலிபரப்பு அமைச்சில் உயர்பதவியிலிருந்த எம். ஆறுமுகம் என்பவர், தேர்தலன்று இரவு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் மேலதிகாரிகளுடனிருந்து தேர்தல் பெறு

பேறுகளை அறிவிக்கும் செயற்பாடுகளை அவதானித்து விட்டு, அடுத்தநாள் நண்பகலில் வீடுசெல்வதற்காக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரவேற்பு மண்டபத்துக்கு வரும் போது, அங்கே ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான ஊழியர்கள் வெற்றி ஆரவாரம் செய்துகொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் ஆறுமுகம் அவர்கள் வெளியே வந்தபோது இந்தச் சிற்றூழியர் அவரின் கன்னத்தில் அறைந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். மேற்சொன்ன சம்பவம் இடம்பெற்ற நேரத்தில் அதை நான் நேரடியாகக் காணவில்லை. அதே சிற்றூழியர்தான் இப்போது சிறீநிவாசனைத் தாக்க முயன்றுகொண்டிருந்தார். என்னுடன் வாசலுக்கு வந்த வின்ஸி பெரேரா அங்கு நின்ற சிங்கள ஊழியர்களுடன் கோபமாகப் பேசி நிலைமையைக் கட்டுப்படுத்தினார்.

அப்போதுதான் முதல்நாள் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட இராணுவவீரர்களின் உடல்கள் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி ஆகியவை அமைந்திருந்த புல்லர்ஸ் வீதி முடிவடையும் இடத்திலிருந்த பொரளை, கனத்தை மயானத்திற்குக் கொண்டுவரப்பட்டு, அடக்கம் செய்வதற்கான ஒழுங்குகள் நடைபெறுவதாகவும், அதனால் சிங்களவர்கள் பலர் ஆத்திரமடைந்திருப்பதாகவும் அறிந்தோம். பின்னர், சிறீநிவாசனும் எம்முடனேயே திரும்பவும் ரூபவாஹினிக்குள் வந்துவிட்டார். சிறீநிவாசன் 1980-களின் பிற்பகுதியில் கனடா, ரொரன்ரோவில் குடியேறி, றோஜர்ஸ் (Rogers) என்னும் தொலைக்காட்சிச் சேவையில் தொழில்நுட்பவியலாளராகப் பணியாற்றியபோது 'கலாபம்' என்னும் வாராந்தத் தமிழ் சஞ்சிகை நிகழ்ச்சியொன்றை நீண்டகாலம் தயாரித்து ஒளிபரப்பினார்.

சிறீநிவாசன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை முடித்துக்கொண்டு மீண்டும் கலையகத்திற்குச்சென்று நாட்டியநாடக ஒளிப்பதிவைத் தொடர்ந்த எமக்கு வெளியுலகம் மறந்துவிட்டது. ஒளிப்பதிவுமுடிந்து வீடுசெல்ல இரவு ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டது. ரூபவாஹினி வாகனத்தில், அப்போது ரூபவாஹினியின் நிர்வாக இயக்குநராக இருந்த ஒபயதுல்லா அவர்களுடன் நான் சென்றேன். போகும்போது ஒபயதுல்லா வெளியே நிலைமைகள் பாரதூரமாக இருப்பதாகச் சொன்னார். அப்போது கொழும்பில் ஆடிவேல் விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. வழக்கமாக ஆடிவேல்விழா நடைபெறும் பம்பலப்பிட்டிப் பிள்ளையார்கோவிற் பகுதி முழுவதும் வெறிச்சோடிக்கிடந்தது. ரூபவாஹினி வாகனம் என்னை எனது வீட்டருகில் இறக்கிவிட்டு நேரே சென்றது.

மிகுந்த களைப்புடன் வீடுவந்த நான் அன்று நடந்தவைபற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு படுக்கைக்குச் சென்றேன். வெள்ளவத்தை, ஈ.எஸ். ஃபர்னாண்டோ மாவத்தையில் நாங்கள் ஒரு சிங்களவரின் வீட்டின் ஒரு பகுதியில் (annex) குடியிருந்தோம். அந்த வீட்டின் உரிமையாளர் அதிக மதுப்பழக்கம் கொண்டவர். போதையில் விழுந்து தொடையெலும்பு முறிந்து, வீட்டின் ஒரு மூலையில் படுத்திருப்பார். மூன்று பெண் பிள்ளைகளும் ஒரு ஆண் மகனும் அங்கிருந்தனர். தாயார் பணிக்காகச் சிங்கப்பூர் சென்றிருந்தார். நாம் குடியிருந்த பகுதிக்கு அவர்களது வீட்டின் பிரதான முன்பக்கக் கதவினூடாக உள்ளேவந்து முன்கூடத்தின் இடதுபுறத்திலிருந்த கதவைத்திறந்து செல்லவேண்டும். எமது வீட்டில் நான், மனைவி, எட்டுமாதக் குழந்தை, எனது தங்கை ஆகியோர் இருந்தோம்.


## 1983-ஆம் ஆண்டு ஜுலை 25-ஆம் திகதி:

அடுத்தநாள் திங்கட்கிழமை. காலை வழமைபோல் எழுந்து நானும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் எனது மனைவியும் வேலைக்குச் செல்ல ஆயத்தமானோம். முதல் நாள் இரவு கொழும்பில் குறிப்பாகக், கனத்தை மயானத்தை அண்டிய பொரளை, நாரஹன்பிட்டி போன்ற இடங்களில் தமிழர்களின் வீடுகள் தாக்கப்பட்டிருந்தன. நாரஹன்பிட்டி அன்டர்ஸன் மாடி வீடுகளிலும் சில தமிழர்களின் வீடுகள் தாக்கப்பட்டிருந்தன. இது எதுவுமே தெரியாத நாங்கள், வழமைபோல் எமது வீட்டின் முன்னால் காலி வீதியிலுள்ள பஸ் தரிப்பு நிலையத்திலிருந்து பஸ் ஏறி எமது பணியிடங்களுக்குச் சென்றோம். அப்போது வீட்டில் தொலைபேசி வசதி இல்லாததாலும் காலை வானொலிச் செய்திகளைக் கேட்காததாலும் எமக்கு 24-ம் திகதி இரவு நடந்தவையெதுவுமே தெரியாது. காலி வீதியில் வாகனப்போக்குவரத்துச் சற்றுக் குறைவாக இருந்தபோதும் வித்தியாசமாக எதனையும் எம்மால் கவனிக்கமுடியவில்லை. நாம் எதைப்பற்றியும் சிந்திக்காது பணிக்குச் சென்றோம். நாம் பணிக்குச் சென்றபின்னர் காலை பதினொரு மணியளவில் சிங்களக் காடையர்கள் பரவலாக எல்லா இடங்களிலும் தமிழர்களின் கடைகளையும் வீடுகளையும் எரித்துச் சூறையாடுவதாகச் செய்தி பரவத் தொடங்கியது. மிகப் பதட்டமான நிலை. ரூபவாஹினி, ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணியாற்றிய அனைவருமே வீடுகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டோம். ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு முன்னால் அதன் பஸ் வண்டிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களைக் காலையில் வேலைக்கு அழைத்துவந்து பின்னர் மாலையில் அவர்களை வீட்டுக்கு அழைத்துச்செல்லும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பேருந்துகள் அவை. இரண்டு கூட்டுத்தாபனங்களையும் சேர்ந்த ஊழியர்களும் தத்தமது வீடுகள் இருக்கும் பகுதிகளுக்குச் செல்லும் பேருந்துகளில் ஏறிக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டோம். சிங்கள ஊழியர்கள் யன்னலோர இருக்கைகளில் அமர்ந்துகொண்டு, தமிழ் ஊழியர்களை உட்புற ஆசனங்களில் அமரச்சொன்னார்கள். அதிக கூட்டம் காரணமாகப் பலர் நின்றுகொண்டு பயணம் செய்யவேண்டியிருந்தது. தமிழ் ஊழியர்களை நடுவே நிறுத்தி அவர்களை மறைக்கும் விதமாகச் சிங்கள ஊழியர்கள் அருகருகே நின்றார்கள். தமிழ்ப் பெண்களின் நெற்றிப் பொட்டுகளை அழிக்குமாறு கூறி, அவர்களின் தங்க ஆபரணங்களைக் கழற்றுவித்து சிங்களப் பெண் ஊழியர்கள் பத்திரமாக வைத்துக்கொண்டார்கள். எனது மனைவி பெரிதாக நகைகள் அணிவதில்லை. அவரது தோடுகளை ஒரு சிங்களப் பெண் ஊழியர் வாங்கி வைத்துக்கொண்டார். வீடுநோக்கிய எமது பஸ் பயணம் ஆரம்பமாகியது.

புல்லர்ஸ் வீதியால் காலிவீதி நோக்கிச்சென்ற எமது பஸ் வண்டி, இடதுபுறமாகத் திரும்பிக் காலிவீதியில் ஏறுவதற்காகப் பம்பலப்பிட்டிச் சந்தியில் சிக்னலில் நின்றபோது, பஸ்ஸின் யன்னல்களில் தொங்கியபடி பல காடையர்கள் தமிழர்கள் இருந்தால் இறங்கும்படி கூக்குரலிட்டார்கள். அவர்களில் சிலர் பள்ளிச் சீருடையில் இருந்த மாணவர்கள். எனக்கு இரத்தம் கொதித்தது. நாம் மிகச் சுதந்திரமாக இரவு இரண்

டாம் காட்சித் திரைப்படங்கள் பார்த்துவிட்டு, எத்தனை மணியானாலும் அந்தச் சந்தியிலுள்ள கடைகளில் சாப்பிட்டுவிட்டு, எந்தவிதப் பயமுமின்றி, எந்தவித இனவேறுபாடு உணர்வுகளுமில்லாமல் திரிந்த அதே கொழும்பு வீதிகளில் சிங்களவர்கள் கொன்றுவிடுவார்களென்ற பயத்தில் சிங்கள நண்பர்களுக்குள்ளேயே மறைந்து செல்வது பெருத்த அவமானமாகவும் வேதனையாகவுமிருந்தது. பஸ் சென்றுகொண்டிருந்த வீதி நெடுகிலும் கடைகள் பற்றி எரிந்துகொண்டிருந்தன. பம்பலப்பிட்டி, வஜிராப் பிள்ளையார், வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில்களுக்கு முன்பாக வரிசையாக இருந்த கடைகள் எரிக்கப்பட்டுக் காடையர்கள் கையில் கிடைத்தவற்றைச் சுருட்டிக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் முகங்களில் கொலைவெறி தாண்டவமாடியது. யன்னலருகேயிருந்த சிங்கள நண்பர்கள் எங்கள் முகங்கள் வெளியே தெரியாதவாறு மறைந்திருக்குமாறு கூறும்போது, அது எம்மை அதட்டுவதுபோல எனக்கு மிகுந்த அவமானமாக இருந்தது. பாவம், அவர்களும் பயந்துபோய்த்தான் இருந்தார்கள். காலிவீதி முழுவதும் நெருப்புச் சுவாலைகளும் புகை மண்டலமும் நிறைந்திருந்தது. வீட்டில் எனது தங்கைக்கும் எமது குழந்தைக்கும் என்ன நேர்ந்ததோ என்ற பதற்றம். செல்ஃபோன் இல்லாத காலத்தில், அத்தகைய தருணங்களில் உணரப்படும் எமது கையறு நிலையைத் தற்போதைய சந்ததியினரால் கற்பனைகூடச் செய்துபார்க்க முடியாது.

எமது வீட்டிருந்த ஈ.எஸ். ஃபர்னாண்டோ மாவத்தையைப் பஸ் நெருங்கிக்கொண்டிருந்தது. அங்கு இடது பக்கத்தில் வாகனங்கள் செல்வதால், காலிவீதியில் பஸ் நிற்கும்போது அதிலிருந்து உடனே இறங்கிக் காலிவீதியின் இடதுபுறத்திலிருக்கும் எமது தெருவின் முன்பகுதியிலிருந்த வீட்டிற்கு ஒரே எட்டில் போய்விடலாமென்று நினைத்திருந்தேன். ஆனால், சரியாக எமது தெருவுக்கருகே காலி வீதியிலிருந்த பிரமாண்டமான, வீட்டு உபகரணங்கள் விற்பனைசெய்யும் கடை உடைக்கப்பட்டுக் காடையர்கள் பொருட்களை எடுத்துக் கொண்டு ஓட, சிலர் வெறிகொண்டு கடையை உடைத்து அதற்கு நெருப்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். நானும் மனைவியும் அந்தக் கூட்டத்திற்குள் இறங்கினால் அவ்வளவுதான், எம் கதை முடிந்துவிடும். எனவே, அதற்கு முன்பே பெனிக்குவிக் வீதியருகே பஸ்ஸை நிற்பாட்டி இருவரும் இறங்கினோம். காடையர் கும்பலின் கவனமெல்லாம் அந்தக் கடையைச் சூறையாடுவதிலேயே இருந்தது. அந்தக் கும்பலில் யாருடைய கவனம் எம்மீது திரும்பியிருந்தாலும் அன்று என்ன நடந்திருக்குமென்று சொல்லமுடியாது. நல்லவேளையாகப் பெனிக்குவிக் வீதியின் தொடக்கத்தில் என்னுடன் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒன்றாகப் பணிபுரிந்தவர்களும் எழுபதுகளில் மிகப்பிரபலமான மேடைநாடக நடிகர்களாக இருந்தவர்களுமான யூ. ஆரியவிமாலும் அவருடைய மனைவி க்றேஸ் டி. சில்வாவும் (Grace) வசிக்கும் வீடிருந்தது. வீட்டுவாசலில் நின்று நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டி



ருந்த க்றேஸ் எனது மனைவியைக் கண்டதும் உடனே தன்னிடம் வருமாறு அழைத்தார். அங்கு நின்று சிந்திக்க நேரமில்லை. மனைவியை அவரிடம் போகுமாறு கூறிவிட்டு நான் எப்படியாவது வீட்டுக்குச் சென்றுவிடவேண்டுமென்று நினைத்தேன். அந்த இடத்தில் குழப்பம் அதிகமாக இருந்ததால் காலிவீதியில் வாகனங்கள் மிகமிக மெதுவாகச்சென்று வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. நான் அந்த நெரிசலில் புகுந்து காலிவீதியின் அடுத்த பக்கத்துக்குச் சென்றேன். அந்தப் பக்



கத்தில் வேடிக்கை பார்ப்பவர்களைத் தவிரக் காடையர்கள் தென்படவில்லை. நான் அப்படியே விரைந்து நடந்துசென்று ஈ.எஸ். ஃபர்னாண்டோ மாவத்தைக்கு நேராகச் சென்றவுடன் காலிவீதியை மறுபடியும் கடந்து வீட்டிற்குள் சென்றுவிட்டேன். என்னைப்பார்த்த அந்தவீட்டுப் பெண்பிள்ளைகள், என் மனைவி எங்கேயென்று கேட்டுவிட்டு என்னை எங்கள் அறைக்குள்சென்று கதவைப் பூட்டுமாறு கூறி, முன் கதவைத் தாளிட்டார்கள். நான் வீட்டிற்குள் வந்து தங்கையையும் மகளையும் பார்த்துவிட்டது மனதுக்கு ஆறுதலாக இருந்தாலும் மனைவிக்கு என்ன நடந்ததோ என்ற கவலை மனதை ஆட்கொண்டது. சில மணித்தியாலங்களின் பின்னர் நண்பர் ஆரியவிமால் எமது வீட்டுக்கு வந்து, மனைவி பத்திரமாகத் தமது வீட்டில் இருப்பதாகத் தெரிவித்துவிட்டுப்போக நாம் சற்று அமைதியானோம்.

சிறிது நேரத்தில் காடையர் கும்பல் எமது வீதியில் புகுந்து அட்டகாசம்புரியத் தொடங்கியது. எமது பக்கத்துவீடு தமிழர்களுடையது. மாடி வீடு. எமது அறை வீதியை அண்டிய முன் அறை. பக்கத்துவீடு அடித்து நொருக்கப்படும் சத்தமும் தீப்பிடித்து எரியும் மணமும் புகையும் எமது முன் யன்னலின் மேற்பக்கத்தில் காற்றோட்டத்திற்காக அமைக்கப்பட்டிருக்கும் கிறிலினூடாக எமது அறைக்குள் ஊடுருவின. எட்டு மாதக் குழந்தையான எமது மகளை என் தங்கை சத்தம் போடாதவாறு பார்த்துக்கொண்டார். வெளியே காடையர்களின் கூக்குரல் மிகுந்த சத்தமாக எமக்குக் கேட்டது. எனது தங்கை என் மகளைப் பார்த்து இரகசியமாகச் சத்தம்போடக் கூடாதென்று சொல்ல என் மகளோ, என் தங்கை தன்னுடன் விளையாடுவதாக நினைத்துச் சத்தமாகச் சிரிக்கத் தொடங்கி விட்டாள். நிச்சயமாக அந்தச் சின்னச் சிரிப்பொலி அந்தக் காடையர்களின் கூக்குரலில் வெளியே கேட்டிருக்க முடியாது. அந்த இக்கட்டான நிலையிலும் எனது மகளின் சிரிப்பு எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஓரிரு மணித்தியாலங்களின் பின்னர் சத்தங்கள் ஓய்ந்து தெரு அமைதியானது.

நாங்கள் இருந்த வீட்டிலேயே குடியிருந்த வீட்டின் சொந்தக்காரரின் உறவினர்களில் சிலர் மாலைவேளைகளில் அங்கு வந்து கூடியிருந்து பேசிச்செல்வது வழக்கம். அனேகமானவர்கள் இளம் மற்றும் நடுத்தரவயதுடைய ஆண்கள். சம்பவம் நடந்த அன்று, 25-ம் திகதி திங்கட்கிழமை இரவும் அவர்கள் வந்தார்கள். அறையைப் பூட்டிக்கொண்டு உள்ளேயிருந்த எனக்கு அவர்களது பேச்சொலி அவர்கள் வருகையை உணர்த்தியது. வந்தவர்கள் வழமைபோல மதுவருந்தத் தொடங்கினார்கள். மது வேலைசெய்யத் தொடங்க, அவர்களின் குரல்களும் உயர்ந்தன. தமிழர்களைக் கொழும்பிலிருந்து முற்றாகத் துரத்தவேண்டுமென்ற ஆவேசப் பேச்சுகளாகவே அவை இருந்தன. நாம் உள்ளேயிருப்பதைத் தெரிந்திருந்த அந்தவீட்டுப் பெண்பிள்ளைகள் அப்படிப்பேசவேண்டாமென்று திரும்பத் திரும்பச் சொல்வதும் கேட்டது. அங்கு வந்திருந்த இளைஞர்களுக்கு நாம் அந்த வீட்டில் இருப்பது தெரியும். அன்றுவரை மிகவும் மரியாதையாகவே எம்மிடம் நடந்துகொண்டிருந்தவர்களின் பேச்சும் தொனியும் அன்று மிகவும் மாறுபட்டிருந்தது. அதில் நடுத்தரவயதுடைய ஒருவருக்குப் போதை அதிகமாகி, ஆவேசம்கொண்டு ஓடிவந்து எமது அறையின் கதவைக் காலால் உதைத்தார். எனது இரத்தம் சூடேறியது. அப்படிப் பதுங்கி நான் இருப்பதைச் சாதாரண நாளில் கற்பனைகூடச் செய்துபார்த்திருக்கமாட்டேன். அறையில் என் தங்கையும் குழந்தையும் இருந்ததால் எனக்கு எதுவும் செய்ய இயலவில்லை. எனது இயலாமை எனக்கு அவமானமாக இருந்தது. வீட்டுப் பிள்ளைகள் கலவரமடைந்து, அடங்கிய குரலில் அவர்களைக் கெஞ்சி அங்கிருந்து வெளியே அனுப்பிவிட்டார்கள். வீடு மீண்டும் அமைதியாகியது.

அப்படியே கதிரையிலிருந்த நான் ஒன்பது மணியளவில் வெளியே என்ன நடக்கிறது என்பதை அறிவதற்காக வானொலியை மிக மெதுவான தொனியில் இயக்கினேன். வானொலியில் தமிழர்களின் நீண்ட பெயர்ப்பட்டியலை வாசித்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை. இறுதியில் அவர்கள் அனைவரும் வெலிக்கடைச் சிறையில் அன்று மாலை சக கைதிகளால் கொல்லப்பட்டார்கள் என்று அறிவித்தவுடன் நிலைமையின் விபரீதத்தை உணர்ந்தேன். ஆம், குட்டிமணி, தங்கத்துரை, ஜகன், அருட்தந்தை இராஜசுந்தரம் உட்பட முப்பத்தைந்து தமிழர்கள் சிறையில் கொல்லப்பட்ட செய்தி அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. இதற்குமுன் இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களைவிட இது மிகப் பாரதூரமானது, இனிமேல் சிங்களவர் மத்தியில் எம்மால் வாழவேமுடியாதென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இரவு உணவு உண்டோமா, குழந்தைக்கு உணவு கொடுக்கப்பட்டதா என்பதெல்லாம் எனது நினைவில் இல்லை. என் தங்கை கவனித்திருப்பாரென்று நினைக்கிறேன். கனத்த இதயத்துடன் குழப்பமான மனநிலையில் அப்படியே உறங்கி விட்டேன்.

## 1983-ஆம் ஆண்டு, ஜுலை 26-ஆம் திகதி:

அடுத்தநாட் காலை எழுந்தபோது ஒரு பயங்கரமான கனவு கண்ட மனநிலை இருந்தது. நேற்று நடந்த சம்பவங்களை நம்பமுடியவில்லை. காலைவேளைதரும் புத்துணர்ச்சி மனதைச் சிறிதளவு ஆற்றியது. தெருவில் சாதாரணமான ஆனால் மட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம் இருந்தது. பத்துமணியளவில் நேற்றிரவு ஆரியவிமல், க்றேஸ் தம்பதியினர் வீட்

டில் தங்கியிருந்த எனது மனைவியை ஆரியவிமலின் தம்பி அழைத்துவந்தார். எனது மனைவி க்ரேஸின் சேலையொன்றை உடுத்தியிருந்தார். மீண்டும் நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்ததில் ஒருவித நிம்மதி ஏற்பட்டது. மிகப்பிரபலமான மேடைக் கலைஞரான ஆரியவிமல் சில ஆண்டுகளின் பின்னர் இறந்துவிட்டார். முன்னணி மேடை நடிகையான க்ரேஸ் இப்போதும் திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்களில் நடித்துக்கொண்டிருக்கிறார். பல விருதுகள் பெற்ற நடிகை அவர். 1983-ம் ஆண்டு ஜுலை சம்பவங்களை நினைக்கும்போதெல்லாம் அவர்களும் எனது நினைவில் வருவார்கள்.

அன்றுமாலை நாம் குடியிருந்த வீட்டுப் பிள்ளைகள் எம்மிடம் வந்து, என்ன நடக்கப்போகிறதோ என்று தமக்குப் பயமாக இருப்பதாகவும் நாங்கள் எங்காவது பாதுகாப்பான இடத்திற்குப் போவது நல்லதென்றும் கூறினார்கள். பிள்ளைகளின் நிலைமையை நான் புரிந்துகொண்டேன். இயலாத தந்தையார், வெளிநாட்டில் தாய், இரண்டு வயதுவந்த பெண்பிள்ளைகள், இரண்டு சிறுபிள்ளைகள். நிச்சயம் அவர்களுக்குப் பயமாகத்தான் இருக்கும். அப்போது வானொலியில் அகதி முகாம்கள் திறக்கப்படுவது பற்றி அறிவித்துக்கொண்டிருந்தார்கள். நாங்கள் நாளை புறப்படுவதாகக் கூறியதும் அவர்களிடத்தில் நிம்மதி தெரிந்தது.

## 1983-ஆம் ஆண்டு, ஜுலை 27-ஆம் திகதி:

காலை வீட்டிலே எல்லோரையும் புறப்படுவதற்கு ஆயத்தமாகும்படி சொல்லிவிட்டு, ஒன்பது மணியளவில் வழக்கமாக நாம் பஸ் ஏறும் ஈ.எஸ். ஃபர்னாண்டோ மாவத்தைக்கு முன்னாலிருந்த பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து தட எண் 154 பஸ் ஏறி ரூபவாஹினிக்குச் சென்றேன். பஸ்ஸில் சனக்கூட்டம் அவ்வளவாக இல்லை. பஸ் நடத்துனரும் அதிலிருந்த சிறுதொகைப் பயணிகளும் இயல்பாக இருந்தார்கள். எல்லோரது பார்வையும் வீதியின் இருபுறமும் எரிந்துகிடந்த கடைகளிலேயே பதிந்திருந்தது. ரூபவாஹினியிலும் அனேகமான சிங்களப் பணியாளர்கள் வந்திருந்தார்கள். அவர்களில் சிலருடன் நான் நிகழ்ச்சிப்பிரிவில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது பிரபல சிங்கள மேடை, சினிமா நடிகரும் அப்போது ரூபவாஹினி நிகழ்ச்சிப் பிரிவுக்குப் பிரதிப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருந்தவருமான ஹென்றி ஜயசேன அவர்கள் அலுவலகத்திற்குள் வந்தார். வந்தவர் அங்கு கூடிநின்றவர்களிடம், ‘இம்முறை நடைபெற்றது காடையர்களின் கொள்ளையடிக்கும் கலவரமல்ல. நாட்டுப்பற்றாளர்களின் உணர்ச்சிக் கொந்தளிப்பு’ என்று சொன்னவர், என்னைப் பார்த்ததும் மிக அக்கறையோடு விசாரித்தார்.

பின்னர் நான் ரூபவாஹினித் தலைவர் எம்.ஜே. பெரேரா



அவர்களின் அறைக்குச் சென்று அவரிடம் நிலைமைகளை விளக்கி, நான் குடும்பத்தினருடன் அகதி முகாமொன்றுக்குச் சென்று, அங்கிருந்து யாழ்ப்பாணம் செல்லப்போவதாகத் தெரிவித்தேன். சொன்னவற்றை மிகக் கரிசனையுடன் கேட்டு விட்டு, 'இப்போது பாதுகாப்புத்தான் முக்கியமானது. அதற் கான எந்த உதவியையும் கூட்டுத்தாபனம் செய்யும்' என்று கூறிவிட்டு, சந்திரசோம விதானகே என்ற உத்தியோகத்தரை அழைத்தார்.

## சந்திரசோம விதானகே:

சந்திரசோம எல்லோரிடமும் மிகவும் நட்பாகப் பழகுவார். யாழ்ப்பாணத்தில் லயனல் ஃபர்னாண்டோ அவர்கள் அரச அதிபராகப் பணியாற்றியபோது அங்கு ஒரு உத்தியோகத்த ராகப் பணியாற்றியவர். யாழ்ப்பாணம் அவருக்கு மிகவும் பரிச்சயமான இடம். பல தமிழ் உத்தியோகத்தர்களை அறிந் தவர். பப்ளிக்றிலேஷன் ஒஃபிஸர் என்ற பதவிக்கு மிகவும் பொருத்தமானவர். அப்படிப்பட்டவரை விவரணப்பிரிவில் ஒரு தயாரிப்பாளராக எம்.ஜே. பெரேரா நியமித்திருந்தார். அவரை அழைத்த எம்.ஜே. பெரேரா அவர்கள், அவரிடம் எனக்கு வேண்டிய சகல உதவிகளையும் அவரையே செய்துகொடுக் கும்படி பணித்தார். நான் அப்போது ரூபவாஹினியில் ஒரு முக்கியமான தயாரிப்பாளராக, எல்லோரினது மரியாதைக்கு முரிய ஒருவராக இருந்தாலும் இனத்துவேஷம் தலைவிரித்தா டிய அப்போதைய நிலையில், எனக்கு வாகன உதவி வழங்க மறுத்து, என்னை அவமதித்துவிடுவார்களோ என்ற முன்னெச்சரிக்கை உணர்வு காரணமாகவே, எம்.ஜே. பெரேரா அவர்கள் சந்திரசோம விதானகேயிடம் எனக்கு உதவிசெய்யு மாறு பணித்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

அந்தப்பணியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட சந்திரசோம, நான் என்ன செய்ய விரும்புவதாக என்னிடம் கேட்டார். நான் ஒரு அகதிமுகாமுக்குப் போகவேண்டுமென்று சொன்னவுடன், ரூபவாஹினிக்கு அருகிலேயே ஒரு அகதிமுகாம் அன்று திறக்கப்பட இருப்பதாகவும் அங்கு செல்வது நல்லதென்றும் எனக்கு ஆலோசனை வழங்கினார். கொழும்பின் அந்தப் பிராந்தியத்தில் அப்போது பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியி லும் சரஸ்வதி மண்டபத்திலும் முகாம்கள் திறக்கப்பட்டிருந் தன. அங்கு ஏராளமானவர்கள் சென்றுவிட்டார்கள். நடராஜசி வம், மதியழகன், விஸ்வநாதன் உட்பட ரூபவாஹினி, ஒலிப ரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றியவர்கள் பலர் அங்கு சென்றிருந்தார்கள் என்று பின்னர் அறிந்துகொண்டேன். மற் றொரு முகாம் தேஸ்டன் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டிருந் தது. அங்கு திருமதி ஞானம் இரத்தினம், சிறீநிவாசன் உட் பட ரூபவாஹினி உத்தியோகஸ்தர்கள் சிலர் சென்றிருந்தார்க ளென்று அறிந்தேன். சந்திரசோம கூறிய முகாம், இலங்கை யில் அணிசேரா நாடுகளின் உச்சிமகாநாடு நடைபெற்ற போது அதில் கலந்துகொள்ள வந்திருந்த வெளிநாட்டுப் பிர முகர்கள் தங்குவதற்காக நிர்மாணிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதியிலமைந்திருந்தது. மகாநாடு முடிந்தபின்னர் அந்தக் குடியிருப்புகள் அரசாங்க உயரதிகாரிகளின் குடியிருப்புக ளாக மாற்றப்பட்டன. அந்தப் பகுதியிலமைந்திருந்த சிறீ மாவோ பண்டாரநாயக்க மகளிர் வித்தியாலயத்தில் அன்று காலை முகாம் திறக்கப்பட்டது.

## அகதி முகாம்:

அங்கு போகலாமென்று சந்திரசோம கூறியதும், அவரும் நானும் எனது வீட்டுக்கு ரூபவாஹினி வாகனத்தில் சென்று, எனது குடும்பத்தினரையும் அத்தியாவசியத் தேவைகளுக் கான பொருட்களையும், உடைகளையும் எடுத்துக்கொண்டு அந்த முகாமுக்குச் சென்றோம். மிக உயர்ந்த, அடர்த்தி யான மரங்கள் சூழ்ந்த அழகான இடத்தில் அமைந்திருந்தது அந்த முகாம். அப்போதுதான் அந்த முகாமைத் திறந்திருந் தமையால் அங்கே சனக்கூட்டம் இருக்கவில்லை. நாம் உள் ளேசென்று உரிய பதிவுகளைச் செய்துவிட்டு, அந்தக் கட்ட டத்தின் மேல்மாடியிலுள்ள ஒரு வகுப்பறையில் தங்கினோம். எம்மை இறக்கிவிட்டுச்சென்ற சந்திரசோம அத்தியாவசியத் தேவையான சீனி, பால்மா போன்ற பொருட்களை வாங்கிக் கொண்டு மீண்டும் அங்குவந்து அவற்றைத் தந்துவிட்டுச் சென்றார்.

முதலில் தனி வகுப்பறையிலிருந்த நாம் அங்கிருந்த வாங்கு களை ஒன்றாகச் சேர்த்து ஒரு படுக்கைபோல் அமைத்து அதிலே எமது பொருட்களை வைத்துவிட்டு, மாடியில்நின்று அங்கு நடப்பவற்றைப் பார்த்துக்கொண்டு நின்றோம். நேரம் செல்லச்செல்ல மக்களின் வருகை அதிகரித்தது. நாம் இருந்த வகுப்பறைக்குள் மூன்று நான்கு குடும்பங்கள் விடப் பட்டன. அடுக்கிவைத்திருந்த வாங்குகளைப் பங்குபோட்டுக் கொண்டோம்.

அந்த முகாம்வாழ்க்கை புதிதாக இருந்தது. இனக்கலவரம் ஏற்படுத்திய மனக்கிலேசம் சற்று மறைந்து, எமது இனத்தவர் கள் அனைவரும் ஒரே பிரச்சினைக்கு முகம்கொடுத்தவர்க ளாக, ஒரே இடத்தில் தங்கியிருந்தமை, அங்கு வசதிக்குறை வுகள் இருந்தபோதும் ஒருவிதப் பாதுகாப்புணர்வையும் தனிப்பட்டவர்களுக்கு நாம் பாரமாக இல்லையென்ற மனநிம் மதியையும் தந்தது.

நாம் முகாமுக்குச்சென்ற ஜூலை 27-ம் திகதி மாலை மீண் டும் ஒரு வன்செயல் சம்பவம் வெலிக்கடைச் சிறையில் இடம்பெற்று மேலும் பதினெட்டுப்பேர் கொல்லப்பட்ட மையை, அங்கு அகதிகளாக வந்தவர்கள் கொண்டுவந்தி ருந்த வானொலியில் கேட்ட எமக்கு ஜூலைக் கலவரத்தின் கோரதாண்டவம் புரிந்தது.

அன்று மாலையே முகாம்வாழ்க்கை எமக்குப் பழகிவிட்டது போன்றிருந்தது. எம்முடன் எமது கல்லூரியில் படித்தவரும் இலங்கை வானொலியில் விளம்பரங்கள் செய்கின்ற விளம் பர முகவர் நிறுவனமொன்றில் பணியாற்றியவருமான லோக-நாதன் தனது சகோதரி, மற்றும் பல நண்பர்களுடன் அதே முகாமில் தங்கியிருந்தார். அடுத்தடுத்த நாட்களில் இலங் கையில் சிவசோதியென்றும் கனடாவில் இளையபாரதியென் றும் அறியப்படும் நண்பர் சிவசோதி அந்த முகாமுக்கு வந் தார். அவர் அப்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பகு திநேர அறிவிப்பாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்போது மணம்முடிக்காத இளைஞர். எல்லோருடனும் கல கலப்பாகப் பழகும் அவரும் தனது நண்பர்களுடன் அங்கு வந்து அனைவருடனும் மிக நட்புடன் பழகி, எனக்கும் முக் கிய தருணங்களில் பெரும் உதவியாக இருந்தார்.



## 1983-ஆம் ஆண்டு, ஜுலை 28:

அகதிவாழ்க்கை எமக்கு இயல்பாகியது. அந்த அகதிமுகா முக்கு, அப்போது பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்ன பொறுப்பாக நியமிக்கப்பட்டிருந்தார். ரஞ்சன் விஜயரத்ன சரளமாகத் தமிழ் பேசக்கூடியவர். அவர் 28-ம் திகதி மாலை முகாமுக்கு வந்து பார்வையிட்டதோடு, மக்க ளின் வேண்டுகோளின்படி அவர்களை வடக்கு, கிழக்குப் பிர தேசங்களுக்கு அனுப்பும் நடவடிக்கையை மிகவிரைவாக எடுப்பதாகக் கூறிச்சென்றார். அவர் அன்று அனைவருடனும் தமிழிலேயே பேசினார். அகதிமுகாமுக்கு வந்துவிட்ட நாம், எப்போது யாழ்ப்பாணம் செல்லப்போகிறோம் என்று எதிர் பார்க்கத் தொடங்கினோம்.

## 1983-ஆம் ஆண்டு, ஜுலை 29:

83-ம் ஆண்டு ஜுலைக் கலவரத்தின் இன்னுமொரு மறக்கமு டியாத நாள். எனது மனைவியின் நோய்வாய்ப்பட்டிருந்த ஒன் றுவிட்ட அக்கா இறந்து, அன்று காலை கனத்தை மயானத் தில் தகனம் செய்யப்படவிருப்பதாக வானொலி அறிவிப் பைக் கேட்டோம். புற்றுநோய் காரணமாகக் கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக வந்திருந்த அவர், கலவரம் காரண மாகக் கொட்டாஞ்சேனை, சென்ற். பெனடிக்ற் கல்லூரியில் இயங்கிய அகதிமுகாமில் தஞ்சமடைந்திருந்தார். அவரது சுகயீனம் காரணமாக அருகிலிருந்த சென்ற். லூயிஸ் சேர்ச் சில் வைத்துப் பராமரித்தபோதும் அவர் அங்கேயே இறந்து விட்டார். சிறு வயதில் பெற்றோரை இழந்த எனது மனை விக்கு, எமது திருமணத்தின்போது பெற்றோர் ஸ்தானத்திலி ருந்து அந்த சகோதரியும் அவரது கணவரும்தான் கன்னிகா தானம்செய்து திருமணச் சடங்குகளைச் செய்துவைத்தார்கள். அவருடைய இறுதிக் கிரியைக்குச் செல்வது மிகவும் முக்கிய மானது என்று எண்ணினோம். நானும் மனைவியும் காலை முகாமிலிருந்து புறப்பட்டு ஒன்பது மணியளவில் கனத்தை மயானத்திற்குச் சென்றோம். அந்த மயானத்தில்தான் யாழ்ப் பாணத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இராணுவ வீரர்களின் உடல்கள் அடக்கம்செய்யப்பட்டதைத் தொடர்ந்து கலவரம் ஆரம்பித்தது. நாம் சென்றபோது மயானத்தில் எவரும் இருக் கவில்லை. வெறிச்சோடிக்கிடந்தது. அங்கு பணிபுரியும் ஒரு வர், கொழும்பில் நிலவுகின்ற கலவரநிலை காரணமாக மிகக் குறைந்ததொகையினர் காலையில் வந்து உடலைத் தகனம் செய்துவிட்டு இப்போதுதான் போகிறார்கள் என்று சொன் னார். உடலை எரிக்கும் மின்சார உலையின் புகைபோக்கி வழியே புகை சிறியளவில் வானத்தைநோக்கிச் சென்றுகொண் டிருந்தது.

அங்கிருந்து புறப்பட்ட நாம் வெள்ளவத்தையில் எமது வீட் டுக்குச்சென்று குளித்துவிட்டு மேலும் சில உடுப்புகள், பொருட்களை எடுத்துக்கொண்டு முகாமுக்குத் திரும்பி னோம். நாம் முகாமுக்குத் திரும்பிய சிறிதுநேரத்தில் முகா மில் பலத்த சலசலப்பேற்பட்டது. முகாமின் மதில்சூழ்ந்த வளவுக்குள்ளேயே முன்புறமாக இருந்த புற்தரைப்பகுதியில் அமர்ந்திருந்த மக்கள், மற்றும் முகாம் முழுவதும் அங்குமிங் குமாகத் திரிந்துகொண்டிருந்த முகாம்வாசிகள் பீதியடைந்து கட்டடத்திற்குள் ஓடிவந்தார்கள். முகாமின் நுழைவாயிலில் காவலில் நின்ற பொலிசார் பதற்றமடைந்தவர்களாக அனை- வரையும் உள்ளே செல்லுமாறு விரட்டிக்கொண்டிருந்தார்கள். முகாமில் தொண்டுப்பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் ஒவ் வொரு வகுப்பறைகளுக்கும் சென்று எல்லோரையும் நிலத் தில் படுக்கும்படி கூறினார்கள். பலர் அப்படிப் படுத்ததோடு மட்டுமல்லாமல், மேசைகள் வாங்குகளுக்குக் கீழே ஒளிந்து கொண்டார்கள். எனக்கு அப்படிச் செய்யக் கூச்சமாக இருந் ததால், நாம் இருந்த வகுப்பறைக்கு முன்னாலிருந்த விறாந் தையில் ஒரு தூணோரமாக நின்று அனைத்தையும் அவதா னித்துக்கொண்டிருந்தேன். சிறிதுநேரத்தில் பதற்றம் தணிந்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. பின்னர் அதன் காரணத் தையறிந்தபோது எமக்கு வேடிக்கையாகவும் அதேநேரம் மயி ரிழையில் மீண்டும் உயிர்தப்பிய ஒருணர்வையும் கொடுத் தது. அன்றுதான் கொழும்புக்குள் புலிகள் ஊடுருவிவிட்டார் களென்று சிங்கள மக்கள் பயந்தோடிய சம்பவம் இடம்பெற் றது. அதன் விளைவுதான் முகாமில் ஏற்பட்ட பதற்றம். வெளியே கொழும்பு முழுவதும் பயந்தோடிய சிங்களவர்கள் பின்னர் ஆத்திரமடைந்தவர்களாகப் பல தமிழர்களை அன்று கொன்றதாகப் பேசிக்கொண்டார்கள். அன்று வெளியே சென்ற நாம் சிறிது தாமதித்திருந்தால் அந்தக் கலவரத்திற் குள் அகப்பட்டிருப்போம், அதிர்ஷ்டவசமாகத் தப்பிவிட்டோ மென்று நினைத்தோம்.

இப்படி ஜுலைக் கலவரம் இடம்பெற்ற அந்த முதல் வாரத்தில் கொழும்பில் வாழ்ந்த இலங்கையின் சகல பிரதேசங்களையும் சேர்ந்த தமிழர்களும் ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டார்கள். இன வன்முறையில் உயிருக்கும் உடமைக்கும் சேதமேற்படாது போயிருந்தால் அதற்கு முழுக்கமுழுக்க அதிர்ஷ்டம்தான் காரணமாக இருந்திருக்க முடியும். எனக்கு இழப்பதற்குப் பெரிதாக உடமைகள் அப்போது இல்லாத போதும் உயிர்பிழைத்தமைக்கான காரணம் அதிர்ஷ்டமென்றே சொல்வேன். ஆனால், அந்த சம்பவங்கள் மனதளவில் அனைத்துத் தமிழரையும் பாதித்ததுபோலவே என்னையும் பாதித்தன.

ஜுலை 27-ம் திகதி முகாமுக்குச் சென்ற நாம் முகாமில் ஓரளவு பிரச்சினைகளின்றி இருந்தபோதிலும் எமது மகளுக்கு சுகவீனமேற்படவே, அங்கிருந்து குறுக்குவழிகளால் நடந்து சென்று தனியார் குழந்தைநல மருத்துவரிடம் சிகிச்சை பெற்றபோது, அவரே குழந்தைக்குத் தேவையான மருந்துகளைத் தந்து, அவரது சேவைக்கும் மருந்துக்கும் என்னிடம் பணம் வாங்கவும் மறுத்துவிட்டார். அவர் ஒரு சிங்கள வைத்தியர்.

இந்த முகாம் வாழ்க்கை முதலில் ஒருவகையில் மகிழ்ச்சியாக இருந்தாலும் நாட்கள் செல்லச்செல்ல மனிதர்களின் இயல்பான குணங்கள் வெளிப்படத் தொடங்கியதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. உயிருக்குப் பயந்து, உடமைகளை இழந்து பெரும்சோகத்தில் அகதிமுகாமுக்கு வந்த மக்கள், முதலில் ஒருவருக்கொருவர் பரிவாகவும் உதவியாகவும் மனிதத்தின் சிறந்த குணங்களை வெளிப்படுத்தினார்கள். இதைப்பார்த்த நான், துன்பம் எப்போதும் மனிதர்களை ஒன்றுபடுத்துமென்று எண்ணத் தலைப்பட்டேன். நாட்கள் செல்லச் செல்ல நிலைமை சிறிதுசிறிதாக மாறியது. தாம் தங்கியிருந்த வகுப்பறைகளில் எல்லைபிரித்துச் சண்டையிடுதல், விநியோகிக்கப்படும் பொருட்களை மற்றவர்களுக்கு இல்லாதவாறு அபகரிக்க முயலுதல் போன்ற செயல்கள் இடம்பெறத்தொடங்கின. ஆரம்பத்தில் பலர் முண்டியடித்துத் தொண்டர்களாகப் பணியாற்றச் சென்றபோது, நான் அவர்களை மனதுக்குள் பாராட்டினேன். அங்கு முக்கிய பொறுப்புக்களைப் பெற்றுக்கொண்டதும் விநியோகத்துக்கென வழங்கப்பட்ட பொருட்களைப் பதுக்குதல், வேண்டப்பட்டவர்களுக்கு அவற்றை வழங்கித் தமது செல்வாக்கை நிலைநிறுத்துதல், உணவு முதல் சகலவற்றிலும் தமக்கு முன்னுரிமை அளித்தல் போன்ற கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தார்கள். இவற்றைப் பார்த்தபோது மனிதர்கள் மாறவே மாட்டார்களென்ற எண்ணம் உறுதியானது.

பதினைந்து நாட்கள் முகாமில் கழித்தபின்னர், ஓகஸ்ட் மாதம் 10-ம் திகதி, எல்லோரும் முகாமிலிருந்து பஸ்களில் கொண்டுசெல்லப்பட்டு, கலவரத்தின் பின் முதல் முதலாகக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்ற இரவு இரயிலில் ஏற்றிவிடப்பட்டோம்.


அடுத்தநாட் காலையில் காங்கேசன்துறை சென்று எமது பெற்றோர், சகோதரர்களைக் கண்டதும் ஒரு அந்நிய நாட்டிலிருந்து உயிர்தப்பிவந்த உணர்வேற்பட்டது. நீண்ட காலத்தின் பின்னர் காங்கேசன்துறையில் நெருக்கடியோ, மன அழுத்தமோ அற்ற ஓர் அமைதியான வாழ்க்கை எமக்குக் கிடைத்ததுபோன்ற உணர்வு. எமது மாதாந்தச் சம்பளத்தை யாழ்ப்பாணத்தில் அப்போது அமைக்கப்பட்டிருந்த இலங்கை வானொலிக் கலையகத்தில் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாட்டை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன, மற்றும் ரூபவாஹினி நிர்வாகங்கள் செய்திருந்தன.

நடேஸ்வராக் கல்லூரியில் கப்பலில் வரும் அகதிகளுக்கான இடைத்தங்கல் முகாம் அமைக்கப்பட்டிருந்தது. நான் மீண்டும் எனது கல்லூரிக்குச்சென்று அங்குள்ள ஆசிரியர்கள், மாணவர்களோடு இணைந்து மக்களை வரவேற்று, அவரவர் சொந்த இடங்களுக்கு அனுப்பும் பணியில் மனநிறைவுடன் ஈடுபட்டேன். அந்த சில மாதங்களில் பழைய நண்பர்களுடன் மாலை வேளைகளில் அளவளாவுவது, அப்போது தமிழ் மக்களிடையே பிரபலமாக விளங்கிய வெரித்தாஸ் மற்றும் பிபிசி வானொலிகளைக் கேட்டு, அதில் ஒலிபரப்பான இலங்கை பற்றிய செய்திகளையும், உலகில் நடைபெற்ற முக்கியச் செய்திகளைப் பற்றியும் கலந்துரையாடுவது எமது வழக்கமாக இருந்தது. கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் இலங்கையிலிருந்து ஒருவருக்கும் தெரியாமல் இந்தியா சென்ற பின்னர் கொடுத்த பேட்டி, இந்திராகாந்தி அவர்கள் இலங்கைக்குப் பார்த்தசாரதி அவர்களை அனுப்பிவைத்தமை, பிலிப்பைன்ஸ் நாட்டின் அப்போதைய தலைவர் பெனிக்னோ அக்கியூனோ அவர்களின் படுகொலை போன்றவை அப்போது மக்களின் கவனத்தைப்பெற்ற விடயங்கள்.

இதேநேரம், நான் மிக ஆவலுடன் ஆரம்பித்த ரூபவாஹினிப் பணிபற்றி எனக்கு எந்தவிதமான சிந்தனையும் ஏற்படவில்லை. ஒரு அந்நியன்போல் அங்கு நடப்பவற்றை அறிந்துகொண்டிருந்தேன். நிகழ்ச்சித் தயாரிப்புப்பிரிவில் தமிழர்கள் எவரும் பணியாற்றவில்லை. அங்கு நிகழ்ச்சி வழங்கல் உத்தியோகத்தராகப் பணியாற்றிய சந்திராணி என்பவர், ஏற்கனவே கலையரங்கத்தில் ஒளிபரப்பான நிகழ்ச்சிகளை மீள் ஒளிபரப்புச் செய்துகொண்டிருந்தார். ஆயிஷா ஜுனைதீன் செய்திகளை வாசித்தார். கலவரத்தால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருந்த கமலா தம்பிராஜா தனது சிங்கள நண்பர்களின் வீட்டில் தஞ்சமடைந்திருந்துவிட்டு, அந்த வார இறுதியிலேயே ரூபவாஹினிக்குத் திரும்பிச் செய்திகள் வாசிக்கத் தொடங்கிவிட்டார். இவையனைத்தையும் கேள்விப்பட்டாலும் நான் அப்போது எனது தாய், தந்தை, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் நிம்மதியாகப் பொழுதைக் கழித்துக் கொண்டிருந்தேன்.

நாம் அப்போது பாதுகாப்பாக உணர்ந்த அந்தப் பூமியே சில ஆண்டுகளில் மிகப் பயங்கரமான பூமியாக மாறியமை இலங்கைத் தமிழர்களின் துயர்மிகு வரலாறு.

கடைசியாக, 1990-ம் ஆண்டு காங்கேசன்துறைக்குச் சென்ற நான், ஏறக்குறைய இருபத்தைந்து ஆண்டுகளின் பின்னர் 2014-ம் ஆண்டு, மீண்டும் அங்கு சென்றபோது ஊரையே காணவில்லை. முற்றாக அழிக்கப்பட்டுப் பெரும்காடாகக் காட்சியளித்தது. எமது எண்ணத்தில் நிறைந்திருக்கும் காங்கேசன்துறையை இனி எம்மால் காணவே முடியாது.



wikneswaran.p@thaiveedu.com

# கறுப்பு ஜூலை



## தெரிந்த நினைவுகள் ! தெரியாத பின்னணி !

– போல் ஜோசேப்

*‘எரிந்த பல கட்டடங்கள்*
*எரிந்து கருகிய உடல்கள்*
*நரகமாகிப்போன நகரத்தில்*
*எல்லா கடைகளும் பூட்டப்பட்டு*
*சவப்பெட்டிக் கடைகள் மட்டுமே*
*திறந்திருந்த காலம் கறுப்பு ஜூலை.*
*நித்தமும் புத்தம் சரணம் பாடும்*
*பித்தர்கள் கூட்டத்தின் யுத்தவெறி*
*புத்தரின் பல்லிலும் ரத்தம் பூசியது’*

40 ஆண்டுகள் கடந்தும் ஆறாத ரணங்களாய்க் கறுப்பு யூலையின் பிரதியெடுக்க முடியாத காட்சிகளாய் நம் பலரின் கண்ணின் கேமராவுக்குள்ளே கனகாலமாய்க் கிடக்கிறது. யூலை இனப்படுகொலைக்கு விதை போட்ட பல காரணிக-ளில் ஜே.ஆர்-இன் வரிகளை மறக்க முடியாது. அன்று - 1983 ஜூலை 11, லண்டன் டெய்லி டெலிகிராப் நாளிதழ் வெளியிட்ட தலைப்புச் செய்தி அது. மற்றைய சிங்கள ஊட கங்களிலும் தலைப்புச் செய்தியாக அல்ல தமிழர்களின் தலையை எடுக்கச் சொன்ன செய்தியாக மாறியது.

அதை அப்படியே மொழிபெயர்த்தால்...

***‘தமிழ் மக்களின் கருத்தைப் பற்றி நான் கவலைப்பட வில்லை. இப்போது நாம் அவர்களைப் பற்றியோ அவர்க ளின் வாழ்க்கையைப் பற்றியோ அல்லது அவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதைப் பற்றியோ சிந்திக்க முடி யாது. தமிழர் மீது எந்த அளவுக்கு அழுத்தம் கொடுக்கிறீர் களோ அந்த அளவுக்குச் சிங்கள மக்கள் இங்கு மகிழ்ச்சி யாக இருப்பார்கள். உண்மையில் நான் தமிழரைப் பட் டினி போட்டால் சிங்கள மக்கள் மகிழ்வார்கள்.***

தமிழர்களைப் பயங்கரவாதிகளாகச் சிங்கள இனத்தவருக்கு அறிமுகப்படுத்தும் தொனியில் மேலும் பல உள்ளர்த்தங்க ளைக் கொண்டதாக அமைந்த இந்த நேர்காணல் வரிகள் இனவெறியைத் தூண்டிய பொறிகள். யாழ்ப்பாணத்தில் விடு தலைப்புலிகளால் 13 இராணுவத்தினர் ஜூலை 23 அன்று தாக்கப்பட்டதற்குப் பதிலாகத் தான் தெற்கில் இனக்கலவரம் தொடங்கியது என்ற பொதுவான கருத்தோட்டம் நம் எல்லோ-ரிடமும் உண்டு. ஆனால் அந்தத் தாக்குதலின் பின்புலத்தில் பலருக்கும் தெரியாத அல்லது மறைந்து போன உண்மை ஆதாரங்கள் பல உண்டு.

1983-ல் ஏப்ரல் மாதம் முதல் ஜூலை வரை பல துன்பியல் நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்றன. குறிப்பாகக் காந் திய இயக்கத்தின் பொறுப்பாளர்கள் எஸ்.ஏ. டேவிட் ஐயா மற்றும் டாக்டர் ராஜசுந்தரம் ஆகியோர் கைது செய்யப்பட் டுச் சித்திரவதைக்குள்ளாயினர்.

ஏப்ரல் 10, 1983 கிளிவெட்டியைச் சேர்ந்த நவரத்தினராஜா என்ற இளைஞர் பயங்கரவாதத் தடுப்பின் கீழ் கைது செய் யப்பட்டவர், பின்பு அவரது உடலில் 35 சித்திரவதைக் காயங்களோடு குருநகர் இராணுவ முகாமில் படுகொலை செய்யப்பட்டார்.

1983 மே 18-ல் விடுதலை புலிகள் உள்ளூர்த் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டுகோள் விடுத்தனர். அதனைத் தொடர்ந்து யாழ் நகரில் இராணுவத்தினர் கடைகளையும் வீடுகளையும் பல வாகனங்களையும் தீயிட்டு நகைக் கடைக ளையும் கொள்ளையடித்தனர்.

மே மாதம் 30-ம் தேதி வல்வெட்டிதுறையைச் சேர்ந்த சபாரத்-தினம் பழனிவேல் என்பவர் இராணுவ முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அன்றைய தினமே இராணுவப் பாரிய வாக னத்தை அவர் மீது ஏற்றிக் கொன்று, நசுங்கிப் போன உடலை வீதியில் வீசி விட்டு சென்றனர்.

ஜூன் 6-ல் அவசர காலச் சட்டத்தை ஜே.ஆர் பிறப்பித்தார். அது என்னவென்றால் இராணுவத்தினரால் கைது செய்யப்ப டுபவர்களை நீதித்துறைச் சட்டங்களுக்கு உட்படுத்தாமல் விசாரணை செய்யும் அதிகாரமும் மற்றும் அவர்கள் இரா ணுவ முகாமில் இறக்கும் பட்சத்தில் பிரேதப் பரிசோத னையோ அல்லது மரண விசாரணையோ செய்யத் தேவை யில்லை என்ற கொடிய பயங்கரவாதச் சட்டம் நடைமு றைக்கு வந்த நாளாகும்.

அந்த மாதமே இதனைத் தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக் குப் பகுதிகளில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடல்களை உற வுகளிடம் ஒப்படைக்க மறுத்தனர். திருகோணமலையில் பல வீடுகளும் கடைகளும் தீ வைக்கப்பட்டு இராணுவத்தினரால் சூறையாடப்பட்டது. அதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் அவர்களின் வீட்டுக்குள்ளே குண்டு வீசிக் கொலை முயற்சியும் நடைபெற்றது.

ஜூன் மாதம் 1983-ல் யாழ்ப்பாணம், திருகோணமலை, நீர் கொழும்பு, ரத்மலானை, குருநாகல் போன்ற இடங்களில் தமிழ்த் தொழிலதிபர்களின் தொழிற்சாலைகள். துணி தயா-ரிப்பு நிறுவனங்கள் போன்றவை திட்டமிட்டுத் தாக்கி அழிக்




கப்பட்டது. புதிய பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் பல்கலைக்கழக மாணவர்கள் பலர் கைது செய்யப்படுவதும் காணாமல் ஆக்கப்படுவதும் அன்றே தொடர்கதையானது.

ஜுலை 1, 1983 Saturday review என்ற ஆங்கில நாளிதழும், சுதந்திரன் நாளிதழும் தடை செய்யப்பட்டது.

ஜுலை 20. அதாவது, கறுப்பு ஜுலை இனப்படுகொலைக்கு முன்பாக இலங்கையில் உள்ள உள்ளூர் மற்றும் வெளிநாட்டு ஊடகங்களுக்குத் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் பத்திரிகை தணிக்கைச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

ஜுலை 22 மாலையில் மாணவிகள் மூவர் மேலதிக படிப்பை தனியார் கல்லூரியில் (டியூசன்) முடிந்து வீடு திரும்பும் வழியில் இராணுவத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுக் கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டனர். சிதைக்கப்பட்டு வீடு திரும்பிய மூவரில் ஒருவர் அன்றே தற்கொலை செய்து கொண்டார்.

இப்படித் தொடர்ச்சியான பல இனவழிப்பு சம்பவங்களின் அடிப்படையில் அதன் பதிலடியாக ஜுலை 23 திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் மீதான தாக்குதல் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்டது.

நான் இத்தனை வரலாற்றுத் தடத்தின் வழிவந்த ஆதாரப்பூர்வமான தகவல்களைத் தர முயல்வது ஏனென்றால், ஜுலை இனப்படுகொலைக்குப் புலிகளின் இத்தாக்குதல் தான் காரணம் என்று ஒரு வரலாற்றுப் புனைவு தொடர்ச்சியாகச் சொல்லப்படுகிறது. இன்னும் பல சம்பவங்களையும் ஆராய்ந்து ஆகஸ்ட் 4, 1983-ல் வெளியான லண்டன் டைம்ஸ் ஆய்வறிக்கையின்படியும் டிசம்பர் 1983 தி இன்டர்நேஷனல் கமிஷன் ஆப் யூரிஸ்ட் அறிக்கையின் படியும் அரசாங்கத்தினாலும், அரச இயந்திரமான இராணுவத்தாலும், சிங்கள இனவாதிகளாலும் தமிழ் மக்கள் மீது ஏற்கனவே திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப்படுகொலை தான் கறுப்பு ஜுலை என்பது உறுதியாக்கப்பட்டுள்ளது.


விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்ட இராணுவ டிரக் வண்டி.

3,000 பேர் படுகொலை செய்யப்பட்டும், 600-க்கு மேற்பட்ட பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டும், கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் பேர் உயிர்பிழைக்க இடம்பெயர்ந்தும், சுமாராக 5,000 வணிக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள், 1,800 வீடுகள், எண்ணற்ற வாகனங்கள் சிதைத்தும் எரித்தும் அழிக்கப்பட்டன என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளியான, சட்டத்தரணி திரு. கனக. மனோகரன் அவர்களின் ‘ஈழத் தமிழர் எமக்காக வாழ்ந்தவர்கள்’ என்ற நூல் வெளியிடும்போது அதை நான் நூல் ஆய்வுரை செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. அதில் பல



அரிய தகவல்களை நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். 1983 காலப்பகுதிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் தீவிரமாகச் செயற்பட்டவர் கனக. மனோகரன். மறைந்த தலைவர் அமிர்தலிங்கம் அவர்களின் மிக நெருங்கிய நண்பரும் இன விடுதலையை நேசித்தவரும்தான் இந்த நூலாசிரியர்.

ஆடிக் கலவரம் சற்று அடங்கிப்போகச் சில நாட்களின் பின்பு அன்றைய இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் வெளி விவகார அமைச்சர் நரசிம்ம ராவ் அவர்களை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். அவர் மூலம் அமிர்தலிங்கம் அவர்களுக்கு இந்திரா காந்தியின் அழைப்பு விடுக்கப்பட்டது. அன்றைய சூழலில் தொண்டமான் அவர்கள் அமிர்தலிங்கத்தை விமான நிலையம் அழைத்துச் சென்று பாதுகாப்பாகச் சென்னைக்கு அனுப்பி வைத்தார். ஆகஸ்ட் 13, 1983 அன்று சென்னை விமான நிலையத்தில் வந்திறங்கிய அமிர்தலிங்கம் அவர்களுக்கு எம்.ஜி.ஆர் அவர்களின் அமைச்சர்களான ராஜா ராம் மற்றும் பண்ருட்டி ராமச்சந்திரன் ஆகியோர் அரசு விருந்தினராக அவரை வரவேற்றனர்.

அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் ஆகியவர்களையும் அமிர்தலிங்கம் சந்தித்த பின் அன்றைய தினமே இந்திராவின் அழைப்பின் பேரில் டெல்லி சென்று மறுநாள் காலை ஜுலை 14 டெல்லி விமான நிலையத்தில் இறங்கியபோது அமைச்சர் நரசிம்மராவ் அவர்கள் விமான நிலையத்தின் ஓடுபாதை அருகில் சென்று கட்டியணைத்து ஒரு சிறப்பு விருந்தினருக்கான மதிப்பும் வரவேற்பும் அழிக்கப்பட்டது. இதன் ஆதாரமாக அந்த நூலில் புகைப்படங்களையும் ஆசிரியர் வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய பெரியவர்கள் அரசியல் பேசும்போது பயன்படுத்தும் ஒரு வார்த்தை 'நரி ஜே.ஆரின் முகத்தில் கரி பூசிய இந்திரா'. ஆம், இந்திரா அம்மையாருக்கும் ஜே.ஆருக்குமான ஒரு பனிப்போர் எப்போதுமே இருந்து கொண்டிருந்தது. அதற்கு அயலக அரசியல் மட்டுமல்ல பூகோள அரசியலும் ஒரு காரணம். இந்திராகாந்தி எப்போதுமே அன்றைய சோவியத்துடன் நெருங்கிய நட்புறவு கொண்டவர், ஆனால் ஜே.ஆர் அமெரிக்காவுடனும் இந்தியாவின் நிரந்தர எதிரியான சீனாவுடனும் நட்புறவுக் கொள்கையை கொண்டிருந்தவர்.

அமிர்தலிங்கம் டெல்லி சென்ற அன்றைய தினமே இந்திராகாந்தி அவர்களுடன் ஒன்றரை மணி நேரங்களுக்கு மேலாகவும் சந்திப்பு நடைபெற்றது. அதன் பின்னர்தான் பல திடீர்த் திருப்பங்களும் எதிர்பாராத மாற்றங்களும் ஏற்பட்டது என்று கூறலாம். அந்தப் பேச்சுவார்த்தையின் போது இந்திரா அவர்கள் குறிப்பிட்ட விடயம், 'நான் அணிசேரா நாடுகளின் தலைவியாக உள்ளேன், மலேசியா மற்றும் இலங்கை உள்ளிட்ட விவகாரங்களில் தலையிடுவதாக ஜே.ஆர் என் மீது எப்போதுமே குற்றம் சுமத்துகிறார், இப்போது இலங்கையில் நடைபெற்ற விடயங்கள் தொடர்பாக ஒரு கடிதம் தயார் செய்யுங்கள் அணிசேரா நாடுகளின் தலைவர்களுக்கு அனுப்புங்கள்' என்று இந்திரா சொன்னார். அடுத்த நாளே நீலன் திருச்செல்வம் அவர்களுடன் இணைந்து 14 பக்கக் கடிதம் தயார் செய்யப்பட்டு அன்றே எல்லா அணிசேரா நாடுகளின் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

அன்று மாலையே இந்திய அரசின் ஏற்பாட்டில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு ஊடகவியலாளர் சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. சுமார் 200 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்ட சந்திப்பில் நீலன் தலைமையில் குழுவினர் நிலைமையை விளக்கினார்கள். அடுத்தநாள் இந்தியாவின் சுதந்திர தினம், அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. விழா தொடங்கும் முன்பே காலையில் பாராளுமன்றக் கட்டடத்தில் பூட்டாசிங் தலைமையில் எதிர்க் கட்சித் தலைவர்களைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவரான அமிர்தலிங்கம், இந்திராவின் அழைப்பின் பேரில் கலந்துகொண்டு எதிர்க்கட்சிகளின் ஆதரவினை எந்த எதிர்ப்புகளும் இன்றிப் பெறும் யுக்தியினை இந்திரா கையாண்டு 'ஜே.ஆர் இந்தியாவின் எதிரி மட்டுமல்ல இந்திராவின் எதிரியும் தான்' என்று குறிப்பிட்டாராம்.

அன்று சுதந்திர தினம், எதிர்க்கட்சித் தலைவர்களின் கூட்டம் முடிந்ததும் இந்திராவிடம் இருந்து அழைப்பு வருகிறது, சுதந்திரதின விழாவில் கலந்து கொள்ள வாருங்கள் ஆனால் விழா தொடங்கிய பிறகு சில நிமிடங்கள் தாமதமாக உங்களை அழைத்து வர ஏற்பாடுகளைச் செய்து விட்டேன் என்றார் இந்திரா. நன்றி என்று பதில் சொன்ன அமிர்தலிங்கத்திற்கு ஒன்றும் புரியவில்லை. அதன் பின்பு எதிர்க்கட்சித் தலைவர்களுக்கான சந்திப்பு சுமுகமாக முடிந்ததை அறிந்து மிக்க மகிழ்ச்சி, எனது வேலையை மிகச் சுலபமாக்கி விட்டீர்கள் என்று இந்திராவும் பதிலளித்தாராம்.

சுதந்திரதின விழா கோலாகலமாகத் தொடங்கியது, அமைச்சர்கள், அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதுவர்கள், சிறப்பு விருந்தினர்கள், பாதுகாப்புப் படையினர் என்று டெல்லிக் கோட்டையின் மைதானம் நிரம்பி இருந்தது. விழா மேடையினைச் சுற்றிலும் பலத்த பாதுகாப்பு, சிறப்பு விருந்தினராக அன்றைய சோவியத் யூனியனின் துணை ஜனாதிபதியும் இந்திராவும் மட்டுமே மேடையில் அமர்ந்திருந்தனர். திடீரென ஒரு பரபரப்பு பலத்த பாதுகாப்புடன் மேடையின் அருகே ஒரு கார் வந்து நின்றது. மேடையை விட்டு கீழே இறங்கி இந்திராகாந்தி வருகிறார், காரில் இருந்து இறங்கிய அமிர்-தலிங்கம் அவர்களைக் கைகுலுக்கி ஒரு நாட்டின் அதிபரைப் போலக் கௌரவித்து மேடைக்கு அழைத்துச் செல்கிறார் இந்திரா. ஏற்கனவே போடப்பட்டு காலியாக இருந்த மூன்றாவது இருக்கையில் அமரச் செய்கிறார்.

தனது சுதந்திரதின உரையிலும் இலங்கையில் இடம்பெறும் தமிழர் மீதான வன்முறைகளைக் கடுமையாகக் கண்டித்துப் பேசினார் இந்திரா. மறுநாள் அமிர்தலிங்கம் அவர்கள் மாநிலங்கள் அவையில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார். அதில் உரையாற்றிய இந்திராகாந்தி இலங்கையில் தமிழர்கள் மீதான தாக்குதல் மிருகத்தனமானது, இதை இந்திய அரசு வன்மையாகக் கண்டிக்கிறது என்றார்.

அதன் பின்னர் இந்திராகாந்தி எடுத்த உடனடி முயற்சிகள் உலக அரங்கில் எமது பிரச்சினையை உற்றுநோக்கும் வகையில் அமைந்தது. இந்திராவின் பணிப்பின் பேரில் அரச சிறப்பு அழைப்பாளியாகப் பிரித்தானியா மற்றும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு டெல்லியில் இருந்தே சென்றார் அமிர்தலிங்கம். அதே ஆண்டு ஐப்பசியில் இன்னொரு அரசியல் அதிசயம் நிகழ்ந்தது. அமிர்தலிங்கம் அவர்களை இந்தியாவின் மூத்த அதிகாரி ஜி. பார்த்தசாரதி அவர்கள் மூலம் ஐ.நா சபை கூட்டத் தொடரில் கலந்துகொள்ள அமெரிக்காவுக்கு அனுப்பினார் இந்திரா. இவர்களுடன் பண்ருட்டி ராமச்சந்திரனும் சென்றார். இருவரும் ஐ.நா சபையின் அரங்கில் உரையாற்றி, ஈழத்தமிழரின் பிரச்சினைகளைக் குரலற்றவர்களின் குரலாக அன்று உலகறியச் செய்தனர். உலகத் தலைவர்களுக்கு அமிர்தலிங்கம் அவர்களைத் தனிப்பட்ட முறையில் அறிமுகமும் செய்து வைத்தார் பார்த்தசாரதி.

இந்திராவின் துணிகரமான அடுத்த நகர்வு நமது பல்லாயிரக் கணக்கான போராளிகளுக்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சர்வதேசச் சட்ட விதிமுறைகளையும் தாண்டி மேற்கொண்டார். அதற்கு எம்.ஜி.ஆர் அவர்களும் பின்புலத்தில் கைகொடுத்துச் செயற்பட்டார்.

பல போராளி அமைப்புகளுக்கு தமிழகத்திலும், உத்தரப்பிரதேச மாநிலத்திலும் (அன்று அது Delhi training) என்று அழைக்கப்பட்டது) இந்திய இராணுவப் பயிற்சியாளர்களால் கட்டமைக்கப்பட்ட பலகட்ட இராணுவப் பயிற்சி முறைகள் வழங்கப்பட்டன. அதுமட்டுமல்ல, சில போராளி அமைப்புகளிலும் பலரைத் தேர்வு செய்து அவர்களைப் பாலஸ்தீன் மற்றும் லெபனான் போன்ற இடங்களுக்கு அனுப்பிச் சில மாத கால நேரடிப் போர்முறைப் பயிற்சிகளையும் (PLO training) வழங்கப்பட்டது.

1984-ல் இந்திராவின் இழப்பும், 1987-ல் எம்.ஜி.ஆர்-ன் இழப்பும் இல்லையென்றால் 2009-ல் முள்ளிவாய்க்கால் என்ற இந்த நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலை நடந்திருக்காது. இந்திய நலனுக்காகவும் அயலக மற்றும் பாதுகாப்புக்காகவும் தனிப்பட்ட முறையில் ஜே.ஆரின் மீது கொண்ட கசப்பும் வெறுப்பும் காரணமாகவும் இந்திராவின் அரசியல் தந்திரங்களின் ஒரு பொறியாகவும் 40 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது.

பின்பு வந்த இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்களின் தவறான அணுகுமுறைகளும், அவர்களால் வழிநடத்தப்பட்ட ராஜீவ் காந்தி அவர்களின் அனுபவமற்ற அரசியல் நகர்வுகளும், அதன் பின்னரான இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட ஆயிரக்கணக்கான படுகொலைகளும், பாலியல் வன்கொடுமைகளும் அதன் பின்னான விளைவுகளும் நாம் எல்லோரும் அறிந்தவைகளே.

கடந்த 40 ஆண்டுகளாகக் கறுப்பு ஜூலை நினைவுகளைச் சுமந்து கொண்டும், அதன் முன்னும்பின்னுமான தொடர்ச்சியான இனப்படுகொலை வடுக்களோடும், இன்னமும், பலகட்டப் பேச்சுவார்த்தை.., மீள் ஒருங்கிணைப்பு.., பொறுப்புக் கூறல்.., நல்லிணக்கம்... என்ற பூச்சாண்டி வார்த்தைகளுக்குப் பின்னால் கூட்டம்...

இத்தனை வலிகளுடனும் 'அவங்க ரொம்ப நல்லவங்கப்பா' என்ற வடிவேலுவின் நகைச்சுவைதான் என் நினைவுக்கு வந்து போகிறது.



paul.joseph@thaiveedu.com

# ஹென்றி கிசின்ஞர் 100

– ரதன்



மனிதர் நாகரீகமடைந்து, வளர்ச்சிகண்டு கூட்டமாக அலைந்து ஒருவர் தலைமை தாங்கிப், பின்னர் அரசு, அரசன் என கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டபோது, மனிதக் குழு அறத்துக்கு முக்கியத்துவமளிக்கவில்லை. மாறாகத் தனது அரசுக்கு எது சாதகமானதோ அதனையே செய்து வந்தது.

இன்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளது. உலகின் பெரும்பாலான நாடுகள் அதில் அங்கம் வகிக்கின்றன. அப்படியிருந்தும் ஆக்கிரமிப்புகள் நடைபெறுகின்றன. சைப்பிரசில் இரண்டு நேட்டோ நாடுகள் களமிறங்கிய போது, அமெரிக்காவின் நிலைப்பாட்டிற்கான காரணத்தை ஹென்றி கிசின்ஞர், செனட்டில் கேள்வி ஒன்றிற்குப் பின்வருமாறு பதிலளித்தார். 'There are times when the national interest is more important I than the law', சட்டத்தை விட தேசிய நலனே முக்கியம்.

உக்கிரேனின் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்புத் தவறானது என்றாலும், ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு உக்கிரேனின் நடவடிக்கைகள் அச்சுறுத்தலாக இருக்கும் பொழுது, ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை எதிர்க்கமுடியாதுள்ளது.

அமெரிக்காவின் நடவடிக்கைகள் அனைத்தும் இன்று தேசிய நலனுக்காகச் செய்யப்படுகின்றன எனப் பழமைவாதிகள் வாதிடுகின்றனர். அவ்வாறான ஒரு பழமைவாதியே ஹென்றி கிசின்ஞர்.

1923-ல் பிறந்த ஹென்றி கிசின்ஞருக்குக் கடந்த மே 27 அன்று நூறாவது வயது பூர்த்தியாகிவிட்டது. அமெரிக்காவின் மிகச் சிறந்த அரசியலறிஞர் எனப் போற்றப்படுபவர். நிக்சன், போர்ட் ஆகிய ஜனாதிபதிகளுடனும், பின்னர் ஜோர்ஜ் டபிள்யு புஸ் உடனும் பணிபுரிந்தவர். ஜோர்ஜ் டபிள்யு புஸ் இவரை 9:11 விசாரணைக் குழுத் தலைவராக நியமித்திருந்தார். நிக்சன் மற்றும் போர்ட்-இன் வெளிவிவகார அமைச்சராகவும் ஆலோசகராகவும் இருந்துள்ளார். நிக்சனின் பின்னர் ஆட்சியில் அமர்ந்த ஜனாதிபதிகள் அனைவரும் இவருடன் தொடர்பிலிருந்துள்ளார்கள். ஆலோசனைகளையும் பெற்றுள்ளனர். டொனால்ட் ரம்ப் விதிவிலக்கு. ரம்ப் ஆலோசனைகளைக் கேட்காதவர்.

கிசின்ஞர் 1954-ல் ஹவார்ட் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றார். இவர் 18 நூல்களையும் எழுதியுள்ளார்.

### ஹென்றி கிசின்ஞரின் வேதனைகள்:

- 1968-ல் ஹவார்ட் பேராசிரியர் கிசின்ஞர், நிக்சனின் தேர்தல் பிரச்சாரத்துக்கு உதவி செய்யும் வகையில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சன் வியட்நாமுடன் நடத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரங்களை நிக்சனின் தேர்தல் பிரச்சாரக் குழுவிற்குத் தெரியப்படுத்தினார். ஜோன்சனின் சமாதானப் பேச்சுகள் வெற்றியளிக்குமாயின் நிக்சன் ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைவது ஓரளவிற்கு உறுதியாகவிருந்தது. நிக்சன் குடியரசுக் கட்சி சார்பாகப் போட்டியிட்டார். ஜனநாயகக் கட்சி சார்பாக ஜோன்சனின் அரசில் உதவி ஜனாதிபதியாகவிருந்த Hubert Humphrey போட்டியிட்டார்.

நிக்சன் தனது தேர்தல் பிரச்சாரங்களில், தான் தேர்தலில் வெற்றி பெற்றால் தெற்கு வியட்நாமுக்கு அதிகளவு உறுதிகள் வழங்குவேன் எனப் பிரச்சாரம் செய்தார். தேர்தலில் வெற்றியும் அடைந்தார். 43.4 வீதங்களை நிக்சன் பெற்றிருந்த போதும், ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஜோர்ஜ் வோலஸ்ம் சுயேட்சையாகப் போட்டியிட்டு 13.5 வீத வாக்குகளைப் பெற்றமை நிக்சனுக்குச் சாதகமாக அமைந்தது.

வெற்றி பெற்ற நிக்சன் பதிவிக்கு வந்த சில வாரங்களிலேயே Breakfast Plan, Operating Menu ஆகிய இரகசியப் பெயர்களைக் கொண்ட தாக்குதல்களை மேற்கொண்டார். ஹோ சி மின்னை இதன் மூலம் அடிபணிய வைக்கலாம் என்ற நோக்குடனேயே வட வியட்நாமின் விநியோகப் பாதைகள் அமைந்துள்ள கம்போடியா, லாவோஸின் பகுதிகளின் மீது தாக்குதல்களை மேற்கொண்டார். அமெரிக்காவின் விருப்பத்துக்கு அடிபணிய வைப்பதே நிக்சனின் நோக்கம். நிக்சனை இவ்வாறு செய்யுமாறு ஆலோசனை வழங்கியது ஹென்றி கிசின்ஞர். இவர் அப்போது ஒரு நிழல் ஜனாதிபதியாகவே செயற்பட்டார். இவர் ஆலோசனை வழங்கி மார்ச் 17, 1969-ல் ஆரம்பிக்கப்பட்ட தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

B-52 குண்டு வீச்சுத் திட்டத்தை நியுயோர்க் ரைம்ஸ் பத்திரிகை முதலில் வெளியிட்டது. இதனைத் தொடர்ந்து கிசின்ஞர் பத்திரிகைக்குச் செய்திகள் அனுப்பியவர்களைத் தேடத் தொடங்கினார். இவரது அலுவலகத்தில் வேலை



பார்த்தவர்கள் உட்படப் பலரது தொலைபேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டன. இதனைச் செய்யுமாறு கிசின்ஞரே கூறி னார் எனக் கூறப்பட்டது. இதனை நிக்சனும் அறிவார்.

- Operation Condor - eliminating Marxist subversion பல இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன், மத்திய அமெரிக்க நாடுகளிலும் அமெரிக்க அரசினால் செயற்படுத்தப்பட்டது. இடதுசாரி புத்திஜீவிகள், ஆதரவாளர்கள் ஒழிப்பே இதன் பிரதான நோக்கம். ஜோன்சன், நிக்சன், போர்ட், கார்ட்டர், ரீகன் ஆகிய ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலங்களில், அவர்களது ஆசியுடன் இந்த நடவடிக்கை இடம்பெற்றது.

கொன்டோர் திட்டத்தின் மூலதாரியே கிசின்ஞர் ஆவார்.

கொன்டோருக்கு முன்பாக சிலியின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட இடதுசாரி அதிபர் சல்வடோர் அலன்டேயை பதவியேற்காமல் செய்யக் கிசின்ஞர் முயன்றார்.

அலன்டே தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் இவரைச் சிலியின் காங்கிரஸ் அங்கீகரிக்க வேண்டும். கிசின்ஞரின் ஆலோசனைப்படி காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு இலஞ் சம் கொடுத்து, அவர்களை அல்லன்டேயின் வெற்றிக்கு எதிராக வாக்களிக்கத் தூண்டுவதாகும். இதனைச் சாத்தி யப்படுத்த முடியவில்லை. எனவே இரண்டாவது நடவ டிக்கை தீர்த்துக்கட்டுவது. Operation Fubelt என்பதே தீர்த் துக்கட்டும் நடவடிக்கைக்கு பெயர். எனினும் இத்திட்டமும் வெற்றியளிக்கவில்லை. மாற்றுத் திட்டங்களைக் கிசின்ஞர் சிந்திக்கத் தொடங்கினார்.

General René Schneider Chereau அமெரிக்காவின் திட்டத் துக்கு உடன்படாததால் அவரைக் கொலை செய்து இரா ணுவப் புரட்சியை ஏற்படுத்தி அல்லன்டேயை ஜனாதிபதி யாகமல் செய்வதே அமெரிக்காவின் திட்டம். ஜென்ரலும் கொலை செய்யப்படுகின்றார். பழி அல்லன்டேயன் ஆதர வாளர்கள் மீது சுமத்தப்படுகின்றது.

இதன் பின்னர் அமெரிக்க அரசு சிலியின் மக்களால் தேர்வு செய்யப்பட்ட அதிபர் அல்லன்டேயுடன் எந்தவித உறவுகளையும் மேற்கொள்ளாமல் கிசின்ஞர் பார்த்துக் கொண்டார். இவரது ஆலோசனைகளின் பிரகாரம் நிக்சன் செயற்பட்டார்.

அல்லன்டே 1973 செப்ரம்பர் மாதம் கொலை செய்யப்பட்ட பின்னர் இராணுவத் தளபதி Augusto Pinochet ஜனாதிப தியானார். இவரது கொடுமையான ஆட்சிக்கு அமெரிக்கா ஆதரவாகச் செயற்பட்டது. கிசின்ஞர் இடதுசாரிப் போரா ளிகளுக்கு எதிராகவே செயற்படுகின்றார். கம்யூனிசத்தின் ஒரு பலிக்கடா இவர் என்றார். அல்லன்டேயைக் கொன்ற தன் மூலம் மேற்கிற்கு உதவி செய்துள்ளீர்கள் என மேலும் கிசின்ஞர் தெரிவித்திருந்தார். (Kissinger told the Chilean dictator: 'My evaluation is that you are a victim of all left-wing groups around the world and that your greatest sin was that you overthrew a government which was going communist.') . ('You did a great service to the West in overthrowing Allende.')

1976 செப்ரம்பர் 21 அல்லன்டேயின் ஆதரவாளரும், Augusto Pinochet-ஐ எதிர்த்தவருமான சிலியின் முன்னால் அமெரிக்காத் தூதுவர் Orlando Letelier அமெரிக்க மண் ணில் வைத்து சிலியின் இராணுவ ஆட்சியினரால் மோட் டார் வாகனமொன்றில் குண்டு வைக்கப்பட்டுக் கொல்லப் பட்டார். இக்கொலை நடைபெறுவதற்கு ஐந்து நாட்க ளுக்கு முன்னர் சிலியிலும், உருகுவேயிலும் உள்ள அமெ ரிக்கத் தூதுவர்கள் கொன்டோர் நடவடிக்கை பற்றிய எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர்.

லெற்றேலியர் சிலி இராணுவ ஆட்சியினரால் கைது செய்

யப்பட்டுச் சித்திரவதை செய்யப்பட்ட பொழுது இவரை விடுதலை செய்யுமாறு கோரியவர்களில் கிசின்ஞர் குறிப்பி டத்தக்கவர். தொட்டிலையும் ஆட்டிப் பிள்ளையையும் கிள் ளிவிடுவதில் கிசின்ஞர் கில்லாடி.

கிசின்ஞரால் உருவாக்கப்பட்ட Operation Condor ஆர்ஜன்ரீனா, சிலே, உருகுவே. பரகுவே, பொலிவியா, பிரேசில், பெரு, ஈகுவடேர் போன்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன், மத்திய அமெரிக்க நாடுகளிலும் அமெரிக்க அரசினால் செயற்படுத்தப்பட்டது. இடதுசாரிச் சார்பு அரசுக



ளைத் தூக்கியெறிந்து, அமெரிக்கச் சார்பு அரசுகளை ஆட்சியில் இருத்துவதன் மூலம், தொடர்ச்சியான சுரண்டல் களையும் அமெரிக்கா செயற்படுத்திவந்தது.

1954-ல் பரகுவேயில், 1964-ல் பிரேசிலில், 1971-ல் பொலிவி யாவில், 1973-ல் உருகுவே மற்றும் சிலேயில், 1975-ல் பெருவில், 1976-ல் ஆர்ஜன்ரீனாவில் அரசுகள் தூக்கியெறி யப்பட்டு, அமெரிக்கச் சார்பு ஆட்சிகள் அமைக்கப்பட் டன.

ஒவ்வொரு தடவையும் அமெரிக்க அரசு மனித உரிமைகளை மீறும் அரசுகளுக்கு எதிராகச் சட்டங்களை இயற் றும் பொழுது கிசின்ஞர் சில குறிப்பிட்ட நாடுகளை இத னுள் அடக்காமல் பார்த்துக் கொண்டார்.

- 1971-ல் பங்களாதேஷ் இனவழிப்பு நடைபெற்றது. இதற்கு மூலகாரணகர்த்தா அப்போதைய பாகிஸ்தான் ஜனாதிபதி Agha Muhammad Yahya Khan (Yahya Khan) ஆவார். இவர் முன்னால் இராணுவத் தளபதியுமாவார். இவரது ஆட்சியை நிக்சன் - கிசின்ஞர் தொடர்ந்து ஆதரித்துவந்த னர். யாஹ்ஜாக் கான் அமெரிக்காவின் நல்ல நண்பன் என நிக்சன் கூறினார்.

  இது பங்களாதேஷ் இனவழிப்பு நடைபெற்றுக் கொண்டி ருந்தபோது கூறப்பட்டது.

- இந்தோனேசியாவை 1968-லிருந்து 1998 வரை சுமார் முப் பது ஆண்டுகள் ஆட்சிசெய்த ஜெனரல் சுக்காட்டோ, ஆட் சியைக் கைப்பற்றிய பின்னர் இடதுசாரிகளை ஒழித்துக் கட்டுவதில் மும்முரமாகச் செயற்பட்டார். இவரது கொடுங் கோல் ஆட்சிக்குக் கிசின்ஞர் - நிக்சன் ஆதரவு வழங்கி னர். டிசம்பர் 1975-ல் இந்தோனேசியாக கிழக்கு ரிமோரைக் கைப்பற்றியது. சுமார் 24 வருடங்கள் இந்தோனேசியா கிழக்கு ரிமோரை ஆட்சி செய்தது. சுமார் இரண்டு லட்சம் ரிமோரியர்கள் கொல்லப்பட்டனர். இந்த ஆக்கிரமிப்புக்கு ஆதரவும் ஊக்கமும் கொடுத்தது கிசின்ஞர்.

- உலகையே ஆட்சி செய்த கிசின்ஞர் அருகில் உள்ள கியூபாவை விட்டு வைப்பாரா? ‘If we decide to use military power it must succeed. There should be no halfway measures,’ Kissinger instructed General George Brown of the Joint Chiefs of Staff. கிசின்ஞர் கியூபாவின் இராணுவ மற் றும் கடற்தளங்களை அழிக்கக் கட்டளையிட்டார். எனினும் அமெரிக்காவால் கியூபாமீது கைவைக்க முடியாதிருந்தது. 1975 இலையுதிர் காலத்தின்போது அங்கோலாவிற்குக் கியூபா தனது படைகளை அனுப்பிவைத்தது. அங்கு இட துசாரிகள் அரசமைப்பதற்கு கியூபா உதவி செய்தது. இது கிசின்ஞருக்குக் கோபமூட்டியது. கஸ்ரோவை ‘pipsqueak’ எனத் திட்டினார். கியூபா, நபீபியா மற்றும் ரொடிசீயா (சிம்பாவே)-வையும் கைப்பற்றலாம் என கிசின்ஞர் அச்சப்பட்டார். கஸ்ரோவை அழிக்கத் திட்டங்கள் தீட்டப் பட்டன.

கிசின்ஞர் தொடர்ச்சியாகக் கியூபா மீது பொருளாதார அழுத்தங்களைச் சுமத்தினார். சர்வதேசச் சந்தையிலிருந் தும், சர்வதேச ரீதியானப் பொருளாதார மற்றும் அரசியல் தனிமைப்படுத்தல்களையும் அமெரிக்கா கியூபா மீது மேற் கொண்டது. கிசின்ஞர் நிழல் ஆட்சி செய்த காலங்களி லேயே அதிகளவு அழுத்தங்கள் கியூபாவிற்கு அமெரிக்கா கொடுத்தது.

1984-ல் றீகன் ஜனாதிபதியாகவிருந்த போது U.S. National Bipartisan Commission on Central America அமைக்கப்பட் டது. இதன் தலைவராகக் ஹென்றி கிசின்ஞரை றீகன் நிய மித்தார். 12 உறுப்பினர்கள் அடங்கிய அமைப்பு இது. மத்திய அமெரிக்காவில் அப்போது நடைபெற்றுக் கொண் டிருந்த போராட்டங்களின் பின்னால் கியூபாவும் சோவியத் யூனியனும் உள்ளன. அதனை கட்டுப்படுத்த வேண்டும். இடது சாரிகள் அரசுகளில் போராளிகளை அமெரிக்கா பலப்படுத்தியது. வலது சாரிகள் அரசாட்சி செய்தால்

போராளிகள் அழிக்க கிசின்ஞரின் குழு ஆவன செய்தது. இக்குழு, அமெரிக்கா ஆயுதம் மற்றும் நிதியுதவியளித்து கியூப - சோவியத் சார்பு நிலைகளை மாற்றவேண்டும் என தெரிவித்திருந்தது

- 1972-1975 காலப்பகுதியில் கேர்ட்ஸ் போராட்டங்களைக் கிசின்ஞர் ஊக்கப்படுத்தினார். குறிப்பாக ஈராக் பகுதிகளில் கேர்ட்ஸ்-ஐத் தாக்குதல் மேற்கொள்ளத் தூண்டினார். மறுபுறத்தில், அமெரிக்கச் சார்பு ஈராக்கில் சதாம் உசேயின் கேர்ட்ஸின் போராட்டங்களை நிர்மூலமாக்கினார். ஆயிரக்கணக்கில் கேர்ட்ஸ் போராளிகளும், மக்களும் கொல்லப்பட்டனர். கேர்ட்ஸின் சுதந்திரப் போராட்டம் பின்தள்ளப்பட வேண்டும் என்பதில் கிசின்ஞர் முனைப்பாகவிருந்து வெற்றியும் கண்டார்.

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்தியவர் ஹென்றி கிசின்ஞர். இஸ்ரேலுக்கும், எகிப்துக்குமான சமாதானப் பேச்சுவார்த்தைகள், இஸ்ரேலுக்கும் சிரியாவிற்குமான பேச்சுவார்த்தைகள் இவர் அமெரிக்க அமைச்சராக இருக்கும் பொழுது ஆரம்பிக்கப்பட்டது. 1979-ல் சினாய்ப் பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறியது. இஸ்ரேலை எகிப்து அங்கீகரித்தது. இதன் மூலம் சுயஸ் கால்வாயினூடாகப் பயணிக்கவும் முடிந்தது.

கிசின்ஞர் ஜேர்மனியில் பிறந்த ஒரு யூதர். இவரது நோக்கம் முழுவதும் இஸ்ரேல் சார்ந்தே இருக்கும். இவர் ஏற்படுத்திய சமாதானப் பேச்சுவார்த்தைகளின் விளைவை இன்று பார்க்கக்கூடியதாகவுள்ளது. அரபு நாடுகள் இஸ்ரேலுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளன. பாலஸ்தீன நிலத்தில் அமைக்கப்பட்ட இஸ்ரேல் படிப்படியாகத் தனது ஆக்கிரமிப்பினூடாகப் பாலஸ்தீனத்தைப் பெருமளவு பிடித்துவிட்டது. ஒருமித்த அரபு நாடுகளின் ஆதரவு அன்று பாலஸ்தீனத்துக்கு இருந்தது. இன்று அரபு நாடுகள், 'பாலஸ்தீனம் ஒரு தலையிடி' என்று கூறுமளவிற்குச் சென்றுவிட்டது.

நிக்சனின் ஆட்சியின் போது சோவியத் யூனியனிலிருந்து யூதர்கள் வெளியேறுவதற்கும் கிசின்ஞர் உதவிசெய்தார். சோவியத் யூனியனில் யூதர்கள் கொல்லப்படலாம் எனக் கிசின்ஞர் கருதினார்.

வியட்நாம் போரின் தோல்வியின் பின்னர் நிக்சன் சீனா, அமெரிக்காவிற்கு முக்கியமான நாடு எனக் கருதினார். 1972-இல் நிக்சன் சீனாவிற்கான விஜயத்தை மேற்கொண்டார். இதற்கு முன்பாக கிசின்ஞர் சீனாவிற்குச் சென்று அப்போதையப் பிரதமர் சூ என் லாய்-ஐ சந்தித்தார். சீனாவில் நிக்சனுக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. சோவியத் யூனியன், சீன எல்லையில் இராணுவத்தைக் குவித்திருந்தது. மாவோ சற்றுக் கலக்கமடைந்திருந்தார். கிசின்ஞர் சரியான நேரத்தில் சீனாவுடன் உறவை ஏற்படுத்தினார். அமெரிக்காவுடனான உறவு அப்போது சீனாவிற்குத் தேவைப்பட்டது.

ON China என்ற தனது நூலில் கிசின்ஞர் சீனாவின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதியுள்ளார். கிசின்ஞர் சீனாவின் சந்தையை எவ்வாறு கைப்பற்றுவது என்பதனைப் பற்றி அறிந்திருந்தார். அதன் முதல் படியே அன்று கிசின்ஞராலும், நிக்சனாலும் எடுத்துவைக்கப்பட்டது. சீனாவுடன் எவ்வாறு அமெரிக்கா செயல்படவேண்டும் எனத் தனது நூலிலும் பின்னர் தனது உரையாடல்களிலும் கிசின்ஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

கிசின்ஞர் ஊடகங்களைக் குறிப்பாகத் தொலைக்காட்சியை எவ்வாறு அமெரிக்க அரசுக்குச் சாதகமாகப் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிந்துவைத்திருந்தார். அரசின் நடவடிக்கைகள், அராஜகங்கள் அனைத்தையும் அறத்தின் பெயரில் நிரூபிக்கக்கூடியவர். அதாவது பொய்யையும் மெய்யாக்கும் வல்லமை கொண்டவர். தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக் கேட்கும் திட்டத்தை ஆரம்பித்துவைத்தவர். நிக்சனின் வோட்டர்கேட் பிரச்சினை காங்கிரசில் வெடித்தபோது, ஒட்டுக் கேட்பதனைப் பெரிய பிரச்சினையாக்கத் தேவையில்லை என்று கூறினார்.

இன்றைய அமெரிக்காவின் பல நடவடிக்கைகளுக்கு அன்றே அடித்தளமிட்டவர். அமெரிக்க அரசின் அமைச்சராகப் பதவி வகித்த போது அமெரிக்கப் பொருளாதார வளர்ச்சிக்கும் பல திட்டங்களை முன்மொழிந்தார். சர்வதேச ஒழுங்கை அமெரிக்காவே தீர்மானிக்க வேண்டும் என்பது கிசின்ஞரின் கருத்தாகவும் செயலாகவுமிருந்தது. அமெரிக்கச் சார்பற்ற அரசுகளை மாற்றவேண்டும் இல்லையேல் அது அமெரிக்காவிற்குப் பாதகமாக முடியும் என்ற கருத்தில் தெளிவாகவிருந்தார்.

கிசின்ஞரின் நூற்றாண்டு வாழ்வில் இவர் பதவி வகித்த காலங்களிலும், ஆலோசகராகவிருந்த போதும் இவரது நடவடிக்கைகளால் கொல்லப்பட்டவர்கள், இறந்தவர்கள் எண்ணிக்கை பல இலட்சங்கள். மேற்கின் நான்கு போர்க் குற்றவாளிகளுள் கிசின்ஞரும் ஒருவர். ஏனையவர்கள் றொபட் மக்நமரா, புஸ், பிளேயர்.

வழமைபோல் அராஜகவாதியான கிசின்ஞருக்கு 1973-ல் நோபல் பரிசு வழங்கப்பட்டது. பொதுவாகவே விருதுகள் பொய்யானவர்களுக்கும், அராஜகவாதிகளுக்குமே வழங்கப்படுகின்றது. இதற்கு நோபலும் விதிவிலக்கல்ல.

சிலியின் Augusto Pinochet மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் - விசாரிக்க வேண்டும் என ஐரோப்பிய நாடுகள் கோரிக்கை விட்டபோதும், அமெரிக்கா மௌனம் சாதித்தது. கிசின்ஞரின் சர்வதேச நண்பர்கள் போர்க்குற்றவாளிகளாகத் தண்டனை பெற்றபோதும், விசாரிக்கப்பட்ட போதும், பெரும் குற்றவாளி கிசின்ஞர் அமெரிக்காவில் சுகமாக வாழ்ந்தார். நூற்றாண்டுகள் கடந்தும் அவர் தொடர்கின்றார். அமெரிக்காவும் வல்லரசாக நகர்ந்து கொண்டிருக்கின்றது.



rathan@thaiveedu.com



# ஐரோப்பிய வல்லரசுகளின் காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த ஆபிரிக்கா – ஓர் அரசியல் வரலாற்றுப் பார்வை

– ரூபன் சிவராஜா

மனிதர்களும், உழைப்புச்சக்தியும், இயற்கை வளங்களும் ஆபிரிக்காவைப் போல் உலகின் வேறெந்தப் பகுதிகளிலும் மிக மோசமாக வேட்டையாடப்படவில்லை. மனித அடிமைகள், இயற்கை வளங்கள், மூலப்பொருட்கள் மோசமாகச் சுரண்டப்பட்டன. இவற்றின் விளைவு சமகாலம் வரையான அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் உட்பட்ட பல தளங்களிற் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகள் பல




வற்றின் பொருளாதாரம் ஐரோப்பிய வல்லரசுகளின் (காலனித்துவ சக்திகளின்) செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன.

## கடற்பாதைகளைக் கட்டுப்படுத்தல், அடிமைவணிகம்:

வல்லரசுகள் தமது தேச எல்லைகளுக்கு வெளியிற் செல்வாக்கு, அதிகாரம், கட்டுப்பாட்டினை நிலைநிறுத்துவதற்கான பிரயத்தனங்களை மேற்கொண்டமை சர்வதேச அரசியல் வரலாற்றிற் பரவலாக அறியப்பட்ட நிகழ்வுகளே. ஆபிரிக்க நாடுகளின் வரலாறு, வளர்ச்சிப் பாதையில் காலனித்துவம் பெரும் செல்வாக்கினைப் பதியவைத்துள்ளது. 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான அதிகாரப் போட்டிகளையும் முரண்பாடுகளையும் கூர்மைப்படுத்திய காரணிகளில் ஒன்றாகக் காலனித்துவ முனைப்பு இருந்திருக்கின்றது.

ஐரோப்பியர்களின் காலனியாதிக்கம் மற்றும் கடல்வணிகத்திற்கு ஆபிரிக்கா புதியதல்ல. கிரேக்கர்களும் ரோமர்களும் பண்டைக்காலத்தில் ஆபிரிக்க நாடுகளுடன் உறவுகளைக் கொண்டிருந்ததாக வரலாறு கூறுகின்றது. 1400-ம் ஆண்டுகளில் ஆபிரிக்காவின் கரையோரப் பிராந்தியங்களிற் பல்வேறு வணிக மையங்களை ஐரோப்பாவின் சக்திமிக்க நாடுகள் நிறுவின. தொடர்ந்துவந்த நூற்றாண்டுகளில் ஆபிரிக்கக் கண்டம் ஒரு முக்கோண வணிகத்திற்குள் இழுக்கப்பட்டது. அதாவது ஐரோப்பாவின் ஆயுதம், இரும்பு, துணி ஆகிய பொருட்கள் அடிமைகளாக ஆபிரிக்க மக்களைக் கொண்டு வருவதற்கான பண்டமாற்று வணிகமாக முன்னெடுக்கப்பட்டது. இது பெரிதும் ஆபிரிக்காவின் மேற்குக்கரையோரப் பிராந்தியத்தின் சந்தைகளை மையப்படுத்தியிருந்ததாகவும் வரலாற்றுத் தகவல்கள் கூறுகின்றன. 1800-களின் இறுதியில் ஐரோப்பிய வல்லரசுகள் ஆபிரிக்க நாடுகளின் வளங்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதற்கான ஓட்டப்பந்தயத்தில் முழுமூச்சாக இறங்கின.

கால அடிப்படையில் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் மற்றும் காலனியாதிக்கத்தின் தொடக்கம் 15-ம் நூற்றாண்டாகும். ஸ்பெயின் மற்றும் போர்த்துக்கல் அதன் மையசக்திகளாக இருந்தன. ஆபிரிக்கா மீதான ஐரோப்பியர்களின் ஈடுபாடு 14-ஆம் நூற்றாண்டிலிருந்தே இருந்துவந்துள்ளது. கடற்பாதைகளைக் கட்டுப்படுத்தல், அடிமைவணிகம் என்பனவே அந்த ஈடுபாடுகளின் தொடக்கம். அதிலும் 1870 - 1914 காலப்பகுதி ஐரோப்பியக் காலனித்துவத்தின் உச்சமாகும். இதில் விதிவிலக்காகப் பிரித்தானியா 1914-களின் பின்னரே பாரிய சக்தியாக விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது. உலகின் ஏனைய கண்டங்களுடன் ஒப்பிடுகையில் ஆபிரிக்க நாடுகள், கால அடிப்படையிற் பிந்தியே காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்டன.

மனிதர்களை அடிமைத் தொழிலாளர்களாகக் கொண்டுவருதலும் முக்கிய காலனியாதிக்க உந்துதலாகும். அடிமை வணிகம் தடைசெய்யப்பட்ட பின்னர், அதற்கு மாற்றாக உற்பத்தி



மூலப்பொருட்கள் ஐரோப்பியத் தொழிற்சாலைகளுக்குக் கொண்டுவரப்பட்டன. அடிமைகள் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் (West Indies) அமெரிக்க நிலப்பரப்பிற்கும் கப்பல்கள் மூலம் கொண்டுசெல்லப்பட்டு பெருந்தோட்டத் தொழிற்சாலைகளில் வேலைக்கமர்த்தப்பட்டனர். 1800-களில் அமெரிக்காவிலும் ஐரோப்பாவின் பல நாடுகளிலும் அடிமைவணிகம் தடைசெய்யப்பட்டதை அடுத்து ஆபிரிக்க மூலப்பொருட்களுக்கான தேவை அதிகரித்தது. 1833-ல் பிரித்தானியக் காலனித்துவ நாடுகளிலும், 1848-ல் பிரான்ஸ், மற்றும் 1888-ல் அமெரிக்கக் காலனித்துவ நாடுகளிலும் அடிமைவணிகம் தடைசெய்யப்பட்டது.

## மூலப்பொருட்கள், இயற்கை வளங்களைக் கையகப்படுத்தல்:

சவர்க்கார உற்பத்தி, விளக்கெண்ணை, Margarine உட்பட்ட உணவுத் தயாரிப்பு, எண்ணெய்ப் பதார்த்தங்களுக்கான உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட செம்பனை எண்ணெய்க்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. தொடர்ந்து யானைத்தந்தம் இரப்பர் ஆகியன பெரும் நுகர்வுத் தேவையை ஏற்படுத்திய பொருட்களாக இருந்துள்ளன. துரித வளர்ச்சி கண்டுவந்த ஐரோப்பியத் தொழிற்சாலை உற்பத்தித் துறைகளுக்குரிய மூல வளங்களுக்கான தேவை 1800-களின் பிற்பகுதியில் அதிகரித்துவந்தன. ஆபிரிக்கக் கண்டத்தில் இரப்பர், பஞ்சு, யானைத்தந்தம், தங்கம், வைரம் உட்பட்ட வளங்கள் நிறைந்திருந்தன.

1800-களின் நடுப்பகுதிவரை ஆபிரிக்கக் கண்டத்தின் கரையோரங்களை அண்டிய சிறிய பகுதிகளையே ஐரோப்பிய வல்லரசுகள் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தன. பிரான்ஸ் அரசு மேற்கு ஆபிரிக்காவின் இன்றைய செனிகல் குடியரசிலும் (Republic of Senegal), கம்பியா, கானா, நைஜீரியா ஆகிய நாடுகளிற் பிரித்தானியாவும் மொசாம்பிக், அங்கோலா ஆகிய நாடுகளில் போர்த்துக்கல்லும் தமது வணிகமை யங்களைக் கொண்டிருந்தன.

## 1884 - பர்லின் மாநாடும் தன்னிச்சையான எல்லைபிரிப்புகளும்:

1884 - 1885-ல் இடம்பெற்ற பர்லின் மாநாட்டில் ஐரோப்பியக் காலனித்துவச் சக்திகள் ஆபிரிக்க நாடுகளைத் தமக்குள் பங்குபிரித்துக் கொண்டன. ஜேர்மன் கூட்டமைப்புத் தலைவர் Otto Von Bismarch பர்லின் மாநாட்டுக்குரிய முன்னெடுப்பினைச் செய்தவராவார். ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும் அழைப்பு விடப்பட்டிருந்தது. எந்தவொரு ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படவில்லை. மாநாடு நடைபெற்ற ஒன்றரைத் தசாப்தங்களுக்குள் ஆபிரிக்க நாடுகள் அனைத்தும் (லிபெரியா, எதியோப்பியா நீங்கலாக) ஐரோப்பிய வல்லரசுகளின் காலனிகளாக்கப்பட்டன. பர்லின் மாநாட்டில் ஜேர்மன், ஒஸ்ரியா-ஹங்கேரி, பெல்ஜியம், டென்மார்க், பிரான்ஸ், பிரித்தானியா, இத்தாலி, கொலண்ட், போர்த்துக்கல், ரஷ்யா, ஸ்பெயின், ஸ்வீடன்-நோர்வே, ஒட்டோமான் பேரரசு, அமெரிக்கா ஆகியன பங்கேற்றன. வல்லரசுகளின் நலன்களை மையப்படுத்தி பர்லின் மாநாட்டில் தன்னிச்சையாக எல்லைகள் வகுக்கப்பட்டன. அந்தந்த நாட்டு மக்களின் நலன்கள் சார்ந்த அம்சங்கள் கரிசனையில்

எடுக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டன.

மனிதர்களும், உழைப்புச் சக்தியும், இயற்கை வளங்களும் ஆபிரிக்காவைப் போல் உலகின் வேறெந்தப் பகுதிகளிலும் மிக மோசமாக வேட்டையாடப்படவில்லை. மனித அடிமைகள், இயற்கை வளங்கள், மூலப்பொருட்கள் மோசமாகச் சுரண்டப்பட்டன. இவற்றின் விளைவு சமகாலம் வரையான அரசியல், பொருளாதாரம், கல்வி, கலாசாரம் உட்பட்ட பல தளங்களிற் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகள் பலவற்றின் பொருளாதாரம் ஐரோப்பிய வல்லரசுகளின் (காலனித்துவ சக்திகளின்) செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தன. உதாரணமாக பெல்யியத்தின் ஆட்சிக்குட்பட்டிருந்த கொங்கோவில் 1 வீதத்தினர் மட்டுமே ஐரோப்பியக் குடியேறிகளாக இருந்தபோதும், 95 வீதமான முதலீடுகளும் 80 வீதமான தொழிற்சாலைகளும் அவர்களுக்குச் சொந்தமாக இருந்துள்ளன. இதனையொத்த நிலமைகள் ஆபிரிக்க நாடுகள் பலவற்றில் அவற்றின் பின் - சுதந்திரக் காலத்திலும் நீடித்துவருகின்றன.

## தேசியப் பெருமைகள், மொழி, கலாசாரங்களைப் பரப்புதல்:

ஆரம்பக் காலகட்டங்களில் ஐரோப்பிய ஏகாதிபத்திய சகாப்தம் என்பது புதிய பிராந்தியங்களைக் கண்டடையும் முனைப்புகளே (கண்டுபிடிப்பு) காலனித்துவ உந்துதல்களாக இருந்துள்ளன. போர்த்துக்கேயர் ஆசியாவிற்கும் இந்தியாவிற்குமான கடற்பாதையைக் கண்டடையும் முனைப்பில், ஆபிரிக்கக் கரையோரங்களிற் பல வணிக மையங்களை நிறுவின. இந்தக் கண்டுபிடிப்பு உந்துதலுக்குப் பின்னால் ஆர்வம் என்பதைத் தாண்டிய வளக் கையகப்படுத்தல், அதிகாரத்தை நிலைநிறுத்தல், தமது தேசியப் பெருமைகளை, மொழி, கலாசாரங்களைப் பரப்புதல் போன்ற கூறுகளும் இருந்துள்ளன. காலனியாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகள் பல 1960-களுக்குப் பின்னரே சுதந்திரமடைந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பியத் தொழிற்சாலைமயப்படுத்தலும் காலனியாதிக்கத்தின் மற்றுமோர் உந்துதல். புதிய பேரரசுகள், புதிய இராணுவப், போக்குவரத்து, கடற்போக்குவரத்து உட்பட்ட துறைசார் தொழில்நுட்பத்துறைகளோடு மருத்துவ மற்றும் தொடர்பாடற் துறைகளிலும் பாரிய வளர்ச்சி கண்டுவந்தன. இப்புறநிலை தமது அதிகாரத்தின் கீழ் தொலைவிலுள்ள நாடுகளை வைத்திருக்கும் வாய்ப்பை அளித்தன.

பொருளாதார நலன்களைவிட வேறு பல காரணங்களும் இருந்துள்ளன. பூகோள ரீதியான மூலோபாய நலன்கள், வல்லரசு எனும் அதிகாரத்துவ நிலையை விரிவுபடுத்தல், சர்வதேச அரசியல்-பொருளாதார அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்துதல், தமது நாடுகளின் கலாசாரம், நாகரிகங்களைப் பரப்புதல் எனவாக அக்காரணங்களைப் பட்டியலிடலாம்.

## காலனித்துவத்தின் விளைவுகள்:

காலனித்துவத்தின் விளைவுகளாகக் கண்டங்களுக்கிடையிலான தொடர்பு அதிகரித்ததோடு, வணிகமும் அதிகரித்தது, தொழில்நுட்பம் மற்றும் அறிவியல் பரம்பல் இடம்பெற்றது என்பதை மறுப்பதற்கில்லை. அப்படிப் பார்க்கையிற் காலனித்துவம் வளர்ச்சிக்கும், மேம்பாட்டுக்கும் வழிகோலின என்பதான தோற்றப்பாடு தென்படலாம். ஆனால் அது மேம்போக்கான பார்வை. அதன் அசலான அல்லது மேலாண்மை செலுத்திய விளைவு என்பது காலனியாதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகளின் இயற்கை வளங்கள், மூலப்பொருட்கள் மீது தொழில்மயமாக்கப்பட்ட வல்லரசு நாடுகள் செலுத்திய செல்வாக்கு அவற்றின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிகோலின. இது அடிப்படையில் அந்நாடுகளை மோசமான வள மற்றும் பொருளாதாரச் சுரண்டலுக்கு உட்படுத்தியதோடு, அவற்றின் தேச நிர்மாண, ஜனநாயக, உட்கட்டுமான அபிவிருத்தி, கல்வி போன்றவற்றில் பின்நோக்கித் தள்ளியது.

காலனித்துவச் சக்திகள் தொடருந்துப் பாதைகளை நிர்மாணித்தனர். ஆனால் அவற்றைத் தமது சொந்த நலன்களுக்காகவே அமைத்தனர். காலனியாதிக்க நாடுகளின் இயற்கை வளங்கள் மற்றும் மூலப்பொருட்களைத் துறைமுகங்களுக்கு ஏற்றிச்சென்று கப்பல்களிற் தத்தமது நாடுகளுக்குக் கொண்டு செல்லும் நோக்கிலேயே அவை அமைக்கப்பட்டன. ஆபிரிக்க மக்கள் சமூகங்களின் போக்குவரத்து, அவர்களின் வணிக மையங்களுக்கிடையிலான தொடர்புகளை வலுப்படுத்திப் பொதுவான சந்தை உருவாக்கத்தைக் கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்படவில்லை.

## ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாடுகள்:

காலனித்துவப் பந்தயம் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடையிலான முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தின. கூட்டுச்செயற்பாடு, தொடர்பாடல்கள் கடினமடைந்தன. இராணுவமயப்படுத்தல், பரஸ்பரச் சந்தேகம், புதிய கூட்டணிகளைக் கட்டியெழுப்புவது தொடர்பான முனைப்புகள் தீவிரமடைந்தன. ஐரோப்பாவில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் காலனியாதிக்கத் தேவையை அதிகரித்த காரணியாகும். பிரான்ஸ்-பிரித்தானியா இடையிலான வல்லரசுப் போட்டி அதிகரித்து வந்த காலமும் அதுவாகும். போர்த்துக்கல், பெல்ஜியம், ஜேர்மன் ஆகியன தமது ஏகாதிபத்திய இலக்குகளை விரிவுபடுத்தும் அபிலாசைகளையும் கொண்டிருந்தன. 1870 - 1914 காலப்பகுதியில் ஐரோப்பாக் கண்டம் வெகுசில வல்லரசுகளின் மேலாதிக்கத்தைக் கொண்டிருந்தது. அவை ஒருவகைப் படைவலுச் சமநிலையைப் பேணும் நோக்கில் இரண்டு அணிகளாகப் பிளவுண்டிருந்தன. அதுவே முதலாம் உலகப் போருக்கான பின்னுறைந்து கிடந்த காரணிகளில் முதன்மையானதாகும்.

1913-ற்கு முன்னர் லிபேரியா, எதியோப்பியா தவிர்ந்த ஏனைய அனைத்து ஆபிரிக்க நாடுகளும் ஐரோப்பிய வல்லரசுகளின் காலனிகளாக ஆக்கப்பட்டுவிட்டன. வல்லரசுகள் தமக்குட் பிராந்தியங்களைப் பங்குபோட்டுப் பிரித்துக் கொண்டன. பழங்குடிகள் பிளவுபடுத்தப்பட்டனர். பாரம்பரிய சமூகங்கள் சிதைவுக்குள்ளாக்கப்பட்டன. கலாசார, இனத்துவ மற்றும் புவியியற் பின்னணிகள் குறித்த கரிசனைகள் காலனித்துவச் சக்திகளாற் கருத்திலெடுக்கப்படவில்லை. இந்த அணுகுமுறைகள் இன்றுவரை ஆபிரிக்க நாடுகள் பலவற்

றின் உள்நாட்டுப் போர்கள் மற்றும் நாடுகளுக்கிடையிலான போர்களுக்கு வழிகோலிய காரணிகளில் ஒன்றாக உள்ளன.

## மனிதாபிமானமற்ற கொடுமைகள்:

பொதுமக்கள் மீது மோசமான உடல்ரீதியான கொடுமைக ளும் மனிதாபிமானமற்ற அணுகுமுறைகளும் கைக்கொள்ளப் பட்டன. மத்திய ஆபிரிக்க நாடான கொங்கோ 1908-1960



காலப்பகுதியில் பெல்ஜியக் காலனியாக இருந்தது. பெல்ஜி யத்தின் மன்னர் 2-ம் லெயோபொல்ட் (King Leopold 2.) கொங்கோவைத் தனது தனிச் சொத்துடமையாகக் கருதிய தோடு, மிருகத்தனமான ஆட்சியை முன்னெடுத்தமைக்கான சான்றுகள் உள்ளன. குறிப்பாக இரப்பர்த் தோட்டங்களில் கட்டாயப்படுத்தலின் கீழ் வேலைக்கமர்த்தப்பட்டிருந்த தொழி லாளர்கள் மீது மனிதாபிமானமற்ற கொடூரங்கள் நடத்தப்பட் டன. சாட்டையடி மற்றும் கைகளைத் துண்டித்தல் போன்றன சாதாரண தண்டனை முறைமைகளாக இருந்துள்ளன. நாட் டின் அரைவாசிக்கு மேற்பட்ட மக்கள் கடுமையான தண்ட னைமுறைகளாலும் பட்டினியாலும் கொல்லப்பட்டனர்.

## காலனித்துவம்: ஆபிரிக்கா - ஆசியா ஒப்பீடு:

ஆபிரிக்காவில் மேற்கு ஐரோப்பிய நாடுகளே காலனித்துவச் சக்திகளாக இருந்துள்ளன. ஆசியாவில் அப்படி அல்ல. பிரித்தானியா முதன்மையாகவும் ரஷ்யா, அமெரிக்கா, ஜப் பான் போன்றவற்றின் தலையீடுகளும் இருந்துள்ளன. ஐரோப் பிய வல்லரசுகள் பல ஆசியாவில் செல்வாக்குச் செலுத்தும் முனைப்பினைக் கொண்டிருந்தன. ஆயினும் ஆசியாவின் பல பிராந்தியங்கள் நேரடியான காலனித்துவ ஆட்சிக்கு உட்பட்டிருக்கவில்லை. சில நாடுகள் மேற்கின் ஏகாதிபத்தி யத்திற்குக் கடுமையான எதிர்ப்பை முன்னெடுத்தன. ஜப் பான் ஆசியாவின் காலனித்துவச் சக்தியாக இருந்தபோதும், தனது சுதந்திரத்தினை இன்னொரு வல்லரசிடம் இழக்காமல் இருந்தது. சீனா நேரடியான காலனித்துவ ஆட்சிக்கு உட்பட வில்லை. ஆனால் 1800-களிற் கணிசமான சுதந்திரத்தினை அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளிடம் இழந் தது. காலனியாதிக்கச் சக்திகள், இராணுவப் பலத்தினைக் கையாண்டு சீனாவின் வணிகத்தைத் தமது கட்டுப்பாட்டுக் குள் வைத்திருந்தனர். ஆனால் நாட்டின் நிலப்பரப்பினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவில்லை. இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் முற்றிலும் பிரித்தானியாவின் நேரடியான ஆட்சிக்கு உட்பட்டிருந்தன.

## ‘வெள்ளை’ இனத்துவேசம்:

காலனித்துவக்காலம் ஏகாதிபத்திய அரசியலால் நியாயப்ப டுத்தப்பட்டது. அதாவது ஐரோப்பிய அரசுகள் தமது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட ஆபிரிக்க மக்களை ‘நாகரிகப்ப டுத்துவது’ என்பதாகும். இந்தச் சித்தாந்தத்திற்குள் அடிப்ப டையில் ஒரு ‘இனத்துவேச’ எண்ணமே உள்ளுறைந்திருந்தது. நாகரிக வளர்ச்சி குறைந்த இனங்கள் மீது ஆட்சி செலுத்து கின்ற பொறுப்பு ‘வெள்ளையர்களிடம்’ என்ற மனநிலையின் வெளிப்பாடு இது. ஆனால் உற்பத்தி மூலப்பொருட்கள் மற் றும் தொழிற்சாலை உற்பத்திப்பொருட்களுக்கான சந்தை களை விரிவுபடுத்தல் என்பவையே காலனித்துவத்தின் முழு முதல் நோக்கம் என்பதிற் சந்தேகம் இல்லை. தமது கட்டுப் பாட்டுக்குட்பட்ட நாடுகளின் மக்களைத் தமது தொழிற்சக்தி யாக்கி, அவர்களின் பிரதேசங்களைத் தமது வளங்களைப் பெருக்குவதற்காகச் சூறையாடின என்பதுவும் மறைக்க முடி யாத வரலாற்றுண்மை.

## காலனித்துவ நீக்கமும் அதற்கான காரணிகளும்:

தென்-ஆபிரிக்காவே முதலில் சுதந்திரமடைந்த காலனியா திக்க நாடு. அது 1910-ல் நிகழ்ந்தது. ஏனைய பெரும் பான்மை ஆபிரிக்க நாடுகளின் சுதந்திரம் இரண்டாம் உல கப் போருக்குப் பின்னரே சாத்தியமானது. காலனித்துவ நீக் கத்திற்குப் பின்னால் பல்வேறு காரணிகள் உள்ளன. இரண் டாம் உலகப்போருக்குப் பின்னர் ஆபிரிக்க நாடுகள் பலவற் றின் கல்வி அமைப்பு கணிசமான வளர்ச்சியைக் கண்டிருந் தமை அவற்றின் மையக்காரணியாகச் சொல்லப்படுகிறது. கல்வியுடன் கூடிய அரசியல் விழிப்புணர்வும் சுயநிர்ணய உரிமை பற்றிய புரிதலும் தேசிய மற்றும் பல்தேசிய இயக் கங்கள் உருவாக்கப்பட்டு, காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுதலை அடைவதற்கான உந்துதல் அதிகரிக்கப்பட்டது.

ஐ.நா அவையின் உருவாக்கமும் காலனியாதிக்க நீக்கத்தை உந்தித்தள்ளிய மற்றொரு முக்கிய காரணி. அனைத்து மக்களும் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் என்ற ஐ.நா உடன்படிக்கையின் வலியுறுத்தலும் அனைத்துவகைக் காலனித்துவங்களும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று 1960-இல் பொதுச்சபையிற் எடுக்கப்பட்ட தீர்மானமும் முக்கியமானவை. அத்தோடு 1963-ல் உருவாக்கப்பட்ட ஆபிரிக்க ஒருமைப்பாட்டிற்கான நிறுவனம் (பின்னர் ஆபிரிக்க ஒன்றியம் எனப் பெயர் மாற்றமடைந்தது.) அனைத்து ஆபிரிக்க நாடுகளுக்குமான சுதந்திரம் என்பதை முதன்மை இலக்காகக் கொண்டிருந்தது.

ஆபிரிக்க நாடுகள் பலவும் வன்முறை நிகழாமல் சுதந்திரமடைந்தன. 1957-ல் கானாவின் சுதந்திரக்கோரிக்கைக்கு வழிவிட்டுப் பிரித்தானிய ஆட்சியாளர்கள் வெளியேறினர். தென்-ஆபிரிக்காவிற்கு அடுத்து காலனித்துவத்திலிருந்து விடுதலையடைந்த இரண்டாவது நாடு கானா. நமீபியா, அல்ஜீரியா மற்றும் அங்கோலா போன்ற நாடுகளில் எதிர்ப்புப்போர்கள் இடம்பெற்றே சுதந்திரம் சாத்தியமாகிற்று. 1960-ல் பிரித்தானியக் காலனியாதிக்க நாடுகளான சோமாலியா, நைஜீரியா, பெல்ஜிய ஆதிக்க நாடாகவிருந்த கொங்கோ உட்பட்ட 13 நாடுகள் சுதந்திரமடைந்தன. இதில் கவனிக்கவேண்டிய மற்றுமொரு விடயம் காலனியாதிக்கத்திற்கு உட்பட்டிருந்த ஆபிரிக்க நாடுகளிற் பெருவாரியாகக் குடியேற்றப்பட்ட ஐரோப்பியர்கள் சார்ந்த விடயம். அந்நாடுகள் காலனியாதிக்கத்திலிருந்து விடுதலைபெற்றாலும் பல தசாப்தங்கள் கழிந்தபின்னரே அசலான அர்த்தத்தில் சுதந்திரமடைந்தன. தென்-ஆபிரிக்கா மற்றும் சிம்பாவே ஆகியன முறையே 1910 மற்றும் 1965-ல் சுதந்திரமடைந்தன. ஆனால் அந்நாடுகளின் கறுப்பின பெரும்பான்மை மக்கள் அங்கு காலனியாதிக்கக் காலங்களிற் குடியேற்றப்பட்ட சிறுபான்மை வெள்ளையின ஆட்சியாளர்களால் பல தசாப்தங்கள் ஒடுக்கப்பட்டனர். சிம்பாவேயில் 1980-லும் தென்-ஆபிரிக்காவில் 1994-லும் கறுப்பினப் பெரும்பான்மை மக்களின் ஆட்சி அமைந்தது.

## காலனித்துவம் ஆபிரிக்காவில் ஏற்படுத்திய நிரந்தரச் சீரழிவுகள்:

ஐரோப்பிய ஜனநாயகச் செயல்முறையின் வளர்ச்சியில் சிறியளவுகூட ஆபிரிக்காவில் நிகழவில்லை. ஒரு நிலைகொள் அரசியல் அமைப்பு முறைகளுடனான துறைசார் தேசிய நிர்வாக அலகுகள் அமைக்கப்படவில்லை. ஐரோப்பாவின் அரசியல் அமைப்புப் பொறிமுறைகளும் அரச நிர்மாணங்களும் ஒரு நீண்ட வரலாற்றுப் படிநிலைகளினூடாக வளர்ச்சிபெற்றவை. ஆபிரிக்காவின் தேசிய அரச உருவாக்கங்களின் போது அவற்றின் எல்லைகள் குறித்த கவனம் காலனியாதிக்க சக்திகளினால் எடுக்கப்படவில்லை. காலனியாதிக்கக் காலத்தில் அதிகாரத்துவ நிறுவனங்கள் காலனித்துவச் சக்திகளின் முன்மாதிரிகளைக் கொண்டு உருவாக்கப்பட்டன. அவை புதிய மேலதிக நவீனத்துவ நிர்வாக மற்றும் சட்ட ரீதியான அமைப்பியல் முறைமைகளை ஆபிரிக்காவிற்கு அறிமுகப்படுத்தின. அத்தோடு அவை உள்ளூர்த் தலைவர்கள், நிலப்பிரபுக்கள், பண்ணை முதலாளிகள் மூலம் முன்னெடுக்கப்பட்டன. அவர்கள் மக்களின் ஆதரவிற் தங்கியிருக்கவில்லை. அவர்களின் அதிகார மீறல்கள் காலனியதிகாரத்தினாற் பொறுப்புக்கூறல்களுக்கு உட்படுத்தப்படவுமில்லை. இந்த அமைப்பியல் நடைமுறை ஊழல், அதிகார மீறல்கள் வலுவடையத் துணைநின்றுள்ளன என்பதான கணிப்பும் நிலவுகின்றது.

## பலமுனைத் தாக்கங்கள்:

காலனியாதிக்கக் காலம் மொழி, சமயம் மற்றும் பொதுவான வாழ்க்கைமுறை மீதும் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. எத்தனைதூரம் இன்றைய ஆபிரிக்காவில் கலாசார விளைவுகளை ஏற்படுத்தியது என்பதை மதிப்பீடு செய்வது கடினம். கலாசார விளைவுகள் நாடுகள், பிராந்தியங்கள், மக்களினத்திற்கு ஏற்ப மாறுபடக்கூடியவை. நகரங்கள் மற்றும் மேற்தட்டு மக்களின் கலாசாரம் மீது காலனியாதிக்கம் செலுத்திய செல்வாக்கு அதிகம். அவர்களிற் பெரும்பான்மையானவர்கள் தமது கல்வியைக் காலனித்துவச் சக்திகளால் நடத்தப்பட்ட பாடசாலைகளிற் கற்றனர். அத்தோடு காலனியாதிக்கச் சக்திகளின் நிர்வாக அலகுகளோடு அதிகம் தொடர்பிலிருந்தவர்களுமாவர். காலனித்துவ நாடுகளிற் பல்வேறு தேசியப் பாரம்பரிய மொழிகள் புழக்கத்தில் இருந்த போதும் ஆதிக்க சக்திகள் தமது மொழிகளான ஆங்கிலம், பிரெஞ்ச் மற்றும் பல ஐரோப்பிய மொழிகளை ஆதிக்கத்திற்கு உட்படுத்தியிருந்த நாடுகளின் முதன்மை மொழியாக ஆக்கியிருக்கின்றன. ஐரோப்பிய, குறிப்பாக பிரித்தானியக் கிறிஸ்தவ மிசனரிகள் கல்வி மற்றும் மொழிசார்ந்து உலகளவிற் தீவிரமான வகிபாகத்தினைக் கொண்டிருந்தனர் என்பது பரவலாக அறியப்பட்டதே.

பர்லின் மாநாட்டிற் பங்குபிரிக்கப்பட்டு வரையறை செய்யப்பட்ட நாடுகளின் எல்லைகள் இன்றும் அப்படியே பேணப்படுகின்றன. நைஜீரியா, மாலி, கொங்கோ போன்ற நாடுகளில் காலனித்துவத்திலிருந்து சுதந்திரமடைந்த காலத்திலிருந்து கிளர்ச்சிகளும் அமைதியின்மையும் தொடர்ந்து வருகின்றது. சூடான் பல தசாப்தங்களாக உள்நாட்டுப் போருக்குள் சிக்கியுள்ளது. அரசியற் பிளவுபடுத்தல், ஒடுக்குமுறை, பிரித்தாளும் தந்திரம், குறிப்பிட்ட இனங்களுக்கான சலுகைகள் என்பன காலனித்துவக் காலத்து அணுகுமுறைகள். இந்த அணுகுமுறைகள் முரண்பாடுகளாற் சூழப்பட்ட சமூக-அரசியற் சூழலுக்குரிய அடித்தளங்களை வலிமையாக விதைத்துவிட்டன. 1994-ல் ருவாண்டாவில் நிகழ்ந்தேறிய இனவழிப்பு இதற்கான எடுத்துக்காட்டு.

காலனியாதிக்கச் சக்திகள் ஆபிரிக்க நாடுகளின் தொழிற்சாலைமயப்படலைத் தடுத்தன. ஐரோப்பிய நாடுகளுக்குரிய இயற்கை வள ஏற்றுமதி நாடுகளாகவே அவற்றைப் பேணி வந்துள்ளன. இன்றுவரை ஆபிரிக்க நாடுகளின் பொருளாதாரம் என்பது மூலப்பொருள் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது. தொழிற்சாலை உற்பத்திப் பொருட்களை வெளியிலிருந்து இறக்குமதி செய்யவேண்டிய தங்குநிலையிலேயே அவை உள்ளன. இந்நிலை அந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் மந்தநிலையை ஏற்படுத்தியுள்ளதோடு சர்வதேச ரீதியில் அந்நாடுகளின் நிலையையும் பாதிப்படையச் செய்துள்ளது.



rooban.s@thaiveedu.com

# நவீன காட்டுமிராண்டிகளுக்கு வனத்தலைவரின் கடிதம்!

- சதீஸ் செல்வராஜ்

போகும் திசை தெரியாமல் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த கிறிஸ்டோபஸ் கொலம்பஸ் ஒரு வழியாக 1492 ஒக்ரோபர் 12-ல், அதுவரை தாம் கண்டிராத புது நிலப் பரப்பில் கரைசேர்ந்தான். இந்தியாவைத் தேடிப் புறப்பட்டி ருந்த கொலம்பஸ் அந்தப் புதுப் பூமியை இந்தியா என்று

கொலம்பஸ் அந்த நிலப்பரப்பை கண்டறிவதற்கு முன்பே அங்கு பல மக்கட்கூட்டம் வாழ்ந்துகொண்டுதான் இருந்தது. ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்கள் ஒன்றும் புதிதாக அந்த நிலப்பரப்பை கண்டுபிடித்துவிடவில்லை. தாமதமாக அறிந்துகொண்டார்கள் அவ்வளவுதான்.

நினைத்துக் கொண்டான். ஆனால், அவன் சென்றடைந்தது இந்தியாவையல்ல! இன்றைய மேற்கிந்தியத் தீவுகளின் பஹாமாத் தீவினை. கொலம்பஸ் அந்த நிலப்பரப்புக்குள் புகுந்தபோது முதலில் அவன் பூர்வவீக சுதேச மக்களைக் காண்கிறான். ஏற்கனவே, அங்கு அந்த நிலப்பரப்பு முழுவதி லும் இயற்கையோடு ஒன்றரக் கலந்த, அதுவரை உலகம் அறிந்திராத புதுக் கலாச்சாரங்கள் துளிர்விட்டு வளர்ந்து கொண்டிருந்தன. மொழி, எழுத்துகள், இலக்கியம், நடனக் கலை, கட்டடக்கலை என்று ஏகப்பட்ட வளர்ச்சி அந்த மக்க ளிடத்தே எழுச்சி பெற்றுக்கொண்டிருந்தன. பூர்வவீக மக்கள் மட்டுமல்ல, அமெரிக்கா முழுவதும் அங்கங்கு இன்கா, மாயா, அஸ்டெக்கியர், டேஸ்னோய், காரிப், டியோதிஹிவா-கன் என்று பல சுதேச இனக்குழுக்கள் வாழ்கின்றனர் என் பதை ஐரோப்பியர் அறிகின்றனர். ஆக, கொலம்பஸ் அந்த நிலப்பரப்பை கண்டறிவதற்கு முன்பே அங்கு பல மக்கட் கூட்டம் வாழ்ந்து கொண்டுதான் இருந்தது. ஐரோப்பிய ஆக் கிரமிப்பாளர்கள் ஒன்றும் புதிதாக அந்த நிலப்பரப்பை கண் டுபிடித்துவிடவில்லை. தாமதமாக அறிந்து கொண்டார்கள் அவ்வளவுதான். தவிர, கடும் மூட நம்பிக்கைகளில் இருந்து அவர்கள் சற்று விடுபட்டார்கள் என்றும் சொல்லவிருக்கிறது.

பூமி தட்டையானது என்றே ஆரம்பகால மனிதர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். பின்னர் கோள வடிவம் என்று ஊர்ஜிதப் படுத்தப்பட்டதையடுத்து அக்கருத்தை ஏற்றுக்கொண்டனர். இக்கண்டுப்பிடிப்பு நாடுகாண் பயணங்களில் புரட்சியை ஏற் படுத்தியது. அதுபோல, பூமியைச் சுற்றித்தான் சூரியனும், கோள்களும், நட்சத்திரங்களும் வலம் வருகின்றன என்ற அரிஸ்டாட்டலின் கருத்தும் 1500 ஆண்டுகளுக்குப் பின்பே நிராகரிக்கப்பட்டது. அரிஸ்டாட்டலின் காலத்தில் அவரது கருத்து புதிய சிந்தனை எழுச்சியாகவிருந்தாலும், பின் அக் கருத்தும் கத்தோலிக்கத் திருச்சபையின் போதனைக்குள் சிறைப்பட்டு அச்சிந்தனை அடுத்தகட்டத்திற்கு நகர தடை-யேற்பட்டது. வானவியலானது சோதிடத்துடன் கோர்க்கப்பட் டது. மாற்றுக் கருத்துக்களை முன் வைப்பவர்கள் தண்டிக் கப்பட்டார்கள். கொடூரமாக கொலை செய்யப்பட்டார்கள். விஞ்ஞானம் பல மாந்திரீக நம்பிக்கைகளில் பிணைக்கப்பட்டி ருந்தது. விஞ்ஞானம் தனித்து வளர்ச்சியடைவது தமக்கு அச் சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதை சொகுசு அனுபவிக்கும் கத்தோலிக்க திருச்சபையின் மதகுருமார்கள் அறிந்திருந்தார் கள். அதனால்த்தான், 'இந்தப் பிரபஞ்சம் எல்லையற்றது, பூமி போலவே பல கோள்கள் உண்டு' என்று கூறிய ஜியார்-டானோ புருனோ உயிருடன் எரிக்கப்பட்டார். அதனால் தான், 'பூமியைச் சுற்றி சூரியன் சுழலவில்லை. சூரியனைச் சுற்றித்தான் பூமி சுழல்கிறது.' என்று சொன்ன கலீலியோ கலிலி இறக்கும் வரையில் வீட்டுக் காவலில் வைக்கப்பட் டார். கடல் வழியே ஐரோப்பியர்கள் நாடுகாண் பயணங் களை மேற்கொண்ட பின்னரே நிலைமை இப்படி என்றால், அதற்கு முந்திய கால நிலைமைகளைப் பற்றி சொல்லவா வேண்டும்? கடும் பிற்போக்கானதாகவிருந்தது.

மத்திய காலம் முழுவதும் ஆளும் நில உடைமைப் பிரபுத் துவ உயர் குடியினரின் மூர்க்கத்தனமான போர்களால் நிரப் பப்பட்ட அதே காலத்தில், மேற்கு ஐரோப்பா முழுவதும்



ஒடுக்கப்பட்ட வர்க்கம் நில உடைமை பிரபுத்துவ அமைப்பை அமைதியாக வேரறுத்துக்கொண்டிருந்தில் நில உடைமை பிரபுத்துவம் இன்னமும் நீடிப்பதற்கான வாய்ப்பு மேலும் மேலும் அருகி வந்த சூழல் உருவாகியது. உண்மை யிலேயே நில உடைமைப் பிரபுக்கள் தவறான வழிகளி-லேயே சென்று கொண்டிருந்தனர். விவசாயத் தொழிலாளர் களை வன்கொடுமைகளுக்கு உட்படுத்துவது, அவர்களது வியர்வையில் உல்லாசமாக வாழ்வது, அவர்களது நிலங்க ளில் குதிரைகளை மேயவிட்டு விளைச்சலை நாசப்படுத்து வது, அவர்களின் மனைவி, மகள்களைப் பாலியல் வன்புணர் வுக்கு உட்படுத்துவது ஆகிய கொடுஞ் செயல்களைத் தொடர்ந்து கொண்டுதான் இருந்தனர். அதே சமயம் பல நக ரங்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது. தாக்குப் பிடித்து நிற்கமுடியாத பழைய அமைப்புகள் காலாவதியாக்கொண் டிருந்தன. மத்திய காலத்து பண்ணை அடிமைகளில் இருந்து தொடக்க கால நகரங்களில் நகர முதலாளிகள் உருவாகினர். இந்த நகர முதலாளிகளிடமிருந்து முதலா ளித்துவத்திற்கான முதல் மூலக்கூறுகள் உருவாகத் தொடங் கின. அதனால் தான் பழமையான நிலப் பிரபுத்துவ சமூக கட்டமைப்புக்கு எதிராக சீர்திருத்தங்களும் மறுமலர்ச்சியும் புரட்சியும் ஏற்பட்டது. நில உடைமைச் சமுதாயத்தின் இடி பாடுகளிலிருந்து உருவாகி வளர்ந்துள்ள தற்கால முதலா ளித்துவ சமுதாயம் வர்க்கப் பகைமைகளிலிருந்து விலகி இருக்கவில்லை. பழையவற்றின் இடத்தில் புதிய வர்க்கங்க ளையும் புதிய ஒடுக்குமுறைகளையும் புதிய போராட்ட வடி வங்களையும் நிலை நிறுத்தியிருக்கிறது.

ஆறு சிலுவைப் போர்களுக்குப் பின் ஒட்டாமான் முஸ்லிம் கள் 1270-ஆம் ஆண்டில் கொன்தாந்துநோபிளை நிரந்தரமாக கைப்பற்றினர். பின் அடுத்தடுத்த காலங்களில் கிழக்குத் திசையின் வர்த்தகமும், உலகச் சந்தையும் முழுமையாக அவர்களின் கைகளுக்குப் போனது. அதனால், ஐரோப்பிய பிரபுக்களும் கத்தோலிக்க திருச்சபைகளும் பெரிதும் பாதிப் புக்குள்ளாகின. தரை வழியே கிழக்குத் திசைக்குள் நுழைய முடியாத காரணத்தினால் அவர்கள் மேற்குப் பக்கமாக கடல் வழிப் பயணத்தை ஆரம்பித்தனர். அதுவரை குண்டுச் சட்டிக் குள் குதிரை ஓட்டிக்கொண்டிருந்த ஐரோப்பியர்கள் வெளியு லகை காண தளைப்பட்டதும் இதனால் தான். தவிர, பதி னைந்தாம் நூற்றாண்டில் நகர்ப்புற முதலாளிகள் நில-உடைமை பிரபுக்களை விடவும் சமூகத்தில் மிகவும் தேவை யான பிரிவாக உருவாகிவிட்டிருந்தனர். அதனால், ஐரோப் பிய நீர் நிலைகளுக்குள்ளேயே நிலவிய வர்த்தகம் மேற்கு கடலுக்கு விரிந்தது. அந்தக் காலப்பகுதியில் உலகம் கோள வடிவமானது என்ற கருத்து வலுப்பெற்றிருந்ததனால், மேற் குத் திசை வழியே சென்று இந்தியாவை அடைந்து விடலாம் என்று ஐரோப்பிய அறிஞர்கள் எண்ணினர். அத்துடன், பதி னைந்தாம் நூற்றாண்டின் இறுதியில், நிலப் பிரபுத்துவம் சிதைக்கப்பட்டு, படிப்படியாக அதன் உள் கூடுகள் பணத் தால் அரிக்கப்பட்டு வந்த சூழலில் மேற்கு ஐரோப்பா முழு வதும் தங்கத்துக்கான அடங்காத தாகம் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தது. அதன்படியே, ஸ்பெயின் நாட்டு இளவரசி ஸ்பெல்லாவின் ஆதரவுடன் கொலம்பஸ் மேற்கு நோக்கி கப் பலில் புறப்பட்டான்.

அவன் லத்தீன் அமெரிக்காவுக்கு அடியெடுத்து வைத்ததிலி ருந்து தங்கத்தைத் தேடி வெறிப் பிடித்து அலைந்தான். சுதே சிகளை சித்திரவதை செய்தான். பல உயிர்களை காவு கொண்டான். கொலம்பஸ் வந்தபோது ஹிஸ்பானியோலாவின் மக்கள் தொகை ஏறக்குறைய ஒரு மில்லியனாக இருந்தது. 20 வருடங்களுக்குப் பின்னர் அது 28,000 ஆனது. 1542-ல் 200 பேரே அங்கு எஞ்சியிருந்தனர். அத்தோடு அவன் நின்று விடவில்லை, வளங்களை சூறையாடினான். வனாந்தரங்களை யும் அழித்தான். அந்தப் பூமியில் அடிமை யுகத்தையும் தொடக்கி வைத்தான்.

அமெரிக்காவில் தங்கம், வெள்ளி கண்டுபிடிப்பு, அங்குள்ள பூர்வ குடிகளை அடிமைப்படுத்தி சுரங்கங்களில் சமாதி கட் டியது.

ஸ்பானியர்களைத் தொடர்ந்து வந்து சேர்ந்த பிரெஞ்சுக்காரர்

களும் போர்த்துக்கேயர்களும் அமெரிக்காவில் இவ்வாறான ஆட்டத்தையே ஆடினர். இந்தக் குடியேற்ற ஆதிக்கப் போட்டியின் இறுதியில்த்தான் பிரித்தானியா கலந்து கொண்டது. ஆனால், முடிவில் வட அமெரிக்கா முழுவதையும் வளைத்துப் போட்டது. 1600-ல் இருந்து 1733-ற்குள் பிரித்தானியா அமெரிக்காவின் அட்லான்டிக் கடற்கரை ஓரமாகத் தனது 13 குடியேற்றங்களை ஏற்படுத்திவிட்டது. தொடர்ந்து பூர்வ குடிகளிடமிருந்த நிலங்களை அபகரிக்கும் வேட்டையினை பிரித்தானியர் தீவிரப்படுத்தினர். விச அம்புகளையும், கல் ஆயுதங்களையும் கொண்டு சுதேச மக்கள் தம்மால் இயன்ற



வரை துப்பாக்கி மனிதர்களோடு போராடினர். ஆனால், பிரித்தானியரும் தம் பங்குக்கு கொத்துக் கொத்தாக பழங்குடி மக்களை கொன்று குவித்தனர். இருப்பினும், அப் போரில் வெள்ளையர் படையிலும் இழப்பு ஏற்படவே செய்தது.

அதனால், பொ.ஆ.பி.(கி.பி.) 1851-ல் ஃபிராங்க்ளின் பியர்ஸ் என்ற அமெரிக்க அதிபர் சுக்வாமிஷ் என்ற பூர்வவீக மக்களுக்குச் சொந்தமான 20 லட்சம் ஏக்கர் நிலத்தை விலைக்குக் கேட்டான். பூர்வீகக் குடிகளால் ஆயுத பலம் பொருந்திய வெள்ளையரை எதிர்த்து போராடி வெல்ல முடியாது என்பது அந்த இனத் தலைவருக்கு அனுபவ பூர்வமாகத் தெரியும். அதனால், இயற்கை எழில் கொஞ்சும் தாம் வாழும் பூமியை தந்துவிட சம்மதிக்கிறார். எஞ்சியிருக்கின்ற தம் மக்களை காப்பாற்றுவதற்காகவே அவர் இவ்வாறான முடிவினை எடுக்கிறார். நிலத்தை கையளிப்பதற்கு முன்பாக நவீன காட்டுமிராண்டிகளுக்கு அந்த வனத் தலைவர் சியாட்டல் வரலாற்று சிறப்புமிக்க கடிதத்தை எழுதுகிறார். மிகவும் இலக்கியத் தரம் வாய்ந்த, குடிகளுக்கு சொந்த மண்ணின் மீதுள்ள ஈர்ப்பினைத் தெரிவிக்கும் வகையில் ஈடு இணையற்ற கடிதத்தை அவர் இவ்வாறு எழுதுகிறார்.

*'நிலத்துக்கு வெதுவெதுப்பூட்டும் வானத்தை நீ எப்படி விலைக்கு வாங்க முடியும்? எப்படி விற்க முடியும்? நல்ல வேடிக்கை. காற்றின் தூய்மையும், தண்ணீரின் பிரகாசத்தையும், எங்களுடைய தனிச்சொத்துகளல்ல! பிறகு அவற்றை எப்படி நீ வாங்க முடியும்?*

*பூமியின் ஒவ்வொரு துகளும் எங்களின் மக்களுக்குப் புனிதமானது.*

*பளபளக்கும் ஊசி இலைகளும் மணல் பரந்த கடற்கரைகளும், இருண்ட காடுகளுக்குள்ளே பரவிய பனியும் காடு திருத்திய நிலங்களும், ரீங்கரிக்கும் பூச்சி இனங்களும் எங்கள் மக்களின் நினைவுகள் வழியாகப் புனிதமாக நிலைத்திருக்கின்றன. மரங்களுக்குள்ளே செல்லும் நடுத்தண்டு சிவப்பு இந்தியனின் நினைவுகளை பல தலைமுறைகளாகத் தாங்கி வருகிறது.*

*நாம் பூமியின் அங்கம் பூமியும் நம்மில் ஓர் அங்கம்.*

*எனவே தான் வாஷிங்டனிலிருந்து அதன் தலைவர் எங்கள் 'நிலத்தை வாங்கப் போவதாகச்' சொல்லி அனுப்பியபோது எங்களை அவர் அதிகம் விலை கொடுத்து வாங்கிவிட நினைப்பதாகவே தோன்றியது. நிலங்களை வாங்கிய பிறகும் நமக்கென்று ஓரிடத்தை ஒதுக்கிக் கொடுப்பதாகவும் அங்கே நாம் எந்த ஒரு பிரச்சினையும் இல்லாமல் வாழ்ந்து கொள்ளலாம் என்றும் சொல்லி அனுப்பினார் அவர்.*

*நமக்கு அவர் தந்தை போல ஆகிவிடுவார் நாம் அவருக்குக் குழந்தைகளாகிவிடுவோம், அதனாலேயே நம் நிலங்களை அவர் வாங்க அனுமதித்துக் கொள்வோமாம்.*

*ஆனால், அது அப்படி எளிதாக முடிகிற விசயமல்ல! காரணம் எங்களுக்கு எங்கள் நிலங்கள் புனிதமானவை.*

*அருவிகளிலும் ஆறுகளிலும் ஓடுகிற தூய்மையான தண்ணீர் வெறும் நீரல்ல, அவை எங்களது மூதாதையரின் இரத்தம்.*

*உங்களுக்கு எங்கள் நிலத்தை விற்கிறோம் என்றால் அது முதலில் புனிதமானதென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் அதேபோல உங்கள் குழந்தைகளுக்கும் இந்த நிலம் புனிதமானதென்பதை நீங்கள் கற்றுக் கொடுங்கள். படிகம் போன்ற ஏரிகளின் தெளிந்த நீரில் தெரியும் பிம்பங்கள் எங்களது மக்களின் வாழ்வில் நடந்த பலவிதமான சம்பவங்களையும் நினைவுகளையும் சொல்லிக் கொண்டேயிருக்கும்.*

*ஓடுகின்ற நீரில் நீங்கள் கேட்கும் முணுமுணுப்பு எங்கள்*

பாட்டனின் குரல்.

வெள்ளைக்காரன் இருக்கிறானே அவனுக்கு எங்களின் பழக் கவழக்கங்கள் தெரியாது. எங்கள் நிலத்தின் எல்லாப் பகுதி களுமே அவனைப் பொறுத்த அளவில் ஒன்றுதான். இர விலே திருடன் போல உள்ளே நுழைந்து தான் ஆசைப் பட்ட பொருளையெல்லாம் சூறையாடிக்கொண்டு போவது தான் அவன் பழக்கம்.

கல்லறையில் தந்தையைப் புதைப்பான் மறுகணம் மறந்து போவான். அவனுக்குக் கவலையில்லை. பிள்ளைகளிடமி ருந்தே கூட நிலத்தைப் பறித்துக் கொள்வான். அவர்களின் எதிர்காலம் பற்றி அவனுக்கு அக்கறையில்லை.

தந்தையின் ஆன்மா இருந்த கல்லறை, சந்ததியின் உரிமை. இரண்டையுமே அவன் வெகு சுலபமாக மறந்து




போகிறான். தாயாகிய பூமியை, சகோதரனாகிய வானத்தை, ஆடு மாடுகளைப் போல பொன் மணிகளைப் போல விற் கக்கூடிய வாங்கக்கூடிய கொள்ளையடிக்கக் கூடிய பொருள்களாக மட்டுமே அவன் பார்க்கிறான்.

பச்சைப் பூமியை எடுத்து விழுங்கி எல்லாவற்றையுமே வறண்ட பாலைவனமாக்கி விடுகிற அகோரப்பசி அவ னுக்கு.

எப்படிப் பார்த்தாலும், எங்கள் பாதைகள் வேறு, உனது பாதைகள் வேறுதான். எங்களுக்கு உங்கள் நகரங்களைப் பார்க்கும் போதே எரிகிறது, வேதனை வாட்டி எடுக்கிறது. காட்டுமிராண்டிகளுக்கு நகரங்களை விளங்கிக் கொள்ள முடியாதென்கிறாய்.

வெள்ளையனின் நகரங்களில் அமைதியான ஒரே ஒரு இடத் தைக்கூட உன்னால் காட்ட முடியாது. வசந்த காலத்தில் இலைகள் விரியும் ஓசைகளை அங்கே கேட்க முடியாது. ஒரு பூச்சியின் சிறகுகள் அசையும் ஓசையைக் கூடக் கேட்க முடியாது. ஒருவேளை, நான் காட்டுமிராண்டி என்பதால் எனக்குப் புரியாது என்பாய்.

உனது நகரங்களின் இரைச்சல் காதைக் கிழிக்கிறது. இர வில் ஒற்றைப் பறவையின் ஏக்கம் தொனிக்கும் குரலோ, குளத்தின் அருகே தவளைகளின் சுவையான விவாதங் களோ கேளாத வாழ்க்கை என்ன வாழ்க்கை? நான் ஒரு செவ்விந்தியன், எனக்கு விளங்கவில்லை.

குளத்தின் மேல் தடவிச் செல்லும் காற்றின் ஒலியை விரும்பு கிறான் ஒரு செவ்விந்தியன். பகலில் பெய்யும் மழை சுத்தப் படுத்திய காற்றின் ஊசி இலையில் பரவி வந்த காற்றின் வாசனையே அவன் விரும்பும் வாசனை.

காற்று அவனது பொக்கிஷம். விலங்குகள், மரங்கள், மனி தர்கள் என்று எல்லா சீவராசிகளுமே ஒரே மூச்சுக் காற் றைத்தான் சுவாசிக்கின்றன.

ஒரு வெள்ளையன் தான் சுவாசிக்கும் காற்றை என்றைக்கா வது நின்று கவனித்திருப்பானா?

பல நாட்களாகவே மரணப் படுக்கையில் விழுந்து விட்டவ னைப்போல அல்லவோ நாறும் காற்றில் அவன் மூச்சிறுகிக் கிடக்கிறான்.

உங்களுக்கு நிலத்தை விற்கிறோம் என்றால் காற்று எங்க ளின் பொக்கிஷம் என்று அறிந்து கொள்ளுங்கள். எல்லா உயிருக்கும் காற்றே ஆதாரம், அவற்றில் எல்லாம் காற்றின் ஆன்மா பாய்ந்து ஓடுகிறது. எங்கள் பாட்டனுக்கு எது முதன் முதலில் உயிரான மூச்சைக் கொடுத்ததோ அதே காற்றுதான் அவருக்கு மரணத்தின் போது பெருமூச்சையும் கொடுத்தது.

எங்கள் நிலத்தை விற்கிறோம் என்றால் தனியே அதை நீ புனிதமாகக் கருத வேண்டும், பாதுகாக்க வேண்டும். அங்கே போகிற வெள்ளையன்கூட பூக்களின் இனிய மணம் நிறைந்த காற்றைச் சுவாசிக்கலாம்.

நானொரு காட்டுமிராண்டி எனக்கு வேறு விதமாகப் புரிந்து கொள்ளவும் தெரியவில்லை.

புல்வெளியில் ஆயிரம் எருதுகளின் சடலங்கள் அழுகிக் கிடப்பதைப் பார்த்திருக்கிறேன் அவை, அருகே ரயிலிலி ருந்து வெள்ளையர்களால் பொழுதுபோக்குக்காகச் சுட்டுக் கொல்லப்பட்டவை. புகை விட்டுச் செல்லும் உன் ரயில் எங் கள் எருதுகளை விட எந்த விதத்தில் உயர்ந்தது? எனக்கு விளங்கவில்லை நானொரு காட்டுமிராண்டி.

விலங்குகள் இல்லை என்றால் மனிதர் ஏது? விலங்குகள் எல்லாம் ஒழிக்கப்பட்டு விட்டால் ஆன்மாவை விட்டு விட்ட கூடுபோல மனிதர் செத்துப் போவார்.

விலங்குகளுக்கு என்னவெல்லாம் நேர்ந்ததோ, மனிதருக்கு அவை சீக்கிரத்திலேயே நடக்கும். எல்லாமே ஒன்றோ

*டொன்று சம்பந்தப்பட்டவை.*

*உன் குழந்தைகளுக்கு நீ கற்றுத்தா அவர்களின் காலடியில் உள்ள மண் பாட்டன்மாரை எரித்த சாம்பல் என்று. அதனால்தான் அவர்கள் நிலத்தைப் போற்ற வேண்டும் என்கிறேன். எங்கள் சுற்றத்தாரின் வாழ்க்கையால் நிரம்பிய பொக்கிஷமே இந்தப் பூமி என்பதை உன் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்.*

*பூமி நமது தாய் என்று நாங்கள் எங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுத்தோம். அதை உங்கள் குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுங்கள்.*

*பூமிக்கு எதெல்லாம் நேரிடுமோ, அதுவே அவன் பிள்ளைகளுக்கும் ஆகும்.*

*பூமி மனிதருக்குச் சொந்தமல்ல. மனிதர் தான் பூமிக்குச் சொந்தம். இது எங்களுக்குத் தெரியும்.*

*பொருள்கள் எல்லாம் உள்ளே இணைந்தவை. ஒரு குடும்பத்தை ரத்தச் சம்பந்தம் பிணைப்பது போல, எல்லாப் பொருள்களும் உள்ளுக்குள்ளே இணைந்தவை.*

*பூமிக்கு எதெல்லாம் நேரிடுமோ அதுவே அவன் பிள்ளைகளுக்கும் ஆகும்.*

*மனிதர் வாழ்க்கை என்ற வலையைப் பின்னவில்லை, அவர்கள் அதில் ஓர் இழை மட்டுமே. அந்த வலைக்கு அவர்கள் எத்தனை கேடுகள் செய்தாலும், அவற்றையெல்லாம் தனக்கே செய்து கொண்டவராகிறார்.*

*கடவுளே வந்து அந்த வெள்ளையனோடு தோளோடு தோள் சேர்ந்து நடக்கலாம், நண்பர்களைப் போலக் கலந்து பேசலாம், ஆனால் அவனுக்கும் இறுதித் தீர்ப்பிலிருந்து விதிவிலக்கு இல்லை.*

*என்ன இருந்தாலும் நாம் அனைவரும் சகோதரர்கள் தானே, இதோ பார். வெள்ளையர்களாகப் பிறந்தவர்களும் உலகை விட்டு நீங்கத்தான் வேண்டும். மற்ற எல்லாப் பழங்குடியினரைவிடச் சீக்கிரமாகவே மறைந்தும் போகலாம். நீ படுத்துறங்கும் நிலத்தை நீயே அசுத்தப்படுத்தினால், ஓரிரவில் உன் குப்பைகளுக்குள்ளேயே மூச்சு முட்டி நீ செத்துப் போகலாம்.*

*அந்த இறுதி முடிவு ஒரு விளங்காத புதிர்போல. எருதுகள் படுகொலையையும் காட்டுக் குதிரைகளைப் பழக்கி விடுவதையும் காடுகளுக்குள்ளே எங்கு பார்த்தாலும் மனித நடமாட்டம் அதிகரிப்பதையும் பழைய பூர்வீகமான மலைகளை மறைத்து தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருவதையும் நாம் விளங்கிக் கொள்ளாமலேயே இருக்கிறோம். வரப்போகிற அந்த இறுதி முடிவு ஒரு விளங்காத புதிர் போல.*

*புதர்க் காடுகள் எங்கே? எல்லாம் போயிற்று. மலைக் கழுகுகள் எங்கே? அவையும் மறைந்தன. விரைவாக ஓடும் மட்டக் குதிரைகளையும் வேட்டையாடி அழித்துக் கொண்டிருக்கிறார்கள். என்ன நடக்கிறது? இப்படி வாழ வேண்டும் என்ற அவர்களின் வாழ்க்கை முடிந்து விட்டது. எப்படியோ மீத மிச்ச வாழ்க்கை மட்டும் நடந்து கொண்டிருக்கிறது.*

*நாங்கள் எங்கள் நிலத்தை விற்பதாக வைத்துக் கொள்வோம். எங்கள் நிலத்தை நாங்கள் நேசித்தது போலவே நீங்களும் நேசியுங்கள். நாங்கள் எப்படிக் காப்பாற்றி வைத்திருந்தோமோ அப்படியே காப்பாற்றுங்கள். எங்களிடமிருந்து நிலம் பெறுகின்றபோது எப்படி இருந்தது என்பதை மட்டும் நினைவில் வைத்திருங்கள். எல்லா உறுதியுடனும், எல்லா வலிமையோடும் முழுமையான விருப்பத்தோடும் உங்கள் குழந்தைகளுக்காக இந்நிலத்தைப் போற்றிக் காப்பாற்றுங்கள். இந்நிலத்தை நேசியுங்கள்; கடவுள் நம் எல்லோரையும் நேசிப்பதுபோல.'* (கடிதத்தின் மொழியாக்கம்: புதூர் இராசவேல்)

சியாட்டல் கேட்கும் ஒவ்வொரு கேள்வியும் மனிதரின் மனசாட்சியை உலுக்குவதாக இருக்கிறது. இயற்கையை நேசிப்பவர்களின் வழிகளில் கண்ணீர்த் துளிகளை கொண்டுவருகிறது. மேலும் மேலும் இயற்கையை நேசிக்கவும், பாதுகாத்திடவும் தூண்டுகிறது. நம்மை பூர்வீக மக்களின் வாழ்வை நோக்கி ஈர்க்கிறது. அதனால் தான், வெள்ளை காலனிக்கவாதிகள் கூட அவர்களிடம் ஓடினார்கள். அவர்களோடு வாழ விரும்பினார்கள். ஜேம்ஸ் டவுனில் (வெர்ஜீனியா) கவர்னர்களுக்கு இது பிரச்சினையாக இருந்ததால் பூர்வீகக் குடிகளுகளுடன் வாழ்வதற்காக ஓடிப்போகும் வெள்ளையர்களுக்கு மரண தண்டனை வழங்க கட்டளையிடப்பட்டது. அந்தளவிற்கு இயற்கையுடன் ஒன்றறக் கலந்த புனிதமான வாழ்க்கை முறையை பூர்வீகக் குடிகள் கொண்டிருந்தார்கள். இயற்கையில் இருந்து மனிதர் தூரமாகிக் கொண்டிருக்கின்ற காலத்தில் வாழும் நம்மையே இந்தக் கடிதம் இதயத்தை கனக்கச் செய்கிறது என்றால், இயற்கையின் அங்கமாகவே வாழ்ந்து செத்த அந்த மனிதர்களின் மன வேதனையை விளக்கிச் சொல்லத்தான் வேண்டுமா? நடத்தை சுயநலத்தால் அன்றி பெருந்தன்மையால் உருவானது. இயற்கையை அழிக்கும் சுயநலவாதிகளையெல்லாம் பார்க்கும்போது காட்டுமிராண்டிகள் யார் என்ற கேள்வி மட்டுமே மிஞ்சுகிறது.


**உசாத்துணை:**

- சியாட்டல் விற்ற நிலம் - நவீன விருட்சம்
- உலக மக்கள் வரலாறு (பக்கம் - 198, 278, 296) - கிறிஸ் ஹார்மன்
- டாலர் தேசம் (பக்கம் - 92) - பா. ராகவன்
- பூமி மனிதனுக்குச் சொந்தமல்ல; மனிதன் தான் பூமிக்குச் சொந்தம்! - வினவு (மொழியாக்கம்: புதூர் இராசவேல், புதிய கலாச்சாரம் 2005)
- திருச்சபை வரலாறு - http://bibleintamil.com/
- நிலவுடைமைப் பிரபுத்துவத்தின் வீழ்ச்சி மற்றும் தேசிய அரசுகளின் தோற்றம் - ஃபிரடரிக் எங்கெல்ஸ்
- 'கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை (முதலாளிகளும், தொழிலாளர்களும்) - கார்ல் மார்க்ஸ், ஃபிரடரிக் எங்கெல்ஸ்




sathees.selvarajah@thaiveedu.com

# ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400 வைத்தியன் இயல்பு

- பால. சிவகடாட்சம்

**திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.**

*'கொன்றிடுங் குறியி னோடு நாடியின் குணமு மெய்யில்*
*நின்றிடும் பூத மாதி தத்துவ நிலைமை தானும்*
*அன்றியு நோயின் பேத மனைத்தையுந் தெளிந்த றிந்த*
*வென்றிசேர் வயித்தி யன்றன் முறைபுரி விதியைக் கேளே'* - (234)

மரணக்குறிகள், நாடித்துடிப்புக் குணங்குறிகள், உடம்பில் நின்று இயங்கும் பஞ்சபூத தத்துவத்தின் நிலைமை, நோயின் வெவ்வேறு வடிவங்கள் இவை அனைத்தையும் நன்கு அறிந்து தெளிந்த வைத்தியன் தனது மருத்துவத்தைச் செய்யும் முறை பற்றிக் கூறுவேன் கேட்பாயாக.

*'விதிமுறையாக சித்தமா மறையின் றன்மை யெல்லாம்*
*மதியுறு குருமுன் பாக மரபினிற் படித்தோ னாகி*
*அதிகமாய்க் குருவைத் தேவை யன்பொடு வணங்கு வோனாய்த்*
*துதிபுரிந் தெவரும் போற்றுந் தூயநற் குணமுள் ளோனாய்'* - (235)

சித்த வேதத்தின் விதிமுறைகளை எல்லாம் குருவின் துணையுடன் பாரம்பரிய முறைப்படி கற்றுத்தேர்ந்தவனாய் குருவை பயபக்தியுடன் கூடிய அன்போடு வணங்குபவனாய் எவரும் போற்றக்கூடிய தூய்மையான நற்குணம் உடையவனாய்.

*'தூயநற் செய்கை யுள்ளான் சொல்மனத் திண்மை யுள்ளான்*
*தீயவஞ் சனையி லாதான் செகமெலா மதிக்குஞ் சீரான்*
*ஏயமெய் யன்றிப் பொய்யை யியம்பிடான்*
*குணங்கண் மூன்றில் சாய்வில்சாத் துவிதமான குணத்தினிற்*
*றலைமை யுள்ளான்'* - (236)

நன்னடத்தை உள்ளவன், சொல்லிலும் மனதிலும் உறுதி உடையவன், தீங்கு விளைவிக்கக்கூடிய வஞ்சகம் இல்லாதவன், உலகத்தோரால் மதிக்கப்படுகின்ற சிறப்புப் பொருந்தியவன், எப்போதும் உண்மையைத் தவிரப் பொய்பேசாதவன், சாத்விகம், இராஜசம், தாமசம் எனப்படும் முக்குணங்களுள் சாத்விகம் என்னும் குணமே மேலோங்கி இருப்பவன்.

*'தலைமையா மினத்தான் மிக்க தகுதியான் றோற்ற முள்ளான்*
*அலைவறு சிங்கம் போலு மாண்மையா னுறுப்பிற் சற்றும்*
*நிலைமைசேர் குறைவி லாதானி தியுளா னிரக்கம் பெற்றோன்*
*தொலைவிலாக் கோப மற்றோன் றொழுதகு மினத்திற்*
*சார்ந்தோன்'* - (237)

தலைமைப் பண்பு மிக்கவன், அதற்குத் தகுதியான தோற்றம் உடையவன், அலைச்சல் இல்லாத சிங்கம் போன்ற ஆண்மை உடையவன், உடல் உறுப்புக்களில் எவ்வித குறைபாடும் இல்லாதவன், போதிய நிதியுள்ளவன், இரக்க குணம் கொண்டவன், அடக்கமுடியாத கோபம் இல்லாதவன், தொழுது வணங்கக் கூடிய தகுதி உடையோருடன் வைத்து எண்ணப்படுபவன்.

*'இனமிகு மனையா என்றி யாரையுந் தாயென் றெண்ணும்*
*கனமுறு நீதி கொண்டோன் காசினி யுயிரை யெல்லாம்*
*தனதுயி ரென்னக் காக்குஞ் சற்குண தயாளன் சீலன்*
*மனமது சோர்வி லாதான் மாட்சிமைச் செவ்வி பெற்றோன்'* - (238)

தனது மனைவியைத் தவிர மற்றெந்தப் பெண்ணையும் தாயாக நினைப்பவன், அசைக்கமுடியாத நீதியை உடையவன், உலகில் உள்ள உயிர்கள் அனைத்தையும் தனது உயிராக நினைத்துக் காக்கும் தாராளகுணம் கொண்டவன், நல்லொழுக்கம் உடையவன், மனதில் சோர்வு அடையாதவன். பெருமை மிக்க மேன்மையால் சிறப்புப் பெற்றவன்.

*'செவ்விதா யிலங்கு கையிற் சிறந்த சங் கிரேகை யுள்ளான்
அவ்விய மழுக்கா றில்லா னண்டினர்க் காக்குஞ் சீரான்
எவ்வகை யாக வேனும் பிறர் பொருட் கிச்சை வையான்
நவ்விநோக் குள்ள மின்னார் மோகத்தா னலிவு கொள்ளான்'*
- (239)

அழகாக ஒளிரும் கைகளில் சங்கு இரேகை உள்ளவன், பொறாமைக் குணங்கள் இல்லாதவன், தேடிவந்தோரைக் காக்கும் குணம் உடையவன், எதற்காகவேனும் பிறரது சொத்துக்களின்மேல் ஆசைப்படாதவன், மானைப்போன்று மருண்ட பார்வை உடைய மாதர்மேல் ஏற்படும் மோகத்தால் தன்னை வருத்திக்கொள்ளாதவன்.

*'நலிவுறு மிடியோர்க் கெல்லா நன்னய மிகவுஞ் செய்வோன்
பொலிதரு புகழின் மிக்கோன் புந்தியாற் சிறப்புப் பெற்றோன்
பலகலைப் பயிற்சி யுள்ளோன் பரனடிக் கன்பு செய்வோன்
மலிவுறு மினைய சீரான் வயித்திய சீல னாமே'* - (240)

வாழ்க்கையில் நொடித்துபோன வறியவர்க்கெல்லாம் பல வேறு நன்மைகள் செய்பவன், நிறைவுதரும் புகழ் நிரம்பப் பெற்றவன், அறிவினால் சிறப்புப் பெற்றவன், பலகலைகளிலும் தேர்ச்சி பெற்றவன், இறைவன்மேல் பக்தி செலுத்துபவன், இத்தகைய குணங்கள் கொண்டவனே சிறந்த வைத்தியனாவான்.

*'சீலமாம் வயலிற் செய்ய விருப்பெனும் விதைதெ ளித்து
வாலிய பொறை நீர் விட்டு வளர்பவக் களையை நீக்கிக்
கோலிய தவமாம் வேலி கொடுபுல மிருகங் கொன்று
சாலியாம் சிவம்விளைத்துத் தண்ணளி பெற்றோ னாகி'*
- (241)

நல்லொழுக்கம் என்னும் வயலில் விருப்பம் என்னும் விதைகளைத் தூவி வலிமையான பொறுமை என்னும் தண்ணீர் பாய்ச்சி பாவம் என்னும் களையை அகற்றித் தவம் என்னும் வேலி அமைத்துக் கேடுவிளைவிக்கின்ற புலனுணர்வுகள் என்னும் கொடிய மிருகங்களை ஒடுக்கி செந்நெல் ஆகிய சிவத்தை விளைவித்து அருள் பெற்றவனாகி,

*'பெற்றிடு மென்பு காலாய்ப் பேசுகை வளைய தாக
வற்றிடு பழுப்பாச் சாக வரிச்சுக ணரம்பதாகச்
சுற்றிய தோலால் வேய்ந்து சுவரெனத் தசையை வைத்துப்
பற்றுடற் பிணியைக் காண்பான் பண்டித னென்னு நூலே'*
- (242)

எலும்புகள் தூண்களாக கைகள் உத்தரமாக (வளையாக) தசைப்பிடிப்பு குறைவடைந்தால் பழுப்பாக மாறும் தன்மையுடைதாய் வெளியே தெரிகின்ற நரம்புகள் வரிச்சுகளாக அதற்கு மேல் தோலால் வேயப்பெற்று தசையைச் சுவராக வைத்துக் கட்டப்பட்ட வீடாகிய இந்த உடலில் பற்றுகின்ற நோயைக் கண்டறிபவன் பண்டிதன் ஆவான் என்று வேதநூல் கூறும்.

*'நூலதா யுள்ள சித்த மாமறை நுட்ப மெல்லாம்
பாலென வுண்டு நித்தம் பயின்ற தன் பயனை யெல்லாம்
மேலுமா ராய்ந்து கண்ட வைத்திய னிருப்பா னாகில்
ஞாலமேல் விதியில் லாம னணுகிடா துன்பந் தானே'* - (243)

நூல்களிலே சித்தர்கள் கூறிவைத்த மருத்துவ நுட்பங்களை எல்லாம் பால்போல் மனத்துள் பருகி நித்தமும் அவற்றைப் படித்து அவற்றின் பொருளை எல்லாம் ஆராய்ந்து தெளிந்த வைத்தியன் ஒருவன் இருப்பானாகில் உலகில் விதியாலேயன்றி நோயால் மரணம் ஏற்படாது.

*'துன்பம் தகற்றத் தக்கோர் தூயவே தியர் பாலர்
அன்புறு வசியர் பின்னோ ராய்ந்தநல் வாகடத்தை
இன்பமாய்க் கற்றுத் தேறி யியல்பாக மருந்து செய்யில்
முன்புதான் மொழிந்த வேத முதன்மையாந் தருமந் தானே'*
- (244)

நோய்த் துன்பம் தீர்க்கக்கூடிய புனிதர்களான பிராமணர், அரசர், வைசியர் மற்றும் சூத்திரர் என்போர் மருத்துவநூலை விரும்பிக்கற்றுத் தேர்ச்சி பெற்று முறையாக வைத்தியம் செய்வோராயின் அதுவே வேதங்கள் கூறும் புண்ணியங்களுள் முதன்மையானதாகும்.

(நன்றி: அங்காதிபாதப் பாடல்கள் சிலவற்றுக்குப் பொருள் காண உதவிய திரு. சிவபாலு மாஸ்ரர் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றி.)



Sivakadadcham@thaiveedu.com




# இடைவெளி அடைப்பும் கசிவுத்தடுப்பும்

- வேலா சுப்ரமணியம் -

## சாளரங்களும் சுவர்களும்:

கிடைக்கக்கூடிய மின்வளத்தையும் எரிவாயு (Gas) வளத்தையும் திறம்படப் பாவிப்பது நமக்கு மட்டுமல்ல நாட்டிற்கும் சுற்றுச் சூழலுக்கும் பலவிதத்திலும் நன்மை பயக்க வல்லது. சற்று விப ரமாகக் கூறுவதானால் வீட்டில் உள்ள சாளரங்கள், கதவுகள் போன்றவற்றிற்கு முறைப்படி இடைவெளி அடைப்பு (Caulking) செய்வதன் மூலமும் கசிவுத்தடுப்பு (Weather Striping) செய்வ



தன் மூலமும் எமது விட்டிற்கு நாம் செலவிடும் சூடாக்கும் அல் லது குளிராக்கும் செலவீனத்திலிருந்து சுமார் 25%ற்கும் மேலான தொகையை சேமிக்கமுடியும் என ஒன்ராறியோ மின்வ ளத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பொதுவாக புதிய வீடுகளாக இருந்தாலும் சரி பழைய வீடுக ளாக இருந்தாலும் சரி சாளரப் பொருத்துக்களிலும் கதவுப் பொருத்துக்களிலும் இடைவெளி ஏற்படுவது பொதுவானது. குறிப்பாகப் புதிய வீடுகளில் இத்தகைய இடைவெளிகள் அதி கமாகக் காணப்படுவது இயல்பு. பாவிக்கப்பட்ட மரங்கள் காலப்போக்கில் காய்ந்து போவதால் முதல் இருவருடங்களில் புதிய வீடுகளில் இத்தகைய இடைவெளிகள் அதிகம் ஏற்படும். அத்துடன் குளிர்காலத்தில் வெப்பமாக்கிகள் தொடர்ந்து இயங் குவதால் வீட்டில் உள்ள ஈரலிப்புத் தன்மை (Humidity level) குறைந்து போவதாலும் அதிகளவு வெடிப்புகளும், இடைவெளி களும் ஏற்படுகின்றன. Central Humidifier-ஐ முறையாகப் பாவித்து வருபவர்களது வீடுகளில் இத்தகைய பாதிப்புகள் ஏற் படுவது மிகக் குறைவாகவே இருக்கும்.

எது எப்படி இருப்பினும் இவ்வாறு ஏற்படும் இடைவெளிகளை உரிய நேரத்தில் அடைக்காது விட்டால் குறுகிய காலத்தில் சக் தியின் விரயத்தின் மூலம் அதிக செலவுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். அதேவேளை காலப்போக்கில் நீர்ப் படிவுகள் ஏற்படுவதால் அதன் தொடர்ச்சியாக Mold உற்பத்தி யாவதும் உக்கல் நிலை காரணமாக சாளரங்களை கூடிய விரைவில் பிரதியீடு செய்ய வேண்டிய நிலை ஏற்படுவதும் தவிர்க்க முடியாது போகும். எனவே தீயனவற்றை முளையி-லேயே கிள்ளி விடுவது போல Caulking செய்வதன் மூலம் குறு கிய காலத்திலும் நீண்ட காலத்திலும் பல தொகைப் பணத் தைச் சேமிக்கும் வாய்ப்பு இருக்கின்றது.

மிகக் குறைந்தளவு பயிற்சியோடு பொதுவாக எல்லோராலும் செய்யப்படக்கூடிய சிறு வீட்டுக்குரிய பராமரிப்பு வேலைகளில் இதுவும் ஒன்று. கட்டட நிர்மாண கடைகளுக்குச் சென்று பார்க் கின்ற போது அங்கு காணக்கூடிய பலதரப்பட்ட Caulking-களைக் கண்டு குழப்பமடைவதற்கான சந்தர்ப்பம் நிறையவே இருக்கின்றது. எந்த வேலைக்கு எத்தகைய பொருளைப் பாவிப் பது என்பதைச் சரியாக தேர்ந்தெடுப்பதிலேயே உங்களது வெற்றி பெருமளவில் தங்கியிருக்கின்றது.

## சரியான Caulking வகையைத் தெரிந்து எடுப்ப தற்கு கருத்திற் கொள்ளவேண்டிய காரணிகள்:

- உட்புற அடைத்தல் (Interior Caulking).
- வெளிப்புற அடைத்தல் (Exterior Caulking).
- தண்ணீர் உள்ள குளியல் அறைகள் போன்ற பகுதிகள் (moisture resistant).
- இடைவெளியின் அளவு.
- நின்று நிலைக்கக்கூடிய கால அளவு.



- நிறங்கள்.
- நிறப்பூச்சு செய்தல்.
- விலை.

இத்தகைய காரணிகளை கருத்திற்கொண்டு அதற்கான தேடலைச் செய்வதன் மூலம் பொருத்தமான மூலப்பொருளைத் தெரிந்து கொள்ளலாம். நாங்களாக உரிய வளங்களை வாசித்தறிவதில் சிரமங்கள் இருந்தால் அதற்கெனப் பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் விற்பனை முகவர்களிடம் கேட்டறிந்து கொள்வது மிக இலகுவானது. நீங்களாகச் செய்யும் திறனும் (Do it your Self) மனத்துணிவும் இல்லாதுபோனால் இத்தகைய தொழில்களைச் செய்யக்கூடிய ஒப்பந்தக்காரரை வேலைக்கு அமர்த்துவதைவிட வேறு வழியில்லை. (Although caulking is relatively easy to do, you don't want to do it too often, so it pays to buy caulking that will last for at least 10 years. Today, many types of caulking will last 20 years or more. The expected lifetime will be on the label.)

சில ஆராய்ச்சிகளின்படி சாதாரண கனடிய வீடு ஒன்றில் இருக்கக் கூடிய இடைவெளிகளையும் வெடிப்புக்களையும் ஒட்டு மொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் 8'x10' அளவு ஓட்டை ஒன்று சுவரில் இருப்பதாக மதிப்பிடமுடியும். எனவே, அத்தகைய ஓட்டையினை அடைப்பதால் ஏற்படக்கூடிய பலனைப் பற்றி இதனைவிடத் தெளிவாகக் கூறத் தேவையில்லை என நினைக்கின்றேன்.

அசைவற்ற இரண்டு திண்மங்களுக்கு இடையிலான இடைவெளியை அடைக்கப் பாவிக்க வேண்டியது Caulking, அசைவற்ற ஒரு பொருளுடன் அசையும் இன்னொரு பொருள் பொருத்தப்படும்போது ஏற்படும் கசிவை அடைக்கப் பாவிக்க வேண்டியது Weather-strip, கதவு நிலைக்கும் சுவருக்கும் இடையில் ஏற்படும் இடைவெளியை நிரப்பப் பாவிக்க வேண்டியது Caulting, கதவு மூடித் திறக்கும் போது நிலைக்கும் கதவுக்கும் இடையில் ஏற்படக் கூடிய இடை வெளியை அடைக்கப் பாவிக்க வேண்டியது கசிவுத் தடுப்பு (Weather- strip).

தெரிந்து கொள்ளவேண்டியதன் அவசியத்தைக் கருத்திற்கொண்டு கிடைக்கக்கூடிய Caulking வகைகள் பற்றியும் அவற்றின் தன்மை பற்றியும் ஆங்கிலத்தில் கீழே தரப்படுகின்றது.

## Types of Caulking: Four Common Formulas:

These types of caulk dominate the shelves at home centers. Labels don't always tell you what's in the tube, so we've included examples of each type in this article. But there are many more brands than the ones we show. All are available in various colors and paintable.

**Acrylic Latex:** $2 to $5: Acrylic latex caulks are the easiest to apply and smooth out. They're also the only sealants that clean up with water. Look for versions labeled 'siliconized' or 'plus silicone.' Adding silicone to acrylic latex improves adhesion and flexibility.

**Polyurethane:** $6: Poly caulks are generally tougher than other sealants, making them a good choice for driveways and other areas that take a beating. But their gooey consistency makes them hard to work with. Check the label before painting; you may have to wait several days.

**Solvent-Based:** $6 to $9: Many solvent-based caulks are great for roofing because they don't degrade in direct sunlight and can be applied to wet surfaces. But they're gooey and hard to apply neatly.

**Hybrid:** $7 and up: Most hybrid caulks combine silicone and polyurethane for top-notch adhesion, flexibility and longevity. They're easier to apply neatly than polyurethane, but not as easy as acrylic latex. Most aren't labeled 'hybrid,' so we've pointed out the hybrids in the various photos. Cost is a clue: High-quality hybrids are usually the most expensive caulks on the shelf.



velasubramaniam@thaiveedu.com



# வீட்டுக் காப்புறுதி

**- செந்தூரன் புனிதவேல்**

ஒரு பொருளை நாம் வாங்கும் வேளையில், அதனை எப்படிப் பாவிப்பது? அதன் பயன் என்ன? என்று தெரியாமல் வாங்குவது அறியாமையாகும்.

பலரும் வீடு வாங்கும் வேளையில், அதற்கான கடன் வழங்கும் அமைப்பானது நிர்ப்பந்திப்பதால் ஒரு வீட்டுக்காப்புறுதியைக் கட்டாயத்தின் நிமித்தம் பெற்றுக் கொள்வார்கள். அதன் உண்மையான தேவையும் பயனும் என்ன என்று யாரும் அலட்டிக்கொள்வதில்லை. அக்கறையுமில்லை.




வீட்டுக் காப்புறுதி என்பது ஒரு கேடயம் போல் உங்களைப் பல இழப்புகளிலிருந்து காப்புச் செய்வதைப் பலரும் அறிந்திருப்பதில்லை. சரி, அதைப்பற்றி இங்கு சற்றுக் கவனிப்போம்.

பொதுவாக வீட்டுக் காப்புறுதியானது உங்கள் வாழ்வில் மிகப் பெரிய உடமையான வீட்டிற்குக் குறிப்பிட்ட அனர்த்தங்களால் பாதிப்பு ஏற்படும் வேளையில் அதற்கான இழப்புகளின் நஷ்டத்தை ஈடு செய்யும். அதனுடன் இணைந்துள்ள கட்டடங்கள், நீச்சல்குளம் முதலானவற்றில் ஏற்படும் இழப்புகளையும் ஈடு செய்யும். இது மட்டுமல்ல உங்களால் தவறுதலாகப் பிறிதொருவருக்கு இழப்புகள் ஏற்படின் அதனையும் உங்கள் வீட்டுக் காப்புறுதி ஈடு செய்யும்.

### வெவ்வேறு வகையான வீட்டுக் காப்புறுதிகள்:

வீட்டுக் காப்புறுதிகள், சொந்தவீடு, வாடகைவீடு, தொடர் மாடி வாடகை வதிவிடம், சொந்தமான தொடர்மாடி வதிவிடம் (condominium), பருவகால வதிவிடம் (seasonal home) எனப் பல வகைப்படும். இது மட்டுமல்ல இக்காப்புறுதிகள் பலதரப்படும். அடிப்படையான களவு, தீ, மற்றும் வேறு இழப்புகளுடன் உங்கள் தவறால் வேறு ஒருவருக்கு ஏற்படும் இழப்புகளுக்கு ஈடுசெய்ய இரண்டு மில்லியன் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இதனை ஆங்கிலத்தில் liability என்பார்கள். உதாரணத்திற்கு வீட்டிற்கு வந்த ஒருவர் உங்கள் வீட்டுவாசலில் உறைபனி தள்ளி விடப்பட்டிருந்து அதில் வழுக்கி விழுந்தால், அவர் உங்கள் கவலையீனத்திற்கு வழக்குத் தொடுத்தால், அந்த இழப்பு liability எனப்படும்.

யாராவது உங்கள் அடையாள அட்டையைத்திருடி, அதைப் பாவித்து பணமோசடி செய்திருப்பின் பத்தாயிரம் டாலர்கள் வரை உங்கள் காப்புறுதி ஈடு செய்யும்.

### மேலதிகமாகப் பெறக்கூடியது:

ஒரு வீடு அல்லது பொருள் பாவிக்கப்படும் வேளையில் அதன் பெறுமதி குறைந்தாலும் அதனை ஈடு செய்வதற்குக் கூடிய தொகைப்பணத்தைக் காப்புறுதி தரும் அல்லது கழிவுக்கட்டணம் இன்றிப் பொருளை ஈடு செய்வதற்கான உறுதியைப் பெற்றுக் கொள்ளலாம்.

நீங்கள் வீட்டைக் காப்புறுதி செய்தபின் விலைவாசி கூடியதால் பெறுமதி கூடியிருந்தால், கூடிய இழப்பைக் காப்புறுதி ஈடுசெய்யுமா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

நீங்கள் வாங்கிய வீட்டில் ஒரு இழப்பீடு நடந்து அதனைத் திருத்தி அமைக்கும் வேளையில் சட்டமாற்றங்கள் காரணமாக மேலதிகமான வேலைகள் செய்ய வேண்டிய நிர்ப்பந்

தங்கள் வரும் வேளையில் அந்த மேலதிகச் செலவைக் காப் புறுதி ஈடு செய்யுமா என்பதனை அறிந்திருப்பது அவசியம். காலத்துக்குக் காலம் இவை மாற்றி அமைக்கப்படும் என் பதை அறிந்திருக்க வேண்டும்.

அனர்த்தனங்களால் வீட்டை வீட்டு வெளியேறி வேறிடங்க ளில் வசிக்கவேண்டி வரின் அதற்கான மேலதிகச் செலவை யும் வீட்டுக் காப்புறுதி ஈடுசெய்யும்.

**மேலதிகமாகப் பெறக்கூடிய காப்புறுதிகள்:**

உங்கள் காப்புறுதிகள் வீட்டில் குழாய் வெடித்தால் வரும் வெள்ளத்திற்குக் காப்புறுதி செய்யும். ஆனால் comprehensive காப்புறுதி செய்தால் ஆறுகள், குளங்கள், எரிகளால் வரும் வெள்ள இழப்பை நஷ்டஈடு செய்யும் என்பதனை மறக்கலாகாது.

காப்புறுதிகளில் மாற்றீட்டுச் செலவு அதாவது replacement cost இனைத் தருவார்கள். ஒரு சிறிய உதாரணமாக உங்கள் வீட்டிலிருந்த முப்பது வருடப் பழைய வரவேற்பறைக் கதி ரைகளுக்குப் பதிலாகப் புதிய கதிரைகள் வாங்குவதற்கான செலவை ஈடு செய்வார்கள்.

**காப்புறுதிக் கட்டணங்களில் செலவைக் குறைக்க சில வழிகள்**

- வீட்டில் அபாய அறிவிப்பு மணி (security alarm) அல்லது தீ அணைக்கும் தெளிப்பான் (sprinkle) இருக்குமானால் கட்டணக்கழிவு கிடைக்கும்.
- வீட்டுக்கடன் இல்லா உரிமையாளராயின் அதற்கும் கட்ட ணக்கழிவு கிடைக்கும்.
- உரிமையாளர் 55 வயதுக்குக் கூடியவரானால் அதற்காகக வும் கழிவு உண்டு.
- இறுதியாக ஒரே காப்புறுதி அமைப்பில் வாகனக் காப்பு றுதி இருப்பின் அதற்காகவும் கழிவு உண்டு.

எனவே, காப்புறுதி பெறும் வேளை அதனைத் தீர விசாரித்து விளங்கிக்கொண்டு உங்களுக்கான வீட்டுக் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



senthuran.p@thaiveedu.com





# உணவும் உணர்வும்

வேதநாயகம் தபேந்திரன்

'பெட்டை விரும்பிப் போட்டாள். பெடியனும் எங்கட இன சனம் தான். நல்ல நாளில சோறு கொடுத்துப் போட்டம்'. சம் பிரதாயத் திருமணம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு, தாலிக் கொடி தேவையில்லாத திருமண முறையொன்று. எம்மி டையே பெருவழக்காக முன்னாளில் இருந்த முறையொன்று விடைபெற்றுவிட்டது. 'சோறு என்ற உணவு திருமண ஒப்பந் தத்தை ஏற்படுத்தியதை'யே மேலே சொன்ன வாழ்வியல் வச னம் காட்டுகிறது. 'சோறு' உணவு மட்டுமல்ல. திருமணம் என்ற பெருவாழ்வின் உணர்வும் ஆகும்.

கற்றாளை எனும் செடியின் உள்ளீட்டையும் சோறு எனத் தான் அழைக்கின்றோம். அந்தச் சோறு வேறு வகை. மூன்று வேளை உணவு உண்பவர்களைப் பணக்காரராகப் பார்த்த ஒரு காலம் இருந்தது. பகல் முழுக்க வெயில் காய்ந்து உழைத்து இரவில் ஒரு நேரம் மட்டும் உணவு உண்ட கால மொன்றும் இருந்தது.

தேநீர் குடிக்கச் சீனி இல்லாது, உள்ளங்கையில் சொட்டுச் சீனி போட்டு அதை நக்கி நக்கித் தேனீர் குடித்த போது ஒருத்தருக்கும் வருத்தமுமில்லை. இப்போது சீனியை அள் ளிப் போட்டுத் தேநீர் குடிக்கும் போதும், மூன்று வேளையும் மூக்கு முட்டத் தின்னும் போதும் தான் உலகத்து வருத்த மெல்லாம் வருகிறது என்போரும் உண்டு.

இற்றைக்கு 50, 60 வருடங்களுக்கு முன்பதாக ஒடியல் பிட்டு அல்லது குரக்கன் பிட்டுச் சாப்பிட்டால் தான் ஒரு பிடிச் சோறு சாப்பிடக் கொடுப்பார்கள். மற்றும்படி சோற்றைக் காண்பது அரிது.

வசதியானோர் வீடுகளில் மங்கல நிகழ்வுகள் நடைபெறும் போது கட்டாயம் சோறு இருக்கும். அதனால் அந்த நிகழ்வு கள் எப்போது நடைபெறுமென இல்லாதோர் காத்திருந்தார் கள்.

'சோறு கண்ட இடம் சொர்க்கம், சோற்றுத் தவனம், ...' இப்ப டியாகச் சோறு தொடர்பாகப் பழமொழிகள் பல உண்டு. சோறு ஆசிய மக்களது வாழ்வில் தவிர்க்க முடியாத ஒரு பாகம். ஆசியக் கண்டத்தில் சோற்றை உணவாக உட்கொள் ளும் முறைகள் நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் வேறுபட்ட தாக இருக்கிறது.

சோற்றைத் தயாரிக்கும் முறைகளும் வேறுபட்டு உள்ளன. அதே போலச் சோற்றைத் தயாரிக்கும் அரிசிகளின் வகைக ளும் வேறுபட்டு உள்ளன.

குத்தரிசி, பச்சையரிசி, வெள்ளைப் பச்சையரிசி, சம்பா, பாஸ்மதி என இன்றைய பிரதான வகைகளாகச் சொல்ல லாம். அதே வேளையில் இந்த அரிசி வகைகளுக்குள் உப அரிசி வகைகளும் ஏராளம் இருக்கிறது.

இலங்கையில் பெரும்பான்மையானோருக்கு நாளாந்தம் மத்தி வேளை சோறு உண்ணாவிட்டால் அன்றையப் பொழு தில் ஏதோ ஒன்றைப் பறிகொடுத்த உணர்வு வரும்.

காலையில் பாற்சோறு, மதியம் சோறு கறி, இரவும் சுடச்சுட பச்சையரிசிச் சோறு எனச் சிங்கள மக்களில் மூன்று வேளை யில் சோறு உண்போர் பெரும்பான்மை. தமது வெற்றிகளை, மங்கல காரியங்களைப், பாரம்பரியங்களைக் கொண்டாடுவ தற்குப் பாற்சோறு கொடுப்பார்கள். கட்டியாக வெட்டிய பாற் சோற்றுடன் அருவல் ஒருவலாக இடித்த செத்தல் மிளகா யால் தயாரிக்கப்பட்ட கட்டைச் சம்பல் இருக்கும்.

தமிழர்களது கடைகளில் மதிய உணவு தயார் என்ற வசனம் அறிவித்தலாக இருக்கும். ஆனால் சிங்களவர்களது கடைக- ளில் 'பத்கமு' அதாவது சோறு உண்போம் என்ற வசனம் இருக்கும்.

சோற்றை அடையாளப்படுத்தித் தான் அவர்களது உணவுப் பண்பாடு இருக்கும்.

முஸ்லீம் மக்கள் பாரசீகம் வழிவந்த உணவுப் பண்பாட்டைப் பேணுகின்றனர். பிரியாணி என்ற அவர்களது உணவு பிரபல மானது. சோற்றை அடிப்படையாகக் கொண்டது. வகை வகையான அரிசி வகைகளில் சுவையாகச் சோறு சமைப்ப தில் அவர்கள் வல்லவர்கள்.

அவர்களது கடைகளில், வீடுகளில், மண்டபங்களில் நிகழும் மங்கல நிகழ்வுகளில் சோற்றை அடிப்படையாகக் கொண்ட மாமிச உணவுகளை விரும்பி உண்பார்கள்.

அங்கும் நெல்விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட மக் கள் மூன்று வேளையும் சோறு உண்பார்கள். பச்சை அரிசி உணவுப் பழக்கம் தான் கூடுதலாக உள்ளது. பச்சை அரி சிச் சோற்றைச் சுடச் சுடச் சாப்பிடும் போது அது தேவாமிர் தமாகத் தான் இருக்கும்.

ஒவ்வொரு நேரச் சோற்றுக்கும் சேர்த்துச் சாப்பிடும் கறி வகைகள், தாளிதம், சம்பல் என்பவை வேறுபட்டதாக இருக் கும்.

யாழ்ப்பாண மக்களின் சோற்றுப் பண்பாடு தனித்துவமானது. புழுங்கல் அரிசி அல்லது குத்தரிசி அல்லது நாடு என அழைக்கப்படும் அரிசிச் சோற்றையே பிரதானமாக உண்பார்கள். இவர்களது உணவுப் பழக்க வழக்கத்திற்கென்றே அரிசியைத் தனித்துவமாகத் தயார் செய்யும் அரிசி ஆலைகள் உண்டு.

வயலில் அறுவடை செய்து வந்த நெல்லைக் காய வைப்பார்கள். பின்னர் அதனைப் பெரிய பானை அல்லது உலையில் இட்டு நன்றாகக் கொதிக்க வைப்பார்கள். நன்கு கொதித்து அவிந்த நெல்லைச் சீமெந்துத் தரையில் அல்லது படங்கில் இட்டுப் பரவி வெய்யிலில் காய வைப்பார்கள்.

வெயிலில் நன்கு காய்ந்த பின்பாக மில்லில் கொடுத்து அல்லது உரலில் குத்தி உமி நீக்கி அரிசி ஆக்குவார்கள்.

இந்த அரிசியே குத்தரிசி அல்லது புழுங்கல் அரிசி எனப்படுகிறது. இதனைச் சமைத்துச் சாப்பிடும் பதத்திற்கு எடுப்பதற்கு நீண்ட நேரம் எடுக்கும். இந்தக் குத்தரிசியில் மொட்டைக் கறுப்பன், பச்சைப் பெருமாள் என்பவை முன்னாளில் பிரபலமானவை.

முன்னாளில் மண்பானையில் விறகு அடுப்பில் தான் சமைத்தார்கள். மதியம் சமைத்த சோற்றிலிருந்து வடித்த கஞ்சியைக் குடித்துப் பசி போக்கினார்கள். கஞ்சியுடன் சிறிது உப்பிட்டுச் சொட்டுத் தேங்காய்ப் பாலும் விட்டால் கஞ்சியின் சுவையோ சுவை தான்.

மண்பானையில் சோறு சமைக்கும் போது அந்தக் குடும்பத்தவர் மூன்று வேளையும் உண்பதற்கேற்ப அரிசியை எடுப்பார்கள். சுளகில் எடுத்த அரிசியில் இருந்து ஒரு பிடி எடுத்து மண்பானைக்குள் போட்டு சேமித்து வைப்பார்கள். அந்தப் பிடி அரிசி பின்னாளில் ஒரு நாள் சோற்றுக்கு அரிசியாகி விடும்.

மண்பானையில் சமைத்த சோற்றில் ஒரு பகுதியை மண்சட்டியில் சமைத்த கறிகளுடன் மதிய உணவாக உண்பார்கள். இரவில் மிகுதிச் சோற்றின் ஒரு பகுதியுடன் உண்பார்கள். குடும்பத்தவர் உண்ட பின் எஞ்சும் சோற்றினுள் அளவாகத் தண்ணீரை விட்ட பின்பாகப் பானையை உலைமூடியால் மூடி விடுவார்கள்.

அதிகாலை எழுந்து வாயைக் கொப்பளித்த பின்பாக ஒரு மூக்குப் பேணி பழஞ்சோற்றின் தண்ணீரைக் குடிப்பார்கள்.

மலச்சிக்கல் இல்லாமல் காலைக் கடன்களை முடிப்பார்கள். பழஞ்சோற்றை எடுத்துப் பழங்கறியுள்ள சட்டியில் போட்டு ஏனைய கறிகளையும் சேர்த்துக் குழைத்து உருண்டையாக்கி உண்பார்கள்.

அதன் சுவையோ சுவை. இந்தப் பழஞ்சோற்றுக் கதையையும் பழஞ்சோற்றுப் புராணத்தையும் புலம்பெயர் வாழ்வில் இரை மீட்டுவோர் இன்றும் உள்ளனர்.

குத்தரிசிச் சோறில் அண்மைக் காலத்தில் ஆட்டக்காரி எனும் வகை அரிசியும் பிரபலமாக உள்ளது. குத்தரிசிச் சோற்றை உண்பவர்களுக்குச் சலரோகம் எனப்படும் நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புக் குறைவு என மருத்துவம் கூறுகின்றது.

நாளாந்த அரிசிப் பாவனையில் குத்தரிசியின் பயன்பாட்டை விடச் சம்பா அரிசிச் சோற்றின் பயன்பாடு அதிகமாகி விட்டது. கணவன், மனைவி இருவரும் வேலைக்குச் செல்லும் வீடுகளில் காலை வேளையில் காலை, மதியம் என இருநேர உணவுச் சமையல்களும் நடைபெறுவது வழக்கம். குத்தரிசியைச் சமைக்க நீண்ட நேரம் பிடிக்கும். காஸ் அடுப்புச் சமையலில் நீண்ட நேரம் குத்தரிசி வேகுவதற்கு காஸ் செலவும் அதிகமாகும்.

இதனால் சம்பா அரிசிச் சோறே அதிகமாகப் புழக்கத்தில் உள்ளது.

சாதாரணமாகச் சோறு, கறியுடன் உணவு உண்டவர்கள் தற்போது புரியாணி என்றும் பிறைட் றைஸ் என்றும் உணவு உட்கொள்ளுகின்றனர்.

பணவசதி கூடியோர் தொகை அதிகரித்துச் செல்வதால் மாமிச உணவுடன் கூடிய இந்த உணவு வகைகள் அதிகமாகப் புழக்கத்தில் உள்ளன.

இப்போ சம்பா அரிசிச் சோறு அதிகமாகப் பாவனைக்கு வந்து விட்டதன் காரணத்தினால் தான் நீரிழிவு நோயாளர் தொகையும் அதிகரித்துள்ளதாகக் கூறுகின்றனர்.

போர்க்காலத்தில் இடம்பெயர் வாழ்வுக் காலத்தின் போதும், புலம்பெயர்வின் போதும் சோற்றைக் காணாமல் தவித்துப் போனவர்கள் உண்டு.

இடம்பெயர்வுக் காலத்தில் கிடைத்த நிவாரண அரிசிச் சோற்றுக் கதைகளின் சுவையும் நீளமானது. நிவாரண மட்டை வைத்து அதில் அரிசிக் கணக்கு எழுதிய வரலாறும் உண்டு. சோற்றுக்கு வழியில்லாமல் கஞ்சி காய்ச்சிப் பசி தணித்த நாள்களும் உண்டு.

கிராமியக் குலதெய்வ வழிபாட்டில் சோற்றுமடை வைத்தல் எனும் பண்பாட்டுப் பெருவிழாவும் இன்று வரை தொடர்கின்றது. அண்ணமார், பூதவராயர், காளி, தம்பிரான் போன்ற தெய்வங்களை வழிபடுவோர் இந்தச் சோற்றுமடை வழிபாட்டை இன்றும் தொடர்கின்றனர்.

தை மாத இறுதியில் மானாவாரி வயல் விளைந்து பலன் கிடைக்கும். கார்த்திகையில் நடுகை செய்யப்பட்ட மரக்கறிப் பயிர்கள் சித்திரையுடன் பயன் தந்து ஓயத் தொடங்கும். வைகாசி மாதம் பிறக்கமுதல் சனி அல்லது ஞாயிற்றுக்கிழமையில் சோற்றுமடை தொடங்கிவிடும். ஊர் கூடிக் கோயில் வளாகத்தைத் துப்பரவாக்குவார்கள். தமது விளைபொருள்களின் ஒரு பகுதியைக் கோயிலுக்கு அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.

சோறு கறி படைத்து ஊருக்கும் உண்ணக் கொடுத்துக் கொண்டாடுவார்கள்.

எங்கள் சோற்று வரலாற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம்.



thabendran.v@thaiveedu.com



லண்டன் 'விம்பம்' நடாத்தும்

# 'மலையகம் 200'

# சிறுகதை, ஓவியப் போட்டிகள்

VIMBAM
Estd: 2004

எழுத்து, ஓவியம் முதலான கலை ஆக்கங்களில் ஆர்வமுள்ள, இளைய தலைமுறையினரின் ஆக்கத் திறனையும், கலை ஆற்றலையும் ஊக்குவிப்பதற்கான போட்டி

சிறுகதைகளும் ஓவியங்களும் மலையகம் 200
கடந்து வந்த காலமும், காலூன்றி நிற்கும் நிலமும், நிலத்தில்

## 'வலியும் வாழ்வும்'

என்னும் கருப்பொருளை அணுகியதாக அமைதல் வேண்டும்.

**கவனத்திற்கு:**

- இலங்கைத் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் வசிக்கும் 45 வயதிற்கு உட்பட்டோர் மட்டும் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.
- தாளில் வரையப்பட்ட ஓவியங்களின் ஒளிப்பட நகல்கள் (Photo) அல்லது ஒளிவருடி நகல்கள் (Scanned copy) அனுப்பப்பட வேண்டும்.
எண்ணிம (digital) ஓவியங்கள் பங்கேற்க முடியாது.
- சிறுகதைகள், யூனிகோட் அல்லது பாமினி எழுத்துருக்களில் தட்டச்சுச் செய்யப்பட்டு, முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் தனியாக இணைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.
- ஆக்கங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி **31.08.2023**
- தேர்வாகும் சிறுகதைகள் நூலாக வெளியாகும்.

**பரிசுகள்**

★ முதற்பரிசு 50,000 ரூபாய் ★ இரண்டாம் பரிசு 30,000 ரூபாய்
★ மூன்றாம் பரிசு 20,000 ரூபாய்
10 போட்டியாளர்களுக்குத் தலா 10,000 ரூபாய் தெரிவுப் பரிசு
(சிறுகதை - ஓவியம் பிரிவுகளுக்கான தனித் தனியான பரிசுகள் வழங்கப்படும்)

**ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:**

மின்னஞ்சல்: malaiyagam200vimbam@gmail.com

தபால் முகவரி: S. Karunakaran, 754 Kanagarasa Lane, Thirunagar North, Kilinochchi, Sri Lanka.
Dr. R. Ramesh, Senior Lecturer, Department of Political Science, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.

அனுசரணை:
ஆதிரை வெளியீடு
தாய்வீடு

தொடர்புகளுக்கு:'விம்பம்' லண்டன்:
கே. கே. ராஜா- (+44) 7736 908 421
எஸ். சாந்தன்- (+44) 7883 573 337
பூங்கோதை (கலா ஸ்ரீரஞ்சன்) - (+44) 7305 844 169
இலங்கை: எஸ். கருணாகரன் - (+94) 77 087 1681

VIMBAM: An organization for the promotion of art, literature, film and culture




# சாட் ஜி.பி.ரி. (Chat GPT) என்றால் என்ன?

– சுப்ரமணியம் ஜெயசீலன்

நமக்கு தெரிந்தோ தெரியாமலோ வாழ்க்கையின் பல்வேறு விடயங்களில் ஓர் அங்கமாக செயற்கை நுண்ணறிவு மாறிக் கொண்டு வருகின்றது. நீங்கள் உங்களது அலைபேசியில் பேஸ் லொக்கை (Face lock) அன்லாக் செய்வதற்கும், அலெக்ஸாவிடம் (Alexa) பாடல் ஒன்றை இசைக்குமாறு அறிவுறுத்துவதற்கும் பின்னணியில் இந்த செயற்கை நுண்ண றிவே தொழிற்படுகின்றது. தற்பொழுது இந்த அடிப்படை தொழிநுட்ப சாதனங்களின் பயன்பாடுகளை விடவும் எம்மை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் பல்வேறு விடயங்களை செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் மேற்கொள்கின்றது. உங்களது கட்டளைக்கு அமைய மின்னஞ்சல் ஒன்றை எழுதவோ, கட் டுரை ஒன்றை எழுதவோ, விற்பனை சந்தைப்படுத்தல் பற் றிய தரவுகளை ஆய்வு செய்து முன்னிலைப்படுத்தவோ ஏன் பரீட்சை ஒன்றில் தோற்றி பதிலளிக்கவோ இந்த செயற்கை நுண்ணறிவினால் முடிகின்றது என்றால் நம்ப முடிகின்றதா? உண்மையில் கற்பனையில் கூட நினைத்துப் பார்க்க முடி யாத ஆற்றல் வெளிப்பாடுகளையும், அறிவுத் திறன்களை யும் இந்த செயற்கை நுண்ணறிவு துல்லியமாக வெளிப்படுத் தும் பாங்கு மெய்சிலிர்க்கச் செய்கின்றது. இணையத்தில் சஞ்சரிக்கும் போது பல்வேறு சாட்டிங் செயலிகளை நீங்கள் பார்த்திருப்பீர்கள், இயந்திரமொன்று அல்லது ரோபோ ஒன்று உங்களுடன் ஊடாடுவதை நீங்கள் கவனித்திருக்கின்றீர் களா? சில இணைய தளங்களுக்கு பிரவேசிக்கும் போது தானியங்கி அடிப்படையில் சாட்டிங் செய்யப்படும். அவை வெறுமனே குறிப்பிட்ட ஓர் வரையறைக்கு உட்பட்ட வாடிக் கையாளர் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் ஊடாடக்கூடிய செயலிகளாகும். அந்த வகையில் உலகில் தற்பொழுது அதிகளவில் பேசப்பட்டு வரும் சாட் ஜி.பி.ரி. (ChatGPT) என்னும் செயற்கை நுண்ணறிவு சாட்டிங் செயலி தொடர்பில் சில விடயங்களை பகிர்ந்து கொள்ளும் ஓர் சிறிய எத்தனிப்பே இந்த பத்தியாகும்.

## சாட் ஜி.பி.ரி. (ChatGPT):

சாட் ஜி.பி.ரி. என்பது ஒரு மொழி செய்நிரல் செயலி அல் லது இயற்கை மொழி முறைமையாக்கம் என அடையாளப்ப டுத்த முடியும், மனிதர்கள் பயன்படுத்தும் மொழியை கணி னிக்கு புரியச் செய்யும் ஓர் நுட்பமாகும். செயற்கை நுண்ண றிவு தொழில் நுட்பத்தை பயன்படுத்தி உரையாடல்களை மேற்கொள்ளக்கூடிய ஓர் செயலியாகும். மனிதர்களைப் போன்று உரையாடி உதவிகளை வழங்கக்கூடிய ஓர் செயலி ஆகும். இந்த சாட் ஜி.பி.ரி. என்னும் செயலி ஊடாக நீங்கள் பல்வேறு விடயங்களை செய்து கொள்ள முடிகிறது. உதார ணமாக மின்னஞ்சல் ஒன்றை அனுப்புதல், கட்டுரை ஒன்றை எழுதுதல் அல்லது கணினி மென்பொருள் ஒன்றிற்கான குறி யாக்கம் எழுதுதல் போன்றவற்றை இந்த சாட் ஜி.பி.ரி. மூலம் செய்து முடிக்கலாம்.

சாட் ஜி.பி.ரி. செயலி தற்பொழுது இலவசமாக பரீட்சார்த்த அடிப்படையில் மக்கள் பயன்பாட்டுக்காக புழக்கத்தில் விடப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்தப்பட்ட ஓர் புதிய பதிப்பு கடந்த பிப்ரவரி மாதம் அறிமுகம் செய்யப்பட்டது.

## சாட் ஜி.பி.ரி.யை யார் உருவாக்கியது?

சாட் ஜி.பி.ரி. என்னும் செயலி ஓபன் ஏஐ என்னும் ஆய்வு நிறுவனத்தினால் கடந்த 2022-ம் ஆண்டு நவம்பர் மாதம் 30-ஆம் திகதி அறிமுகம் செய்யப்பட்டது. ஓபன் ஏஐ என்னும் நிறுவனம் ஏற்கனவே பிரபலமான செயற்கை நுண்ணறிவுடன் கூடிய ஓவியம் அல்லது படங்களை உருவாக்கும் செயலி (AI art generator) ஒன்றை அறிமுகம் செய்திருந்தது. மேலும் விஸ்பர் (Whisper) எனும் தானியங்கி அடிப்படையில் பேசுவ தனை அடையாளம் காணக்கூடிய ஓர் செயலியையும் அறிமு கம் செய்திருந்தது. ஓபன் ஏஐ நிறுவனமே சாட் ஜி.பி.ரி. செய லியை உருவாக்கியுள்ளது.

சாட் ஜி.பி.ரி. மிகவும் சிறந்த முறையில் தொழிற்பட்டு வரு கின்றது. மிகவும் சிறந்த வலுவான செயற்கை நுண்ணறிவு கட்டமைப்பு ஒன்றை உருவாக்கும் காலம் வெகு தொலை வில் இல்லை என பிரபல செல்வந்தரும் டுவிட்டர் நிறுவன உரிமையாளருமான எலன் மஸ்க் தெரிவித்திருந்தார். ஓபன் ஏஐ நிறுவனத்தின் ஓர் ஸ்தாபக உறுப்பினராகவும் மஸ்க் கட மையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டு ஐந்து நாட்களில் ஒரு மில்லியன் பயனர்கள் இதனை பயன்படுத்தியதாக நிறுவனத் தின் பிரதானி சேம் அல்ட்மேன் (Sam Altman) தெரிவிக்கின் றார். சுவிட்சர்லாந்தின் யுபிஎஸ் (UBS) வங்கியின் ஆய்வு மூலம் சாட் ஜி.பி.ரி. செயலி உலகில் மிக வேகமாக

வளர்ச்சி அடைந்து வரும் செயலியாக அடையாளப்படுத் தப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் அளவில் 100 மில்லியன் பய னர்கள் இதனை பயன்படுத்த தொடங்கியுள்ளனர். அறிமுகம் செய்யப்பட்டு இரண்டு மாத காலத்தில் இவ்வாறு பாரிய அளவில் பயனர்கள் இதனை பயன்படுத்த தொடங்கியுள்ள னர்.

## சாட் ஜி.பி.ரி.யை எவ்வாறு பயன்படுத்துவது?

சாட் ஜி.பி.ரி ஓபன் ஏஐ டாட் காம் (chat.openai.com/chat) என்னும் இணைய முகவரிக்குள் பிரவேசித்து ஓர் கணக் கினை (Account) உருவாக்குவதன் மூலம் இலகுவில் இந்த செயலியை பயன்படுத்த முடியும்.

## இந்த செயலியை பயன்படுத்துவதற்கு எவ் வளவு செலவாகும்?

சாட் ஜி.பி.ரி. செயலி முற்றுமுழுதாக தற்பொழுது இலவச மாக பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது. உங்களுடைய பணி கட்டுரை எழுதுதல் ஆகவோ அல்லது குறியாக்கம் (Coding) எழுதுவதாகவோ அல்லது வேறு தேவையாக இருந்தாலும் அதற்காக கட்டணங்கள் அறவீடு செய்யப்ப டாது. இந்த செயலியின் மேம்படுத்தப்பட்ட பதிப்பு ஒன்றில் சந்தாதாரராக கட்டணம் செலுத்தியும் இணைந்து கொள்ள முடியும். மாதம் ஒன்றுக்கு 20 அமெரிக்க டொலர்களை கட்ட ணமாக செலுத்தி (இந்த தொகை மாறுபடக்கூடியது) வேக மாகவும், கூடுதல் இடத்தை ஒதுக்கியும் இந்த செயலியை பயன்படுத்த முடியும். இலவசமாக வழங்கப்படுகின்ற செயலி யின் ஊடாகவும் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள முடிகிறது. அதிக எண்ணிக்கையிலான பயனர்கள் இந்த செயலியை பயன்படுத்துவதனால் சில சமயங்களில் தாமத நிலை உருவாகும் என தெரிவிக்கப்படுகிறது.

## சாட் ஜி.பி.ரி. செயலியை மக்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றனர்?

இந்த செயலியில் பல்வேறு விடயங்கள் காணப்படுகின்றன. சிறிய கேள்விகளுக்கு பதிலளித்தல், கட்டுரைகளை எழுது தல், ஓவியங்கள் பற்றிய தகவல்களை துல்லியமாக வழங்கி செயற்கை நுண்ணறிவு சித்திரங்களை கீறுதல், தத்துவார்த்த ஊடாடுதல்களை மேற்கொள்ளுதல், குறியாக்கம் எழுதுதல் உள்ளிட்ட பல்வேறு தேவைகளை இந்த சாட் ஜி.பி.ரி. செயலி செம்மைப்படச் செய்கின்றது.

வீட்டுக்கு தேவையான மளிகை பொருட்களை பட்டியலிடுதல் முதல் அன்றாட வாழ்க்கையில் நமக்கு தேவையான பல் வேறு கருமங்களை கிரமமான முறையில் மேற்கொள்வதற் கும் வினைத்திறனாக அவற்றை செய்து முடிப்பதற்கும் இந்த சாட் ஜி.பி.ரி. உதவுகின்றது. வரையறையற்ற வகையில் பல் வேறு தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடிகின்றது.

- கட்டுரை எழுதுதல்
- செயலி ஒன்றை உருவாக்குதல்
- குறியாக்கம் (Coding) எழுதுதல்
- உங்களுடைய சுயவிபரக் கோவை உருவாக்குதல்
- எக்ஸலில் (Excel) ஓர் சூத்திரத்தை (Formula) எழுதுதல்
- ஓர் உள்ளடக்கத்தை சாராம்சப்படுத்துதல்
- கடிதம் ஒன்றை எழுதுதல்

என சாட் ஜி.பி.ரி.யின் மூலம் பெற்றுக்கொள்ளக் கூடிய நன் மைகளை வரிசைப்படுத்திக் கொண்டே போக முடியும்.

## சாட் ஜி.பி.ரி. எவ்வாறு செயற்படுகின்றது:

ஓபன் ஏஐ நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட மொழி கட்ட மைப்பு செயற்கை நுண்ணறிவு திறன் ஊடாக இந்த செயலி தொழிற்படுகின்றது. ஜெனரேட்டிவ் பிரீ ட்ரெயின் (Generative Pre-trained Transformer (GPT) என இந்த தொழிநுட்பம் அழைக்கப்படுகிறது. நரம்பியல் வலைப்பின்னல்களின் ஊடாக புதிய மற்றும் அசல் தரவுகளை அடையாளம் கண்டு புதிய தகவல்களை வெளியிடக்கூடிய வகையில் இந்த தொழில் நுட்பம் அமையப் பெற்றுள்ளது.

இணையம், இணைய தளங்கள், செய்தி, கட்டுரைகள், நூல் கள் உள்ளிட்ட பல்வேறு மூலங்களின் ஊடாக ஜெனரேட்டிவ் செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் நன்கு பயிற்றப்படுகின் றன. மனித செயற்கை நுண்ணறிவு பயிற்சியாளர்களினால் மேலதிக பயிற்சிகள் வழங்கப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு வழிகளில் உரையாடல்களை மேற்கொள்தற்கும் பதில்களை வழங்குவதற்கும் தீவிர பயிற்சி வழங்கப்படுகின்றது. மனிதர்க ளின் பின்னூட்டல்களின் அடிப்படையில் பயிற்சி அளிக்கப்ப டுவதுடன், இந்த பயிற்சிகளின் அடிப்படையில் இந்த சாட் ஜி.பி.ரி. நாம் கேட்கும் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றது.

## சாட் ஜி.பி.ரி-க்கும் தேடுபொறி (search engine) ஒன்றுக்கும் இடையிலான வேறுபாடு என்ன?

சாட் ஜி.பி.ரி. பயனருடன் நேரடியாக தொடர்பு கொண்டு அவருக்கு தேவையான உதவிகளை செய்யக்கூடிய ஒரு செயலியாகும். தேடுபொறிகள் ஓர் இணையத்தில் ஏதாவது ஒரு விடயத்தை தேடிக் கொள்வதற்கு அது சார்பாக அந்த தலைப்பு குறித்த இணைய தளங்களை பட்டியலிடும் தொழிற்பாட்டை மேற்கொள்கின்றது. சாட் ஜி.பி.ரி-யினால் இணைய தகவல்களை தேடும் திறன் கிடையாது. ஏற்கனவே பயிற்றப்பட்ட, கற்றுக்கொண்ட தகவல்களின் அடிப்படையில் சாட் ஜி.பி.ரி. பதில் அளிக்கின்றது. இதில் சில சமயங்களில் பிழைகளும் நிகழக்கூடும், சாட் ஜி.பி.ரி. 2021-ம் ஆண்டு வரையிலான தகவல்களை மட்டுமே கொண்டுள்ளது. எனி னும் கூகுள் போன்ற தேடு பொறிகள் அதி நவீன இற்றைப் படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாக காணப்படு கின்றது. உதாரணமாக 2022-ம் ஆண்டு உலக கிண்ணத்தை யார் வென்றார்கள் என்ற கேள்வியை நீங்கள் கேட்டால் சாட் ஜி.பி.ரி-யினால் பதில் அளிக்க முடியாது. எனினும் கூகுள் அதற்கான சரியான விடையை அளிக்கும்.

## சாட் ஜி.பி.ரி-யின் வரையறைகள் என்ன?

இந்த செயலி மிகவும் காத்திரமான ஒன்றாக தென்பட்டாலும் இதிலும் சில வரையறைகள் காணப்படுகின்றன. பயனர் கேள்வி எழுப்பும் விதத்தில் ஏதேனும் மாறுதல்கள் காணப்பட்டால் சாட் ஜி.பி.ரி-யினால் அதற்கு பதில் அளிக்க முடியாது. சில கேள்விகளுக்கான பதில் தரமானதாக அமையப் பெறுவதில்லை. சில கேள்விகளுக்கான பதில்கள் நடைமுறை சாத்தியத்துடன் காணப்படுவதில்லை. கேள்வியை தெளிவுபடுத்திக் கொள்வதற்கு மாறாக ஊகங்களின் அடிப்படையில் சில சந்தர்ப்பங்களில் பதிலளித்து விடுகின்றது. இந்த பதில்கவானவை பொருத்தமற்ற பதில்களாகவும் மாறக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

சாட் ஜி.பி.ரி-யின் அதிக அளவு பதில்கள் பிழையானதாக காணப்படுவதாக சில தரப்பினர் விமர்சனங்களை முன்வைக்கின்றனர். குழப்பமான கேள்விகளுக்கு சரியான பதில்களாக சொற்களை கோர்வையாக உருவாக்கி அதற்கு புள்ளி விபரவியல் தகவல்களை வழங்குவதற்கு முடிந்த போதிலும் சில சந்தர்ப்பங்களில் அர்த்தபூர்வமான துல்லியமான விடைகளை அளிப்பதற்கு தவறி விடுவதாக தெரிவிக்கப்படுகிறது.

## சாட் ஜி.பி.ரி-யை நான் தொடர்பு கொள்ள முடியுமா?

சிலர் இந்த செயலியை நுட்பமான பல்வேறு தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர். உதாரணமாக குறியாக்கம் (Code) ஒன்றை எழுதுவது, தீங்கிழைக்கும் மென்பொருள் ஒன்றை எழுதுவது போன்ற பல்வேறு விடயங்களுக்கு இதை பயன்படுத்த முனைகின்றனர். எனினும் ஒரு நட்பு ரீதியான ஊடாடலை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட விடயங்களுக்காகவும் இதனை பயன்படுத்தலாம். 'நான் பசியாக இருக்கின்றேன் என்ன உணவை நான் உட்கொள்ள வேண்டும்' என்பது முதல் 'மரணத்தின் பின்னரான வாழ்க்கை எவ்வாறு இருக்கும்' என்பது போன்று பல்வேறு கேள்விகளுக்கு சாட் ஜி.பி.ரி. பதில் அளிக்கும்.

## சாட் ஜி.பி.ரி தொடர்பில் ஏன் சிலர் கவலை கொண்டுள்ளனர்?

இந்த செயலியானது மனிதர்களின் நுண்ணறிவை சவாலுக்கு உட்படுத்தும் எனவும் மனிதர்களின் தேவையை குறைக்கும் எனவும் சிலர் வருத்தம் வெளியிட்டுள்ளனர். உதாரணமாக எந்த ஒரு தலைப்பு தொடர்பிலும் காத்திரமான கட்டுரை ஒன்றை சாட் ஜி.பி.ரி-யினால் இலகுவில் எழுத முடிகின்றது. இதன் மூலம் மனித எழுத்தாளர் ஒருவரின் தேவை நிராகரிக்கப்படுகின்றது, சாட் பாட்டினால் (chatbot) ஒட்டுமொத்த கட்டுரை ஒன்றை சில நொடிகளில் எழுதி முடிக்க முடிகிறது. இவ்வாறான நடவடிக்கைகளின் மூலம் மாணவர்கள் கல்வி கற்காமலே ஏமாற்றக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகும். இதனால் மாணவர்கள் சரியான முறையில் கற்பதற்கு தடை ஏற்படலாம். இதன் காரணமாக சில நாடுகளின் பாடசாலை நிர்வாகங்கள் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கு தடை விதித்துள்ளன. மேலும் சாட் ஜி.பி.ரி. போன்ற செயலிகளின் ஊடாக பிழையான தகவல்கள் பகிரப்படக்கூடிய சாத்தியம் அதிகமாக காணப்படுகிறது. இந்த ரோபோவானது இணையத்துடன் தொடர்புபடாத காரணத்தினால் பிழையான தகவல்களை பகிரவும் பிழையான விபரங்களை வெளியிடவும் கூடிய சாத்தியங்களை மறுப்பதற்கு இல்லை. நான் வெளியிடும் தகவல்கள் அல்லது நான் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் துல்லியமாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை எனவும், எந்த நேரத்திலும் நான் வெளியிடும் தகவல்களை சரி பார்த்துக்கொள்வது அத்தியாவசியமானது எனவும் சாட் பாட் ரோபோ தெரிவிக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் ஓபன் ஏஐ அல்லது சாட் ஜி.பி.ரி. சரியான தகவல்களை போன்று தோன்றக்கூடிய பிழையான தகவல்களை வழங்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

## சாட் ஜி.பி.ரி-யினால் எழுதப்பட்ட தகவல்களா என்பதனை கண்டறியக்கூடிய தொழில்நுட்பங்கள் உண்டா?

மாணவர்கள் இந்த செயலியை பயன்படுத்தி மோசடிகளில் ஈடுபடக்கூடிய சாத்தியங்கள் காணப்படுவதனால் சாட் ஜி.பி.ரி. டெக்ஸ்ட் டிடெக்டர்கள் (text detector) மிகவும் அவசியமானவையாக கருதப்படுகின்றது. ஓபன் ஏஐ நிறுவனம் செயற்கை நுண்ணறிவு ஆய்வு நிறுவனம் ஒன்றுடன் இணைந்து ஓர் இலவச செயலியொன்றை அறிமுகம் செய்திருந்தது. இதற்கு ஓப்பன் ஏஐ கிளாசிபயர் (OpenAI's 'classifier') என பெயரிடப்பட்டுள்ளது. இந்த செயலியினால் சாட் ஜி.பி.ரி-யினால் எழுதப்பட்ட 24 விதமான விடயங்களை மட்டுமே அடையாளம் காண முடிந்துள்ளது. மேலும் மனிதர்கள் எழுதிய சில ஆக்கங்களை கூட இந்த செயலி செயற்கை நுண்ணறிவுடன் கூடிய படைப்பாக அடையாளப்படுத்தி விடுகின்றது. சந்தையில் வேறும் செயற்கை நுண்ணறிவு டிடெக்டர்கள் காணப்படுகின்றன. சாட் ஜி.பி.ரி. அவுட்புட் டிடெக்டர் (GPT-2 Output Detector) ரைட்டர் ஏஐ கன்டென்ட் டிடெக்டர் (Writer AI Content Detector,) கண்டனர் ஸ்கேல் ஏஐ கன்டென்ட் டிடெக்ஸன் (Content at Scale AI Content Detection) போன்று பல்வேறு செயலிகள் காணப்பட்ட போதிலும் இவை மிகத் துல்லியமான தகவல்களை வழங்கக் கூடியவை அல்ல. அநேகமான சந்தர்ப்பங்களில் இந்த செயலிகள் பிழையான தகவல்களை வழங்குகின்றன. எவ்வாறெனினும் சாட் ஜி.பி.ரி-யினால் எழுதப்பட்டவை மனிதர்களினால் எழுதப்பட்டவை அல்ல என்பதை கண்டறிந்து கொள்வதற்கு அவற்றின் எழுத்து நடையை நுணுக்கமாக அவதானிப்பதன் ஊடாக கண்டறிந்து கொள்ள முடியும். இந்த சாட் ஜி.பி.ரி. செயலியின் எழுத்து நடையானது மிகவும் பவ்யமான அடிப்படையில் காணப்படுகின்றது, எழுத்து நடையில் வழமைக்கு மாறான தொனி தென்படுவதனால் இந்த ஆக்கம் செயற்கை நுண்ணறிவினை கொண்டு உருவாக்கப்பட்டதா அல்லது மனிதர்களினால் எழுதப்பட்டதா என்பதை கண்டறிந்து

கொள்ள முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

## சாட் ஜி.பி.ரி நன்மை ஏற்படுத்தக் கூடியதா அல்லது தீமை ஏற்படுத்தக் கூடியதா?

சாட் ஜி.பி.ரி-யானது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பல வேறு வழிகளில் உதவிகளை வழங்கக்கூடிய அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் ஒன்றை எழுதுதல், கட்டுரை ஒன்றை வரைதல் உள்ளிட்ட தேவைகளுக்கு இதனை பயன்படுத்திக் கொள்ள முடியும். எனினும் சில தொழில்நுட்ப ரீதியான விபரங்களை நுணுக்கமாக துல்லியமாக ஆராய்வதன் ஊடாக இந்த செயலியின் ஊடாக வெளிப்படக்கூடிய பிழைகளை கண்டறிவதற்கும் அவை பிழையான தகவல்கள் வெளியிடப்படுவதனை கட்டுப்படுத்தவும் மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு மற்றும் இயந்திரக் கற்றல் மாதிரிகளில் அதிக அளவான பயிற்சி மற்றும் நேர்த்தியான செம்மைப்படுத்தல்கள் மூலம் இதன் திறனை விருத்தி செய்து கொள்ள முடியும் என செயலியை உருவாக்கியவர்கள் தெரிவிக்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவு இந்த உலகத்தை ஆக்கிரமிக்குமா? இதுவரையில் அவ்வாறு இல்லை. மனிதர்கள் சிந்திக்கும் முறையில் மனிதர்களை போன்று புத்தி கூர்மையுடைய செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வெகு தொலைவில் இல்லை என ஓபன் ஏஐ நிறுவனத்தின் பிரதானி ஆல்ட்மேன் தெரிவிக்கின்றார். செயற்கை நுண்ணறிவு ஆபத்தான திசை நோக்கி நகர்வதாக அண்மையில் அலன் மாஸ்க் தெரிவித்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் அல்ட்மேன் இதனைக் குறிப்பிட்டிருந்தார். எதிர்வரும் காலங்களில் செயற்கை நுண்ணறிவுத் துறை வலுப்பெற வலுப்பெற அதன் ஊடான ஆபத்துகளும் அதிகரிக்கும் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகள் பயனர்களுக்கு தேவையான வகையில் செயல்பட வேண்டுமா அல்லது அதனை உருவாக்கியவர்களின் தேவைக்கு ஏற்ற வகையில் செயல்பட வேண்டுமா என்பது தொடர்பில் தற்பொழுது தீவிரமான வாதப் பிரதிவாதங்கள் இடம் பெற்று வருகின்றன.

## சாட் ஜி.பி.ரி 4 என்றால் என்ன?

இது ஒரு அதி நவீன ஓபன் ஏஐ (Open AI) நிறுவனத்தினுடைய ஓர் சேட்டிங் செயலியாகும். இதற்கு முன்னர் காணப்பட்ட ஜி.பி.ரி. 3.5 என்னும் செயலியை விடவும் மேம்படுத்தப்பட்ட அடிப்படையில் இந்த செயலி தொழிற்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஜி.பி.ரி 4 எழுத்துக்களையும் படங்களையும் உள்ளீடு செய்து அவற்றின் ஊடாக தகவல்களை பெற்றுக் கொள்ளவும் செயல்முறைகளை மேம்படுத்தவும் முடிவதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் ஓர் வார்க்சீட் (worksheets), வரைபுகள் (graphs) அல்லது வரைபடங்கள் (charts) ஒன்றை உள்ளீடு செய்து அவற்றை ஆய்வுக்கு உட்படுத்த முடியும். தற்பொழுது சாட் ஜி.பி.ரி 4 எழுத்துக்களை உள்ளீடு செய்யக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மாதம் ஒன்றிற்கு 20 டொலர்களை சந்தாவாக செலுத்துவதன் மூலம் மேம்பட்ட வசதிகளை பெற்றுக்கொள்ள முடியும். அனேகமான பயனர்கள் சாட் ஜி.பி.ரி-யின் இலவச செயலியை பயன்படுத்தி வருகின்றனர்.

## சாட் ஜி.பி.ரி செயலிக்கு மாற்று செயலிகள் காணப்படுகின்றனவா?

சாட் ஜி.பி.ரி என்பது ஒரு சாட் போர்ட் செயலியாகும். தற்பொழுது இந்த செயலி மிக அதிகளவில் பேசப்பட்டு வருகின்றது. எனினும் இதனை விடவும் உங்களது தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வேறு மேம்படுத்தப்பட்ட சாட் போர்ட்கள் காணப்படுகின்றன.

சாட் ஜி.பி.ரி-யில் பல்வேறு மேம்படுத்தப்பட்ட சேவைகள் காணப்பட்டாலும் பிரதானமான ஓர் பின்னடைவாக அதன் இலவச பதிப்பில் காணப்படும் கொள்ளளவினை (ஒரே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பயனர்கள் பயன்படுத்தும் ஏற்படும் நெருக்கடி) குறிப்பிட முடியும். சாட் ஜி.பி.ரி-ஐ போலவே பிங் சாட், யூசாட், ஜஸ்பர், சாட்சொனிக் (Bing Chat, YouChat, Jasper, Chatsonic) என மேலும் பல காணப்படுகின்றன.

## சாட் ஜி.பி.ரி செயலி திறன் மதிப்பீடு (benchmark) பரீட்சைகளை வெல்லக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதா?

ஆம். சாட் ஜி.பி.ரி செயலியானது ஒரு தொடர் திறன் மதிப்பீட்டு பரீட்சைகளை வென்றெடுக்க கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பென்சில்வேனிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர் சாட் ஜி.பி.ரி பரீட்சையில் தோற்றி சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றார். பரீட்சையில் வெறுமனே சித்தி அடையாது சிறந்த பெறுபேறுகளை பெற்றுக் கொண்டுள்ளதாக பேராசிரியர் கிறிஸ்டியன் டெர்விஸ் (Christian Terwiesch) தெரிவிக ்கின்றார்.

அடிப்படை செயற்பாட்டு முகாமைத்துவம், செயற்பாட்டு ஆய்வு, கேள்விகள், விளக்கங்கள் போன்றவற்றில சாட் ஜி.பி.ரி. அளித்த பதில் திருப்தி அளிக்கும் வகையில் காணப்பட்டதாக தெரிவிக்கின்றார்.

ஓபன் ஏஐ நிறுவனமும் இந்த சேட் போட்டின் திறனை கண்டறிவதற்காக பரீட்சையை நடத்தியது. பல்வேறு பரீட்சைகளில் தோற்றி புள்ளிகளை பெற்றுக் கொண்டாலும் இவற்றின் அனேகமானவற்றில் குறைந்த அளவு புள்ளிகளை பெற்றுக் கொண்டுள்ளது. எனினும் சாட் ஜி.பி.ரி, சாட் ஜி.பி.ரி 4 ஆகியவற்றினால் சிறந்த பரீட்சை பெறுபேறுகள் பெற்றுக்கொள்ள முடியும்.

உதாரணமாக சாட் ஜி.பி.ரி 3.5 பதிப்பினால் பரீட்சை ஒன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பெண்களை விடவும் சாட் ஜி.பி.ரி 4 பதிப்பு கூடுதல் மதிப்பெண்களை பெற்றுக் கொண்டுள்ளது.

## சாட் ஜி.பி.ரி-யை பயன்படுத்தி வேலைக்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்து கொள்ள முடியுமா?

ஆம். வேலை வாய்ப்புகளை தேடுவது சற்று சிரமமானதாக இருந்தாலும் சாட் ஜி.பி.ரி ஊடாக நாங்கள் அந்தப் பணியை இலகுவில் திறம்பட செய்து முடிக்க முடியும். உங்களுக்கான சுமையைக் குறைத்து உங்களுக்கான சுயவிபரக் கோவையை உருவாக்கி கவர் லெட்டர் ஒன்றை உருவாக்கும் ஆற்றல் சாட் ஜி.பி.ரி-க்கு உண்டு. பிரத்தியேக வடிவமைப்பில் விண்ணப்பங்கள் காணப்பட்டால் உங்களுடைய கடிதத்திற்கு மேலதிகமாக உங்களைப் பற்றிய விபரங்கள், அல்லது தனியாள் கூற்றுக்கள் ஊடாக உங்களது விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்கு உதவுகின்றது.

## சாட் ஜி.பி.ரி. சமூக ஊடகங்களில் வலம் வருகின்றதா?

சாட் ஜி.பி.ரி. கடந்த பெப்ரவரி மாதம் 7-ம் திகதி ஸ்னெப் சாட் (Snapchat) சமூக ஊடகம் வாயிலாக முதல் தடவையாக சமூக ஊடகங்களில் வலம்வர தொடங்கியது. ஸ்னெப் சாட் செயலிக்குள் சாட் ஜி.பி.ரி-யை பயன்படுத்தி சாட்டிங் செய்ய முடியும். இந்த அம்சத்திற்கு 'My AI' என பெயரிடப்பட்டுள்ளது. அரசியல், வன்முறைகள் மற்றும் கல்வி கட்டுரைகள் போன்றவற்றை எழுதுவதை தவிர்த்தல் உள்ளிட்ட சில வரையறைகளுடன் இந்த செயலி தொழிற்படுகின்றது.

## மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் பங்களிப்பு என்ன?

ஓப்பன் ஏஐ நிறுவனத்தின் ஆரம்ப முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றாக மைக்ரோசாப்ட் நிறுவனம் காணப்பட்டது. செயற்கை நுண்ணறிவு குறித்த ஆய்வு முயற்சிகளில் இந்த நிறுவனம் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த 2019-ம் ஆண்டு மைக்ரோசாப்ட் நிறுவனம் ஓபன் ஏஐ நிறுவனத்தில் ஒரு பில்லியன் டாலர்களை முதலீடு செய்தது. பின்னர் அந்தத் தொகை இரண்டு பில்லியனாக அதிகரிக்கப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் ஓப்பன் ஏஐ நிறுவனத்துடனான தொடர்பை மேலும் வலுப்படுத்திக் கொண்டது. மைக்ரோசாப்ட் நிறுவனம் மேலும் ஒரு தொகை பணத்தை முதலீடு செய்த போதிலும் அந்தத் தொகை எவ்வளவு என்பது குறித்து இரண்டு நிறுவனங்களும் தகவல்களை வெளியிடவில்லை. எவ்வாறெனினும் பத்து பில்லியன் டாலர்கள் வரையில் பணம் முதலீடு செய்யப்பட்டிருக்கலாம் என பிரபல நிறுவனமான ப்ளூம்பெர்க் ஊடக நிறுவனம் தெரிவித்துள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தேடு பொறியான பிங் தேடுபொறியை மேம்படுத்துவதற்கு ஒபன் ஏஐ நிறுவனத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட்டது.

## Google பார்ட் என்றால் என்ன? அதை எவ்வாறு சேட் ஜி.பி.ரி-யுடன் ஒப்பீடு செய்ய முடியும்?

பார்ட் என்பது கூகுள் (google) நிறுவனத்தின் ஒரு செயற்கை நுண்ணறிவு சாட்டிங் சேவையாகும். சாட் ஜி.பி.ரி. நிறுவனத்திற்கு போட்டியாக இந்த சேவை உருவாக்கப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் 6-ம் திகதி கூகுள் நிறுவனம் பரீட்சார்த்த அடிப்படையில் செயற்கை நுண்ணறிவு சாட் சேவை ஒன்றை ஆரம்பித்தது. ஒரு மாத கால இடைவெளியில் கூகுள் நிறுவனம் பார்ட் (Bard) என்னும் பெயரில் google நிறுவனத்தின் இலகு ரக மொழி மாதிரி ஒன்றின் அடிப்படையில் இந்த செயற்கை நுண்ணறிவு செயலி தொழிற்படுகிறது. பார்ட் இணையத்தில் உள்ள தகவல்களையும் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அறிமுகம் செய்யப்பட்ட போது ஜேம்ஸ் வெப் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பார்ட் சரியான பதிலை அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இணைய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலைமை இங்கு கிடையாது, சாட் ஜி.பி.ரி-யில் இணைய வசதி இல்லை, என்ற போதிலும் google பார்ட் செயலியை விடவும் சாட் ஜி.பி.ரி-யில் கேள்விகளுக்கான பதில்கள் அளிக்கும் திறன் அதிக அளவில் காணப்படுவதாகவும் வேகமாக பதிலளிக்க கூடிய ஒரு கட்டமைப்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

உதாரணமாக google பார்ட் அமெரிக்காவின் அனைத்து ஜனாதிபதிகளையும் பெயரிடுமாறு கேள்வி எழுப்பினால் அதற்கு பார்டினால் பதில் அளிக்க முடியவில்லை. சில குறியாக்கம் (Coding) குறித்த கேள்விகளுக்கும் துல்லியமான பதில்களை அளிக்க முடியவில்லை.

சாட் ஜி.பி.ரி-யைக் கொண்டு பல்வேறு சிக்கலான கருமங்களை சில நொடிகளில் செய்து முடிக்கக்கூடிய அசாத்திய வசதிகள் காணப்படுகின்றன.

உதாரணமாக கணினி மென்பொருள் ஒன்றை உருவாக்க வேண்டுமா?, நாடகப் பிரதி ஒன்றை எழுத வேண்டுமா, உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுத வேணடுமா?, கணினி கேம் ஒன்றை உருவாக்க வேண்டுமா? சந்தை ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டுமா? கவிதை ஒன்றை எழுத வேண்டுமா? இவ்வாறான பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வசதி சாட் ஜி.பி.ரி. என்னும் சாட்டிங் செயலியில் காணப்படுகின்றது. மனிதரின் தொழில்நுட்ப ரீதியான வளர்ச்சிப் படிகளின் அசுர வேகத்தை மீண்டும் மீண்டும் பறைசாற்றும் வகையில் இந்த சாட் ஜி.பி.ரி. செயலி அமைந்துள்ளது.

எனினும் மனிதரின் அறிவாற்றலை சவாலுக்கு உட்படுத்தும் வகையிலும் மனித வளத்தை மலினப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ள இந்த செயலியானது, வளர்ச்சியும் முதிர்ச்சியும் அடையும் போது அது பல்வேறு சமூக பொருளாதார பிரச்சினைகளை மட்டுமன்றி மானுட அழிவுகளை உருவாக்கும் அபாயங்களும் காணமாகலாம் என்பதனை மறுதலித்து விட முடியாது.



jeyaseelan.s@thaiveedu.com



# ஸ்பெயின் நாட்டின் கிரனெடா

- குரு அரவிந்தன்

கிரெனடா என்றதும் இரண்டு இடங்கள் ஞாபகத்திற்கு வரும். ஒன்று கரீபியன் தீவுகளில் ஒன்றாக Grenada இருக்கின்றது, மற்றது ஸ்பெயினின் தென்பகுதியில் ஒரு Granada இருக்கின்றது. ஆங்கிலத்தில் எழுதும் போது எழுத்துக்களில் சிறிய வித்தியாசம் இருக்கிறது.

பல வருடங்களுக்குமுன் ஸ்பெயினின் இரண்டாவது பெரிய



நகரமான பார்சிலோனா சென்ற போது பயணிகள் விரும்பிப் பார்க்கும் முக்கியமான இடங்களில் திருத்த வேலை காரணமாக தடுப்பு வேலிகள் போடப்பட்டிருந்தன. இம்முறை திருத்த வேலைகள் முற்றாக முடியாவிட்டாலும் அவற்றை உள்ளே சென்று பார்க்கவும், படங்கள் எடுக்கவும் அனுமதித்திருந்தார்கள். நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலில் முன் எச்சரிக்கையாக வீதிகளில் வழிப்பறிகள் இருப்பதால் கவனமாக இருக்கும்படி சொன்னார்கள். கோவிட்டுக்குப் பின் பலருக்கு வேலை இல்லாததால் வழிப்பறிகள் அதிகரித்திருப்பதாக அவர்கள் அறிவித்தார்கள். கொழும்பில் நாங்கள் பொதுப் போக்குவரத்து வண்டிகளில் பயணிக்கும் போது, இது போன்ற பிக்பொக்கட்காரர்களைப் பல தடவை எதிர்கொண்ட அனுபவம் எங்களுக்கு இருந்ததால், எச்சரிக்கையாக இருந்தோம். ஒரு கட்டத்தில் அவர்களின் முகங்களும் எங்களுக்குப் பழக்கமாகிப் போயிருந்தன.

இம்முறை எங்கள் பயணத்தின் போது, சுற்றுலாப் பயணிகளில் பாடசாலைப் பிள்ளைகள் கூட்டமாக வருவதையும், சிலர் குடும்பமாக, கூட்டமாக வருவதையும் கவனித்தேன். சுற்றுலாப் பயணிகள் விரும்பும் இடமாக இருப்பதால், இங்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் நிறையவே வருகிறார்கள். அனேகமான ஐரோப்பிய பழைய நகரங்களைப் போலவே, இங்கும் உள்ளூர் வீதிகள் சிறிய சதுரக் கற்களை அடுக்கித்தான் போடப்பட்டிருக்கின்றன. கற்களால் அமைக்கப்பட்ட, 2000 வருடப் பழமையான உரோமர் ஆட்சிக் காலத்துத் தெருக்களை அப்படியே பாதுகாப்பாக ஐரோப்பாவின் பல நாடுகளில் வைத்திருக்கிறார்கள். இப்படியான கற்களால் போடப்பட்ட பழைய வீதிகளை ஐரோப்பாவில் பார்க்கும் போது, உரோமப் பேரரசு எங்கெல்லாம் பரந்திருந்தது என்பது உடனே புலனாகும்.

இங்கு எனது பார்வையில் பட்ட அனேகமான பெண்கள், சுற்றுலாப் பயணிகளோ அல்லது உள்ளூர் பெண்களோ தெரியவில்லை, தங்கள் உடம்பிலே தெரியக்கூடிய இடமெல்லாம் பச்சை குத்தினார்களோ அல்லது அது போல ஸ்ரிக்கர்களை ஒட்டியிருந்தார்களோ தெரியவில்லை. பச்சை குத்தியது தெரிய வேண்டும் என்பதற்காக ஆடைகளையும் அதற்கேற்ற மாதிரி அணிந்திருந்தார்கள். சில இடங்களில் நாங்கள் ‘தகாத வார்த்தைகள்’ என்று சொல்லும் ஆங்கில வார்த்தைகளைக் கூடத் தங்கள் உடம்பில் பலரும் பார்க்கக் கூடியதாக ஒட்டியிருந்தார்கள். ஆர்வம் காரணமாக அதைப் பார்க்காமலும் முகத்தைத் திருப்பிக் கொண்டு போக முடியவில்லை, கையிலே, கழுத்திலே, முதுகிலே, மார்பிலே, தொடையிலே கறுப்பு நிற எழுத்துக்கள் அப்படியே பளிச்சென்று பிரகாசமாய்த் தெரிந்தன.

பார்சிலோனாவில் முக்கியமான சில இடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்தவையாக இருக்கின்றன. இங்குள்ள அனேகமான மக்கள் ஸ்பானிய மொழியையே பேசுகின்றார்

கள். தென்னமெரிக்காவிலும் அனேகமானவர்கள் ஸ்பானிய மொழியைப் பேசினாலும், அவர்களுடைய பேச்சு வழக்கில் சில மாற்றங்கள் உண்டு. மெடிட்ரேனியன் கடற்கரைகளைக் கொண்ட அழகிய நகரமாக இது இருக்கின்றது. பொ.ஆ.மு. (கி.மு) 264-ம் ஆண்டளவில் உரோமப் பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. பொ.ஆ.பி.(கி.பி) 711-ம் ஆண்டு அரேபியர்களின் ஆட்சியின் கீழ் வந்தது. இதன் பின் 1137-ம் ஆண்டு அரகான் பேரரசின் கீழ் வந்தது. இங்கே உள்ள பசிலிக்கா டிலா, காசா மில்லா, லா சகாரடா பமிலியா, பிளாசா டி எஸ்பானா, தேசிய அருங்காட்சியகம், பொகாரெல் அழகிய கடற்கரைகள் போன்ற இடங்கள் சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்த இடங்களாக இருக்கின்றன. இதில் லா சகாரடா பமிலியா 1862-ம் ஆண்டிலிருந்து கட்டப்பட்டுக்



கொண்டே இருக்கின்றது. அன்ரோனி கௌடி என்ற கட்டடக் கலைஞர்தான் இதை ஆரம்பித்து வைத்தார். பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட அழகான கோபுரங்களைக் கொண்டது. விமான நிலையத்தில் சோதிப்பது போல இங்கேயும் வாசலில் எங்களைச் சோதித்துத்தான் உள்ளே விடுகின்றார்கள். இங்குள்ள அருங்காட்சியகத்தில் பல சிறந்த ஓவியங்களைப் பார்க்க முடிந்தது. சுமார் 30 நிமிடப் பயணத்தில், நகருக்கு வெளியே மலையின் உச்சியில் உள்ள மொன்சொராட் மாளிகையும் அழகானது. இங்கே உள்ள தேவாலயத்தில் 'பிளாக் வெர்ஜீனியா' சிலையைப் பார்க்க அதிக சுற்றுலாப் பயணிகள் தினமும் வருகிறார்கள்.

இங்கே உள்ள லாஸ் ராம்ப்லாஸ் என்ற வீதி எப்போதும் கலகலப்பாக இருக்கிறது. அதேபோல 'மார்க்கட்பிளேசும்' சுற்றுலாப் பயணிகளால் நிறைந்திருக்கின்றது. உடன் பழவகைகளைச் சாப்பிடக்கூடிய வகையில் சிறிய துண்டுகளாக்கி 'மிக்ஸ்புறுட்ஸ்' என்று சொல்லி உடனே விற்பதால் பலரும் விரும்பி வாங்கிச் சாப்பிடுகின்றார்கள். 'ட்றகன் புறுட்ஸ்' என்று சிகப்பு நிறமான ஒரு பழத்தைச் சீவித் தந்தார்கள். எங்கள் ஊரிலே சாப்பிட்ட நாகதாளிப் பழம் போல சுவையாக இருந்தது. சிறிய முட்கள் நாகதாளிப்பழத்தின் உள்ளே இருப்பதால், பாதுகாப்புக் கருதிப் ஊரிலே சிறுவர்களை பெற்றோர் நாகதாளிப்பழம் சாப்பிட விடுவதில்லை.

இங்கே சிறுவர்களைக் கவரக் கூடியதாக கடல்வாழ் உயிரினங்களின் காட்சியகமான 'அக்கூறியம்' இருக்கின்றது. இரண்டு மாடிகளைக் கொண்ட இந்தக் காட்சியகத்தில் பலர் குடும்பமாக வந்து பார்த்து ரசிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. சுறாக்கள், பென்குவின்கள், ஜெலி பிஷ்கள், ஒக்ரொபஸ்கள் போன்றவற்றைக் காண முடிந்தது. சில கடல் வாழ் இனங்களைத் தொட்டுப் பார்க்கவும் அனுமதிக்கிறார்கள். சிறுவர்கள் உள்ளே சென்று, அறிவியல் சார்ந்து பார்க்கக்கூடிய வகையில் ஒரு சிறிய நீர்மூழ்கிக் கப்பலையும் இங்கே காட்சிக்கு வைத்திருக்கிறார்கள்.

ஸ்பெயினின் பார்சிலோனாவில் குளிராகவும், தெற்கே உள்ள கிரெனடாவில் வெய்யில் அகோரமாகவும் இருந்தது. மக்களும் வித்தியாசமான முக அமைப்பைக் கொண்டவர்களாக இருந்தார்கள். இஸ்லாமிய கலாச்சாரம் ஸ்பெயினின் தெற்கே அதிகமாகப் பரவியிருந்தது. மே மாதத்துடன் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்துவிடும் என்று வண்டியோட்டி குறிப்பிட்டார். யூன், யூலை, ஆகஸ்ட் மாதங்களில் வெய்யில் அகோரம் காரணமாக பகலில் எல்லோரும் வீட்டிற்குள் இருப்பதாகவும், இரவில்தான் வெளியே நடமாடுவதாகவும், பிள்ளைகளை விளையாட்டு மைதானங்களில் இரவில்தான் காணமுடியும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

கிரெனடா தென்கிழக்குப் பகுதியில் இருக்கின்றது. கிரெனடா என்றால் மாதுளம் பழம் என்று ஸ்பானிய மொழியில் பொருள்படும். பொ.ஆ.மு. 44-ம் ஆண்டு உரோம சாம்ராச்சியத்தின் ஒரு பகுதியாக இது இருந்தது. அதன்பின் மூரிஸ் அரசின்கீழ் வந்தது. தற்போது 230,000 மக்கள் இங்கு வாழ்கிறார்கள். இவர்களில் சிலர் தென்னமெரிக்காப் பகுதிகளில் இருந்து வந்தவர்கள். கிரெனடாவில் மலைக் குன்றின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் 13-ம் நூற்றாண்டு அல்ஹம்பரா என்ற இடம் பிரபலமானது. மொறக்கோ நாட்டுக் கலாச்சாரத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கின்றது. மசூதியும் தேவாலயமும் கலந்திருப்பது போன்ற அமைப்பைக் கொண்டது. சீறா நெவாடா மலைக் குன்றின் ஒரு பகுதியில் சீறா நெவாடா தேசியப்பூங்கா அமைந்திருக்கின்றது. முஸ்லீம்களின் அரேபிய கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் பல இடங்களை ஸ்பெயினின் தெற்கே உள்ள இந்தப் பகுதிகளில் காணமுடிகின்றது.

கிரெனடாவில் இருந்து சிவில்லா என்ற இடத்திற்குத் தொடர் வண்டியில் பயணித்தோம். நல்ல வசதிகளோடு கூடிய விரைவு தொடர் வண்டியாக இருந்தது. கரையோரம் முழுவதும் மலைச் சரிவுகளில் ஒலீவ் மரங்களைக் காணக்கூடியதாக இருந்தது. சொகுசு வண்டி, இரண்டரை மணி நேரம் எடுத்தது, காலை உணவு பரிமாறினார்கள். தெற்கு ஸ்பெயினின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் நகரமாக இது இருக்கின்றது. உரோமரின் பழங்காலத் தெருக்கள், கட்டடங்களை காணமுடிந்தது. பார்க்டி மரியா, பிளாசா டி ஸ்பானா, ரியல் அல்காஸர் போன்ற இடங்கள் பயணிகளைக் கவர்ந்த இடங்

களாக இருக்கின்றன. அல்காஸார் மாளிகை முஸ்லீம் கட்டடக் கலையை எடுத்துக்காட்டுகின்றது. சிவில்லாவில் உள்ள கத்தோலிக்க ஆலயம் உலகிலேயே பரப்பளவில் மூன்றாவது பெரியதென்று குறிப்பிட்டார்கள். பல நாடுகளைக் கண்டுபிடித்த கடலோடி கிறிஸ்ரோபர் கொலம்பஸ் இத்தாலியராக இருந்தாலும், அவரது பயணத்திற்கான நிதி உதவியை ஸ்பெயின் அரச தம்பதிகளான பெர்டினன்ட் அரசரும், இசபெலா அரசியுமே 1492-ம் ஆண்டு செய்திருந்தார்கள். அதற்கு நன்றிக்கடனாக கொலம்பஸ் தென்னமெரிக்க நாடுகளில் இருந்து தங்கக் கட்டிகளைக் கொண்டு வந்து அரச மாளிகையில் குவித்திருந்தார். அரசனும், அரசியும் இறந்த பின் தங்கத்தால் செய்த பெட்டியில் வைத்து அரண்மனையின் நிலக்கீழ் அறையில் வைத்திருப்பதை அங்கு சென்ற போது, பார்க்க முடிந்தது. இங்குள்ள கதீட்ரல் தேவாலயத்தில் 1506-ம் ஆண்டு மரணமான கொலம்பஸ்ஸின் இறுதி ஊர்வலம் பெரிய சிலை வடிவ அமைப்பில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றது.



இங்குள்ள வீதிகளின் இரண்டு கரைகளிலும் தோடை மரங்களை நட்டிருக்கிறார்கள். மஞ்சள், அரேஞ்சு நிறத்தில் தோடம்பழங்கள் காய்த்துத் தொங்குவது அழகாக இருக்கின்றது. குடிப்பதற்கு யூஸ் கேட்டால், உடன் தோடம்பழச்சாறு ஐஸ் கட்டி போட்டுத் தருகிறார்கள். குடிப்பதற்கு இனிப்பாகவும், ருசியாகவும் இருந்தது. நிறையவே குதிரை வண்டில்கள் தேவாலய வாசலில் நின்றன. பிள்ளைகள் அதிகம் விரும்புவதால், முக்கியமான இடங்களைக் குதிரை வண்டிலில் ஏற்றிக் கொண்டுபோய்க் காட்டுகின்றார்கள்.

இங்கே பிரபலமான தியேட்டர் ஒன்றில் நடந்த நாட்டிய நாடகத்திற்குச் சென்றிருந்தேன். ‘பிளமெங்கோ’ என்று அதற்குப் பெயர் வைத்திருக்கிறார்கள். ‘ரப் டான்ஸ்’ என்று சொல்லப்படுகின்ற நடனத்தை ஸ்பானிய மொழியில் பாடி, சப்பாத்துக் காலால் தாளத்திற்கு ஏற்ற ஒலியை எழுப்பி ஆண்களும் பெண்களுமாக நடனமாடினார்கள். பாடல்கள் அனேகமானவை இஸ்லாமிய பாடல் இசையை ஒத்ததாக இருந்தது. இதைப் பார்க்கச் சுற்றுலாப் பயணிகள்தான் அதிகமாக வந்திருந்ததால், அரங்கம் நிறைந்திருந்தது. தமிழர்களின் வீர விளையாட்டுகளில் ஒன்றான காளை மாட்டை அடக்குவது போல இங்கேயும் இவர்களின் வீர விளையாட்டாக காளை மாட்டை அடக்கும் விளையாட்டு இருக்கின்றது. இதற்காக ஓர் அரங்கம் கட்டப்பட்டு, அதில் இந்த விளையாட்டைப் பற்றிய வரலாறுகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வீரக்காளைகளின் உருவச் சிலைகளும், அதை அடக்கிய வீரர்களின் படங்களும் இடம் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் பார்வையாளர்களுக்காக காளை மாட்டை அடக்கும் விளையாட்டு இங்கே இடம் பெறுகின்றது.

மற்றிட் ஸ்பெயினின் தலை நகரமாகும். சிவில்லாவில் இருந்து மற்றிட்க்கும் சொகுசுத் தொடர் வண்டியிலேயே இரண்டரை மணிநேரம் பயணித்தோம். தலை நகரம் என்பதால் மக்கள் கூட்டம் நிரம்பிய பரபரப்பான இடமாக இருக்கின்றது. பயணத்தின் போது, மலைகளையும், கிராமச் சூழலையும், அழகான இயற்கைக் காட்சிகளையும் பார்த்து ரசிக்க முடிந்தது. தெருக்கள் எல்லாம் கற்களை அடுக்கியே போடப்பட்டிருக்கின்றன. படகோட்டக்கூடிய ஏரியுடன் கூடிய பூங்கா ஒன்றும் இருக்கின்றது. மட்றிட் அருங்காட்சியகத்தில் பழங்காலத்து ஓவியங்களும், சிலைகளும் நிறையவே இருந்தாலும், பாரிஸில் பார்த்த அளவு இங்கே இல்லை என்றே சொல்லலாம். பாரிஸில் புகைப்படங்கள் எடுக்க அனுமதித்தார்கள், இங்கே அதற்கு அனுமதிக்கவில்லை.

ஸ்பெயினின் ஒரு பிரிவினர் கேட்டலோனியா என்ற தன்னாட்சி அரசாங்கத்தை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். அரசு அதைக் கலைத்துத் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கின்றது. பாசிலோனியாவில் சிறிய குழுவினர் சுற்றுலாப் பயணிகளுக்கு எதிராகக் கோஷம் எழுப்பிக் கொண்டிருந்தனர். ஒரு பூங்காவுக்கு முன்பாக ‘சுற்றுலாப் பயணிகளே திரும்பிப் போங்கள்’ என்று சிலர் பதாகை பிடித்துக் கொண்டிருந்தனர். சுவர்களிலும் பெரிய எழுத்துக்களால் எழுதியிருந்தனர். பொலீஸ் வண்டியில் வந்த இரண்டு பொலீஸார் அங்கு காவலுக்கு நின்றிருந்தனர். ஜனநாயக நாடு என்பதால் அரசு இதையெல்லாம் அனுமதிக்கின்றது.

1992-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் இங்குதான் நடைபெற்றன. உதைபந்தாட்டத்திலும் ஸ்பெயின் புகழ் பெற்ற நாடாக இருக்கின்றது. புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் ரவ்பேல் நாடல், வீராங்கனை முகுருஜா, ஓவியர் சல்வடோர் டலி, ஓவியர் பிக்காஸோ ஆகியோர் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர்கள். பிக்காஸோவின் ஓவியங்கள் நிறைந்த காட்சியகம் ஒன்று பார்சிலோனாவில் இருக்கின்றது. இங்கும் புகைப்படம் எடுக்க அனுமதிக்கவில்லை.

**உசாத்துணை:**
- https://en.wikipedia.org/wiki/Spain



kuruaravindan@thaiveedu.com




# கோவிந்த் நிஹலானி

## ஆக்ரோஷ் முதல்....

– ஓவியர் ஜீவா

ஷியாம் பெனெகல் திரைப்படங்களை அறிந்தவர்களுக்கு அறிமுகமான இன்னொரு பெயர் கோவிந்த் நிஹலானி. அவருடைய பெரும்பாலான படங்களின் ஒளிப்பதிவாளர். பின்னர் தானே ஒரு இயக்குநராகி பெரும் புகழ்





படைத்தவர். மைசூர் பாலிடெக்னிக் திரைப்படக் கல்லூரியில் ஒளிப்பதிவு பயின்று, குருதத்தின் ஒளிப்பதிவாளர் வி.கே. மூர்த்தியிடம் உதவி ஒளிப்பதிவாளராக பணி புரிந்தவர். ஷியாம் பெனெகலுடன் பணியாற்றியபோது பாரலல் சினிமாவின் அடிப்படை தன்மைகள் இவரிடமும் ஒட்டிக்கொண்டன என்றுதான் சொல்ல வேண்டும்.

இவர் இயக்கிய முதல் படம் 'ஆக்ரோஷ்'. ஓம் புரியின் அம்மைத் தழும்புகள் பொறித்த வெறித்த முகத்துடன் கூடிய போஸ்டர் எதோ சொல்ல வருகிறது என்று புரிந்தது. திரைப்படத்தை ஆள் அரவமற்ற ஒரு பெங்களூர் திரையரங்கில் பார்த்தேன். திக்பிரமையடைவது என்பதன் பொருள் புரிந்த நாள் அது. இருண்மையும், யதார்த்தமும் நிறைந்த படங்கள் நிஹலானியுடையவை. அதன் ஆரம்பம் ஆக்ரோஷ். பழங்குடிகளை அடிமை போல நடத்தும் ஒரு கிராமத்தின் முக்கிய ஆள் ஒருவன், அப்பாவி லஹன்யாவை ஒரு போலிக் குற்றச்சாட்டின் பெயரில் சிறைக்கு அனுப்புகிறான். லஹன்யாவின் மனைவி இவர்களால் மானபங்கப்படுத்தப்பட்டு தற்கொலையும் செய்து கொள்கிறாள். லஹன்யாவுக்காக வாதாட அரசே ஒரு இளம் வழக்குரைஞரை நியமிக்கிறது. அரசு வழக்குரைஞரோ இளைஞரின் சீனியர். அவரிடம்தான் இவர் உதவியாளராக இருக்கிறார். இந்திய நீதித்துறை, அதுவும் ஒரு சிறிய ஊரில் இயங்கும் சூழலில் உள்ளூர் சாதி மற்றும் அதிகாரக் கும்பல், எப்படி முறையாக இயங்க முடியும் என்பதற்கு இந்த திரைப்படத்தின் காட்சிகள் சிறந்த உதாரணங்களாக தோன்றும். படம் முழுவதும் ஒரு திகில் விரவிக்கிடக்கும். கண்ணுக்கு தெரியாத வன்முறையின் பயங்கரம் வழக்குரைஞரைக் கூடத் தீண்டும். உச்சகட்ட காட்சியில், படம் முழுவதும் வெறித்த கண்களுடன், வாய் திறக்காமல் நிற்கும் இளைஞன், மௌனம் கலைந்து பெருங்குரலெடுத்து தன் தங்கையையே வெட்டித் தீர்க்கிறான். அவள் மீது அவனுக்கு எந்த வஞ்சமும் இல்லை. இந்தக் கொடிய உலகின் கரங்களிலிருந்து அவளை காப்பாற்றவே இந்த முடிவு!

பல உண்மை நிகழ்ச்சிகளின் அடிப்படையில் விஜய் டெண்டுல்கர் எழுதிய திரைக்கதையை, தன் முதல் படைப்பிலேயே திறம்பட படமாக்கி ஏராளமான விருதுகளை குவித்தார் நிஹலானி. நசீருத்தின் ஷா, ஓம் புரி, ஸ்மிதா பாட்டீல், அம்ரிஷ் புரி மோகன் ஆகாஷே என்று அவருடன் இதில் பணி புரிந்தவர்கள் அனைவரும் அற்புதக்கலைஞர்கள்!!

இந்த இருண்ட கிராமத்தின் கதையை சொல்லியவர் அடுத்த படத்தில் நகர்ப்புற உயர்வகுப்பு மக்களின் பின்னணியில்




‘விஜேதா’ என்ற படத்தை இயக்கினார். அப்போது தரமான படங்களை தயாரித்துக்கொண்டிருந்த நடிகர் சஷி கபூர்தான் இதற்கும் தயாரிப்பாளர். இந்திய விமானப்படையில் ஒரு போர் விமானி ஆவது நாயகனின் இலட்சியம். இதை சுற்றி பல்வேறு மொழிப் பின்னணியில் இணைந்திருக்கும் பெற்றோர், அவனுடைய மொழி தாண்டிய காதல் என்று திரைக்கதையை பிணைத்து இயக்கப்பட்ட படம். பெரிதாக பேசப்படவில்லை என்ற குறை தீர்க்க அடுத்த படம் வந்தது.

காவல் துறை அதிகாரிகள் குறித்த திரைப்படங்கள் எப்போதும் உலகம் முழுவதும் வெளியாகிக்கொண்டே வருகின்றன. கிரிமினல்களை பிடிக்கவோ இல்லை அவர்களுடன் மோதவோ மட்டுமல்லாமல், காவல் அதிகாரிகளுக்கு பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. அவர்கள் கடமையை செய்யவிடாமல் அரசியல்வாதிகளின் மாஃபியா எப்போதும் வேலை செய்து கொண்டே இருக்கும். அநீதியை கேள்வி கேட்கும் நேர்மையான அதிகாரிகள் படும் பாட்டை நிறைய திரைப்படங்கள் சித்தரித்திருக்கின்றன. அத்தகைய படங்களில் இன்றும் சிறந்த ஒன்றாக கருதப்படும் ‘அர்த சத்யா’, நிஹலானியின் அடுத்த படம். ஆனந்த் வேலங்கர் துடிப்பான இளம் காவல் அதிகாரி. காவல் துறையில் சாதாரண காவலராக இருக்கும் மூர்க்க குணமும் பிடிவாதமும் மிக்க அவரது தந்தையின் கட்டாயத்தின்பேரில் காவல் அதிகாரி ஆனவர். கவிதைகளில் சஞ்சரிக்கும் ஒரு காதலி கூட உண்டு. அவருடைய நேர்மையான பணிக்கு சோதனையாக வருவது ராமா ஷெட்டி என்ற உள்ளூர் மாஃபியா தலைவனின் அதிகாரமும், அரசியல் தொடர்புகளும். பல சந்தர்ப்பங்களில் தோல்வியும் அவமானமும் மட்டுமே பரிசாக கிடைக்கின்றன. கூட இருக்கும் காவல் துறையினரே அவர்களின் கைப்பாவையாக திகழ்கின்றனர். இவனுடைய சின்ன சின்ன சாதனைகளும் சம்பந்தமில்லாத சிலருக்கு தாரை வார்க்கப்படுகின்றன. மனம் வெறுத்துப்போய் குடிபோதையில் வீழ்கிறான் வேலங்கர். இவனைப் போலவே விரக்தியில் இருக்கும் இன்னொரு குடிகார காவல் அதிகாரியை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. காதலில் கசப்பு உருவாகிறது. ராமா ஷெட்டியிடம் சரணடைவது ஒன்றே இவனை மீட்கும் ஒரே வழி என்ற நிலையில் அந்த சந்திப்பும் நிகழ்கிறது.

அர்த் சத்யா, காவலர்கள் குறித்த இந்திய திரைப்படங்களில் சிறந்தது என்று பேசப்படும் படம். அமிதாப் பச்சன் நடிக்க வேண்டிய வேடத்தில் நடித்தவர் ஓம் புரி. அவருடைய நடிப்பின் சிறப்பை உணர, இதன் தமிழ் மறு ஆக்கத்தை பார்த்தால் புரிந்துவிடும். ‘காவல்’ என்ற அந்த படத்தில் தியாகராஜன் நடித்திருந்தார். யார் நினைவிலும் இந்த படம் இல்லை. ஓம்புரியின் தந்தையாக நடித்தவர் அம்ரிஷ் பூரி, காதலியாக ஸ்மிதா பாட்டீல், இன்னொரு குடிகார காவல் அதிகாரியாக நசீருத்தின் ஷா. வில்லன் ராமா ஷெட்டியாக திரைப்பட அறிமுகம் ஆன சதாசிவ் அம்ரபுர்க்கர் ஒரு மகத்தான கண்டுபிடிப்பு. பிரமாதப்படுத்தியிருந்தார். திரைக்கதை எழுதியவர் விஜய் டெண்டுல்கர் என்றால் சொல்லவும் வேண்டுமா!! இந்த படத்திற்காக ஓம் பூரி சிறந்த நடிகருக்கான தேசிய விருதை பெற்றார்.

நிஹலானியின் அடுத்த திரைப்படம் ‘பார்ட்டி’. ஒரு மாலை நேரத்து விருந்து ஒன்றை சுற்றி நகரும் திரைக்கதை. நகர்ப்புற அறிவு ஜீவிகளின் சமூக கண்ணோட்டங்கள், சமூகத்தோடு அவர்களின் நெருக்கமும் விலகலும், அவர்களின் அறிவு ததும்பும் உரையாடல்கள் அனைத்தையும் ஒரு கசப்பான அங்கதத்துடன் சொல்லிக்கொண்டு செல்லும் படம் இது. ஒரு இலக்கிய ஆளுமைக்கு மதிப்புக்குரிய ஒரு விருது கிடைத்ததற்காக ஒரு அறிவுஜீவிப் பெண்மணியால் தரப்படும் விருந்தில் கலந்து கொள்ள வந்தவர்கள் தங்கள் இருப்பை காட்டிக்கொள்ள கடும் விவாதங்களில் ஈடுபடுகிறார்கள். சிலரது சொந்த பிரச்சினைகள் அலசப்படுகின்றன. அந்த விருந்துக்கு வராத இன்னொரு செயல்வீரனான அறிவு ஜீவியைப்பற்றியே இவர்களால் பெரும்பாலும் பேசப்படுகிறது. படத்தின் இறுதியில் அவன் ஒரு தீவிரவாதி என்று குற்றம் சாட்டப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்டதாக செய்தியும் வருகிறது.

ஒரு மேடை நாடகத்தை திரைக்கு ஏற்ப திரைக்கதை அமைத்து உருவானது இந்தப் படம். விருந்தளிக்கும் பெண்மணியாக விஜயா மேத்தாவும், உயர் விருது பெற்ற எழுத்தாளராக மனோகர் சிங்கும், உரையாடலில் தென்படும் எழுத்தாளராக நசீருத்தின் ஷாவும் நடித்த இந்த படத்தில் ஒரு சிறந்த நடிகர் பட்டாளமே நடித்திருந்தது. ஓம் புரி, அம்ரிஷ் புரி, கே.கே. ரைனா, ரோஹிணி ஹத்தங்கடி, தீபா சாஹியுடன் இன்னும் பலர் நடித்திருந்தனர். ரோஹிணி ஹத்தங்க

டிக்கு ஒரு தேசிய விருதும் கிடைத்தது!

இந்திய சமூகத்தில் தொழிற்சங்கங்கள் மிக சக்தி வாய்ந் தவை. உரிமைக்கு போராடிய காலத்தில் கஷ்டப்பட்டாலும் அறுவடை காலங்களில் வருமானம் மட்டுமல்ல, அதிகாரமும் பார்த்தவை இந்த சங்கங்கள். பல நிறுவனங்களில் எந்த யூனியன் வலியது என்ற அதிகாரப்போரும், அதன் மூலமாக வரும் வருமானமும் மிக முக்கியமானவை. சில காட்சிகள், தங்கள் தொழிற்சங்கங்களினாலேயே உயிர் பிழைத்து வாழ்ந் துகொண்டிருக்கின்றன. மூட்டை தூக்கும் தொழிலாளி முதல் வங்கி உயர் அதிகாரிகள் வரை இவர்களின் உரிமை காக் கும் தொழிற் சங்கங்கள் உண்டு. எல்லாமே ஜனநாயக நெறி களின்படிதான் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன, என்றா லும் வரம்பு மீறும் தொழிற்சங்கங்களுக்கு தொழிலாளர்கள் மத்தியில் ஒரு கவர்ச்சி எப்போதும் உண்டு. இத்தகைய யூனி யங்களிடையே நடைபெறும் அதிகாரப்போர் குறித்து நிஹ-லானி இயக்கிய திரைப்படம் ‘ஆகாத்’. எழுதியவர் விஜய் டெண்டுல்கரேதான். உண்மையில் தொழிற்சங்க அறம் மீறி நடத்தி வெற்றி பெற்ற சங்கங்கள் பல இருக்கின்றன. அந்த அடிப்படையில் அமைக்கப்பட்டிருக்கும் தொழிற்சங்கத்தின் தலைவராக நசீருத்தின் ஷா, தொழிலாளர் நலனுக்காக நேர் மையாக உழைக்கும் தலைவராக ஓம் புரி, எதற்கும் துணிந்த தொழிற்சங்க அடியாளாக மலையாள நடிகர் கோபி, இப்படி நடிப்புலக மும்மூர்த்திகள் பிரமாதமாக நடித்த ‘ஆகாத்’, பலரின் தோலை உரித்துக்காட்டியது. நடி கர்கள் சதாசிவ் அம்ரபுர்க்கர், ரோஹிணி ஹத்தங்கடி, அம்-ரிஷ் புரி, பங்கஜ் கபூர் அவர்கள் பங்கை சிறப்பாக செய்த னர்.

நிஹலானி திரைப்படங்களுக்கு ஒளிப்பதிவு, இயக்கம் போன்ற பணிகளை சொந்தமாக செய்தாலும், இன்னொரு புகழ் பெற்ற திரைப்படத்திற்கு இரண்டாம் யூனிட் ஒளிப்பதி வாளராகவும் பணி புரிந்தார். ரிச்சர்ட் ஆட்டன்பரோ இயக்கி, பல விருதுகளை பெற்ற ‘காந்தி’ திரைப்படம்தான் அது. அந்த நேரத்தில் சுதந்திரம், பிரிவினை போன்ற விஷயங் களை பல நூல்களை படித்து தெரிந்துகொண்டார். அப்படி படித்த நூல்களில் ஒன்று, பிரபல இந்தி நடிகர் பால்ராஜ் சஹானியின் சகோதரர் பீஷம் சஹானி எழுதிய ‘தமஸ்’. அவரை இது மிகவும் பாதித்ததால் அதை படமாக்கும் முயற்சியில் இறங்கினார். மிக நீளமான திரைக்கதை அமைந்ததால் அதை முதலில் ஒரு தொலைக்காட்சியில் அதே பெயரில் தொடராக ஒளிபரப்பினார்கள். தமஸ் ஒரு அற்புதமான தொடராக அமைந்தது. இந்திய சுதந்திரம், இந் திய பாகிஸ்தான் பிரிவினை, இந்து இஸ்லாமிய மதக்கலவ ரங்கள், அகதி முகாம்கள், வறட்சி, பசி, பட்டினி, மரணங் கள் என்ற பின்னணியில் பன்றியிறைச்சி தொடங்கி வைக்கும் கலவரங்களின் நீட்சியாக திரைக்கதை சென்றது. ஓம் புரி, அம்ரிஷ் பூரி, பீஷம் சஹானி போன்ற நடிகர்களுடன், ஏராள மான புகழ்பெற்ற நடிகர்களும் நடித்த இந்த தொடர், இந்தி யாவில் தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி தொடர்களில் சிறந் தவற்றில் ஒன்றாக இன்றும் பேசப்படுகிறது.

இதற்கு பிறகு சில படங்கள் இயக்கிய நிஹலானி இந்திய நக்சல் தீவிரவாதத்தை கருவாக கொண்ட ஒரு திரைப்ப டத்தை இயக்கினார். ‘துரோஹ்கால்’ இவருடைய சிறந்த படைப்புகளில் ஒன்று. கம்யூனிஸ்ட் இயக்கங்கள் மிதவாதம், தேர்தல் அரசியல் என்று ஒரு புறம் செயல்பட்டாலும், மேலும் சில பிரிவுகளாகப் பிரிந்து தீவிரவாதம், அழித்தொழிப்பு என்று இறங்கினர். மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட், மக்கள் போர் என்று பல பெயர்களில் வன்முறைப் பாதையில் இயங்கினர். அப்படிப்பட்ட ஒரு குழுவை ஒடுக்க அமைக்கப்பட்ட ரகசிய காவல் பிரிவில் பணியாற்றிய இரண்டு அதிகாரிகளின் கதை தான் இந்தத் திரைப்படம். தீவிரவாதிகளிடையே ஊடுருவும் காவல் படையில் ஒரு இளைஞன் அங்கிருந்து இவர்களுக்கு தகவல்களை அனுப்புகிறான். அப்படி ஒரு இளைஞன் இருப்பதை அவர்களும் உணர்ந்து யாராக இருக்கும் என்ற



தேடுதலில் இறங்குகிறார்கள். இதை தொடர்ந்து பல சம்ப வங்கள் அரங்கேறுகின்றன. அவர்கள் தலைவன் இவர்களி டம் சிக்கி சித்திரவதை அனுபவித்தாலும் எதுவும் புலனாவ தில்லை. இதற்கிடையில் இவர்களது வழிகாட்டியாக இருக் கும் உயர் அதிகாரி தற்கொலை செய்து கொள்கிறார். அவ ரும் தீவிரவாதிகளின் சம்பளப் பட்டியலில் உள்ளவர் என்று புலனாகிறது. குடும்ப வாழ்க்கையினுள் இவர்களால் தொந்த ரவுகள். இருவரில் ஒருவர் படுகொலைக்குள்ளாகிறார். இறுதி யில் காவலர் பிரதிநிதியாக ஊடுருவியிருக்கும் இளைஞன் தன்னையே தலைவனாக அறிவித்துக்கொண்டு அங்கே தொடர்கிறான். பல கேள்விகளோடு படம் முடிகிறது. காவல் அதிகாரிகளாக ஓம் புரியும், நசீருத்தின் ஷாவும், அவர்களு டைய உயர் அதிகாரியாக அமரிஷ் புரி, தீவிரவாதிகளின் தலைவனாக ஆஷிஷ் வித்யார்த்தியும் பிரமாதமாக நடித்தி ருந்தனர். ஆஷிஷ் வித்யார்த்திக்கு இது முதல் படம். முதல் படத்திலேயே ஒரு தேசிய விருதையும் பெற்றுவிட்டார். இதே திரைப்படம் தமிழில் கார்பன் காப்பியாக ‘குருதிப்புனல்’ என்ற பெயரில் வெளி வந்தது. கமல், அர்ஜுன், நாசர் போன் றவர்கள் நடித்திருந்தனர்.

இதற்கு பின்னும் ஏராளமான திரைப்படங்களை இயக்கிய நிஹலானி, தற்போது எண்பது வயதைக் கடந்த நிலையில் ஓய்வில் இருக்கிறார். ஆனால் அவர் ஒளிப்பதிவு செய்த, இயக்கிய திரைப்படங்கள் அவர் பெயரை என்றும் சொல் லிக்கொண்டிருக்கும்.



jeeva@thaiveedu.com




இலங்கையின் வடக்கே யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் மேற்குத் திசையில் தனித்துவமான புவியியல் பிரதேசமாக அமைந்துள்ள வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு, காரைநகர், நெடுந்தீவு, அனலைதீவு, எழுவைத்தீவு ஆகிய ஏழு தீவுகளும் சப்த தீவுகள் என அழைக்கப்படுகின்றன. இப்பிராந்தியத்தில் இருபதாம் நூற்றாண்டிலே சமூகசேவகராக, வர்த்தகப் பிரமுகராக, அரசியல்வாதியாகப் பெயரும் புகழும் பெற்று விளங்கியவர் அமரர் ஏ.எல். தம்பிஜயா அவர்கள்.

இவர் ஊர்காவற்துறை கரம்பனில் வாழ்ந்துவந்த, பிலிப் மனுவேல்பிள்ளை தம்பிஜயா, ரோசமுத்து இணையருக்கு மகனாக, 1903-ம் ஆண்டு நவம்பர் மாதம் எட்டாம் திகதி பிறந்தார். இவரது முழுப்பெயர் அல்பிரட் லியோ சவரிமுத்து தம்பிஜயா. இவர் தனது ஆரம்பக் கல்வியை ஊர்காவற்துறை



புனித அந்தோனியார் கல்லூரியில் கற்றார். மற்றும் இடைநிலை, உயர்தரக் கல்வியை முறையே யாழ்ப்பாணம் சென். பற்றிக் கல்லூரியிலும், கொழும்பு சென். ஜோசப் கல்லூரியிலும் தொடர்ந்தார். பாடசாலை மாணவனாகப் படித்த காலத்தில் உதைபந்தாட்டத்திலும் மெய்வல்லுனர் போட்டிகளிலும் ஆர்வத்துடன் பங்கு பற்றினார். அத்துடன் திறமைச் சித்திகளுடன் உயர்கல்வியை நிறைவு செய்த அவர், சட்டத்துறையில் பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக இங்கிலாந்துக்குச் சென்றார்.

இலங்கை திரும்பிய தம்பிஜயா, தனது தந்தையாரைப் போல வாணிபத் துறையில் ஆர்வம் கொண்டு வர்த்தக முயற்சிகளில் ஈடுபடத் தொடங்கினார். இவரது தந்தையார் ஊர்காவற்துறையில் கப்பல்கள் வைத்து வாணிபம் செய்து, செல்வமும் செல்வாக்கும் பெற்று வாழ்ந்தவர். தந்தையார் மரபில் வாணிபம் மைந்தனுக்கும் கைவந்த கலையாக அமைந்தது. இருபத்தியொரு வயதிலேயே கொழும்பில் தனது முதலாவது கம்பனியாகிய 'லியோ லான்வில்லு' என்னும் கம்பனியினை ஆரம்பித்தார். மிகக் குறுகிய காலத்தில், ஒலிம்பியா திரையரங்கையும் குத்தகைக்கு எடுத்து, தொழில் நடவடிக்கையை ஆரம்பித்தார். தொடர்ந்து சேர். சிற்றம்பலம் கார்டினர் அவர்களுடன் இணைந்து சிலோன் தியேட்டர்ஸ் நிறுவனத்தையும் ஆரம்பித்தார். இந்த நிறுவனமே இலங்கையின் முதன்மையான திரையரங்கு நிறுவனமாக விளங்கியது. இந்த நிறுவனம் வெற்றிகரமாக இயங்கி, 'கார்கில்ஸ்' 'மில்லர்ஸ் லிமிட்டட்' ஆகிய நிறுவனங்களையும் தன்னுடன் இணைத்துக் கொண்டது. மில்லர்ஸ் நிறுவனத்தின் தலைவராகவும், முகாமைத்துவப் பணிப்பாளராகவும் தம்பிஜயா செயற்பட்டார். 1946-ம் ஆண்டு ஹாரி அன்ட் ஜோன் என்னும் கிரேக்க நிறுவன அதிபரிடமிருந்து 'கார்கோபோட் டிஸ்பட்ச்' என்னும் நிறுவனத்தை வாங்கினார். அக்காலப் பகுதியில் இந்த நிறுவனம் 65 சதவீதமான துறைமுகச் செயற்பாடுகளைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அத்துடன் இலங்கையில் முப்பதுக்கும் மேற்பட்ட உயர் மதிப்பு வாய்ந்த கப்பல் சேவைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மை வாய்ந்த கப்பல் நிறுவனமாகவும் விளங்கியது.

வர்த்தக முயற்சிகளில் வளர்ச்சியடைந்து வந்த அதேவேளை தம்பிஜயா அவர்கள் அரசியலிலும் கால்பதிக்க ஆர்வம் கொண்டார். இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நடைபெற்ற முதலாவது பொதுத்தேர்தலில் ஊர்காவற்றுறை தொகுதியில் சுயேச்சை அங்கத்தவராகப் போட்டியிட்ட அவர் 5552 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குச் சென்றார். 1952-ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் மீண்டும் அதே தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 9517 வாக்குகளைப் பெற்று மீண்டும் தெரிவு செய்யப்பட்டார். ஆனால் 1956-ம் ஆண்டு மற்றும் 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தல்களில் போட்டியிட்டு வெற்றி பெறமுடியவில்லை. இலங்கை தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிட்ட வி.ஏ. கந்தையா அவர்கள் வெற்றி பெற்று, ஊர்காவற்றுறைத் தொகுதியின் பிரதிநிதியாகப் பாராளுமன்றம் சென்றார்.

தம்பிஜயா அவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த

போதும் அதன் பின்னரும் தீவுப்பகுதி மக்களினதும் குறிப்பாக ஊர்காவற்றுறை மக்களினதும் மேம்பாட்டிற்காக அரும் பணி புரிந்தார். பல குடிநீர்த் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கிரவல் பாதைகளாக இருந்த பல வீதிகள் தார் போட்டுச் செம்மைப்படுத்தப்பட்டன. மழைக்காலத்தின் போது வெள்ளம் தேங்கி நிற்காவண்ணம் தேவையான இடங்களில் மதகுகள், பாலங்கள் அமைக்கப்பட்டன. மண்டைத் தீவை யாழ் குடாநாட்டுடன் இணைக்கும் பண்ணைப் பாலம் அமைக்கப்பட்டு, 1953-ம் ஆண்டு அப்போதைய பொதுப் போக்குவரத்து அமைச்சரான, சேர். ஜோன் கொத்தலாவல அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதற்காக தம்பிஜயா அவர்கள் ஆற்றிய பணி அளப்பரியதாகும். அதுபோலவே புன்குடுதீவு பெரியவாணர், சின்னவாணர் என அழைக்கப்படும் அம்பலவாணர் சகோதரர்களின் கனவை நனவாக்கும் வகையில், புங்குடுதீவுவை வேலணையோடு இணைக்கும், ஏறக்குறைய ஐந்து கிலோமீட்டர் நீளமான வாணர் பாலத்தை அமைக்கும் பணியிலும் பெரும் பங்காற்றினார். மேலும், தீவுகளுக்கிடையிலான போக்குவரத்தை இலகுப்படுத்த, படகுச் சேவைகளையும் ஏற்பாடு செய்தார். ஒரு படகு அவரது மனைவியின் பெயரான ‘ராஜேஸ்வரி’ என்னும் பெயரில் இயங்கிவந்தது. தம்பிஜயா அவர்கள் இலங்கையின் முதலாவது, இரண்டாவது பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக இருந்த போது பிரதம மந்திரிகளாக இருந்த டி.எஸ். சேனநாயக்கா, டட்லி. சேனநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவல ஆகியோருடன் நல்லுறவைப் பேணித் தனது தொகுதி மக்களுக்குப் பயனளிக்கும் பல செயற்திட்டங்களை இலகுவாக நிறைவு செய்தார். குறிப்பாக சேர். ஜோன் கொத்தலாவல அவர்களை நேரடியாகத் தனது தொகுதிக்கு வரவழைத்து நிலைமைகளைத் தெளிவுபடுத்தி தொகுதியின் அபிவிருத்திக்குத் தேவையான நிதியுதவியைப் பெறுவதிலும் வெற்றி கண்டார்.

1956-ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தம்பிஜயா அவர்கள் தோல்வியடைந்த போதிலும், தமிழ் மக்களுக்குச் சேவை செய்வதில் தொடர்ந்தும் ஆர்வம் காட்டி வந்தார். 1958-ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது, தமது வீடுகளையும் உடமைகளையும் இழந்து கொழும்பில் தமிழ் மக்கள் நிர்க்கதியாக நின்றபோது, அவர்களின் நம்பிக்கை நட்சத்திரமாகச் சுறுசுறுப்புடன் செயற்பட்டார். அப்போது மகா தேசாதிபதியாக இருந்த சேர். ஒலிவர் குணதிலக்க அவர்களுடன் தொடர்பு கொண்டு, கொழும்பு ரோயல் கல்லூரியில் அகதிகளாக இருந்த தமிழ் மக்களை, கொழும்புத் துறைமுகம் ஊடாகக் கப்பல்கள் மூலம் யாழ்ப்பாணம் அனுப்ப ஆவன செய்தார். பயணத்தின் போது போதுமான உணவு, குடிநீர் வசதிகளையும் கவனித்து, யாழ்ப்பாணம் சென்றதும் பாதுகாப்பாகத் தத்தமது கிராமங்களுக்குச் செல்வதற்கும் ஏற்பாடுகள் செய்தார்.

1970-ம் ஆண்டளவில் இலங்கை அரசு உல்லாசப் பயணத்துறையை மேம்படுத்தப் பல ஊக்குவிப்புத் திட்டங்களை அறிமுகம் செய்தது. அத்திட்டங்களைப் புத்திசாதுரியமாகப் பயன்படுத்தி ‘ரேணுகா’ என்ற உல்லாச விடுதியை நிறுவினார். அரசின் ஊக்குவிப்புத் திட்டத்தைப் பயன்படுத்தி நிறுவப்பட்ட முதலாவது உல்லாச விடுதி இதுவாகும். இந்த உல்லாச விடுதியின் ஒரு பகுதியில் Palmyra Restaurant என்னும் உணவகத்தை ஆரம்பித்து, யாழ்ப்பாண உணவு வகைகளையும் பரிமாற ஏற்பாடு செய்தார். உல்லாசப் பயணிகள் சுவைமிக்க உணவு வகைகளையும், தரமான தங்குமிட வசதிகளையும் பெறக்கூடிய முதற்தர விடுதிகளாக இவை விளங்கின.

தம்பிஜயா அவர்கள் மில்லர்ஸ் லிமிடட், கார்கில்ஸ் (சிலோன்) லிமிடட், ரேணுகா ஹோட்டல், கொழும்பு போர்ட் ஒப்பறேடேர்ஸ் லிமிடட், சி.பி.டி. ட்ரவல்ஸ் லிமிடட், சி.பி.டி. எக்ஸ்போர்ட் லிமிடட், சிலோன் ஷிப்பிங் லைன்ஸ் லிமிடெட், சிலோன் தியேட்டர்ஸ் லிமிடெட் போன்ற பத்துக்கும் மேற்பட்ட நிறுவனங்களில் தலைவராகவும், பிரதித் தலைவராகவும், பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். அமெரிக்கா, யப்பான், மலேசியா, சிங்கப்பூர், சீனா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் அறுபதுக்கும் மேற்பட்ட வர்த்தக நிறுவனங்களுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தார். இவர் வர்த்தகத் துறையின் உச்சத்தில் கொடிகட்டிப் பறந்தாலும் சாதாரண மக்களின் நண்பனாகவும் விளங்கினார். இவரது நிறுவனங்களில் இன, மத, மொழி, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து 25,000-க்கும் மேற்பட்டவர்கள் பணி புரிந்தனர். தீவுப்பகுதியைச் சேர்ந்த இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கடமையாற்றினர். வேலை தேடி இவரை நாடியவர்களுக்கு, அவர்களது தகுதிக்கேற்ப பல்வேறு நிறுவனங்களில் வேலை தேடிக் கொடுத்தும் உதவினார்.

தம்பிஜயா அவர்கள் இலங்கைத் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பும் அளப்பரியதாகும். ‘He was the first Sri lankan to introduce motion pictures into the country together with Mr. Gardiner’ எனப் பல ஊடகங்கள் புகழாரம் சூட்டியுள்ளன. கலாரசனைமிக்க இவர் தமிழ்த் திரைப்படங்களையும் தயாரித்துள்ளார். அவர் தயாரித்த திரைப்படங்களுள் ‘அசோகமாலா’ திரைப்படம் மக்கள் மனதைப் பெரிதும் கவர்ந்ததாகக் கூறப்படுகிறது.


சமூக சேவகராகப், பிரபல வர்த்தகராக, அரசியல்வாதியாகச், சிறந்த நிர்வாகியாக, திரைப்படத் தயாரிப்பாளராக மனிதநேயம் மிக்க மனிதராக, உற்சாகத்துடன் செயற்பட்டு வந்த தம்பிஜயா அவர்கள் 1980-களின் முற்பகுதியில் கொழும்பில் அமரத்துவம் அடைந்தார். ஊர்காவற்றுறை மக்களையும் மண்ணையும் ஆழமாக நேசித்த, அவரது விருப்பத்திற்கேற்ப, அவரது ஆஸ்தி கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்டு ஊர்காவற்றுறை சேமக்காலையில் அவரது பெற்றோரின் கல்லறைக்கு அருகே 1983-ம் ஆண்டு பெப்பிரவரி மாதம் நான்காம் திகதி வைக்கப்பட்டது.

அமரர் தம்பிஜயா ஆரம்பித்த சொந்த நிறுவனங்களை அவரது பிள்ளைகள் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். ரேணுகா உல்லாச விடுதியினையும், Palmira உணவகத்தையும் அவரது மகன் ரவி பணிப்பாளர் குழுவுடன் நிர்வகித்து வருகிறார். தந்தையாரின் பிறந்த ஆண்டு நினைவாகப் பார்வை குறைந்த ஊர்காவற்றுறை மக்களுக்குக் கண்ணாடிகளை வழங்கியும், கண்புரையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு யாழ். போதனா வைத்தியசாலை ஊடாகச் சத்திரசிகிச்சை செய்தும் தந்தையைப்போல் செயற்பட்டு வருகிறார்.

அமரர் தம்பிஜயா போன்ற சாதனையாளர்களின் வாழ்க்கை வரலாற்றை இன்றைய இளம் சமூகத்
தினரும் அறிந்திருப்பது அவசியமாகும்.



vivekananthan.v@thaiveedu.com



# ஆர்ப்பாட்டமில்லாத அற்புதக் கலைஞன் சாந்திநாதன்

**- கதிர் துரைசிங்கம்**

1993 ஒக்ரோபர் 16 மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முதல் முத்தமிழ் விழா. தீசன் இயக்கிய 'Sponsor Ready' நாடகத்தில் நடித்த என்னைத் தேடிவந்து ஒருவர் பாராட்டுகிறார். "இவர் சாந்திநாதன். நடிகர், இயக்குனர், வானொலிக் கலைஞர்" என அறிமுகம் செய்கிறார் அதிபர் பொ. கனகசபாபதி. அன்று பாராட்டியதில் ஆரம்பமான சாந் திநாதனின் நட்பு குடும்ப உறவாகி பாராட்டில் தொடர்கிறது.

மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து, அவர்களுக்கு மதிப் பளித்து, பாடறிந்து ஒழுகும் சாந்திநாதனை அனைவரும்

நேசித்தார்கள். சொந்தம் கொண்டாடினார்கள்.
அழைத்த விழாக்களுக்கு குறித்த நேரத்திற்கு தவறாது செல்லும் சாந்தி, விழா முடிந்த பின் அதன் அமைப்பாளரையும் கலைஞர்களையும் பாராட்டத் தவறமாட்டார். திருத்தங்கள் இருப்பின் நாசூக்காக அவர்களுக்கு எடுத்துக் கூறவும், தேவையெனின் உதவவும் தயங்கமாட்டார்.

நேர்மை, நேர்த்தி, நேரம் தவறாமை சாந்தியின் தாரக மந்திரம். பொறியியல் துறை சார்ந்த சாந்தி Planning இன்றி எதுவும் தொடங்கார். பத்து பூக்கன்று நடுவதென்றாலும் Plan பண்ணி project ஆக்கி perfect-ஆக செய்து முடிப்பார்.

புராந்தகனும் நானும் சாந்தியை அவரது இல்லத்தில் வாரத்திற்கு ஒரு தரமாவது சந்திப்போம். சாந்தியின் சம்பாஷனையும் மனைவி உஷாவின் உபசரிப்பும் எமக்கு பெரு விருந்தாயிருக்கும்.

நேருக்கு நேர் சந்தித்து முகம் பார்த்து உரையாடுவது தான் சிறந்த தொடர்பாடலாக இருக்கும் என்பது சாந்தியின் கோட்பாடு. இதற்காக நேரத்தையும் தூரத்தையும் பொருட்படுத்தாமல் பயணிப்பார்.

சாந்தி விழாக்களை நடத்துவதற்குப் பொறுப்பேற்றால் ஒவ்வொரு நிகழ்வும் பார்வையாளரைச் சென்றடைய வேண்டும் என்பதற்கு கடினமாக உழைப்பார்.

நாடக இயக்குனராக சிறந்து விளங்கிய சாந்தி, மகாஜனக் கல்லூரி முத்தமிழ் விழாக்களுக்கும் அரங்காடல் நிகழ்வுகளுக்கும் பல நாடகங்களை இயக்கியுள்ளார். 25 ஆண்டுகளுக்கு மேலாக மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க முத்தமிழ் விழாவின் சூத்திரதாரியாக செயற்பட்ட சாந்தி கணித பொது அறிவுப் பரீட்சை பொறுப்பையும் ஏற்றுத் திறம்பட நடத்தினார். தலைவராகப் பணியாற்றிய பின் காப்பாளராக இருந்து மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடாக் கிளையை வழிநடத்தி வந்தார்.

இவரின் நாடகங்கள் புரியுக்கூடியதாகவும் பார்வையாளருக்கு செய்தி ஒன்றைக் கூறுவதாகவும் அமையும்.

அரங்காடலின் ‘ஆக்குவாய் காப்பாய்’ நாடகத்தில் என்னை ஒரு வைத்திய நிபுணராக நடிக்க செய்து அதை ஐந்து மேடை ஏற்றி, பலர் பாராட்டைப் பெற வைத்த இயக்குனர் சாந்தி, என்னை அண்ணை என்றே அழைப்பார். இங்கு நடந்த எங்கள் வீட்டு வைபவங்களை இயக்கியவரும் சாந்தியே.

2012-ல் உஷா - சாந்தி உடன் மனைவியும் நானும் விடுமுறைக்கு இலங்கைக்கு சென்ற போது சாந்தியின் திட்டமிடலின் திறனையும் அதன் பலனையும் அனுபவித்தேன்.

2018-ல் இருந்து மூன்று முறை நடந்த எனது முழங்கால் சத்திர சிகிச்சை சம்பந்தமான பயணங்களுக்கு எனது பார்த்தசாரதியாக விருப்புடன் பணியாற்றியவர் நண்பன் சாந்தி. அத்துடன் எந்த விழாவாயினும் என்னைக் கூட்டிச் செல்பவர் சாந்திதான். ஐந்து மணி என்றால் 4.59-க்கு சாந்தியின் Car drive-way-யில் நிற்கும். விழா நிகழ்வுகளை விட வாகனத்தில் சாந்தியின் விமர்சனமும் சம்பாஷனையும் சுவாரசியமாக இருக்கும்.

தமிழர் தகவல் ஆண்டு மலர்களில் சாந்தி எழுதி வந்த கட்டுரைகள் அவரின் எழுத்து வன்மைக்கு எடுத்துக்காட்டு.

காலம் தாழ்த்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் இந்த நான்கும் சாந்தியிடம் இல்லாதவை.

சாந்தியின் நடை, உடை, இரசனை, உரையாடல், ஹாசியம், விமர்சனம் அனைத்துமே தனித்துவமானவை.

எல்லோருக்கும் நண்பனாகவும், எல்லோருக்கும் இனியவராகவும், எல்லோருக்கும் உதவுபவராகவும், எல்லோருக்கும் பொதுவானவராகவும், எல்லோரின் மதிப்பிற்கு உரியவராகவும் எம் மத்தியில் வாழ்ந்த திரு. நாகமுத்து சாந்திநாதன் ஒரு ஆர்ப்பாட்டம் இல்லாத அற்புதக் கலைஞன்.

June 10 சாந்தியுடன் இருந்த நான் மதியம் 12:15 அளவில் விடை பெறுகிறேன் என்று கை அசைத்தேன். விடைபெறும் நேரம் எனக்கும் நெருங்கிவிட்டது, எல்லாம் plan படி போய்க் கொண்டிருக்கு என எனக்கு உணர்த்த சாந்தி Thumbs up காட்டிய போது நட்பின் வலிமையையும், வலியையும் உணர்ந்தேன்.



kathir.thuraisingam@thaiveedu.com



# செயல் வீரர் சாந்திநாதன்

- அ. புராந்தகன்

என்னுடைய மிகச் சிறுபராயத்தில் இருந்தே சாந்தி அண்ணாவை நான் நன்கு அறிவேன். அயல் ஊரவராக, பாடசாலையில் மூத்த சகபாடியாக, தனிப்பட்ட மற்றும் குடும்ப நண்பராக, உறவினராக, உடன்பிறவாச் சகோதரராக, ஆலோசகராக, வழிகாட்டியாக, கலை இலக்கியம் அரங்கக் கலைகள் என்று வருகின்றபோது கைகோர்த்து நடந்த உன்னதமான கலைத் தோழனாக என்று பல பரிமாணங்களில் விரிவது எனக்கும் அவருக்கும் இடையேயான தொடர்பு. அவரிடமிருந்து நான் கற்றுக் கொண்டதும் பெற்றுக் கொண்டதும் பற்பல.

பாடறிந்து ஒழுகும் அவரது பண்பாடு, எவரையும் நோகடிக்காமல் சிக்கலான விஷயங்களைக் கூட லாவகமாகக் கையாளும் அவருக்கேயுரிய தனித்துவத் திறமை, நடிகராக, நெறி



யாளராக நாடகக் கலையில் அவருக்கிருந்த ஆற்றல், செய்நேர்த்தி, கலைஞர்களைத் தேடிச் சென்று பாராட்டும் பெருந்தன்மை, நேரம் தவறாமை, அழகுணர்ச்சி, நகைச்சுவை கொப்பளிக்கும் உரையாடல்கள் இவை பற்றியெல்லாம் பலரும் அறிவர்.

அவரது குடும்பத்துடன் ஓரளவு நெருங்கிப் பழகியவன் என்ற வகையில் தனது சகோதரர்கள், குடும்பத்தினர், உற்றவர், உறவினர், நண்பர்கள் என்ற வட்டத்தில் தான் செய்ய வேண்டிய கடமைகள் அனைத்தையும் திட்டமிட்டுக் குறைவின்றிச் சரிவரச் செய்து முடித்த செயல் வீரர் சாந்தி அண்ணா என்பது எனது அவதானிப்பும் அசைக்க முடியா நம்பிக்கையும் ஆகும். இந்த வட்டத்திற்கு அப்பால் அரங்க வெளியிலும், ஏனைய சமூகம் சார் பொது வெளியிலும் கூட காத்திரமான பங்களிப்பை இவர் வழங்கத் தவறவில்லை.

அவருடைய குடும்பத்தினர் குறிப்பிட்டது போல கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பே மரணம் மிக அருகில் நெருங்கி வருகிறது என்பதைத் தெரிந்து கொண்டு, தனது இறுதிக் காலங்கள் எப்படி அமைய வேண்டும் என்பதைக் கூட திட்டமிட்டுச் செயலாற்றக் கூடிய ஓர் அரிய வாய்ப்பை காலம் அவருக்கு வழங்கி இருந்தமை, ஒரு புதிர்கொண்ட விசித்திரம் என்றே எண்ணத் தோன்றுகிறது.

விருந்தினர்களை அவர் எவ்வாறு வரவேற்று உபசரிப்பாரோ, அதேயளவுக்கு இயல்பாக, காலனின் வரவையும், இயற்கையின் நியதி என்று ஏற்று, நேசித்து கொடிய நோயைக்கூட திடமாக எதிர்கொண்டு, தனக்கான மலர் வளையங்களை விடவும், அந்தச் செலவை புற்று நோய் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்துங்கள் என்று அவரே சொல்லி இருந்தது இங்கு கவனிக்கத்தக்கது.

வாழும் போது பலரும் பயனுற வாழ்ந்த ஒரு நல்ல உள்ளம், இறக்கும் போதும் மனுக்குலத்திற்கான பயனுறு செய்தி ஒன்றையே விட்டுச் சென்றிருக்கிறது. மரணம் ஒரு சம்பவம், வாழ்வு ஒரு சரித்திரம் என்று கூறுவார்கள்.

ஓய்வெடுங்கள் சாந்தியண்ணா. உங்கள் மரணம், கொடிய துயரே எனினும் முடிவே அல்ல. காலம் ஓடும். சிறுகச் சிறுக துயரம் ஆறும். உங்கள் வாழ்வோ மிகவும் வலியது. அர்த்தம் நிறைந்தது. தலைமுறை தாண்டியும் வழி வழியாக என்றும் தொடரும்! நிலைக்கும்!



puranthagan@thaiveedu.com





# சாந்திநாதா !

அன்பெனும் பண்பால்
ஆக்கப்பட்ட நண்பனே!

சாந்தமெனும்
சந்தனக் குழம்பால்
வார்க்கப்பட்ட
சாந்திநாதனே!

எவருடைய பாதைகளுக்கும்
உன் நிழல் கூட
இடையூறாய் இருந்ததில்லை.

முற்றத்தில் சரிந்த வெண்நிலவை
முகத்திலும்
கொற்றவர் சுமந்த செங்கோலை
குணத்திலும் ஏந்திய
உன்னதம் நீ

பூபாளத்துப் பனித்துளியில்
குளிர்ந்திருக்கும் புல்லிதழ்கள்.
இளஞ்சூரியப் பொழுதில்
உன் பாதங்களின் ஸ்பரிசத்துக்காய்
காமத்தோடு காத்திருக்கும்
தாபத்தோடு பார்த்திருக்கும்

உன் உறவுகளின் நெஞ்சங்களில்
துன்ப மேகங்கள் கவியும் போதெல்லாம்
சிரித்துச் செழுத்த
உன் முகம்
வெட்டி மறையாத மின்னல் கீறாய்
ஒளி பாய்ச்சி
உற்ற துணை செய்யும்.

நின்று
நிதானித்து நீ
உச்சரிக்கும் சொல் ஒவ்வொன்றும்
ஆறுதலுக்கு அலைவோர்
உள்ளங்களை வருடும்
அமரர் தேசத்து
அருமருந்தல்லவா

ஆண்களையே காதலில்
ஆழ்த்தும்
பேராண்மை நீ
எந்த விஸ்வாமித்திரன்
உன்னை
இராமனாய் வாழ
வழி சமைத்தான்

ஈழத்தவர் கலை உலகிலும்
கலை செய்வோர் உணர்விலும்
உயர்வுற்றிருக்கும் ஒப்பிலா
கலைஞன் நீ
உன் ஒருவன்
இல்லாமைக்கு ஈடாய்
ஒப்புக் கொடுக்க
ஏதுமில்லை என்னிடம்.
நிலைத்து நிற்கவென
யாருக்கும் நிலமில்லை இங்கு.

நிலையற்ற இக்கூட்டுக்குள்
நெஞ்சிருக்கும்வரை

என்றுமே
எங்களுக்குள்
நீ
நித்தியம்
சாந்திநாதா!

– அ. கந்தசாமி
kandasamy.a@thaiveedu.com

# இனிய நண்பர் நாடகர் சாந்திநாதன் சில நினைவுகள்

- க. பாலேந்திரா

இன்முகத்துடன், நகைச்சுவை உணர்வுடன் ஒருவருடனும் நேரடியாக முரண்படாமல் பழகும் பண்பு, சாந்திநாதனுக்கு மிகப் பெரிய நண்பர்கள், ஆதரவாளர்கள் வட்டத்தை தேடித் தந்திருக்கிறது. மற்றவர் திறமைகளை மனம் திறந்து பாராட்டும் பண்பு அவருடைய தனிச் சிறப்பு. நண்பர்கள் தான் அவரது மிகப்பெரிய பலம். கனடிய மற்றும் தமிழ் சமூகத்தில் மிகப் பெரிய நன் மதிப்பையும் சிறப்பையும் அவர் பெற்றிருந்தார்.

நல்லவற்றை இனம் கண்டு பாராட்டி, அதனை மற்றவர்க ளுக்கும் சிபாரிசு செய்து ஊக்கப்படுத்தும் பண்பு சாந்தியின் தனித்துவம்.

எனக்குத் தெரிந்தவரையில் அவரோடு பழகும் பல நண்பர் கள் அவரை ஒரு ஆலோசகராகவும் நம்பிக்கைக்கு பாத்திர மானவராகவும், கஷ்டமான காலங்களில் கைகொடுத்து வழி காட்டும் வல்லமை உடையவராகவும், விசுவாசமானவனவராக வும், நேர்மையானவராகவும் உணர்வதை நான் நேரடியாக பார்த்திருக்கிறேன். நானும் அப்படியே.

சாந்தி நாதன் தலைமைத்துவ பண்புகளுடன் தான் செயல்ப டுத்த விரும்புவதை கூட்டாக முடிவு எடுத்து அனைவரையும் தனது முடிவுகளுக்கு உடன்பட வைத்து செயல்படுத்தும் ஆற்றலும் சாமர்த்தியமும் மிகுந்தவர். எல்லோரையும் சமா ளித்து ஒருவரையும் நோகடிக்காமல் முடிவுகள் எடுப்பது என் பது எமது தமிழ்ச் சமூகத்தில் இலகுவான காரியமல்ல. தமிழ் சமூகத்தில் அவர் செயல்பட்ட அமைப்புகளில் உள்ள பலரும் இதனை நன்கறிவர். தான் செயல்பட்ட பல அமைப் புகளில் இதனை சாதித்துக் காட்டியிருக்கிறார்.

நான் சாந்தியை சுமார் 50 வருடங்களாக அறிவேன். 1975-ல் மொரட்டுவ பல்கலைக்கழக தமிழ் சங்கத்தில் நான் தலைவராக இருந்த போது, நான் தயாரித்த 'பிச்சை வேண்டாம்' நாடகம் தான் சாந்திநாதனுக்கும் எனக்குமான நட்பை இறுக்கமாக்கியது. என்னுடனும் எனது மனைவி ஆனந்தராணியுடனும் நடித்த அவர் பின்னாளில் ஒரு சிறந்த குடும்ப நண்ப னானார்.

1975-76 காலப்பகுதியில் நாங்கள் கொழும்பில் இருந்தபோது



1975இல் பிச்சை வேண்டாம் நாடகம்.
நடுவில் நிற்பவர் சாந்திநாதன்

எனது வீட்டுக்கு எதிர்வீட்டில் சாந்தி குடிஇருந்தார். அந்த நேரங் களில் நாங்கள் நடிகர் ஒன்றிய நாடகங்களிலும் இணைந்து பங்காற்றி இருக்கிறோம். தனது நண்பர்கள் பலரையும் எனக்கு அறிமுகப்படுத்தி, எமது நாடக இயக்கத்தை பலப்படுத்தினார்.

நான் 1978-ல் கண்ணாடி வார்ப்புகள் நாடகத்தை தயாரிக்க விரும்பிய சாந்தியை அணுகிய போது, அவர் தனது நண்பர் ஜெரால்டை எனக்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் பாடகர் சத்தியமூர்த்தியையும் எனக்கு அறிமுகப்படுத்தியவர் அவரே. அவர் 'கானசாகரம்' என்ற எமது ஈழத்து பாடல் இசை நிகழ்ச்



சியில் பங்கு பெற்றதோடு எனது ‘முகமில்லாத மனிதர்கள்’ என்ற நாடகத்தில் சிறப்பாக நடித்தார். ஜெரால்டும் சத்திய மூர்த்தியும் எமது நாடக இயக்கத்தில் தொடர்ந்து பங்கேற்ற தோடு எனக்கும் வாழ்நாள் நண்பர்கள் ஆனார்கள்.

அன்பும் விசுவாசமும் உண்மையும் நேர்மையும் நிறைந்தவ ராக எல்லா விதமான பிரச்சினைகளையும் பகிர்ந்து கொள் ளக் கூடிய நண்பர் அவர். இன்முகத்தோடு நகைச்சுவைப் பாங்கான அவரது பேச்சும் நடத்தையும் எல்லோரையும் கவ ரும். எந்த ஒரு விஷயத்திலும் அவர் கடைப் பிடிக்கும் நேரக் கட்டுப்பாடு, திட்டமிடல், ஒழுங்கு அமைப்பு, செயற்பாட்டுத் திறன் போன்ற பல அம்சங்கள் போற்றப்பட வேண்டியவை.

நாங்கள் கனடாவிற்கு எமது நாடகங்களை மேடையேற்றச் சென்ற பொழுதெல்லாம் சாந்தியுடைய பேருதவியும் ஆதர வும் மறக்க முடியாதது.

புலம்பெயர் சூழலில் நாங்கள் இருக்கும் நாடுகளிலே ஒரு நாடக நிகழ்வை - நாடக விழாவை நடத்துவது என்பது பெரும் சவால். அதிலும் நாடு விட்டு நாடு போய் குறைந்த அளவு எண்ணிக்கை உள்ள நடிகர்களுடன் இன்னொரு நாட் டுக்கு சென்று நாடக விழா நடத்துவது என்பது மிகவும் கடி னமானது.

கனடிய மண்ணில் நாங்கள் 1994-ல் நாடக விழா நடத்திய பொழுது அதில் பங்கேற்று ஒரு பாத்திரத்தில் நடித்ததோடு எனக்கு மிகவும் ஆதரவாக சாந்தி இருந்தார்.

சாந்தி, தான் 1976-ல் கொழும்பு நடிகர் ஒன்றியத்தில் ரசித் துப் பார்த்த முருகையனின் ‘இரு துயரங்கள்’ நாடகப் பிர தியை என்னிடம் கேட்டுப் பெற்று, தயாரிக்க விரும்பினார். நான் 1994-ல் எமது சுவிஸ் நாடக விழாவுக்காக அந்த நாட கத்தை தயாரித்திருந்தேன்.

தொடர்ந்து 1997-ல் மனவெளியின் நான்காவது அரங்காடல் நிகழ்ச்சியில் பங்கு பெற்ற முதல் அழைப்பு அவரிடம் இருந்தே வந்தது.
1996-ம் ஆண்டு அளவில் ஒரு வார இறுதி நாளில் கனடாவில் இருந்து ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. சாந்தி மறு



முனையில், ‘தம்பி செல்வன் இருக்கிறார். தொலைபேசியில் அவரையும் இணைக்கிறேன்’ என்றார். மூன்று பேர் வேறுவேறு இடத்தில் இருந்து ஒரே நேரத்தில் உரையாடுவது லண்டனில் இருந்த எனக்கு புதிதாக இருந்தது. ‘நாங்கள் உங்களுடைய நாடகங்கள் சிலவற்றை கனடாவில் மேடையேற்ற விரும்புகி றோம். நீங்கள் உங்கள் குழுவுடன் முடிவு எடுத்துவிட்டு அடுத்தமுறை குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்தில் இதே போல் நாங்கள் தொலைபேசி அழைப்பை எடுக்கும் போது உங்கள் முடிவைச் சொல்லுங்கள்’ என்றார்கள். கனடா மனவெளியின் நான்காவது அரங்காடல் நிகழ்வுக்கான எல்லா திட்டமிடலும் ஒழுங்குகளும் இப்படியான கூட்டு தொலை-பேசி அழைப்புகள் மூலம் தீர்மானிக் கப்பட்டன.

குறிப்பிட்ட தேதிகளில் குறிப்பிட்ட நேரங்களில் அச்சொட் டாக தொலைபேசி அழைப்புகள் கனடாவில் இருந்து வரும். நிகழ்வுக்கான நாடக தெரிவுகள், பயணம் செய்ய வேண்டி யவர்களின் விபரங்கள், அவர்களுக்கான தங்கும் வசதிகள், மேடை ஏற்ற நேரக் கட்டுப்பாடு போன்ற சகல விஷயங்க ளும் இப்படியான கூட்டு தொலைபேசி அழைப்பில் விவர மாக நுணுக்கமாக விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டது. எல்லா சிறு சிறு அம்சங்களும் மிக நுணுக்கமாக திட்டமிடப் பட்டு செயல்படுத்தப்படும் ஆற்றல் சாந்திக்கு கைவந்த கலை.



நேர கட்டுப்பாடு என்ற விஷயத்தை தான் ஈரானில் வேலை பார்த்த சமயம் கற்றுக் கொண்டதாக எனக்கு ஒரு முறை சொல்லி இருக்கிறார். சில வேளைகளில் சாந்திநாதனின் நுணுக்கமான விபரமான திட்மிடல் பாங்கு அளவுக்கு அதிகமோ என்று எண்ணும் வகையில் அமைந்திருக்கும்.

2000-ம் ஆண்டு நாம் கனடாவில் யுகதர்மம் நாடகத்தை மேடையேற்றச் சென்றபோது நீதிபதி என்ற முக்கிய பாத்திரத்தில் எம்மோடு சிறப்பாக நடித்தார். 2015-ல் கனடாவில் நடந்த எமது 'மரணத்துள் வாழ்வு' நாடகத்தில் சாந்தியின் மகன் நிஷாந்த்கூட மேடையின் பின்னால் இசை ஒலி நிர்வாகத்தில் பங்குபற்றி உதவ அவரையும் ஈடுபடுத்தினார்.

நாடகப் பிரதிகள் ஆக்கம் தெரிவு போன்ற விடயங்கள் பற்றி அவர் என்னோடு சில வேளைகளில் உரையாடுவது உண்டு. கனடாவில் அவரது நாடக முயற்சிகள் மிகவும் நன்மதிப்பு பெற்றவை. அவரது ஒரு நாடகம் லண்டனிலும் நடைபெற்றது அதற்கு முன்கூட்டியே என்னென்ன தேவை என்ற விபரமான குறிப்புக்களை அனுப்பி என்னிடம் சில உதவிகளை பெற்றிருந்தார்.

எனது நெருங்கிய நண்பர் சாந்தி பற்றி இப்படி ஒரு பதிவு எழுதுவேன் என்று ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. எனது குடும்ப நண்பராக, நாடகத் துறையிலும் தனிப்பட்ட முறையிலும் ஆலோசனை வழங்குபவராக இருந்த சாந்தியின் இழப்பு ஈடு செய்ய முடியாதது. அவர் தான் எனது ஆரோக்கியம் உடல் நலம் குறைந்திருந்த வேளைகளில் அது குறித்து கரிசனையுடன் எனது உடல் உபாதைகள் பற்றி விசாரிப்பதுண்டு. தனது உடல்நலக் குறைவு பற்றி எனக்கு அவர் ஒரு மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களையே கூறி வந்தார் என்பது இப்போது எனக்குப் புரிகிறது. சுமார் 18 மாதங்களாக தான் அனுபவித்த தனது நோயின் தீவிரத்தை அவர் எனது நன்மை கருதியோ என்னவோ முழுமையாக என்னிடம் பகிரவில்லை என்றே நம்புகிறேன். என்னோடு தொடர்ந்து தொலைபேசித் தொடர்பில் இருந்தவர் அவர்.

கடந்த வருடம் சாந்தியும் துணைவியார் உஷாவும் லண்டன் வந்திருந்தபோது எமது நாடகக் குழுவினர் சிலருடன் எமது இல்லத்தில் ஒன்றுகூடி மகிழ்ந்த நினைவுகள் மனதில் நிழலாடுகின்றன. அந்த நேரத்திலும் தான் கொடிய நோய்க்கு ஆளாகி இருப்பதைக் காட்டிக் கொள்ளாமல் எல்லோருடனும் தனது வழமையான புன்னகையுடனும் நகைச்சுவைப் பேச்சுடனும் உறவாடினார். அதுதான் சாந்தியின் தனித்துவமான இயல்பு.

சாந்தியின் தாயார், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சம்பந்திமார் என்று அவரது உறவினர்கள் அனைவருமே எனக்கு நன்கு அறிமுகமானவர்கள். கனடா சென்ற வேளைகளில் அவர் வீட்டில் சில தினங்கள் நாங்கள் தங்கிச் செல்வது உண்டு.

சாந்தியின் நினைவு என்றென்றும் எம்மோடு இருக்கும்.



balendra.k@thaiveedu.com



# மனவெளியில் சாந்தியண்ணா


- செல்வன்

90-களின் ஆரம்பத்தில் எம்மோடு அறிமுகமானார் சாந்தி-யண்ணா. 1995 காலப்பகுதியில் ரொறன்ரோ நாடகச் சூழலில் நாடகத்துக்கென ஒரு அமைப்பின் தேவையைப் பற்றி நாம் தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்த வேளைகளில் அவருக்கும் இதே மாதிரியான எண்ணப்பாடு ஒன்று இருந்தது. இதனைச் சாத்தியமாக்கும் வகையில் தேவையான உந்துதல்களையும், ஆலோசனைகளையும் அளித்தார். இதன் விளைவாக 1996-ல் மனவெளி கலையாற்றுக் குழு தனியே நாடகத்துக்கான ஒரு குழுவாக உதயமாகியது.



அன்றிலிருந்து இன்று வரை 18 அரங்காடல் நிகழ்வுகள். அந்த நிகழ்வுகளில் 90 வீதமானவை நாடகங்கள். இவற்றோடு குறும்பா நிகழ்வு, கவிதா நிகழ்வு, இசை நிகழ்வு, கூத்து, நாட்டிய நாடகம் என கிட்டத்தட்ட 100 படைப்புக்கள் வரை மேடையேற்றப்பட்டுள்ளன. இவை அத்தனைக்கும் பின்னால் சாந்தியண்ணாவின் உழைப்பும் உள்ளது. மனவெளி கலையாற்றுக் குழுவை ஆரம்பித்து விட்டோம். நாடகங்கள் தேவை. அந்த நேரத்தில் கை கொடுத்தவர்கள் இருவர். ஒருவர் ஞானம் லெம்பெட் அண்ணா, மற்றவர் சாந்தியண்ணா. கவிஞர் முருகையனின் பிரதியான 'இரு துயரங்கள்' அவரது நெறியாள்கையுடனும், நடிப்புடனும் மேடையேறியது.

பின்னர் 'இப்படிக்குப் பிள்ளைகள்', 'போகாத வழி மீது', 'ஆக்குவாய் காப்பாய்' எனச் சொற்ப நாடகங்களே அவர் நெறியாள்கையில் மேடையேறியிருந்தாலும், தான் பயின்ற கல்லூரியான மகாஜனாவுக்காக தொடர்ச்சியாக பல நாடகங்





களைத் தயாரித்து தனது நெறியாள்கையில் மேடையேற்றினார். இவரது நெறியாள்கையில் மேடையேற்றப்பட்ட மாவை நித்தியானந்தனின் 'முட்டை' நாடகம் ரொறன்ரோவில் எண்ணற்ற பல மேடைகள் கண்டது குறிப்பிடத்தக்கது.

எந்தப் பிரதியை எடுத்தாலும் அதை மிக நேர்த்தியாகவும், கலை நயத்தோடும், அழகாகவும் நாடகமாக மேடையேற்றும் ஆற்றல் அவரிடமிருந்தது. 'இப்படிக்குப் பிள்ளைகள்' நாடகத்தில் 15 சிறுவர்கள். அவ்வளவு பேரையும் கட்டுக் கோப்பாக நடிக்க வைத்து மேடைப் பொருட்களைத் தேவையான நேரத்தில் மேடைக்குக் கொண்டு வரவும், அங்கிருந்து நகர்த்தவும் அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து மேடையில் அந்தச் சிறுவர்கள் ஆற்றிய ஆற்றுகை பற்றி இன்றும் பலர் விதந்தோப்பிப் பேசுவதுண்டு.

மேடையமைப்பு, உடைகள், ஒப்பனை, ஒளிப்பதிவு என்பவற்





றிலும் மிகவும் கவனமாக இருப்பார். ஒத்திகைகளில் நடிகர்க ளைக் கையாளும் போது அவர்கள் மனது நோகாமல் மிகச் சாதுர்யமாக கதைத்து அவர்களிடமிருந்து தான் எதிர்பார்க் கும் நடிப்பை வெளிக்கொணர்வார். ரொறன்ரோவின் பிரபல நெறியாளர்கள் கூட சாந்தியண்ணாவின் நாடகங்களில் காணப்படும் நேர்த்தி பற்றி இன்றும் சிலாகித்துச் சொல்வ துண்டு.

தனது நாடகங்களுடனோ அல்லது மனவெளியுடனோ தனது பணிகளைச் சுருக்கி விடாது, ரொறன்ரோவில் உள்ள பல நாடக குழுக்களுக்கும், வேறு பல அமைப்புகளுக்கும் தேவையான ஆலோசனைகளையும் உதவிகளையும் வழங்கி வந்தார். எந்த ஒரு மேடை நிகழ்வாக இருந்தாலும் அங்கே சாந்தியண்ணா இருப்பார். அந்த நிகழ்வில் ஆற்றுகை செய்த கலைஞர்களை மனம் திறந்து பாராட்டுவார்.

ரொறன்ரோவில் வாழும் தமிழ் நாடக கலைஞர்கள் பலரும் சாந்தியண்ணாவின் பாராட்டைப் பெற்றவர்களாகவே இருப் பார்கள். மேடையை விட்டு அவர்கள் இறங்கும் போது அவர்களின் கரங்களைப் பற்றி பாராட்டு மழை பொழிவ தோடு அடுத்த நாள் ஆற்றுகைக் கலைஞர்களையும், அமைப்பின் பொறுப்பாளர்களையும் தொலைபேசியில் அழைத்து ஆற்றுகைகள் குறித்த தனது கருத்துக்களை முன் வைப்பார்.

நாடகம் மட்டுமன்றி, அவர் மற்றைய கலைகளின் ரசிகனாக இருந்தார் என்றாலும், அரங்க கலைஞனாகவே எல்லோரா லும் அறியப்பட்டார். அவ்வளவுக்கு நாடகங்களின் மீதான நேசம் அவருக்கு இயல்பாகவே இருந்து வந்துள்ளது. அவ ரின் இழப்பு மனவெளியைப் பொறுத்தவரையில் மிகப் பெரும் இழப்பு. அவரது பாணியில் இழப்புக்களைத் தைரி யத்துடனும், மனோதிடத்துடனும் கடந்து அரங்கப் பணியாற் றுவோம்.



selvan@thaiveedu.com



# மகாஜனக்கல்லூரியும் நாடகநெறியாளர் சாந்திநாதனும்

- குரு அரவிந்தன்

இனிய நண்பர், நாடக நெறியாளர் நாகமுத்து சாந்திநாதன் ஜுன் 10, 2023 சனிக்கிழமை எங்களைவிட்டுப் பிரிந்து விட்டார் என்ற செய்தியை நம்பமுடியாமல் இப்பொழுதும் இருக்கின்றது. பழகுவதற்கு மிகவும் அன்பான, பாசமான ஒரு நண்பரை இழந்து விட்டோமே என்ற கவலைதான் எங்களிடம் மிஞ்சி நிற்கின்றது.

அவரது இறுதி உறக்கப் படுக்கையில், 'நேரம் பொன்னானது' என்ற குறிப்பு எழுதப்பட்டிருந்தது. அவரது ஆத்மா எங்களைவிட்டுப் பிரிந்த நேரம் அதில் குறிக்கப்பட்டிருந்தது. நேரத்தை மிகவும் நேர்த்தியாகக் கடைப்பிடித்தவர்.

கலை உலகிற்கு நன்கு அறிமுகமான சாந்திநாதன் இலங்கையில் மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தெல்



லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரான இவர், சிறந்த நடிகராகச், சிறந்த நெறியாளராகக் கனடாவில் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டார். கல்லூரிப் பேச்சுப் போட்டிகளில் பல பரிசுகளை வென்றவர். நாடகத்துறையில் தொடர்ந்து பல விருதுகளைப் பெற்ற, பிரபலமான மகாஜனக்கல்லூரியின் ஆசிரியர்களான திரு. கதிரேசம்பிள்ளை, திரு. செல்லத்துரை, திரு. சண்முகசுந்தரம், வித்துவான் சிவபாதசுந்தரம் ஆகியோரது நாடகப் பயிற்சிப்பட்டறையில் பயிற்சி பெற்றவர்.

ஒரு பொறுப்பை அவரிடம் கொடுத்தால், அதை நன்கு திட்டமிட்டுப் பொறுப்பாகச் செய்து முடிக்கக்கூடிய வல்லமை அவரிடம் இருந்தது. ஒரு நிகழ்வென்றால் அதற்கான நேர அட்டவணையையும், அவர்கள் செய்ய வேண்டிய பணியையும் குறிப்பிட்டு, நிகழ்வில் பங்குபற்றும் ஒவ்வொருவரிடமும் கொடுத்து விடுவார். இதற்கு அவரது கடின உழைப்பும் ஒரு காரணமாகும். இது மட்டுமல்ல, யாரிடமெல்லாம் என்ன திறமை இருக்கின்றதோ அதை எல்லாம் வெளிக்கொண்டு வருவதற்குத் தன்னால் முடிந்தளவு உதவிகளையும் செய்யக் கூடியவர். நான் சங்கத்தின் உப-செயலாளராக இருந்த போது, மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளையின் தலைமைப் பொறுப்பை ஏற்று மிகவும் திறம்படச் செயலாற்றியதை என்றும் மறக்க முடியாது. இவரது காலத்தில் கல்லூரியின் செயற்பாட்டுக்காகக் கணினி வகுப்பறை ஒன்றை ஆரம்பித்து அதற்கான கணினிகளையும், பராமரிப்புச் செலவுகளையும் வழங்கியிருந்தார். அதைத் தொடர்ந்து மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் காப்பாளராகவும் இவர் பணியாற்றினார்.

தமிழகத்தில் இருந்து வெளிவரும் இனிய நந்தவனம் யூன் மாத இதழில் 'திசைகள் எங்கும் தமிழ்ச் சிறகுகள் - 8'-ல் நாடக நெறியாளர் நண்பர் சாந்திநாதனைப் பற்றிப், புலம் பெயர்ந்த கனடா மண்ணில் தமிழ்மொழியை வளர்த்தெடுப்பதில் தனக்கு விருப்பமான துறையான நாடகத்துறை மூலம் அவர் செயற்படுவதைக் குறிப்பிட்டிருந்தேன். மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கலைநிகழ்ச்சிக்காகக் கனடாவில் அவரது நெறியாள்கையில் உருவான 'மனசுக்கு மனசு' என்ற நாடகத்திற்குக் கதைவசனம் எழுதும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருந்தார். நான் முதலில் சற்றுத் தயங்கினேன். காரணம் மகாஜனக்கல்லூரி மேடையேற்றும் நாடகம் என்றால் பலராலும் பாராட்டப்பட்டதாகவே இதுவரை காலமும் இருந்திருக்கிறது. எனது தயக்கத்தைப் புரிந்து கொண்ட அவர், தந்த ஊக்கத்தால் நானும் அவர் விரும்பியபடி வசனம் எழுதிக் கொடுத்தேன். கணபதி ரவீந்திரன் குழுவினர் நடித்த அந்த நாடகம், ரொறன்ரோவில் மட்டுமல்ல, ரசிகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க மொன்றியலிலும் மேடையேற்றப்பட்டது.

இது போன்ற பல நாடகங்களை அவர் கனடாவில் மேடையேற்றிப் பாராட்டுக்களைப் பெற்றிருக்கின்றார். ஒன்ராறியோ கல்விச் சபைகள் இணைந்து நடத்திய தமிழ்விழாவின்போது அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் மேடைப் பொறுப்பைச் சாந்திநாதனிடம் தான் ஒப்படைத்திருந்தார். நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பங்குபற்றிய அந்த நிகழ்வைச் சாந்திநாதன் மிகவும் சிறப்பாகச் செய்து முடித்துப் பாராட்டும் பெற்றார்.

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடாவில் நடத்திய எல்லா நிகழ்வுகளிலும் சாந்திநாதன் முன்னின்று பாடுபட்டார். ஒன்றுகூடல், விருந்துபசாரம், விளையாட்டுப் போட்டிகள், கோயில் திருவிழாக்கள், கலைநிகழ்ச்சிகள், மாணவர்களுக்கான பரீட்சைகள், பயிற்சிப் பட்டறைகள், சுற்றுலாக்கள் என்று எதற்குமே வருகைதர அவர் பின்னின்றதில்லை. தமிழ்மொழியை வளர்ப்பதிலும், இளைய தலைமுறையினரை இனங்கண்டு ஊக்குவிப்பதிலும் அவர் புலம்பெயர்ந்த மண்ணில் ஒரு முன்னோடியாகச் செயற்பட்டார்.

அவரது ஆத்மா சாந்தியடைய மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்களாகிய நாங்களும், அவரது குடும்பத்தினருடன் இணைந்து பிரார்த்திக்கின்றோம்.



kuruaravindan@thaiveedu.com

# சாந்திநாதன் என்ற ஆளுமை

**- ப. ஸ்ரீஸ்கந்தன்**

இதயத்தைப் பிழிந்து விடும் அளவுக்கு சோகத்தைத் தந்துவிட்டது அவரது மறைவு.

நட்பின் வலிமையை உணர்த்திய வலி. இருவரும் இறுகக் கைபிடித்து, கண்கள் பனித்து, இறுதி விடைபெற்ற கணங்கள் நிழலாய்த் தொடர்கிறது.

சாந்தி அண்ணன் ஒரு மகத்தான ஜீவன். அவரை நான் முதன் முதலாக 1994-ல் சந்தித்தேன். அப்போது நாடக விழாவை நடத்த கனடா வந்த நாடகர் பாலேந்திரா எனது வீட்டில் தங்கியிருந்தார். அவரைச் சந்திக்க சாந்தி அண்ணர் வந்திருந்தார். விழாவில் மேடையேறிய மாவையின் ஐயா எலக்ஷன் கேட்கிறார் என்ற நாடகத்தில் ஒரு பாத்திரம் ஏற்று, ஒத்திகைக்காக வீட்டுக்கு வந்து போனதில் சாந்தி அண்ணர் எனக்கு நெருக்கமானார்.

சிறியர் என்று என்னை அவர் வாஞ்சையோடு அழைத்தார். கால்களைக் குறுக்காகப் போட்டு, என் தோளில் கையைச் சாத்தி அல்லது என் முதுகைத் தடவியபடி மனம் விட்டு அவர் பேசும் விதம் அலாதியாக இருக்கும். மிகுந்த சாணக்கியத்துடன் விடயங்களைக் கையாள்வதும் உரையாடல்களை நிகழ்த்துவதும் அவருக்குக் கைவந்த கலை.

அவன் சிங்கன், உது நல்லா இருக்கு, குறைகளைப் பிறகு கதைப்பம் என்று 'பொசிட்டிவ்'வாகவே கதைப்பார். உலகக் கிண்ண உதைபந்தாட்டம், கிறிக்கற் விளையாட்டுக்களை தவறாமல் பார்த்துவிட்டு அலசுவது சுவையாக இருக்கும். அவரது தொலைபேசி அழைப்புகளைத் தவிர்க்க முடியாத அளவுக்கு சிரிப்பும் கலகலப்பும் அதில் நிறைந்திருக்கும். பெரும் வெற்றிடம் ஒன்றை ஏற்படுத்திவிட்டு சாந்தி அண்ணர் போய்விட்டார். நிரவ முடியாத வெளி.

வீட்டை வரமுடியுமா அல்லது வீட்டை வாரும் என்று அரைகுறையாக அவர் அழைப்பதில்லை. 'சிறியர் நாளைக்கு நீர் என்ர வீட்டை வாரீர். அப்ப நாளைக்கு கதைப்பம். சரி சிறியர்' என்று போனை வைத்துவிடுவார். அதில் உரிமையும் பாசமும் சேர்ந்திருக்கும். அவர் சொல்லை ஒருபோதும் மீற முடியாது.

அவர் பலருக்குப் பலவிதமான ஆலோசனைகளை வழங்கினார் என அவரது அஞ்சலி உரைகளில் குறிப்பிட்டார்கள். ஆனால் அவருக்கே ஆலோசனை வழங்கிய ஒரு சிலரில் நானும் ஒருவன். ஏனெனில் நான் தான் அவரது வங்கியாளன். அனைத்துப் பொருளாதார முடிவுகளையும் எனது சம்மதத்துடனே மேற்கொண்டார்.





சாந்தி அண்ணரின் அறுபதாவது வயது நிறைவின் போது தாய்வீட்டின் ஆழத்து முத்துக்கள் பகுதியில் அவரது கலை வாழ்வைப் பதிவு செய்திருந்தேன். அதனைக் காலத்துக் கேற்ப மாற்றங்கள் செய்து கீழே தருகிறேன்.

பெயரைப் போலவே சாந்தமான சுபாவமும் தோற்றமும், மந் தகாசப் புன்னகை, எல்லோரையும் வசீகரிக்கும் அவர் பேச்சு, அதில் இழையோடும் நகைச்சுவை, அடக்கமான பண்பு, ஆழமான அறிவு, தீர்மானங்களை எடுக்கும் ஆற்றல், அதனை நிறைவேற்ற மேற்கொள்ளும் நிர்வாகத்திறன் என இவை அனைத்தையும் ஒருங்கே கொண்டவர் தான் எமது கலைஞன் சாந்திநாதன் அவர்கள்.

திட்டமிடல் என்பதற்கு இவர் ஒரு பாடசாலையே ஆரம்பிக்க லாம். ஒரு கலை நிகழ்வில் இடம் பெறவேண்டிய நிகழ்ச்சிக ளைத் தெரிவு செய்தல், அதனை ஒழுங்குபடுத்தி தொய் வின்றி நடாத்துதல், குறித்த நேரத்தில் நிகழ்ச்சிகளை ஆரம் பித்தல் என்று மகாஜனாக் கல்லூரிக் கலைவிழா, மனவெளி யின் அரங்காடல், சி.ரி.பி.சி.யின் கலைவிழா போன்ற கலை நிகழ்வுகளில் இவரது 'திட்டமிடல்' பெரும் பலமாக இருக் கும்.

இதே போல் தான் இவரது நாடக நெறியாள்கையும். ஒரு வசனத்தை எப்போ, எங்கே, எந்தக் கோணத்தில் நின்று சொல்லவேண்டும், மேடையமைப்பும் அதில் இருக்க வேண் டிய பொருட்களும், அவற்றை யார் யார் மேடைக்குக் கொண்டு வந்து வைப்பது, ஒளியமைப்பு, நாடகத் தெரிவு என்று எல்லாவற்றையும் மிகத் துல்லியமாகச் செய்வார். மன வெளியின் அரங்காடலில் மேடையேறிய 'இரு துயரங்கள்' நாடகத்திற்கு இவர் மேற்கொண்ட நெறியாள்கை இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

அளவெட்டி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சாந்தி-நாதன் அவர்களின் நாடகப் பிரவேசத்துக்கு ஊன்றுகோலாக இருந்தது அளவெட்டி ஞானோதயா சனசமூக நிலையத்தில் மேடையேற்றப்பட்ட நாடகங்களே. அத்துடன் பெரும் நாடகக் கலைஞனாக இருந்த கவிஞர் கதிரேசர்பிள்ளை அவர்களின் ஊக்கமும் இவரை நாடகப் பக்கம் இட்டுச் சென்றுள்ளது. மஹாகவி உருத்திரமூர்த்தி, லயஞான பூபதி தட்சணாமூர்த்தி போன்ற பெரும் கலைஞர்கள் பிறந்த மண் அல்லவா. இத னால் கலை, சாந்திநாதனை ஆட்கொண்டதில் வியப் பில்லை.

தனது 13-வது வயதில் கோவலன் கண்ணகி என்ற சிறுவர் நாடகத்தில் பாண்டிய மன்னனாக வேடமேற்றிருந்தார். இதுவே இவரது முதல் மேடையேற்றமாகும். இதன் பின்னர் ஞானோதயா சனசமூக நிலையத்தில் மேடையேறிய பல சமூக நாடகங்களில் பெண் பாத்திரங்களில் தோன்றினார். வெள்ளை நிறம், மென்மையான குரல் என்று அசல் பெண் ணாகவே மேடையில் காட்சி தந்ததாக நண்பர்கள் குறிப்பிடு கின்றனர்.

மகாஜனாக் கல்லூரியில் பயின்ற காலத்தில் கல்லூரியின் இல்லங்களுக்கிடையேயான நாடகப் போட்டிகளில் இவர் பங்கு கொண்டார். இதன் அடுத்த கட்டமாக சாந்திநாதன் நடித்த காங்கேயன் சபதம், ஜீவமணி ஆகிய நாடகங்கள் அகில இலங்கை ரீதியில் கல்லூரிகளுக்கிடையில் நடை பெற்ற நாடகப் போட்டிகளில் முதற் பரிசினைப் பெற்றுக் கொண்டன. மகாஜனாக் கல்லூரி தொடர்ந்து 5 தடவைகள் இவ்வாறு முதற் பரிசைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

கல்லூரியில் இடம்பெறும் பேச்சுப் போட்டிகளில் எப்போதும் முதற் பரிசை வெற்றி கொள்ளும் சிறந்த பேச்சாளனாக சாந் திநாதன் விளங்கினார். இவர் மட்டுமல்ல, பேச்சுப் போட்டி என்றால் நாகமுத்து குடும்பம் தான் என்பது போல் இவரது சகோதரர்களும் வெவ்வேறு பிரிவுகளில் முதற் பரிசைப் பெற்று வந்தனர். வடமாகாண ரீதியில் கல்லூரிகளுக்கி டையே நடைபெற்ற பேச்சுப் போட்டியில் மத்திய பிரிவில் இவர் முதற் பரிசினைப் பெற்றுக்கொண்டார்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரியில் உயர் கல்வி பயி லும் காலத்தில் இவர் மேடையேற்றிய 'நீதிக்கு ஒரு சோதனை' நாடகம் பலரைக் கவர்ந்தது.

இவ்வாறு சமூக, சரித்திர நாடகங்களில் பங்குபற்றி வந்த சாந்திநாதன் அவர்களை நாடகம் பற்றிய புதிய சிந்தனைக் கும், நவீன நாடகங்கள் பற்றிய பிரக்ஞைக்கும் வழிகோலி யது அவரது கட்டுப்பெத்தை பல்கலைக்கழக நாட்களே. அங்கு இடம்பெற்ற தாசீசியஸ் அவர்களின் நாடகப் பட்டறை யில் பங்கு கொண்டதும், தங்கியிருந்த வீட்டுக்கு முன் வீட்

டில் குடியிருந்த க. பாலேந்திரா அவர்களுடனான தொடர்பும், நட்பும் நாடகம் குறித்து அடுத்த நிலைக்கு இவரை அழைத்துச் சென்றன. தாசீசியசின் 'பிச்சை வேண்டாம்', நா. சுந்தரலிங்கத்தின் 'விழிப்பு', மஹாகவியின் 'புதியதொரு வீடு', சொர்ணலிங்கத்தின் 'எழிமரசி' என்பன பல்கலைக்கழக நாட்கள் ளில் இவர் பங்குகொண்ட நவீன நாடகங்களாகும்.

இலங்கையில் நீர்ப்பாசன இலாகாவில் பொறியியலாளராக வேலை செய்த நாட்களில் நிகழ்ந்த இனக் கலவரங்களின் போது மயிரிழையில் இவர் உயிர் தப்பினார். கனடா இவருக்கு அபயம் அளித்தது.

இதுவரை நடைபெற்ற மனவெளி கலையாற்றுக் குழுவினரின் பல அரங்காடல் நிகழ்ச்சிகளின் மேடை நிர்வாகத்தைப் பொறுப்பாக நடத்திய இவர் நாடகங்களில் நடித்தும் நெறி



யாள்கை செய்தும் மேலதிக பங்களிப்பைச் செய்தார். முருகையனின் 'இரு துயரங்கள்' நாடகத்தை நெறியாள்கை செய்ததுடன் அதில் டாக்டர் பாத்திரத்தையும் ஏற்றுத் திறம்பட நடித்திருந்தார். மேலும் பொன்னையா விவேகானந்தனின் 'போகாத வழி மீது', சகாப்தனின் 'ஆக்குவாய் காப்பாய்' ஆகிய நாடகங்களையும் நெறியாள்கை செய்திருந்தார். சாந்திநாதன் எழுதி, நெறியாள்கை செய்த 'இப்படிக்கு பிள்ளைகள்' என்ற முற்றிலும் சிறுவர்கள் பங்கு கொண்ட நாடகம் அன்றைய அரங்காடலின் முத்தாப்பாக அமைந்திருந்தது. 17 சிறுவர்களுக்கு நடிப்புப் பயிற்சி கொடுத்தது, தமிழைப் பேச வைத்தது போன்ற காரணங்களால் அந் நாடகம் அன்று பேசப்பட்டது.

மகாஜனாக கல்லூரி பழைய மாணவர்கள் இங்கு நடத்தும் கலை விழாக்கள் பிரசித்தமானவை. அரங்காடலைப் போலவே இவ் விழாக்களின் வெற்றியின் பின்னணியிலும் ஒருவராக சாந்திநாதன் விளங்கினார்.

மகாஜனாக் கல்லூரியின் கலை விழாவில் மேடையேறிய மஹாகவியின் 'கோடை' நாடகத்தை நெறியாள்கை செய்த புராந்தகனுக்கு உதவியாக சாந்திநாதன் செயற்பட்டார். மேலும், தொடர்ந்த கலை விழாக்களில் இவர் எழுதி நெறியாள்கை செய்த 'இதுவும் நடக்கலாம்', 'உன்னை நீ அறிவாய்', 'தோற்ற மாயை' என்பன எல்லோரது பாராட்டுக்களையும் பெற்ற நாடகங்களாகும்.

கல்லூரியின் நூற்றாண்டுக் கலை விழாவில் மேடையேறிய குரு அரவிந்தனின் 'மனசுக்கு மனசு' என்ற நாடகத்தை சாந்திநாதன் நெறியாள்கை செய்திருந்தார். மிகவும் நேர்த்தியாக அமைந்திருந்த அந்த நாடகம் பார்வையாளர்களின் மனதைத் தொட்டு நின்றது.

'உன்னை நீ அறிவாய்' நாடகத்தின் பகுதியாக மேடையேறிய மாவை நித்தியானந்தனின் 'அவசரக்காரர்கள் 'நாடகத்தில் கதை சொல்பவராக மிகவும் இலாவகமாக, இயல்பாக நடித்துச் சென்ற சாந்திநாதன் அவர்கள் க. பாலேந்திராவின் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் கனடாவில் நடத்திய நாடக விழாக்களில், 1994-ல் இடம்பெற்ற மாவை நித்தியானந்தனின் 'ஐயா எலெக்சன் கேட்கிறார்', 2004-ல் 'யுகதர்மம்' ஆகிய நாடகங்களில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தியிருந்தார்.

இங்குள்ளவர்களின் போலித்தனங்களையும், முகத்திரைகளையும் கிழித்தெறியும் அல்லது கேள்விக்குள்ளாக்கும் நாடகங்களையே சாந்திநாதன் தேர்ந்தெடுத்து மேடையேற்றினார். இதன் நீட்சியாக, இவர் எழுதிய 'இனி இப்படித்தான்' என்ற வானொலி நாடகம் சி.ரி.பி.சி வானொலியில் ஒலிபரப்பானது.

இவ்வாறு கடந்த 40 வருடங்களாக சிறந்த நாடக நெறியாளனாக, நடிகனாக, கலை விழாக்களின் பின்னணியிலிருந்து செயற்படும் மூலவராக, நல்ல செயற்பாட்டாளராக தொடர்ந்து இயங்கி வந்த சாந்திநாதன் அவர்களை இலண்டன் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் நடத்திய கல்லூரி நூற்றாண்டுக் கலை விழாவிற்குப் பிரதம விருந்தினராக அழைத்துப் பாராட்டி கௌரவம் செய்துள்ளனர். அத்துடன், அவர் நெறியாள்கை செய்த 'ஆக்குவாய் காப்பாய்' என்ற நாடகமும் அக்கலை விழாவில் மேடையேற்றப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

சாந்திநாதன் பற்றி எண்ணும் போதெல்லாம் 'வாழ்க்கை ஒரு திருவிழா. அதனை நேர்த்தியாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாடுவது என்பது எமது கைகளில் தான் தங்கியுள்ளது' என்ற வாழ்க்கைத் தத்துவம் நினைவுக்கு வரும்.



sriskandan@thaiveedu.com

# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

## தெமோதரை குறிஞ்சிவாணனின் துயரம் சுமக்கும் தோழர்களாய் !

– மல்லியப்புசந்தி திலகர்

மலையக இலக்கியச் செல்நெறியில் மிக முக்கிய பண்புகளில் ஒன்று மண்ணின் மைந்தர்களினதும் மலையக மண் மீதும் மக்கள் மீதும் அன்புகொண்ட பிற பிரதேசப் படைப்பாளர்களினதும் படைப்புகளை அவவை பிரதிபலித்து நிற்பதாகும். பெரும்பாலும் பிற பிரதேசப் படைப்பாளிகளின் மலையக இலக்கியப் படைப்புகளாக நாவல், சிறுகதைகள் அமைந்த அளவுக்கு கவிதைப் பரப்பில் இல்லை எனலாம். மலையகப் பகுதிகளுக்குப் பயணித்த பொழுதுகளில் மலையகம் குறித்த கவிதைகளை எழுதியவர்களுள் கவிஞர் சாருமதி போன்றவர்களை நினைவுபடுத்தலாம். அகளங்கன், சி.சிவசேகரம் போன்றவர்கள் தொழில் நிமித்தமாக மலையகத்தில் வாழ்ந்த காலத்தில் மலையகக் கவிஞர்களுடன் இணைந்த தொகுப்புகளாகத் தமது கவிதைகளைப் பதிவு செய்துள்ளனர்.



கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவரான கவிஞர் நீலாபாலன் மலையகத்தின் ஊவா மாகாணத்தில் பெருந்தோட்ட உத்தியோகத்தராக நீண்டகாலம் வாழ்ந்துவந்தவராகத், தொடர்ச்சியாக மலையகம் சார்ந்த கவிதைகளை எழுதி வந்துள்ளார். மாறாக மலையகத்தில் பிறந்து வளர்ந்தவரான மலையகத்தவர் ஒருவர் கிழக்கு மாகாணத்துக்குச் சென்று குடியேறி நிரந்தரமாக வாழ்ந்தபோதும் அங்கிருந்தவாறே மலையகக் கவிதைகளைத் தொடர்ந்து எழுதி வந்துள்ளார். அவரே 'தெமோதரை குறிஞ்சிவாணன்'. தெமோதரை, நெதர்வில் தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் எனும் இயற்பெயரைக் கொண்ட கவிஞர் குறிஞ்சிவாணன், கிழக்கு மாகாணத்தின் திருக்கோவில் பகுதியில் சாகாமம் எனும் ஊரையே நிரந்தரமாகக் கொண்டவர்.

பதுளை, சவுதம் தமிழ் பாடசாலையில் கற்ற இவர் கவிஞர் எம்.சி.எம். சுபைர் நடத்திய 'மணிக்குரல்' எனும் மாணவர் இதழில் அதிகமாக எழுதியவர். கவிஞர் சுபைரின் மலையகத்துக்கான கவிதைப் பங்களிப்பை நினைவூட்டும் எழுத்தாளரும் ஆய்வாளருமான தெளிவத்தை ஜோசப், 'எழுத்தாளர்கள் கவிஞர்களைக் கல்லூரிக்கு அழைத்துத் தனது மாணவர்களுக்கு அறிமுகப்படுத்திவைத்தவர் கவிஞர் சுபைர். அவருடைய மாணவர்கள் பலர் பிரபல எழுத்தாளர்களாகப் பரிணமித்துள்ளனர். அவர்களுள் சதர்லன்ட் மு. துரைசாமி, நெதர்வில் குறிஞ்சிவாணன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்' எனக் குறிக்கின்றார். (நாளெந்த நாளோ - மு. துரைசாமி -

முன்னுரை - குறிஞ்சிப்பேரவை வெளியீடு 2010).

1963-ம் ஆண்டு வீரகேசரி தோட்ட மஞ்சரிக்கு எழுதியதில் இருந்து தொடர்ந்தும் பல்வேறு தினசரிகள், வார இதழ்கள், சஞ்சிகைகளுக்குத் தொடர்ச்சியாக எழுதி வந்துள்ளார் குறிஞ்




சிவாணன். 1991-ம் ஆண்டு ஜேர்மனியில் இடம்பெற்ற கோ. நடேசய்யர் நினைவுப் புத்தகக் கண்காட்சியில் தனது கவிதைப் பிரதிகளை இடம்பெறச் செய்தமைக்காக ஜேர்மனியில் வாழும் இலக்கியச் செயற்பாட்டாளர் ந. சுசீந்திரனை நன்றியுடன் நினைவு கூர்கின்றார் கவிஞர் குறிஞ்சிவாணன்.

கவிஞர் குறிஞ்சிவாணனின் 'துயரம் சுமக்கும் தோழர்களாய்' எனும் கவிதைத் தொகுப்பு 2011-ம் ஆண்டு வெளிவந்துள்ளது. அந்தக் கவிதை நூலுக்கு அவர் எழுதி இருக்கும் சமர்ப்பண வரிகளே உருக்கமானவை.

*'தேயிலைத் தளிர்களை*
*முதுகிலே சுமந்தபடி*
*வாயிலே வெற்றிலையை*
*மென்று, மென்று*
*அட்டைக்கடிக்கும் உமிழ்ந்தபடி*
*தேயிலைச் செடிகளுக்கிடையில்*
*ஏறியிறங்கினாய் கால் கடுக்க*
*தாயவளே! என்னையும்*
*கர்ப்பப்பையிலே சுமந்தபடி!*
*வெய்யிலென்றும் குளிரென்றும்*
*மழையென்றும் பாராமல் - உன்*
*மெய்யுழைப்பால் என்னை,*
*வேதனையை நெஞ்சில் சுமந்து*
*உய்ய வைத்த அன்னை கருப்பாயிக்கே*
*உவந்து இந்நூல் சமர்ப்பணமே!*

'ஏறத்தாழ அறுபதுகள் தொடக்கம் கவிதையுலகில் சஞ்சரித்து வந்துள்ள மலையகக் கவிஞர் குறிஞ்சிவாணனின் கவிதைகள் முழுத்தொகுப்பாக வெளிவருவதற்கான வாய்ப்பு இப்பொழுதுதான் கைகூடியுள்ளது. இதனால் மலையகக் கவிதை வரலாறு முக்கியமான கவிஞரொருவரை இழந்துவிடாமல் அக்கவிஞனுக்கு ஈழத்து கவிதை வரலாற்றிலே ஏற்றதொரு இடத்தை வழங்கும் அரிய - முக்கியமான - ஒரு வாய்ப்பினைப் பெற்றிருக்கின்றது என்பது இத்தொகுப்பிலுள்ள கவிதைகளை ஆழ்ந்து வாசிக்கின்ற பொழுது வெளிப்படுகின்றது' என நூலுக்கு அணிந்துரை எழுதி இருக்கும் கிழக்குப் பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் செ. யோகராசா குறிப்பிடுகிறார்.

*இன்றும் வெள்ளையர்*
*அமைத்துக் கொடுத்த வீடுகளில்*
*சுதந்திரக் காற்றை*
*சுவாசிக்க முடியாதஇ*
*சொந்தமாக வீடுகளோ, காணிகளோ*
*உரித்தில்லா பிறவிகளாய்*
*இன்னுந்தான் வாழ்கிறார்கள்*
*துயரம் சுமக்கும் தோழர்களாய்...*

எனத் தனது நூலுக்குத் 'துயரம் சுமக்கும் தோழர்களாய்...' எனத் தலைப்பிட்ட காரணத்தைத் தன்னுரையில் எழுதுகின்றார் கவிஞர் குறிஞ்சிவாணன்.

துயரம் மாறாதோ? எனும் தலைப்பில் எழுதியுள்ள கவிதையில்,

*நாளும் மலையேறி நாயா யலைந்துழைத்து*
*வாழும் எமக்குற்ற வறுமை யகன்றெந்த*
*நாளும் களிப்பெய்தும் நல்வாழ்வு காணுதற்கு*
*பாழும் உலகினிலே முடியவில்லை என் கண்ணே!*

என்ற ஏக்கப் பெருமூச்சையும் வெளிப்படுத்தி நிற்கின்றார்

கவிஞர் குறிஞ்சிவாணன்.

வறுமை நாயகர்கள் எனும் தலைப்பிலமைந்த கவிதை இவ் வாறு அமைகிறது.

***துண்டு நிலம் வேண்டும் - எமக்கொரு***
***துண்டு நிலம் வேண்டும் - அந்தத்***
***துண்டு நிலத்தினிலே - காய்கறித்***
***தோட்டஞ் செய்ய வேண்டும்!***

***தோட்டத்துக் காணிகளைப் - பெரும்பான்மைத்***
***தோழரே பகிர்ந்து கொண்டார் - இந்த***
***நாட்டுக் குழைத்துழைத்தே - வறுமை***
***நாயக ராகி விட்டோம் நாம்!***

மலையக அரசியல் நடப்புகள் எவ்வாறு உள்ளன, அந்த மக்களின் தேவைகள்தான் என்ன? என்பதைத் தனது கவிதை யின் ஊடாக மிகவும் நேர்த்தியாக உணர்த்தும் இவரது வரி கள், அவரது வலிகளில் இருந்து பிறப்பெடுப்பதை அவதா னிக்கலாம்.

இதுவோ நீதி எனும் தலைப்பில் குறிஞ்சிவாணன் எழுதி இருக்கும் கவிதை ஒன்றில் தோட்டத் தொழிலாளர்களின் வேதன உயர்வு குறித்து இவ்வாறு எழுதுகிறார்.

***ஈழத்தை வளங்கொழிக்கும் வகையில் நல்ல***
***எழில் நாடாய் மாற்றியவர் வறுமை யாலே***
***காலத்தைக் கடத்துகிறார்! அவர்கள் சிந்தும்***
***கண்ணீரும் வியர்வையுமே ஆறாய் மாறிக்***
***கோலத்தை கூட்டுகிற நிலையில் சற்றும்***
***கூட்டாராம் வேதனத்தை இறைவா! இந்த***
***ஞாலத்தை மக்களினைப் படைத்தாய் ஏழை***
***நடுத்தெருவை நாடிடுதல் நன்றோ சொல்லு!***

மரபுக்கவிதைகளாகவும் புதுக் கவிதைகளாகவும் பலநூறு கவிதைகளை எழுதியுள்ள குறிஞ்சிவாணன் குறித்துக் கவிஞர் தம்பிலுவில் ஜெகா இவ்வாறு பதிவு செய்கிறார்.

***எழிலருவி வழிந்தோடும்***
***ஏற்றமுறு மலையகத்தின்***
***ஆழியாத கவிஞெனென***
***அரங்கேறி பாவடிப்போன்***
***வழக்கொழியா மரபெழுதும்***
***வரம் பெற்று வந்தவனாம்***
***... ... ...***
***கிழக்கிலங்கை சாகாமம்***
***பழமைப் பதிதன்னில்***
***குறிஞ்சிமலர் கவிபாடும்***
***குறிஞ்சிவாணனன் புகழ் பாடும்!***

இவ்வாறு மலையகத்தில் நின்றும் புலம்பெயர்ந்து இலங்கை யின் கிழக்கு மாகாணத்தில் மலையகம் சாரா மண்வாசனைப் பிரதேசத்தில் வாழ நேர்ந்தாலும் மலையக மக்கள் சார்ந்தும், மண் சார்ந்துமான கவிதைகளைத் தொடர்ச்சியாகப் படைத்து வந்துள்ளதோடு அதனைத் தொகுப்பாக்கித் ‘துயரம் சுமக்கும் தோழர்களாய்...’ என நூலாக்கியும் தந்துள்ளார் கவிஞர் குறிஞ்சிவாணன் என்பது பெரிதும் மதிக்கத்தக்கது பாராட்டுக் குரியது.

திருக்கோயில் வி.பி.எம் வெளியீட்டகத்தின் இரண்டாவது வெளியீடாக வந்துள்ள இந்த நூல் அக்கரைப்பற்று அல்ட்டி அச்சகத்தில் அச்சிடப்பட்டுள்ளது. 2011-ம் ஆண்டு வெளி வந்த 88 பக்கங்களைக்கொண்ட இந்தச் சிறிய நூலில் 1967 ஆண்டு முதல் 2003 வரையாக அவர் எழுதிய கவிதைகள் இடம்பெற்று இருப்பது சிறப்பாகும்.

இந்தத் தொகுப்பு குறித்து எழுதும் பேராசிரியர் செ. யோக- ராசா: ‘மலையக மூத்த தலைமுறைக் கவிஞரொருவரது கவி தைகளுக்குரிய வலுவான - வளமான இயல்புகள் பலவற் றைக் கொண்டுள்ள இத்தொகுப்பு பனிமேகங்களை மூடி யுள்ள மலைகளுக்கு மத்தியில் வாழ்கின்ற தொழிலாளர்க ளது வாழ்க்கையின் துன்ப துயரங்களைக் கோலங்களாகவும் கோடுகளாகவும் வெளிப்படுத்துவதில் பெருமளவு வெற்றி பெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை’ எனப் பதிவுசெய்கிறார்.

இவ்வாறு மலையகத்தில் பிறந்து கிழக்கிலங்கைக்குக் குடி பெயர்ந்த கவிஞர் மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி யில் வித்தியாசமான ஒரு பதிவைச் செய்தவராகிறார்.

(தொடரும்...)



thilagar@thaiveedu.com




# இளவாலை விஜயேந்திரனின் கவிதைத் தொகுப்பு !
# முக்கியத்துவமும் பயன்பாடும்

- ரூபன் சிவராஜா

**படைப்புகளின் பெறுமதி என்பது அவற்றின் பிரதிபலிப்பில் உள்ள காலம் கடந்து நிற்கின்ற தன்மையிற் தங்கியுள்ளது. அவ்வாறு காலத்தின் பன்முகக்கூறுகளைப் பிரதிபலிப்பதோடு, காலம் கடந்து நிற்கின்ற படைப்புகளுக்கு ஓர் உலகம் தழுவிய பொதுத்தன்மையும் உள்ளது.**

கவிதை எழுதுவதற்குக் கற்றுக் கொடுக்க முடியாது. ஆனால் கற்றுக் கொள்ளலாம். இவருடைய கவிதைகளை



வாசிப்பதென்பது கவிதை பற்றிய புரிதலை வளர்த்துக் கொள்ள உதவும். கற்றுக்கொள்ள உதவும் என்பது எனது அனுபவம்.

1980-களில் ஈழத்தமிழ்க் கவிதைப் பரப்பில் அறிமுகமானவர்களில் முக்கியமான கவியாளுமை இளவாலை விஜயேந்திரன். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலம் உருவாக்கிய புதுக்கவிதை மரபில் தோன்றிய அல்லது புதுக்கவிதை ஓட்டத்திற் தோன்றிய, அதிற் பயணித்த கவிஞர்களில் முக்கியமானவர்.

புதுக்கவிதையில் தனித்துவ அடையாளம் கொண்ட வீரியமும், எளிமையும், உணர்வுபூர்வமானவையுமான கவிதைகள். விமர்சன பூர்வமானவை. அரசியலை, சமூகத்தை, வாழ்வியலைப் பிரதிபலிப்பவை. காலத்தின் குரலாக நின்று கேள்விகளை எழுப்புபவை. 1970-களின் நடுப்பகுதியில் பதினைந்தாவது வயதிலேயே கவிதைக்குள் பிரவேசித்த இவரின் எழுத்துப் பயணம் ஐந்து தசாப்தங்களை நெருங்குகின்றது. தமிழ்ச் சூழலில் நன்கு அறியப்பட்ட பல கவிஞர்களுக்கு விஜயேந்திரன் ஆதர்சமாக விளங்குபவர்.

கவிதை மட்டுமல்ல. பத்திரிகை, இதழியல், இலக்கியப் பணிகள், நோர்வேயில் தமிழ்மொழிக் கல்வி, சமூகச் செயற்பாடுகள், தாயகம் நோக்கிய மனிதாபிமானப்பணிகள், இயற்கை பேணல், அரங்கச் செயற்பாடுகள் என இயங்கி வருபவர் அவர்.

இப்பத்தியின் உள்ளீடு இரண்டு விடயங்களை ஒட்டியதாக அமைகின்றன.

இந்தத் தொகுப்பின் உள்ளடக்கம் என்ன, அதாவது எந்த அடிப்படையில் இந்நூல் தொகுக்கப்பட்டுள்ளது?

இந்தத் தொகுப்பு ஏன் வெளிவருகின்றது, தொகுக்க வேண்டிய அவசியம் என்ன?

படைப்புகளின் பெறுமதி என்பது அவற்றின் பிரதிபலிப்பில்

உள்ள காலம் கடந்து நிற்கின்ற தன்மையிற் தங்கியுள்ளது. அவ்வாறு காலத்தின் பன்முகக்கூறுகளைப் பிரதிபலிப்பதோடு, காலம் கடந்து நிற்கின்ற படைப்புகளுக்கு ஓர் உலகம் தழுவிய பொதுத்தன்மையும் உள்ளது.

இந்தக் கவிதைகள் ஏன் தொகுக்கப்பட வேண்டும், இவற்றின்




முக்கியத்துவம் என்ன என்ற கேள்விக்கான விடையாக அக்கவிதைகளின் பிரதிபலிப்பும் அவை ஏற்படுத்துகின்ற தாக்கமும் அடிப்படையானவை. விஜயேந்திரனின் கவிதைகளின் பேசுபொருள், வீரியம், அவை ஏற்படுத்தும் தாக்கம், அவை கடத்துகின்ற உணர்வு, கவித்துவ அழகியல், காலப் பிரதிபலிப்பு, காலம் கடந்து வாழக்கூடிய அக்கவிதைகளின் தன்மை என்பனவே இத்தொகுப்புருவாக்கத்திற்கான அடிப்படைகள். இவரது கவிதைகள் காலப்பிரதிபலிப்பு, காலம் கடந்த தன்மை, பேசுபொருள், வடிவம், உத்தி, மொழி சார்ந்து முக்கியமானவை.

தாயகத்தில் வாழ்ந்த காலத்தில் எழுதப்பட்ட கவிதைகளின் சமூக - அரசியல் - வாழ்பனுபவங்கள், புலம்பெயர் வாழ்வு இந்த இரண்டு வாழ்பனுபவங்களையும் இணைக்கின்ற அம்சங்கள் என்பவாக இவருடைய கவிதைகளின் பேசுபொருட்களைக் காணமுடியும். அத்தோடு தனது மனச்சாட்சிக்கு நேர்மையாகவும் உண்மையாகவும் இருந்து கொண்டு - விட்டுக் கொடுப்புகள் - சாய்வுகள் அற்ற மனநிலையோடு வெளிப்பட்ட கவிதைகள் என்பதுவும், அவை எழுப்புகின்ற சமூக - அரசியல் விமர்சனங்களும் கேள்விகளும் விஜயேந்திரனுடைய கவிதைகளைத் தனித்துவமானவையாகவும் முக்கியமானவையாகவும் ஆக்குகின்றன. விடுதலையையும் சமூகநீதியையும் அவாவுபவை, ஒடுக்குமுறையையும் அதிகாரத்தையும் எதிர்க்கின்றவை - அரசியற் பிறழ்வுகளைக் கூர்மையாக விமர்சிக்கின்ற கவிதைகள் என்ற அடிப்படைகளிலும் அவை முக்கியத்துவம் மிக்கவை.

இந்தத் தொகுப்பின் தலைப்பாகியுள்ள ‘எந்தக் கங்கையில் இந்தக் கைகளைக் கழுவுவது’ என்ற வரிகள் அத்தகையதொரு காலக்குரலான படிமம். அந்தப் படிமம் இடம்பெற்ற கவிதை உட்பட்ட, இவரது கவிதைகளை ஈழத்தின் சமூக - இலக்கிய விமர்சன முன்னோடி பேராசிரியர் கா. சிவத்தம்பி பல இடங்களில் விதந்துரைத்திருக்கின்றார். 1985 காலப்பகுதியில் உரையாடல் ஒன்றில், ஒரு வெளிநாட்டு இராஜதந்திரி தமிழ்ப் போராளி இயக்கங்களின் வன்முறைகளுக்கு எதிராகத் தமிழர்கள் குரல் எழுப்புவதில்லை என்ற குற்றச்சாட்டினை முன்வைத்தபோது, பேராசிரியர் கா. சிவத்தம்பி ‘சொல்லப்படாத ஒரு சேதி’ என்ற தலைப்பிலமைந்த மேற்சொன்ன படிமம் இடம்பெற்ற கவிதையை முழுவதுமாக வாசித்துக் காட்டி அக்கூற்றை மறுத்துரைத்துள்ளார்.

விஜயேந்திரன் அவர்கள் தீவிரமாகக் கவிதைத் தளத்தில் இயங்கிய காலம் என்று பார்த்தால் அது எண்பதுகளின் ஆரம்பத்திலிருந்து 90-களின் நடுப்பகுதிவரையான 15 ஆண்டுகள். அதனைத் தீவிரமாக இயங்கிய காலம் என்பதாக அல்லது தீவிரமான கவிதைகளை எழுதிய காலம் எனவும் சொல்லலாம். அவற்றில் ஆகக்கூடிய அரசியல் வீச்சினையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் கவிதைகள் தாயகத்தில் வாழ்ந்த காலத்தில், அதாவது 80-களின் நடுப்பகுதியிலிருந்து 80-களின் இறுதிக் காலங்களில் எழுதியவை. முன்னர் தொகுக்கப்படாத - அதேவேளை பத்திரிகைகள், இதழ்கள், சஞ்சிகைகளில் வெளிவந்த கவிதைகள் அவை. அவற்றைத் தேடிக் கண்டடைவதுதான் பெரும் சவாலான பணியாக இருந்தது.

அவற்றோடு 1999-ல் வெளிவந்த ‘நிறமற்றுப் போன கனவுகள்’ தொகுப்பில் இடம்பெற்ற கவிதைகள் இதில் மறுபதிப்புக் கண்டுள்ளன. தொகுப்பின் இறுதியில் இவருடைய பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பாடல்கள் எனும் போது தாயகத்திலும், தமிழகத்திலும், நோர்வேயிலும் இறுவெட்டு

கள், நடனங்கள், நாடகங்கள், அரங்க நிகழ்வுகளுக்காக எழுதப்பட்ட பாடல்கள் அவை.

எழுதுபவற்றைச் சேகரித்துவைக்கின்ற பழக்கம் விஜயேந்திரனிடம் இல்லை என்ற குறையைச் சொல்ல வேண்டியுமுள்ளது. அவரே இதுகுறித்த சுயவிமர்சனத்தைக் கொண்டிருக்கின்றார். சேகரிக்கின்ற பழக்கமின்மையாலும் கவிதைகள் பல காணாமற் போயுள்ளன. அதிகமாக எழுதிக் குவித்தவரல்ல. எழுதியவற்றில் அண்ணளவாகக் கால்வாசியேனும் காணாமற்போய்விட்டன, அல்லது அழிந்துவிட்டன. கடந்த இருபது ஆண்டுகளாக இவர் கவிதைகளைப் பெரிதாக எழுதவில்லை. அவ்வப்போது சில கவிதைகளும் பாடல்களும் எழுதியிருக்கின்றார். இவர் போன்ற படைப்பாளிகள் தொடர்ந்து எழுதுவது கவிதை உலகின் செழுமைக்குப் பங்களிக்கக்கூடியது.

இது இவருடைய எல்லாக் கவிதைகளையும் கொண்ட தொகுப்பா என்றால் இல்லை என்பதே பதில். ஆயினும் இது இவருடைய கவிதைகளைக் கொண்ட முழுமையான தொகுப்பு என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், இவர் எழுதிய எல்லாக் கவிதைகளையும் கண்டடைய முடியவில்லை. அவற்றைக் கண்டடைவது சாத்தியமான விடயமும் அல்ல. தாயகத்தில் வாழ்ந்த காலத்தில் எழுதிய கவிதைகள் பலவற்றின் கையெழுத்துப் பிரதிகளிலிருந்து பிரசுரமான கவிதைகளின் மூலப்பிரதிகள் வரை பாதுகாக்கப்படாமலும் காணாமற் போயும் அழிந்தும் போயுள்ளன. தேடிக்கண்டடையக் கூடியவற்றை இயலுமானவரை தேடிக்கண்டடைந்து இத்தொகுப்பில் உள்ளடக்கியிருக்கின்றோம்.

கவிதைகளும் பாடல்களும் காலவரிசையிற் தொகுக்கப்பட்டுள்ளன. அவருடைய எல்லாக் கவிதைகளையும் கண்டடைய முடியவில்லை என்றாலும் இந்தத் தொகுப்பு விஜயேந்திரன் என்ற கவிஞனின் பரிமாணங்களை மதிப்பீடு செய்ய உதவும். பல ஆண்டு காலக் கவிதை இயங்குதலையும் தமிழ்க் கவிதை - இலக்கியத்தின் செழுமைக்கான அவரது பங்களிப்பினையும் பிரதிபலிக்கும் என்பதை உறுதியாகக் கூறமுடியும்.

பத்திரிகை, இதழியற் துறைகளிலும் சிறுகதை, நாடகம், கவிதை எனப் பல தளங்களில் இயங்கியவர். இருப்பினும் கவிதைதான் அவருடைய முதன்மை அடையாளம். கவிதைகள் அல்லாத அவருடைய பிற எழுத்து வடிவங்களையும் தொகுக்க வேண்டுமென்ற விருப்பமும் எமக்கு உள்ளது. விஜயேந்திரனின் எழுத்துகள் என்ற தலைப்பின் கீழ் அனைத்தையும் தொகுக்கும் முயற்சியிற்தான் முதலில் இறங்கினோம். பிற எழுத்து வகைமைகளையும் சேகரிக்கத் தொடங்கியிருந்தோம். ஆனால் கவிஞனாக அவருடைய முக்கியத்துவத்தினைப் பிரதிபலிக்கின்ற வகையில் தனித்தொகுப்பின் அவசியம் கருதி கவிதைகள் மட்டும் தொகுக்கப்படும் முடிவினை எடுத்தோம். ஏனைய எழுத்துகளைத் தனித்தொகுப்பாகக் கொண்டு வரும் முயற்சியைப் பிறிதொரு சந்தர்ப்பத்தில் முன்னெடுப்போம்.


ஈழத்தின் புதுக்கவிதை சார்ந்த வரலாற்றினை - அவை செலுத்துகின்ற சமூக அரசியற் தாக்கத்தினை - கவிதை வடிவத்தினை - வெளிப்பாட்டு உத்திகளை - இவருடைய கவிதைகளைத் தவிர்த்துவிட்டுப் பேசிவிட முடியாது. அன்றைய நிகழ்வு, அங்கு வாசிக்கப்பட்ட மற்றும் ஆற்றுகை செய்யப்படும் கவிதைகள், உரைகள், நூல் அறிமுகக்குறிப்புகள் அதற்குக் கட்டியம் கூறின.

நூலுக்குப் பேராசிரியரும் கவிஞருமான எம். நுஃமான் வழங்கிய அணிந்துரையில் விஜயேந்திரனின் கவித்துவ வீச்சும் பாடுபொருளும் அழகியலும் குறித்த துல்லியமான பார்வையைக் காணலாம். விஜயேந்திரன் என்ற கவியாளுமை உருவாகுவதற்கு ஏதுவாக அமைந்த சூழலிலிருந்து, அவருடைய இலக்கிய, இதழியல், ஊடகத்துறைப் பங்களிப்போடு, தமிழ் மொழிக் கல்வி, சமூகப் பங்களிப்புகள் குறித்த விரிவான தகவல்களைத் தொகுப்புரையில் பதிவுசெய்திருக்கின்றோம். படைப்பாளியாகவும், சமூகச் செயற்பாட்டாளராகவும் விஜயேந்திரனின் பங்களிப்பினைப் பதிவு செய்துள்ள வகையில் ஒரு வரலாற்று ஆவண நோக்குநிலையிலும் தொகுப்புரை பதிவாகியுள்ளது.

நண்பர்கள் பலருக்கும் விஜயேந்திரனின் ஆரம்பகாலக் கவிதைகளைத் தொகுக்க வேண்டுமென்ற எண்ணம் நீண்ட காலமாகவே இருந்திருக்கின்றது. அவற்றைத் தேடிக்கண்டடைவதிலும் ஒருங்கிணைப்பதிலும் நிலவிய சவால்களே இத்தாமதத்திற்கான காரணம் எனத் தோன்றுகிறது. இத்தகைய ஒரு கவியாளுமையின் கவிதைகள் காணாமற்போவதை அனுமதிக்கலாகாது. அவை காலங்கள் தாண்டியும் பரவலாக வாசிக்கக் கிடைக்க வேண்டுமென்ற வேணவாவும், அக்கறையும் இத்தொகுப்புருவாக்கத்திற்கான காரணிகளில் முதன்மையானது. அத்தோடு, சிறந்த படைப்பாளியான விஜயேந்திரனின் கவித்துவ ஆளுமை மதிக்கப்பட வேண்டும், கொண்டாடப்பட வேண்டும் என்பதுவும் மற்றுமோர் உந்துதல்.

தமிழகத்தில் நூல்களின் பதிப்பாக்க, வெளியீடு மற்றும் விற்பனைத் துறைகளில் நீண்ட கால அனுபவமும் பாரம்பரியமும் மிக்க காலச்சுவடு பதிப்பகத்தின் அனுசரணையுடன் கூடல் எனும் புதிய பதிப்பகம் ஒன்றையும் உருவாக்கும் முயற்சியின் முதல் வெளியீடாகவும் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலாக்கத்தினையும் இந்நிகழ்வினையும் நண்பர்கள் இணைந்து முன்னெடுத்திருக்கின்றோம்.

கடந்த 2022-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடங்கிய கவிதைகளைத் தேடும் பணி, நூல் அச்சுக்குப் போகும் வரையான 8 மாத உழைப்பு 20.05.23 இலக்கிய, கலை அரங்க நிகழ்வாக ஒஸ்லோவில் (Rommen Scene) நிறைவடைந்தமை மகிழ்ச்சியளிக்கின்றது.



rooban.s@thaiveedu.com

# குட்டி இளவரசன்



**அஹமட் பிஸ்தாமி**

**சி**றுவர் இலக்கியம் உலகளவில் மிகுந்த ஈடுபாட்டுடன் நோக்கத்தக்க துறையாகும். கலை, இலக்கியம் சார்ந்து சிறு வர்களின் சிந்தனை, கற்பனைவளம் போன்றவற்றை மேம்ப டுத்தும் வகையில் சிறுவர் கலை, இலக்கியம் இன்று கணிச மான வளர்ச்சியை கண்டுள்ளது. சிறுவர்களுக்கான கதைகள் அதீத கற்பனையில் எழுந்து நிற்பவை. அறிவும் அறமும்

> **அன்புக்காக ஏங்கும் நாம்**
> **கிடைக்கும் எல்லாச்**
> **சந்தர்ப்பங்களிலும்**
> **அன்பை அடையாமல்**
> **விலகி நின்று**
> **மீண்டும் மீண்டும்**
> **தேடி அலைகிறோம்.**

சார்ந்து அவை அமைகையில் ஆரோக்கியமான, செழுமை யான, ஆளுமைவளம் நிறைந்தவர்களாக உருவாக்க முடி யும். குறிப்பாக சிறுவர்களை அருகில் வைத்து கதை சொல் வது காலத்தால் முந்தியதாகும். சிறுவர்களுக்கான கதை களை சிறுவர்களின் மனோநிலையில் இருந்து அவர்களது மொழி, சிந்தனைவிருத்தி போன்றவற்றுக்கு அமைய எழுது வது சாதாரணமான விடயமல்ல. அதையும் கடந்து உலகள வில் சகல குழந்தைகளதும் மனோநிலையைப் புரிந்து எழு தப்படும் ஒரு கதை நாவலாக மாறிப் பலகோடிப் பிரதிகள் அச்சிடப்பட்டு பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவது என்பது அதிசயம்தான்.

அதே போல அத்தகைய ஒரு நூல் ஒரே மொழிக்குப் பலரா லும் மொழிமாற்றம் செய்யப்படுவது என்பது இன்னும் சுவை யான அம்சம் தான். அத்தகைய பண்புகளைத் தன்னகத்தே கொண்ட உலகத்தரம் வாய்ந்த சிறுவர் கலை இலக்கியமா கத் துடிப்பான நாவலாக உள்ள நூல் தான் குட்டி இளவர சன் எனும் நூல். குட்டி இளவரசன் என யுமா வாசுகியும் சின் னஞ் சிறு இளவரசன் என எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தியும் தமி ழில் மொழிபெயர்த்துள்ளனர்.

இது உண்மையில் உலகத்தரம் வாய்ந்த பிரபலமான உலக இலக்கியம் எனலாம். உலகளாவிய சிறார்களை ஒன்றிணைக் கும் அற்புதமான படைப்பு. குழந்தை உளவியல், குழந்தை மனம், குழந்தை மொழி, குழந்தையின் கற்பனை போன்ற வற்றை அனுசரித்து உணர்ந்து எழுதப்பட்ட நூல். சிறுவர் கதைகளும் இலக்கியங்களும் நாவல்களும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதாகவும் சிந்தனைக்கிளறலை மேற்கொள்வ தாகவும் அனுபவப்பகிர்வாகவும் அமையும். சிறுவர்களுக் கான பண்பாடுகளையும் இயல்புகளையும் சுமந்த நிலையில் வெளிவரும் இலக்கியப் படைப்புகள் காலத்தை வென்று உயிர்வாழும். உளவியல் சார்ந்த பாதுகாப்பையும் அங்கீகா ரத்தையும் கூடச் சுதந்திரமாக அவை வழங்கிவிடும் ஆற்றல் கொண்டவையாக அமையும். கதைகளில் வரும் பாத்திரங் கள், அவர்களின் மொழிகள், செயல்கள், சாகசங்கள், உரை யாடல்கள், வினாக்கள், சந்தேகங்கள், ஆசைகள் ஏனைய சிறார்களை உடனுக்குடன் கவர்ந்துவிடும். அத்தகைய கதை களை, படைப்புகளைக் குழந்தைகள் விரும்பிப்படிப்பர் - சுவைப்பர். கதையின் இறுதியில் நிகழும் மனக்கிளர்ச்சி தான் யதார்த்தத்தில் அவர்களில் திருப்பத்தையும் மாற்றத்தையும் தோற்றுவிக்கும்.

இத்தகைய தரமான கதைகள் வழியாக ஆளுமைப் பண்புக ளும் சமூகத்திறன்களும் உருவாக்கப்படும். சமூகமயமாக்கல் செயற்பாடுகள் துரிதமாகும் பிள்ளையின் மொழிவிருத்தி, சிந் தனைவிருத்தி, பிரச்சினைகளை அணுகும் ஆற்றல், கையா ளும் ஆற்றல் துரிதமாக விருத்தியாகும். மொத்தத்தில் சிறு வர் கலை இலக்கியங்கள் நாவல்கள், கதைகள் வழியாக மூத்தவர்களின் அனுபவங்களைச் சிறுவர்களது மொழியில் பெறுவதற்கான ஏற்பாடாகவும் ஊடகமாவும் உள்ளன என்றும் கருதலாம்.

குட்டி இளவரசன் எனும் நாவல் நூலும் அத்தகைய பண்பு கள் பொதிந்துள்ள முழு நிறைவான சிறுவர் நூலாகும். இது சிறுவர் இலக்கியம் எனும் பரப்பிலும் மொழிபெயர்ப்பு இலக்




கியம் எனும் பரப்பிலும் கூடிய தாக்கத்தையும் தனக்கான தனித்துவமான இடத்தையும் பிடித்துக்கொண்ட உலகளாவிய நூலாகும். மூலநூல் எழுதப்பட்ட பிரான்சில் மட்டும் இது வரை 7 கோடியே நாற்பது இலட்சம் பிரதிகள் விற்றுத் தீர்ந் துள்ளன. உலகளவில் 20 கோடிப் பிரதிகள் அச்சிட்டு வெளி யிடப்பட்டுள்ளன. 5975 பதிப்புகள் கண்டுள்ளன. 470 மொழி பெயர்ப்புகள் உள்ளன. அப்படிப்பட்ட பலநூறு மொழிகள் கண்ட அற்புதமான சிறுவர் நூல் குட்டி இளவரசன். ஒரு மொழியில் பலர் மொழிபெயர்ப்பு செய்துள்ளனர். இலங்கை யில் கூட ஒன்றுக்கு மேற்பட்ட சிங்கள மொழிபெயர்ப்புகள் உள்ளன. அதே போலதான் ஆங்கிலம், தமிழ், அரபு போன்ற உலக மொழிகளிலும் இந்நூல் பலராலும் மொழிபெ யர்க்கப்பட்டுள்ளன.

தமிழுக்கு மலையாளத்தில் இருந்து இராமகிருஷ்ணன் குமர நல்லூர் மொழிபெயர்த்துள்ளார். அதனைத் தமிழுக்கு யுமா வாசுகி 2009-ல் தமிழில் பெயர்த்துள்ளார். french-ல் இருந்து தமிழுக்கு மதன கல்யாணி வெங்கட் ஸ்ரீராம் மொழிபெயர்த் துள்ளார். எஸ்.ஆர். கிருஷ்ணமூர்த்தி நேரடியாகப் பிரெஞ்சி லிருந்தும் 2022-ல் தமிழுக்கு மொழிபெயர்த்துள்ளார். இலங் கைச் சூழலில் சிங்களத்தில் வெவ்வேறு பெயர்களில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. තරු කුමරු - රුහුණු හේවා , පුංචිකුමාරයා - ක්‍රිෂ්ණ ගුප්ත පුංචි කුමාරයා - මාලිනි ගොවින්තගේ, කුමරාන - සුමිත්‍ර රාහුබද්ද, චූටි කුමාරයා - නදී කම්මල්වීර , ටිකිරි කුමරුව Jhon Warnasingha போன் றோர் அவற்றை மொழிபெயர்த்துள்ளனர். அவ்வாறே Little Prince என்றே katherine woods ஆங்கிலத்தில் மொழிபெ யர்த்துள்ளார்.

இந்த நாவல் சிறுவர் இலக்கியம், வளர்ந்தோர் இலக்கியம், உளவியல், உலகியல், கற்பனையாக்கம் உட்பட அனைத் தையும் உள்ளடக்கிப் பேசுவதாக அமைந்துள்ளது. பெற் றோர் - பிள்ளை உறவு, குழந்தைகள் பற்றிய மூத்தவர்களது பார்வை போன்றன மிகத்துல்லியமாக எடுத்தாளப்பட்டுள் ளது. மிக அதிகமான நூல் அறிமுகம், விமர்சனம், விற் பனை, குறிப்பு போன்றவற்றைப் பெற்ற நூல் இதுதான்.

பிரெஞ்சு எழுத்தாளரான Antion E exupery-தான் நூலாசிரியர். விமான ஓட்டி. தனது வாழ்வியல் அனுபவத்தை நூலாக்கி யுள்ளார். நூலைச் சமர்ப்பிப்பது Leon Werth எனும் வயதில் முதிர்ந்த ஒருவருக்கு. அதற்கான காரணத்தையும் இப்படிச் சொல்கிறார்.

- he is the best friend I have in the world.
- this grown up understand everything even books and children.
- he lives in France where he is hungry and cold.
- To all child from who grown up grew all grown ups were once children.

இவர் ஒரு French writer, pilot, military person எனும் பல் வேறு தளங்களில் இருந்து தான் பெற்ற வாழ்வியல் மற்றும் தொழில்சார் அனுபவத்தை மேற்படி சமர்ப்பிப்பின் மூலம் சொல்லி, நூலின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார். வானில் பறந்து கொண்டிருந்த ஒரு பொழுதில் விமானக் கோளாறு காரணமாகச் சஹாராப் பாலைவனத்தில் தரையி றங்கியது அவரது விமானம். இந்த ஆயாசம், தனிமை, ஏகாந்தம், இயற்கை போன்றன அவரை மாற்றியது - சிந் திக்க வைத்தது. கற்பனை உலகில் சஞ்சரிக்கலானார். அதன் விளைவுதான் இத்தகைய அற்புதமான இலக்கியப் படைப்பு.

1923-ல் இராணுவத்தில் இருந்து விலகிக் கலை, இலக்கியம் சார்ந்த துறைகளில் எழுதலானார். 1925-ல் முதல் நூல் அவ ரால் வெளியிடப்பட்டது. 1944-ல் போகோ என்ற இடத்தில் விமானம் தலைமறைவாகிக் குட்டி இளவரசனின் வாழ்வு போல exupery-யின் வாழ்வும் முடிகிறது. அவர் சென்ற விமா னம் சிதைவுகளாகக் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவருக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. பிரான்ஸ் நாட்டின் நாணயமான 50 frank-ல் குட்டி இளவரசன் மற்றும் கதையில் வரும் யானையை விழுங்கிய மலைப்பாம்பு ஆகியவற்றின்

படங்களைப் பிரான்ஸ் அரசு வெளியிட்டுள்ளது. நூல் வெளியாகி 50 ஆண்டுகள் கடந்ததை முன்னிட்டு நூலாசிரியருக்கு 'saint exupery' - 'கதாநாயகனுக்கு அஞ்சலி' எனும் சிறப்புப் பதிப்பு ஒன்று வெளியானது. இதில் பிரபலங்கள் அவருக்கு அஞ்சலி செலுத்தினர். அவரது நூலில் வந்த ஓவியங்கள் தனிப்படங்களாக இணைக்கப்பட்ட புத்தகங்களும் வெளியாகின.

வாழ்க்கை குறித்த வினாக்கள் இங்கு உரையாடப்பட்டுள்ளன. அவ்வாறே, தத்துவார்த்தம் நிறைந்த விடயங்கள் அலசப்பட்டுள்ளன. வாழ்க்கை குறித்த யதார்த்தங்கள் பேசப்பட்டுள்ளன. சுயசரிதை வடிவிலானது ஆரம்பம் என்பதால் மிகவும் விறுவிறுப்பாகக் கதை முன்னோக்கி நகர்வதைக் காணலாம். சிறந்த நூல் என்பது முதல் பக்கத்தில், முதல் பந்தியில், முதல் வரியில் இருந்தே சிறப்பாக ஆரம்பித்து இறுதிப் பந்தியையும், வரியையும் சிறப்பாக்கி வைக்கும். அத்தகைய தன்மையைப் பெற்ற ஒரு சிறுவர் நாவல்தான் இது.

கதை சொல்லியான விமானி, விமானம் கோளாறு அடைய, சீர் செய்ய ஸஹாராவில் தரை இறக்குகிறான். ஜீவ மரணப் போராட்டத்தில் தவித்து தடுமாறுகையில் தற்செயலாக ஒரு சிறுவன் தோன்றுகிறான். ஆட்டுக்குட்டி வரைந்துதாரக் கேற்கிறான். தான் வேறு ஒரு கிரகத்தில் இருப்பதாகச் சொல்கிறான். அங்கு ஒரே நாளில் 43 தடவை அஸ்தமனம் நிகழ்வதாகச் சொல்கிறான். துக்கத்தின் போது அவை மனதுக்கு பிடித்ததாக உள்ளது என்கிறான். பூக்களுடன் பேசுகிறான். ஆடு எதனைச் சாப்பிடும் என வினவுகிறான். மலருக்கு எதற்கு முள் எனச் சிந்திக்கிறான். தனது கிரகத்தில் தான் மட்டுமே வாழ்வதால் அத்தனை பணிகளையும் தான் மட்டுமே செய்வதாகச் சொல்கிறான்.

he meets a tiny prince from another world travelling the universe in order to understand the life. He discover the true meaning of life. குட்டி இளவரசன் தொடராகத் தொடுக்கும் அறிவார்ந்த வினாக்கள் வழியாக அன்புதான் இந்த மனித உணர்வுகளின் உச்சம். வாழ்வின் வெற்றியும் அதுதான் என்பதை உணர்த்துகிறது. அன்புக்காக ஏங்கும் நாம் கிடைக்கும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அன்பை அடையாமல் விலகி நின்று மீண்டும் மீண்டும் தேடி அலைகிறோம்.

சிறுவன் கிரகங்களை நோக்கி பயணிக்கிறான். அது சுவையான சுகமான பயணமாக - உரையாடலாக அமைகிறது. shehan karunathilaka-வின் அண்மைய வெளியீடான The seven moons of Maali Almeida-விலும் இத்தகைய சாயலைக் காணலாம் (சற்று வித்தியாசமானது) உலகப் பெருங்கவி அல்லாமா இக்பால் தனது ஜாவீது நாமாவில் ஆன்மீகக் கவி ஜலாலுதீன் ரூமி தனக்குக் கிரகங்களுக்கு வழிகாட்டிச் செல்வதாகக் குறிப்பிடுவார்.

குட்டி இளவரசனைப் பொறுத்தளவில் 1-ம் கிரகத்தில் - அரசன் அவனது அதிகாரத்தைக் காட்ட முனைகிறான். 2-ம் கிரகம் தற்பெருமைக்காரன் வாழும் கிரகமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. 3-ம் கிரகம் குடிகாரன் வாழ்கிறான். 4-ம் கிரகம் தொழிலதிபர் - வியாபாரி வாழ்கிறான். 5-ம் கிரகம் விளக்குத் தூண் - விளக்கேற்றும் மனிதர் வாழும் கிரகம். 6-ம் கிரகம் முதிர்ந்த எழுத்தாளர் வாழும் கிரகம்.

இறுதியாகப் பூமிக்கு வருகிறான். அங்கு ஒரு பாம்புடன் உரையாடுகின்றான். ஒரு மலரை, ஒரு நரியைச் சந்தித்து உரையாடுகின்றான். இறுதியாக விமானியுடன் உரையாடி நட்புக்கொள்கிறான். எலி, நரி, பூ போன்றவற்றைப் புரிந்து கொள்ள முடிந்த குட்டி இளவரசனுக்கு மனிதர்களைப் புரியவே முடியவில்லை.

திரைப்படம், குழந்தைத் திரைப்படம், நாடகம், தொலைக்காட்சித் தொடர், காமிக்ஸ், வானொலி நாடகம் என நாற்பதுக்கு மேற்பட்ட வடிவங்களில் குட்டி இளவரசன் உலகில் நடமாடுகிறான்.

சிறுவர்களின் உலகம் விசித்திரமானது. அவர்களைப் பெரியவர்கள் மிகவும் பிழையாகவும் அரைகுறையாகவுமே புரிந்து கொள்ள விழைகின்றனர். சிறுவர்களைப் பெரியவர்கள் புரிவதில் விடும் மாபெரும் பிழைகள்தான் சிறியவர்கள் வளரும் போது பெரியவர்கள் குறித்த பார்வையில் - பதிவில் ஏற்படுகின்ற மங்கலான பார்வையாகும்.

சிறுவர்களுக்கு எழுதக் குழந்தைமனம் வேண்டும். குழந்தைகளின் உலகம் அப்படித்தான் கட்டமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகளாக மாறிப் புது வடிவம் கொண்டால் மட்டுமே குழந்தைகளின் மனதில் வாழ முடியும்.

சிறுவர்களுக்குக் கதை எழுதுவது இமாலயச் சாதனை. எல்லோருக்கும் முடியாது. எல்லோருக்கும் வாய்க்காது. எல்லோருக்கும் சரிவராது. குழந்தைகளின் மனம் பெற்றோர்களிடம் எப்போதும் அடமானம் வைக்கப்பட வேண்டும் என்றே அவர்கள் கருதுகிறார்கள் - விரும்புகிறார்கள். குழந்தைகளின் காட்சிப்புலமும், கருத்து வெளியும் பெரியவர்களின் அறிவெல்லைக்குள் ஒரு போதும் அகப்படுவதில்லை.

குழந்தைகள் மிகத்தரமான சித்திரங்கள். அந்தச் சித்திரங்களின் தரத்தைச் சிதைப்பதும் பெரியவர்கள் தானே. குழந்தைகளுக்குக் குறும்புகள் அதிகம். ஆக்கத்திறன் அதிகம். அவர்களிடம் வினாத்தொடுக்கும் பண்பு இயல்பாகவே குடிகொண்டுள்ளது. கற்பனை வளம் நிறைந்த செல்வங்கள் அவர்கள்.

எம்மில் பலருக்கு ஏதோ ஒரு வகையில் குழந்தைகளைப் பெற்றுத்தள்ள முடிகிறது. அவர்களைக் கொண்டாடவும் குதூகலிக்க வைக்கவும் முடிவதே இல்லை. முயல்வதும் இல்லை. அவர்கள் மீதான முறையற்ற முறைப்பாடுகள் மட்டும் நிரம்பி வழிகின்றன. குழந்தைகளின் விசித்திரமான சிந்தனை எல்லையைக் கடக்கவும் - காட்டவும் முயல்கிறது இந்த நூல். ஆக மொத்தத்தில் இந்த நாவல் குழந்தையின் களங்கமற்ற பார்வையின் வழியாக உலகைக் காண்கிறது. இந்தப் பார்வை வழியாக வெளிப்படும் அற்புதமான தரிசனங்கள் பெரியவர்களது மூடிய கண்களையும், இறுகிய மனங்களையும் நிச்சயம் அதட்டும் - உசுப்பும் - உலுக்கும் - திறக்கும் - உடைக்கும். சின்னஞ்சிறு இளவரசனை ஒரு முறை நீங்களும் வாங்கிப் படியுங்கள்.




bisthamy.ahamed@thaiveedu.com


உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com

# போரின் மறு பக்கம் ஈழ அகதியின் துயர வரலாறு

**– நெல்லை ஜெயசிங் –**

இலங்கையில் மன்னார் மாவட்டம் வட்டக் கண்டல் ஊரை பிறப்பிடமாகக் கொண்ட திரு. தொ. பத்தினாதன் அவர்கள், ‘இலங்கையின் போர் சூழல் காரணமாக, தனது 16-வது வயதில் அகதி என்ற அடையாளத்துடன் 1990-ல் தமிழகம் வந்து




வாழ்ந்த முதல், 16 வருட தனது அனுபவங்களை, துயர் நிறைந்த பக்கங்களை ‘போரின் மறு பக்கம்’ என்று தலைப்பிட்டு நூலாக வடிவமைத்திருக்கிறார். துன்பத்தில் துவண்ட போது உதவிக் கரம் நீட்டிய நண்பர்களுக்கு நூலை சமர்ப்பணமாக்கும் நூலாசிரியர் திரு. தொ. பத்தினாதன் அவர்கள், கடந்த நாற்பது வருடங்களாக தமிழகத்தில் வாழும் இலங்கை அகதிகள் தொடர்பாக தொடர் பதிவுகளை பதிவு செய்து வருவதையும் காணலாம்.

இலங்கை தமிழ் அகதிகள் தொடர்பாக தொடர்ந்து பேசியும் எழுதியும் வரும் திரு. தொ. பத்தினாதன் அவர்கள் இது வரை நான்கு நூல்களை வெளியிட்டுள்ளார். ‘போரின் மறு பக்கம்’, ‘தகிப்பின் வாழ்வு’, ‘தமிழகத்தின் ஈழ அகதிகள்’, ‘அந்தரம்’ ஆகிய அனைத்து நூல்களும் இலங்கை தமிழ் அகதிகளின் துயர் நிறைந்த வாழ்வை உலக அரங்கில் உரத்துச் சொல்வதாகவே அமைந்துள்ளன. பிரபல இந்திய எழுத்தாளர் திரு. பெருமாள் முருகன் குறிப்பிடுவதைப் போன்று போரின் மறுபக்கம் என்ற நூலானது அகதி ஒருவரின் மனித உரிமைகளை நிலைநாட்ட முயற்சிக்கும் ஒருவகையான எழுத்துப் போராட்டமாகும். இது தமிழகத்தில் வாழும் அகதிகள் பற்றிய உண்மைக் கதையாகும். இந் நூல் மூலமாக நூலாசிரியர் தமிழகத்தில் வாழும் இலங்கை தமிழ் அகதிகளின் இன்னல் நிறைந்த வாழ்வை அனைத்து மக்களும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளார் என்றே கூற வேண்டும்.

இலங்கையில் உள்நாட்டு போர் மற்றும் இன வன்முறைகள் காரணமாக உடைமைகளை இழந்து உயிர் வாழ்ந்தால் போதும் என்ற மன நிலையில் பல்லாயிரம் இலங்கை தமிழர்கள் 1990-களில் அகதிகளாக தமிழகம் வந்தனர். அவர்களில் ஒருவராக சில உடன் பிறப்புகளுடன் வந்த எழுத்தாளர். அவர்களின் இளமைக் கால தமிழக வாழ்வு என்பது ஏனையோர்களைப் போன்று மிகவும் சவாலானதாக துன்பம் மட்டுமே நிறைந்ததாக இருந்துள்ளது. ‘போரின் மறுபக்கம்’ என்ற இந் நூலின் வாயிலாக ஒரு அகதியின் வாழ்க்கை எந்தளவு துயர் நிறைந்தது என்பதை தான் வாழ்ந்த வாழ்க்கையை ஆதாரமாக முன்னிறுத்தி மிகத் திறம்பட திரு. தொ. பத்தினாதன் அவர்கள் எழுதியுள்ளார் எனலாம். தனது நூலின் முன்னுரை குறிப்பில் அடைக்கலம் தேடி வந்து வாழும் இடம் கொடுமையாக அமைவது போரை விட கூடுதல் வலியை தருகிறது என குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சம், பட்டினி, போர் என பல்வேறு காரணங்களால் கோடிக் கணக்கான உலக மக்கள் அன்றாடம் புலம்

பெயர்ந்த பின்னரும் உண்ண உணவின்றி, இருக்க இட மின்றி பரிதாபமாக வாழ்ந்து வருவதைக் காணலாம். அடைக் கலம் தேடிப் போகும் அனைத்து அகதிகளுமே ஏதோ ஒரு வகையில் வலியுடனேயே வாழ்கின்றனர். சுதந்திரமான பிர ஜைகளுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான அடிப்படை உரிமைகள் அவர்களுக்கு கிடைப்பதில்லை. இலங்கை அக திகளுக்கும் இதே நிலைதான். 'நான் அகதி இல்லை, அகதி இல்லை' என்று தொண்டை வலிக்க கத்த வேண்டும் என்ற ஏககத்துடன் ஒவ்வொரு அகதியும் இங்கு வாழ்வதாக நூலா சிரியர் குறிப்பிடுகிறார். தான் வாழ்ந்த ஒவ்வொரு மணித் துளி வாழ்க்கையையும் எந்த ஒரு ஒளிவும் மறைவும் இன்றி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். தனது வாழ்க்கையில் நடந்த அனைத்து சம்பவங்களையும் உள்ளபடியே கூறும் அவரது துணிச்சல் பிரமிப்பூட்டுவதாக இருக்கிறது. குறிப் பாக விபச்சாரியின் வீட்டுக் கதவை தட்டியதை, கவலை மறக்க மதுவை நாடியதை, புகை பிடித்ததை, பொய்கள் கூறியதை எந்த வித அச்சமும் இன்றி மிக தைரியமாக கூறி இருப்பது ஆச்சரியம் அளிக்கிறது.

தமிழகத்தில் அகதி என்ற அடையாளத்துடன் மட்டும் வாழ் வது என்பது எவ்வளவு கொடூரமானது என்பதை நூல் மிகத் தெளிவாக விபரிக்கிறது. தனது அனைத்து அனுபவங்களை யும் எந்த வித கற்பனையும் கலக்காது அலங்கார வார்த் தைகள் சேர்க்காது உள்ளதை உள்ளபடியே கூறும் அவரது எளிய தமிழ் நடை இலகுவாக புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. ஒரு கற்பனை நாவலைப் படிப்பதைப் போன்ற உணர்வைத் தரும் இந்நூல் ஒரு நூலாசிரியரின் அகதி வாழ்க்கையை உலகிற்கு உணர்த்துகின்ற ஒரு வரலாற்று பதிவாகும்.

ஆரம்பக் கல்வியை இலங்கையில் படித்ததையும், பின்னர் யுத்த மேகம் காரணமாக 1990 ஜூலை 11-ம் நாள் படகு மூலம் குடும்ப உறுப்பினர்கள் சிலருடன் இராமேஸ்வரத் திற்கு அகதியாக வந்தபின் உசிலம்பட்டி முகாமில் தங்க வைக்கப்பட்டதையும் கூறுகிறார். அங்கே பள்ளிச் சிறுவனாக வாழ்க்கையை தொடங்கிய நூலாசிரியர் தான் சார்ந்த கிறித் தவ மத குருமார்களின் உதவியும் பரிவும் கிடைத்ததாகவும் ஆனால் காலப்போக்கில் அவர்களின் விரும்பத் தகாத செயல்களால் மதம், கடவுள் என்ற எண்ணங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டதாகவும் குறிப்பிடுகிறார். குடும்ப உறவுகளின் ஆதரவு கிடைக்காத நிலையில் மிக இளமையிலேயே உணவுக்கும் கூட மிகவும் சிரமப் பட்டதாக இந் நூலில் வேதனையுடன் பதிவிட்டுள்ளார். அதன் தொடர்ச் சியாக தமிழக சூழ் நிலை தனது கல்விக்கு உறுதுணையாக இல்லாத நிலையில் படிப்பையும் பாதியில் கைவிட்டதாக கூறுகிறார். இதனை உணர்ந்து பின்னாளில் குறிப்பிடும் போது வாலிபத்தின் விவேகமற்ற வேகம் போன்ற குணங்க ளால் இருண்ட காலத்திற்கு தான் தள்ளப்பட்ட அவலத்தை யும் அதனால் ஒரு மன நோயாளியாக மாறியதையும் குறிப் பிடுகிறார்.

இன, மத, மொழி, பண்பாடு என தனித்துவமான ஒரு கலாச் சாரத்தில் வாழ்ந்த இலங்கை தமிழ் சமூகம் இடம் பெயர்ந்து அகதியாக தமிழக மண்ணில் அடிப்படை உரிமைகள் இன்றி பொருளாதார பலமும் இன்றி வாழ்வது என்பது மிகப் பெரும் சவாலாக இருப்பதை தனது அன்றாட வாழ்க்கை அனுபவத்தின் வாயிலாக தெரியப்படுத்த முனைவதைக் காணலாம். அவரது வார்த்தைகளில் கூறுவதானால் தமிழ் நாட்டில் வாழ்ந்த போதும் தாமரையில் நீர் போன்று சமுதா யத்துடன் ஒட்டாமல் வாழ்ந்ததாக கூறுகிறார். ஆரம்ப காலத் தில் அகதி மக்களுக்கு கிடைத்த மதுபானக் கடை வேலை, கொத்தனார் வேலை, தச்சு வேலை, கல்லுடைக்கும் வேலை, பெயிண்டர் வேலை, விறகு வெட்டும் வேலை என பலதரப் பட்ட கூலி வேலைகளை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட் டதாகவும் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். படித்தவர்கள், படிக்காதவர்கள், பட்டதாரிகள் என அனைவருக்கும் இதே நிலைதான் என்கிறார். எந்தவொரு வருமானமும் இல்லாத நிலையில் உற்றார் உறவினர் உடன் பிறந்தோர் அன்பு அர- வணைப்பு கிடைக்காத வேளையில் தான் மனநோயால் பெரி தும் பாதிக்கப்பட்டதாகவும் கூறுகிறார்.

தனது வாழ்க்கை பயணத்தினை கூறுவதன் ஊடாக அகதி முகாம் வாழ்க்கையின் பல்வேறு சிரமங்களை கெடுபிடிகளை சுட்டிக் காட்டவும் அவர் தவறவில்லை. 1990-களில் இந்திய சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட 'அகதி முகாம் பதிவு' என்பது மிகவும் அச்சுறுத்தல் தரும் அம்சமாக இருந்துள்ளது. 1991-ஆம் ஆண்டு இந்திய நாட்டில் நிகழ்ந்த மிகப் பெரும் துன் பியல் சம்பவத்திற்கு பின்னர் அகதி முகாம்களில் கெடுபிடி கள் மிகவும் அதிகரித்து விட்டதையும் அதனால் தானும் மிக வும் பாதிக்கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார். முகாம்களில் இருப்பவர்கள் சுதந்திரமாக வெளியில் சென்று பணிபுரிய முடியாத நிலையும் இந்திய காவல் துறையின் கட்டுப்பாட் டில் கண்காணிப்பு நிலையத்துக்குள் பதட்டத்துடன் வாழ வேண்டி இருந்ததையும் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். அகதி முகாம் மக்கள் தீவிர வாத செயல்களில் ஈடுபடாத போதும் ஒவ்வொரு இலங்கை தமிழர்களையும் சந்தேக கண் ணோட்டத்துடன் இந்திய உளவுத்துறை கண்காணிக்க தவற வில்லை. இதனால் நூலாசிரியரால் அக்கால கட்டத்தில் சுதந்திரமாக வெளியில் நடமாடவோ வேலை பார்க்கவோ முடியவில்லை என்கிறார். அனைத்து முகாம் மக்களின் நிலையும் இதுவாகவே இருந்துள்ளது.

இலங்கை அகதி என்ற அடையாளத்துடன் முகாமிற்கு உள்ளே வாழ்ந்து விடலாம். ஆனால் அதே அடையாளத்து டன் வெளியில் தனியார் நிறுவனங்களில் கூட பணிபுரிய முடியாது என்பதனை தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் ஊடாக அகதிகளாக வாழும் இலங்கை தமிழ் மக்கள் வெளி யூர்களில் பணிபுரிய முடியாத பரிதாபகரமான நிலையை நூலாசிரியர் மிகவும் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. அகதிகள் சட்டத்தை ஏற்று கையெழுத்து இடாத இந்திய அரசு இலங்கை அகதிகளை முகாமிற்கு அருகில் அதுவும் கூலி வேலை செய்ய மட்டுமே மறைமுகமாக அனுமதிப்ப தாக நூலில் கடுமையாக அரசை சாடுவதைக் காணலாம்.

அக்காலத்தில் தான் பணிபுரிந்த பல்வேறு உணவகங்களில் இலங்கை அகதி என்பதை மறைத்தது மட்டுமல்ல தனது உண்மைப் பெயரையும் கூட தெரிவிக்க முடியாத அவல நிலையில் நாட்களை நகர்த்தியதாகவும் கூறுகிறார். உண்மை தெரிந்து அதனால் வேலையிலிருந்து நீக்கப்படு வோமோ என்ற பயத்துடனும் பதட்டத்துடனும் காலங்களை நகர்த்தியதாக கூறுகிறார். முகாம் பதிவும் இன்றி வேலையும் இன்றி ஒரு இலங்கை அகதி வாழ்வது என்பது மரணத்திற்கு

ஒப்பானதாகும். முகாம் பதிவு இருப்பின் தங்குவதற்கு சிறிய இடமும் உயிர் வாழ்வதற்கு குறைந்தளவு உணவும் கிடைக்கும். பதிவு இல்லையெனில் இவை எதுவுமே இல்லை என்ற நிலையாகும். அக்காலத்தில் வெளிப்பதிவுக்கு அனுமதி இல்லாத நிலையில் முகாம் பதிவு இல்லாதவர்கள் கைது செய்யப்பட்டு திறந்த வெளிச் சிறையில் அடைக்கப்படும் நிலை இருந்ததையும் கவலையுடன் நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளார். இதனால் வெளியில் பணி புரிபவர்கள் பயத்துடனும் மிகுந்த எச்சரிக்கையுடனும் நடந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

'போரின் மறுபக்கம்' என்ற நூலில் இடம் பெற்றுள்ளவை இதன் ஆசிரியரான திரு. தொ. பத்தினாதன் அவர்களின் துயரம் தோய்ந்த சுயசரிதை என்பதால் எதுவும் மறைக்கப்படகூடாது என்ற சத்தியத்தின் வழியில் அவரும் தனது 16 வருட அகதி வாழ்க்கையை உள்ளபடியே கூறியிருப்பது சிறப்பு அம்சமாகும். தான் பணிபுரிந்த வேலைத் தளங்களில் குறிப்பாக உயர் ரக உணவகங்களில் தான் நடந்து கொண்டவிதம், எதிர்நோக்கிய சவால்கள், தான் செய்த தகாத செயல்கள், கூறிய பொய்கள் என அனைத்தையும் விறு விறுப்பு குறையாமல் பதிவிட்டுள்ளமை புத்தகத்தை வாசிப்போரை வியப்படையச் செய்கிறது. பெரும்பாலான இடங்களில் துன்பமே அதிகமாக இருந்தது என்பதை கூற முற்படும் நூலாசிரியர் 'துன்பம் என் முன் செல்ல இன்பம் இடைவேளை நேரத்தில் மட்டும் எட்டிப் பார்க்கிறது' என நகைச்சுவையாக கூறுவதையும் காணலாம். தனது வாழ்க்கை சரியான வழியில் திட்டமிடப்படாததை ஏற்றுக் கொள்ளும் நூலாசிரியர் இதுவரை தான் வந்த வழிகளில் எல்லாம் தன் கால்களில் குத்திய முள்ளுக்கும் கண்கள் சிந்திய கண்ணீருக்கும் தானே காரணம் எனவும் கூறுவது அவரது வெளிப்படைத்தன்மையை காட்டுகிறது.

'போரின் மறுபக்கம்' நூல் ஆசிரியர் திரு. பத்தினாதன் அவர்களின் அகதி வாழ்க்கை துயர் நிறைந்தது என்பதை நூலை படிப்போர் புரிந்து கொள்ளும் அதே வேளை, அவரது முற்போக்கு எண்ணங்கள் நூலில் பல இடங்களில் வெளிப்பட்டு நிற்பதையும் அதன் அவசியத்தையும் காணக் கூடியதாக இருக்கிறது. தனது இளமைக் காலத்தில், அன்புக்காக ஏங்கிய நேரத்தில் காதல் உணர்வு அவரது உள்ளத்தில் எழுந்த போது 'சாதி, மதம், சம்பிரதாயம், ஜாதகம் எதுவும் என்னை தடுக்கவில்லை' என தனது முற்போக்கு எண்ணங்களை வெளிப்படுத்துகிறார். உணவகங்களில் பணிபுரிந்த காலத்தில் தொழிலாளர்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்ட போதெல்லாம் தொழிலாளர்களுடன் இணைந்து போராட வேண்டும் என்ற உணர்வு அவரிடம் மேலோங்கி இருந்ததையும் காண முடிகிறது. தான் தற்காலிக ஊழியர் என்றபோதும் தன் சக தொழிலாளர் தோழர்களுக்கு தோள் கொடுக்க வேண்டும் என்ற வர்க்க உணர்வு மேலோங்கி இருந்தமையை நூலின் வாயிலாக அறியக் கூடியதாக இருக்கிறது.

நூலாசிரியரின் தனிமைப்படுத்தப்பட்ட அகதி வாழ்க்கையில் அன்புக்காக அவர் ஏங்கிய தருணங்கள் ஏராளம் என்கிறார். தன் உடன் பிறந்த உறவுகளுடன் விரிசல் ஏற்பட்ட போதெல்லாம் இலங்கையில் பிரிந்து வந்த தன் அன்புத் தாயின் அரவணைப்புக்காக அவர் கண்ணீர் சிந்திய தருணங்களை படிக்கும் போது நாமும் மிகுந்த வேதனை உணர்வுக்கு உள்ளாகிறோம். தனது நண்பர்களின் அம்மாமார்கள் தன் மீது காட்டிய சிறு அன்பு அவருக்கு மிகப் பெரும் ஆறுதலாக இருந்ததாகவும் மனம் நெகிழ்ந்து கூறுவதையும் காண முடிகிறது. தனக்கு உற்ற துணையாக இருந்த நண்பர் தில்சனின் தாயார் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டதாகவும் கூறுகிறார்.

தனக்கு ஏற்பட்ட சங்கடங்கள், சவால்கள், துன்பங்கள் ஒவ்வொரு இலங்கை தமிழ் அகதிக்கும் ஏற்படுவதாக கூறும் நூலாசிரியர், முகாம் மக்களுக்கு அரசு வழங்கும் உதவித் தொகை அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்கிறார். அவர்களின் வாழ்விடம் மிகவும் மோசமானதாக இருப்பதுடன் குடும்பங்களுக்கு ஏற்றதாகவும் இல்லை என்கிறார். கல்வி மற்றும் மருத்துவ செலவிற்காக அவர்கள் வெளியில் சென்று வேலை செய்ய வேண்டிய கட்டாயம் இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இவர் வாழ்ந்த காலம் இத்தகைய குறைபாடுகள் பெருமளவு இருந்தது உண்மை. எனினும் காலப்போக்கில் குறிப்பாக 2000-ம் வருடத்திற்கு பின்னர் முகாம் வாழ்க்கையில் பெரிய மாற்றங்கள் ஏற்படலாயின. குறிப்பாக முகாமிற்கு வெளியில் வசிக்க விரும்புவோர் அரசின் உதவி மற்றும் மானியங்களை தவிர்த்து விட்டு விரும்பிய ஊர்களில் காவல் துறையின் கண்காணிப்புக்கு உட்பட்டு வாழலாம் என்ற வாய்ப்பு தற்போது வழங்கப்பட்டுள்ளது. இச்சலுகையை பயன்படுத்தி 30,000-க்கும் மேற்பட்டோர் தற்போது முகாமிற்கு வெளியே வாழ்ந்து வரும் நிலையை காணலாம். இதன் காரணமாக இவர்களின் உயர் கல்வி மற்றும் வேலை வாய்ப்பு சற்று மேம்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இவர்கள் மீதான அரசின் பார்வையும் கூட மேம்பட்டு தனி வீடமைப்பு திட்டம் உட்பட பல்வேறு நலத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் இச்சந்தர்ப்பத்தில் கருத்தில் கொள்ள வேண்டும்.

நூலாசிரியர் துயரம் மிகுந்த தனது வாழ்க்கையின் மத்தியில் பொது நல நோக்குடன் முகாம் மக்களின் துயரங்களை கண்டு மனம் வருந்தியதையும் நூலில் தெரிவித்துள்ளதைக் காணலாம். முகாமில் பெண் குழந்தைகள் இளம் வயதில் திருமணம் புரிவது தடுக்கப்பட வேண்டும் என்று எடுத்துரைக்கும் அவர் இளைஞர்கள் ஆக்க பூர்வமான வழிகளில் செல்லாது தடம் புரண்டு பயணிப்பதை மிகுந்த கவலையுடன் பதிவிடுவதையும் காண முடிகிறது. உரிமைகள் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இலங்கை தமிழ் அகதிகள் வருகிறார்கள். ஆனால் அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறுவதில்லை என்கிறார் நூலாசிரியர். அவர்களுக்கு உரிய உரிமை - மரியாதை அகதி என்ற ஒரே காரணத்தினால் கிடைப்பதில்லை என கூறும் நூலாசிரியர், ஒரு முறை நாகர் கோவில் அகதி முகாமிற்கு தான் சென்றிருந்த போது புறக் காவல் நிலைய காவலர்களால் காரணம் இன்றி தாக்கப்பட்டதாகவும் கூறுகிறார்.

தான் இந்தியாவில் வாழ்ந்த காலம் முழுமைக்கும் காரணமானவர்கள் பிரதிபலன் எதிர் பார்க்காத நண்பர்கள் என மிகவும் ஆழமாக நூலாசிரியர் பதிவிட்டுள்ளதை நூலின் தொடக்கம் முதல் கடைசி பக்கம் வரை காண முடிகிறது. தான் உயிரோடு இருப்பதற்கு காரணமே நண்பர்கள் என்கிறார். தனக்கு உணவிட்டது, உறைவிடம் தந்தது, பணம் தந்து உதவியது, மனம் காயம் பட்ட போதெல்லாம் மருந்திட்டு ஆறுதல் படுத்தியது, உற்றார் உறவினர்கள் உதறிய

போதெல்லாம் இல்லக் கதவையும் இதயக் கதவையும் அக லத் திறந்து அரவணைத்தது என அனைத்துக்கும் சொந்தக் காரர்கள் உற்ற நண்பர்களே என இந்நூலில் திரு. தொ. பத் தினாதன் கூறுவதை படிக்கும் போது மெய் சிலிர்க்கிறது. தங்கள் தோள் மேல் ஏற்றி உலகத்தை பார்க்க வைத்தவர் கள் நண்பர்கள் என்கிறார். இந் நூல் வெளியீட்டிற்காக பல பதிப்பகங்களின் கதவுகளை தட்டி தோற்ற போது இறுதியில் உதவியவர்களும் நண்பர்களே என நட்பின் வலிமையை, ஆழத்தை, நூலில் பதிவிடத் தவறவில்லை. அவருக்கும் அவரது நண்பர்களுக்குமான நட்பின் வலிமையை படிக்கும் போது நாமும் அந்த நண்பர்களை பார்க்க வேண்டும் என்ற ஓர் ஆவல் ஏற்படுவதை உணர முடிகிறது.

நூலாசிரியர் அவர்கள் எந்த ஒரு அரசியல் நிலைப்பாட்டை யும் கொண்டிருக்கவில்லை. எனினும் ‘சிலர் ஈழ தமிழ் மக்க ளைத் தொங்கிக் கொண்டு அரசியல் நடத்துகிறார்கள், பிழைப்பு நடத்துகிறார்கள்’ என தன் நூலில் அரசியல் வாதி கள் மீதான கோபத்தை வெளிப்படுத்தவும் தவறவில்லை.

திரு. தொ. பத்தினாதன் அவர்கள் வாழ்ந்தே ஆக வேண்டும் என்பதற்காக அனுதினமும் ஓடிக் கொண்டே இருந்திருக்கி றார். வெளிச்சத்தை தேடும் அவரது ஒவ்வொரு பக்கமும் இருள் சூழ்ந்ததாக இருந்தபோதும் அவரது ஆழ் மனதில் எழுத வேண்டும் என்ற எண்ணம் புதைந்து கிடந்ததின் வெளிப்பாடே இந்த நூல். அவரின் உறுதி அவரின் எண் ணங்கள் நூலாகி இருக்கிறது. எந்தவித பின்புலமும் பணப லமும் இல்லாத நிலையிலும் இப்படி ஒரு நூலை தருவதில் அவர் வெற்றி அடைந்திருக்கிறார் என்றே கூற வேண்டும். இந்த நூல் எதிர்காலத்தில் அவர் எழுதப் போகும் அகதிகள் சார்ந்த பதிவுகளுக்கான வலிமையான தொடக்கமாக அமைந்திருக்கிறது.

‘என் உள்ளத்தின் உறுமலும் இதயத்தில் கசியும் இரத்தமும் கண்கள் சிந்தும் கண்ணீரும் நான் இருட்டில் இருப்பதால் இவ்வுலகத்திற்குத் தெரியவில்லை’ என்ற திரு. தொ. பத்தி-னாதன் அவர்களின் குமுறல் நெஞ்சைத் தொடுவதாக இருக் கிறது. அவர், தான் நடந்து வந்த பாதையில் நம்மையும் புத் தகத்துடனேயே அழைத்துச் செல்கிறார். இந் நூல் மூலமாக இலங்கை தமிழ் அகதி மக்களின் இன்னல் நிறைந்த வாழ்வை அனைத்து மக்களும் அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி உள்ளார்.

வலி மிகுந்த இலங்கை தமிழ் அகதிகளின் துயர் வரலாற் றில் இந் நூல் ஒரு சிறு துளி மட்டுமே. ஒவ்வொரு இலங் கைத் தமிழரும் அவசியம் வாசிக்க வேண்டிய உண்மைப் பதிவு. வாய்ப்பு உள்ளவர்கள் இந் நூலை வாசிப்பதன் ஊடாக இலங்கை தமிழ் அகதிகளுக்கு உதவிக்கரம் நீட்டி அவர்கள் அனைத்து உரிமைகளுடன் சுதந்திர குடிமக்களாக வாழ வழி காண வேண்டும்.



jeyasingh@thaiveedu.com












# ஒட்டமாவடி அறபாத் சிறுகதைகள் :
# உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவிகள்

- ஜிஃப்ரி ஹாஸன்

மனித வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் எழுத்துக்குள் கொண்டுவந்துவிட முடியுமா? என்பது படைப்பாளிகளின் முன்னால் எப்போதும் இருந்துவரும் கேள்வியாகும். அதுவும் போர், வன்முறை, ஜனநாயகமற்ற சமூக அரசியற் சூழல், குறைந்தளவான சகிப்புத்தன்மை, வறுமைக்குள்ளான வாழ்வு எனப் பொதுமக்களுக்கும் படைப்பாளிகளுக்கும் பெருத்த சவாலாக விரியும் அசாதாரண சூழலுக்குள் வாழும் மக்கள் குழுமம் ஒன்றினது வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் ஒரு படைப்பாளியினால் தனது எழுத்துக்குள் கொண்டு வந்துவிட முடியுமா?

'உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி' என்ற தனது தொகுப்பிலுள்ள சிறுகதைகளுக்குள்ளால் அறபாத் இது மாதிரியான கேள்விகளுக்குப் பதிலளிக்கப் பிரயாசப்படுகிறார் என நினைக்கிறேன்.

அடையாளம் வெளியீடாக வந்திருக்கும் இச்சிறுகதைத் தொகுதி அறபாத்தின் இதுவரை வெளிவந்த சிறுகதைகளின் தொகுப்பாக வெளிவந்துள்ளது. ஏற்கனவே இலங்கையில் தொகுப்பாக வெளிவந்த 'நினைந்தழுதல்', 'ஆண்மரம்' ஆகிய சிறுகதைத் தொகுதிகளிலுள்ள கதைகளையும் மற்றும் ஏனைய கதைகளையும் இத்தொகுப்பு உள்ளடக்கியுள்ளது. இத்தொகுப்புக்குப் பின்னரும் அவரது புத்தரின் நிழல் என்றொரு சிறுகதைத் தொகுப்பும் சமீபத்தில் வெளிவந்துள்ளது. 'உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி' கதைத் தொகுப்பு யுத்தத்துக்குள் அகப்பட்டுக்கொண்ட இலங்கை முஸ்லிம்களின் போர் மற்றும் சமய வாழ்வின் பல்வேறு தருணங்கள் இங்கு கதைகளாக்கப்பட்டுள்ளன.

அறபாத்தின் ஒட்டுமொத்தக் கதைகள் குறித்தும் ஓர் ஆழமான மறுவாசிப்பைச் செய்யவேண்டுமென்ற உந்துதல் எழும்புகின்ற போதிலும் தொடர்ந்தும் அது கைகூடாமல் வெறும் தொகுதிரீதியான வாசிப்பாக மட்டுமே சுருங்கிப் போய்விடுகிறது.

சுருக்கமாகச் சொல்வதென்றால், அறபாத்தின் கதைகள் போர்க்கால முஸ்லிம் மக்களின் வாழ்க்கைப் பாடுகளை மிக வெளிப்படையாகப் பேசுகின்றன. இதனால் மக்களது வாழ்வுக்கும் இவரது எழுத்துக்குமிடையில் எந்தத் திரைகளும் இருப்பதில்லை. துயர் நிறைந்த பிடிப்புகள் எதுவுமற்ற வாழ்வின் உண்மையான பிரதிபலிப்புகளாக மட்டுமே அவையுள்ளன. ஒரு புனைவுக்கான மேலதிக சோடனைகளைத் தவிர்ந்த ஆனால் புனைவுச் செழுமையான கதைகள் அறபாத்தினுடையவை.

பலதரப்பட்ட மனிதர்களும் பலதரப்பட்ட சம்பவங்களும் அறபாத்தின் கதைகளுக்குள் புனைவாக்கப்பட்டுள்ளனர். அதிலுள்ள பலதரப்பட்ட மனிதர்களும் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளிகளைத் தேடுபவையல்ல இவரது எழுத்துகள். அந்த மனிதர்களின் நிலைமைகளுக்கு ஒரு காட்சியை, அவர்கள் எழுப்பும் கேள்விகளுக்கான குரல்களை, தள்ளாடும் அந்த மனிதர்களுக்கான ஊன்றுகோலை வழங்குபவையாக அறபாத்தின் எழுத்துக்கள் உள்ளன.

அறபாத்தின் கதைகளுக்குள் அரசியல் இருக்கிறது, வரலாறு இருக்கிறது, கலாசாரம் இருக்கிறது, காரசாரமிருக்கிறது, சினேகம் - எதிர்பார்ப்பு - ஏமாற்றம் - புன்னகை - அழுகை ஏன் காமம் கூட இருக்கிறது. எனினும், அவை எல்லாம் இருப்பதனால் வாழ்வின் அனைத்துப் பரிமாணங்களையும் எழுத்துக்குள் கொண்டு வந்ததாக ஆகிவிடுமா? இவை எல்லாம் இருப்பதனால் ஒரு படைப்பு உயிர்ப்புடையதாகி விடுமா?


உண்மையில், ஒரு கதையின் ஆன்மா அதுவல்ல. சத்துள்ள, ஆரோக்கியமுள்ள ஒரு கதையின் ஆன்மாவாக ஒருபோதும் கருப்பொருட்கள் இருப்பதில்லை. இங்கும் அறபாத்தின் கதைகளின் மைய விடயங்களாக மட்டுமே அவை உள்ளன. ஆனால் அவையே அவரது கதைகளாகிவிடுவதில்லை. அந்தவகையில் இவரது கதைகள் ஆரோக்கியமற்ற, சத்தற்ற ஒரு நோயாளியைப் போல அலைபவையல்ல. அறபாத்தின் கதைகள் ஒவ்வொன்றுக்குள்ளும் துயர் நிறைந்த மனிதர்களின் கூட்டு வாழ்க்கை குமுறிக் கொண்டிருக்கிறது. புறக்கணிக்கப்பட்ட, கண்டுகொள்ளப்படாத மனிதர்களின் குரல்கள், ஒவ்வொரு கதையினுள்ளும் ஒலிக்கிறது.

அறபாத்தின் இந்தத் தொகுதியிலுள்ள கதைகள் இந்த மக்களின் மூன்றுவித வேறுபட்ட வாழ்நிலைமைகளை அமரத்துவமுடைய இலக்கியப் பொருளாக்கியுள்ளன.

- யுத்தத்துக்குள் அகப்பட்டுக் கொண்ட ஓர் மக்கள் திரளின் துயரம்.
- சமூக அரசியல் போராட்டம் குறித்த மறு விசாரணை.
- உள்ளகக் கலாசாரப்பன்மைத்துவத்தை எதிர்த்தல். (Anti-

Internal Cultural Diversity)

ஆனால் காலச்சுவட்டில் அறபாத்தின் கதைகளைப் பற்றி எழுதிய அனார், அறபாத்தின் கதைகள் எந்தச் சட்டகத்துக் குள்ளும் உள்ளடங்குவதில்லை என எழுதுகிறார். அதுவும் ஒரு வகையில் உண்மைதான். இந்த மூன்று சட்டகங்களுக் கப்பாலும் அறபாத்தின் கதைகள் நீள்கின்றன என்பதை நானும் ஒத்துக் கொள்கிறேன். ஏனெனில், ஒரு கதையில் வரும் மனிதர்கள் இன்னொரு கதையிலும் வருகின்றனர். எல் லாக் கதைகளிலும் ஒரே வகையான முரண்பாடுகளும் பிரச்சி னைகளும் இருப்பதை அந்த மனிதர்கள் நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். ஒரு கதையின் தொடர்ச்சியாக இன் னொரு கதை எழுதப்பட்டிருப்பது போன்று நம்மை உணர வைத்து விடுகிறது. எனினும், பெரும்பாலான கதைகள் இந் தச் சட்டகத்துக்குள் உள்ளடங்குகின்றன என்பதைக்காட்டி லும் அறபாத்தின் கதைகளுக்குள் இந்தச் சட்டகங்களும் உள்ளடங்குகின்றன என்று சொல்வதே பொருத்தமானது.




நான் மேலே கூறியதைப் போன்று முதலாம் வகைக் கதைக ளையே இப்பிரதி அதிகமாகக் கொண்டிருக்கின்றபோதிலும் ‘ரயில்வே ஸ்டேசன்’, ‘வேட்டை’, ‘கப்பம்’, ‘நினைந்தழுதல்’ போன்ற கதைகள் போரின் வாழ்வையும் வலியையும் வெவ் வேறு கோணங்களில் பேசுபவை.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் போராட்டம் குறித்த மறுபரி சீலனையை இதற்குள் சில கதைகள் முன்வைக்கின்றன. அவை வெறும் கட்சிகளுக்கிடையிலான பரஸ்பர எதிர்ப் பிரச் சாரங்களைப்போலன்றி ஓர் எதிர்க் கருத்துநிலையை முன் வைப்பவை. ஏமாற்றப்பட்ட தோற்றுப்போன மக்களின் எதிர்க் கதையாடல்களாக அவை எழுந்து நிற்கின்றன. முஸ்லிம் அரசியல் போராட்டம் இன்று அடைந்திருக்கும் கோமா(ளி) நிலையை அடையாளப்படுத்த முனையும் இக்கதைகள் நமது அரசியல் தலைமைகள் சுயவிசாரணைக்குத் தயாராக வேண்டும் என உரத்துக் கூறுபவை. இந்தவகைக் கதைக ளுக்கு இத்தொகுதியில் இடம்பெற்றிருக்கும் ‘கழுதைகளின் விஜயம்’, ‘தேர்தல் காலக்குறிப்புகள்’, ‘ஓணான்கள்’ போன்ற கதைகளை எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம்.

இலங்கை கலாசாரப் பன்மைத்துவத்தைக் கொண்ட நாடு என்பதைப்போலவே இங்கு வாழும் முஸ்லிம்களும் தங்க ளுக்குள் பல கலாசார உட்கூறுகளைக் கொண்ட இனக்கு ழுவினராவர். அறபாத்தின் சில கதைகள் சமயரீதியான இந்த இயக்கப் பல்வகைமையை அங்கீகரிப்பவையல்ல இவ்வா றான சக இயக்கங்கள் மீது எந்தச் சகிப்புத்தன்மையையும் காட்டாதவை இவரது எழுத்துக்கள். எனினும், இவரது கதை களில் வெளிப்படும் இந்த விமர்சனரீதியான பார்வை சமய இயக்கங்களின் பலவீனத்தை அடையாளப்படுத்தும் முனைப் பைக் கொண்டிருப்பதையும் அத்தகைய இயக்கங்கள் கவ னத்திற்கொள்ள வேண்டும். இதிலிருந்து இஸ்லாமிய இயக் கங்கள் சில விடயங்களைக் கற்றுக்கொள்ள முடியும் என்று நான் நினைக்கிறேன். ‘துறவிகளின் அந்தப்புரம்’, ‘ஜின்’ போன்ற கதைகளுக்குள் நாம் இத்தகைய செய்திகளைக் காணலாம்.

அதேநேரம் வாழ்க்கையை லேசாக எடுத்துக்கொள்கிற கேலி யும் கிண்டலும் நிறைந்த மனிதர்களும் இந்த உடைந்த கண் ணாடிகளுக்குள் குருவிகளைப்போல மறைந்திருப்பதை நீங் கள் காணலாம். ‘அரங்கம்’ கதையில் வரும் பெத்தா, ‘ஓணான்கள்’ கதையில் வரும் கஸ்ஸா மூத்தம்மா போன்றவர் களோடு இன்னும் பலர் இதற்குள் உள்ளனர்.

சில கதைகளைத் தவிர பெரும்பாலான கதைகளின் தொடக் கமும் முடிவும் ஒரே புள்ளியில் தொடங்கி ஒரே புள்ளியில் முடிவடைவதால் கதைக்குள் கதை கூறல் இவரது எழுத்துக் குள் இல்லாமல்போய்விடுகிறது. இன்று சிறுகதை அடைந்தி ருக்கும் வடிவ மாற்றங்களை அறபாத் ஏற்றுக்கொள்கிறாரா? அல்லது மறுதலிக்கிறாரா? அறபாத்தின் புனைவுக்குள் வாழும் அந்த சாமான்ய மக்களின் பிரச்சினைகளை இன் னொரு தளத்துக்கும் எடுத்துச் செல்லும் திறன் படைத்த படைப்பாளியான அறபாத் கதையின் ஏனைய வடிவங்களை யும் பரீட்சித்துப்பார்ப்பது பயனுள்ளது என்று சொல்லத் தோன்றுகிறது. எனினும் சில மாதங்களுக்கு முன் எனக்கு வாசிக்கக்கிடைத்த அவரது சிறுகதை ஒன்று (மூன்று பூனை கள் பற்றிய ஏழு குறிப்புகள் என்று நினைக்கிறேன்) குறிப் பிடத்தக்க முயற்சியாக இருந்தது. அத்தகைய புதிய மாற் றங்களையும் சேர்த்துக்கொள்வது இலக்கியத்தில் ஒன்றும் ‘பித்அத்’ இல்லையே!


அறபாத் எனும் கதைசொல்லி கதையினைச் சொல்லும் பாங் கில் வெளிப்படும் அழகியல் ஒரு கதையிலிருந்து ஏனைய கதைகளுக்கும் ஊடுருவி விடுகிறது. கதைசொல்லியின் விவ ரணம் ஒவ்வொரு கதையிலும் ஒரேமாதிரியாக அமைந்திருப்

பது போன்ற உணர்வுக்கு வாசகர் உள்ளாகும் நிலை ஏற்பட்டிருப்பது வருத்தத்துக்குரியதே. இது ஒரு வகையான அருட்டுணர்வை ஏற்படுத்தக் கூடியது என்பதை ஒரு வாசகராக நின்று நான் உணர்கிறேன்.

‘எழுத்தாளர்களான நாங்கள் பயன்படுத்தும் கற்கள் வார்த்தைகள். அவற்றை எங்கள் கைகளில் ஏந்தி ஒவ்வொன்றும் மற்றொன்றுடன் இணைந்திருக்கும் வழிவகைகளை உணர்ந்து, சில நேரங்களில் அவற்றைத் தூர வைத்துப் பார்த்து, சில வேளைகளில் எங்கள் விரல்களாலும் பேனாக்களின் முனைகளாலும் ஏறக்குறைய தட்டிக்கொடுத்து, சீராட்டி, அவற்றை எடைபோட்டு, அங்குமிங்கும் நகர்த்தியமைத்து வருடாவருடமாகப் பொறுமையோடும், நம்பிக்கையோடும் புதிய உலகங்களை உருவாக்குகிறோம்’ என்று ஒரு முறை ஓரான் பாமுக் எழுதியதாக ஞாபகம். எழுத்தாளர்கள் தமது கதைகளைப் பொது அரங்குக்குக் கொண்டு வருமுன் இத்தகைய நிலைகளைத் தாண்டியே ஆகவேண்டியுள்ளது. இந்தத் தடைதாண்டலில் எல்லா எழுத்தாளர்களும் துரதிஸ்டவசமாக வெற்றி பெறுவதில்லை. கதையாக்கத்தில் ஓரான் பாமுக் சொல்லும் இந்தப் படிமுறைகளை அறபாத்தும் தாண்டுகின்றபோதிலும் ஓரான் பாமுக் கடைசியாகச் சொல்லும் ‘புதிய உலகங்களை உருவாக்குகிறோம்’ என்பது இங்கு அறபாத்துக்குச் சாத்தியமில்லாததாகப் போய்விடுகிறது.

நமது சூழலில், எழுத்தாளர்களாகிய நாங்கள் புதிய உலகங்களைக் கட்டியெழுப்புவதில்லை, புதிய மனிதர்களை உருவாக்குவதில்லை, புதிய கனவுகளைப் படைப்பதில்லை, ஏற்கனவே இருந்த உலகங்களையே புனர்நிர்மாணம் செய்கிறோம், ஏற்கனவே உள்ள மனிதர்களையே செப்பனிடுகிறோம், ஏற்கனவே பேசப்பட்ட வார்த்தைகளுக்கு- நம்பிக்கைகளுக்கு புதிய வடிவங்களைக் கொடுக்கிறோம், தூர்ந்து போன கனவுகளுக்குப் புதுத்தெம்பூட்டுகிறோம். இதுதான் எங்களால் இப்போது செய்ய முடியுமான பணியாகவுள்ளது. இந்த மண்ணிலிருந்து கொண்டு அறபாத்தாலும் எப்படித்தான் புதிய உலகங்களை உருவாக்க முடியும்?

ஓர் அறைக்குள் தன்னை அடைத்துக் கொண்டு எழுதத்தொடங்கும் போது அந்த அறை வியாபகம் கொள்கிறது. அந்த அறை முழுதும் கதைகள் கொட்டிக் கிடக்கின்றன. நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் எல்லாவிதமான கதைகளும் அறபாத்தின் இந்த உடைந்த கண்ணாடிகளுக்குள் மறைந்துகிடப்பதைப் போல அவரது அறைக்குள் கிடக்கின்றன. அதை பொறுக்கி எடுத்து ஒட்டி நேர்த்தியாக்கி அவர் தருகிறார். உடைந்த கண்ணாடிகளாயினும் அறபாத்தின் குருவிகள் உயிருள்ளவை. சிறிய இறக்கைகளேயாயினும் உலகை வலம் வர முனைபவை.



jiffry.hassan@thaiveedu.com

கனடா Scarborough நகரில், 29 July 2023
சனிக்கிழமை மாலை 6 மணிக்கு, தமிழ் சேர்ச் மண்டபத்தில் எனது
“அகதியின் பேர்ளின் வாசல்”
நாவல் வெளியீடு.
Immaculate Heart of Mary Church
131 Birchmount Rd, Scarborough, ON MIN 3J7
உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.
ஆசி கந்தராஜா, சிட்னி. ஆஸ்திரேலியா





மதிப்புக்குரிய நண்பர் பாலேந்திரா அவர்களை நான் முதன் முதலாகச் சந்தித்தது 1981-ன் இறுதிப் பகுதியில் என்று நினைக்கிறேன். மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்கத்தில் அப்போது பொறுப்பாக இருந்த நண்பர்களுடன் இணைந்து ஒரு நாடகத்தை மேடையேற்றும் நோக்குடன் அவர் அங்கு கலந்துரையாட வந்தபோதுதான் இந்தச் சந்திப்பு நடந்தது. முன்னரே தமிழ்ச் சங்கக் கூட்டமொன்றில் இந்தச் சந்திப்புத் தொடர்பாகக் குறிப்பிடும்போது, பல்கலைக்கழகத்தின் பழைய மாணவரும், ஏற்கனவே மாணவராக இருந்த நாட்களில் மிகவும் வரவேற்பைப் பெற்ற பல நாடகங்களை மேடையேற்றியவருமான அவரைப் பற்றித் தமிழ்ச் சங்கத்தின் அப்போதைய தலைமைப் பொறுப்பிலிருந்த நண்பர்கள் விதந்து கூறியிருந்தார்கள். கூடவே அந்த நாடகங்களில் நடித்த சில நண்பர்களும் அந்தக் கூட்டத்தில் இருந்து இதை வரவேற்றதைக் கண்டபோது உண்மையில் நான் மகிழ்ச்சியடைந்தேன். சிறுவயதிலிருந்து கூத்துக்கள், நாடகங்கள் பார்ப்பதிலும், நடிப்பதிலும் ஆர்வமிருந்தபோதும் ஓரிரு பாடசாலை நாடகங்களிலேயே எனக்கு நடிக்கும் வாய்ப்புக் கிடைத்திருந்ததால் மிகவும் ஆர்வத்துடன் இருந்தேன். ஆனால் இந்த முதலாவது சந்திப்பின் போது, அவர் பயிற்சிகளை ஆரம்பிக்கலாம் என்று தெரிவித்த போதுதான் என்ன நாடகம் என்ற கேள்வி எம்மத்தியில் எழுந்தது. ‘நாடகப் பிரதி இன்னமும் தயாராகவில்லை, விரைவில் தயாராகிவிடும். நாம் பயிற்சியை ஆரம்பிக்கலாம்’ என்று அவர் குறிப்பிட்டபோது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. பிரதியில்லாமலே பயிற்சியை ஆரம்பிப்பதா என்ற குழப்பம் எனக்கு எழுந்தது. ஆனால் பிரதி கையில் கிடைக்கமுதலே, அது எந்தப் பிரதியாக இருந்தாலும் சரி, பிரதியைப் படிப்பதற்கு முதல் எங்களது உடலுக்குப் பயிற்சி தேவை என்பதைக் குறிப்பிட்டு முதல் நாள் அவர் எங்களுக்கு வழங்கிய உடற் பயிற்சியும், அது ஏன் நாடக நடிகர்களுக்கு அவசியம் என்று அவர் விளக்கிய விதமும் உண்மையில் எனக்கு முழுக்க முழுக்கப் புதிய விடயமாக இருந்தது மட்டுமல்ல, ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் அமைந்திருந்தது. இந்தியாவின் புகழ்பெற்ற கன்னட மொழி நாடகர் கிரிஸ் கர்நாட் அவர்கள் எழுதிய ‘துக்ளக்’ என்ற நாடகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பிலிருந்து தமிழுக்கான மொழிபெயர்ப்பை, பரவலாக அறியப்பட்ட மிக நல்ல சிறுகதையாளரும், அருமையான மொழிபெயர்ப்பாளருமான எம்.எல்.எம். மன்சூர் அவர்கள் மொழிபெயர்த்திருந்தார். மொழிபெயர்ப்பு முடிந்து அது நமது கைக்கு வரும் வரையான நாட்களிலும், அது வந்தபின்னும்கூட இந்த உடற் பயிற்சிகள் தொடர்ந்துகொண்டிருந்தன. அதன் பின்னர் தான் பிரதியை வாசிக்கும் பயிற்சி ஆரம்பமானது.

நாடகத்தினை வாசித்தலுடன் தொடங்கிய வாசிப்புப் பயிற்சிகளும் அதன்பின்னான நடிப்பு ஒத்திகைகளும் நடக்கும் போதுதான் நாம் செய்துவரும் உடற்பயிற்சிகளின் முக்கியத்துவமும் அவற்றின் பயன்களும் எமக்குப் புரியத் தொடங்கின. உண்மையில் நாடகம் என்பது வெற்றிகரமான ஒரு அளிக்கையாக அமைய வேண்டுமென்றால் அது சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரதும் முழுமையான கூட்டு உழைப்பின் மூலமே சாத்தியம் என்பதை அவரது வழிகாட்டலில் நடந்த ஒத்திகைக் காலத்தில் நாம் மிகவும் தெளிவாகத் தெரிந்து கொண்டோம். மேடையில் உள்ள ஒவ்வொரு நடிகரும், மேடையிலுள்ள ஒவ்வொரு பொருட்களும், மேடைக்குப் பின்னால் உள்ள ஒவ்வொருவரது நடவடிக்கைகளும் என்று எல்லாமே ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாதவாறு பிணைக்கப்பட்டுள்ளவை என்ற உணர்நிலைக்கு ஒவ்வொரு நடிகரும் வருவதற்கு இந்தப் பயிற்சிகள் மிகவும் முக்கியமானதும் அடிப்படையானதுமான தேவை என்பதை நாம் புரிந்து கொண்டோம்.

தவிரவும், அந்த நாடகத்தின் பாத்திரங்கள் முழுக்க முழுக்க இஸ்லாமியப் பண்பாட்டினைக் கொண்ட பாத்திரங்கள் என்பதால் இஸ்லாமியர்கள் அல்லாத நாம் பயன்படுத்தும் விதம், அந்தப் பண்பாட்டோடு சம்பந்தப்பட்ட சொற்கள் வரும் போது அவற்றை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பவற்றில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்பது பற்றியெல்லாம் பாலேந்திரா அவர்கள் காட்டிய அக்கறை எனக்கு வியப்பைமட்டுமல்ல அவர்மீதான பெரும் மரியாதையையும் ஏற்படுத்தியது. அல்லா என்ற சொல்லை உச்சரிப்பது எப்

படி? தொழுகை நடத்துவது எப்படி? என்பதெல்லாம் பற்றி நாடக மொழிபெயர்ப்பாளரான எம்.எல்.எம். மன்சூர் அவர்களின் உதவியுடன் நாம் பழகிக் கொண்டது எனக்கு இன்னமும் பசுமையாக ஞாபகமிருக்கிறது.

பாலேந்திரா அவர்கள் கடந்த அரைநூற்றாண்டு காலத்துக்கு மேலாக தொடர்ச்சியாக இயங்கிவருகின்ற ஒரு முக்கியமான




ஆளுமை அவர். இந்த நூலில் தொகுக்கப்பட்டுள்ள கட்டுரைகளில் அனேகமானவற்றை நான் வெவ்வேறு காலங்களில் பத்திரிகைகளில் வெளிவந்தபோது படித்து இருக்கிறேன். ஆயினும் ஒரு தொகுப்பாக இன்று அந்தக் கட்டுரைகளடங்கிய இந்த நூலை வாசிக்கும் போது, அது பேசும் விடயங்கள் இன்றும் கூட நாடக ஆர்வலர்கள் மத்தியில் பரவலாகச் செல்லவேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் கொண்டவையாக என்னால் உணர முடிகிறது என்று சொல்வது ஒரு வெற்றுப் புகழ்ச்சியல்ல. நாடகப்பிரதி எழுதுபவர்கள், நாடக நடிகர்கள், மேடை ஒருங்கிணைப்பாளர்கள், நெறியாளர்கள், நாடக ஆர்வலர்கள் என்று அனைத்துப் பிரிவினருக்கும் பயனுள்ள பல விடயங்களைப் பேசுகின்றது இந்தச் சிறிய நூல்.

இந்த நூலுக்கான தனது அணிந்துரையில், தமிழகத்தின் மதிப்புக்குரிய படைப்பாளியும் நாடகருமான இந்திரா பார்த்தசாரதி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றார்:

*'நாடகமொழி பற்றி அருமையாகச் சொல்லியிருக்கின்றார் பாலேந்திரா. நாடகம் காண்போருக்கும் மேடையில் நிகழ்த்துனருக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட, வரையறுக்கப்பட்ட கால இட அளவில் நிகழும் மௌன உரையாடல். பார்க்கிறவர்கள் நாடக அரங்கக் காட்சிகள், பேசப்படும் வசனங்கள், நடிப்போர்களின் முக பாவங்கள், அவர்கள் மேடையில் நிற்கும் இடங்கள் ஆகிய அனைத்தையும் உட்கொண்டுதான் நாடகத்தோடு ஐக்கியமாகிறார்கள். இது நாடக ஆசிரியரும் இயக்குனரும் உணரவேண்டிய செய்தி. இதை மிகத் தெளிவாக விளக்குகிறார் பாலேந்திரா'.*

ஆம். அவர் ஒரு பிரதியை நாடகமாக நிகழ்த்திக் காட்டும் செயலின் போது இந்த ஒவ்வொரு விடயத்தையும் மிகவும் கவனமாகக் கையாள்பவர் என்பதை நான் அனுபவ ரீதியாக உணர்ந்தவன். ஒரு நடிகராகவும், நாடக நெறியாளராகவும், நல்ல நாடகங்களைத் தேடித்தேடி அலைபவராகவும் அவர் தனது முழு வாழ்க்கைக் காலத்தையும் அதற்கென அர்ப்பணித்து இயங்கி வருபவர் என்பதை நான் நன்கு அறிவேன். *'நாடகங்களை நடத்துவது மட்டுமல்ல, நாடகம் ஒரு இயக்கமாக இருக்க வேண்டும் என்பதால், தீவிர நாடகங்கள் பற்றிய பிரக்ஞையை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்குப் பத்திரிகைகள் வாயிலாகவும் கருத்துக்கள் பரப்பப்பட வேண்டும் என்று விரும்பிச் செயற்பட்டேன்'* என்று கூறும் பாலேந்திரா அவர்கள், நாட்டைவிட்டுப் புலம்பெயர்ந்து இங்கிலாந்துக்குச் செல்லவேண்டிய நிலை வந்தபோதும் நாடகத்துடனான தனது உறவையோ இயக்கத்தையோ விட்டுவிடவில்லை. 'தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம்' என்ற அவரது அமைப்பின் மூலமாக தொடர்ச்சியாக இன்றுவரை இயங்கிக் கொண்டு இருப்பவர் அவர். அந்த வகையில், இந்திரா பார்த்தசாரதி அவர்களது இந்தக் குறிப்பு வெறும் புகழ்ச்சிக் குறிப்பல்ல. அதை இந்தச் சிறிய நூலை வாசிக்கும் நாடக ஆர்வலர்கள் எவரும் புரிந்துகொள்வர்.

மேடைப் பிரச்சினைகள் என்ற தலைப்பில் அவர் தினகரன் பத்திரிகையில் எழுதிய பத்தியில் வெளியான பதினொரு சிறிய கட்டுரைகள் நாடகத்துறையில் ஆர்வமுள்ள இளம் தலைமுறையினர் மட்டுமல்ல நாடகத்துறை சார்ந்த அனைவரும் அவசியம் வாசிக்கவேண்டிய முக்கியமான கட்டுரைகள் என்று எந்தத் தயக்கமுமின்றிச் சொல்ல முடியும். நாற்பது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந்தக் கட்டுரைகள் இன்றுவரை முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரைகள் என்று கூறுவதற்குக் காரணம், ஈழத் தமிழில் நாடகம் சார்ந்த வழிகாட்டலை வழங்கும் இத்தகைய கட்டுரைகள் நூலாக வெளிவந்திருப்பது நானறிந்த வகையில் இதுதான் முதற்தடவை என்பதுதான். கவனத்துக்குரிய நாடகாசிரியர்கள், நெறியாளர்கள் என்று குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய நெறியாளர்கள்

பலர் இருந்திருக்கிறார்கள். நல்ல நாடகங்களை அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் நாடகத் துறைசார்ந்த நூல்களை அவர்களில் யாரும் எழுதியதாகத் தெரியவில்லை. யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற கற்கைநெறி பட்டப்படிப்புக்காக வந்து இரண்டு தசாப்தங்களைக் கடந்துவிட்ட போதும், பொதுமக் கள் மத்தியில் அத்துறைசார்ந்த விடயங்களைப் பேசும் நூல் களாக எத்தகைய கவனத்துக்குரிய நூல்களும் வெளிவந்தி ருப்பதாகத் தெரியவில்லை. அந்தவகையில் என்னைப் பொறுத்தவரை 'மேடைப் பிரச்சினைகள்' என்றதொடரில் இந்த நூலில் வெளிவந்திருக்கும் கட்டுரைகள் மிகுந்த கவ னத்துக்குரிய - அவை அளவில் சிறியனவாயினும் - முக்கி யம் வாய்ந்தவை என்பது எனது அபிப்பிராயம்.

குறிப்பாக நாடகம் என்பது என்ன என்பதை அவர் விளக்கும் ஓர் உதாரணத்தை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். அவர் எழுதுகிறார்: ஒரு விஷ யத்தை எடுத்துரைக்கும் 'நரேட்டிவ்' என்கிற தன்மையும் கவித்துவமும் நாடகத்தில் காணப்பட்டாலும்கூட சம்பவங்கள் நிகழ்தல் என்பதே நாடகத்தின் அடிப்படைத் தன்மையாகும். நாடகத்தில் சம்பவங்கள் சொல்லப்படுவதில்லை. காட்டப்படு கின்றன. 'தியேட்டர்', 'டிராமா' என்ற கிரேக்கச் சொற்களுக் குரிய மூல அர்த்தத்தை நோக்கினாலே இது இலகுவாகப் புரிந்துவிடும். 'தியேட்டர்' என்றால் பார்க்கும் இடம் என்றும் 'டிராமா' என்றால் செய்து காட்டுதல் என்றும் பொருள். எனவே நாடகத்தில் விடயங்களைச் சொல்லாதீர்கள் செய்து காட்டுங்கள்'.

அவர் அதே கட்டுரையில் மேலும் ஓரிடத்தில் 'இசை, ஒளி, ஒப்பனை, மேடைப் பொருட்கள் என்று பல கூறுகள் மேடை யேற்றத்துக்கு உதவி புரிந்தாலும், மனித அவயவங்களும் மேடையுமே அதி அத்தியாவசியமானவையும் மிகப் பழமை யானவையும் ஆகும். இவற்றை மட்டுமே கொண்டு ஒரு வலு வான மேடையேற்றம் சாத்தியமாகும்' என்று குறிப்பிடுகிறார். அவர் மேலும் இதை விளக்குகையில் 'நாடகாசிரியர் பல வார்த்தைகளால் விளக்க முடியாத பல விஷயங்களை, மேடையில் பாத்திரங்கள் நிற்கும் இடங்களையும் கோணங்க ளையும் கொண்டு எளிதில் விளங்கவைத்து விடலாம். மேடை யில் நடிகர்கள் நிகழ்த்துகின்ற படிமங்கள், கோலங்கள், சல னங்கள், சைகைகள், மேடைச் செயல்கள் தான் மேடை மொழியாகும். இது அர்த்தமுள்ள வகையில் வலுவாகக் கையாளப்பட வேண்டும்.

இந்த 'மேடைப் பிரச்சினைகள்' என்ற பத்திக் கட்டுரைகள் பல முக்கியமான, மேடை சார்ந்த விடயங்களை விரிந்த உரையாடலுக்கு இட்டுச்செல்லும் விதத்தில் அதனுடன் சம் பந்தப்பட்ட பல விடயங்களையும் பற்றிச் சுருக்கமாகப் பேசு கின்றன.

இந்தப் பகுதியில் வரும் 'நாடகத்தில் வார்த்தைகள்' என்ற கட்டுரையில் வார்த்தைகளின் முக்கியத்துவம், அவை ஏற்ப டுத்த வேண்டிய தொனி, அவை சொல்லப்படும் இடங்களில் வரும் சலனங்களைப் பார்வைப்படுத்துவதன் முக்கியத்துவம் என்பவை பற்றி மிகவும் எளிமையாக விளக்கியுள்ளார். சொற் களுக்கான முக்கியத்துவம் கொடுக்கப்படாமல் காட்சிச் சோடனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதன் கார ணமாகவே எமது பண்டைய நாடகச் சுவடிகள் அழிந்து போயின என்று குறிப்பிடும் அவர், உலக நாடக ஆசிரியர் களுடன் ஒப்பிடுகையில் எம்மிடையே அவற்றுடன் ஒப்பிடக்கூ டிய ஒரு நாடகாசிரியர் இல்லை என்பது நமது சூழலின் அவலம் என்று கவலையுடன் தெரிவிக்கிறார். நாற்பது ஆண் டுகளுக்கு முன்னர் குறிப்பிட்ட இந்த நிலையில் பெரியளவி லான மாற்றங்கள் இன்றுவரை நடந்துவிடவில்லை என்பது உண்மையில் கவலைக்கும் நம் சிந்தனைக்குமுரிய முக்கிய மான ஒரு அம்சமாகும். எமது ஈழத் தமிழ்ச் சூழலில் மற் றைய மொழிகளுடன் - ஏன் நமது நாட்டிலுள்ள சிங்கள மொழியுடன் ஒப்பிடுகையில் கூட - கவிஞர்களும் கதைசொல் லிகளும் இருக்கும் அளவுக்கு நாடக மொழிவாய்த்த கலை ஞர்களின் அளவு இல்லையென்பது ஒரு கவலைக்குரிய விட யம் அல்லவா? அவர் நாற்பது ஆண்டுகளுக்கு முந்திய இந்தக் குறிப்பை 'நடிகரால் பேசி நடிக்கப்படும் சொற்களை, பார்வையாளர்களால் கேட்கப்படும் சொற்களை தகுந்தமுறை யில் கையாளும் நல்ல நாடகாசிரியர்கள் எமக்குத் தேவை' என்று முடித்திருப்பார். அந்தத் தேவை இன்னமும் இருப்பது தான் நமது சூழலின் நிலை என்பதை அதிகம் விளக்க வேண்டியதில்லை.

வானொலி நாடகங்களுக்கும் மேடை நாடகங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை, திரைப்படத்துக்கும் மேடை நாடகங்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடுகளை எல்லாம் சுட்டிக்காட்டி, நாடகத்தின் தனித்துவத்தைப் பேணி வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் அவர், இதற்கு ஒரு தொடர்ச்சியான நாடக இயக்கம் தேவை என்பதை வலியுறுத் துகிறார். நான் நினைக்கிறேன், இதைச் செயலில் காட்டும் நோக்குடன் அவரால் உருவாக்கப்பட்ட அமைப்புத்தான் அவைகாற்றுக் கலைக் கழகம் என்று. ஆயினும், ஈழத் தமி ழில் இதுபோன்ற பல இயக்கங்கள் தொடர்ச்சியான செயற் பாட்டில் இயங்கும் நிலை உருவாகவில்லை என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ஆங்காங்கே இங்கு கனடாவிலும் சிறுசிறு முயற்சிகள் நடந்துள்ள போதும் அவை தொடர்ச்சி யான செயற்பாட்டில் இருக்கவில்லை அல்லது இருக்க முடி யவில்லை என்பதை நாம் மனங்கொள்ளல் அவசியம் என்று கருதுகிறேன்.

இந்த நிலை பற்றி அவர் இவ்வாறு வினவுகிறார்:

'சங்க காலத்திலேயே தமிழை இயல், இசை, நாடகம் என வகுத்துப் பார்த்திருக்கிறோம். சிலப்பதிகாரத்தில் அரங்கம் பற்றிப் பேசப்படுகிறது. வரலாற்றில் ஆங்காங்கே குரவை என்றெல்லாம் இருந்ததாக அறிகிறோம். ஆனால் அது ஒரு தொடர்ச்சி இல்லாமல் அறுபட்டுக் காணப்படுகிறது. இது எப் படி நிகழலாம்? கவிதையில் பல கொடுமுடிகளைக் கண்டி

ருக்கிறோம் ஆனால் நாடகத்துக்கு இல்லை. கவிச்சக்கர-வர்த்தி கம்பனைக் கண்டிருக்கிறோம். சமாந்தரமாக அப்படி ஒரு உன்னத நாடகாசிரியரைக் காணவில்லை. இது எப்படிச் சாத்தியம்? எமக்கு ஏன் ஒரு சேக்ஸ்பியரோ, இப்சனோ, பிறெக்டோ இல்லாமற் போய் விட்டார்கள்? ஒரு மொழியின் வளர்ச்சியில் இப்படி ஒரு சமனில்லாத தன்மை எப்படி வந்தது?

மிகவும் நியாயமான கேள்வி. விரிவாக ஆராயப்பட வேண்டிய கேள்வி. நமது பாரம்பரியத்தில் எமக்கு முந்திய தலைமுறையினர் மத்தியில் நிலவி வந்த வட்டக் களரிக் கூத்து, கொட்டகைக் கூத்துப் போன்ற நாட்டார் கலை என அழைக்கப்பட்ட கலைவடிவங்களும் கூட இன்று அருகிவிட்டதை நாட்டின் உற்பத்திமுறை மாற்றமும் அதன் காரணமான வாழ்வியல் மாற்றங்களும் இத்தகைய கலைகளின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணங்களாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. ஆயினும் காலத்துடன் பொருந்தும் நவீன நாடகங்கள் கூட இலங்கையில் பெருமளவில் வளர்ச்சி பெறாமைக்கு அங்கு நிலவிய யுத்த சூழலும் ஒரு காரணம் என்பது எனது அபிப்பிராயம். எவ்வாறாயினும் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் அவர் எழுப்பிய கேள்வியும், அதிலிருந்து விடுபட்டு முன்செல்லவென, 'தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழக'த்தைத் தொடங்கி அவர் இலங்கையில் எடுத்த முயற்சிகளும் கூட இந்த யுத்த சூழலின் பாதிப்புக்கு உள்ளாகுவதைத் தவிர்க்க முடியவில்லை. இந்த விடயங்கள் விரிவான உரையாடலுக்கு உரியவை.

இந்நூலின் இரண்டாவது பகுதியாக வரும் நாடகச் சர்ச்சை என்ற தலைப்பிலான இரண்டு கட்டுரைகள். இவை 'மொழி பெயர்ப்பு நாடகங்கள்', 'புதிய தலைமுறை பூச்சியம் தானா' என்ற இரண்டு கட்டுரைகளைக் கொண்ட பகுதியாக உள்ளது. 80-களின் ஆரம்பத்தில் நடந்த இத்தகைய நாடக முயற்சிகளுடன் சம்பந்தப்பட்ட விமர்சனங்கள் குறித்தான ஆசிரியரின் எதிர்வினையாக அமைந்த கட்டுரைகள் இவை. இந்தக் காலத்தில் அரங்கியல் சார்ந்த எத்தகைய துறைசார் கல்வித்திட்டங்களும் இலங்கையில் இருக்கவில்லை. இதன் பின்னரே நாடகமும் அரங்கியலும் என்ற பல்கலைக்கழக மட்டத்திலான கற்கைநெறி ஆரம்பமாகியதும் உயர்தர வகுப்புக்கான பாடத்திட்டத்தில் அது சேர்த்துக் கொள்ளப்பட்டதும் நடந்தது. இந்த எதிர்வினைக் கட்டுரைகளினூடாக பாலேந்திரா அவர்கள் தம்மீது முன்வைக்கப்பட்ட விமர்சனங்களுக்குப் பதிலளித்துள்ளார். இந்த இடத்தில் அவர் குறிப்பிடும் ஒரு விடயம் முக்கியமானது என்று கருதுகிறேன். ஆம், நாடகத்துக்கான நல்ல நாடகப் பிரதிகள் இல்லை என்ற நிலையை அவர் எதிர் கொள்கிறார். இதனால் தவிர்க்க முடியாமல் சில மொழிபெயர்ப்பு நாடகங்களை மேடையேற்றும் நிலைக்குத் தள்ளப்படுகிறார். இந்த நிலையில் மொழிபெயர்ப்பு நாடகங்களைப் போடுவது குறித்து அவர்மீது விமர்சனம் முன்வைக்கப்படுகிறது. அதற்கு அவர் இவ்வாறு பதிலளிக்கிறார்: 'சரி. தெரிந்தெடுத்து மேடையேற்றத் தரமான நாடகங்கள் குவிந்து கிடக்கின்றனவா? இல்லை. நாடகங்களிடையே தார தம்மியம் கண்டு தர நிர்ணயம் செய்யாமல் யாவற்றையும் கொள்வதில் எனக்கும் உடன்பாடு இல்லை தான். அதனால் தான் பிரச்சினையே எழுகிறது. தமிழ் நாடகம் மிகவும் மோசமாக வீழ்ந்து கிடக்கிறது என்று கூறி இரங்கி நாவலிக்க மேடைகளில், கருத்தரங்குகளில் கத்துவதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. செயல் ரீதியாகத் தொடர்ந்த நாடக மேடையேற்றங்கள் நடந்தால் மாத்திரமே நாடக உலகம் வளம்பெற முடியும்.

நிலைமை அப்படித்தான் இன்றுவரை நிலவுகிறது. உண்மையில் தொடர்ச்சியான ஒரு நாடக இயக்கம் இல்லாமல் நாடகம் எழுதப்படுவது நடப்பதில்லை என்பது உண்மைதான்.

நூலின் அடுத்த பகுதி அவர் அறிமுகப்படுத்திய இந்திய நாடகாசிரியர்கள் பற்றிய அறிமுகக் குறிப்புக்களாக அமைந்துள்ளன. ஹிந்தி நாடகாசிரியர் மோஹம் ராகேஷ் (அரையும் குறையும்), வங்க நாடகாசிரியர் பாதல் சர்க்கார் (முகமில்லாத மனிதர்கள்), கன்னட நாடகாசிரியர் கிறிஸ் கர்நாட்(துக்-ளக்) ஆகியவர்களது நாடகத்துறைப் பங்களிப்புகள் பற்றிப் பேசும் இப்பகுதி மிகவும் முக்கியமான ஒரு பகுதி என்று சொல்லலாம். அதிலும் பாதல் சர்த்தார் பற்றி அவர் இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளார். இலங்கையில் இவரது நாடகங்கள் பற்றிய சிந்தனைகளும் செயற்பாடுகளும் பல நாடகக் கலைஞர்கள் மத்தியில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியவை என்று சொல்லலாம். சிங்கள மொழியில் வெற்றிகரமாக நடத்தப்படும் வீதி நாடகங்கள் பெருமளவுக்கு மாற்று அரசியலைப் பேசும் கலைவடிவமாக சிங்கள மொழியில் சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றன. ஈழத் தமிழில் அது வெற்றிகரமான சாதனைகள் எவற்றையும் சாதிக்கா விட்டாலும் முயற்சிகள் யாழ் பல்கலைக்கழக மட்டத்தில் நடந்ததாக அறிந்திருக்கிறேன்.

மற்றைய மூன்று கட்டுரைகளும் தமிழ் அவைக்காற்றுக் கலைக்கழகம் தொடர்பான கட்டுரைகள். புலம்பெயர் நாடக அரங்கு வளர்ச்சிகளும் பிரச்சினைகளும் என்ற தலைப்பில் வெளியான இக்கட்டுரைகள் ஐரோப்பா, கனடா போன்ற புலம்பெயர் நாடுகளில் எடுக்கப்பட்ட தமிழ் நாடக முயற்சிகள், அவற்றைச் செய்வதிலுள்ள சவால்கள், அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் முயற்சிகள், அனுபவங்கள் என்பவை பற்றிய பதிவுகளாக அமைந்துள்ளன. நாடக ஆர்வலர்கள் மட்டுமல்ல, பொதுவான வாசகர்கள் மத்தியிலும் நமது நாடகம் குறித்த புரிதலையும் வரலாற்றையும் அறிந்துகொள்வதற்கும், இத்துறையில் செயற்படவுள்ள ஆர்வலர்களுக்கான அடிப்படை வழிகாட்டல்களைப் பெற்றுக்கொள்ளவும் இந்த நூல் உதவும் என்று நம்புகிறேன். அதன் காரணமாகவே இது அனைவரும் அவசியம் வாசிக்கவேண்டிய நூல்.



vickneaswaran.sk@thaiveedu.com

# சமுத்திரன் எழுத்துகள் - தொகுதி 3 :

## கலை, இலக்கிய, சமூக, அரசியல் விமர்சனப் பார்வை

**- மைத்ரேயி சபாரட்ணம்**

இக்கட்டுரைகளின் அமைப்பில் உள்ள ஒரு பொதுத் தன்மை என்பது, வரலாற்றுப் பின்னணியைத் தருதல் - கட்டுரைப் பொருளை அறிமுகம் செய்தல் - அது தொடர்பான கருத்துகள், கேள்விகளை எழுப்புதல் - அது உள்ளடக்கி இருந்திருக்கக் கூடிய அல்லது அது செல்ல வேண்டிய பாதை பற்றிய தனது கருத்தைத் தருதல் என்பனவாகும். இதை ஒரு நூல் விமர்சனத்துக்கான ஒரு template என்றுகூடப் பார்க்கலாம்.

சமூகம் என்ற விடயம் மிகவும் பரந்தது. அதன் மீதான விமர்சனம் என்பது பல கோணங்களில் செய்யப்படலாம். இந்நூலில் திரு. சமுத்திரன் அவர்களின் விமர்சனப் பார்வை சமூகம் தொடர்பான எந்த அம்சங்களின் மீது விழுந்திருக்கிறது என்பதை 'நூல் அறிமுகத்தின் வரைவிலக்கணத்திற்கமைய மேலோட்டமாக பார்ப்பதே இவ்வறிமுகத்தின் நோக்கமாகும்.

எனவே நான் இவ்வறிமுகத்தில் இந்நூலின் உள்ளடக்கம், இதில் காணப்படும் வரலாற்றுப் பார்வை, எமது புலம்பெயர் வாழ்வை ஆவணப் படுத்தலில் இதன் பங்களிப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தலாம் என எண்ணுகிறேன்.

முதலில் இக்கட்டுரைத் தொகுதி பற்றிய சில அடிப்படைத் தகவல்கள்: இந்நூல் 1976-க்கும் 2021-க்கும் இடையில் எழுதப்பட்ட 12 கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். இக்கட்டுரைகளில் முதல் இரண்டு இலங்கையில் எழுதப்பட்டவை. ஏனையவை சமுத்திரன் நோர்வேயிற்கு வந்த பின் எழுதப்பட்டவை.

இக்கட்டுரைகளில் சமுத்திரன் அவர்கள் தான் வாசித்துச் சுவைத்த சில நூல்கள், மற்றும் பார்த்து ரசித்த அரங்க நிகழ்வுகள், அவதானித்த புலம்பெயர் இலக்கியப் போக்கு ஆகியவை தன் மனதில் ஏற்படுத்திய சிந்தனைகளைப் பதிவு செய்திருக்கிறார்.

- நூல் விமர்சனம் என்ற வகைக்குள் நோர்வே வாழ் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான 'துருவச் சுவடுகள்', கனடிய எழுத்தாளர் கௌரியின் ஆத்திரமும் கவித்துவமான துன்பியலும் ஆன 'அகதி', மு. தளையசிங்கத்தின் 'ஒரு தனி வீடு', S.V. ராசதுரையின் 'இந்து-இந்தி-இந்தியா, சோமேசசுந்தரி கிருஷ்ணகுமாரின் 'மாற்றமும் மரபு பேணலும்' சரவணனின் 'தலித்தின் குறிப்புகள்', எம். வாமதேவனின் சுயசரிதையான 'குன்றிலிருந்து கோட்டைக்கு', மௌனகுருவின் கூத்த யாத்திரையான 'கொண்டதும் கொடுத்ததும்' ஆகிய 8 கட்டுரைகள் அடங்கும்.
- அரங்க நிகழ்வுகள் பற்றிய விமர்சனம் என்ற வகைக்குள் பாலேந்திராவின் 'மழை' நாடகம் (1976), கவிதாவின் 'அசையும் கவிதைகளும் ஞானரதம் நடன நாடகமும்' (2018) அடங்குகின்றன.
- புலம் பெயர் தமிழிலக்கியம் பற்றிய வரலாற்றுப் பார்வை என்பதில் 'ஈழத் தமிழர் போராட்டத்தில் புலம்பெயர் எழுத்தாளரின் பங்கு', 'புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் எதிர்காலம் பற்றிச் சில கேள்விகள்' ஆகியவை உள்ளன.

இக்கட்டுரைகளை மேற்கூறியவாறு நூல் விமர்சனம், அரங்க நிகழ்வு விமர்சனம், புலம்பெயர் இலக்கியம் பற்றிய பார்வை என்று வகைப்படுத்த முனைவது ஒரு வசதி கருதிய பரிமாணச் சித்தரிப்பே. இக்கட்டுரைகளுக்கிடையே சில பொது அம்சங்களும் (intersections) காணப்படுகின்றன. இவற்றினூடு இழையோடும் அரசியலை சமுத்திரனின் மார்க்சீயப் பார்வை வர்க்கம், பால், சாதி, இன அடக்கு முறைகள், சமூக அநீதிகள் என்ற வகைகளாகத் தொட்டுச் செல்லும்.


எனினும் இக்கட்டுரைகளை வாசித்து முடித்த போது பிரதான பொதுமை என என் மனதில் தோன்றியது இக்கட்டுரைகளில் விரவி நிற்கும் வரலாற்றுப் பார்வை - வரலாறு, அதன் இயங்கியல், கட்டுரைப் பொருளுக்குப் பொருத்தமான வரலாற்றுச் சம்பவங்களை கட்டுரைப் பொருளுடன் இணைத்து அதை வாசகர்கள் இலகுவாகப் புரிந்து கொள்வதற்குத் தேவையான பின்னணியைத் தருதல். குறிப்பாக வாசகர்களுக்குப் பரிச்சயமில்லாத காலப்பகுதியில், எடுத்துக்காட்டாக காலனிய காலம் தொட்டு சுதந்திரத்திரத்துக்குப் பின்னான காலம் வரை, நடந்தவற்றைப் பற்றிய ஒரு சிறு அறிமுகம். இந்த அறிமுகம் கட்டுரையை வாசிப்பதற்குத் தேவையான முன் தகவல்களைத் தந்து வாசகர்களைத் தயார்ப்படுத்துகிறது. இந்த 'put into perspective' என்பது கட்டுரையை வாசித்துக் கொண்டு போகும் போது கட்டுரைப் பொருள் பற்றி ஒரு மனப் படத்தை (memory map) வரைய வாசகர்களுக்கு மிகவும் உதவுகிறது.

மேலும் இக்கட்டுரைகளின் அமைப்பில் உள்ள ஒரு பொதுத் தன்மை:

- வரலாற்றுப் பின்னணியைத் தருதல்,
- கட்டுரைப் பொருளை அறிமுகம் செய்தல்,

- அது தொடர்பான கருத்துகள், கேள்விகளை எழுப்புதல். அது உள்ளடக்கி இருந்திருக்கக் கூடிய அல்லது அது செல்ல வேண்டிய பாதை பற்றிய தனது கருத்தைத் தரு தல் என்பனவாகும். இதை ஒரு நூல் விமர்சனத்துக்கான ஒரு template என்று கூடப் பார்க்கலாம்.

ஒரு நூலை விமர்சிக்கும் போது அந்நூலின் பேசுபொரு ளைப் புரிந்து கொள்வதற்கான அரசியல் சமூக பின்புல வர லாற்றைத் தருதல் என்பதற்கு 'மாற்றமும் மரபு பேணுதலும்' நூல் விமர்சனத்தை உதாரணமாகக் கூறலாம். 'இந்து சாத னம்' பத்திரிகையில் 1922-51 காலப்பகுதியில் திரு. ம.வே.




திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் எழுதிய ஆக்கங்க ளைத் தொகுத்து சோமேசசுந்தரி கிருஷ்ணகுமார் இந்நூலை ஆக்கியுள்ளார். இந்நூலின் காலப்பகுதி கருதி அக்காலப் பின்புலத்தைப் புரிந்து கொள்ள சமுத்திரன் தரும் வரலாற் றுப் பின்னணி மிகச் செறிவாகப் பல விடயங்களைத் தொடு கிறது: பிரித்தானிய ஆட்சி, அவர்களின் ஆட்சித் தந்திரம் - சமூகத்தில் உயர் நிலையிலுள்ள உள்ளூர் ஆட்களைக் கொண்டு பெரிய நிலப்பரப்பை நிர்வகித்தல், அதற்குத் தேவையான ஆங்கிலக் கல்வியை வழங்கும் மிஷனறிமார் கள் கூடவே கிறிஸ்தவ மதத்தையும் பரப்புதல், கிறிஸ்தவ ஆதிக்கத்தை குறைப்பதற்கு ஆறுமுக நாவலர் ஆங்கிலம் கற்பிக்கும் சைவப் பாடசாலைகளைத் தோற்றுவித்தல், சைவ பரிபாலன சபை நிறுவப்பட்டமை, சைவத்தை நிலைப்படுத்து வதன் பக்க விளைவாக சனாதன தர்மமும் பெண் அடக்கு முறைக் கருத்துகளும் வலுப்பெறுதல், ஆங்கிலக் கல்வி தந்த அரச உத்தியோகம், அது உருவாக்கிய பணபல முள்ள தமிழ் மத்திய வர்க்கம், இத்தமிழரின் வாழ்வில் பிரித் தானிய கலாசாரத் தாக்கம், அக்காலத்தில் வளரும் தமிழ் அரசியல் அமைப்புகள் - இளைஞர் காங்கிரஸ், யாழ் இளைஞர் காங்கிரஸ், சிங்கள அரசியல் அமைப்புகள் - அநகாரிக தர்மபாலாவின் சிங்கள பௌத்த மறுமலர்ச்சி இயக்கம், சூரியமல் இயக்கம், டொனமூர் சீர்திருத்தமும் சர் வசன வாக்குரிமையும் சமூகத்தில் அது எழுப்பிய விவாதங்க ளும் என இப்படியே அடுக்கிக் கொண்டு போகலாம்.

சரவணனின் 'தலித்தின் குறிப்புகள்', வாமதேவனின் சுயச ரிதை பற்றிய கட்டுரைகளில் அடிமை ஒழிப்பின் பின் கால னித்துவ ஆட்சியாளர் தமது காலனிகளில் இருந்து வேலைக்கு என ஆட்களை வேறு நாடுகளுக்கு நகர்த்துதல், தமிழ் நாட்டிலிருந்து தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்ய ஆட்களைக் கொண்டு வருதல், மலையகத் தமிழரின் வாழ் நிலைமைகள், அங்கு காணப்படும் சாதீயம், அரசியல் என்பன விபரணப்படுத்தப்பட்டுள்ளன.

கலை, இலக்கியம் தொடர்பான வரலாற்றுப் பின்னணியைப் பற்றிக் கூறும் கட்டுரைகளில் ஒன்று - மௌனகுருவின் கூத்த யாத்திரை - கூத்து பற்றி மௌனகுரு இளைஞனாக இருந்த போது காணப்பட்ட சமூகப் பார்வை, அது எவ்வாறு சமூகச் சுரண்டலை, இருக்கும் சமூக அமைப்பை ஏற்க வைக்கும் போதைப் பொருளாக அமைந்தது. இன்னொன்று, பாலேந்தி ராவின் 'மழை' நாடகத்தைப் பற்றிக் கூறும்போது சமகாலத் தில் காணப்பட்ட ஏனைய நாடகக் கலைஞர்கள், அவர்களின் படைப்புகள் மௌனகுருவின் கூத்து பற்றியோ கவிதாவின் அசையும் கவிதைகளும் ஞானரதமும் பற்றியோ கூறும் போது எவ்வாறு பாரம்பரியக் கலைகளுள் நவீன கருத்தா டலை உள்வாங்கி அவற்றை மேலும் வாழும் கால சமூகத் துக்குப் பொருத்தமானதாகப் பரிணமித்து இருக்கிறார்கள் மற்றைய மொழிகளில் காணப்படும் இப்போக்குப் பற்றிய குறிப்புகள் என வரலாறு விரியும்.

மொத்தத்தில் தமிழர் அரசியல் சமூக வரலாறு தொடர்பான குறிப்புகள் காலனிய காலத்திலிருந்து சுதந்திர இலங்கையி னூடாக இன்று வரை என அவரது கட்டுரைகளில் காணக் கிடைக்கிறது.

இக்கட்டுரைகளில் நான் காணுகிற அடுத்த முக்கிய அம்சம் ஆவணப்படுத்தல். 80-களில் குறிப்பாக மேற்கு நாடுகளுக் குப் பெருமளவில் புலம்பெயர் முதலாம் சந்ததி என்று சொல் லக்கூடிய நாம் இப்போது எமது மாலைப் பொழுது அல்லது அந்திம காலத்தை நெருங்கிக் கொண்டு இருக்கிறோம். எமது வருங்கால சந்ததியினர் தமது வேரைத் தேடும் போதோ அல்லது ஒரு சமூக ஆய்வு மாணவர் புலம் பெயர் தமிழ் வாழ்வைப் பற்றி ஆய்வு செய்யும் போதோ அவர்க ளுக்கு நாம் எதை விட்டுச் செல்கிறோம் என்று எண்ணிப் பார்க்கும் போது சமுத்திரனின் கட்டுரைகள் நிச்சயமாக ஒரு சிறு பங்களிப்பை, குறிப்பாக நோர்வேயைப் பொறுத்தவரை, செய்துள்ளன என்று கூறலாம்.

நோர்வே வாழ் தமிழ்க் கவிஞர்களின் கவிதைத் தொகுப்பான ‘துருவச் சுவடுகள்’, கனடிய எழுத்தாளர் கௌரியின் ‘அகதி’, கவிதாவின் ‘அசையும் கவிதைகளும் ஞானரதம் நடன நாடகமும்’, ‘ஈழத் தமிழர் போராட்டத்தில் புலம் பெயர் எழுத்தாளரின் பங்கு’, ‘புலம்பெயர் தமிழ் இலக்கியத்தின் எதிர்காலம் பற்றிச் சில கேள்விகள்’ என்பன பற்றிய கட்டுரைகள் இந்த வகைக்குள் அடங்கும்.

‘ஈழத் தமிழர் போராட்டத்தில் புலம்பெயர் எழுத்தாளரின் பங்கு’ என்ற கட்டுரையில் ‘சுவடுகள்’ (நோர்வே), ‘தூண்டில்’ (ஜேர்மனி) மற்றும் ஐரோப்பாவில் வெளிவந்த சஞ்சிகைகளில் இனம் காணக்கூடிய பொது அம்சங்கள், அவற்றில் தோன்றும் புதிய போக்குகள், தமிழ் இலக்கியத்தை இன்னொரு பரிமாணத்துக்கு எடுத்துச் செல்லும் என்ற எதிர்பார்ப்பு / நம்பிக்கையைத் தருதல், புலம்பெயர் இலக்கியத் தன்மையை போக்கை நிர்ணயிக்கும் காரணிகள், புலம்பெயர் சமூகத்தின் /எழுத்தாளர்களின் அரசியல், சமூகவியல் நிலைமைகள் - ஈழத்திலும் புகலிடத்திலும் எமது தனிப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்ய நாம் தேடும் வழிவகைகள், புலம்பெயர்ந்தோரின் வகைகள், அவர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், பிரச்சார இலக்கியங்களின் தோற்றம், எழுத்துச் சுதந்திரம். இறுதியில் புலம்பெயர் இலக்கியம் எவ்விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும், இங்கு நாம் உள்வாங்கிய புதிய கலாச்சாரத்தினூடாக தாய் நாட்டின் கலாசார மாற்றத்துக்கு உதவ முடியுமா என்பன போன்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

நீண்ட காலப் பகுதியில் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுக்கும் போது அன்று எழுதிய போக்குகள், எதிர்வு கூறல்கள் காலப்போக்கில் எவ்வாறு அமைந்தன என மதிப்பிடும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக இரண்டைக் கூறலாம்:

- 1989 பேர்ளினில் நடந்த இலக்கியச் சந்திப்பில் ‘தமிழ் இலக்கியம் இதுவரை கண்டிராத புதிய பரிமாண முகிழ்ப்பு’ என்று தோன்றிய புலம்பெயர் இலக்கியம் எவ்வாறு 2001-ல் பாரீசில் நடந்த இலக்கியச் சந்திப்பின்போது ‘இறந்து போய்க்கொண்டு இருக்கிறது’ என அவர் மீள் மதிப்பீடு செய்கிறார்.
- சில இயக்கங்களின் இடதுசாரிப் போக்குகள் பற்றி 1985-இல் செய்த தனது கணிப்பீடுகள் அதீதமானவை என 2017-ல் எழுதிய பிற்குறிப்பில் குறிப்பிடுகிறார்.

சுருக்கமாகக் கூறின், இக்கட்டுரைகளில் அவதானிக்கக் கூடியதாக இருப்பது சமுத்திரனின் சமூகம் பற்றிய கூரிய அவதானிப்புகளும், சமூகத்தின் இயங்கியலை வரலாற்றின் பின்னணியில் விளக்க உதவும் பரந்த அறிவும், அவற்றைத் தனது கண்ணோட்டத்தில் தொகுத்து வழங்கும் திறனும், பொருத்தமான இடத்தில் தனது விமர்சனம், கருத்து, கேள்விகளை எழுப்புதலும் ஆகும்.

எனது இந்நூல் பற்றிய இந்த அறிமுகம் ஒரு நுண் அறிமுகம் தான். ஆனால் முழுவதையும் வாசிக்கும் போது தான் அதுவரையும் பரந்த காட்சி எமக்குள்ளே விரிவதை ரசிக்கலாம்.



maitreyi@thaiveedu.com




# சொல்லப்படாத கதைகள்

- பொ. கருணாகரமூர்த்தி

சமீபத்தில் தமிழில் வெளிவந்த நூல்களிலே 'சொல்லப்படாத கதைகள்' பிரத்தியேக கவனம் பெறுகிறது. அது ஆனந்த் பிரசாத்தின் பகுதியான சுயவரலாறாகவும் அவர் மாலுமியா கப் பரதேசங்கள் உழன்ற கடல் வாழ்வின் வரலாறாகவும், இளைஞனாக ஈழத்தில் வாழ்ந்த காலத்தின் ஈழ அரசியலா கவும் இருப்பதால் முக்கிய கவனம் பெறுகிறது.

நானும் ஆனந்த் பிரசாத்தும் சமகாலத்தைய மாணவர்களாக இருந்ததோடு சொற்ப புள்ளிகளால் பல்கலைக்கழகத்துள் நுழையும் வாய்ப்பை இழந்தவர்களாதலால் எமது கல்விமு றையில் உயர்தர வகுப்பை படித்து முடித்த மாணவர்கள் கல்வியைத் தொடர முடியாத இக்கட்டை, அவத்தையை எய் தியதும், அடுத்து என்ன செய்வதென்று அலமலங்கும் பொது நியதியோடு திணறிக்கொண்டு வாழ்வு தரும் பொருண்மிய அழுத்தத்தால் பொறுப்புக்களால் அடுத்து எதையாவது செய் யவேண்டி நாட்டைவிட்டு வெளியேறியவர்கள் ஆதலாலும் அவரது இந்தச் 'சொல்லப்படாத கதைகள்' என்னை மேலும் ஆகர்ஷிக்கின்றது.

நாட்டை விட்டு வெளியேற முயன்றவர்கள் முன்னேயும் மூன்று தேர்வுகளே இருந்தன. முதலாவது ஐரோப்பிய நாடொன்றிலோ கனடாவிலோ அகதியாக குடியேறுவது, இரண்டாவது மத்திய கிழக்கு நாடுகள் எதிலாவது (unskilled) நிபுணத்துவமற்ற தொழிலாளர்களாகப் போய்விடு வது, அடுத்தது கிரேக்க, ஸ்பானியக் கப்பல்கள் எதிலாவது வைப்பர் / ஒயிலர் போன்ற சிற்றூழியர்களாகச் சேர்ந்துவிடு வது, இவைதாம். 80-களின் ஆரம்பத்தில் கீழ் மத்தியதரக் குடும்பத்து இளைஞர்கள் குடும்பத்துக்குச் சொந்தமான நிலத்தை / மனையை விற்றோ, அம்மா அக்காவின் மீதமி ருக்கும் சீதன நகைகளை அடகுவைத்தோ / விற்றோ வெறும் 500$ வரையில் புரட்ட முடிந்தவர்களில் நூற்றுக் கணக்கான வர்கள் தரை மார்க்கமாகவே இந்தியா - பாகிஸ்தான் - ஆப் கனிஸ்தான் - ஈரான் - ஈராக் - துருக்மினிஸ்த்தான் - செகோஸ்லேவாக்கியா - கிரேக்கம் என்று வேலை தேடிப் புறப்பட்டார்கள். இவர்களில் சிறு வீதமானவர்கள் நாடுக ளைக் கடக்கும்போது பாலை வெளிகளிலும், ஆறுகளில் அடிபட்டும், பனிச் சேறுகளில் அகப்பட்டும் திரும்பியே வரா மல் போனவர்களுமுண்டு. திருமலையைச் சேர்ந்த ஆனந்த் பிரசாத்தும் அவரின் தோழர் அருள்ஜோதியும் ஏதாவதொரு கப்பலில் தொற்றிக்கொண்டு விடுவது என்ற முடிவுடன் திரும லையில் ஜெகநாதன், பாலசிங்கம் என்று பிரபல கப்பல் ஏஜெண்டுகள் பலர் இயங்கிக் கொண்டிருக்க யாழ்ப்பாணத் துக்கு வந்து ரொஹான் கந்தப்பாவிடமும் அந்த 'டைட்ஸ் கேர்ட்' அக்காவிடமும் மாட்ட நேர்ந்ததை வாழ்க்கை கற்பித்த பாடமென்கிறார் ஆனந்த் பிரசாத்.

அக்காவோ இவர்களிடம் பணத்தைப் (30,000) பக்குவமாக வாங்கிக் கொண்டு விமானச் சீட்டை வாங்கிச் சென்னை வரை கூட்டி வந்தும் விடுகிறார். நீங்கள் மும்பாய் போனதும் அங்கே உங்களுக்காகக் காத்திருக்கும் ரொஹான் உட னேயே கப்பலில் ஏற்றி விடுவார் என்பதுபோல் சொல்லிவிட் டுச் சென்னையில் மாறிவிடுகிறார் அக்கா. இவர்கள் சென் னையில் ரொஹான் கந்தப்பா குழுமத்தால் கப்பல் ஆசை காட்டி மூன்று மாதங்களின் முன்னதாகக் கூட்டி வரப்பட்ட விஜயனைச் சந்திக்கிறார்கள். இரண்டு நாட்கள் சென்னை யில் ஒரு லொட்ஜில் தங்கிவிட்டு அங்கிருந்து தொடரியைப் பிடித்து விஜயனுடன் மும்பாய் வந்திறங்கினால் அங்கேயும் விஜயனைப் போல் ஜெயக்குமார் என்றொரு அப்பாவிப் பையனையும் சந்திக்கிறார்கள். பிறநாட்டு வாழ்வின் 'அந்த ரிப்பும் அலைக்கழிப்பும்' அங்கேயே தொடங்கி விடுகிறது.

கட்டைக் கவுண் அக்காவின் மூலம் பம்பாயில் ரொஹான் உங்களை $1000, $1500 சம்பளத்தில் ஏற்றி விடுறதுக்கு கிரேக்கக் கப்பலை இழுத்துப் பிடித்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறாரென்று சொல்லவைத்து, காசைச் சுருட்டிக் கொண்டு ரொஹான் கந்தப்பா இவர்களுக்கு இடைசுகம் கப் பல் ஏஜெண்டுகளுக்கும் அழைத்துப்போய் வேலை ஏதாவது இருக்காவென்று விசாரித்தும் தண்ணிகாட்டிக் கொண்டிருந் தான்.

கையிலும் செலவுக்குப் போதிய பணமில்லாது இவர்கள்

நால்வரினதும் நாட்கள் மும்பாயின் லொட்ஜ்களிலும், வீதிகளிலும், ப்ரின்ஸ் ஒஃப் வேல்ஸ் சீமென்ஸ் கிளப்பிலும், புனித ஃப்ரான்சிஸ் தேவாலயத்திலும், கேட் ஒஃப் இன்டியாவிலும் விக்டோரியா டேர்மினலுக்கு எதிராக இருந்த ஹொட்டலிலும் இரண்டு மாதங்களைக் கழிப்பதே பிரசாத்தின் கஷ்ட ஜீவிதத்தின் முதல் அவத்தை.

பின்னர் விஜயனும் இவரும் சீமென்ஸ் கிளப்பில் கரம் போர்ட் விளையாடிக்கொண்டிருந்த சிங்கள நபரொருவரின் உதவியுடன் இணக்கிக் கொடுத்த - இவர்கள் முன்னரும் பல




கப்பல்களில் (இல்லாத பெயர்களில்) வேலைசெய்த அனுபவஸ்தர்கள் என்பது போன்ற - போலியான சிடிஎஸ் (Certificate of discharge Seaman) சேர்டிபிகேட் ஒன்றைத் தயாரித்துக் கொண்டு ஏதென்ஸுக்கு வந்து ஒருவாறு எம்.வி. ஔரோரா எனும் கிழட்டுக் கப்பலில் Able Seaman ஆகச் சேர்ந்துவிடுகிறார்கள்.

ஆங்கில பாடத்தில் டியூட்டரி நடத்திக் கொண்டிருந்த அருள் ஜோதிக்கு இவரளவுக்குக்கூட நல்லூழ் வேலை செய்யவில்லை, அவர் இலங்கைக்கே திரும்பிப்போய் புளொட் இயக்கத்தில் சேர்ந்துவிடுகிறார். மும்பாயில் பிரியாவிடை கொடுத்தபிறகு அவரைப் பிரசாத் காணவே இல்லையாம்.

முன்னர் எப்போதும் கப்பலுக்குள் காலே பதித்திராத பிரசாத்துக்கும் விஜேயுக்கும் அக் கப்பலில் ஏலவே பணிபுரிந்து கொண்டிருந்த சிங்களத் தோழர்கள் கீர்த்தியும் ரஞ்ஜித்தும், தளத்தில் அவர்கள் பார்க்க வேண்டிய வேலைகள், கயிறுகளில் முடிச்சுக்கள் போடுவதிலிருந்து, அவதானிப்பு அறையிலிருந்து வரும் ஆணைகளுக்கிணங்கச் சுக்கான் பிடித்துக் கப்பலைச் செலுத்துவது, நங்கூரமிறக்கி நிலைகொள்வது, துறையை அடைந்ததும் கப்பல் பக்கவாட்டில் இறங்குதுறையோடு உராயாமல் பக்குவமாகக்கட்டுவது வரையிலுமான அனைத்து வேலைகளையும் துவேஷங்கள் எதுவுமின்றிக் கற்றுக் கொடுக்கிறார்கள். இவர்கள் மெல்ல மெல்லக் கிரேக்க மொழியில் தேறுவதும் கப்பலின் பணிகளை இலகுவாக்குகின்றது.

கிரேக்கத்தின் துறைமுகமொன்றிலிருந்து வியட்நாமின்க்கு கோதுமை மா மூடைகளை அவர்களுக்கு நிவாரணமாக - அன்பளிப்பாக எடுத்துச் சென்ற முதற் பயணத்திலேயே வங்காள விரிகுடாவில எம்.வி. ஔரோறா புயலில் அகப்பட்டுவிடுகிறது. கடல் நீர்ப்பரப்பில் கப்பல் காணாமற் போவதும் பின் மீண்டெழுவதுமாக இருந்ததாம். புயலில் எழுந்த பேரலைகள் கப்பலின் பாக்கவாட்டில் மோதிச் சிதறி ‘ஹஹாட்ஸஸ்’ எனப்படும் சரக்குச் சேமிப்புக் கிடங்குக்குள் வழிந்ததால் மாவின் ஒரு பகுதி நனைந்து கெட்டுப்போய்விட நிவாரண அன்பளிப்பாக அதைக் கொடுக்க முடியாதாகையால் அவற்றைக் கடலிலேயே கொட்டிவிடும்படி சரக்கை அனுப்பிய கொம்பனி ‘ஆக்ஞை’ அனுப்புகிறதாம். கப்பல் ஓடிக் கொண்டிருக்கையிலேயே கப்பலின் சிப்பந்திகள் அனைவருமாகச் சேர்ந்து மா மூடைகளைக் கடலில் தூக்கி வீசவும் கடலில் கரைந்த மாவு நீண்ட மைல் கணக்கான தூரத்துக்குக் கப்பல் நகர்ந்த வழியெங்கும் வெள்ளை நிறப் பட்டிபோல தொடர்ந்து கொண்டிருந்ததாம். இதைப் பிறகப்பல்கள் எதுவாவது கண்டு கப்பல்களால் சர்வதேச கடல் மாசுபடுத்துவதைக் கண்காணிக்கும் அதிகார நிர்வகத்துக்கு அறிவித்தாராயின் இக்கப்பலின் சேவை உரிமரத்தையே மீளெடுத்து விடுவார்கள்.

பிரசாத், எம்.வி. ஔரோறாவில் பணியாரம்பித்து ஒரு வருடங்கூடப் பூரணமாகுமுன்பு அக்கிழவியை ‘ஹஸ்கிறாப்’ பண்ணிவிடுவார்கள் என்றொரு வதந்தி கப்பலில் கிளம்பவும் பயந்து போய்விடுகிறார் அவர். அதுவரை உழைத்ததும் சம்பாதித்ததும் அக்காவின் நகைகளை மீட்கவே போதாது. மீண்டும் மும்பாயைச் சென்றடைந்து காத்திருந்து இன்னொரு கப்பலில் ஏறுவதென்பது அவருக்கொரு கொடுங்கனவு.

ரஞ்ஜித்தோ அப்படி ஒன்றும் நடவாது மச்சான் பயப்படாத... புதிய பிஸ்டன்கள் மாற்றிய பிறவு கிழவி மணிக்கு 26 கடல் மைல்கள் ஓடுறாள் எப்படியும் இன்னும் கொஞ்சக் காலத்

துக்கு வைத்து ஓட்டவே பார்ப்பார்கள் என்று தென்பூட்டுகின் றான். அவனது வாய் மூகூர்த்தம் அப்படியே கிழவி மீண்டும் ஓட ஆரம்பிக்க அவர்களுக்குத் தொடர்ந்தும் அதில் வேலை செய்யமுடிகிறது.

இது போன்று பல சுவாரஸியமான சம்பவங்களாலும், கப்ப லில் பணிசெய்ய நேர்ந்த பிறகு உடன் பணிபுரிய நேர்ந்த பன்னாட்டு மாலுமிகளின் நடத்தைகள் அவரவரது தனிக் கதைகளாலும், நனவிடை தோய்தல் பின் நிகழ்வு உத்தியில் பழைய நண்பர்கள் 70/80களின் அரசியல் நிகழ்வுகள் என பல் தளங்களில் விரிவு கொள்ளும் அத்தியாயங்கள் மாறி மாறி அடுக்கப்பட்டுள்ளமையால் வாசிப்பில் சோர்வைத்த ராது நகர்கிறது புதினம்.

கப்பல் மத்தியதரைக் கடலூடாக நகர்ந்து சூயெஸ்கண வாயை நோக்கி போகையில் கடலின் இருமருங்கிலும் உள்ள நகரங்களிலிருந்து வரும் வெளிச்சங்களையும், தெறிக்கும் அலெக்ஷான்டிரியா போன்ற துறைமுகங்களின் வெளிச்ச வீடுகளிலிருந்து தெறிக்கும் வெளிச்சக் கதிர்கள் கடலின் மேற்பரப்பிலும், அதிலுள்ள கப்பல்களில் பட்டுத் தெறிப்பதையும், மேலும் செல்ல ஐக்கிய அமீரகத்தின் மீன்பி டிக் கப்பல்கள் செறிவாக மின்மினிகளைப்போல கடலில் மிதந்து கொண்டிருக்கும் அழகும் வார்த்தை வயப்படுகின் றன, அபூர்வமான கடற் பறவைகள் தலைகீழாகப் பறந்து வந்து கடலில் குத்தி மீன்களைப் பிடித்துக் கொண்டு பறப்ப தையும் அங்கு வீசும் சீதளம் நிறைந்த காற்றுத் தடவித் தரும் சுகத்தையும் தன் கவித்துவ மொழியில் எழுதுகின்றார்.

சோதியென்று இவரது நல்ல நண்பரொருவர் திருமலை நக ரில் மிதியுந்துத் திருத்தகமொன்றை வைத்து நடத்தித் தன் ஜீவனத்தை நகர்த்திக்கொண்டிருந்தார், பிரசாத்தின் மிதியுந் துக்கு ஏதாவது திருத்தம் செய்வித்தால் அதற்குரிய கிரய மாக இசைக் கலைஞராகிய பிரசாத் ஒரு பாட்டுப் பாடினால் போதும், சற்றே பெரிய திருத்தமென்றால் ‘இன்றொருநாள் போதுமா’ போன்றதொரு கர்நாடக இசையுடனான உருப்படி யைப் பாட வேண்டும். அவரது திருத்தகம் இருந்த நிலம் நகரசபைக்குச் சொந்தமானதென்று அடிக்கடி நகர சபை யால் பிடுங்கியெறியப்படுகிறது. சோதியும் தளர்விலாது தன் திருத்தகத்தைப் புதுப்பித்துக்கொண்டேயிருக்கிறார். விளை வாக அவர் கைது செய்யப்பட்டு மிலேச்சத்தனமாக ஆண்கு றியில் மிதியுந்தின் கம்பியைச் செலுத்தித் துன்புறுத்தப்படு கின்றார். சில ஆண்டுகளின் பின்பு எம்.வி. ஔரோறா மத்தி யதரைக் கடலினைக் கடந்து போய் ஐக்கிய அரபின் அமீர கத்தின் ஜெட்டா துறைமுகத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக கட்டப்பட்டிருக்கையில் அதற்கு எரிபொருள் நிரப்புவதற்காக மாலுமிச் சீருடையில் வந்த சோதிக்கு துணை செய்ய கொஞ் சம் நிறையும் போட்டுத் தாடியும் வைத்துக் கொண்டு வந்த பிரசாத்தை யாரென்றே கண்டுபிடிக்க முடியவில்லையாம்.

எம்.வி. ஔரோறாவில் நீண்ட காலமாக Able Seaman ஆகப் பணிபுரியும் செல்வராஜா எனப்படும் கொழும்புத் தமிழ் பேசும் தமிழரொருவர் கொழும்பில் மோட்டார் வாகன உதி ரிப்பாகங்கள் விற்பனை நிலையம் வைத்திருந்த ஒரு பணக் கார அப்பாவின் மகன், அப்பா தியாகராஜன் நம்பிக்கையின் நிமிர்த்தம் அளவுக்கு விஞ்சிய உதிரிப் பாகங்களைக் கட னாக ராகமவில் பல்வகை வாகனங்களையும் திருத்தும் திருத்தகம் வைத்திருந்த சவரிமுத்து எனும் ஒரு வாடிக்கை யாளருக்குக் கொடுத்து அவர் அவற்றுக்கான கிரயம் எதை யும் திருப்பாமல் ஒரு மழை இரவில் காணாமல் போய்விட வும், அப்பாவின் வியாபாரம் முறிவடைந்து போகிறது. சவரி முத்துவின் வீட்டையும் HNB வங்கி கையகப்படுத்தி விடுகி றது. தனித்துப்போய்விட்ட சவரிமுத்துவின் அழகிய மனைவி வாஸந்தியையும் அப்பா அழைத்துக் கொண்டு மருதானை யில் ஒரு சிறிய வீட்டில் குடியேறிவிடுகிறார். எதிர்பாரத வாழ் வியல்த் திருப்பங்களால் குடும்பமே நடுத் தெருவுக்கு வந்து விட்ட நிலமையில் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக செல் வராஜா இக் கப்பலில் வந்து மாய்ந்து கொண்டிருக்கிறார்.

அதேபோல் விஷ்ணுபட்டேல் என்றொருவர் ஏறத்தாழப் பணி ஒய்வுபெறும் வயதையும் (65) கடந்து அக் கப்பலில் தேர்ட் ஒஃபிஸராகக் பணிசெய்துகொண்டிருந்தார். நல்ல மனிதரான அம் மனிதருடனான ஒரு சம்பாஷணையின் போது பிரசாத் இந்த வயதில் அவர் இன்னும் கப்பலிலோடி உழைக்க வேண்டிய அவசியமென்னவெனக் கேட்ட போது, அவர் தன் வாழ்க்கையிலுள்ள சோகத்தை விபரிக்கின்றார். ‘என் மகன் விஜய் ஒரு கெமிக்கல் இஞ்ஜினியர், மகள் லக்ஷ்மி ஒரு பட் டயக் கணக்காளர். இருவரும் நல்ல சம்பளத்தில் போபால் இரசாயனக்கொம்பனியில் பணி புரிந்தார்கள், மகனுக்கு இரண்டு குழந்தைகள், மகளுக்கும் இரண்டு குழந்தைகள். என் பிள்ளைகளுக்கு உத்தரவாதமான வருமானம். எனக்கு 4 பேரக்குழந்தைகளென மகிழ்ச்சியாக வாழ்ந்த வேளையில், 1984-ம் ஆண்டு டிசம்பர் 2-ம் தேதி, இரசாயன நச்சுவாயுக் கசிவு விபத்து ஏற்பட்டு உடல் வெந்து இறந்துபோன இரண் டாயிரம் பேரில் என் பிள்ளைகளும் அடக்கமானார்கள். பிள் ளைகளின் இழப்பை எண்ணியெண்ணி என் மனைவியும் சித் தப் பிரமைக்காளாகி விட்டாள். ஊருக்குத் திரும்பி எனக்கு யாரையும் எதிர்கொள்ளும் திராணியில்லை, கால்களை இழந்து விட்ட பறவையொன்று பிரபஞ்ச வெளியில் காற் றில்த்தான் தூங்க முடியும் என்றொரு கவிதை படித்திருக்கி றேன், அதைப் போல் நானும் தொடர்ந்து கடலோடிக் கொண்டிருக்கிறேன்’ என்றாராம்.

மருதானை ரவியென்றொருவர், எம்.வி. ஔரோறா உட்பட வேறும் சில கப்பல்களுக்குச் சொந்தமான குழுமத்தின் பங்கு தார ரான கப்டன் நிகோஸ் அர்க்கைஸ் என்றொருவர், இன் னொரு பங்குதாரரும் கண்டபடி மாலுமிகளை வாயில் வந்த படி வைது கொண்டிருப்பவருமான இஞ்ஜினியர் கொறிந்தஸ் பனயோதிஸ் என்றொருவர் இப்படி அக்கப்பலில் பணிபுரியும் ஒவ்வொருவரிடமும், நிவர்த்திக்க முடியாத கோபம், துரோ கம், துன்பியல் நிறைந்த கதைகள் உள்ளன. இப்புதினம் என்கிற மரத்திலுள்ள கிளைகளில் அக்கதைகளையும் முடிந்த அளவில் சேர்த்துக் கொண்டு முன்நகர்கின்றார் பிரசாத். இந்திய வரலாற்றில் 16/17-ம் நூற்றாண்டுகளில் இந் தியாவிலிருந்து உலகத்தின் கிழக்கு ஆபிரிக்கா, ஸ்வாஹில், சிஷேல்ஸ், மொறீஷியஸ், கினித் தீவுகள், மலேஷியா, ஃபுஜி, கயானாத்தீவு, ஜமேக்காவெனப் பல பாகங்களுக்கும் கூலிக

ளாகவும் அடிமைகளாகவும் அவர்கள் நாட்டின் பண்ணை களை வளப்படுத்தவும், வீதிகளை நிர்மாணிக்கவும் தென்னிந் திய மக்கள் கப்பல்களில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறார் கள். அடிமை வர்த்தகம் ஸ்வாஹில் வியாபாரிகளால் பெரும ளவில் மேற்கொள்ளப்பட்டது என்கின்றன சரித்திரக் குறிப்பு கள். அடிமைகளாக ஏற்றிச் செல்லப்பட்ட பெண்களை இவ் வியாபாரிகளும், கப்பலின் சிப்பந்திகளும் தம்மிஷ்டத்துக்குப் பெண்டாண்டார்களாம். அவ்வாறு பெண்களைப் ‘பெண்டாண் டவர்கள்’ அவ்வடிமைகளின் ‘கப்பல்க் கணவர்கள்’ என அழைக்கப்பட்டார்கள். அதற்கொப்பான சம்பவமொன்று எம்.வி. ஔரோறாவின் பணிக்காலத்தில் பிரசாத்துக்கும் ஏற்ப டுகின்றது. 1969 - 1973-களில் வியட்நாம் போர் முடிவுக்கு வந்ததும் நாட்டில் ஏற்பட்ட தாங்க முடியாத வறுமை பஞ்சம் காரணமாக வியட்நாமிய மக்கள் ஆண் பெண்ணென்ற பேத மின்றிப் பல நாடுகளுக்கும் வள்ளங்கள் மூலம் அபாயகர மான பயணங்களை மேற்கொண்டு நம்மவர்கள் ஆஸ்திரேலி யாவில் தஞ்சமடைந்ததைப் போல சிங்கப்பூர், மலேஷியா, தாய்லாந்து, யாவா, சுமாத்திரா, போர்ணியோ, அவுஸ்திரேலி யாவென்று தஞ்சமடைந்ததை நாம் அறிவோம். பிரசாத் வியட்நாம் போர் அந்நாட்டில் உண்டு பண்ணிவைத்த சீரழி வுகளையும் சற்றே நூலில் விபரணஞ்செய்துள்ளார்.

வியட்நாமுக்குச் செல்லும் கப்பல்கள் அங்கிருந்து புறப்படு முன் யாராவது அதன் ஹட்ஸ்ஃகளுக்குள்ளோ, இதர பதுங் கக்கூடிய இடங்களிலோ திருட்டுத் தனமாக ஏறி ஒளிந்திருக் கிறார்களாவென நுணுகிப் பார்ப்பார்கள். அவ்வாறே எம்.வி. ஔரோறாவும் வியட்நாமை விட்டுப் புறப்படுகையில் (துறை முகத்தின் பெயர் சொல்லப்படவில்லை) இரண்டு விடலைப் பெண்கள் செல்வராஜா, ரவி, பிரசாத் ஆகியோரின் தயவால் கப்பலின் அடியில் வந்து நின்ற வள்ளத்திலிருந்து கயிற் றேணி மூலம் ஓசைப்படாது மேலேறி டெறிக்கோடு (கிறேன்) சேர்ந்தாற்போலிணைந்துள்ள பெட்டி போன்றவொரு கட்ட மைப்புக்குள் ஒளிந்துகொண்டுவிடுவார்கள். கப்பல் துறையை விட்டுப் புறப்பட்டுக் கணிசமான தூரம் சென்ற பின் பசிமயக்கத்துடன் இருந்த அவ் யுவதிகளை செல்வரா-ஜிண் கபினில் ஒருவரும், பிரசாத்தின் கபினில் ஒருவருமாக ஒளித்து வைத்திருக்கிறார்கள். இப்படி அகதிகளைத் தெரிந்தே ஒளித்து வைத்திருக்கிறார்கள் என்பது கப்பலின் நிர்வாகத்துக்குத் தெரிய வந்தால் இவர்கள் வேலையிலிருந்து தூக்கப்படுவதுடன் கப்பல் அடுத்து அடையும் நாட்டின் அர சினால் தண்டனைக்குமாளாகலாம்.

இவ்வேளை கப்பல் மலாக்கா கணவாயினூடு கடந்து செல் கின்றது, தொலைவில் இரு மருங்கிலுமுள்ள நகரங்களிலி ருந்து வரும் வெளிச்சம் ரம்மியமாக இருக்கின்றன. அமைதி யான கடலின் அழகும் அருகில் மிதந்து கொண்டிருக்கும் இதர கப்பல்கள்களிலிருந்து வரும் வெளிச்சங்களின் அழகை-கயும் கடலில் பறந்து செல்லும் கடற் பறவைகளின் அழ கையும் வர்ணிப்பதில் பிரசாத் தானொரு கவிஞனென்பதை இரண்டாவது முறையும் நிரூபித்து விடுகின்றார்.

கப்பல் மலாக்கா கணவாயைக் கடந்து அடுத்த தரிப்பான பாங்கொக் நகரின் ‘பாக்னம்’ அடைய 2 வாரங்களாகின்றன, அது வரையில் அவர்கள் இருவரையும் தமது ஒருவருக்கான ஒடுங்கலான கட்டிலில் ஏனைய மாலுமிகள் கண்ணிற் படாது மறைத்துப் படுக்கவைத்து / சாப்பாடு வழங்கி / குளிக்க வைத்து அழைத்து வருகிறார்கள். தன் கட்டிலைப் பகிர்ந்து இரண்டு வாரங்கள் வந்தவளால் செல்வராஜாவின் கற்புக் கென்னாயிற்றோ தெரியாது, அது முற்றிலும் சஸ்பென்ஸ். ஆனால் பிரசாத்தின் கபினுக்குள் வந்தவளது கூந்தலில் தென்சீனத்துக் கடலின் வாசனை வருகிறதாம், ‘பாக்னம்’ துறையிலிருந்து எம்.வி. ஔரோறா சிங்கப்பூரையடைய மேலும் ஒருவாரமாகியிருக்கலாம். பிரசாத்தின் கடுமையாக வேலை செய்து செய்து இறுகிப் போயிருந்த முதுகையும் தோட்பட்டைகளையும் அம்மங்கை இதமாக வருடிவருடிச் சுகம் கொடுக்கிறாள், பின் சுகங்களின் எல்லை விரிகிறது. அவளின் உளதோ இலதோவெனத் துணிய முடியாத மார்பு களை ஸ்பரிசித்தபடி இடைவெளியிலாது நெருக்கியபடி எம்.வி. ஔரோறாக் கிழவி வெகுமதியாகக் கொடுத்த தேன் நிலவைக் கழித்ததையும் அவளது கப்பல்க் கணவனாக வாழ்ந்ததையும் நேர்மையுடன் பதிவு செய்கின்றார்.

நாவலின் இறுதி அத்தியாயத்தில் தனது முதல் நாலு வருட கடல் வாழ்வை முடித்துக் கொண்டு மீண்டும் மும்பாய்க்கு வந்து சேரும் பிரசாத், ஃப்றின்ஸ் ஒஃப் வேல்ஸ் சீமன்ஸ் கிளப்புக்கு அண்மையாக இவரிடம் 30,000 ரூபாய்கள் பணத்தை வாங்கிக் கொண்டு தண்ணி காட்டிய ரொஹான் கந்தப்பாவைத் தற்செயலாகக் காண நேரவும், ‘ஒரு கட லோடி தன்னுடன் எப்போதும் ஒரு கத்தியை வைத்துக் கொள்வது அவனது தற்பாதுகாப்புக்கு நல்லது’ என்ற அறிவு ரையுடன் கிரேக்கத்தின் ‘திஸ்ஸலோனிக்கில் களுரஞ்ஜித் வாங்கிக் கொடுத்த கத்தியை எடுத்துக்கொண்டு ரொஹான் கந்தப்பாவைச் சொருகப் போகவும் களுரஞ்ஜித்தே வந்து அவரைத் தடுத்தாட்கொண்டுவிடுகிறார். சங்கீதத்தில் ஆற்ற லும், லயவாத்தியங்கள் வாசிப்பதில் தேர்ச்சியுமுடைய ஒரு கலைஞனால் ஒரு கொலையைப் பண்ணவே முடியாது. இறு தியான இக்கதை மட்டும் எனக்குக் கொஞ்சம் நாடகீயமாகப் படுகிறது. அச் சம்பவம் அன்றைக்கு அரங்கேறியிருந்தால் ஆனந்த் பிரசாத்தையும் கூடவே அவரது சொல்லப்படாத கதைகளையும் நாமும் இழந்து விட்டிருப்போம்!

எம்.வி. ஔரோறாவை விடவும் பின் நாட்களில் பல கப்பல்க ளில் பணி செய்த அனுபவங்களையும் சொல்லப்படாத கதைகளின் தொடர்ச்சியாக எழுத ஆரம்பித்துள்ளார் ஆனந்த் பிரசாத். இன்னும் பல சுவாரஸியமான சம்பவங் களை அவரது கவித்துவ மொழியில் அதில் எதிர்பார்ப்ப தோடு இரண்டாவது சுவைத்தலுக்கும் வாசிப்பு அனுபவத்துக் கும் இப்போதே என்னைத் தயார்ப்படுத்திக் கொண்டுள்ளேன். ஆனந்த் பிரசாத்துக்கு என் பாராட்டுக்களும் அமோக வாழ்த் துகளும்!



karunaharamoorthy.p@thaiveedu.com

# நூலகர்களின் பணிகளைப் பதிவுசெய்யும் 'நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்'

- எஸ். சத்தியதேவன் -

நூலகம் என்றாலே அதனுடன் அமைதி என்பதும் சேர்ந்தே இருக்கும். நூலகத்திற்கான அமைவிடத்தின் தேர்விலும் அதன் வடிவமைப்பிலும் இந்த அமைதி என்பது முக்கிய இடம் வகிக்கும். நூலகம் என்பதை புத்தகங்கள் நிறைந்த அமைதியான கட்டடம் என்றே எம்மில் பெரும்பாலானோர் புரிந்து வைத்திருக்கின்றோம். நூலகம் என்பது வெறுமனே கட்டடங்களும் புத்தகங்கள் மற்றும் ஆவணங்கள் சேகரிக் கப்பட்டு வைக்கப்பட்டுள்ள இடம் மட்டுந்தானா? உண்மை

**பல்கலைக்கழகத்திலிருந்து நூல்களை அகற்றிக் காப்பாற்றியதற்காக ஒழுக்க விசாரணைக்கும் கண்டிப்புக்கும் உள்ளான அவர், பின்னரே அதற்காக யாழ். பல்கலைக்கழகத்தால் பாராட்டப்பட்டார்.**


யில் நூலகம் அமைதியாகத்தான் இருக்கின்றதா? அமைதி யான இடத்தையா வரலாறு நெடுகிலும் ஆக்கிரமிப்பாளர்கள் குறிவைத்து சிதைக்கவும் அழிக்கவும் செய்தார்கள். அமை தியாக இருந்த, இருக்கின்ற இடத்தின் அழிவா உலக அறி ஞர்களை பதை பதைக்கவும் கவலையடைவும் செய்தது, செய்கின்றது.

மனித சமுதாயத்தின் ஆகச் சிறந்த விலைமதிப்பற்ற சேகரம் திரட்டப்பட்ட அறிவு மற்றும் மக்களின் உண்மையான நம் பிக்கை ஆகியவை ஆகும். இவற்றை சேகரித்து பாதுகாத்து எதிர்காலம் அறிந்து கொள்ள வாய்ப்பையும் வழங்குபவை யாக பல நூற்றாண்டுகளாக நூலகங்கள் செயல்படுகின்றன. இதன் வழி மனித சமூகத்தின் பண்பாடு மற்றும் நாகரிக வளர்ச்சியின் தொடர் இயக்கத்துக்கான உயிரோட்ட மையங்க ளாக இயங்கிக் கொண்டிருக்கும் சமூக நிறுவனங்களாக அவை தொழிற்படுகின்றன. சீனாவின் சென்யாங் மாளிகை, அலெக்ஸ்சாண்டிரியா, நாலந்தா, யாழ் நூலகம், லெபனான், அண்மைக் கால பாக்தாத் நூலகம் என நூற்றுக்கும் மேற் பட்ட நூலகங்கள் ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கப்பட்டதை கலாச்சார படுகொலை என்கிறோம்.

புத்தகங்கள் நிறைந்த அமைதி குடிகொண்டிருக்கும் கட்டடம் என்பதற்குமப்பால், நூலகம் தொழிற்படுகின்றதை நாம் கருத் தில் எடுப்பதில்லை. அமைதி நிலவும் சூழலில் அமைதியாக இருக்காமல், நூலகம் தொழிற்பட உதவுபவர்களாகவும் உழைப்பவர்களாகவும் இருப்பவர்கள் நூலகர்கள். நூல் களை பகுத்து, வகை பிரித்து அடுக்கிப் பேணுதல், புதிய நூற்சேர்க்கைக்கான தெரிவுகளை முன்வைத்தல், அதற்கான வாய்ப்புக்களை உருவாக்குதல், அத்துடன் சமூகச் சொத் தான நூலக சேர்க்கைகளின் காவலர்களாக இருத்தல். வாச கர்களோடு நேசமுள்ளவர்களாக இருத்தல் என நூலகர்களின் பணி விரிவடைந்துள்ளது. சமகாலத்தின் சவால்கள் இன்னும் இன்னும் அதிக சாத்தியங்களைக் கோரி அவர்களை நிர்ப் பந்திக்கிறது. பாடசாலை கற்பித்தலும் பல்கலைக்கழக விரி வுரைகளும் கல்விமான்களை உருவாக்கவும், சமூகம் சார் அறிவாளிகளை உருவாக்கவும் நூலகமே இன்றியமையாதது. ஆயினும் ஆசிரியர்களுக்கும் விரிவுரையாளர்களுக்கும் சமூ கம் வழங்கும் அங்கீகாரம் மற்றும் கௌரவத்தை அறிவுரு வாக்கச் செயற்பாட்டில் முக்கிய பங்கெடுக்கும் நூலகருக்குக் கொடுப்பதில்லை. தமிழில் நூலகர்களின் வாழ்வு மற்றும் பணிகள் தொடர்பான நூல்கள் இதுவரை வெளிவந்ததாக அறிய முடியவில்லை.

இந்நிலையில் தான் அறிந்த, பழகிய ஈழத்து தமிழ்ச் சூழலில் இயங்கிய, சமூகம் அவசியம் அறிந்திருக்கவும் நினைவில் பதிக்கவும் வேண்டிய 13 நூலகர்களின் பணிகளை உள்ள டக்கி 'நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்' எனும் நூலை நூலியலாளர் என். செல்வராஜா எழுதி தமது அயோத்தி நூலக சேவைகள் பிரித்தானிய கிளையால் வெளி யிட்டுள்ளார்கள்.

நூலகராகவும் நூலகவியல் புலமையாராகவும் நூலகவியல்,




நூலகங்கள் என்கிற கருத்தாக்கம், பட்டியலாக்கம் ஆகியவற் றிற்கான அவரது பங்களிப்பும், சிந்தனைகளும், பதிப்பு மற் றும் வெளியீடு சார் தொழினுட்பம் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பில் அவரது ஆலோசனையும் வழிகாட்டல்களும், குறிப்பாக ஈழத் தமிழ்ச் சூழலில் அவற்றிலுள்ள சவால்கள், அவற்றை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள், இந்திய மேலாண்மையால் ஈழத்துப் பதிப்புச் சூழல் எதிர்கொள்ளும் நெருக்கடிகள், வாசிப்பினைப் பரவலாக்கல், கிராமிய நூல கங்கள் என்பதை ஒரு செயற்பாடாக்குதல், புலம்பெயர் புதிய தலைமுறையினரிடம் எமது பண்பாட்டையும் விழுமி யங்களையும் பரிமாறிக்கொள்ளல், புத்தக வரலாறு, நூலக வரலாறு ஆவணக் காப்பகம், அத்துடன் புக்ஸ் அப்ரோட் நிறுவனத்தினுடனான தொடர்பும் அதனூடாக இலங்கை முழு வதற்கும் அதன் பயனை சென்றடையச் செய்கின்றமை என்பவற்றுடன் நூல்த்தேட்டம் தொகுதிகள், அயோத்தி நூலக சேவைகள், நூலகவியல் சஞ்சிகையின் பதிப்பாசிரியர் மற் றும் எங்கட புத்தகங்கள் இதழின் ஆசிரியர்களில் ஒருவரென நூலியலின் பல்வேறு விடயங்கள் குறித்து தொடர்ந்து எழுதி யும் உரையாடியும் செயற்பட்டும் வருகின்ற நூலியலாளர் திரு. என். செல்வராஜா சமகாலத்தின் ஈழத்தமிழ் சமூகத்தின் சிறந்த நூலியலாளராவார். 60-ற்கும் மேற்பட்ட நூல்களின் ஆசிரியரான அவரது மனதிற்கு நிறைவைத் தருகின்ற நூலாக 'நான் கண்ட ஈழத்து நூலக ஆளுமைகள்' அமைந் திருக்கும் என நான் நம்புகிறேன். அவரது முன்னைய பல விடயங்கள் போலவே இதுவும் தமிழ்ச் சூழலில் முன்னோடி முயற்சியாகும்.

ஈழத்தமிழ்ச் சூழலில் நூலகவியலின் முன்னோடிகளாகச் செயற்பட்டவர்களை, போர்க்கால நூலகர்கள், போருக்கு பிந் திய சமூக நூலகர்கள் எனவும் பொது நூலக நூலகர்கள், பல்கலைக்கழக நூலகர்கள், பாடசாலை நூலகர்கள் என அவர்களின் சேவையின் தன்மை கருதி இந் நூலில் உள்ள டக்கப்பட்ட நூலகர்களை பொதுமைப்படுத்திக் கொள்ள முடியும்.

அவ்வகையில் தமிழறிஞர் மர்ஹூம் எஸ்.எம். கமால்தீன், செல்லத்துரை ரூபசிங்கம், கலாநிதி. வே.இ. பாக்கியநாதன், ரெஜினோர்ல்ட் செபரட்ணம் தம்பையா, சிற்றம்பலம் முருக- வேள் ஆகியோர்கள் ஈழத் தமிழ்ச் சூழலில் நூலக உருவாக் கம் மற்றும் நூலகவியலின் முன்னோடிகளான நூலகர்களாக இந்நூலில் அடையாளம் காணலாம். நூலகவியலில் சர்வ தேச பல்கலைக்கழகங்களில் புலமைத்துவ கற்கைகளை பெற்ற இவர்கள் தம் கற்றறிந்த புலமையினை தமது சமூகத் திற்கு பயன்படுத்த வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட் டவர்கள். நூலாசிரியர் உட்பட பிற்காலத்தில் ஈழத்தின் சிறந்த தமிழ் நூலகர்களை உருவாக்கியதுடன் ஈழத்தில் நூலகத் துறையை தொழில் வாண்மையுடையதாக மாற்றிய மைக்க அடித்தளம் அமைத்து வளர்த்தெடுத்தவர்கள்.

தமிழறிஞர் மர்ஹூம் எஸ்.எம். கமால்தீன், கலாநிதி. வே.இ. பாக்கியநாதன் ஆகிய இருவரும் பொது நூலகங்களில் பணியாற்றி அவற்றை வளர்த்தெடுத்தவர்கள். செல்லத்துரை ரூபசிங்கம், ஆர்.எஸ். தம்பையா இருவரும் பல்கலைக்கழக நூலகங்களில் பணியாற்றி அவை சிறப்பாக உருவாகப் பங் களித்தவர்கள். அமரர் செல்லத்துரை ரூபசிங்கம் அவர்கள் மொறட்டுவை பல்கலைக்கழக நூலகம் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகம் ஆகியவற்றின் உருவாக்கத்திலும் வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றியவராவார். அமரர் ஆர்.- எஸ். தம்பையா அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூல கத்தின் முதல் நூலகராக பணியாற்றியவர். அமரர் சி. முரு- கவேள் அவர்கள் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை வாண் மைத் திறன்சார் நூலக செயற்பாட்டுக்குரியதாக மாற்றியதில் முக்கிய பங்களித்தவர். இவர்கள் நூலாசிரியரின் ஆசிரியர்க ளாகவும் ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாகவும் விளங்கி யவர்கள்.

அமரர். ரோகிணி பரராஜசிங்கம், திரு. ச. தனபாலசிங்கம் ஆகியோர் போர்க்கால நூலகர்களாக அர்ப்பணிப்பும் தனிச் சிறப்பும் மிக்க நூலக சேவையை ஆற்றியவர்கள். அவர்கள் பணி உலகலாவிய சமூகத்தின் பாராட்டைப் பெறத் தகுதி வாய்ந்தது. ஆயினும் எமது அறிவுச் சமூகம் அதனைச் செய் யத் தவறிவிட்டது.

ஈராக்கில் போர் நடைபெற்ற காலத்தில் ஆபத்துக்குள்ளாகும் நிலையில் இருந்த பஸ்ரா நூலகத்திலிருந்து 30,000 நூல் களை அயலவர் உதவியுடன் காப்பாற்றிய ஈராக் நூலகரின்



கதையை கொண்ட Librarian of Basra (பஸ்ராவின் நூலகர்) என்ற நூல் உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் (தமிழ், மலை யாளம்) மொழிபெயர்க்கப்பட்டு அந்நூலகருக்கு புகழையும் பெருமையையும் தேடித்தந்ததை வாசித்தறிந்தபோது அதை விட பல மடங்கு போற்றப்பட வேண்டியவர்களாக எமது போர்க்கால நூலகர்களான அமரர். ரோகிணி பரராஜசிங்கம், திரு. ச. தனபாலசிங்கம் ஆகியோரது பணி அமைந்தி ருந்த போதிலும் அவர்களுடைய அர்ப்பணிப்பை சரியாக உணர்ந்து கொள்ளவும், உலகிற்கு அடையாளங்காட்டவும் நாம் தவறிவிட்டோம். ஆகையால் தான் பஸ்ராவின் நூலகர் பற்றி நூல்களை எழுதி வெளியிட்டு கௌரவப்படுத்திய கேரளமும் தமிழகமும் எமது போர்க்கால நூலகர்கள் பற்றி எதுவுமே தெரியாதுள்ளமையை வேதனையுடன் பகிர்ந்து கொள்ள வேண்டியுள்ளது.

மிகுந்த பிரயாசையுடனும் பொறுப்புணர்வுடனும் தூர நோக் கோடும் கட்டியெழுப்பப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகச் சேர்க்கைகள் அமைதிப் படை என வந்த இந்திய இராணுவத்தினர் குளிர்காய எரிபொருளாகவும் உறங்குவ தற்கு மெத்தைகளாகவும் பயன்படுத்தப்பட்டு சிதைக்கப்பட்ட துடன், குப்பைகளாக வெளியில் காற்றிலும், வெயிலிலும், நீரிலும் பனியிலும் நைந்து போக விடப்பட்டிருந்த நிலை யில், அதில் 34,000 புத்தகங்களை தனது தற்துணிவு மற்றும் சொந்த செலவில் காப்பாற்றியதுடன் மீளவும் யாழ் பல்க லைக்கழக நூலகத்தை கட்டியெழுப்ப துணை புரிந்தவர் அப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் போர்க்கால நூலகரான அமரர். ரோகிணி பரராஜசிங்கம் அவர்கள். பல் கலைக்கழகத்திலிருந்து நூல்களை அகற்றிக் காப்பாற்றிய தற்காக ஒழுக்க விசாரணைக்கும் கண்டிப்புக்கும் உள்ளான அவர், பின்னரே அதற்காக யாழ். பல்கலைக்கழகத்தால் பாராட்டப்பட்டார். அரிய பல ஆவணங்கள் தொல்பொருட் சின்னங்கள் உள்ளிட்ட பல நூலகச் சேர்க்கைகளை அழிவுக் குள்ளாக்கிய இந்திய அமைதிப் படையின் யாழ் பல்க லைக்கழக நூலக அழிப்பை பற்றி யாரும் பெரிதாக பேசுவ தில்லை. அந்த வகையில் அமரர். ரோகிணி பரராஜசிங்கம் பற்றிய கட்டுரை வரலாற்றுப் பதிவாக நாம் அவசியம் படித்து அதிகம் பரவல்ப்படுத்தப்பட வேண்டியவற்றில் ஒன்று.

1981-ல் பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்ட கலாச்சாரப் படு கொலையில் எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகம் சாம்பரிலி ருந்து புத்துயிர் பெற்றபோதும் அதன் சுற்றுப்புறம் தொடர்ந்து சேவையை வழங்க முடியாத யுத்த முன்களமாக மாறியதால் வாசகர்கள் சென்று பயனடைய முடியாத நிலையில் வாசகர்க ளின் இருப்பிடத்தை நோக்கி நூலகம் இடம்பெயர்ந்து சென்று, பல கிளை நூலகங்களாக மாறி, முன்னையதிலும் சிறப்பான நூலக சேவையை வழங்கிய யாழ் நூலகத்தின் செயற்பாடுகள் உலகெங்குமுள்ள யுத்தகால நூலகங்களின் செயற்பாடுகளுக்கான எமது அனுபவக் கொடை.

போர்க் காலத்தின் மிகச் சிக்கல் நிறைந்த கடுமையான காலத்தில் பலமுனை ஆபத்துகளில் உயிர் ஆபத்தை சந் திக்கும் வாய்ப்பு அதிகரித்த நிலையில் அரசியல், ஆயுத அழுத்தங்களின் மத்தியில் ஒரு நூலகராக தனது கடமையை சரிவரச் செய்ய மிகவும் மதி நுட்பத்துடனும் அர்ப்பணிப்புட னும் செயற்பட்டவர் முன்னை நாள் யாழ் பொது நூலக நூலகர் திரு. ச. தனபாலசிங்கம் அவர்கள். மனிதர்களோடு நூலகங்களும் இடம்பெயர்ந்த துன்பியல் பலமுறை எம் காலத்தில் நிகழ்ந்தது. யாழ் பொது நூலகமும் அதற்கு விதி விலக்கல்ல. அவ்வேளைகளிலெல்லாம் முடிந்தளவு யாழ். பொது நூலகத்தை மீளவும் கட்டியெழுப்ப தன் நூலகர் மற் றும் நூலக உதவியாளர் பணிக்குழாமுடன் பாடுபட்டவர். போக்குவரத்து கடுமையாக நெருக்கடிக்குள்ளான காலங்க ளில் கொழும்பில் புதிய நூல்களை கொள்வனவு செய்து அவற்றை திருகோணமலை ஊடாக கப்பல் மூலம் யாழ் பொது நூலகத்திற்கு கொண்டுவந்து சேர்த்ததுடன் பல தனி யார்களின் சேர்க்கைகள் பெற்று யாழ் பொது நூலக சேர்க் கைகளை வளம்படுத்திய நூலகர் அவர்.

புத்தகமும் செங்கல்லும் திட்டத்தின் கீழ் யாழ் பொது நூல கம் மீளவும் திருமதி சந்திரிக்கா குமாரதுங்க அரசால் புன ரமைக்கப்பட்ட போது அதன் செயற்பாடுகளில் கடுமையான இராணுவக் கெடுபிடிகள், அரசியல் அழுத்தங்களுடன் உயி ரச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சூழ்நிலையிலும், அதன் பின்னர் யாழ் நூலக திறப்பு தொடர்பான எதிர்ப்புகள் சர்ச்சைகள் என்பவைகள் அவரது பணிக் காலத்தில் ஓயாமல் அடுத்த டுத்து நிகழ்ந்துகொண்டிருந்த போதிலும் தளராது யாழ் பொது நூலகத்தை துறைசார் நேர்மையுடன் அபிவிருத்தி செய்தவர். பல்வேறு நாடுகளின் அரசுகளிடமிருந்தும் பல்

வேறு நிறுவனங்களிடமிருந்தும் பெருந் தொகையான நூல்களையும் உபகரணங்களையும் பெற்று யாழ் பொது நூலகத்தின் நூற்சேர்க்கையை 100,000 வரை உயர்த்தியதுடன் சிங்கப்பூர் அரச உதவியுடன் நூலகத்தின் சிறுவர் பகுதியை இலங்கையின் சிறந்த சிறுவர் நூலகப் பிரிவுகளில் ஒன்றாக அபிவிருத்தி செய்தவர்.

இன்று யாழ் பொது நூலகம் இலங்கையின் மாதிரி நூலகமாக சிறப்புடன் உள்ளதென்றால் அதற்காக நாம் நூலகர் திரு. ச. தனபாலசிங்கம் அவர்களுக்கும் அவரது நூலகப்பணிக் குழாமுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டவர்கள். 2009-ல் இலங்கையின் சிறந்த நூலகர்களில் ஒருவராகக் கௌரவிக்கப்பட்ட திரு. தனபாலசிங்கம் அவர்கள் பணி ஓய்வின் பின்னரும் நூலக மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார். அவரது நூலக பணிக்காலம் சுவாரசியமும் நிறைந்த முன்மாதிரியானதுடன் வரலாற்றுப் பதிவாகவும் முக்கியமானது. அதனை அவர் விரிவாகப் பதிவுசெய்ய வேண்டும்.

ஒரு சமூக நூலகராக சுன்னாகம் பொது நூலகத்துடன் தொடர்புள்ள எல்லோரதும் மதிப்புக்கும் நேசத்துக்கும் உரிய நூலகராக கடமையாற்றியவர் திரு. க. சௌந்திரராஜன் அவர்கள். யாழ்ப்பாணத்தின் சிறந்த நூலகமாக சுன்னாகம் பொது நூலகத்தை மீளவும் அபிவிருத்தி செய்வதற்கு பெறுமதியான சேவையை வழங்கிய அவரது பணிக்காலத்தில் சிறந்த நூலகத்திற்கான விருதுகளை சுன்னாகம் பொது நூலகம் பெற்றது. நூலகத்தினதும் நூலகரினதும் சமூக வகிபங்கைச் சரியாக உணர்ந்து சுன்னாகம் பொது நூலகத்தை சமூகமயப்படுத்தியதில் முன்னின்று உழைத்து, அவர் அடிபோட்ட பாதை இன்றைய நூலகர் திருமதி ஜெயலக்சுமி அவர்களது நிர்வாகத்தில் விரிவடைந்து சிறப்பாக செயற்படுகிறது. பணி ஓய்வின் பின்னரும் சௌந்திரராஜன் சமூக நூலகர் என்ற வகையில் தனது வகிபங்கை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றார். பாடசாலை நூலகங்களை மீள ஒழுங்குபடுத்தி அபிவிருத்தி செய்ய ஆலோசகராகச் செயற்பட்டு வருகின்றார்.

அமரர் சாமுவேல் ஜோன் செல்வராஜா, அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி ஆகிய இருவரும் பணிக் காலத்திலேயே மறைந்த சிறந்த நூலகர்கள். மிகச்சிறந்த நூலகவியல் அறிஞர்களாக அவர்களது சேவையை எம் சமூகம் இழந்தது ஒரு துரதிஸ்டவசமானது.

சாமுவேல் ஜோன் செல்வராஜா பொது நூலகராக சிறப்பாக பங்களிக்கத் தொடங்கிய குறுகிய காலத்திலேயே பேரினவாத காடையர்களால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார். ஈழத்துத் தமிழ் நூலகத்துறையை செழுமையாக்கும் கனவையும் அதற்கான தயார்ப்படுத்தல்களுடனான உழைப்பையும் வழங்கத் தயாராக இருந்த நூலகர் ஒருவரின் சேவையை ஈழத்தமிழ் சமூகமும் நூலகத் துறையும் இனவன்முறைக்கு பலிகொடுத்தது மிகவும் துயரமானது.

தமிழில் நூலக விஞ்ஞான அறிஞராக செயற்பட்டுக்கொண்டிருந்தவர் அமரர் சிறீக்காந்தலட்சுமி. நவீன நூலக விஞ்ஞானத்திற்கான துறைசார் நூல்களை எழுதியதுடன் நூலக விஞ்ஞானத்தில் இற்றைப்படுத்தப்பட்ட சிந்தனைகளையும் அறிந்து அவற்றை ஈழத் தமிழ்ச் சூழலுக்குள் கொண்டுவர உழைத்தவர். யாழ் பல்கலைக்கழக நூலகராக சிறப்பாக செயற்பட்ட அவரது பங்களிப்பு சமூக நூலகராக முழுமையாக வெளிப்பட முன்னர் காலம் அவரை எம்மிடமிருந்து பறித்துக் கொண்டது.

மும்மொழிச் சாதனையாளராக ஈழத்து நூலகவியலுக்கு தன் எழுத்துக்களின் மூலம் அதிகம் பங்களித்த நூலகராக M.B.M. பைரூஸ் அவர்களின் பணிகள் இந்நூலில் சிறப்பாக குறிப்பிடப்படுகின்றன.

மத்திய கல்லூரி நூலகர் க. மாணிக்கவாகர், யாழ் இந்துக் கல்லூரி நூலகர் பொன்னையா இராசரத்தினம் ஆகிய பாடசாலை நூலகர்கள் பற்றிய கட்டுரைகள் இந்நூலிலுள்ளன. பாடசாலை நூலகர்களே வாசகர்கள் முதலில் சந்திக்க வாய்ப்புள்ள நூலகர்கள். அவர்களின் சேவையே தொடர்ந்து வாசகர்கள் நூலகத்தோடு தொடர்பு கொள்ள ஒரு தூண்டுகோலாக அமையும். அந்த வகையில் பாடசாலை நூலகர்களின் சமூகப் பணியை வலியுறுத்துகின்ற கட்டுரைகளாக அவை அமைந்துள்ளன. பொன்னையா இராசரத்தினம் அவர்கள் தொடர்பான கட்டுரை அவர் காலத்தில் மாணவராயிருந்த வேதநாயகம் தபேந்திரன் அவர்களால் ‘அரங்கம்’ மின்னிதழில் எழதப்பட்டது. பொருத்தமும் அவசியமும் கருதி கட்டுரையாசிரியரின் அனுமதியோடு இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

தம் துறைகளில் இன்றிமையாத வகிபாகம் வகிக்கின்ற நூலகர்கள் தொடர்பில் எழுத்தாளர்கள், கல்வியாளர்களின் பாராமுகத்தின் மத்தியில், ஈழத்தமிழ் சமூகம் அவசியம் நினைவில் பதிக்க வேண்டிய 13 நூலகர்களையும் அவர்களின் பணிகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்துகின்ற நூலாக இது அமைந்திருக்கின்றது.

மட்டகளப்பு நூலகத்தில் பணியாற்றிய நூலகர் வித்தியாசாகர், திருகோணமலை பொது நூலகத்தை போர் காலத்தில் அபிவிருத்தி செய்த நூலகர் செ. சிவபாதசுந்தரம், யாழ் நூலக எரிப்பின் போது யாழ் பொது நூலக நூலகராக இருந்து எரிக்கப்பட்ட யாழ் நூலகத்தை சாம்பலிலிருந்து உயிர்ப்பிக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கிய நூலகர் திருமதி ரூபவதி நடராஜா போன்று நாம் அறியவும் பதிவுசெய்ய வேண்டிய நூலகர்கள் இன்னுமும் நிறைய உள்ளார்கள். அந்த வகையில் அவசியம் எழுதப்பட வேண்டிய நூல்களுக்கான முன்னோடியான சிறப்பான நூலாகவும் இது அமைகிறது.

‘உங்கள் வாழ்வில் நீங்கள் சந்தித்த, உங்கள் தேடலுக்கு வழிகாட்டியாகவிருந்த நூலகர்கள் பற்றிய மனப் பதிவுகளை மனம் திறந்து எழுத்தில் வடிக்க முன்வந்தால் அதன் பிரதியொன்றினை எனக்கும் அனுப்பி உதவுங்கள். அடுத்து வெளிவரவிருக்கும் இரண்டாம் பாகத்திற்கு உதவியாக இருக்கும்’ என்ற நூலாசிரியரின் வேண்டுகோளுக்கு நாம் அவசியம் செவிசாய்க்க வேண்டும்.



sathiyathevan.s@thaiveedu.com

# மொழியரசியல்!

மா. சித்திவினாயகம்

மொழி மனிதர் உருவாக்கிய அரிய கலை. மனிதரைப் பிற உயிர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது மொழி.

மனிதர் தன் உளக் கருத்துகளைப் பிறருக்கு உணர்த்தப் பயன்படும் கருவியே மொழியாகும். அந்த மொழியானது வெறும் கருத்துகளை மட்டும் உணர்த்துவதில்லை. மக்கள் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டு ஒரு சமுதாயமாக வாழவும் அது வழி செய்கின்றது.

மொழி மக்களின் நாகரீகம், கலாசாரம், பண்பாடு, மரபுகள் வழிவழியாகத் தொடர்ந்த தொடர்ச்சி இவற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்கின்ற பாரிய பணியினைச் செய்வது. மக்களின் அனைத்துச் செயல்களுக்கும் அடிப்படையாக விளங்கி மக்களையும் சமூகத்தையும் இணைக்கின்ற ஒரு பாலமாகத் திகழ்வது மொழி.

மொழியானது மக்களின் குரலில் பிறந்து, செவிக்கு உணவாகின்ற ஒரு ஒலிநிலை ஆகும். பேசுவோர், அதனைக் கேட்போர் என்ற இருவருக்கும் இடையே ஒருவரது உணர்ச்சிப் பாங்கினை மற்றவரின் கருத்துகளோடு பொருந்தச் செய்வது மொழி.

உலகின் மிகச்சிறந்த பண்பாடும், கலாசாரமும் மிக்க தொன்மை கொண்ட மொழி நம் தமிழ் என்பதைத் தயக்கமெதுவுமற்று நாம் சொல்லி மகிழ்பவர்கள். அதற்குப் பல வரலாற்றுச் சிறப்புக் காரணங்கள் உண்டு. அதில் முதன்மையானது நம் பேரன்பிலான உறவுமுறைகள் என்பதில் சந்தேகமில்லை. பண்டைய கூட்டுக்குடும்ப வாழ்க்கைமுறை மெல்ல மெல்ல நம்மை விட்டுக் கைவிலகிப் போனாலும் கூட இன்னமும் தமிழர்களின் மொழிப் பற்றும், பாசமும் அடியோடு நம்மை விட்டுப் போகவில்லை.

உலகின் முதல் மொழி மற்றும் மூத்த மொழி நம் தமிழ் தான் என்பதைப் பலரும் ஆய்வுத் தரவுகளோடு மெய்ப்பித்துவருகிற நாட்கள் இது. கிறிஸ்துவிற்கு முன்னதாக 400 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ்மொழி செழுமைபெற்று இருந்ததற்கான ஆதாரங்களைப் பலரும் பேசுகின்றார்கள். பதிவு செய்கின்றார்கள். உலகின் பல்வேறு பகுதிகளில் அகழாய்வில் கிடைத்த கல்வெட்டுகளில் பெரும்பாலும் தமிழ் மொழியே இருக்கிறது என்கிற செய்தி மகிழ்வானது.

*'தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்*
*சூழ்கலைவாணர்களும் இவள் என்று பிறந்தவள்*
*என்று உணர்ந்திடாத இயல்பினளாம்*
*எங்கள் தமிழ்த்தாய்!'*

என்று மகாகவி பாரதி போற்றிப் பாடிய தமிழ், காலங்களற்ற அதன் தொன்மையைக் காட்டி நிற்கிறது.

எத்திசையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழன்னையின் சீரிளமைத் திறம் வியந்து, வாழ்த்துவதாக மனோன்மணியம் சுந்தரனார் தமிழ் வாழ்த்தை முன்னிறுத்துகின்றார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்மொழியை மக்கள் பேசியதற்கான ஆய்வியல் தடயங்கள் இன்று வரை தொல்லியல் மூலம் வெளிவந்து கொண்டுதான் இருக்கிறது.

ஒரு மொழிக்கு அடிப்படைத் தேவை ஒலிகள். ஒவ்வொரு மொழியும் குறிப்பிட்ட ஒலிகளைக் கையாண்டே பிறந்தவை. பெரும்பாலான ஒலிகள் அனைத்து மொழிகளிலும் உள்ளன.

மொழியியலை (Linguistics), ஒலியியல் (phonology), சொல்லியல் (morphology) இலக்கணம் (grammar) எனப் பகுப்பாய்வு செய்பவர்கள் உண்டு.

சாக்கிரட்டிஸ் ஒலிக்குறிப்புச் சொற்களே மொழியின் மூலம் என்பார்.

பறவைகளும் விலங்குகளும் கூடக் குறிப்பிட்ட சில ஒலிகளால் கருத்துகளைத் தமக்குள் பரிமாறிக்கொள்கின்றன. அந்த ஒலிகள் பொருளற்றவை என்பதாக நாம் கடந்து சென்றுவிட முடியாது.

வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விதமாய் ஒலி மூலம் அச்சம், ஆசை, கோபம் போன்ற உணர்ச்சிகளை அவை வெளியிடுகின்றன. இவற்றின் மூலம் விலங்குகளும், பறவைகளும் தம் கருத்துக்களைத் தெளிவாக மனிதர்க்குத்தெரிவிக்க இயலாது என்பதே ஒருவேளை சரியாயிருக்கலாம்.

எழுத்து வடிவம் இல்லாத தொல் பழங்காலங்களில் பாறையில் ஓவியமொழியே உணர்வுகளை வெளிப்படுத்தும் வழியாக இருந்தது. இந்த ஓவியங்கள் ஒரு கட்டத்தில் சித்திர எழுத்துகளாக உருமாற்றம் அடைகின்றன. இதுவே சிந்து

வெளி சித்திர எழுத்துக் குறியீடுகளாக நமக்குக் கிடைத்துள் ளது.

அண்மைய வருடங்களில் வெளியாகி எம்முன்னேயுள்ள மொழியரசியல் உட்படப் பலவற்றைக் கேள்விக்குட்படுத்திய புத்தகம் சேப்பியன்ஸ். இது ஒரு மனிதகுலத்தின் சுருக்கமான வரலாறு என்றே அறிமுகமாக்கப்பட்டிருக்கின்றது. ஓர் இஸ்ரேலிய யூத இன வரலாற்று விரிவுரையாளனான யுவால் நோவா ஹராரியவர்களின் சாத்தியக் கூறுகளான வரலாற்றுத் தேடலில் எம் பண்டைய சரித்திரப் பதிவுகள் அனைத்தும் கேள்வியாக்கப்பட்டுள்ளன.

எது மனிதரைச் சிந்திக்க வைக்கின்றதோ அதுவே எழுத்தின் பணி. அந்த வகையில் அது எம்மைச் சிந்திக்கவைக்கின்ற ஒரு படைப்புத்தான்.

50 மொழிகளுக்கும் மேல் மொழிபெயர்க்கப்பட்டு கோடிக்கணக்கானோரின் உள்ளங்களை கவர்ந்த புத்தகமாக அது பேசப்படுகின்றது. எம் போன்ற பொது வாசகர்கள் இந்தப் புத்தகத்தைக் கொண்டாடி மகிழ்கின்றபோது ஆய்வாளர்களும், வரலாற்றுப் பெரு ஆசான்களும், மதப் போதகர்களும் அதனைக் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.

மூன்று முக்கியமான புரட்சிகள் தான் மானிட குல வரலாற்றின் பாதையைச் செதுக்கியது என்கின்றார் அதன் ஆசிரியர். சுமார் 70 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அறிவுப் புரட்சியானது எவ்வாறு மானிட வரலாற்றின் தொடக்கப் புள்ளியாக அமைந்தது என்பதையும், சுமார் 12 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவான வேளாண் புரட்சியானது எவ்வாறு வரலாற்றின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது என்பதையும், அண்மித்த 500 ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த அறிவியல் விஞ்ஞானப் புரட்சியானது எவ்வாறு வரலாற்றை ஒரேயடியாகப் புரட்டிப் போட்டுள்ளது என்பதையும் அது பல்வேறு நிலைகளில் நின்று விவாதிக்கிறது. இந்த மூன்று புரட்சிகள் மனிதர்களையும், அவர்களது சக உயிரினங்களையும் எப்படிப் பாதித்தது என்பதை உணரவைத்திருப்பது இப்புத்தகம்.

கூனிக்குறுகி நான்கு கால்களில் இருந்த விலங்கு படிப்படியாக நிமிர்ந்து இரண்டு கால்களும், இரண்டு கைகளும் கொண்டதாக எழுந்து பரிணாமம் பெற்றதுதான் மனிதத்தின் தலைநிமிர்வு.

நிமிர்ந்த மனித மூதாதைகளான சேப்பியன்ஸ்கள் கிழக்காபிரிக்காவிலிருந்து அரேபியத் தீபகற்பத்துள்ளும், யுரேசியப் பெரும் பகுதியிலும், ஆசியப் பகுதிகளிலும் எவ்வாறு பரவலடைந்தன என்பதைப் பேசுகிற வரலாறு அது. ஏற்கனவே பரிணாமமடைந்த நியாண்டதல்கள், ஹோமோ எரெக்ஸ்களோடு சேப்பியன்கள் பொருதியும் புணர்ந்தும், அவற்றின் அடையாளங்களை அழித்து அவற்றையும் சேப்பியன்ஸ் ஆகிப்போகச் செய்த துரோக வரலாறிலானதுதான் இந்த மொத்த உலகமும் என்று அது பேசுகின்றது.

இவர்கள் தமக்குள் எதைப் பேசினார்கள், எந்த மொழியில் பேசினார்கள் என்பது புரியாப் புதிர். ஆனாலும் மொழியைப் பயன்படுத்தும் உத்திதான் சேப்பியன்ஸ்களுக்கு மிகப் பயனுள்ளதாக அமைந்துள்ளது என்பதுவும், அதுவே அவர்களின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவியதுடன், பிற உயிரினங்களில் இருந்து அவர்களை வேறுபடுத்தும் முக்கியமான காரணிகளுள் ஒன்றான உயிரியல் இயல்பாகவும் இருந்ததென்பதும் பேருண்மை.

சூழ்நிலைக்கேற்ப சேப்பியன்ஸ்கள் தம் உணவுவகைகளைத் தேர்ந்தார்கள். கறையான்களைத் தோண்டியெடுத்தனர். பெர்ரிப் பழங்களைப் பறித்தனர். கிழங்குகளை நிலத்தினடியில் இருந்து பிடுங்கினர். முயல்களைப் பதுங்கிப் பிடித்தனர். காட்டெருமைகளையும் மாமூத்துகளையும் வேட்டையாடினர். உண்மையில் சேப்பியன்கள் நல்ல வேட்டைக்காரர். பண்டைய சமூகம் அமைதிகாத்த சொர்க்கமல்ல; அவர்களின் வாரிசான நாமும் இற்றைவரை அயலிலுள்ளவர்களை வேட்டையாடுவதில்- அழித்தொழிப்பதில் வல்லவர்கள் தான்.

வேட்டையாடிகளின் சந்ததியான இன்றைய சேப்பியன்ஸ்கள் வேளாண்மைக்கு மாறித் தங்களைத் தக்கவைத்தபின் மொழியரசியல் பேசி ஒட்டு மொத்த உலகமும் தன்னுடையதென்றே போர் புரிந்து வருகின்றது.

இன்றைக்குப் பெருந்தேசிய அரசியலின் முக்கியமான ஒடுக்குமுறையாக ‘மொழிஏகாதிபத்தியம்’ இருக்கிறது. இலங்கையில் நடைபெற்ற பெரும் போர்கள் மொழியின் பேரால், அது சார்ந்த இனத்தின் பேரால் நடைபெற்றவைதான். உலகெங்கும் மொழிப்போர்கள் லட்சோப லட்சம் பேரைக் கொன்று தீர்த்தபடியே இன்னமும் தொடர்கின்றது.

அறிவியல் முறைப்படி மொழியை ஆராய்வதற்கு வழிகாட்டியவர் ஜேர்மானிய தத்துவ வாதியான ஹேர்டர் (Herder) என்பவராவார். இவர் மற்ற எல்லா உயிரினங்களிலிருந்தும் மனிதகுலத்தை வேறுபடுத்துகின்ற மனித மாண்பே மொழிதான் என்பதை வலியுறுத்தியவர். மனிதரிடம் அமைந்த மகத்தான அறிவியல் தூண்டுதலின் விளைவே மொழியின் தோற்றத்தின் மூலம் என்று வாதிட்டவர் அவர். இவ்வாறான கருத்தியல் சிந்தனை வளர்ந்த இற்றை நாளிலும்

மொழியானது மனிதர் சக மனிதரைப் புரிந்து உணர்வைப் பகிர்ந்து கொள்ளும் ஓர் உன்னத கருவி என்கிறயதார்த்தம் மறந்து

பெரும்பாலான மக்களும் மொழியின் தோற்றத்திற்கு மூலம் கடவுளோ அல்லது அதீத சக்தியோஎன்கின்றார்கள்.

இன்றைய உலகம் கொண்டிருக்கிற இத்தகு மொழியரசியல் முற்றிலும் அறிவியலற்ற ஆபத்தானது. வெறுமனே ஆதிக்க நோக்கங்களுக்கானது.

இங்குள்ள சமுகங்கள்,கலாச்சாரங்கள், பண்பாடுகளில் சமத்துவம் நிலவ விரும்பாதவர்களின் கையில்சிக்கியுள்ள இந்த மொழியரசியலால் மக்களுக்கு ஏது நன்மை?



sithivinayagam@thaiveedu.com

# படைப்பும் பின்நவீனத்துவமும்

- சண்முகம் வெற்றிவேல்

இக்கட்டுரை அண்மைக்காலப் படைப்புகளையும், படைப்பாளிகளின் மனவியலையும் பார்வைக்குத் தருவதற்கு முயற்சிக்கிறது. சமகாலப் படைப்பாளிகளின் பொதுப்போக்கு யாது? அவர் ஏன் எழுதுகிறார்? சமூக அசைவில் எழுத்தின் தாக்கம் எத்தகையது? அரசு என்ற நிறுவனத்திற்கும் படைப்பு மற்றும் சமூக இடையூடாட்டத்திற்கும் அகப்புற நிலையிலெழும் முரண்நகை யாது? என்பவற்றுக்கான விடைகளைத் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**படைப்பு வரைவிலக்கணம்:** படைப்பு என்பது எங்கும் எவர் மனத்திலும் சுயம்புவாக எழவல்லது. இயற்கையை ஒட்டியும் வெட்டியும் வருவது. தன்னுள் நிகழ்வதை அடுத்தவருக்கும் கடத்த வல்லது. அணை உடைத்த வெள்ளம் போன்றது. சாகாவரம் பெறக்கூடியதும் கூட.

**கோட்பாடும் இலக்கியமும்:** ஏறுவதற்கும் இறங்குவதற்கும் விமானத்திற்கு ஓடுபாதையுண்டு. அதைப்போலவே படைப்புக்கும் படைப்பாளிகளுக்கும் கோட்பாடுண்டு. கொள்கையும் உண்டு. நாட்டுப்புறப் பாடலிலும் நாகரிகம் உண்டு. ஒப்பாரியிலும் ஓசைநயமும் தாளலயமும் தாராளமாக உண்டு. மேலும், கற்பனாவாதம் (Romanticism) என்னும் படைப்புக் கோட்பாடு கலவாத எந்த ஆக்கமும் உப்பில்லாக் கஞ்சியே எனலாம்.

**படைப்பாளியும் பின்புலமும்:** படைப்புகள் யாவுமே பிரதிகள் எனப்படுகின்றன. எந்தப் படைப்பாளியிலும் அவரது ஆசிரியர்கள், பெற்றோர், பாட்டன், பாட்டி புராணங்கள், தொன்மங்கள் என்பவற்றின் தாக்கம் ஊடுருவி இருப்பதைக் கண்டுகொள்ளலாம். மாதிரியாகப் பாட்டி சொன்ன உபகதை மற்றும் ஆலயங்களில் செய்யப்படுகின்ற முற்றோதல் போன்ற சமயப் பிரசங்கங்கள் கூடக் குழந்தைப் பருவத்தில் ஆழ்மனப்பதிவாக இடம் பிடித்திருப்பதை நரம்பியல் நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்.

அறிவியல்சார் கண்டுபிடிப்புகள் சாதனைகள்கூடத் தனி உழைப்பல்ல. அதில் பல உற்பத்தி உறவுகள் உண்டு. தொலைபேசியைப் பெல்கிரஹம் கண்டுபிடித்தால் அதற்குரிய மின்சாரத்தை இன்னொருவர் கண்டுபிடித்தமை இங்கு சான்றாகிறது. மலையில் ஊற்றெடுக்கும் நீரூற்றுப் பல சேர்ந்து நீரோடையாகி, அருவியாகி, நதியாகி ஆறாகிக் கடலில் கலப்பதைப் போலவே படைப்பிற்கும் அறிவியல் சாதனைகளுக்கும் பங்காளிகள் பலருண்டு. ஒன்றின் வருகை மற்றொன்றின் வருகைக்கான தூண்டுதலும் தோற்றுவாயும் எனலாம்.

**பின்நவீனத்துவம் வரைவிலக்கணம்:** ஆங்கிலத்தில் போமோ (POMO) என்னும் சங்கேத வார்த்தை (Post modernism) பின்நவீனத்துவத்தையே குறிக்கிறது. இந்தப் பின்நவீனத்துவத்திற்கு வயது அண்ணளவாக அறுபது மட்டுமே. தகர்ப்பமைப்புக் கொள்கையை அறிமுகம் செய்த பிரெஞ் உளவியலாளர் டெரிடாவே இக்கொள்கையின் பிதாமகராகப் பார்க்கப்படுகிறார்.

கண்ணை மூடிக்கொண்டு எதையும் ஏற்றுக்கொள்வதைப் பின்நவீனத்துவம் அனுசரிக்காது. எதையும் எந்த ஆசிரியரையும் களத்தையும் காலத்தையும் விசாரணைக்கு உட்படுத்துவதே பின் நவீனத்துவத்தின் உச்சாடனமும் வரைவிலக்கணமுமாகும். மரபுவழிப்பட்ட மனங்களை மறுத்தோட வைப்பது பின்நவீனத்துவத்தின் இயக்கவிசை எனலாம்.

எந்தப் படைப்பும் ஒற்றை அர்த்தம் கொண்டதல்ல. வாசிப்பிலே பல அர்த்தங்களும், அர்த்தங்களை ஒத்திப்போடுதலும் நிகழ்கிறது. படைப்பாளி வைத்துள்ள கருத்தையே வாசகரும் படியெடுத்துக் கொள்வார் எனக் கருத முடியாது. படைப்பு வாசகர் மனதிலும் நெய்யப்படுகின்றது. அதைப்போல விமர்சகர்கள் மனதிலும் உருவாகிறது. இந்த அசைவில் பார்க்கும் போது...,

அறம் என்பதும் ஒற்றையான ஒன்றல்ல, மாதிரிக்காக, அமெரிக்காவிற்கு ஆதரவான அறம் ஈராக்கிற்கு எதிரானது. உக்கிரேனுக்கு ஆதரவான அறம் ரஷ்யாவிற்கு எதிரானது. அமெரிக்காவில் சொத்தைத் திருடுவது குற்றம், கம்யூனிஸ்ட் நாட்டில் சொத்து வைத்திருப்பதே குற்றம். இப்படியாக அறம் என்பது பின்நவீனத்துவத்தில் எதிர் எதிராகப் பின்னப்பட்டுள்ளது.

‘அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை’, ‘அறத்தால் வருவதே இன்பம்’ என்பதற்குள்ளும் ஆத்மீக அரசியல் காய்நகர்த்தல்களும் உண்டென விவாதிக்கிறது, பின்நவீனத்துவம். நீட்சே ‘அறத்தை ஆண்டகைகளின் அறம்’, ‘அடிமைகளின் அறம்’ என இரண்டாக வகுத்தார். அதன்படி அறத்தால் வருவதே

இன்பம் என்பது யாருடைய அறத்தால் யாருக்கு வரும் இன்பம் என்ற கேள்வியைப் பின்நவீனத்துவம் எழுப்புகிறது.

'வயதில் குறைந்தவர்கள் தங்களைவிடப் பெரியவர்களின் காலில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்க்காரம் பண்ண வேண்டும், ஆசி பெற வேண்டும், பெரியவர்கள் சொன்ன பேச்சுக்கு மறுவார்த்தை பேசக்கூடாது என்றெல்லாம் காலங்காலமாகக் கட்டமைக்கப்பட்டு வந்த கருத்தியலால் உருவாக்கப்பட்ட பொதுப்புத்தியைக் கேள்வி கேட்கிறது பின்நவீனத்துவம். 'அடிவருடிப் பின்தூங்கி முன்னெழும் பேதைப் பெண்களைப்' பின்நவீனத்துவம் பார்க்க விரும்பவில்லை. அது பரஸ்ப்பரப் புரிந்துணர்வையும், பணிநேர அட்டவணையையும் வேண்டிநிற்கிறது. இந்த இயங்கு தளத்தில்,

சனாதனிகள் நிறைந்த ஈழம், தமிழகம் போன்ற நாடுகளில் பின்நவீனத்துவம் முன்வைத்த தகர்ப்பமைப்பு, ஆசிரியரின் மரணம் போன்ற கருத்தாக்கங்களானது, எல்லாவற்றையுமே விசாரணைக்கு உட்படுத்தியது.

தமிழகத்தில் பின்நவீனத்துவத்தின் பிதாமகர் தமிழவன் எனக் கருதப்படுகிறார். அவரது 'நவீனத் தமிழும் பின்நவீனத்துவமும்' என்ற கட்டுரை 1994-ல் வெளியானது. இதுவே தமிழுக்குப் பின்நவீனத்துவத்துவத்தின் கன்னி வருகையாகக் கருதப்படுகிறது. தொடர்ந்து தமிழவன் எழுதிய அமைப்பியல் தமிழகத்திலும் ஈழத்திலும் கல்விப்புலச் சிந்தனைப் பள்ளியில் கறாரான கருத்தாக்கங்களைக் கிளறிவிட்டுள்ளது. மூடநம்பிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

சான்றாக, சைவக் கோவில்களிலும் தேவாலயங்களிலும் பக்தர்கள் தங்களைத் தாங்களே தாழ்த்திக் கொள்வதையும், தேவாலயங்களில் செய்யாத குற்றத்திற்கு மன்னிப்புக் கேட்பதையும் பின்நவீனத்துவம் தீவிர விசாரணைக்கு உட்படுத்துகிறது. குழந்தைப் பருவத்திலிருந்து 'அடியேனைப் பாவியேனை' என்னும் குற்றவுணர்வு வாசகங்களை நெஞ்சிலே வரித்துக்கொள்வதால் எழக்கூடிய உளவியல் தாக்கத்தைப் பின்நவீனத்துவம் பரிந்துரைக்கிறது.

சைவ ஆலயங்களில், 'பாவியேனை அடியேனை, அடிமையை ஆட்கொண்டருள்வாய்' இந்த இறைஞ்சலில் பாவியேன் என்னும்போது முரண்நகை முகிழ்க்கிறது. ஒரு பக்தர் நாளொன்றுக்குக் குறைந்த பட்சம் மும்முறை வணங்குவது வழக்கமானால் அவர் நேரம் தவறாது பாவம் செய்கிறாரா? என்ற கேள்வி தர்க்கபூர்வமாக எழுந்துவிடுகிறது. இதைப் போல எல்லா மதங்களிலும் அர்த்தமில்லாத தாழ்வு மனப்பான்மையை வளர்த்தெடுக்கும் வண்ணம் எந்த ஆண்டவரும் கேட்டுக் கொள்ளவில்லை எனப் பின்நவீனத்துவம் வாதிடுகிறது.

வரலாற்றில் மனிதர் தன்னுடைய அரசியல் பொருளியல், சமூகத் தேவைக்காக இறைவனைப் படைத்துக் கொள்கிறார், என்பதே மார்க்ஸியம் கூறும் மந்திரமாகும். அப்படிப் படைத்துவிட்டு தன்செயல்களுக்கு எல்லாம் 'ஆண்டவன் இருக்கிறார் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதற்கு' எனப் பொறுப்புக் கூறலை இறைவன் பக்கம் இடமாற்றம் செய்வதைப் பின்நவீனத்துவம் வன்மையாகக் கண்டிக்கிறது. அது 'நான் இருக்கிறேன் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வற்கு' என்று சிந்திக்கும்படி மனிதரை வேண்டிக்கொள்கிறது. (கால்-மார்க்ஸ், இசங்கள், கொள்கைகள், பக். 327- 329).

நீட்சேயின் பார்வையில் இன்றைக்கு இறைவன் இறந்து 2023 வருடங்கள் ஆகின்றன. உலகில் அதிகூடிய பக்தர்களைக் கொண்டுள்ள மதம் கிறிஸ்த்தவம் ஆகும். அதற்கு அடுத்த படியில் இஸ்லாம் இருக்கிறது. இரட்சகர் இயேசுபிரானும், இறைதூதர் நபிகள் நாயகமும் நிரந்தரமாகக் கண்ணைமூடிக் காதவழி கடந்தாயிற்று என்கிறார் ஓசோ. ஆண்டவரும் அல்லாவும் ஏனைய தெய்வங்களும் பிறப்பு இறப்பில்லாப் பெரு-வாழ்வு பெற்றவர்கள் என்பதை எல்லா மதங்களும் ஏற்றுக் கொள்கின்றன. ஓசோவும் ஒருமனதாக ஏற்றுக்கொள்கிறார். (ஓசோ, உணர்விலிருந்து மெய்யுணர்வுக்கு, பக். 12-15).

கால்மார்க்ஸ் கடவுளின் இருப்பை ஏற்கிறார், மத மூடநம்பிக்கைகளை மறுக்கிறார். பின்நவீனத்துவமும் இறையியல் நம்பிக்கையை மூடநம்பிக்கையாக வளர்ப்பதைக் கண்டிக்கிறது. மதம் மக்களுக்கு ஒரு அபின் என மொழிகிறது, மார்க்ஸ்ஸியம். (Religion is opium for the people). மூடநம்பிக்கைகளை மறுத்துக் கூறுவதற்கு இயக்கவியல் பொருள்முதல்வாதத்தை முன்வைத்தார் கால்மார்க்ஸ். (மூலதனம்).

மேலும், பின்நவீனத்துவம் என்பது ஒற்றைப் பரிமாணம் கொண்டதல்ல. வாழ்வியலின் பல கூறுகளையும் புலனாய்வு செய்கிறது. இக்கட்டுரையின் அடிக்கட்டுமானம் படைப்பை மையமிடும்போதும் அங்கேயும் வாழ்வியலின் அனைத்துக் கூறுகளும் சங்கமமாவதைக் காணலாம். மேற்கு நாடுகளில் கலை இலக்கிய வட்டாரங்களில் கால்பதித்த இக்கொள்கை இன்று தத்துவம், அரசியல், வாழ்க்கைமுறை எனப் பலதளங்களையும் ஆட்கொண்டுள்ளது. குறிப்பாக ஆதிக்கம், அதிகாரம், சுரண்டல் என்பவற்றை அடையாளப்படுத்தி அதனை வெறுக்கிறது.

**பின்நவீனத்துவ அரசியல்:** பின்நவீனத்துவ அரசுகள் யாவும் வணிகம்சார் அறத்தையே வழிமொழிந்து அதன்படி செயற்பட்டும் வருகின்றன. நீள்நெடுங்காலமாக நெருக்குவாரங்கள் பலவற்றை மக்கள்மீது திணித்து வைத்திருந்த அரசுகள் தேர்தல் அண்மிக்கும் போதும், திறைசேரி வெறுமையாகும் போதும் சட்டங்களைத் தளர்த்தித் தாராள மனப்பான்மையைக் காட்சிப்படுத்தும் காய்நகர்த்தல்களை முன்னெடுக்கின்றன. பூகோளரீதியில் நாடுகள் அதிகாரத்திற்காகவும், ஆட்சிவரம்பை அதிகரிப்பதற்காகவும் ஒன்றை ஒன்று மிரட்டியும் போர்தொடுத்தும் வருகின்றன.

*'முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்'*

- குறள், 388

என்பதைப் பின்நவீனத்துவம் ஏற்கிறது. அதிலும் 'பழியஞ்சிப் பாத்தூண் தேடுதலே நாடாள்வார் கடன்' என்னும் வள்ளுவத்தின் அறக்கொள்கையையும் ஆதரிக்கிறது.

பின்நவீனத்துவம் சில தீவிரமான சிந்தனை நிலைப்பாடுகளை

முன்வைக்கிறது. ஒரு படைப்பாளி ஏன் எழுதுகிறார்? தன் உணர்ச்சிப் பெருக்கிற்கு வடிகால் அமைக்கிறாரா? அல்லது புகழாசை புதுப்புனலாகப் பிரவாகம் எடுக்கிறதா? வாசகவட்டத்தை வளைத்துப்பிடித்துப் பணம் திரட்டிக்கொள்ளும் வாணிப வழிமுறைக்கு வழிசமைக்கிறாரா? அல்லது சமுதாயத்தை நன்னெறிப் படுத்துகிறாரா? இவை யாவற்றையும் விண்ணப்பித்து விசாரித்துத் தெளிபொருளைக் கையகப்படுத்துவது வாசகரின் பொறுப்பென விதந்துரைக்கிறது பின்நவீனத்துவம்.

எழுத்துச் சுதந்திரம் கிடைத்ததன்பின் எழுதுவதற்கென ஒரு தகுதி கிடையாது. படைப்பாளி தனது படைப்பைத் தானே வெளியிடும்போது தணிக்கையின் தாக்கமும் அங்கில்லை. சமகாலப் படைப்புகளின் பொதுப் போக்கு என்பது ஜனரஞ்சகம், பணவசூலிப்பு என்பவற்றை அடியொற்றிய நோக்கங் கொண்டதாகவே அதிக விழுக்காடு காணப்படுகிறது. அரசு மற்றும் ஆலய நிர்வாகம் என்பனவும் மக்களை அணைப்பதுவும் அதிகாரத்தைக் கையிலெடுப்பதுவும் தாங்கள் நினைப்பதை மக்கள் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே என்பது பின்நவீனத்துவத்தின் தாரக மந்திரமுமாகும். ஆக,

***‘எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்***
***எண்ணுவம் என்பது இழுக்கு’***
- குறள்: 467



vettivelu.s@thaiveedu.com






# Lower rates.
# Exceptional service.

Connect with an insurance company that puts clients first.
Discover why The Co-operators is the right choice
for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour
Emergency Claims Service, free Identity Theft coverage
with our Home policies, and Accident Forgiveness
Endorsement option. All backed by our
Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள்
## பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும்
எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு
The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators
A Better Place For You

# மானாங்கேணி

## திருகோணமலை நகரின் அழிக்கப்பட்ட குளம்

### - செந்தூரன் காளிராசா -

பல்லாயிரம் வருடங்களுக்கு மேலாகவே மனித சமூகம் குளங்களோடு வாழ்ந்து வருகின்றது. சில ஆயிரம் வருடங்களாகக் குளங்களை அமைத்துப், பேணி அதன் சூழலமைவில் வாழ்வை வடிவமைத்துக் கொண்டது. அரசின் தோற்றக் காலத்திலிருந்தே குளங்களை அமைத்துப் பேணுவது அரசினுடைய முக்கிய கடமையாக இருந்து வந்துள்ளது. குளங்கள் அரசின், அரசனின், அச்சமூகத்தின் வரலாற்றுச் சான்றாக நிலைபெற்றிருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் வரலாறு குளங்களையண்டியதாகவே உள்ளது. விகாரைகளையும் கோயில்களையும் விட, அதிகமாகக் குளங்களை அண்டியே குடியிருப்புகள் அமைக்கப்பட்டன. அரசன், அரசிகள் மட்டுமல்லாமல் கிராமத் தலைவர்களாலும், மக்களாலும் குளங்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தன. குளங்கள் சிதைக்கப்பட்டு கைவிடப்பட்டபோது இராசதானிகள் மாறின, இராசாக்கள் மாறினர்.

15-ம் நூற்றாண்டு வரை நாடெங்கிலும் குளங்கள் அமைக்கப்படுவதும் பேணிப்பராமரிக்கப்படுவதுமான தொடர்ச்சி அறுபடாமல் தொடர்ந்தது. ஐரோப்பியக் காலனிய ஆட்சிகாலத்தில் இப்பணிகளில் தடங்கல்கள் ஏற்பட்டாலும் எக்காலத்திலும் அவை முற்றாக நிறுத்தப்பட்டதில்லை. மக்கள் தொகை அதிகரித்து நகரமயம் உருவான காலத்திலும் குளங்கள் கைவிடப்படாமையாலேயே தண்ணீர் கடன்பெறப்படுவதும், அயற்பிரதேசத்தவரால் தடுக்கப்படுவதும் இடம்பெறவில்லை.

பெரியதோ சிறியதோ குளங்கள் அதனளவில் சிறப்பானது என்பதுடன் பல பகுதிகளையும் கொண்டது, அவற்றுக்கான பிரத்தியேகமான செயற்பாடுகளையும் அவற்றுக்கான தனித்தனிப் பெயர்களையும் கொண்டுள்ளன. அவை அதனை உருவாக்கிய சமூகத்தின் மொழியில் கலந்து செழுமையையும் வரலாற்றையும் உள்ளடக்கியிருந்ததுடன், அச்சமூகத்தின் அடையாளமாகவும் இயங்கியது. கனமழையும் வெள்ளமும் குளங்களை நிறைத்து வெளியேறும்போது சுயசிதைவுச் செயற்பாட்டுக்குள்ளாக்கியபடியே இருந்தன. ஆனபோதிலும், குளங்களை உருவாக்கிய சமூகமானது இச்சிதைவுகளிலிருந்து அதைப் பாதுகாக்கும் பணியையும் இடைவிடாமல் செய்துகொண்டே இருந்தன. இந்நடைமுறை மக்கள் சமூகம் காலங்காலமாக ஒரு ஒழுங்கமைவெனக் கடைப்பிடித்துவந்தவை.

கடந்த ஐம்பது அல்லது நூறு வருட காலத்தில் சமூகத்தால் அழித்தொழிக்கப்பட்ட குளங்கள் யாவும், பல நூறுவருடங்களாக இந்நடைமுறைகளை, அதே சமூகம் எவ்வித சமரசமுமின்றி மிகச்சரியாகக் கடைப்பிடித்தும் பாதுகாத்தும் வந்தவையாகும். இப்பணிகள் சுலபமானவையல்ல. ஆயினும், நாடெங்கும் பரவியிருந்த குளங்களின் முக்கியத்துவத்தைச் சமூகம் நன்கு அறிந்திருந்தது. குளம் வறுமையடைய அதனடியான பெயர்களும் சொற்களும் வரலாறும் இயங்கியலும் காலப்போக்கில் அச்சமூகத்திலிருந்தும் அதன்மொழியிலிருந்தும் நீங்கிப்போகின்றன.




பல்சமூகப் பண்பாட்டுக்கூறுகளைக் கொண்ட திருகோணமலைச் சமூகத்தில் அழிந்துபோன /அழியவிடப்பட்ட குளத்தின் வரலாறு இது. ஓரிரு பொருள்தெரியாத சொற்களில் மறைந்திருக்கும் பண்பாட்டுப் பன்மையின் பதிவும்கூட.

திருகோணமலை நகரத்தில் உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாண சபைக் கட்டடத் தொகுதிக்குப் பின்புறமாக உட்துறைமுக வீதியையும் மின்சார நிலைய வீதியையும்

இணைக்கும் மயான வீதியில் கோணேசர் வளவுப்பகுதியில் வெள்ளை வில்வத்தடிக் கோணேசர் கோவிலின் குளம் இது வாகும். அங்குள்ள கல்வெட்டு ஆதாரத்தின் படி சோழர் காலத்தில் மச்சகேஸ்வரம் என அழைக்கப்பட்டு இருக்கி றது.(1)

தற்போதைய நில அடையாளங்களைக் கொண்டு மின்சார நிலைய வீதி, தக்கியா வீதி, புனித அந்தோனியார் வீதி, சோனகர் வாடியின் உட்பகுதிகளான தற்போது கீரைத் தோட்ட மலையருவிச் சந்தை அல்லது தமிழ்ச் சந்தையை மையமாகக் கொண்ட பகுதியை அடையாளப்படுத்த முடி யும்.

புவியியல் தன்மை அடிப்படையிலும், மரபுவழியாகக் கடத் தப்பட்ட வரலாறுகளின் அடிப்படையிலும் இக்குளத்துக்குரிய தண்ணீர் வரத்து, கந்தசுவாமி மலை எனப்படும் தற்போது மனையாவெளிக் குளத்துக்கு நேர் உள்ள மலைப்பகுதியில் இருந்து முடமாண்டான் குளத்தில் சேர்ந்து, (தற்போது மனை யாவெளிக்குளம்) அதன் மேலதிகத் தண்ணீர் வில்லூண்டிக் கேணி ஊடாக இக்குளத்தை அடைந்து இருக்கிறது. இதன் மேலதிக நீர் செங்கல்பண்ணைக்குளம் எனும் திருகோணம லைச் சிவன் கோவில் குளம், வீரகத்திப் பிள்ளையார் கோவி லின் தாமரைக்குளம் ஊடாகச் சின்னத் தொடுவாய் பிள்ளை யார் கோவில் கேணி ஊடாகவும், பெரிய தொடுவாய் பிள் ளையார் கோவில் கேணி ஊடாகவும் கடலில் கலந்திருக்கி றது.(2)

இந்தப் பகுதியில் இருந்து கண்டெடுக்கப்பட்டு செ.குணசிங்-கம் அவர்களால் படி எடுத்து வாசிக்கப்பட்ட கல்வெட்டுப் படி, இங்கு சோழர் காலத்திற்குரிய கோவில் இருந்த இட மாக உறுதிப்படுத்தப்படுகிறது. இதையே பேராசிரியர் சி. பத்மநாதனும் உறுதிப்படுத்துகிறார்.

கோணேசர் கோயிலுடன் சமகால வரலாறு கொண்ட இந்தக் குளம், மரபு வழி வரலாறுகளின் அடிப்படையில் கோணேசர் நகர்வலத்தின் போது தெப்பக்குளமாகவும் பயன்படுத்தப்பட் டதாகச் சொல்லப்படுகிறது அதை மேற்சொன்ன கல்வெட்டும் உறுதிப்படுத்துகிறது.(3)

இந்தக் குளத்தினது கோவில் சார்ந்த பயன்பாடு 1624-ல் கோணேசர் கோவில் அழிப்பிற்குப் பிறகு போர்த்துக்கேயரின் சுதேசிய மதங்கள் மீதான கட்டுப்பாட்டின் காரணமாகத் தற் காலிகமாக நின்றுபோனது.

இந்தக் குளத்தின் வரைபட ரீதியான ஆதாரம் 1775-ல் மன் னெவில்லெட் எனும் பிரெஞ்சு கடற்படைத் தளபதியால் வரையபட்ட படத்தில் காணப்படுகிறது.(4)

அதன் பின்பு 1794-ல் Laurie, Whittle எனும் இரு பிரித்தானி யரின் வரைபடத்தில் இக்குளம் நன்னீர்க் குளம் என உறுதிப் படுத்துகிறார்.(5)

1795-ம் ஆண்டிற்குப் பிறகு பிரித்தானியர் திருகோணமலை-யைக் கைப்பற்றிய பின்னர் தங்களுடைய குதிரைகளைக் குளிப்பாட்டும் இடமாகப் பயன்படுத்தியதன் காரணமாக உள்ளூர் மக்கள் இக்குளத்தைக் குதிரைக் குண்டு என அழைத்திருக்கின்றனர். காரணம், குண்டு என்பது தமிழில் குளிப்பதற்கேற்ற குளம் என்று அர்த்தம். எனவே, இது குதி ரைக் குண்டு என்று அழைக்கப்பட்டு இருக்கிறது.

அதன் பின்பு பிரித்தானியர் காலத்தில் இரண்டு வகையான இஸ்லாத்தைப் பின்பற்றுவோர் திருகோணமலைக்கு வருகின் றனர், ஒன்று சூஃபிக்கள் எனும் பக்கிரிகள், இன்னொன்று பிருத்தானியப் படையில் இருந்த மலாய் வீரர்கள்.(6)

இங்கு சூஃபிக்கள் தங்குமிடம் ஒன்று இருந்திருக்கிறது. அவர்கள் இந்தக் குளத்தைப் பயன்படுத்த 'தக்கியா' குளமா கிப் போனது.

அதற்கான காரணம் சூஃபிக்கள் எனப்படும் பக்கிரிகள் தங் குமிடத்தின் அரபிய / பாரசீகச் சொல்லே தக்கியா ஆகும். தமிழ் நாட்டில் தர்கா என்று பொதுவாக அறியப்படும் இச் சொல் சூஃபிசத் துறவிகளின் கல்லறைகளைக் குறிக்கும்.

அதே காலப்பகுதியில் பிரித்தானியப் படைகளில் வேலை செய்த மலாய் முஸ்லிம்கள் பஞ்சா எனும் தெரு ஊர்வலத் திருவிழாவைக் கொண்டாடியிருக்கின்றனர். இதன் தொடர்ச்சி யாக இப்பகுதி தக்கியா வீதி என்று இப்போது வரை அழைக்கப்படுகிறது.

கொஞ்சம் கொஞ்சமாக அதன் பாவனையை இழந்த குளப்ப குதி கீரைத்தோட்டம் என அழைக்கப்பட்டது. தொடர்ச்சியா கப் பாவனையில்லாமல் போகவும் மக்களின் அண்மியக் குடியிருப்புகளாலும் குளம் கொஞ்சம் கொஞ்சமாக மூடப்பட் டது. இறுதியாக இந்தக் குளத்தின் மேல் 'மலையருவி'ச் சந் தைக் கட்டடத் தொகுதியானது முன்னாள் நகரசபைத் தலை வர் அமரர் சூரியமூர்த்தியால் 1994-ம் ஆண்டில் 90 லட்சம் செலவில் நிர்மாணிக்கப்பட்டது.

தற்போது அரசியல் காரணங்களால் அக்கட்டடம் மலையரு விச் சந்தையாக இயங்காமல் போக, அழிந்து போன மானாங்கேணி, தற்போது நகரசபைக் களஞ்சியசாலையாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

**உசாத்துணை:**


- 1. இலங்கையில் இந்து சமயம் கலாநிதி சி. பத்மநாதன், 2005 (பக்கம் 151 - 153)
- 2. திருகோணமலை மாவட்டத் திருத்தலங்கள் - இ. வடிவேல்
- 3. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள். பத்மநாதன் .சி, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006. (p 101-103)
- 4. குளக்கரையில் இளைப்பாறும் வரலாறு, அனுபம் மிஸ்ரா, தன்னறம் - கோவைக் குளங்கள் பாதுகாப்பு அமைப்பு 1775-இல் மன்னெவில்லெட் வரைபடம்.
- 5. 1794 Laurie and Whittle வரைபடம்.
- 6. Islamic education. Diversity and National Identity Editors Jan - Peter Hartunghelmut Reifeld 2006. (P-208).




chenthooran.kalirajah@thaiveedu.com


# ஈழமண்ணில் இந்திய இராணுவம் : நூல்வழிப் பதிவுகள்

- என். செல்வராஜா



## அறிமுகம்:

இலங்கை - இந்திய ஒப்பந்தம் 1987 ஜுலை 29-ல் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் - இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டது. அதன் அடிப்படையில் இலங்கையில் சமாதானத்தை நிலைநிறுத்தவென அமைதிகாக்கும் படை என்ற பெயரில் இந்திய இராணுவம் ஜுலை 1987-ல் எமது தாயகத்துக்குள் புகுந்து நிலைகொண்டது. முகம் மலர, மங்கள வாத்தியம்



முழங்க, தளபதிகளின் நெற்றியில் திலகமிட்டு இந்திய அமைதிப் படையை எம்மவர்கள் ஈழத்தமிழ் மண்ணில் வரவேற்றார்கள். அதன் பின்னர் அமைதிப்படை - இந்திய ஆக்கிரமிப்பு இராணுவமாகி எமது அமைதியையே குலைத்த வரலாறு என்றுமே ஈழத்தமிழர் மனதை விட்டு அழியப்போவதில்லை. இரு நாடுகளிலும் தொடர்ந்த தேர்தல்களினால் ஏற்படுத்தப்பட்ட அரசியல் காய் நகர்த்தல்களினால் இந்தியாவில் வி.பி. சிங்கும், இலங்கையில் ஆர். பிரேமதாசாவும் அரசியல் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்றனர். அதன் பின்னர் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலையின் மாற்றத்தால், 1989 தொடங்கி, படிப்படியாக இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து வெளியேறியது. மார்ச் 1990-ல் இறுதி இராணுவ அணி இலங்கையைவிட்டு வெளியேறிச் சென்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையும், அதற்கான தேவையையும் இராணுவ ஆக்கிரமிப்புக் காலகட்ட நடவடிக்கைகளையும் விரிவாக ஒருபக்கச் சார்பாகப் பதிவுசெய்யும் நடை-முறை வெற்றிகரமாக இந்திய அரசினதும், இந்திய இராணுவத்தினதும் சார்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அக்காலகட்டத்தில் இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத் தளபதிகளான லெப்டினன்ட் ஜெனரல் திபேந்தர்சிங் (Lieutenant General Depinder Singh), மேஜர் ஜெனரல் ஹார்கிரத்சிங் (Major General Harkirat Singh), லெப்டினன்ட் ஜெனரல் சர்தேஷ்பாண்டே (Lieutenant General S.C. Sardeshpande) மற்றும் லெப்டினன்ட் ஜெனரல் ஏ.ஆர். கல்கட் (Lieutenant General A.R. Kalka) ஆகியோரின் பார்வையிலும் பிற இராணுவ ஆய்வாளர்கள், புலனாய்வு அதிகாரிகளின் பார்வையிலும் அவ்வப்போது ஆங்கில மொழியில் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்து இந்திய ஆக்கிரமிப்பாளரின் பார்வையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது போரின் நியாயத்தன்மைபற்றி விரிவாகவே பேசப்பட்டிருந்தது.


ஈழத்தமிழர்களின் சார்பில், அவர்களது இழப்புகளுக்கும் அழிவுகளுக்கும் இடையே நின்று மாற்றுப் பார்வையை இந்திய அரசியலாளர்களுக்குத் தமிழ் தவிர்ந்த பிற மொழிகளில் போதியளவில் வழங்கப்படவில்லை என்பது பொதுவான நிலைப்பாடாகும். இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பால் உயிர் இழந்து, உடைமைகள் இழந்து, கதியற்றுப்போன ஈழத்துக் குடும்பங்கள் பல. அவர்களின் பார்வையில் இந்த ஆக்கிரமிப்பு வரலாற்றைப் பதிவுசெய்ய முன்வந்தவை - ஈழத்துப் படைப்பாளிகளினதும் இளம் போராளிகளினதும் ஆக்க இலக்கியப் படைப்புகளும், துணிச்சலும் அறிவும் கொண்ட ஒரு சில புத்திஜீவிகளின் ஆய்வுக்கட்டுரைகளுமே. ஆக்க இலக்கியத்துறையில் கவிதைகளாகவும், கதைகளாகவும் பத்திரிகைகளில் அக்காலகட்டத்தில் வெளியாகிய பல படைப்புகளில் ஒரு சிறுபகுதியே பின்னாளில் நூலுருவில் நிலைகொண்டன. எஞ்சியவை கவனிப்பாரற்றுச் சிற்றிலக்கிய ஏடுகளிலும், வாரப் பத்திரிகைகளின் உள்ளேயும் முடங்கி விட்டன. ஈழத்தமிழரின் அந்த அவலம் நிறைந்த வாழ்வின் கொடுமையால், தாயகத்தைவிட்டுப் புலம்பெயர்ந்து அயல் நாடுகளுக்கு அகதியாகச் சென்றோர் ஏராளம். இந்திய இராணுவம் ஏற்படுத்திய ஆறாத வடுக்களைச் சுமந்து கொண்டு எம்மவரில் பலர் இன்றும் அந்தக் காயங்களின் வலிகளுடனும் வடுக்களுடனும் தாயகத்திலும் புகலிடத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

இந்திய அமைதிப்படையின் வரவை வரலாற்றுப் பதிவாக்கிய சில ஈழத்துப் பிரசுரங்கள் பற்றிய விரிவானதொரு ஆய்வே இக்கட்டுரையாகும். இக்கட்டுரை முதலில் தமிழர் தகவல் (கனடா) சஞ்சிகையின் 22-வது ஆண்டு மலரில் பெப்ரவரி 2013-ல் வெளிவந்திருந்தது. இக்கட்டுரை பின்னர் அகி-

லன் திருச்செல்வம் 25-வது ஆண்டு நினைவு வெளியீடாகத் தமிழர் தகவல் வெளியீட்டாளர்களால், செப்டெம்பர் 2014-ல் 'ஈழத் தமிழரின் போர்க்காலம்: இலக்கியங்கள், ஆய்வுகள், பதிவுகள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த எனது நூலிலும் மீள்பதிப்புக் கண்டிருந்தது.

இக்கட்டுரை பின்னர் மேலும் இற்றைப்படுத்தப்பட்டு, சற்று விரிவாக்கிய பிரதியாகக், கொழும்பிலிருந்து வெளிவரும் ஞானம் மாத இதழில் மே 2013 முதல் ஜுலை 2013 வரை மூன்று இதழ்களில் தொடராக வெளிவந்திருந்தது. பத்தாண்டுகள் கழிந்த நிலையில் மீண்டும் ஒரு தடவை இற்றைப்படுத்தப்பட்டு தற்போது 'தாய்வீடு' இதழில் தொடராகப் பிரசுரிக்கும் பொருட்டு தற்போது வழங்கப்பட்டுள்ளது.

முடிந்தவரையில் முழுமையை நோக்கியதொரு தேடலாக




இக்கட்டுரை அமைந்துள்ள போதிலும், என்னை வந்தடையாத நான் அறிந்துகொள்ளாத இன்னும் சில படைப்புகளும் இருக்கக்கூடும் என்று கருதுகின்றேன்.

### ஆக்கிரமிப்புக்கு முன்னைய எதிர்வுகூறல்கள்:

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர் இருந்த சூழலில், பின்னைய பாதக நிலைமைகள் பற்றிய எதிர்வுகூறல்களை ஒருசிலர் முன்வைத்திருந்தனர்.

'இந்துசமுத்திரப் பிராந்தியமும் இலங்கை இனப் பிரச்சினையும்' என்ற நூல் உதயன் (மு. திருநாவுக்கரசு), விஜயன் (இ.ஜெயராஜா) ஆகிய இரு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புத்திஜீவிகளால் இணைந்து மார்ச் 1987-ல் (இந்திய இராணுவம் ஜுலையில் உள்நுழைவதற்கு முன்பாக) யாழ்ப்பாணத்திலிருந்து எழுதப்பட்டிருந்தது. இந்நூல் பின்னாளில் சென்னை ரோசா லக்சம்பேர்க் படிப்பு வட்டத்தினரால் மார்ச் 1988-ல் மீள்பிரசுரமாகத் தமிழகத்திலும் வெளியிடப்பட்டது. சர்வதேச உறவு, இந்துசமுத்திரப் பிராந்தியமும் வல்லரசுகளும், இந்து சமுத்திரப் பிராந்தியமும் இந்தியாவும், தென்னாசியப் பிராந்தியமும் இந்தியாவும், இந்தியாவும் இலங்கைப் பிரச்சினையும், தமிழீழ விடுதலைப் போராட்டமும் வெளிநாடுகளின் நிலையும் ஆகிய ஆறு அத்தியாயங்களில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் பின்னணியில் இலங்கையின் இனப்பிரச்சினை ஆராயப்பட்டிருந்தது. இந்திய நிலைப்பாட்டின் நல்லதொரு எதிர்வுகூறலாக இந்நூல் இன்றளவில் கருதப்படுகின்றது.

'யாருக்காக இந்த ஒப்பந்தம்?' என்ற மற்றொரு நூலும் இதே காலகட்டத்தில் மு. திருநாவுக்கரசுவினால் உதயன் என்ற புனைபெயரில் எழுதப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியிடப்பட்டது. ஆகஸ்ட், 1987 வரை 3 பதிப்புகளைக் குறுகிய காலத்தில் கண்ட பிரபல்யமான சிறுநூல் இது. ஜே.ஆர் - ராஜீவ் ஒப்பந்தம் கைச்சாத்திடும் தறுவாயில் அதன் பின்னணியில் மறைந்திருந்த தமிழர்களுக்கு எதிரானதும் தீங்கானதுமான அம்சங்களை வெளிப்படுத்துமுகமாக இந்நூல் எழுதப்பட்டிருந்தது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், 1983-ல் தமிழகத்திலிருந்து 'வங்கம் தந்த பாடம்' என்றதொரு அரசியல் வரலாற்றறிவு நூலொன்றினை 52 பக்கங்களில் வெளியிட்டிருந்தது. பங்களாதேசின் விடுதலைக்காகப் போராடியவரும், தேசிய சோசலிசக் கட்சியின் ஸ்தாபகருமான கேர்னல் அபு தாகிரின் (Colonel Abu Taher) நீதிமன்றச் சொற்பொழிவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. பங்களாதேஷ் அரசுக்கெதிராக இவர் நடத்திய புரட்சி நசுக்கப்பட்டு 1976 ஆடி 21, அதிகாலை 4 மணிக்குத் தூக்கிலிடப்பட்டார். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டபோது நீதி மன்றத்தில் இவர் ஆற்றிய நீண்ட உரையின் தமிழ் மொழிபெயர்ப்பே 'வங்கம் தந்த பாடம்' என்ற இந்நூலாகும். பின்னாளில் இந்திய இராணுவம் ஈழமண்ணில் நிலைகொண்டிருந்தபோது, மக்களிடையே விழிப்புணர்வினையும் பரந்த அறிவூட்டலையும் நோக்காகக் கொண்டு, இலங்கையில் யாழ்ப்பாணம், கமுகு பதிப்பக வெளியீடாக அந்நூலின் இரண்டாவது பதிப்பினை அவ்வேளையில் நிலவிய இராணுவப் பாதுகாப்புக் கெடுபிடிகளுக்கு மத்தியிலும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், பங்குனி 1988-ல் அச்சிட்டு வெளியிட்டிருந்தது.

### விடுதலை இயக்கங்களின் நிலைப்பாடு:

இந்திய அமைதிகாக்கும்படை இலங்கை மண்ணில் இயங்கும் தீர்மானம் தொடர்பாக ஒரு சில விடுதலை இயக்கங்களின் கருத்துக்கள் அக்காலகட்டத்தில் நூலுருவில் வெளிவந்திருந்தன. அவ்வகையில் 'ஜுலை இருபத்தொன்பது உடன்பாடும் எமது நிலையும்' என்ற தலைப்பில் ஈழப்புரட்சி அமைப்பு யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பிரசுரத்தினை வெளியிட்டிருந்தது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் தொடர்பான ஈரோஸ் அமைப்பின் கருத்துக்களும் அது பற்றி வெளிவந்த பத்திரிகைக் குறிப்புக்களினது தொகுப்புகளுமாக இந்நூல் அமைந்திருந்தது.

இந்திய இராணுவத்தின் முக்கிய எதிரியாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரின் ஒப்பந்தம் சார்ந்த கருத்துக்கள் 'இந்திய-இலங்கை ஒப்பந்தம்: விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு' என்ற தலைப்பில் அவுஸ்திரேலியாவிலிருந்து வெளியிடப்பட்டது. வெளியிட்ட ஆண்டு குறிப்பிடப்படாத போதிலும், இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் வெளியிடப்பட்ட முதலாவது அறிக்கை இதுவாகும். இந்திய அரசு தனது தேசிய, பூகோள நலன்களைக் கருதியே இந்த ஒப்பந்தத்தினைச் செய்திருக்கிறது என்று குறிப்பிடும் இந்நூல், தமிழ் மக்களின் நலன்களை முற்றாகப் புறக்கணித்து, அவர்களது நியாயபூர்வமான அரசியல் கோரிக்கைகளை உதாசீனம் செய்து இந்திய அரசு இவ்வொப்பந்தத்தில் தனது பூகோள நலன்களுக்கு மட்டும் முக்கியத்துவம் அளித்துள்ளதாக அந்நூல் குற்றஞ்சாட்டியுள்ளது.

பின்னாளில் சமாதானப்படை முற்றுமுழுதான தாக்கியழிக்கும் படை என்ற நிலைக்கு வந்த வேளையில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மீண்டும் ஒரு பிரசுரத்தின்மூலம் பதிவுசெய்திருந்தார்கள். 'இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சினையும்: சில உண்மை விளக்கங்கள்' என்ற தலைப்பில் அது டிசம்பர் 1987-ல் வெளிவந்திருந்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படைக் குறைபாடுகளும், இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே எழுந்த முரண்பாடுகளும் அதற்கான மூலகாரணமும், இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராடத் தாம் நிர்ப்பந்திக்கப்பட்டதன் காரணமும் இந்நூலில் தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

'இலங்கையின் இனப்போராட்டமும் இந்திய-இலங்கை ஒப்பந்தமும்' என்ற தலைப்புடன் தமிழ்ஈழ மக்கள் மன்றம் யாழ்ப்பாணத்திலிருந்து 1988-ல் விரிவான நூலொன்றை வெளியிட்டிருந்தது. இந்நூலின் முதற்பகுதி இலங்கை இனப்பிரச்சினை பற்றிய வரலாற்றுக் குறிப்பினையும் இரண்டாம் பகுதி 1987 ஜுலை 29-ல் கைச்சாத்தாகிய இலங்கை-இந்திய உடன்படிக்கையையும் அது தொடர்பான விமர்சனங்களையும் உள்ளடக்கியிருந்தது.

'தியாகத்தின் பாதையில் திலீபனுடன் 12 நாட்கள்' என்ற நூல் மு.வே.யோ. வாஞ்சிநாதன் அவர்களால் எழுதப்பெற்று சென்னை, தோழமை வெளியீடாக டிசம்பர் 2010-ல் வெளியிடப்பட்டது. இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையின் வடகிழக்குப் பகுதிகளில் நிலைகொண்டிருந்த வேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்-மாவட்ட அரசியற் பிரிவுப் பொறுப்பாளர் திலீபன் (இராசையா பார்த்திபன்) 15.9.1987 அன்று நல்லூர் கந்தசாமி கோயிலின் முன்பாக ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துச் சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டு 26.9.1987-ல் ஈகச்சாவை அடைந்தார்.

அந்தப் பன்னிரு நாட்களும் அவருடன் மேடையில் இருந்தவரான கவிஞர் மு.வே.யோ. வாஞ்சிநாதன், அக்காலகட்டத்தைத், தான் பார்த்து அனுபவித்த சோக நிகழ்வினை இந்நூலில் பதிவாக்கியிருக்கிறார். இந்நூலின் முதற்பதிப்பு 26.9.1988 அன்று சென்னையில், வை. கோபால்சாமி அவர்களின் தலைமையில் வெளியிடப்பட்டவேளை, ஆசிரியர் சென்னை மத்திய சிறையில் இருந்தார். 1992-ல் இந்நூலின் மீள்பதிப்பு வெளியாகியது. பின்னாளில் 2010-ல் தோழமை வெளியீடாக-முதற்பதிப்பு எனக் குறிப்பிடப்பட்டு வெளிவந்துள்ளது.

'தமிழீழ ஈகச்சுடர் அன்னை பூபதி' என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டத் தொடர்பக வெளியீடாக, 1992-ல் சிறப்பிதழ் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. இந்நூல் அன்னை பூபதியின் மறைவின் நான்காவது ஆண்டை நினைவுகூர்ந்து வெளியிடப்பட்டிருந்தது. அன்னை பூபதி பற்றிய ஏழு ஆக்கங்களை இந்நூல் உள்ளடக்குகின்றது. அநீதிக்குச் சவால் விடுத்த அன்னை பூபதி, புரட்சியின் புயல்தான் அன்னை பூபதி, தமிழீழ மண் சிவந்தது, அன்னை பூபதி மக்கள் எழுச்சியின் ஓர் வடிவம், பூபதியே நீ புதைக்கப்படவில்லை, தமிழர் இதயமெங்கும் வேரோடிவிட்ட விருட்சம் ஆகிய தலைப்புகளில் இந்நூல் படைப்புக்களை உள்ளடக்கியிருந்தது. மட்டக்களப்பில் இந்திய அமைதி காக்கும் படைக்கு எதிராகச் சாகும்வரை உண்ணாநிலையிலிருந்து உயிர்நீத்தவர் அன்னை பூபதி (திருமதி பூபதி கணபதிப்பிள்ளை 3.11.1932 - 19.4.1988). மட்டக்களப்பு -அம்பாறை மாவட்ட அன்னையர் முன்னணியின் செயற்பாட்டாளராகப் பணியாற்றியவர். போர் நிறுத்தம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காணப்பட வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன்வைத்து அன்னையர் முன்னணியினர் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ந்த வேளையில் 1988 மார்ச் 19-ல் தான் சாகும்வரை உண்ணா நோன்பைத் தொடங்கிய பத்துப் பிள்ளைகளுக்குத் தாயாரான அன்னை பூபதி, கோரிக்கைகள் இந்திய இராணுவத்தால் ஏற்றுக்கொள்ளப்படாத நிலையில் தன் அகவை 56-ல், 1988 ஏப்ரல் 19-ல் மரணத்தைத் தழுவினார். அன்னை பூபதியின் நினைவுநாள் தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள் என்று பின்னாளில் நினைவு கூரப்பட்டது.

## புத்திஜீவிகளின் நிலைப்பாடு:

விடுதலை இயக்கங்களின் நிலைப்பாடுகளுக்கு ஈடாக ஒரு சில புத்திஜீவிகளும், சமூக விழிப்புணர்வுநோக்குடன் தமது கருத்துக்களை நூலுருவில் பதிவுசெய்யத் தலைப்பட்டனர். துரதிர்ஷ்டவசமாக, ஈழத்து அறிவுஜீவிகள் இந்திய இலங்கை உடன்படிக்கை பற்றி முழு நூலாக அக்காலப்பகுதியில் எழுதும் சூழல் இருக்கவில்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தேசியப் பத்திரிகைகளில் கட்டுரைகளாக எழுதியிருந்த போதிலும், நூலுருவில் அவை தொகுக்கப்படவில்லை. அவ்வகையில் இமயவரம்பனின் 'இன ஒடுக்கலும் விடுதலைப் போராட்டமும்' என்ற நூல் இங்கு குறிப்பிடத்தக்கது. சென்னையிலிருந்து புதிய பூமி வெளியீட்டகத்துடன் இணைந்து சவுத் ஏசியன் புக்ஸ், ஜுன் 1988-ல் வெளியிட்ட இந்நூலில் 3 கட்டுரைகளும் இரு பின்னிணைப்புகளும் இடம்பெற்றுள்ளன. இவை செம்பதாகை, புதியபூமி ஆகியவற்றில் வெளிவந்தவை. அதில் சமாதானமும் ஒப்பந்தமும் என்ற கட்டுரை இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் எழுதப்பட்டதாகும்.

தமிழகத்தவரான சாலை இளந்திரையன் எழுதிய 'இந்தியம், ஈழம், நக்சலியம்' என்ற நூலைப் பற்றியும் குறிப்பிடுவது நல்லது. சென்னையிலிருந்து மே 1989-ல் இந்நூல் வெளியிடப்பட்டிருந்தது. தமிழகத்தில் வீரநடை அறிவியக்கம் மாத இதழில் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். இந்தியம், ஈழம், நக்சலியம் ஆகிய மூன்று பிரிவுகளில் இதிலுள்ள 18 கட்டுரைகளும் பகுக்கப்பட்டுள்ளன. ஈழம் என்ற பிரிவில் ஈழத்தமிழர் பிரச்சினையை இந்திராமகன் தீர்ப்பாரோ? ஈழத்தமிழர் பிரச்சினை வெறும் சோற்றுப் பிரச்சினையா? தமிழனின் முதுகிலே மீண்டும் ஒரு குத்து, இது தானா ஐயா ஈழத்தமிழருக்கு ஆதரவு? பின்னணி தெரியாமல் பேரம் பேசுவதா? யார் தேசப் பக்தர்கள் - யார் தேசத் துரோகிகள்? இந்தியா நடத்தி வைத்த ஒரு ஜிகினா நாடகம் ஆகிய ஏழு கட்டுரைகள் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகளின் அரசியல் பின்னணியைத் தமிழகத்துக்குத் தோலுரித்துக்காட்டுவதாக அமைந்திருந்தன.



(தொடரும்)

selvarajah.n@thaiveedu.com

# சோழமும் ஈழமும் ஒரு வரலாற்றுத் தேடல்

**- வி. துலாஞ்சனன் -**

தமிழ்ப் புதினங்களில் தலையாய இடத்தைப் பெற்றுக் கொண்ட 'பொன்னியின் செல்வன்' நாவல் திரைப்படமாக வெளிவந்து நல்ல விமர்சனங்களைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. படம் வெற்றி என்றும், சுமார் என்றும் பல்வேறு விமர்சனங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கசிந்து கொண்டிருந்தாலும், பொன்னியின் செல்வன் நாவல் என்ன நோக்கத்துக்காக திரைப்படமாக வெளிவர வேண்டும் என்று திரைப்படக் குழுவும் தமிழ் ஆர்வலர்களும் விரும்பினார்களோ, அந்த நோக்கம் பெருமளவு நிறைவேறிவிட்டது என்றே சொல்ல வேண்டும். நாவலைப் படித்தவர்கள் வரலாற்றார்வம் பெற்றது போலவே திரைப்படத்தை இரசித்த பலரும் சோழர் வரலாறு பற்றித் தேடிப் படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் சோழர்கள் பற்றிய பல்வேறு கட்டுரைகள், விழியங்கள் வெளியிடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. அதிகம் சொல்வானேன், படம் பார்த்த அடுத்த நாளே என் அக்காவின் ஏழு வயது மகள், சுந்தரச் சோழர், ஆதித்த கரிகாலன், குந்தவைப் பிராட்டியார், அருண்மொழித்தேவன், என்று வம்ச வரிப்படம் வரைந்து இடைவெளி நிரப்பக் கேட்ட போது, நானே கொஞ்சம் புல்லரித்துத் தான் போனேன்.

எல்லாவற்றுக்கும் மேல், பொன்னியின் செல்வன் நாவலை ஒரு இலங்கைத் தமிழனாக நேசிப்பதற்கான காரணம் ஒன்றுண்டு. தமிழகத்திலிருந்து இலங்கை வரை நீளும் அதன் கதைக்களம். இலங்கையில் நிகழும் சம்பவங்களை எழுதுவதற்காகவே நாவலாசிரியர் கல்கி இலங்கைக்கு மூன்று தடவை வருகை தந்து அனுராதபுரம், பொலனறுவை முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கிறார்.

இன்றைய தமிழ்த் திரையுலகில் அல்லது தமிழ்ப் புதினங்களில், அவற்றின் கதைக்களம் தமிழ்நாட்டைத் தாண்டிச் செல்வதில்லை. ஏன் கேரளம், கன்னடம், ஆந்திரநிலம் காட்டப்பட்ட அளவு கூட தமிழ்த் திரைப்படங்களில் இலங்கை சித்தரிக்கப்பட்டதில்லை. அப்படியே சித்தரிக்கப்பட்ட ஓரிரு படைப்புகளிலும் நிறையத் தகவல் பிழைகள், வட்டார வழக்குக் குழப்பங்கள் என்பன விரவிக் கிடப்பதைக் காணலாம். 'சேலத்துக்கா, மதுரைக்கா, மெட்ராசுக்கா, திருச்சிக்கா, திருத்தணிக்கா' என்று பல்லேலக்கா பாடும் கோடம்பாக்கம், யாழ்ப்பாணத்தின் மட்டக்களப்பின் கண்டியின் கொழும்பின் பெயர்களை உச்சரித்த தருணங்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

ஆனால் வரலாறு காட்டும் சித்திரம் வேறு. தமிழகத்தோடு நெருக்கமான தொடர்புகளைப் பேணியபடி அதனை அடுத்திருந்த ஈழமும் தமிழ்கூறு நல்லுலகாகவே விளங்கியிருக்கிறது. அங்கு அண்மைக் காலமாகக் கிடைத்து வரும் தமிழி அல்லது தமிழ்ப்பிராமிக் கல்வெட்டுக்கள் அதற்கான மிகத் தெளிவான சான்று. தமிழர் என்று பொருள்படும் 'தெமள' என்ற சொல், சிங்களத்தில் தமிழ் பேசுவோர் என்ற பொருளில் பயிலப்படவில்லை. அது, அந்நியர் என்ற பொருளிலேயே எடுத்தாளப்பட்டிருக்கிறது. வெள்ளைத் தோலுடைய போர்த்துக்கேயர் இலங்கைக்கு முதன் முதலில் வந்ததைப் பதிவு செய்துள்ள சிங்கள நாட்டார் இலக்கியங்கள் புதிதாக யாரோ தமிழர்கள் வந்திருப்பதாகவே பாடுகின்றன. இங்கு வந்த அத்தனை அந்நியரும் தமிழர் என்று தான் அறியப்பட்டனர் என்பதே, சிங்களவர் நன்கறிந்திருந்த மாற்று இனத்தவர் யார் என்பதை வெளிப்படையாகச் சொல்லிவிடுகிறது.

சிங்கள இலக்கியங்களில் மாத்திரமன்றி, பிரித்தானியர் காலம் வரை, இரு நிலத் தமிழரிடையேயும் இந்தக் கொண்டும் கொடுத்தும் உறவு தொடர்ந்திருக்கிறது என்பதற்கு பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன. மிக எளிமையான உதாரணங்களாக ஆறுமுகநாவலர், விபுலானந்த அடிகள், காசி-வாசி செந்திநாதையர், ஞானப்பிரகாச சுவாமிகள் போன்ற ஈழத்தமிழ் அறிஞர்கள் தமிழகத்தில் பெற்றுக்கொண்ட வரவேற்பைக் குறிப்பிடலாம்.

பொன்னியின் செல்வன், இந்த மறக்கப்பட்ட உறவை நினைவு கூர்கிறது. கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும் இலங்கையையும் தமிழகத்தையும் ஒரே பண்பாட்டுப் பரப்பிலேயே வைத்துப் பார்க்கிறது. மகாவம்சத்தை விரித்தால், இந்த வேர் இலங்கை மீது படையெடுத்துக்கொண்டேயிருந்த எல்லாளன், சேனன் - கூத்திகன், ஐந்து பாண்டியர், ஆறு பாண்டியர், காலிங்க மாகோன் என்று இலங்கையின் காலக்கோடு முழுதும் நீண்டிருப்பதைக் காணலாம்.

மகாவம்சத்தில் சோழர் மீது பதிந்திருக்கும் காழ்ப்பை இன்றைய அரசியல் சரிநிலைகளின் மீது நின்றுகொண்டு தமிழ்ச் சைவ - சிங்கள பௌத்த முரண்பாடாக புரிந்து கொள்ளவே கற்றிருக்கிறோம். தொடர்ச்சியான தென்னகத் தாக்குதல்களால் சிங்கள அரசு அநுராதபுரம், பொலனறுவை, யாப்பகூவை, தம்பதெனி, கம்பளை, கோட்டை, கண்டி என்று தெற்கு நோக்கி நகர்ந்துகொண்டு இருந்தது என்பது இன்றைய இலங்கை வரலாற்று நூல்களில் வரும் ஒற்றை வரி. ஆனால் உண்மை அதுவல்ல. தென்னகத் தாக்குதல் என்ற ஒரேயொரு காரணத்துக்காகவே அத்தனையையும் திட்டமிட்டுச் செய்வதற்கு வரலாறு என்பது அத்தனை எளிதானதும் அல்ல.

ஏன் இந்த ஒற்றை வரி தவறானது? முதலில் ஒரேயொரு சிங்கள அரசு என்ற ஒன்று வரலாற்றில் இருக்கவில்லை. அநுராதபுரத்துக்குச் சமகாலத்திலேயே பல சிற்றரசுகள் இலங்கைத் தீவில் இருந்திருக்கின்றன. பத்தாம் நூற்றாண்டளவில் இலங்கை, இராசநாடு (ரசரட்டை), உரோகணநாடு (ருகுணுரட்டை), மாயநாடு (மாயரட்டை) என்று மூன்று நாடுகளை கொண்ட 'திரிசிங்கள தேசம்' என்று சிங்களக் கல்வெட்டுகளில் அழைக்கப்படுகின்றது. (திரிசிங்கள அதிபதி என்ற சிங்கள கல்வெட்டுச் சொல்லுக்கும் மும்முடிச்சோழன் / தமிழ்

மூவேந்தர் என்ற தமிழ்ச்சொல்லாடலுக்குமான ஒற்றுமையை நாம் இங்கு எண்ணிப்பார்க்க வேண்டும்).

அநுராதபுர அரசு வடக்கே கோலேச்சிய போது, அதற்குச் சமனான புகழுடன், அல்லது ஒரு படி அதற்கும் மேலாக உரோகண அரசு தெற்கே நிலவியதற்கு பாளி வரலாற்று இலக்கியங்களே சாட்சி. பிராமிக் கல்வெட்டுக்களின் படி, பொமு 3-ம் 2-ம் நூற்றாண்டுகளில் தென்கிழக்கு இலங்கையில் ஏறாவூர் முதல் கதிர்காமம் வரை ஆண்ட 'தச பதிகன' என்று அறியப்படும் பத்து சகோதரர்களின் அரசு முக்கியமானது. இவர்களை மகாகமத்திலிருந்து (இன்றைய கதிர்காமத்தை அண்டிய திசமகாராமம்) ஆட்சி செய்த துட்டகாமிணியின் தந்தை கோதாபயனால் கொல்லப்பட்ட பத்து சகோதரர்களாக இனங்காண்பார்கள் ஆய்வாளர்கள். அதே உரோகண அரசின் தலைநகராக பத்தாம் நூற்றாண்டுக்குப் பின் விளங்கிய பலம் வாய்ந்த உத்தநாத்துவாரம் (இன்றைய மொனராகல் உடுந்தொறை), மகாநாககுலம் (இன்றைய அம்பலாந்தோட்டை) நகரங்கள் இந்த 'தலைநகர் இடப்பெயர்ச்சி' பட்டியலில் சொல்லப்படுவதில்லை. அதே பட்டியலில் குறிப்பிடப்படும் கோட்டை அரசும் கண்டி அரசும் கிட்டத்தட்ட சம காலத்தவை. யாப்பகூவை, தம்பதெனி, குருநாகல், கம்பளை என்பவற்றின் அரசர்கள் பெரிய நிலப்பரப்புகளை ஆண்டதில்லை. ஆக, இவற்றை ஒற்றைத் தலை நகரின் புலம்பெயர்வு என்று கொள்வதற்கான எவ்வித முகாந்திரங்களும் இல்லை என்பதே உண்மை.

என்றால் உண்மையில் நடந்தது என்ன? அரசு என்பது நாம் எண்ணுவது போல் வெறுமனே படையெடுப்புகளாலோ சதிகளாலோ மத முரண்களாலோ உருவாவதில்லை. அரசொன்று உருவாவதற்கு குறித்த இடத்தில் நாகரிகமடைந்த சமூகமொன்று இருக்க வேண்டும். அந்த சமூகம் பொருளாதார ரீதியில் தன்னிறைவானதாக இருக்க வேண்டும். அந்தச் சமூகத்தில் செல்வாக்குப் பெறும் ஒரு தலைவன் அல்லது ஒரு குடும்பம் அந்தச் சமூகத்தில் அல்லது அயற் சமூகங்களும் இணைந்த பெரிய நிலப்பரப்பில் தன் அதிகாரத்தை நிலை நிறுத்தும் போது, அரசொன்று தோன்றுகின்றது. அதிகாரத்தை நிலை நிறுத்தும் போது, அரசின் தலைவனான அரசன், தன் குடிகளின் பாதுகாப்பையும் இயல்பு வாழ்க்கையையும் உறுதிப்படுத்துகின்றான். பதிலாக குடிகள் வரிகளையும் சேவையையும் வழங்கி தங்கள் அரசனின் அரசு நிலைத்திருக்க உதவி புரிகின்றன.

இப்படி உருவான அரசொன்று வளர்ச்சி காண்பதற்கு, இரண்டு நிபந்தனைகள் தேவை. முதலாவது, அதன் அயலில் இன்னொரு அரசு தோன்றாது இருக்க வேண்டும். அல்லது அயலிலுள்ள அரசுகள் முன்னைய அரசனின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்டு சிற்றரசராக நீடிக்க வேண்டும். அரசனின் குடிகள் போலவே, இவ்வாறு அவனைப் பணியும் சிற்றரசுகளும் கப்பத்தைச் செலுத்தி அரசனுக்குத் தங்கள் விசுவாசத்தைத் தெரிவிக்கின்றன.

இரண்டாவது நிபந்தனை, அரசு தொடர்ந்து நீடிப்பதற்கு அதன் கருவூலத்தில் செல்வம் கொழிக்க வேண்டும். செல்வம் சாத்தியமாவது ஒன்று வணிகத்தால், இரண்டு அதிக உணவு / பொருள் உற்பத்தியால். எனவே எங்கு உற்பத்தி அதிகம் நடக்கிறதோ, அல்லது எங்கு வணிகர் போக்குவரத்து அதிகமாக இருக்கிறதோ, அந்தக் கிராமம் நகரமாக வளர்ந்து பின்னாளில் ஒரு அரசாக மலரும். உற்பத்திப் பெருக்கத்தாலும் வணிகர் புழக்கத்தாலும் சிற்றூர்கள் நகரமாக மாறுவதை நாம் இன்றும் கண்டுகொண்டு தான் இருக்கிறோம்.

நிலைமை இப்படி இருக்க, சிங்கத்தின் பேரனான விசயன் எழுநூறு தோழர்களுடன் படகில் கரையொதுங்கி குவேனியை ஏமாற்றி அவள் மூலம் இயக்கர்களின் அரசைப் பறித்து புதிய அரசமைத்தான் என்பது பாளி வரலாற்றிலக்கியங்கள் சொல்லும் கதை. இந்தக் கதை நாம் மேலே பார்த்த இயல்பான அரசொன்றின் தோற்றத்தோடு முரண்படுகிறது. ஆக்கிரமிப்பாளன் ஒருவனால் இங்கிருந்த நகரொன்று கைப்பற்றப்பட்டது என்றால், அவனுக்கும் முன்பே இங்கு நாகரிகம் இருந்தது என்று தானே அர்த்தம்? எனவே விசயனின் கதை முழுக்க முழுக்க உண்மையாக இருக்க முடியாது. அதுவும் மகாபாரதம், இராமாயணம் போல பிற்காலத்தில் வளர்ச்சி கண்ட ஒரு குலக் கதையாகவே இருக்க வேண்டும். விசயன் கதை நாட்டார் கதையாக இருந்து மகாவம்ச காலத்தில் எழுத்தில் பொறிக்கப்பட்ட ஒன்றாக இருக்கவே வாய்ப்பதிகம்.

விசயன் கதைக்கு மேலதிகமாக தனது காலத்தில் வழங்கிய இன்னும் சில செவி வழிக் கதைகளை, நானூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கையின் இடச்சு - போர்த்துக்கேய ஆவணங்களை ஆராய்ந்த ஐரோப்பிய அறிஞர்கள் தங்கள் நூலில் பதிவு செய்திருக்கிறார்கள். அவற்றில் ஒன்றின் படி, தென்னகத்திலிருந்து வந்த வணிகர்களே இங்கேயே தங்கி இங்கிருந்த மக்களைக் கட்டுப்படுத்தி ஒரு புதிய அரசை அமைக்கின்றனர். இன்னும் சில மரபுக் கதைகளில் அந்த வணிகர் கூட்டத் தலைவனின் பெயர் 'சிங்களன்' என்று பதிவாகி இருக்கிறது. சிங்களனால் ஆளப்பட்டதால் இந்தத் தீவுக்குப் பெயர் சிங்களத்தீபம்.

ஏழாம் நூற்றாண்டில் இலங்கை வந்த சீனப் பயணி சுவாங்சங் சொல்வதன் படி, சிங்கத்துக்கு மகன் பிறக்கும் சம்பவம் இடம்பெற்றது தென்னகத்தில். அவனே தகப்பனைக் கொன்றமைக்காக நாடு கடத்தப்பட்டு இரத்தினத் தீவான இலங்கையை வந்தடைகிறான். இரத்தினத் தீவிற்கு இரத்தினங்களை சேகரிக்க வரும் வணிகரைச் சூறையாடி அவர்களது மனைவி மக்களைக் கொண்டு அங்கு ஒரு அரசு அமைக்கின்றான். இப்படி அரசனான சிங்கபாகுவின் பரம்பரையினர் தான் சிங்களர். சுவாங்சங் இந்தக் குறிப்பை எழுதுவதற்கும் மகாவம்சத்துக்கும் வெறும் இருநூறு ஆண்டுகளே வித்தியாசம் என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

இலங்கையில் இரும்பைப் பயன்படுத்திய பெருங் கற்கால மனிதர்கள் குறைந்தது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே குடியிருப்பது தொல்லியல் ஆய்வுகளிலிருந்து தெரிய வந்திருக்கிறது. ஒரு கட்டத்தில் இவர்கள் உற்பத்தி அதிகரிப்பாலும் வணிகத்தாலும் முன்னேற்றமடைந்த நாகரிக மக்களாக வளர்ச்சி கண்டிருக்கிறார்கள். இவர்கள் அமைத்த ஊர்கள் பன்னாட்டு வணிகர் குழுக்களின் வருகையால் பிற்காலத்தில் நகரங்களாகவும் அடுத்தடுத்த காலங்களில் அரசுகளாகவும் வளர்ச்சி கண்டிருக்கக்கூடும் என்பதே யதார்த்தமாகக் கொள்ளக்கூடிய ஊகம். ஏனெனில் 19-ம் நூற்றாண்டு வரை, இலங்கை அரசியலைத் தீர்மானிக்கும் பெருஞ் சக்திகளாக வணிகர்களே இருந்திருக்கிறார்கள் என்பது அத்தனை வரலாற்றுச் சான்றுகளும் சொல்லும் வெள்ளிடை மலை.

பாளி வரலாற்று இலக்கியங்கள் பதிவு செய்யும் அநுராதபுரம் மீதான முதல் ஆக்கிரமிப்பே சேனன் - குத்திகன் எனும் இரு தென்னகக் குதிரை வாணிகர்களின் படையெடுப்பு தான். மகாவம்சம் சொல்லும் சேனன் குத்திகன் காலத்துக்கு (பொ.ஆ.மு 3-ம் நூறு.) வெறும் நூற்றாண்டு பிந்திய அம்

பாறை குடுவில் பிராமிக் கல்வெட்டில் (பொ.ஆ.மு 2-ம் நூற்.) தமிழ் வணிகர்கள் பற்றிய குறிப்பொன்று பதிவாகியிருக்கின்றது. சோழர் காலத்துக்கு முன்னும் பின்னும் இலங்கை எங்ஙனும் திசையாயிரத்து ஐநூற்றுவர், நானாதேசிகள், வளஞ்செயர் முதலிய தென்னிந்திய வணிகக் குழுக்கள் பல்வேறு நகரங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தன. சோழருக்கு நூறாண்டுகள் பின்பு வந்த முதலாம் பராக்கிரமபாகுவின் அரசவை 'ராச வைசிய புயங்கம்' (அரசர் - வணிகர் ஒன்றுகூடுமிடம்) என்றே அறியப்பட்டது. அடுத்த இருநூறாண்டுகளில் மன்னார்க்குடா முத்துக்குளிப்பில் யாழ்ப்பாண அரசு செலுத்திய ஆதிக்கத்தையும் சர்வதேசச் சந்தையில் அவர்களின் முத்துக்கும் மாணிக்கங்களுக்கும் இருந்த கிராக்கியையும் இபன் பதூதா முதலிய வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

14-ம் நூற்றாண்டில் இலங்கை வந்த சீனக்கடல் வீரன் செங்கே, மாத்துறையில் சீனம், பாரசீகம், தமிழ் எனும் மும்மொழியில் கல்வெட்டு பொறிக்குமளவு கிழக்காசிய - தென்னாசிய - மேற்காசிய நிலப்பரப்புகளின் முப்பெரும் வணிக மொழிகளைப் பேசிய கடற் பயணிகள் இலங்கைக்கு எப்போதும் வந்து போய்க் கொண்டிருந்தன. தேவந்துறை (தெவிநுவர) கோவிலில் பொறிக்கப்பட்ட ஆறாம் விசயபாகுவின் சிங்களக் கல்வெட்டு சர்வதேச வணிகர்களுக்கான பல கட்டுப்பாடுகளை விதிக்கிறது, அதே நூற்றாண்டின் இறுதியில் சோழமண்டலக் கடலாதிக்கத்தை தக்கவைப்பதற்காக இடம் பெற்ற முக்குவர் - கரையார் போராட்டத்தில் அரேபிய வணிகர்கள் தவிர்க்க முடியாத இடத்தை வகித்தார்கள். 15-ம் நூற்றாண்டு முதல் இலங்கை வரலாற்றில் ஆரம்பிக்கும் காலனித்துவ காலம், இலங்கை அரசுகள் அத்தனையும் பன்னாட்டு வணிகர்கள் கைகளில் பகடைக்காய்களாகவே இருந்தன என்பதை நிரூபிக்கப் போதுமான சான்றாதாரங்களைத் தன்வசம் வைத்திருக்கின்றது.

ஆக, வடகிழக்கு இந்தியாவிலிருந்து விசயன் வந்ததாகச் சொல்லும் தொன்மத்துக்குச் சமனாக, தென்னக வணிகர் குழுக்களின் தொடர் வருகையாலேயே இலங்கையில் முதல் அரசு தோன்றியது என்ற தொன்மக் கதையையும் முக்கியமான ஒன்றாகவே நாம் பார்க்க வேண்டும். அப்படித் தென்னகத்தவரின் வருகை பற்றிய மரபுரைகளின் சில கூறுகள் விசயன் தொன்மத்திலும் இணைந்திருக்கக் கூடும். விசயன் குவேனியைக் கைவிட்ட பின்னர், பாண்டிய இளவரசியை வரவழைத்து மணந்து கொள்கிறான் என்பது அந்த விதத்தில் ஊன்றி நோக்க வேண்டிய மகாவம்சக் கதை. பாளி இலக்கியங்களில் பண்டு என்பது பாண்டியன் என்று பொருள்படும் சொல். விசயனின் கொடிவழியில் ஆண்ட மன்னர்களில் விசயனின் மருகனாகச் சொல்லப்படும் பண்டு வாசுதேவன்,பண்டுவாசுதேவனின் பேரனான பண்டுகாபயன் ஆகிய இருவர் பெயரிலும் 'பாண்டிய' அடை மொழியான 'பண்டு' இருப்பதை தற்செயலாகக் கருத முடியவில்லை. பண்டுகாபயனின் மகாவம்ச வரலாறு தமிழ் மண்ணிலும் போற்றப்பட்ட கண்ணனின் கதையை அச்சொட்டாகத் தழுவியிருப்பதையும் இயல்பாகக் கடந்து செல்ல முடியாதுள்ளது.

தென்னக வணிகர் வருகை பற்றிய தொன்மத்தை உறுதிப்படுத்த நமக்கு மேலும் தொல்லியல் சான்றுகள் பல கிடைக்கின்றன. கடற் பயணிகள் உள்நாட்டுக்குள் நுழையப் பயன்படுத்திய முதன்மையான நுழை வாயில்கள் ஆறுகளின் கழிமுகங்களே. கடலில் ஆறுகள் திறக்கும் இடங்கள் ஆழம் அதிகம் கொண்டவை என்பதால், அவை கப்பல்கள் நங்கூரமிடவும் நகரவும் போதுமான ஆழத்தைக் கொண்டிருந்தன. ஆற்றுக் கழிமுகங்களில் சரக்குகளை ஏற்றி இறக்குவது, அவற்றை ஆறுகளின் வழியே உள்நாட்டுக்குப் பரிமாற்றுவதற்கு இலகுவான ஊடகமாகவும் இருந்தது.

இலங்கையின் மிகப் பழைய துறைமுகங்களான மன்னார் மாதோட்டமும் திருக்கோணமலையும் இரண்டுமே ஆற்றுக் கழிமுகங்கள் தான். மாதோட்டத்தில் கடலில் கலப்பது அருவியாறு அல்லது மல்வத்து ஓயா. திருக்கோணமலையில் கடலில் கலப்பது மகாவலி கங்கை. மல்வத்து ஓயாவின் கரையில் தான், இலங்கையின் பழந் தலைநகர்களில் ஒன்றான அநுராதபுரமும், பண்டைய தொல்லியல் மையங்களில் ஒன்றான கட்டுக்கரைக்குளமும் அமைந்துள்ளன. மகாவலி கங்கையில் கலக்கும் அம்பன் கங்கை, இலங்கையின் இரண்டாவது பெருநகரான பொலனறுவையில் அமைந்துள்ள பராக்கிரம சமுத்திர வாவியில் ஒரு கிளையைக் கொண்டிருக்கிறது. ஏழாம் நூற்றாண்டில் சைவ நாயன்மார் பாடிய இரண்டே இரண்டு ஈழத்துத் தலங்களான திருக்கேதீச்சரமும் திருக்கோணேச்சரமும் இந்த இரு துறைமுகங்களிலும் அமைந்திருந்தவை தான் என்பதை இந்த இடத்தில் குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

மாதோட்டத்து மாந்தைத் துறைமுகத்தில் உரோமர், கிரேக்கர் காலத் தொல்பொருட்கள் கிடைத்துள்ளமை, அதன் பழைமைக்குச் சான்று. சங்க காலத்தில் புகழ் பெற்றிருந்த கடலோடிகளான சேரர்களது நாணயங்களும் மாந்தையில் கிடைக்கப் பெற்றுள்ளன. தென்னகத்தவர் ஈழத்துக்கு நுழைவதற்கிருந்த மிகக் கிட்டிய கடல் வழிப் பாதையும் மாந்தைத் துறைமுகமே. சிறீசவத்து, உபதிசகாமம், பண்டுவசுநுவரை உள்ளிட்ட பல ஆரம்பகால ஊர்களை பாளி இலக்கியங்கள் பாடும் போதும், இலங்கையில் எழுச்சி கண்ட முதற் பேரூர் அநுராதபுரம் தான். விசயன் தொன்மத்தில் உண்மை இருப்பதாகக் கொண்டால் குறைந்தது ஆயிரத்து ஐநூறு ஆண்டுகள் அது அரசிருக்கையாக நீடித்திருக்கிறது. அத்தனை ஆண்டுகளிலும் அநுராதபுரத்தைக் கட்டியெழுப்பியவர்கள் மாந்தைத் துறைமுகமூடாக அருவியாற்றின் வழியே உள்நாட்டுக்குள் நுழைந்த வணிகர்களன்றி வேறு யாருமல்லர். அந்த வணிகர்களால் புரக்கப்பட்ட இன்னொரு தொல் நகரின் எச்சங்களையே இன்றைய கட்டுக்கரைக் குள அகழாய்வுப் பகுதியில் நாம் காண்கிறோம். அதன் பெயரை இன்று நமக்கு அறியக்கூடவில்லை. ஒருவேளை மகாவம்சம் கூறும் சிறீசவத்துவோ பாண்டிய வாசநகரியோ உபதீசனூராகவோ கூட அது இருக்கலாம்.

சரி, சோழர்களுக்கும் அநுராதபுரிக்குமான தொடர்பு என்ன? சோழர்கள் ஏன் அநுராதபுரத்தை விடுத்து பொலனறுவையைத் தங்கள் தலைநகராக்கிக் கொண்டார்கள்? சோழர்களின் ஈழம் மீதான திடீர்க் கரிசனைக்குக் காரணம் என்ன? அல்லது இராசராச சோழனுக்கு முன்பு யாரேனும் சோழர்கள் இலங்கை மீது தங்கள் கழுகுப் பார்வையைப் பதிய விட்டிருக்கிறார்களா? நம் இன்றைய அரசியல் களத்தில் சூடுதணியாதிருக்கும் தமிழ் - சிங்கள இன முரண்பாட்டிற்கான மூலவேரில் சோழருக்குத் தொடர்பிருக்கிறதா? பார்க்கலாம், வாருங்கள்.



thulanchanan.v@thaiveedu.com


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள் : 21 ஜூலை (வெள்ளிக்கிழமை 2023 )
நேரம் : இரவு 8:00 – 10:00 மணி ( கனடா ரொறன்ரோ)
நாள் : 22 ஜூலை (சனிக்கிழமை 2023 )
நேரம் : காலை 1:00 – 2:00 மணி ( இலண்டன் )
காலை 5:30 – 7:30 மணி(இலங்கை, இந்திய )
காலை 10:00 – 1:00 மணி (அவுஸ்திரேலியா சிட்னி )
"நவீன தமிழ் ஆய்முறையியலில் ஜீ. யு. போப் அவர்களின்
சிந்தனையின் விளைபயனும் விசைப்பயனும்"
(The Impact and Influence of the Thoughts of G. U. Pope
on Modern Tamil Research Methodology)
பேசுபவர்: பேராசிரியர் அமுது ஜோசப் சந்திரகாந்தன்
Zoom ID: 84777257162 Passcode: 554268


ரொறன்ரோ தமிழ்ச் சங்கம்
நடத்தும்
இணையவழிக் கலந்துரையாடல்
நாள் : 07 ஜூலை (வெள்ளிக்கிழமை 2023 )
நேரம் : இரவு 8:30 – 10:30 மணி ( கனடா ரொறன்ரோ)
நாள் : 08 ஜூலை (சனிக்கிழமை 2023 )
நேரம் : காலை 1:30 – 2:30 மணி ( இலண்டன் )
காலை 6:00 – 8:00 மணி(இலங்கை, இந்திய )
காலை 10:30 – 12:30 மணி(அவுஸ்திரேலியா சிட்னி )
"சூடிக்கொடுத்த சுடர்க்கொடி"
பேசுபவர்: பேராசிரியர் கு. வெ. பாலசுப்பிரமணியன்
Zoom ID: 84777257162 Passcode: 554268



# மரக்குதிரை

- த. ஜீவராஜ்

ஓவியம் : டிராட்ஸ்கி மருது

09

காதைக் கூர்மையாக்கிக் கொண்ட குருவும், சிஷ்யையும் பறையொலி நெருங்கி வருவதைப் புரிந்து கொண்டனர். கந்தளாய்க் குள வேள்விக்காக மாடு பிடிக்கச் சென்ற மறிகாரர்கள் தான் ஊர் திரும்பி வருகிறார்கள் என்பதை உணர்த்துவதாக அந்தப் பறையொலி இருந்தது. தனது தந்தை கேசவன் வீடு திரும்பி வருகிறான் என்ற ஆனந்தம் ஆதினியின் முகம் முழுக்க மகிழ்ச்சி ரேகைகளைப் படரச் செய்தது. அதற்கு மாறாக அறிவாட்டியின் முகத்தில் சிந்தனை ரேகைகள் படரத் தொடங்கின.

அப்பா வரப் போகிறார் பாட்டி. என்ன யோசனை உங்களுக்கு? என்று உற்சாகத்தோடு கேட்டாள் ஆதினி.

வழக்கமாக மழை வாறத்துக்கு முதலில மறிகாரர்கள் வந்து வேள்வியில கலந்திடுவாங்க இந்த முறை எல்லாம் மாறி நடக்குது அதுதான் யோசிக்கிறன் என்றாள் அறிவாட்டி. அறிவாட்டியின் பேச்சை ஆதினி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. ஆனந்தமாக மழை வேண்டி ஆடிப் பாடியதற்கு மாறாக உடனடியாக மழையை நிறுத்தச் சொல்லி கண் மூடி தன் கண்ணபெருமானிடம் கெஞ்சி மன்றாடிக் கொண்டிருந்தாள். தனது வேண்டுதல் உடனடியாக கண்ணபிரானிடம் சென்றடைந்து விட்டது என்பதற்கு அறிகுறியாக மழை சிறிது சிறிதாக குறையத் தொடங்கியிருக்கிறது என நினைத்து ஆதினி பூரிப்படைந்தாள்.

ஊருக்குள்ள வந்ததும் அப்பாவ எங்க முதல்ல பார்க்கலாம் பாட்டி?. என்று ஆர்வத்துடன் கேட்டாள் ஆதினி. காட்டுல இருந்து உயிராபத்து ஏதும் இல்லாம திரும்பி வந்ததற்காக இடைச்சேரி வதனமார் திடலிலதான் எல்லோரும் ஒன்று கூடுவாங்க. அங்கு இருக்கிற வதனமார் சாமிக்கு படையல் வச்சு நன்றி தெரிவிப்பாங்க. இந்த மாலை பட்ட நேரத்தில நீ அவ்வளவு தூரம் போகேலாது கொஞ்சம் பொறுமையா இரு என்றாள் சிரித்தவாறே அறிவாட்டி.


ஆர்வத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் தத்தளித்துக் கொண்டிருந்த ஆதினி மழை தூறலாக மாறியதும் அறிவாட்டியை வற்புறுத்தி இழுத்துக் கொண்டு தெருவில் நடக்க ஆரம்பித்தாள். அவர்கள் எதிர்பார்த்தது போல மழையும், மழை வேண்டி மாடு பிடிக்க காட்டுக்குள் போன மறிகாரர்கள் திரும்பி வருவதும் ஊர் முழுக்க ஒரு புது உற்சாகத்தை உருவாக்கி இருந்தது. தெருவெல்லாம் கூடி இருந்தவர்களின் முகங்களில் அவை தெளிவாகத் தெரிந்தது.

பாருங்க பாட்டி ஊரே சந்தோசமா இருக்குது. நீங்க மட்டும் தான் யோசிச்சிட்டு வாறீங்க என்றாள் ஆதினி. அதற்குப் பதிலளிக்க அறிவாட்டி முற்பட்ட சமயம் பாட்டி சேதி தெரியுமா? என்று கூவியபடி அவர்களை நோக்கி ஓடி வந்தாள் பத்மாவதி. ஓடி வந்த வேகத்தில் மூச்சிரைத்த பத்மாவதி ஆதினியைப் பார்த்தபடி மௌனமாக நின்றாள். என்ன பத்மா நீ ஓடிவந்த வேகத்தப் பார்த்து ஏதோ பெரிய சேதி சொல்லப் போறா எண்டு நினைச்சன். வாயடைச்சுப்போய் நிக்கிற? என்று அறிவாட்டி கேட்டாள்.

மறிகாறர் ஒருத்தர் காட்டில யானை துரத்தி விழுந்திட்டாராம். அது தான் காட்டில இருந்து அவங்க வரத் தாமதமானதாம் என்று இழுத்தபடி சொன்னாள் பத்மாவதி. யாரக்கா விழுந்தது என்று அதிர்ச்சியாகிக் கேட்டாள் ஆதினி. அதுதான் மகள் தெரியல. மறிகாரர் வந்தாத்தான் தெரியும் என்றபடி ஆதினியின் தலையை வருடிவிட்டாள் பத்மாவதி. காயம் கடுமையானதா என்று வினாவினாள் அறிவாட்டி. ஆமாம் பாட்டி கந்தளாய் வீரசோழன் ஆதுரர் சாலையில வைத்து மருத்துவம் பார்க்கிறார்களாம் என்றாள் பத்மாவதி. அப்ப நான் நினைச்சது சரி என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் அறிவாட்டி.

இத்தனை விபரமாக காட்டில் மறிகாரர் விழுந்த விடயம் தெரிந்திருக்கும் பத்மாவதிக்கு எப்படி அவர் யார் என்பது தெரியாமல் போனது என்ற கேள்வி ஆதினியின் மனதிற்குள் எழுந்தது. எனினும் பெரியவர்களின் உரையாடலுக்குள் குறுக்கிட்டு அதைக் கேட்பதற்கு அவளுக்கு தயக்கமாக இருந்தது. மறிகாரர் ஒன்பது நாட்களுக்கு முன்னமே குழுமாடு பிடித்து விட்டார்களாம். ஆனால் காயப்பட்டவரைக் கொண்டுவந்து சேர்க்கத் தாமதமானதால் நேற்று மாலைதான் கந்தளாய் வந்து சேர்ந்தார்களாம், இரவுப் பூசையில் தலைக்கொரு பானை வைத்து கட்டாடியார் தலைமையில் வேள்வியை நிறைவு செய்தார்களாம் என்று பத்மாவதி தான் அறிந்தவற்றை அறிவாட்டியிடம் விபரமாகச் சொல்லிக் கொண்டு வந்தாள்.

ஆதுரர் சாலையில் வைத்து மருத்துவம் பார்க்கிறார்கள் என்பதால் ஏதோ சிக்கலான விடயமாகத்தான் இருக்கும் என்பதை ஆதினி புரிந்து கொண்டாள். அவள் மனதில் இனம் புரியாத ஏதோ ஒரு பதட்டம் உருவாகியிருந்தது. என்னதான்



அனுபவசாலி என்றாலும் கேசவனின் வயதும், உடல் நிலையும் காட்டுப் பயணத்திற்கு உகந்ததல்ல என்ற எண்ணம் ஆதினிக்கு ஆரம்பம் முதலே இருந்தது. அத்துடன் கேசவன் பயணப்பட முடிவு செய்த நாளில் இருந்து வெளியில் யாரிடமும் சொல்லிப் புரியவைக்க முடியாத ஒருவித பயம் அடிக்கடி அவள் மனதில் எழுந்து உடலை உறைய வைத்தது ஆதினிக்கு மீளமீள ஞாபகத்திற்கு வந்து போனது. தன் தந்தை காட்டுக்குச் செல்லக் கூடாது என்பதற்காக அவள் மேற்கொண்ட கடின முயற்சியெல்லாம் பயனின்றிப்போய் கேசவன் காடு சென்றதன் பின் அன்று தோன்றிய மனப்பயம்

ஆதினி மனதில் நிரந்தரமாகக் குடியிருந்து விட்டது.

வீரசோழன் ஆதுரர் சாலை விடயத்தைக் கேட்டபின் ஆதினியின் நடையில் ஏற்பட்ட தடுமாற்றத்தைக் கண்டு ஆதினியின் மனநிலையை அறிவாட்டி புரிந்து கொண்டாள். அறிவாட்டியின் ஆறுதல்படுத்தும் வார்த்தைகளைக் கேட்டவாறே ஆதினி ஊரில் மக்கள் கூடிநின்ற பகுதியை வந்தடைந்தாள். பத்மாவதி இடையில் ஏதோ அவசர வேலையாக தன் வீட்டுக்குச் சென்றுவிட்டிருந்தாள்.

பரந்து விரிந்து கிளை பரப்பியிருந்த புளிய மரத்தின் கீழ் மழை நின்ற மாலை நேரத்து இருள் படர்வதை ஆங்காங்கே ஏற்றப்பட்டிருந்த தீப்பந்தங்கள் தடுத்துக்கொண்டிருந்தன. முன்னம் எங்கோ இருந்து உருட்டி வரப்பட்டிருந்த பெரிய மரக்குற்றி மேல் ஊர்த் தலைவர்கள் மூவர் அமர்ந்திருந்தனர். கூட்டத்தில் அறிவாட்டிக்குக் கிடைத்த வரவேற்பால் இலகுவாக ஆதினியால் முன் வரிசைக்கு வந்து சேர முடிந்தது. கந்தளாய் வேள்வியில் இருந்து சேதி கொண்டு வந்திருந்த வாசுதேவன் மாமா சொல்வதை ஊர்த் தலைவர்களும், கூடியிருந்த கூட்டமும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தது. வாசுதேவன் மாமா நல்ல கதைசொல்லி. ஆதினி மட்டுமல்ல அவருக்குச் சொந்தமில்லாத அனைவரும் அவரை வாசுதேவன் மாமா என்று தான் அழைப்பார்கள். ஓய்வு நேரங்களில் குழந்தைகளுக்கு கதை சொல்வது அவருடைய பொழுது போக்கு. அன்று கந்தளாயில் இருந்து ஊருக்கு அவர் தான் தகவல் கொண்டு வந்திருந்தார். அடுத்த நாள் காலை கந்தளாயிலிருந்து வரவிருக்கும் மறிகாரர்களை வரவேற்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான கூட்டம் அது என்பதை இடையிடையே பேசிய ஊர்த் தலைவர்களின் வார்த்தைகளில் இருந்து ஆதினி புரிந்து கொண்டாள்.

குழுமாடு பிடிக்கச் சென்ற மறிகாரர்கள் காட்டில் செய்த வீர தீரச் செயல்களை தன் கண்ணால் நேரில் கண்டவர் போல் வாசுதேவன் மாமா சொல்லிக்கொண்டிருந்தார். ஆதினிக்கு அதிலெல்லாம் கவனம் செல்லவில்லை. மனம் முழுக்க ஒரே குழப்பமாக இருந்தது. அப்போதுதான் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு உயிரற்ற பொருள்மீது ஆதினியின் முழுக் கவனமும் குவியலாயிற்று.

கைக்கு அடக்கமாகச் செய்யப்பட்ட மரக் குதிரையது. ஊர்த் தலைவர்களின் வலது பக்கத்தில் ஒரு சிறு வெள்ளைத் துணி மேல் வைக்கப்பட்டிருந்தது. குதிரைக்கு அருகில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த தீபத்தின் வெளிச்சம் அந்தச் சிறிய மரக் குதிரையைத் தெளிவாகப் பார்க்க உதவியது. மரத்தால் செய்யப்பட்ட அந்த குதிரையின் மீது ஏதோ ஒரு இலைச் சாறோ அல்லது எண்ணையோ தடவப்பட்டிருக்க வேண்டும். தீப்பந்த ஒளியைத் தெறிக்க விட்டு பார்ப்பவர் மனதை இலகுவாக கவரத்தக்கதாக இருந்தது அது. வாசுதேவன் மாமாவின் குரலுக்கு கூட்டமே கட்டுப்பட்டுக் கிடந்ததால் அந்தக் குதிரையை இரசித்துப் பார்க்கும் பாக்கியம் ஆதினிக்கு முழுமையாக கிடைத்தது. அது அவள் மனதில் எழுந்து அந்தரப்படுத்திக் கொண்டிருந்த ஒரு வித இனம் புரியாத பயத்தை மறைத்து ஆறுதல் தருவதாக இருந்தது.

சிறுவயதில் இது போன்ற மரச் சிற்பம் ஒன்றைச் செய்து தருமாறு கேசவனிடம் கேட்டு அடம்பிடித்தது ஆதினியின் ஞாபகத்துக்கு வந்தது. கேசவனின் தாய் அவனது மூன்றாவது வயதில் இறந்து போயிருக்கிறார். அதைத் தொடர்ந்து வந்த சில வருடங்களில் கேசவனின் தந்தை மறுமணம் புரிந்து கொண்டார். பெற்றோரின் ஆதரவு இல்லாது தனது பாட்டன் தயவில் வளர்ந்து வந்த கேசவன் சிறுவயதிலேயே கம்மாளச் சேரிக்கு கூலி வேலை செய்வதற்காகச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. பன்னிரு வருடங்கள் கம்மாளச் சேரியில் வேலை செய்த அனுபவம் பற்றி ஒரு முறை ஆதினியிடம் கேசவன் விரிவாகச் சொல்லியிருந்தான். மரத்தால் செய்யப்பட்ட விலங்குச் சிற்பங்கள் பற்றி அவன் சிலாகித்துச் சொல்லி வந்த போது தன் வாழ்வில் நேரில் கண்டிராத குதிரைச் சிற்பம் ஒன்றைச் செய்து தருமாறு ஆதினி அவனிடம் வேண்டிக் கொண்டாள். ஆனால் துரதிஷ்டவசமாக அது சாத்தியப்படாமலேயே போய்விட்டிருந்தது. பலமுறை சித்திரமாக குதிரையைக் கண்ட போதும் சிற்பமாக பார்க்கும் பாக்கியம் ஆதினிக்கு இப்போதுதான் வாய்த்திருக்கிறது.

இம்முறை பெரிய வதனமாராக காட்டிற்குச் சென்ற கேசவனைப் பற்றி வாசுதேவன் மாமா சொல்லத் தொடங்கியபோது தான் அவர் பக்கம் ஆதினியின் கவனம் திரும்பியது. அதற்கு முன் நடந்த கந்தளாய் வேள்விகளில் அவன் செய்த வீர தீரச் செயல்களைச் சொல்லி ஆதினியின் மனதில் பெருமித உணர்வை உணரச் செய்தார் வாசுதேவன் மாமா. இம்முறை காட்டில் நடந்தவற்றைச் சொல்ல வாசுதேவன் மாமா எத்தணித்த சமயம் அறிவாட்டிப் பாட்டி பலமாகச் செருமினாள். அப்போதுதான் அவளைக் கண்டு கொண்ட வாசுதேவன் மாமா அறிவாட்டிப் பாட்டியை பார்த்துப் புன்னகைத்தவாறே கைகளால் வணக்கம் வைத்தார். அறிவாட்டியின் அருகில் நின்ற ஆதினியைக் கூர்ந்து பார்க்க அவர் கண்கள் தவறவில்லை.

மழை வேண்டிய பூசையில் நாட்டு நன்மைக்காக அர்ப்பணிப்புடன் பாடுபட்ட கேசவன் அவரது ஆசை மகளுக்கு கொடுத்தனுப்பிய பரிசுப் பொருளை வழங்க இருப்பதாக வாசுதேவன் மாமா அறிவித்தார். ஊர்த் தலைவர்கள் எழுந்து நின்றனர். வெள்ளைத் துணிமேல் வைக்கப்பட்டிருந்த மரக் குதிரைச் சிற்பத்தை அவர்களில் ஒருவர் கையில் ஏந்தி இருந்தார். அறிவாட்டியும், அருகில் இருந்த ஊரவர்களும் உந்தித்தள்ள ஆதினி பயபக்தியுடன் தான் ஆசைப்பட்ட அந்த மரக் குதிரைச் சிற்பத்தைப் பெற்றுக் கொண்டாள். சிறு வயதில் தான் ஆசைப்பட்ட மரச் சிற்பத்தை தானே நேரில் கொண்டு வந்து தராமல் ஏன் தன் தந்தை வாசுதேவன் மாமாவிடம் கொடுத்து அனுப்பினார் என்ற கேள்வி ஆதினியின் மனதை குடைந்து கொண்டே இருந்தது.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com

# தமிழ் நாட்டார் கதைகளில் கதையாடல், எதிர்க் கதையாடல் மரபு

## (Folktale: Narrative / Counter Narrative Tradition)

– வே. நரேஷ்

### முன்னுரை:

மக்கள் மத்தியில் வாய்மொழியாகப் பல கதைகள் காணப் படுகின்றன. அவற்றை மக்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுப்பதன் வழியாகச் சமூகம் குறித்த ஒரு வகைப் புரிதலை அவர்களுக்கு ஏற்படுத்த முயற்சி செய்கின்றனர். எந்தச் செயலைச் செய்ய வேண்டும் எந்தச் செயலைச் செய்யக் கூடாது என்பதையும், அவ்வாறு செய்யக் கூடாத செயலைச் செய்தால் கிடைக்கும் தண்டனைகளையும் கதையின் வாயிலாகக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுப்பார்கள். இந்த செய்யக் கூடிய அல்லது செய்யக் கூடாத செயல் என்பது சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது வரையறுக் கப்பட்ட ஒன்றாக இருக்கும். வாய்மொழியாக இருக்கும் கதைகள் வெறும் பொழுது போக்குக் கதைகள் மட்டும் அல்ல அவை சமூகத்தின் நிலை, விழுமியங்கள், ஆசை, எதிர்பார்ப்பு, தேவை என்று அனைத்தையும் தன்னகத்தில் வைத்திருக்கும். ஒரு கதை ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றுவதற்கு அது காரணமாக இருக்கும். காலத்தைக் கடந்து நிற்கும் இந்த வாய்மொழிக் கதைகளுக்கு ஆசிரியர் ஒருவர் கிடையாது. ஒவ்வொரு கதை சொல்லியும் இந்த கதைகளைக் கூறும் பொழுது அவர் ஓர் ஆசிரியராகிறார். ஏனென்றால் அவர் அங்கிருக்கும் பார்வையாளர்களுக்கு ஏற்றார் போல் அந்தக் கதைகளை நீட்டியும் சுருக்கியும் புதிய கூறுகளையும் சேர்த்துக் கூறுகிறார். இதனால் இக்கதைகளுக்குக் காலத்தைக் கடந்து பல ஆசிரியர்கள் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் காலத்தில் தங்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியதைக் கதையில் ஒரு கூறாகச் சேர்த்திருப்பர். இன்று நமக்கு கிடைக்கும் வாய்மொழிக் கதையில்கூட இத்தன்மையைப் பார்க்கலாம். அதில் ஆவி வழிபாடு, நாட்டார் வழிபாடு, ஆகமவிதிக்குட்பட்ட வழிபாடு வரை அனைத்தும் காணப்படுகின்றன. இக்கட்டுரை தமிழ் வாய்மொழிக் கதைகளான ரோசமுள்ள இராஜா மகள், சொரக் குடுக்கை, மொடவாண்டி கதை, கம்பளத்து நாயக்கர், ரிசியின் உயிர் நிலை, செவ்வந்தியம்மா, எட்டுபொண் டாட்டி இராஜா கதை, குடுக்கிறதைக் குடுத்தா கதை ஆகிய கதைகளில் பெண்களைப் பற்றிய சித்திரிப்புகள் எவ்வாறு காணப்படுகிறது என்பதையும் திருமணம், குடும்பம் குறித்து பெண்மையக் கதைகளிலும் ஆண்மைக்கதைகளிலும் காணப் படும் கதையாடல் எதிர் கதையாடல் பண்புகளையும் ஒப் பிட்டு விளக்குவதாக அமைகிறது.

> ஓர் அதிகாரம் மக்களுக்கு
> எதிராகத் திரும்பும் பொழுது
> அதற்கு எதிரான கலகக்
> குரல்கள் காலம் காலமாக
> உருவாகிக்கொண்டே
> இருக்கிறது.
> சில நேரங்களில்
> பெரும் மரபுகள் இத்தகைய
> கலகக் குரல்களைப்
> பிற்காலத்தில் தனக்குள்
> உள்வாங்கிக்கொள்ளும்
> செயலையும் காணமுடியும்.

### எதிர் கதையாடல் மரபு:

அதிகாரமையம் அதிகாரப் படிநிலை கொண்ட ஒற்றைப் பண்பாட்டைக் கட்டமைக்க முயற்சி செய்யும் பொழுது அதை கேள்வி கேட்கும் எதிர் கதையாடல் மரபு தோன்றுகின்றது. இதற்குச் சிறந்த சான்றுகளாகக் கத்தோலிக்க ஆதிக்கத்திற்கு எதிராக வந்த புரோட்டஸ்டண்ட் மற்றும் அய்யா வைகுண்டர், நாராயணகுரு, வள்ளலார், இராமானுஜர் ஆகியவர்கள் பின்பற்றிய வழிபாட்டு முறையைக் குறிப்பிடலாம்.

இதே போன்று நாட்டார் வழிப்பாட்டு மரபிலும் எதிர் கதையா டல் என்பது காணப்படுகின்றன. பெருமாள் சைவ கடவுளாக ஆகம மரபில் இருக்கிறார். நாட்டார் மரபில் அவர் அசை வக் கடவுளாக இருக்கிறார். ஆ.கா. பெருமாள் நாஞ்சில் பகு தியில் காணப்படும் சில பெருமாள் கோவில்களில் ஆடு களை பலியிடுவதாகக் கூறுவது இவ்விடத்தில் நோக்கத்தக் கது.

அதிகாரம் சார்ந்த அல்லது பெருவழக்காகக் கட்டமைக்கப் பட்ட ஒரு கதையாடலின் அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கு தல் அல்லது அதற்கு மாற்றான ஒரு கதையாடலை முன் வைத்தல் எதிர் கதையாடல் என்று வரையறுக்கப்படுகிறது. இக்கட்டுரை தமிழ் வாய்மொழிக் கதைகளில் பெண்களைப் பற்றிய கதையாடல் எவ்வாறு கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அதற்கு எதிரான கதையாடல் எவ்வாறு கட்ட மைக்கப்பட்டிருக்கின்றன என்பதை ஆராய்கிறது. தமிழ்ச் சமூகத்தில் எதிர் கதையாடல் மரபு என்பது தொடர்ந்து வரக் கூடிய பழைமையான மரபுகளில் ஒன்றாகக் கூறலாம்.

ஓர் அதிகாரம் மக்களுக்கு எதிராகத் திரும்பும் பொழுது அதற்கு எதிரான கலகக் குரல்கள் காலம் காலமாக உருவா கிக்கொண்டே இருக்கிறது. சில நேரங்களில் பெரும் மரபுகள் இத்தகைய கலகக் குரல்களைப் பிற்காலத்தில் தனக்குள் உள்வாங்கிக்கொள்ளும் செயலையும் காணமுடியும்.

பெண்கள் மீது நடத்தப்படும் ஆணாதிக்க அடக்குமுறைக்கு எதிராக உருவான எதிர் கதையாடல் மரபை பற்றியே இங்கு விவாதிக்கப்படுகிறது. வாய்மொழிக் கதைகளில் பெரும்பான் மையான கதைகளில் ஆண்களின் சமூகப் பார்வை பிரதிப லிப்பதாக இருக்கிறது. இக்கதைகளில் பெண்கள் இரண்டாம் நிலையினராகவே இருக்கின்றனர். இந்தக் கதையில் பெண் கள் கணவனுக்கு, தந்தைக்கு, சகோதரர்களுக்குக் கட்டுப்பட் டவளாகவும் அவர்கள் எடுக்கும் முடிவை ஏற்றுக் கொண்டு நடப்பவளாகவும் இருக்கிறார்கள். இந்தக் கட்டுரைக்கு விவா திக்கப்படும் புத்தி கெட்ட இராஜா நவரத்தினப் பெண், கொடுக்கிறதைக் கொடுத்த கதை, எட்டுப் பொண்டாட்டி இராஜா கதை, கம்பளத்து நாயக்கர் கதை, ரிசியின் உயிர் நிலை கதை, செவ்வந்தியம்மா ஆகிய கதைகளில் பெண் கள் ஆண்களைச் சார்ந்து இருக்கின்றனர். பெண்கள் ஆண் களின் உத்தரவுகளுக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்க வேண்டும், அவர்கள் அதை மீறும் பொழுது அவர்களுக்குத் தண்டனை கிடைக்கின்றது. படிதாண்ட கூடாது, பத்தினி, எதிர்த்து பேசக்கூடாது, கணவன் இரண்டாவது திருமணம் செய்து கொண்டாலும் ஏற்றுக்கொள்ள வேண்டும், மனைவி கணவனை எதிர்க்காமல் அவன் கொடுக்கும் தண்டனையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் இக்கதைகளில் பெண் கதாபாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டி ருக்கின்றன. இக்கதைகள் ஆண்களுத்தான் உலக அறிவு இருப்பதாகவும் பெண்களுக்கு உலகத்தைப் பற்றி எந்தவி தப் புரிதலும், அறிவும் இல்லாதது போன்று கூறுகின்றனர். ஆண்கள் வலிமையானவர்களாகவும் நாட்டை ஆட்சி செய்ப வர்களாகவும் காட்டும் கதைகள் பெண்களை வலிமையாற்ற வர்களாவும் வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டு குழந் தைகளை வளர்ப்பவர்களாகவும் சித்திரித்திருக்கின்றனர். இக் கதையாடல் சமூகத்தில் இருக்கும் அதிகார மரபின் கதை யாடலாகக் கொள்ளலாம். ரோசக்கார இராஜா மகள், சொரைக் குடுக்கை, எலுமிச்சைபழக் கதை ஆகிய கதை களை மேற்கண்ட கதைகளுக்கு மாற்றான எதிர் கதையாட லாகக் கூறலாம். இக்கதைகளில் பெண்கள் யாருக்கும் கட் டுப்பட்டவர்களாக இல்லாமல் தங்களின் வாழ்க்கை குறித்த முடிவுகளை தாங்களே எடுக்கின்றனர். ஆண்களின் சமூக நிலையை மாற்றுபவர்களாக பெண்களே இருக்கின்றனர். இக் கதைகள் பெண்களை வலிமையானவர்களாகவும் உலக அறிவு உடையவர்களாகவும் காட்டுகின்றனர். இக்கதைகளில் ஆண்கள் உலக அறிவு இல்லாதவர்களாகவும் ஒவ்வொரு செயலைச் செய்து முடிப்பதற்கும் அடுத்தவர்களைச் சார்ந்து இருப்பவனாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த இரண்டு வகையான வாய்மொழிக் கதைகளும் ஒரு சமூகத்தில் உள்ள வாய்மொழிக் கதைகளில் கதையாடல் எதிர் கதையா டல் கட்டமைக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்குகிறது.

## வாய்மொழிக் கதைகள்:

புதுவை வட்டார நாட்டுப்புறக் கதைகள் என்ற தொகுப்பு நூலில் கி. ராஜநாராயணனும், சிலம்பு நா. செல்வராசும் நாட்டார் கதைகளின் பயன்பாடு பற்றிப் பின்வருமாறு கூறு கின்றனர்:

- அனைத்து தரத்து மக்களின் வாழ்வியலை விளக்குவதாக நாட்டார் கதைகள் அமைந்துள்ளன.
- ஒரு சமூகத்தின் சமூக மதிப்புகளை விளக்குவதாகவோ அல்லது நியாயப்படுத்துவதாகவோ கதைகள் இருப்பதால் அக்கதைகளின் வழிச் சமூக மதிப்புகளை ஆராயப் பெரி தும் இடம் உண்டு.
- காலந்தோறும் மாறிவந்த பண்பாட்டுக் கூறுகளையும் கதைகள் பெற்று விளங்குவதால் சமூக வரலாற்றை ஆராய நாட்டார் கதைகள் பெரிதும் துணை செய்யும்.
- பண்பாட்டுக் கூறுகளின் மீட்டுருவாக்கத்தை நாட்டார் கதைகள் இன்றி முழுமையாகச் செய்தல் இயலாது.
- பண்பாட்டுக் கலப்புள்ள ஒரு சமூகத்தின் மூலப் பண்பாட் டுக் கூறுகளை நாட்டார் கதைகளே மிகுதியும் விளக்குவன வாக உள்ளன.(2012: 20)

லிண்டா டே நாட்டார் கதைகள் & சமூகம்(ஹங்கேரி விவ சாய சமூகத்தின் கதை சொல்லல் மரபு) என்ற நூலில் நாட் டார் கதைகள் நிலவுடைமை சமூகத்தின் சமூக விழுமியங் கள், பண்பாட்டு நடத்தை முறைகள், ஆசை, எதிர்ப்பு, அதி காரம் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. நவீன சமூகம், தொழில்நுட்பம் சார்ந்த கருத்துகள் நாட்டார் கதைகளில் கலந்த பின்பும் அவற்றின் நிலவுடைமை சார்ந்த கூறுகளை முழுவதுமாக மாறவில்லை என்கிறார்.(1989: 70-71)

இக்கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட கதையில் திருமணம், குடும்ப அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஆண்கள் பெண்கள் மீது செலுத்தும் அதிகாரத்தை வலியுறுத்துவதாக ஆண்மையக் கதைகளும் ஆண்களின் இத்தகைய அதிகா ரத்தைத் தலைகீழாக்குவதாக பெண்மையக் கதைகளும் அமைந்துள்ளன. இங்கு ஆண்மைய, பெண்மையக் கதை கள் [1] என்பது முதன்மை கதாப்பாத்திரத்தை அடிப்படை யாகக் கொண்டு பிரிக்கப்பட்டிருக்கிறது. பெண்களை

முதன்மை கதாபாத்திரமாகக் கொண்டு அவர்களைச் சுற்றிக் கதையின் இயக்கம் இருந்தால் அவற்றை பெண்மையக் கதைகள் என்று கூறலாம். ஆண்களை முதன்மைக் கதாபாதி ரமாகக் கொண்டு அவர்களைச் சுற்றி கதை இருந்தால் அவற்றை ஆண்மையக் கதைகள் என்று குறிப்பிடலாம்.

ஒவ்வொரு பண்பாட்டிலும் பல வாய்மொழி வழக்காறுகள் காணப்படுகின்றன. அவற்றை மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது கற்பனையானது, பொழுதுப் போக்கு என்ற தன்மை யிலே தெரியும். ஏனென்றால் அது பல பண்பாட்டு மாறுதல்க ளைத் தாண்டி பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு இந்த



நிலையை வந்து அடைந்திருக்கின்றன. விக்டர் டர்னர் நெடும்பு பழங்குடிகள் மத்தியில் நடத்திய சடங்கு பற்றிய ஆய்வை இதற்குச் சிறந்த சான்றாகக் கூறலாம். நெடும்பு பழங்குடிகள் மத்தியில் நடைபெறும் சடங்கு நிகழ்வை வெளி யிலிருந்து வரும் ஓர் ஆள் பார்க்கும் பொழுது அதில் உள்ளே மறைந்திருக்கும் சமூக, அரசியல், பாலியல், மருத் துவப் பின்னணியை புரிந்துக் கொள்ள முடியாது. விக்டர் டர் னர் அவர்களிடம் காணப்படும் இந்த சடங்கியல் நிகழ்வு என் பது குழந்தையின்மை என்பதற்கான மருத்துவத்திற்கான ஒன் றாகக் குறிப்பிடுகிறார்[2]. இந்த மருத்துவம் என்பது முன் னோர் ஆவி, சூனியக்காரி, இனக்குழுத் தலைவன் என்று மூன்று முறைகளுக்குள் மறைந்திருக்கிறது. இங்கு குறியீடு வழியாக அனைத்தும் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

## வாய்மொழிக் கதைகளில் திருமணம், குடும்ப அமைப்பு:

சமூக கட்டமைப்பின் முக்கிய அமைப்புகளில் ஒன்று திரும ணம், இதுதான் குடும்பம் என்ற அமைப்பு உருவாக அடிப்ப டையாக அமைகிறது. திருமணத்தின் மூலம் அமையும் இந் தக் குடும்ப அமைப்பு முறைதான் புதிதாகப் பிறக்கும் குழந் தைகளுக்குச் சமூக விழுமியம், கட்டுப்பாடு, பண்பாட்டு நடத்தை முறை, நம்பிக்கை ஆகியவற்றைக் கற்றுக்கொ டுத்து அவர்களைச் சமூகவயப்படுத்தும் இடமாக அமைகி றது. ஒரு சமூகத்தின் பண்பாட்டுக் கட்டமைப்பு என்பதின் தொடக்கம் குடும்பத்திலிருந்தே தொடங்குகிறது. இந்தக் குடும்ப அமைப்பு பெரும்பாலும் ஆண்மையச் சமூகத்தைப் பிரதிபலிப்பதாகவே இருக்கிறது. திருமணத்தின் போது, பரி மாறிக் கொள்ளப்படுபவர்களாகப் பெண்கள் இருக்கிறார்கள். இதை, பக்தவச்சல பாரதியின் பின்வரும் கூற்று உறுதிப்ப டுத்துகிறது. ‘சமூகத்தில் சரிபாதியாக விளங்கும் பெண்கள் திருமணம் வழி ஒரு கால்வழியிலிருந்து (குழுவிலிருந்து) இன்னொரு கால்வழிக்கு மாற்றப்படுகின்றனர்’ (2005: 112).

இரண்டு சமூகத்தின் பண்பாடு அல்லது இணக்கத்திற்கான பாலமாகவும் திருமண முறை இருந்துள்ளது. திருமண முறை ஒவ்வொரு பண்பாட்டிற்கும் மாறுபடும். தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் திருமண முறையாக பக்தவச்சல பாரதி பின்வ ரும் முறைகளைக் குறிப்பிடுகிறார்.

தமிழர்களின் மணவுறவில் நேர்நிலை விதிகள் (யாரைத் திரு மணம் செய்வது என்று வலியுறுத்துவது) செயல்படுகின்றன. இவ் விதிகள் உரிமை, முறை உறவு, முறை மணம், கொண்டு கொடுத்தல் என்னும் கருத்தாக்க நிலைகளில் விரும்பத்தக்க மண முறையை வலியுறுத்துகின்றன. தமிழர்க ளிடம் காணப்படும் விரும்பத்தக்க மணமுறை மூன்று நிலை களில் நிகழ்கின்றன.

- அக்கா மகளை மணப்பது.
- அத்தை மகளை மணப்பது.
- தாய்மாமன் மகளை மணப்பது.

இவற்றின் அடிப்படையில் இருவழி முறை மணம், தந்தை வழி முறை மணம், தாய்வழி முறை மணம் ஆகியவை தமிழ் மக்களிடம் இன்று காணப்படுகின்றன(2005:115-120).

திருமண முறையில் பரிசம், வரதட்சணை என்று இரண்டு முறைகள் காணப்படுகின்றன. திருமணத்தின் பொழுது ஆண் பெண் வீட்டாருக்குப் பொருள் கொடுத்துப் பெண்ணைக் கேட்பது பரிசம் எனப்படும். பெண் வீட்டார்கள் ஆண் வீட் டார்களுக்குப் பொருளையும் பெண்ணையும் கொடுப்பது என் பது வரதட்சணை ஆகும். வரதட்சணை, பரிசம் என்பது ஒரு குடும்பம் தன்னுடைய சமூக, பொருளாதார நிலையை மற்ற வர்களுக்கு வெளிக்காட்டும் ஒரு முறையாக இருக்கிறது. இனக்குழுச் சமூகத்தின் இனத்தின் நன்மை, இரண்டு குழுக் களுக்கிடையான இணக்கம் என்ற சமூக அடிப்படையிலி ருந்த திருமணமுறை பிற்காலத்தில் தனி மனிதர் மகிழ்ச்சி சார்ந்த விடயமாக மாறிவிட்டது.

சைப்ஸ் தேவதைக் கதைகளில் காணப்படும் திருமணம் பற்றி கூறுமிடத்து, அவை தனி மனிதர்களின் பொருளாதா ரம், சமூகநிலையை உயர்த்துவதாகவும், தனி மனிதர்களின்

மகிழ்ச்சி சார்ந்து காணப்படுவதாகவும் கூறுகிறார். இக்கதை களில் காணப்படும் குடும்ப அமைப்பு என்பது கூட்டுக் குடும்பமாக இல்லாமல் தனிக் குடும்பமாக இருப்பதாகக் குறிப்பிடுகிறார்(2014: 50).

அம்மாவுடைய அண்ணன், தம்பி(தாய்மாமன்) மகன்கள் மற் றும் அப்பாவுடைய அக்கா, தங்கை மகன்கள் பெண்ணை கட்டும் முறையுடையவர்களாக இருக்கின்றனர். திருமணம் செய்து கொடுக்கும் பொழுது பெண்வீட்டார்கள் மாப்பிள்ளை வீட்டாருக்கு வரதட்சணையாகப் பொருட்களைக் கொடுத்துள் ளனர். பெண்கள் தங்களின் பெற்றோர்களின் பேச்சைக் கேட் காமல் வேறு ஒருவரைத் திருமணம் செய்யும் பொழுது இந்த வரதட்சணை கொடுக்கப்படுவதில்லை. குடும்பம் எடுக்கும் முடிவினை ஏற்று நடப்பவள்தான் நல்ல பெண்ணென்றும், ஏற்று நடக்கவில்லை எனில் அவள் கெட்டவளென்றும் அடை யாளப்படுத்துகின்றனர். சமூக மரபை மீறும் இப் பெண்களுக் குச் சமூகத்தின் பண்பாட்டு அடிப்படையில் கொடுக்கப்படும் வரதட்சணை, உறவுகளுடன் உள்ள தொடர்பு ஆகியவை தடைசெய்யப்படுகின்றன. மொடவாண்டி கதையில் ராசாவின் மகள் தன் வாழ்க்கை குறித்து தன்னுடைய தந்தை, தாய் எடுக்கும் முடிவை ஏற்று அதன்படி நடக்கிறாள். அவள் தன் னுடைய ஆசையையோ எதிர்ப்பையோ வெளிப்படுத்த வில்லை. நடக்கமுடியாதவனைத் திருமணம் செய்து கொள் வது அவளின் விதி என்று ஏற்றுக்கொள்கிறாள். இந்த விதி என்ற கூறு இந்திய வாய்மொழிக் கதைகளில் காணப்படும் பொதுவான கூறாக ஏ.கே. இராமானுஜன் கூறுகிறார். இவர் பெண்கள் துன்பப்படுவதற்கான காரணமாக விதியை இந்தி யக் கதைகள் குறிப்பிடுவதாகக் குறிப்பிடுகிறார். முற்காலத் தில் தாங்கள் செய்த பாவத்தின் விழைவாகத் தான் தாங்கள் இப்பொழுது துன்பப்படுவதாகக் கூறுகின்றனர். இதற்குச் சான்றாகத் தமிழ், கன்னட மொழிகளில் காணப்படும் விலக் குப் பெண் கதையினைக் கூறுகிறார்(1991:34). இக்கட்டுரைக் காக எடுத்துக் கொண்ட செவ்வந்தியம்மா, மொடவாண்டி கதை, ஏழுபொண்டாட்டி இராஜா ஆகிய கதைகளிலும் அவர்கள் துன்பப்படுவதற்கான காரணமாக விதியைக் குறிப் பிடுகின்றனர்.

மொடவாண்டி கதையில் இளவரசி தங்களுடைய முடிவுக ளுக்கு உடன்பட்ட காரணத்தாலும் தங்கள் அனுமதியின்றி முடவனுக்கும் ராஜாவின் மகளுக்கும் நடைபெற்ற திருமணத் தைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொண்டு தங்களுடைய உடை மைகளை அவர்களுக்குக் கொடுக்கின்றனர். ஆனால், சொரக்குடுவை, ரோசமுள்ள ராசாமகள் கதைகளில் பெண் கள் தங்கள் பெற்றோர்கள் எடுக்கும் முடிவை ஏற்க மறுத்துத் தான் விரும்பியவர்களுடன் சென்றதாலும் தங்களின் சமூகப் பொருளாதார நிலையை விடக் குறைந்தவரைத் திருமணம் செய்துகொண்டதாலும் வரதட்சணை கொடுக்கப்படாமல் கட் டிய சேலையோடு செல்கின்றனர்.

மணமகனை தேர்ந்தெடுத்தல் என்பது சில கதைகளில் பெண் ணின் முடிவைச் சார்ந்து இருக்கிறது. சான்றாக செவ்வந்தி-யம்மா, சொரக்குடுவை, ரோசமுள்ள ராசாமகள் கதையைச் சொல்லலாம். செவ்வந்தியம்மா பாட்டியிடம் பின்வருமாறு கூறுகிறாள் ‘சரி நீ ஒன்னுங் கவலப்படாத, நாளைக்கி எனக் குப் பெறந்தநாளு. நிய்யி ஒம் பேரனையுங் கூட்டிக்கிட்டு அரம்மனைக்கி பூக்கொண்டு வரமாதிரி வா. வரும்போது ஒம் பேரன அரம்மனைக்கி பூக்கொண்டு வர்றமாதிரி வா. வரும் போது ஒம்பேரன அம்மனைக்கி அங்கிட்டு இருக்கச்சொல்லு; நா மாடியிலிருந்து ஒம்பேரனப் பாத்துகிறேன். எனக்கு புடிச்சி ருந்தா நான் கல்யாணம் முடிச்சுகிறேன். இல்லேனா வேணாம்முன்னு சொல்லீர்றேன்’ சொரக்குடுவை கதையில் போட்டியில் வெற்றி பெற்றவன் சமூக நிலையில் தன் குடும் பத்தை விடக் கீழ் நிலையிலிருந்த பொழுதும் கதையின் தலைவி தன்னுடைய விருப்பத்தின் அடிப்படையில் அனைவ ரின் எதிர்ப்பையும் மீறி தலைவனுடன் செல்கிறாள். ரோச முள்ள ராசாமகள் கதையில் இளவரசி தனக்குப் பிடித்தவனு டன் தன்னுடைய தந்தையின் எதிர்ப்பையும் மீறி திருமணம் செய்துகொள்கிறாள். இவற்றைக் கதையில் காணப்படும் தாய்வழிச் சமூகத்தின் எச்சமாகக் கருதலாம். இங்கு எடுத் துக்கொள்ளப்பட்ட மற்ற கதைகளில் ஆண்களே பெண்க ளைத் தேர்ந்தெடுப்பவர்களாக இருக்கின்றனர்.

மேற்கண்ட இரண்டு கதைகளிலும் பெற்றோர் மற்றும் சமூக எதிர்ப்பை மீறி திருமணம் செய்து கொள்பவர்கள் தொடக்கத் தில் துன்பம் நேர்வது போன்றும் பின்பு அவர்கள் மந்திர ஆற்றல் மூலம் அதிலிருந்து விடுதலையடைந்து மகிழ்வாக வாழ்வது போன்றும் காட்டப்படுகின்றன. இதன் வாயிலாகக் கதை இயற்றப்பட்ட காலகட்டத்தில் காதலித்து திருமணம் செய்து கொண்டவர்களைப் பெற்றோர்கள் ஏற்றுக்கொள்ளா மல் அவர்களுக்கு சமூகக் கடமைகள் அடிப்படையில் கொடுக்க வேண்டிய எதையும் கொடுக்காமலிருந்துள்ளதை அறிய முடிகிறது. இதனால் எந்தவிதப் பொருளாதாரப் பின் புலமும் இல்லாமல் புதிய குடும்ப வாழ்க்கையைத் தொடங் கும் பொழுது பெரிய அளவில் துன்பத்தைச் சந்திக்கின்றனர். சில நேரங்களில் இது அவர்களின் குடும்ப வாழ்க்கையின் மீது வெறுப்பையும் ஏற்படுத்துகிறது. இது சொரக்குடுவை கதையில் தெளிவாக வெளிப்படுகிறது - ‘ஏன்டா! நான் என்ன பாவம் பண்ணுனனோ ஆடுமேய்க்கிற ஒங்கப்பனக் கட்டிக் கிட்டு ஆத்துக்குப் போயி தண்ணி செமந்து கஷ்டப்படு றேன்’. திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஏற்படும் துன் பங்கள் பிள்ளைகளின் மூலம் தீர்ந்து போகிறது, மீண்டும் அவர்களை உறவினர்கள் ஏற்று கொள்கின்றனர். சான்றாக: செவ்வந்தியம்மா கதையில் அரண்மனை காவல் காத்துக் கொண்டிருந்த தன்னுடைய பையன்களால் செவ்வந்தியம்மா காப்பாற்றப்பட்டு அரசவைக்குக் கொண்டுவரப்படுகிறாள். அங்குப் பிரிந்து சென்ற தன்னுடைய கணவனைச் சந்திக்கி றாள். செவ்வந்தியம்மா கணவன் மீண்டும் அரசனாக மாறுகி றான் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். இதே போன்று சொரக்குடுவை கதையிலும் மகன் ஆற்றில் சென்ற சொரக்குடுவையை எடுக்கிறான். அந்தக் குடுவையிலிருந்து மாளிகை, செல்வம் எல்லாம் கிடைத்து அவர்களின் துன்பம் நீங்குகிறது. இதன்பின்பு மகனுக்கு அரசனாகப் பரிவட்டம் கட்டுகின்றனர். அப்பொழுது பெற்றோர்கள் தன்னுடைய பேர னுக்குப் பரிவட்டம் கட்டும் உரிமையை நிலைநாட்ட வருவ தாகக் கூறுகின்றனர்.

ரோசமுள்ள ராசாமகள் கதையில் தலைவன் வசதியற்றவனா கவும் சமூக நிலையில் கீழ் நிலையில் உள்ளவனாகவும் இருக்கிறான். திருமணம் செய்துகொண்ட பின்பு மனைவியின் (விறகுக் கட்டையிலிருந்து முத்து ரத்தினம் கிடைத்தல்) மூலம் வறுமை நீங்கி சமூக நிலையில் உயர்ந்த நிலைக்குச் செல்கிறான். இங்கு பெண் ஆணின் சமூக நிலையை

உயர்த்துபவளாக இருக்கிறாள். இக்கதையில் திருமணத் திற்கு முன்பு கதாநாயகன் சமூகத்தினால் மதிக்கப்படாதவ னாகவும் மக்கள் எள்ளி நகையாடக் கூடியவனாக இருக்கி றான். திருமணத்திற்குப் பின்பு கதாநாயகியினால் அவனு டைய நிலை மாறுகிறது. மக்கள் அவனை மரியாதையாக அழைக்கத் தொடங்கினர். இங்கு சமூக அங்கீகாரம் மதிப்பு என்பது ஒரு பெண்ணினால் தான் ஆணுக்குக் கிடைப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. சைப்ஸ் மேற்கத்திய நாடுகளில் காணப்படும் தேவதைக் கதைக்களைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது மேற்கத்திய நாடுகளில் காணப்படும் ப்யூட்டி அண்ட் பீஸ்ட் போன்ற கதைகளில் பெண்கள் மிருகமாக இருக்கும் ஆண்களை நாகரிகப்படுத்தி சமூகத்தின் ஒரு அங்கத்தினராக மாற்றுவதாகக் குறிப்பிடுகிறார். தமிழ்க் கதைகளிலும் அத்தகையத் தன்மையைப் பார்க்க முடிகின் றன. இதிலிருந்து மேற்கத்தியக் கதையில் காணப்படும் பெண்மையக் கதைகளிலும் தமிழ் பெண்மையக் கதைகளி லும் காணப்படும் பொதுமையான கூறாக இவற்றைக் குறிப் பிடலாம்.

முன்பு கூறிய இரண்டு கதைகளிலும் பெண்கள் தங்களின் திருமணத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததோடு தங்களுக்குக் கொடுக்க வேண்டிய வரதட்சணையும் கொடுக்காமல் கட்டிய சேலையுடன் அனுப்பிய பெற்றோர்களைச் சோதனை வைத்து ஏற்றுக்கொள்கின்றனர். ஆனால், ரோசமுள்ள ராசாமகள் கதையில் அவர்கள் வசதியானவுடன் காணவரும் பெற்றோரி டம் ‘அன்னைக்கி ஏம் புருசன் ஏழையின்னு சொல்லி என் னைய ஊரு எல்லையில விட்டுட்டுப் போனைங்கள இப்ப எதுக்கு வந்திங்க’ தன்னைவிட சமூக அதிகார நிலைக்கு முக்கியத்துவம் கொடுத்த பெற்றோர்களை ஏற்க மறுத்ததை இக்கதை வெளிப்படுத்துகிறது. இது குறியீடு வழியாக ஆணை மையப்படுத்திய குடும்ப அமைப்பையும் சமூக அமைப்பையும் ஏற்க மறுத்ததோடு அதை கேள்விக்குள்ளாக் குகிறது. இதை அதிகார தலைகீழாக்கம் அல்லது அதிகார மையத்தை சிதைக்கும் முறையாகக் குறிப்பிடலாம்.

இக்கதைகள் கட்டமைக்கும் சமூகத்தில் திருமணம் என்பது வயது வந்தோருக்கு இடையே நடைபெறுவது. சமூகத்தில் சமப் பொருளாதாரம் அல்லது அதிகாரப் படிநிலையில் இருப்பவர்கள் தங்களுக்குள் திருமண உறவு வைத்துக் கொள்ளுகின்றனர். திருமணத்திற்கு மணமகன் தேர்ந்தெடுப்பு என்பது போட்டி அடிப்படையில் நடைபெற்றுள்ளது. இப் போட்டிகளில் சமூக படிநிலையில் கீழ் இருப்பவர் பங்கு பெற்று வெற்றி கொண்டால் அவரின் சமூகப் பின்புலத்தை யும் பொருளாதாரப் பின்புலத்தையும் காரணமாகக் காட்டி பெண் கொடுக்க மறுக்கின்றனர். ரோரக்கார ராசாமகள் கதை யில் இதைத் தெளிவாகக் காணலாம்.

‘ஒங்க வசதிக்கும் எங்க வசதிக்கும் எட்டாது பொண்ணெல் லாம் தரமுடியாது போ’.

‘வாம்மா, வீடுவாசல் இல்லாத பயக்கிட்ட நீ எப்படிக் குடும் பம் நடத்துவ. வாம்மா நம்ம வீட்டுக்கே போயிறலாம்’.

தன்னைவிடப் படிநிலையில் கீழே உள்ளவர்களைப் பெண் கள் திருமணம் செய்துகொள்ளும் போது பெற்றோர்கள் அவர்களைப் பிரித்து தன்னுடன் கூட்டிச் செல்லுதல் என்பது தமிழ்ச் சமூகத்தில் காணப்படுகிறது. இத்தகைய கருத்தின் வெளிப்பாடாகத்தான் ரோசக்கார ராசாமகள் கதையின் மேற் கண்ட கூற்று அமைந்துள்ளது. இக்கருத்துக்கு வலுச்சேர்ப்ப தாக பக்தவச்சல பாரதியின் பின்வரும் கூற்று அமைந்துள் ளது. ‘குடுகுடுப்பை நாயக்கர் சமூகமானது தன் சமூகத் தூய் மையைக் காத்துக் கொள்வதில் கடுமையான முறையைக் கையாளுகிறது. தஞ்சை மாவட்டத்தில் கோபுராஜபுரத்தில் இச்சமூகப் பெண் வன்னியர் ஒருவரைக் காதலித்து ஓடிப் போய் திருமணம் செய்து கொண்டார். சமூக வழக்கப்படி பெரியவர்கள் அப் பெண்ணை மணவிலக்கு செய்து மீண்டும் தங்களுடன் வந்துவிடும்படி வலியுறுத்தினர். அவளும் இதற் குப் பணிந்து மணவிலக்கு செய்து விட்டாள். இருப்பினும் இவளுடைய இண்டி பேர் அன்று முதல் கொத்த(புதிய) என்ற முன்னொட்டுடன் அழைக்கப்பட்டது(2003: 147). தன் னைவிட அதிகார நிலையில் குறைந்தவர் என்று மணவிலக் குச் செய்யும்படி மகளிடம் வற்புறுத்தும் செயல் ரோசக்கார



ராசாமகள் கதையுடன் அப்படியே பொருந்துவதாக இருக்கி றது.

குடுக்குறது குடுத்தா கதையில் ஆண் அதிகாரம் சேவலின் வழியாக வெளிப்படுத்தப்படுகிறது. இக்கதையில் தலைமைக் கதாபாத்திரமான ஆணுக்கு விலங்குகளின் மொழி தெரியும். ஆனால் அதை அவன் யாரிடமாவது கூறினால் அவனுடைய தலை வெடித்துவிடும். ஒரு நாள் அவன் விலங்குகள் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டு சிரிக்கிறான். இதைப் பார்த்த மனைவி எதற்காகச் சிரிக்கிறீர்கள் என்று கேட்கிறாள். மனை வியிடம் கூறினால் தன்னுடைய தலை வெடித்து விடும் என்ப

தால் கணவன் தயங்கிக்கொண்டு நிற்கிறான். அப்பொழுது ஒரு சேவல் நாயிடம் பெரிய நிழக்கிழார் என்கிறான் தன்னுடைய மனைவியை எப்படி நடத்த வேண்டும் என்று தெரியாமல் இப்படி தலைவெடித்து சாகபோகிறான். நான் பார் தினமும் ஒரு பெண்ணுடன் இருந்துக் கொண்டு மகிழ்ச்சியாக இருக்கிறேன். புளியம் கம்பை எடுத்துக் கொடுக்கிற அடியில அவள் தன்னால நான் கேட்க மாட்டேன் கேட்க மாட்டேன் என்று சொல்லவைப்பானா அதவிட்டுட்டு சும்மா இருக்கிறான் என்று கூறும். இதைக் கேட்ட கணவனும் தன்னுடைய மனைவியை அடிப்பான் அவளும் இனிமே கணவனிடம் கேள்வி கேட்க மாட்டேன் என்று கூறுவாள். இக்கதையில் மனைவி கணவன் என்ன செய்தாலும் அவனைக் கேள்வி கேட்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதைக் காணமுடிகிறது. இக்கதையில் சேவல் ஆண் அதிகாரத்தின் குறியீடாகக் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. சேவல் பண்பு நலன் குறித்து நாட்டுக்கோழிப்பண்ணை உரிமையாளர் துரை நமச்சிவாயம் பின்வருமாறு குறிப்பிடுகிறார். சேவல் ஒரு நாளைக்குப் பதினெட்டு முறை பெட்டையோடு கூடும் அவ்வாறு கூடும்பொழுது பெட்டையின் மீது அது மிகுந்த அதிகாரத்தைச் செலுத்தும். இதனால் பெட்டைக் கோழிகள் பாதிப்படைந்து இறக்கவும் வாய்ப்புள்ளது அதனால் தான் பத்துப் பெட்டைக் கோழிக்கு ஒரு சேவல் என்ற கணக்கில் வைத்திருப்பதாக கூறுகிறார். மேலும், இந்த பத்துப் பெட்டைக் கோழிகளில் புதிதாக ஒரு பெட்டை கோழியை இணைக்கும் பொழுது புதிதாக அந்தக் கூட்டத்திற்கு வந்த பெட்டைக் கோழியை மிதித்த பின்புதான் மற்ற கோழியிடம் செல்லும் என்கிறார்.

இதன் அடிப்படையில் நோக்கும் பொழுது ஆண் பாலியல் செயல்பாட்டில் பெண்களை விட மிகுந்த வல்லமை வாய்ந்தவன் என்பதைக் காட்டுவதற்காகவும் எந்தப் பெண்ணையும் சார்ந்திருக்க வேண்டியது இல்லை, இவள் இல்லை என்றால் மற்றொருத்தி என்ற மனநிலையை மற்றும் பெண்ணின் மீது ஆணுக்கு இருக்கும் அதிகாரத்தைப் பிரதிபலிப்பதாகச் சேவல் என்ற குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கதையில் கணவனைக் கேள்வி கேட்டதால் கணவன் மனைவியை அடிக்கிறான். பெண்கள் ஆண்களைக் கேள்வி கேட்கக் கூடாது. அப்படிக் கேட்டால், அவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்பதை வலியுறுத்துவதாகவே இக்கதை அமைந்துள்ளது. ஆனால், இவற்றை நேரடியாகக் குறிப்பிடாமல் மறைமுகமாக சித்திரிக்கப்பட்டிருக்கிறது. மனைவி கேட்ட கேள்விக்குப் பதில் கூறினால் கணவனின் தலை வெடித்துவிடும் என்பதால் தான் அவன் தன்னுடைய மனைவியை அடித்தது போன்று சித்திரித்து அவனுடையச் செயல் நியாயம் கற்பித்திருக்கிறது.

ஆண்மையக் கதைகள் அனைத்திலும் பெண்கள் ஆண்களைச் சார்ந்து இருப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர். ஏழு பொண்டாட்டி ராஜா கதையில் இராஜாவின் மனைவிகள் ஆறுபேருக்கும் குழந்தை இல்லை அதனால் இராஜா ஏழாவதாக ஒரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அந்தப் பெண் வளர்த்த செடியில் கத்தரிக்காய் அதிகமாக விழைந்தது அதனால் தான் அந்த ஏழாவது பெண்ணை இராஜா திருமணம் செய்து கொண்டார். இங்கு இரண்டு விடயங்கள் நோக்கத் தக்கது. ஒன்று ஆறு பெண்களுக்கு குழந்தை இல்லை என்று கூறப்படுகிறது. அதற்குக் காரணமாகப் பெண்களைக் குறிப்பிடுகிறது. அதனால் தான் ஏழாவது மனைவிக்கு ஒன்பது குழந்தை பிறந்தாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இக்கதையை நாம் ஆண்மையக் கதையாகக் குறிப்பிடலாம். ஒரு ஆண் குழந்தை பெற்றெடுக்கத் தகுதி இல்லாதவன் என்பது அவனுடைய ஆண்மை (அதிகாரம்)க்கு எதிரான ஒரு விடையமாகப் பார்க்கிறான். ஆண்மையச் சமூகத்தில் ஆண்களின் அதிகாரம் என்பது அவனுடைய குழந்தை பெற்றெடுக்கும் தன்மையுடன் நோக்கப்படுகிறது. ஆண்கள் இரண்டாவது திருமணம் செய்து கொள்வது போன்று பெண்கள் இரண்டாவது திருமணம் செய்து கொள்வது என்று எந்த கதைகளிலும் சித்திரிக்கப்படவில்லை. பெண்கள் தன்னுடைய கணவன் எத்தனை திருமணம் செய்து கொண்டாலும் அதை அமைதியாக ஏற்றுக் கொள்பவர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். இக்கதை ஆண்கள் பல திருமணம் செய்துக் கொள்ளுதல் என்பதை சமூகச் செயல்பாட்டில் சாதாரண ஒரு விடயமாக மாற்றும் செயலைச் செய்கிறது. பெண்ணை வளமையின் குறியீடாக இனக்குழு சமூகம் தொட்டுத் தொடர்ந்து பார்த்து வருகிறது. அதன் வெளிப்பாடாகவே இக்கதையில் இராஜாவின் ஏழாவது மனைவி வளர்த்த செடியில் கத்திரிக்காய் நன்றாக விழைந்து கிடந்தது. இது அந்தப் பெண்ணின் குழந்தை பெற்றெடுக்கும் தன்மையைக் குறியீடு மூலம் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

தமிழ்ச் சமூகத்தில் ஒரு பெண் உத்தம பத்தினியாக இருந்தால் அவள் சொல்வது அனைத்தும் நடக்கும் என்ற ஒரு நம்பிக்கை காணப்படுகிறது. அதன் வெளிப்பாடாகவே கதையில் உத்தம பத்தினி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்ச் சமூகத்தில் கணவன் எத்தகையவனாக இருந்தாலும் அவனுக்குப் பணிசெய்து இருப்பதும், அவனைத் தவிர வேறு ஓர் ஆணினைக் கனவிலும் நினைக்காமல் அவனுக்காகக் காத்திருப்பதும் அவனுக்காக வாழ்க்கையைத் தியாகம் செய்வதும் உத்தம பத்தினிக்கான குணநலன்களாகக் கருதப்படுகின்றன.

கதையின் வாயிலாகக் கட்டமைக்கப்படும் உத்தம பத்தினி பெண்கள் தமிழ்ச் சமூகத்தில் காணப்படும் மேற்கண்ட கருத்தை ஒட்டியே அமைந்துள்ளது.

செவ்வந்தியம்மா கதையில் தண்ணீர் எடுக்கச் சென்ற கணவன் கழுத்தில் பட்டத்து யானை வந்து மாலை போட்டது. அதனால் அவரை ராஜா மகளுக்குத் திருமணம் செய்து கொடுப்பதற்காகக் கூட்டிச் செல்கிறார்கள். அவனும் இவளைக் குழந்தை பிறக்கும் தறுவாயில் தனியாக விட்டு விட்டுச் சென்றுவிட்டான். ஆனால் அவன் இளவரசியைத் திருமணம் செய்யாமல் செவ்வந்தியம்மாவை நினைத்துப் பித்துப் பிடித்தது மாதிரி இருந்தான். செவ்வந்தியம்மாவும் தன் கணவனை நினைத்துக் கொண்டு வாழ்ந்து வந்தாள். ஒரு நாள் ஒரு செட்டியார் அவளிடம் தவறாக நடந்துகொள்ள முயற்சி செய்கிறான் உடனே அவள் ஒரு பெட்டியின் உள்ளே சென்று நான் உத்தம பத்தினியாக இருந்தால் இந்த பெட்டி என் கணவன் வந்து திறக்காமல் திறக்கக் கூடாது என்று கூறுகிறாள். உடனே பெட்டி மூடிக்கொள்கிறது. எல்லோரும் வந்து திறக்க முயற்சி செய்கின்றனர். ஆனால், ஒருவராலும் திறக்க முடியவில்லை. அவளுடைய கணவன் வந்து தொட்டவுடன் பெட்டி திறக்கிறது. கர்ப்பமாக இருக்கும் பெண்ணை தனியாக விட்டுச் சென்ற பின்பு மனைவி அவன் மீது கோபம் கொள்ளாமல் இருக்கிறாள். எந்த ஒரு கடினமான சூழல் ஏற்

பட்ட போதும் தனது கணவனைத் தவிர வேறு ஆணை ஏற்றுக்கொள்ளாமல் இருக்கிறாள். தன்னுடைய கணவன் தன் முன்னரே வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளும் பொழுது அதை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு மகிழ்ச்சியாக வாழ்கிறாள். இங்கு கற்பு என்பது ஒரு மந்திர ஆற்றல் போல் செயல்படுகிறது. தன்னுடைய வறுமையைப் போக்க உதவாத இந்த மந்திர ஆற்றல் தன்னுடைய பாலியல் தூய்மையைப் பாதுகாப்பதற்காக மட்டும் பயன்படுத்தப்படுகிறது. இதை போன்று மந்திரவாதி படித்தாண்டும் பெண்ணை நாயாக மாற்றி செல்லும் கதை (கம்பளத்து நாயக்கர் கதை, ரிஷியின் உயிர் நிலை) இராஜா மகன் பாம்பின் மகளைத் திருமணம் செய்யும் கதை ஆகிய கதைகளில் பெண்கள் அவர்களுடைய கணவர்களிடமிருந்து சூழ்ச்சியினால் பிரிக்கப்பட்டிருந்தாலும் வேறு ஓர் ஆண் தன்னிடம் நெருங்கக் கூடாது என்பதற்காகத் தான் விரதம் இருப்பதாகக் கூறுவதாகக் கதைகளில் அமைந்திருக்கும் இது மேற்குறிப்பிட்ட பத்தினி, கற்பு என்பது பெண்களுக்கானது என்பதைத் தொடர்ந்து வலியுறுத்தும் தன்மையில் அமைந்துள்ளது. ஒரு பெண் தன்னுடைய உயிரைத் தியாகம் செய்தாவது தன்னுடைய கற்பை பேணி பாதுகாக்க வேண்டும். ஆனால், இத்தகையக் கட்டுப்பாடுகள் எதுவும் இல்லை. அவர்கள் எத்தனை பெண்களை வேண்டுமென்றாலும் திருமணம் செய்துக் கொள்ளலாம்.

## நாட்டார் கதைகளில் தண்டனை முறை:

பூக்கோ தண்டனையை இரண்டு வகையாகப் பிரிக்கிறார்.

- உடல்சார்ந்த தண்டனை
- உயிர் சார்ந்த தண்டனை.

முதல் வகை தண்டனை பொது வெளியில் நிகழ்த்தப்படுவது. இதில் மக்கள் பார்வையாளர்களாக இருப்பார்கள். இரண்டாம் வகைத் தண்டனை இரகசியமாக நிறைவேற்றப்படுவது. உடல் சார்ந்த தண்டனையில் உயிர் பிரிந்த பின்பும் உடலுக்குத் தொடர்ந்து தண்டனை கொடுக்கப்படுகிறது. சான்றாக இறந்தவரின் உடல் குதிரையில் கட்டி இழுத்துவரப்படுதல். பொதுவெளியில் இறந்த உடலைத் தொங்கவிடுதல். இரண்டாம் வகைத் தண்டனை என்பது அவர்களை ஒழுங்குபடுத்துதல் என்ற தன்மையில் அமைகிறது இங்கு உடல் சிதைக்கப்படுவதில்லை. உடலுக்கு எந்தவிதப் பாதிப்பும் ஏற்படாதவகையில் உயிரை மட்டும் உடலை விட்டுப் பிரித்து விடுகின்றனர். இத்தகைய தண்டனை அதிகாலையில் யாருக்கும் தெரியாமல் நான்கு சுற்றுக்குள் நிகழ்த்தப்படுவதாக இருக்கிறது. காலம் காலமாகத் தண்டனை என்பது அதிகார மையம் தன்னுடைய அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறது. தொடக்க காலத் தண்டனை முறை என்பது அவர்களுக்கு ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தி அவர்களை அதிகார வர்க்கத்தினால் கட்டமைக்கப்பட்ட பொதுச் சமூக விதிமுறைகளைப் பின்பற்ற வைத்தது. நவீன தண்டனை முறைகள் மக்களை தாங்கள் எப்பொழுதும் அதிகார மையத்தினால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறோம் என்ற உணர்வை ஏற்படுத்துவதன் வழியாக அவர்களுக்கு ஓர் அச்ச உணர்வை ஏற்படுத்தி ஒழுக்கமாக நடக்க வைக்கிறது. முதல் வகைத் தண்டனையில் குற்றவாளிக்குக் கொடுக்கப்படும் தண்டனையைப் பார்க்கும் மக்கள் மூன்று வகையில் தங்களின் உணர்வை வெளிப்படுத்துகின்றனர். ஒன்று தண்டனை கொடுக்கப்படுபவர் மீது இரக்கம் கொள்கின்றனர். அதைப் பார்த்து அச்சம் கொள்கின்றனர். அதன் மீது கோபம் கொள்கின்றனர்.

இங்கு தொடக்கக் காலத்தில் ஒழுக்கம் என்பது சமூகவயமாக்கல் என்பதை அடிப்படையாகக் கொண்டது இங்கு தாங்கள் கண்காணிக்கப்படுகிறோம் என்ற அச்ச உணர்வு இருக்காது அதற்குப் பதில் தாங்கள் குற்றம் செய்துவிட்டோம் அதை செய்தவருக்குக் குற்றவுணர்வை ஏற்படுத்தி அதை அடுத்த முறை செய்யவிடாமல் தடுக்கிறது. நவீன காலத்தில் சட்டங்கள் கண்காணிப்புகள் மூலம் ஒழுக்கம் என்பதைக் கட்டமைக்கின்றனர். இங்கு சுயக் குற்றவுணர்வு ஏற்படுவதில்லை. தன்னை யாரும் பார்க்கவில்லை என்று தெரிந்தால் அவர்கள் செய்யக்கூடாது என்று அதிகார வர்க்கத்தினால் வரையறுக்கப்பட்ட அந்தச் செயலை எந்தவிதக் குற்ற உணர்வும் இல்லாமல் செய்வார்கள்.

அரசு தன்னுடைய அதிகாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கு அரசின் கீழ் இருக்கக் கூடிய மக்கள் அனைவரும் அரசின் கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டு ஒழுக்கத்தோடு வாழ வேண்டும். அப்படி வாழவில்லை என்றால் அது அதிகார மையத்தைச் சிதைத்துவிடும். அதிகாரம் ஒழுக்கத்தின் வழியாகவும் கட்டுப்பாடுகள் வழியாகவும் தான் தன்னுடைய அதிகாரத்தை நிலை நிறுத்துகிறது. ஒழுக்கம் என்பது தற்போது அதிகாரமையத்தால் கட்டமைக்கப்படுகிறது. ஒழுக்கம் என்பதை அதிகார மையம் இரண்டு வகையில் கட்டமைக்கிறது. ஒன்று சமூகவயமாக்கல். அதில் பண்பாடு(சடங்கு), இலக்கியங்கள்(எழுத்து, வாய்மொழி). இரண்டாவது சட்டம், தண்டனை. முதலாவது முறையில் அதிகார மையம் மக்கள் மீது நேரடியாக எந்த அடக்குமுறையும் நிகழ்த்துவதில்லை இதைச் செய் செய்யாதே என்று கூறுவதும் இல்லை. அவர்கள் தவறு செய்கிறார்களா என்று கண்காணிப்பதும் இல்லை. சமூகவயமாக்கலில் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கிறோம் என்று தெரியாமலே அதிகாரத்திற்கு கட்டுப்படுகிறோம். இங்கு அந்த பொதுச் சமூக நிலையை மீறும் பொழுது அது நமக்குக் குற்றவுணர்வை ஏற்படுத்தி அடுத்த முறை அதைச் செய்யவிடாமல் தடுக்கிறது. அல்லது அதைக் குற்றமாக நம்மைக் கருத வைக்கிறது. இங்கு ஒழுக்கமாக நாம் நினைப்பது என்பது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் ஒரு குறிப்பிட்ட அதிகார மையத்தால் உருவாக்கப்பட்டதுதான். ஒரு காலத்தில் ஒழுக்கமாக இருந்தது மற்றொரு காலத்தில் ஒழுக்கமற்றதாக மாறலாம் ஒழுக்கமற்றது ஒழுக்கமாக மாறலாம். (தமிழ்ச் சமூகத்தில் கள் குடித்தல்). இரண்டாவது முறையில் ஒரு சட்டம் இயற்றி அதன் மூலம் சமூக ஒழுக்கத்தைக் கட்டமைத்தல். இங்கு இதை மீறி செயல்படுபவர்களுக்குத் தண்டனை கொடுக்கப்படுகிறது. இங்குக் கண்காணித்தல் என்பது ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்துதலில் இன்றியமையாததாக இருக்கிறது. தாங்கள் எப்பொழுதும் கண்காணிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறோம் என்பது மக்கள் மனதில் ஒருவித அழுத்தத்தை உண்டு பண்ணுகிறது. இது அவர்கள் மனதில் தாங்கள் என்ன செய்துகொண்டிருந்தாலும் தங்களை யாரோ பார்த்துக் கொண்டிருக்கிறார் என்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது. இந்த உணர்வு அவர்களைக் கட்டுப்பாட்டுடன் கூடிய வாழும் சூழலை உண்டு பண்ணுகிறது.

இது தொடரும் பொழுது கட்டுப்பாடுகளுக்குள் காலப்போக்கில் இயல்பானதாக மாறிவிடுகின்றனர். அதன் பின்பு அனைவரும் அதைப் பின்பற்றத் தொடங்குவார்கள். அதை ஒரு குறிப்பிட்ட அதிகார மையத்தின் செயற்பாட்டினால் தான் தனக்கு இத்தகைய ஒழுக்கமுறை வந்தது என்பதும் காலப்போக்கில் மறைந்துவிடும்.

## கட்டுப்பாடும் இயல்பாக்கமும்:

ஒரு காலத்தில் அல்லது ஒரு நேரத்தில் கட்டுப்பாடாகப் பார்க்கப்பட்டது பின்பு இயல்பான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. அதிகார மையம் அவர்களை அதற்குப் பழக்கப்படுத்தி விடுகிறது. இதில் இலக்கியங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இலக்கியங்கள் அதை யார் பயன்படுத்துகிறார்கள் என்பதைச் சார்ந்து இயங்கக் கூடியது. அதிகார மையம் சார்ந்து அவர்களின் கருத்துச் சார்ந்து இருக்கும் அடக்குமுறைக்கு எதிரான மக்கள் பயன்படுத்தும் அடக்குமுறைக்கு எதிரான கருத்தியல் சார்ந்ததாக இருக்கும். இது வாய்மொழிக் கதைகளுக்குப் பொருந்தும் பெண் கதாநாயகிகளை மையமிட்ட வாய்மொழி கதைகளுக்கும் ஆண்களைக் கதை நாயகர்களாகக் கொண்ட கதைகளில் இதைத் தெளிவாகக் காணமுடியும். முதல் வகைச் சமூக அடக்குமுறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் எதிராகக் கேள்வி கேட்பதாக இருக்கும். இரண்டாவது கதைகளில் பெண்கள் மீதான அடக்குமுறை சமூக ஒழுக்கம் என்ற பெயரில் வலியுறுத்தப்படும். இத்தகைய கருத்துகளைக் கொண்ட கதைகளைக் கேட்கும் குழந்தைக்கு இத்தகைய முறைதான் சரியானது என்ற எண்ணத்தை உருவாக்குகிறது. காலப்போக்கில் அந்தக் குழந்தைகளுக்கு அந்த கதை மறந்து போகலாம். அதை எங்கு யார் கூற கேட்டோம் என்பது கூட நினைவில் இருக்காது ஆனால் அந்தக் கதையின் வழியாகக் கடத்தப்பட்ட கருத்தியல் என்பது அந்தக் குழந்தைகளின் ஆழ்மனக் கிடக்கையில் பதிந்துவிடும். அது அவர்களுக்குத் தெரியாமலே அவர்களுடைய செயற்பாடுகளில் வெளிப்படும். இப்படிக் குழந்தைகளுக்கு இந்தக் கட்டுப்பாடுகள் இயல்பானதாகத் தெரியும். அதற்கு அடுத்த தலைமுறையினர் இதை கட்டுப்பாடாகக் கருதமாட்டார்கள். இப்படிப் பல சமூக அடக்குமுறை கருத்துக்கள் ஒழுக்கமாகவும் கட்டுப்பாடுகள் இயல்பானதாகவும் மாற்றப்பட்டிருக்கின்றன. இக்கதைகள் சமூகத்தில் காணப்படும் அதிகாரப் படிநிலைகளைச் சமூகத்தில் இயல்பாகக் காணப்படக் கூடிய ஓர் அமைப்பு முறையாகப் பார்க்கச் செய்வதோடு அதை ஏற்றுக்கொண்டு அவர்களைப் பழக்கப்படுத்துகிறது. இதன் மூலம் அதிகாரப் படிநிலைக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உள்ளுணர்வை இல்லாமல் செய்கிறது. இங்கு கதை குழந்தைகளின் கற்பனையையும் உள்ளுணர்வையும் கட்டுப்படுத்துகிறது. சைப்ஸ் மேற்கத்திய நாடுகளில் காணப்படும் தொடக்க காலத் தேவதை கதைகள் அனைத்தும் இந்த செயலை முதன்மையாகக் கொண்டு அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார். அவர்கள் குழந்தைகளின் கற்பனை ஆற்றலை அதிகப்படுத்தும் கதைகளின் வாயிலாகவே குழந்தைகளின் கற்பனைத் திறனை ஓர் எல்லைக்குள்ளே இருக்கும்படி செய்கின்றனர்.

மேற்கண்டவற்றின் அடிப்படையில் பார்க்கும் பொழுது ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட தமிழ்க் கதையில் தண்டனை என்பது பூக்கோ குறிப்பிடும் உடல் சார்ந்த தண்டனை முறையாகவே இருக்கிறது. அவை அனைத்தும் பொது வெளியில் நடத்தப்படுவதாக இருக்கிறது. இதில் அவர்களின் உயிர் பறிக்கப்படுவது என்பது முதன்மையானதாக இல்லை அவர்களை அவமானப்படுத்துவதும் அதன் வழியாக நீதியை நிலை நிறுத்துவதாக அமைகிறது. இங்கு எது நீதி என்பதை அதிகாரம் தான் முடிவு செய்கிறது. சமூகவயமாக்கல் மூலம் அந்த நீதி அடுத்த தலைமுறையினரை இயல்பாக ஏற்றுக் கொள்ளச் செய்கிறது. ஒரு காலத்தில் அதிகாரத்தில் சட்டமாகப் போடப்பட்டது காலப்போக்கில் பண்பாட்டோடு கலந்து மரபாகி நீதியாக மாறுகிறது.

தமிழ் கதைகளில் காணப்படும் தண்டனைகளைப் பின்வருமாறு வரையறுக்கலாம். மற்றவர்களுக்குத் தீங்கு செய்ய முயற்சித்ததாக கொள்ளப்படுதல், உண்மை தெரிந்து விடுவதால் தற்கொலை செய்து கொள்ளுதல், சிறையில் அடைக்கப்படுதல், நாட்டைவிட்டு அடித்துத் துரத்தப்படுதல். இவற்றில் இவை ஒவ்வொன்றும் செய்யப்படும் முறையில் வேறுபடுகிறது. தமிழ்க் கதைகளில் தீமை செய்பவர்கள் சுண்ணாம்பு கால்வாயில் வைத்து எரித்தல் என்பது பொதுவானதாகக் காணப்படுகிறது. இது ஒரு கொடூரமான தண்டனையாகப் பார்க்கப்பட்டது. நல்லதங்காள் கதையில் தங்கைக்குத் தீமை செய்த மனைவியை அவளுடைய கணவன் சுண்ணாம்பு கால்வாயில் வைத்து எரித்ததாக ஒரு வாய்மொழிக் கதை காணப்படுகிறது. இன்றும் நல்லதங்காள் வழிபாடு மக்கள் மத்தில் பிரபலமாகக் காணப்படுகிறது என்பது இவ்விடத்தில் நோக்கத்தக்கது. தமிழ்ப் பண்பாட்டில் சுண்ணாம்பு பயன்பாடு பரவலாக இருந்ததும் இதற்கு ஒரு காரணமாகக் கூறலாம். ஞானசௌந்தரி, புத்தி கெட்ட இராஜா, இராஜா மகனும் நவரத்தினப் பெண்ணும் ஆகிய கதைகளில் பெண்களுக்குத் தீமை செய்யும் பெண்கள் வீட்டிலிருக்கும் ஆணினால் கொல்லப்படுகிறாள். இது அப்படியே நல்லதங்காள் கதையின் அடிக்கருத்துடன் பொருந்திப் போகிறது. மொட்டையும் மொட்டையும் சேர்ந்ததாம் கதை, ஏழு பொண்டாட்டி கதையில் அடித்துத் துரத்தப்படுகிறார்கள். தமிழ்க் கதைகளில் காணப்படும் கரும்புள்ளி செம்புள்ளி குத்தி அடித்துத் துரத்தப்படுகிறார்கள். மற்றவர்களுக்குத் தீமை நினைப்பவர்களுக்கு அடி கொடுக்கப்படுகிறது. அதன் மூலம் அவர்களுக்குத் திருந்துவதற்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்படுகிறது. உரிமையைப் பறித்தல் என்பதும் தமிழ்க் கதைகளில் தண்டனையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. ரோசமுள்ள ராசாமகள் கதையில் இளவரசி தன்னுடைய அப்பாவுக்குத் தன் மீது இருக்கும் மகள் என்ற உரிமையை மறுக்கிறாள். இது பெண்கள் ஆண்களின் உடமைப் பொருள் என்ற ஆண்மையக் கதைகளின் சித்திரிப்பை கேள்விக்குள்ளாக்குகிறது. தமிழ்க் கதைகளில் தீய கதாபாத்திரத்தின் உயிர் ஏழுகடல் தாண்டி இருக்கும் ஒரு பொருளில் மறைத்து வைக்கப்பட்டிருக்கும். இவற்றை இந்தியக் கதைகளில் காணப்படும் பொதுக் கூறாகக் குறிப்பிடலாம். ஏழுகடல், உயிரை ஒரு பொருளுக்குள் ஒழித்து வைத்தல், மந்திரக் கல், மோதிரம், மூன்று விலங்கு, பறவைகளிடமிருந்து உதவி பெறுதல் ஆகியவற்றை இந்தியக் கதைகளுக்கான பொதுக் கூறாக ஐஸ்வரியா ஜவல்கேகர் குறிப்பிடுகிறார்[2]. தமிழ்க் கதைகளில் தற்கொலை செய்து கொள்ளுதல் என்பது தன்னுடைய குற்றவுணர்வின் காரணமாகச் செய்து கொள்வதாக இருக்கிறது. இதற்குச் சான்றாகத் தமிழில் மீனாக் குமாரன் கதையைக் குறிப்பிட

லாம். இதில் பாம்பு தன்னுடைய தங்கையைத் தவறாக நினைத்துவிட்ட குற்றவுணர்ச்சியில் தூக்கிட்டு இறந்துவிடும்.

தீமை செய்து தற்கொலை செய்து கொள்பவர்களுக்கும் தண்டனை கொடுக்கப்படுபவர்களுக்கும் ஈமச் சடங்கு மறுக்கப்படுகிறது. இது அவர்களுடைய ஆன்மாவுக்குக் கொடுக்கப்படும் தண்டனையாகக் குறிப்பிடலாம். குற்ற உணர்வினால் தற்கொலை செய்து கொள்பவர்களுக்கு இத்தகைய ஈமச்சடங்கு மறுக்கப்படுவதில்லை. சான்றாக மீனாக்குமாரன் கதையைக் கூறலாம். அதில் குற்றவுணர்வினால் தற்கொலை செய்துகொள்ளும் பாம்பை. பாம்பின் தங்கச்சியும் அவளுடைய குடும்பத்தினரும் கோவில் கட்டி கும்பிடுகின்றனர். இது தமிழ் மரபில் காணப்படும் இறந்தோர் வழிப்பாட்டின் பிரதிபலிப்பாகக் கருதலாம். பிரெஞ்சு கதைகளில் இத்தகைய வழிபாட்டைப் பார்க்க முடியவில்லை. தமிழ் பிரெஞ்சு கதைகளில் காணப்படும் உடல் சார்ந்த தண்டனைகள் அனைத்தும் இக்கதையை வாசிப்பவர்களுக்கு இது சரி இது தவறு என்ற மன படிமத்தை ஏற்படுத்துகிறது. அதன் வழி தவறு செய்பவர்களுக்குத் தண்டனை கொடுப்பது சரி என்ற மனநிலையைக் கொண்டு வருகிறது. அதைக் கேள்வி கேட்காமல் அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குகிறது. பூக்கோ குறிப்பிடும் இங்கு அதிகாரமாக மட்டும் நிலைத்து இருக்காமல் அடுத்த அடுத்த நகர்வுக்குச் செல்கிறது. இங்கு சட்டம் காலப் போக்கில் பண்பாடாகிறது. பண்பாடு தலைமுறைகளைக் கடக்கும் பொழுது மரபாகிறது. இதற்குச் சிறந்த சான்றாகப் பெண்கள் மீது விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளைக் குறிப்பிடலாம்.

## முடிவுரை:

ஆண்மையக் கதைகள் அனைத்தும் பெண்களை ஆண்களின் உடமைப் பொருளாகவும் அவர்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் சித்திரிக்கின்றன. பெண்கள் தியாகம் செய்தல், ஆண்களை சார்ந்து இருத்தல், வீட்டு வேலைகளைச் செய்தல், குழந்தைகளை வளர்த்தல் ஆகியவற்றைச் செய்ய கூடியவர்களாக ஆண்மையக் கதைகளில் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர். இதை தலைகீழாக்கும் வகையில் ரோசக்கார இராஜா மகள், சொரக்குடுக்கை, எலுமிச்சைப் பழக்கதை முதலியவை அமைந்திருக்கின்றனர். இக்கதைகளில் ஆண்கள் பெண்களைச் சார்ந்து இருப்பவர்களாகச் சித்திரிக்கப்பட்டிருப்பார்கள். ஆண்மையக் கதைகளில் பெண்களில் திருமணத்தை முடிவு செய்பவர்களாகப் பெற்றோர்கள் இருப்பார்கள் அதிலும் குறிப்பாகத் தந்தை, சகோதரர்களுக்கே அந்த அதிகாரம் இருக்கும். பெண்மையக் கதைகளில் பெண்கள் தாங்கள் யாரைத் திருமணம் செய்துக் கொள்ளவேண்டும் என்பதை முடிவுச் செய்கின்றனர். பெண்கள் தங்களுடைய உரிமையை நிலைநாட்டுவதற்காகக் குடும்ப அமைப்பையும் சமூக அதிகாரக் கட்டமைப்பையும் எதிர்க்கின்றனர். இக்கதையில் ஆண்களின் அதிகாரம் சமூக மதிப்பு ஆகிய அனைத்தும் பெண்களைச் சார்ந்தும் அவர்களைக் கட்டுப்படுத்துவதன் வழியே வெளிப்படுத்துவதைத் தெளிவாகக் காணமுடிகிறது. இக்கட்டுரைக்காக எடுத்துக் கொண்ட கதைகள் அனைத்தும் நாட்டார் கதைகள் என்று மொத்தமாகத் தொகுக்கப்பட்டிருந்தாலும் அவற்றை ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது அக்கதைகளில் சமூகத்தில் பொதுவானதாகக் கட்டமைக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்ட கதைகளையும் அந்த அதிகாரத்தைக் கேள்விக் குள்ளாக்கும் எதிர் கதையாடல் மரபைக் கொண்ட கதைகள் இருப்பதையும் அறிய முடிகிறது. தமிழகத்தில் தொகுக்கப்பட்ட நாட்டார் கதைகள் அனைத்தையும் எடுத்து ஆய்வுக்கு உட்படுத்தும் பொழுது தமிழ்ச் சமூகத்தில் ஆண்மையக் கதைகளுக்கும் பெண்மையக் கதைகளுக்கும் இடையே இருக்கும் வேறுபாடுகளும் அந்தக் கதையில் காணப்படும் அதிகாரத் தலைக்கீழாக்கத்தையும் அதற்கான சமூகப் பின்னணியையும் புரிந்துகொள்ளமுடியும்.

*உசாத்துணை:*


- *சத்தியமூர்த்தி, அ.ம., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி -3. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *இரவிச்சந்திரன், சி.மா., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 4. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *இரவிச்சந்திரன், சி.மா., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 5. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *முத்தையா, ஒ., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 6. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *முத்தையா, ஒ., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 7. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *நசீம்தீன், பீ., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 8. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *ஸ்டீபன், ஞா., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 11. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *பக்தவச்சலபாரதி(2003). தமிழகத்தில் நாடோடிகள் சங்ககாலம் முதல் சமகாலம்வரை. புதுச்சேரி: வல்லினம் வெளியீடு.*
- *முத்தையா. ஒ(2003). தேவராட்டம்.சென்னை: காவ்யா வெளியீடு.*
- *முத்தையா, ஒ., இராமநாதன். ஆறு.(பொது பதிப்பாசிரியர்). (2004). நாட்டுப்புறக் கதைக் களஞ்சியம் தொகுதி - 7. சிதம்பரம்: மெய்யப்பன் பதிப்பகம்.*
- *பக்தவச்சலபாரதி(2005). மானிடவியல் கோட்பாடுகள். புதுச்சேரி: வல்லினம் வெளியீடு.*
- *ராஜநாராயணன். கி(2012). நாட்டுப்புறக் கதைகள். தஞ்சாவூர்: அன்னம் பதிப்பகம்*
- *Leslie R Gerald, Larson F Richard(1994). Introductory Sociology. Kendall: Hunt Publishing Company.*
- *Zipes, Jack(Ed.) (2014). The Original Folk & Fairy Tales of the Borothers Grimm. New Jersey: Princenton University Press.*
- *Turner, Victor. (1967). The forest of symbols : aspects of Ndembu ritual. Ithaca, N.Y : Cornell University Press.*
- *Arjun Appadurai, Frank J. Korom, Margaret Ann Mills.(1991). Gender, Genre, and Power in South Asian Expressive Traditions. Motilal Banarsidass Publishe.*





naresh.v@thaiveedu.com




### தொடக்கக் குறிப்புகள்:

**சோ**வியத் ஒன்றியம் குறித்த வரலாறாக எமக்குச் சொல்லப்பட்டுள்ளவற்றில் பல திட்டமிட்ட பொய்கள் என்பதை கடந்த இரண்டு தசாப்தங்களில் ஏராளமான ஆய்வாளர்கள் நிறுவியுள்ளார்கள். குறிப்பாக சோவியத் ஒன்றிய கால ஆவணங்களைக் கொண்ட காப்பகங்கள் ஆய்வுக்காகவும் பொதுப் பாவனைக்காகவும் திறக்கப்பட்டதன் பின்னர் இதுவரை சொல்லப்பட்ட பல செய்திகள் 'பச்சைப் பொய்கள்' என்று நிறுவப்பட்டுள்ளன. இந்தப் பொய்கள் வெறுமனே ஸ்டாலின் மீதான அவதூறுகள் என்று சுருக்கவியலாது. 1917-ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சி காலந்தொட்டே சோவியத் யூனியன் தொடர்பாக ஏராளமான பொய்கள் பரப்பப்பட்டுள்ளன. இவை அடிப்படையில் ஒரு கேள்வியை எழுப்புகின்றன: சோவியத் ஒன்றியம் தொடர்பாக ஏன் இத்தனை பொய்கள்? வரலாற்றின் வேறெந்தக் காலப்பகுதியை விடவும் சோவியத் ஒன்றியம் தொடர்பாகக் கூறப்பட்ட, இன்னும் கூறப்படும் பொய்கள் மிக அதிகமானவை. இது ஏன் நடந்தது அல்லது நடக்கிறது என்பதை நோக்குவது அடிப்படையானது.

ரஷ்யப் புரட்சி முதலாளித்துவம் எதிர்பாராத நேரத்தில் நடந்தது. புரட்சியைத் தொடர்ந்து சோசலிசத்துக்கான ரஷ்யாவின் முற்போக்கான பயணம் முதலாளிகளுக்கு அச்சத்தைத் தந்தது. தொழிலாளி வர்க்கம் அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதை அவர்களால் கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாது. பெரும் நில உரிமையாளர்கள், பெரும் தொழிலதிபர்கள், செல்வந்தர்கள் என அனைவரது சொத்துக்களையும் பறித்து மக்களுக்குப் பங்கிடுவது, உடைமையாளர்களை அப்புறப்படுத்துவது மற்றும் புறக்கணிக்கப்பட்ட அதிகாரமற்ற எளியவர்களுக்கு அதிகாரம் அளிப்பது என்பது அவர்கள் விரும்பாத ஒன்று. கம்யூனிஸ்டுகள் செல்வந்தர்களினதும் சக்தி வாய்ந்தவர்களினதும் செல்வத்தையும் அதிகாரத்தையும் அச்சுறுத்துகிறார்கள். எனவே அவர்கள் விரும்பாத ஒன்றுக்கு எதிரான பொய்ப்பிரச்சாரம் கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதே உண்மை.

புரட்சிக்குத் தலைமை தாங்கி சோவியத் ஒன்றியத்தின் உருவாக்கத்திற்கு எவ்வாறு லெனின் வழிவகுத்தாரோ அதை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்று, சோவியத்தை ஒரு வளமான, தொழில்மய நாடாக மாற்றியமைத்த மாபெரும் பணியைச் செய்தவர் ஸ்டாலின். குறிப்பாக இரண்டாம் உலகப்போரின் விளைவால் கடித்துக் குதறப்பட்டிருந்த ஒரு தேசத்தை மீளவும் உலகின் தலையாய சக்தியாக வளர்த்தெடுத்த அரும்பணியை ஸ்டாலின் மேற்கொண்டார். அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் எதிர்பாராத செயலது. 42 மில்லியன் சோவியத் மக்களின் இன்னுயிர்களை இழந்தே ஹிட்லரின் நாஜிப் படைகளை சோவியத் செம்படை வெற்றி கொண்டது. வினைத்திறனுள்ள இளையவர்களை போரில் காவுகொடுத்த பின்னரும் அடிப்படைக் கட்டுமானங்கள் கிட்டத்தட்ட முழுமையாக அழிவடைந்த நிலையிலும் சோவியத் யூனியனால் மீண்டும் தலை நிமிர்ந்து எழுந்து நிற்க முடிந்ததென்றால் அதற்கு தலைமைப் பாத்திரம் ஏற்றவரின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னதாகவே, ஸ்டாலினின் தலைமையில் மிகப்பெரிய, உலகை உலுக்கும் முன்னேற்றங்கள் நிகழ்ந்தன. விவசாயம் ஒருங்கிணைக்கப்பட்டது. இதனால் ஆயிரமாண்டுகளாக தொடர்ச்சியாக ரஷ்யாவில் பேரழிவை ஏற்படுத்தி வந்த பஞ்சம் முடிவுக்கு வந்தது. பஞ்சத்தை ஒழிப்பதற்கு விவசாயத்தைத் தனித்தனியாகவன்றிக் கூட்டாகச் செய்வதே வழி என்ற முடிவின் பயனால் அது சாத்தியமானது. அறிமுகப்படுத்தப்பட்ட கூட்டுப்பண்ணை முறையால், 1932-33 பெரும் பஞ்சத்திற்குப் பிறகு இன்றுவரை எந்தவொரு பஞ்சத்தையும் ரஷ்யா சந்திக்கவில்லை. இன்று ரஷ்யா அனுபவிக்கும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்திற்கு இதுவே மேடை அமைத்தது. உலகை உலுக்கிய விவசாயச் சீர்திருத்தம் ஸ்டாலினாலேயே தலைமையேற்று நடாத்தப்பட்டது.

விவசாயத்தில் மட்டுமன்றி தொழிற்றுறையிலும் சோவியத் ஒன்றியம் ஸ்டாலினின் தலைமையில் வளர்ச்சியடைந்தது. மிகவும் ஏழ்மையான, தொழிற்றுறை ரீதியாக வளர்ச்சியடையாத நாடு, பலம் வாய்ந்த தொழிற்றுறையில் மிகவும் முன்னேறிய நாஜி ஜெர்மனியை தோற்கடிக்க ஆயுதங்களையும் பிற பொருட்களையும் உற்பத்தி செய்யும் அளவிற்கு கைத்தொழில்மயமாக்கலுக்கு உள்ளானது. இது மற்றொரு மகத்தான படியாகும். 1930-களில் சோவியத் யூனியன் மிகவும் பின்தங்கிய நாடாக இருந்தது, இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அது அமெரிக்காவுக்கு இணையான உலகின்

தலையான சக்தியாகியது.

மேற்குலக நாடுகளில் இல்லாத மிகப்பெரிய சீர்திருத்தங்கள் சோவியத் ஒன்றியத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. உதாரணமாக, தொழிலாளர்களுக்கு வேலையில் பல உரிமைகள் இருந்தன, பெண்களின் உரிமைகள் பெருமளவில் ஊக்குவிக்கப்பட்டன. புரட்சி நடைபெற்ற வேளையிலும் கூட யூதர்களுக்கு எதிராக மட்டுமல்ல, மற்ற மக்களுக்கு எதிராகவும் நிறைய இனவெறி இருந்தது. ரஷ்ய சமூகத்தில் இருந்த இனவெறி நீண்ட போராட்டத்திற்கு பிற தோற்கடிக்கப்பட்டது. பணியாளர்களுக்கு உத்தரவாத விடுமுறைகள், அடிப்படைத் தேவைகள், மிகக் குறைவான வீட்டு வாடகை, மலிவான பொதுப் போக்குவரத்து, முதியோர் ஓய்வூதியம் போன்ற முற்போற்கான முதன்மையான சீர்திருத்தங்கள் ஸ்டாலினால் அறிமுகப்படுத்தப்பட்டன. அதிலும் குறிப்பாக உழைக்கும் மக்களுக்காக பல சீர்திருத்தங்கள் ஸ்டாலின் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் தாக்கம் உலகெங்கும் உணரப்பட்டது. முதலாளித்துவத்திற்கு இது மிகப்பெரிய சவாலானது. எனவே சோவியத் யூனியன் குறித்தும் ஸ்டாலின் குறித்தும் அவதூறுகள் பரப்பப்பட்டன.

ஸ்டாலின் பற்றிய ஒரு பொதுப்புத்தி மனநிலை மேற்குலகில் உருவாக்கப்பட்டது. அதற்கு க்ருஷ்ச்சொவ்வின் பொய்களும், அவரது காலத்தில் எழுதப்பட்ட பல்வேறு குறிப்புகளும் பங்களித்தன. பின்னர் கொர்பச்சொவ் ஸ்டாலின் மீதான அவதூறுகளை இன்னொரு தளத்திற்கு நகர்த்தி தனது பங்களிப்பை வழங்கினார். கெடுபிடிப் போரின் நிறைவும் பெர்லின் சுவரின் தகர்ப்பும் சோவியத் யூனியனின் முடிவும் ஒரு விடயத்தை உறுதிப்படுத்தின. கடந்த அரை நூற்றாண்டுகால உலக வரலாறு, ரஷ்ய வரலாறு, சோவியத் வரலாறு, ஐரோப்பிய வரலாறு என அனைத்து வகைப்பட்ட ஆய்வுப் புலத்தின் முக்கிய நீரோட்டத்தில் ஸ்டாலின் எந்த வகையிலும் நல்லவர் என்று கூறுவது முறையற்றது என்பது பொதுமையாக்கப்பட்டுவிட்டது. ஸ்டாலினை சர்வாதிகாரி, கொலைகாரன், ஹிட்லருக்கு நிகரானவன் அல்லது ஹிட்லரை விட கொஞ்சம் நல்லம் என்றே அழைக்க வேண்டும். அந்த நேரத்தில் சோவியத் யூனியன் நாஜி ஜெர்மனியைப் போலவே இருந்தது என்று சொல்ல வேண்டும். மேலும், ஸ்டாலின் மீது குற்றம் சாட்டப்பட்ட சில குற்றங்களைக் கூட செய்யவில்லை என்று நிரூபிப்பது முறையற்றதாகக் கருதப்படுகிறது. அதே வேளை மிகவும் பழமைவாதி, ஒரு பாசிஸ்ட் என்று ஏதாவது வகையில், ஸ்டாலினை குற்றம் சாட்டினால் அதற்கு அங்கீகாரம் கிடைத்தது. ஒரு வகையில் ஸ்டாலின் மீது சாட்டப்பட்ட குற்றத்தை மறுப்பது கூட சட்டவிரோதமாக கருதப்படுகிறது. ஸ்டாலின் காலச் செயல்களைப் பற்றிய ஆய்வுகளை வெளியிடுவோர் கூட தமது ஆய்வுகளில் ஏதாவதொரு கட்டத்தில் ஸ்டாலின் மீதான வெறுப்பை மீண்டும் வலியுறுத்துவதன் மூலம், சர்வாதிகாரி, பயங்கரவாதி போன்ற முக்கிய வார்த்தைகளைத் திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். இதற்கு இரண்டு உதாரணங்களை இங்கு காட்டலாம்.

முதலாவது, ஸ்டாலின் எல்லா முடிவுகளையும் தனித்தே எடுத்தார், சர்வாதிகாரி என்ற கருத்து தொடர்ந்தும் சொல்லப்பட்டு வருகிறது. இதற்கு எதிராக ஏராளமான ஆதாரங்கள் வைக்கப்பட்டு இக் கருத்து மறுக்கப்பட்டுள்ளது. 2004-ம் ஆண்டு சோவியத் யூனியன் பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்ட நன்கறியப்பட்ட அவுஸ்ரேலிய வரலாற்றாய்வாளர் ஸ்டீபன் வீட்குரொவ்ட் (Stephen G. Wheatcroft) ஸ்டாலின் கால அரசியல் நிர்வாகம் பற்றிய தனது ஆய்வுக் கட்டுரையில் 1930-களில் ஸ்டாலினின் அரசியல் தலைமை முறையை ‘டீம் ஸ்டாலின்’ என்று அவர் விபரிக்கிறார். அதாவது ஸ்டாலின் கூட்டாக பணியாற்றினார். இதற்கு சில உதாரணங்களையும் காட்டுகிறார். உண்மையில், ஸ்டாலின் யாருக்கும் ஆணையிடவில்லை என்று சொல்கிறார். இவ்வாறு ஸ்டாலின் எப்படி அணியாகச் செயற்பட்டார் என்று நிறுவிய இக் கட்டுரையின் இறுதி இரு வரிகளில் ஸ்டாலின் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஒரு சர்வாதிகாரியாக நடந்து கொண்டார் என்று எழுதுகிறார். தனது முன்னைய கூற்றுக்கு பல சான்றுகளைத் தந்த வீட்குரொவ்ட் இந்தக் கூற்றுக்கு ஆதாரமோ, மேலதிக அழுத்தமோ தரவில்லை.

இரண்டாவது உதாரணம்,ஸ்டாலினின் அரசியல் கொலைக்கு உதாரணமாகச் சொல்லப்படுவது கிரோவ்வின் கொலை. இந்தக் கொலை குறித்த நூலொன்றை (The Kirov Murder and Soviet History) எழுதிய பேராசிரியர் மத்தேயு லெனோய் அக் கொலைக்கும் ஸ்டாலினுக்கும் தொடர்பில்லை. ஸ்டாலின் மீதான குற்றச்சாட்டு தவறானது என்று நிறுவுகிறார். ஆனால் இந்நூலின் இறுதியில் தான் ஸ்டாலின் ஆதரவாளர் இல்லை என்றும் ஸ்டாலின் இக்கொலையில் தொடர்பில்லாத போதும் சர்வாதிகாரியே என்று எழுதியுள்ளார். இவ்விரு உதாரணங்களும் முன்சொன்ன வரலாறு தொடர்பான ஆய்வின் மைய நீரோட்டம் சோவியத் யூனியன் கால வரலாறு தொடர்பில் எதை வேண்டி நிற்கிறது என்பதைப் புலப்படுத்துகிறது.

ஸ்டாலினுக்கு எதிரான பொய்கள் தருகின்ற முன்னுதாரணமானது சோவியத் ஒன்றியத்தின் வரலாற்றில் மட்டுமல்ல, உண்மையில் உலக வரலாற்றிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. ஸ்டாலினுக்கு எதிரான கட்டுக் கதைகள் வரலாறானதன் விளைவாக 20-ம் நூற்றாண்டின் வரலாற்றைப் பற்றிய நமது புரிதல் அதன் அனைத்து அம்சங்களிலும் மிகவும் தவறானதாகவும் அமைந்துவிட்டது.

## தரவுகள் எனும் ஆயுதம்:

பிரச்சாரத்திற்கு தரவுகள் மிகப் பெரிய ஆயுதம். குறிப்பாக ஒரு நிகழ்வின் தன்மையையே தரவுகள் மாற்றிவிடும். ஒரு இசை நிகழ்ச்சியை எடுத்துக் கொள்வோம். அந் நிகழ்வு மிகவும் தரமானதாக இருந்தாலும் மிகக்குறைவான எண்ணிக்கையிலானோர் அதைக் கண்டுகளித்திருந்தால் அது கவனம் பெறாது. அதேவேளை ஒரு நிகழ்வு சிறப்பாக இல்லாதபோதும் பலநூறு பேர் பங்கேற்றால் அது முக்கியமானதாகக் கருதப்படும். இன்றும் இலங்கையின் இறுதி யுத்தத்தில் கொல்லப்பட்டோரின் தொகை குறித்த இழுபறி நீடிக்கின்றது. எண்ணிக்கை குற்றத்தின் தன்மையைக் குறைக்கவோ மாற்றவோ போவதில்லை. அது ஐயாயிரம் பேராக இருந்தாலென்ன, ஐம்பதினாயிரம் பேராக இருந்தாலென்ன, குற்றத்தின் தீவிரம் ஒன்றே. ஆனால் பொதுவெளியில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் எண்ணிக்கை முக்கியமா



கிறது. குறிப்பாகப் பிரச்சாரக்கருவியாக தரவுகள் மிக முக்கியமானவை.


ஸ்டாலின் கால ஆட்சி குறித்த கட்டுக் கதைகளில் தரவுகளுக்கு முக்கிய பங்குண்டு. அந்த தரவுகள் எவ்வளவு அபத்தமானவை என்பதை நோக்கலாம். முதலில் உக்ரேன் பஞ்சம் என்ற நிகழ்வுக்கு வருவோம். 1930-களில் மேற்குலகப் பத்திரிகைகளில் இப் பஞ்சம் பற்றிய ஏராளமான செய்திகள் வெளியாகின. குறிப்பாக இது தொடர்பில் வெளியாகியிருந்த படங்கள் மக்கள் மனதை உருக்கின. உக்ரேன் இனப் படுகொலை என்ற கருத்தாக்கத்தைக் காவிச் சென்றதில் இப்படங்களுக்கு முக்கிய இடமுண்டு. ஆனால் உண்மையில் இப் படங்கள் 1930-களில் எடுக்கப்படவில்லை. வீரம் மிக்க ஊடகவியலாளர்கள் உக்ரேனுக்குப் பயணம் செய்து கடும் நெருக்கடிகளின் மத்தியில் இப்படங்களை எடுத்திருக்கிறார்கள் என்ற குறிப்புகளுடனேயே இவை பத்திரிகைகளில் வெளியாகின. ஆனால் உண்மையில் இவை 1918-1921 காலப் பகுதியில் சோவியத் பஞ்சத்தின் போது எடுக்கப்பட்டவை என்பதை ஆதாரங்களுடன் டக்ளஸ் டொட்டில் தனது நூலில் நிறுவுகிறார். 1918-1921 காலப்பகுதியில் சோவியத் யூனியனில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எட்டு அந்நிய நாடுகள் இதில் தலையை நுழைத்திருந்தன. இக்காலப்பகுதியில் அங்கு நிலவிய பஞ்சத்தைக் காட்டும் படங்களே உக்ரேன் பஞ்சமாகக் காட்டப்படுகின்றன என்பதை அவர் விரிவாக விளக்குகிறார்.

டக்ளஸ் டொட்டில் தனது நூலில் ஹியர்ஸ்ட் பத்திரிகையில் வெளியிடப்பட்ட பல்வேறு பொய்களை அம்பலப்படுத்தியுள்ளார். அதில் பிரதானமானது உக்ரேன் பற்றி சுடச்சுடச் செய்திகளை வெளியிட்ட ஹியர்ஸ்ட் பத்திரிகைச் செய்தியாளர் தோமஸ் வால்கர் என்பவர் பற்றிய உண்மைகளைக் கண்டறிந்ததே. இவர் பஞ்சம் என்று கூறப்படும் பகுதிகளிலிருந்து நீண்ட காலமாக அறிக்கைகளையும் புகைப்படங்களையும் அனுப்பிய ஒரு பத்திரிகையாளர் என்று அறியப்பட்டவர். வால்கர் உல்லாசப் பயணியாக சோவியத் யூனியனைப் பார்க்கச் சென்றதாகவும், இடை நடுவில் குழுவில் இருந்து விலகி சோவியத் பற்றிய தகவல்களைப் பெறப் பணியாற்றியதாகவும் ஒரு கதையை ஹியர்ஸ்ட் பத்திரிகை உருவாக்கியது. ஆனால் உண்மையில் அவ்வாறு ஒருவர் இல்லை என்ற உண்மையை டொட்டில் கண்டுபிடித்தார். குறித்த காலப்பகுதியில் தி நேசன் என்ற அமெரிக்கப் பத்திரிகையின் மொஸ்கோ செய்தியாளர் லூயிஸ் பிஸ்ஸரின் கூற்றுப்படி ஹியர்ஸ்ட் பத்திரிகையின் உண்மையான மொஸ்கோ செய்தியாளர் எம். பரட் என்பவர். ஆவர் சோவியத்தின் முன்னேற்றம், வறுமை ஒழிப்பு, விவசாய மீட்சி போன்ற விடயங்கள் தொடர்பில் பல செய்திகளை ஹியர்ஸ்ட் பத்திரிகைக்கு அனுப்பியுள்ளார் ஆனால் அவை எதுவும் பிரசுரமாகவில்லை. அதே வேளை தோமஸ் வால்கர் என்று ஒருவர் இல்லை. இப் பெயரில் இயங்கியவர், ரோபேட் கீறீன் என்ற நபராவார். ரோபேட் கிறீன் அமெரிக்காவின் கொலடாரோ சிறைச்சாலையில் இருந்து தப்பிய ஒரு குற்றவாளி. அவர் நாடு திரும்பியதும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போது தான் வெறும் 5 நாட்கள் மட்டுமே ரஷ்யாவில் இருந்ததாகவும் தான் உக்ரேனுக்குச் செல்லவே இல்லை என்றும் கீறீன் நீதிமன்றில் வாக்குமூலம் அளித்ததையும் ஆதாரங்களுடன் டொட்டில் பதிவு செய்கிறார்.

1932-33 காலப்பகுதியில் உக்ரேனியர்கள் வேண்டுமென்றே இனப் படுகொலை செய்யப்பட்டதான பொய்யை நிறுவுவதற்கு முன்வைக்கப்பட்ட சான்றுகள், மிகவும் பக்கச்சார்பானதாகவும், பெரும்பாலும் ஏமாற்றும் நோக்குடனான, முரண்பாடானதாகவும், அதன் விளைவாக மிகவும் சந்தேகத்திற்குரியதாகவும் உள்ளன. இனப் படுகொலையின் ஆய்வறிக்கையில் ஒரு முக்கிய பங்கு பஞ்ச மரணங்களின் எண்ணிக்கையால் கருதப்படுகிறது - வெளிப்படையாக பல மில்லியன்களில் இறப்புகள் இல்லாவிட்டால் இனப் படுகொலை என்று குற்றம் சாட்டுவது கடினம். இங்கே, பஞ்ச - இனப் படுகொலைக் கோட்பாட்டாளர்களின் வழிமுறைகள் மோசடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, அறிவியலற்றதாக விபரிக்கப்பட்ட முடிவுகள். பெரும்பாலானவை அரசியல் ரீதியான யூகங்களின்

அடிப்படையிலானவை.

இன்றும் இந்த எண்ணிக்கை தொடர்பான மேற்கோள் காட்டப்படுகின்ற ஆய்வு யாதெனில் 1964-ம் ஆண்டு Soviet Studies என்ற ஆய்விதழில் Dana Dalrymple எழுதிய 'The Soviet Famine of 1932-1934' என்ற கட்டுரையாகும். இக் கட்டு




ரையின் படி குறைந்தது உக்ரேன் பஞ்சத்தில் ஐந்தரை மில்லியன் மக்கள் இறந்தார்கள் என்பதாகும். இதில் முக்கியமானது யாதெனில் இந்த எண்ணிக்கையை எவ்வாறு Dana Dalrymple வந்தடைந்தார் என்பது தான். குறித்த காலப் பகுதியில் (1932-34) சோவியத் யூனியனுக்கு பயணம் செய்த மேற்குல ஊடகவியலாளர்களின் ஊக அடிப்படையிலான எண்ணிக்கைகள், பின் நாட்களில் குறித்த தொகை பற்றிய கருத்துரைத்த சோவியத், உக்ரேனியர்கள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே இத்தொகை எட்டப்பட்டது. இவ்வாறு மரணமடைந்த தொகையைத் தெரிவித்த இருபது பேரின் தரவுகள் பெறப்பட்டு அவற்றின் சராசரி பெறப்பட்டு அது 5.5 மில்லியன் என்ற கணக்கை எட்டியது. இந்த இருபது பேரின் எண்ணிக்கைகள் பெருமளவு வேறுபடுகின்றன. சிலர் 1 மில்லியன் என்றும் சிலர் 10 மில்லியன் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு ஆய்வு முறையாக இந்த முறைமையானது மிகவும் கோளாறானது. ஊகங்களின் அடிப்படையில் பெறப்பட்ட தரவுகள் எப்போதும் நம்பத்தகுந்த தரவுகள் ஆகா. இதில் சுவையான விடயம் யாதெனில் தோமஸ் வால்கரின் எண்ணிக்கையும் இந்த இருபதில் ஒன்றாக அடங்குகிறது. தோமஸ் வால்கர் பற்றி பின்வருமாறு சொல்கிறார்:

'தோமஸ் வால்கர் பல மாதங்களுக்குப் பிறகு 1934 வசந்த காலத்தின் பிற்பகுதியில் - வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணத்திலிருந்து விலகியதன் பின்னர் ஒப்பிடத்தக்க ஒரு கணக்கெடுப்பை மேற்கொண்டார். வால்கர் முன்பு பல வருடங்கள் சோவியத் ஒன்றியத்தில் சுற்றுப்பயணம் செய்தவர் மேலும் ரஷ்ய மொழி பேசக்கூடியவர். எனவே அவரால் சரிவரக் கணிப்பை மேற்கொண்டிருக்க முடியும்'.

இந்தக் கூற்றே இந்த மோசடியை அம்பலப்படுத்தப் போதுமானது. முதற்கண் வால்கர் என்றொரு நபரே இல்லை. இரண்டாவது, அப்பெயரைப் பயன்படுத்தியுள்ள சிறையிலிருந்து தப்பிய நபர் 5 நாட்கள் மட்டுமே சோவியத் யூனியனில் இருந்துள்ளார். மூன்றாவது, எந்தவொரு சான்றும் இன்றி ரஷ்ய மொழி பேசக்கூடியவர் என்று மிகவும் தவறாக Dana Dalrymple குறிப்பிட்டுள்ளார். இவை தெரியாமல் நடந்த தவறுகள் அல்ல. தெரிந்தே நிகழ்ந்தவை. கட்டுரைக்கான பொய்த் தரவுகளுக்கு ஆதாரமாக மேலும் பொய்கள் உற்பத்தியாகின்றன.

இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்ட தரவுகளில் வால்கர் மட்டுமன்றி இன்னும் பல சந்தேகத்துக்குரியோரும் அடங்குகின்றனர். குறிப்பாக நாசிகளுடன் பணியாற்றியோரின் தரவுகளும் உள்ளன. மேலும் நாஜிகள் தங்கள் பிரச்சாரத்தில் பயன்படுத்திய தரவுகளும் இந்த ஆய்வில் எண்ணிக்கையைக் கணக்கிடுவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

இன்றுவரை 'உக்ரேன் பஞ்சம்', 'உக்ரேன் இனப்படுகொலை' என்று எழுதப்படுகின்ற பலவற்றுக்கான சான்றாதாரங்கள் நாஜிகள், நாஜி ஆதரவாளர்கள் ஆகியோரிடமிருந்து பெறப்பட்டனவையாகவே உள்ளன. Dana Dalrymple தரவுகளுக்காகப் பயன்படுத்திய இருபது நபர்களில் இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவர் (Archbishop of Canterbury), நாஜிகளுக்கு வெளிப்படையான ஆதரவை அளித்த கார்டினல் இனிட்சர் (Archbishop of Vienna) ஆகியோரும் அடங்குகிறார்கள். கார்டினல் இனிட்சர் நாஜிப் பிரச்சாரத்தின் ஊதுகுழலாகி உக்ரேன் பஞ்சம் என்ற கருத்தைப் பரப்பினார். அவர் இன்னொரு படி மேலே போய் பசியால் மனிதர்கள் மனிதர்களை உண்கிறார்கள் என்று சொன்னார். நாஜிகளும் அமெரிக்காவில் இருந்த அதன் ஆதரவாளர்களும் எவ்வாறு சோவியத் யூனியனுக்கு எதிரான கட்டுக் கதைகளைப் பரப்புவதில் ஆற்றிய முக்கிய பங்களிப்பை Organized Anti-Semitism in America: The Rise of Group Prejudice During the Decade 1930-40 என்ற தனது நூலில் விரிவாக டொனால்ட் ஸ்ரோங் எடுத்துக் காட்டுகிறார்.

Dana Dalrymple இந்தக் கட்டுரையோடு நிறுத்தவில்லை. அடுத்தாண்டு (ஏப்பிரல் 1965) 'The Soviet Famine of 1932-1934: Some Further References' என்ற கட்டுரையை வெளியிட்டார். தனது முந்தைய இறந்தோர் எண்ணிக்கை குறித்த

யூகங்களை விரிவுபடுத்த முயன்ற Dana Dalrymple, டாக்டர் ஹார்ஸ்லி கேன்ட்டின் ஒரு அறிக்கையை அறிமுகப்படுத்தி னார். அவ்வறிக்கை இறந்தவர்கள் 15 மில்லியன் உக்ரேன் மக்கள் என்று தெரிவிக்கின்றது. இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில் 1932-ல் உக்ரேனின் மக்கள் தொகை 25 மில்லி யன். இவர் சொல்வது போல நடந்திருந்தால் 60% உக்ரேனி யர்கள் கொல்லப்பட்டிருக்க வேண்டும். தரவுகள் எதுவித ஆதாரமோ, அடிப்படையறிவோ இன்றி இட்டுக்கட்டப்பட்டு உருவாக்கப்பட்டன. குறித்த எண்ணிக்கைக்கு நியாயம் தேடும் Dana Dalrymple தனது கட்டுரையில் 'டாக்டர். கேன்ட் சோவியத் அதிகாரிகளிடமிருந்து பதினைந்து மில்லியன் மக் கள் கொல்லப்பட்ட தகவலை தனிப்பட்ட முறையில் பெற்ற தாகக் குறிப்பிடுகிறார்' என்று எழுதுகிறார்.

இவை அனைத்தும் ஒரு கட்டுக்கதையை ஆய்வுக் கட்டுரை யாக Dana Dalrymple உருவாக்கினார் என்பதைத் தெளிவா கக் கூறுகின்றன. ஆனால் இதை உண்மை போல அனைவ ரிடமும் மேற்குலக ஊடகங்கள் கொண்டு சேர்த்தன. இன்று உக்ரேனிய இனப்படுகொலை என்பது முக்கியமான ஒரு குறியீடாகக் கருதப்படுகின்றது. வரலாற்றின் வழி சொல்லப் படும் வரும் கட்டுக் கதைகளில் இதற்குத் தனித்துவமான இடமுண்டு என்பதையும் மறப்பதற்கில்லை.

## குலாக்: சில புரிதல் குறிப்புகள்:

ஸ்டாலின் கால சோவியத் யூனியன் குறித்த அவதூறுகளில் அடிக்கடி பயன்படுத்தபடும் ஒரு சொல் குலாக். இதற்கு 'சித் திரவதை முகாம்கள்' என்றே விளக்கங்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. இதை உருவாக்கியவர் ஸ்டாலின் என்றும் இதன்வழி மில்லியன் கணக்காணவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற கதைகள் இரண்டாம் உலகப் போரின் முடிவோடு தீவி ரமடையத் தொடங்கின. இன்றும் ஸ்டாலின் கொடுமைகள் என்ற கட்டுக் கதைகள் நேரடியாக குலாக்கோடு தொடர்பு டையவை. குலாக் வார்த்தையின் அர்த்தம் உண்மையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சகத்தின் நிர்வாகம் (கமிஷரியட்) என்பதாகும். இது குறிப்பாக சோவியத் யூனியனின் தண்ட னைச் சட்டக் கோவையுடன் தொடர்புடையது. இதைத் தெளி வாக விளக்குவதற்கு முன்னாள் சோவியத் காப்பகங்களில் இருந்து மிகப் பெரிய அளவிலான முதன்மை ஆதார ஆவ ணங்கள் உள்ளன. அதன்படி தொழிலாளர் முகாம்களின் நிலைமைகள் மேற்கத்திய முதலாளித்துவ நாடுகளில் உள்ள தண்டனை முறைகளில் உள்ள நிலைமைகளை விட சிறப் பாக இல்லாவிட்டாலும் ஒப்பிடத்தக்கவை என்பது மிகவும் தெளிவாக உள்ளது. தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங் கப்பட்டது, நன்நடத்தைக்காகவும் உற்பத்தியில் அதிக நேரம் பங்களித்ததற்கும் தண்டனைக்காலம் குறைக்கப்பட் டது. கல்வி வாய்ப்புகள், பண்பாட்டு நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், நாடக அமைப்புகள் போன்றன இருந்தன. கைதிகளுக்கு விடுமுறையும் பணமும் சம்பாதிக்க நிறைய வசதிகள் இருந்தன. இவ்வாறுதான் இந்த தொழிலாளர் முகாம்கள் இருந்தன. இந்த குலாக் முறையை உருவாக்கி யவர் லெனின்.

குலாக்குகளில் தவறுகள் நடந்துள்ளன. சில இடங்களில் பயங்கரமான துஷ்பிரயோகங்கள் தொடர்பான சில தனிமைப் படுத்தப்பட்ட வழக்குகள் நடந்துள்ளன. அதைப் பற்றி நமக் குத் தெரிந்ததற்குக் காரணம், அவ் வழக்குகள் அந்த நேரத் தில் விசாரிக்கப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளின் ஆவ ணங்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஏதோ ஒரு வகை- கயில் சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டு, தண்டிக்கப்பட்ட னர் என்பதற்கான ஆதாரங்களும் உள்ளன.

பரந்த அர்த்தத்தில் குலாக் என்பது தொழிலாளர் முகாம் களை மட்டுமல்ல, நாடு கடத்தப்படுதல் மற்றும் சிறைச்சா லைகளையும் குறிக்கப் பயன்படுகிறது. இவ்வாறு பயன்ப டுத்துவது எதிர்ப் பிரச்சாரத்திற்கு வாய்ப்பானது. ஏனெனில் தண்டிக்கப்பட்டவர்கள், இடம் மாற்றப்பட்டவர்கள், தொழிலா ளர் முகாம்களுக்கு அனுப்பப்பட்டோர் என அனைவரதும் எண்ணிக்கையை ஒன்றாக்கும் போது தொகை பெரிது. இது தரவுகளுக்கு நல்லது.

சோவியத் யூனியனில் சிறைச்சாலைகள் இருந்தன. விசார ணைகளின் பின் தண்டனைக்கு ஆளாகுவோர் குறுகிய காலத்திற்கு சிறைக்கு அனுப்பப்பட்டனர். ஆனால் சில நேரங்களில் நீண்ட காலத்திற்கும் சிறையில் கழிக்க நேர்ந் துள்ளது. மாஸ்கோ விசாரணைகளில் குற்றம் நிரூபிக்கப்பட்ட மரண தண்டனை விதிக்கப்படாத குற்றவாளிகள் சிறைக ளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்கள் வேலை செய்ய வேண் டியதில்லை, ஏனெனில் அவர்கள் தொழிலாளர் முகாமுக்கு அனுப்பப்படவில்லை. நாடுகடத்தப்பட்டவர்களைப் பொறுத்த வரை, நாடுகடத்தல் என்பது சிறைவாசம் அல்ல, அவர்கள் இருந்த இடத்திலிருந்து தொலைதூர பகுதிக்கு அனுப்பப் பட்டு, பின்னர் பொதுவாக விவசாயத்தில் வேலை கொடுக் கப்பட்டது. அவ்வாறு அனுப்பப்பட்ட சிலருக்கு தொழிற்சா லைகளில் பணி வழங்கப்பட்டது. எனவே குலாக் என்பது பல்வேறு பொருள்களைக் குறிக்கிறது. ஆனால் அனைவரும் சித்திரவதை முகாம்களுக்கு அனுப்பப்பட்டதைப் போல பொருள்தரும் வகையில் இச்சொல் பயன்படுத்தப்படுகிறது.

குலாக் தொடர்பாக கட்டமைக்கப்பட்டுள்ள இன்னொரு தவ றான கருத்து யாதெனில் யாரும் எந்த காரணமும் இல்லா மல், விசாரணையின்றி குலாக்கிற்கு அனுப்பப்படலாம் என் பது. இந்தக் கருத்தாக்கம் 'ஸ்டாலின் என்ற சர்வாதிகாரி' என்ற படிமத்திற்கு வலுச்சேர்க்கும் வகையில் கட்டமைக்கப் பட்டது. இது உண்மையல்ல. குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு அனைவருக்கும் குறைந்தபட்சம் ஒரு விசார ணையாவது வழங்கப்பட்டது. இதனை ஆவணக் காப்பகத் தரவுகள் உறுதி செய்கின்றன.

குலாக் பற்றி நோக்கும்போது ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். சோவியத்தில் ஒரு நீதித்துறை இயங்கி யது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டார்கள், குற் றம் நிரூபிக்கப்பட்டவர் தண்டனைக்காளாகினர், குற்றம் நிரூ பிக்கப்படாதவர்கள் விடுதலையாகினர். ஆவணக் காப்பகங் கள் சொல்லுகின்ற செய்திகளின்படி ஆதாரங்களின் அடிப்ப டையிலேயே குற்றம் நிரூபிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட் டுள்ளது. முற்றிலும் நிரபராதிகள் தண்டிக்கப்பட்ட சந்தர்ப் பங்கள் இல்லை. சாட்சிகள் சரியானவையா, தீர்ப்பு சரியா னதா போன்ற கேள்விகள் சோவியத்தில் மட்டுமல்ல, உல

கெங்கிலும் உள்ள நீதிமுறையிலும் கேள்விக்குட்படுகின்ற விடயமே. இற்றைக்கு 80 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற விடயங்களையே இங்கே பேசுகிறோம். ஆனால் 20 ஆண்டுகளுக்கு முறை அபுகிராப் சிறைச்சாலையில் அமெரிக்கப் படைகள் செய்த கொடுரங்கள் குறித்து என்ன நடந்தது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும், சிரியாவிலும் மேற்குலகப் படைகள் மேற்கொண்ட மனித குலத்திற்கு எதிரான குற்றங்களைப் பற்றி ஏன் யாரும் பேசுவதில்லை. இவையும் இங்கு நோக்கப்பட வேண்டியவையே. இந்தப் பின்னணியில் குலாக் குறித்த தரவுகளுக்கு வருவோம்.

## 'பெருங்களையெடுப்பு' என்ற கட்டுக்கதை:

1937 முதல் 1939 வரையான காலப்பகுதியில் ஸ்டாலின் தனது அரசியல் எதிரிகளைக் களையெடுத்தார். இலட்சக்கணக்கானோர் கொல்லப்பட்டார்கள் என்று கெடுபிடிப்போர் உச்சந்தொட்ட 1950-களில் இருந்து சொல்லப்பட்டு வருகிறது. இதற்கான தரவுகளை வழங்கிய முக்கிய நபர் ரொபேர்ட் கான்குவெஸ்ட். 1961-ம் ஆண்டு அவர் முதன்முறையாக சோவியத் மரணங்கள், குலாக்கில் தண்டனைக்காளாகியோர் பற்றிய தகவல்களை வெளியிட்டார். அதன்படி 1930-களின் முற்பகுதியில் சோவியத் யூனியனில் 6 மில்லியன் மக்கள் பட்டினியால் இறந்தனர். இந்த எண்ணிக்கையை கான்குவெஸ்ட் 1986-இல் 14 மில்லியனாக அதிகரித்தார். குலாக் தொழிலாளர் முகாம்களைப் பொறுத்தவரை, வெற்றியின் படி, 1937-ல் - களையெடுப்பிற்கு முன்னர் - 5 மில்லியன் கைதிகள் அங்கு தடுத்து வைக்கப்பட்டனர். 1937-38-ம் ஆண்டில், கான்குவெஸ்டின் படி, களையெடுப்பு தொடங்கிய பிறகு, கூடுதலாக 7 மில்லியன் கைதிகள் இருந்தார்கள். இதன்படி 1939-ல் தொழிலாளர் முகாம்களில் இருந்தோர் மொத்தமாக 12 மில்லியன் கைதிகள். இந்த 12 மில்லியன் பேர் அரசியல் கைதிகள். இதற்கு மேலதிகமாக தொழிலாளர் முகாம்களில் பொதுவான குற்றவாளிகளும் இருந்தனர். கான்குவெஸ்டின் வாதப்படி அவர்கள் அரசியல் கைதிகளை விட அதிகமான எண்ணிக்கையில் இருந்தனர். இதன் பொருள் சோவியத் யூனியனின் தொழிலாளர் முகாம்களில் 25 தொடக்கம் 30 மில்லியன் வரையிலான கைதிகள் இருந்தார்கள்.

கான்குவெஸ்டின் தரவுகளின்படி 1937-1939-க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஒரு மில்லியன் அரசியல் கைதிகள் தூக்கிலிடப்பட்டனர். மேலும் 2 மில்லியன் பேர் பசியால் இறந்தனர். 1937-39 கால களையெடுப்பின் விளைவாக கொல்லப்பட்டோர் 9 மில்லியன். அவர்களில் 3 மில்லியன் பேர் சிறையில் இறந்திருப்பார்கள். மேலும் 1930 மற்றும் 1953-க்கு இடையில் ஸ்டாலின் 12 மில்லியனுக்கும் குறைவான அரசியல் கைதிகளைக் கொன்றார் என்ற முடிவை கான்குவெஸ்ட் அறிவித்தார். ஆனால் இத் தொகை போதுமானதாக இல்லை என்று கருதப்பட்டது. இதனால் அவர் தனது புள்ளிவிபரங்களை உடனடியாக 'புள்ளிவிபரச் சரிசெய்தலுக்கு' உட்படுத்தினார். 1930-களில், போல்ஷிவிக்குகள் 26 மில்லியன் மக்களைக் கொன்றனர் என்ற திருத்திய தனது முடிவை அறிவித்தார்.

கான்குவெஸ்ட் போலவே தரவுகளை வெளியிட்ட, மேற்குலகால் கொண்டாடப்பட்ட இன்னொருவர் அலெக்சாண்டர் சோல்ஜெனிட்சின். அவரைப் பற்றி அடுத்த பகுதியில் நோக்கலாம். சோல்ஜெனிட்சின் பெரும் களையெடுப்பு நடந்த 1936 முதல் 1939 வரையான காலப்பகுதியில் ஆண்டொன்றுக்கு ஒரு மில்லியன் மக்கள கொல்லப்பட்டார்கள். 1932-33 பஞ்சத்தால் 6 மில்லியன் பேர் கொல்லப்பட்டார்கள். 1930 முதல் ஸ்டாலின் மரணமடைந்த 1953 வரையான காலப்பகுதியில் 66 மில்லியன் பேர் கொல்லப்பட்டார்கள். அதேபோல இரண்டாம் உலகப் போரில் மரணித்த 44 மில்லியன் சோவியத் மக்களுக்கும் ஸ்டாலினே பொறுப்பு. எனவே தனது ஆட்சிக் காலத்தில் ஸ்டாலின் 110 மில்லியன் மக்களைக் கொன்றார் என்று சோல்ஜெனிட்சின் அறிவித்தார். இதற்கு இவருக்கு நோபல் பரிசும் அளிக்கப்பட்டது.

'110 மில்லியன் மக்களை ஸ்டாலின் கொன்றார்' என்பது கவர்ச்சியான ஒரு பிரச்சார உத்தி. இத் தரவு மிகவும் அதிர்ச்சிகரமானது. எனவே இதைப் பல்வேறு வழிகளில் பிரச்சாரத்திற்கு அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் பயன்படுத்தின. இக் காலப்பகுதியில் இந்தப் புள்ளி விபரங்களைப் பலர் கேள்விக்குள்ளாக்கினர். இத் தரவுகளைப் பெற்ற முறைமை குறித்தும், அதன் உண்மை குறித்தும் வினவினர். எல்லா வினாக்களுக்கும் சொல்லப்பட்ட பதில் ஒன்றுதான்: 'என்றாவதொருநாள் சோவியத் ஆவணக்காப்பகங்கள் திறக்கப்படும் போது இந்தப் புள்ளிவிபரங்கள் எவ்வளவு உண்மையானவை என்பதை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்'.

நல்வேளையாக, 1980-களின் கடைசிப் பகுதியில் இந்த ஆவணக் காப்பகங்கள் ஆய்வுக்காகத் திறக்கப்பட்டன. குலாக்குகள், தண்டனை முறைகள், புள்ளி விபரங்கள் என்பவற்றை உள்ளடக்கிய 9,000 பக்கங்கள் விரிகின்ற விரிவான அறிக்கை 1993-ல் வெளியானது. அதில் சொல்லப்பட்டுள்ள விடயங்களைச் சுருக்கமாகப் பார்க்கலாம்:

- 1930-கள் முதல் நடைமுறையில் இருந்த தண்டனைச் சட்டக் கோவையின்படி குற்றம் இழைத்தவர்கள் பல்வேறு வகைகளில் தண்டிக்கப்பட்டனர். சிறைகள், தொழிலாளர் முகாம்கள், தொழிலாளர் காலனிகள் மற்றும் சிறப்பு திறந்த மண்டலங்கள் என்பன இருந்தன.
- குலாக் தொழிலாளர் முகாம்களுக்கு கடுமையான குற்றங்களைச் செய்தவர்களும் (கொலை, கொள்ளை, கற்பழிப்பு, பொருளாதாரக் குற்றங்கள் முதலியன) எதிர் புரட்சிகர நடவடிக்கைகளில் தண்டனை பெற்றவர்களில் பெரும் பகுதியினர் அனுப்பப்பட்டனர். 3 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை விதிக்கப்பட்ட மற்ற குற்றவாளிகளும் தொழிலாளர் முகாம்களுக்கு அனுப்பப்படலாம். ஒரு தொழிலாளர் முகாமில் சிறிது நேரம் கழித்த பிறகு, ஒரு கைதி தொழிலாளர் காலனிக்கு அல்லது ஒரு சிறப்பு திறந்த மண்டலத்திற்கு மாற்றப்படலாம்.
- தொழிலாளர் முகாம்கள் அங்குள்ளவர்களுக்கும், சமூகத்திற்கும் நாட்டிற்கும் பயன் விளைவிக்க வேண்டும் என்பதே நோக்காக இருந்தன. இதனால் இம் முகாம்கள் மிகப் பெரியனவாக இருந்தன. பரந்த நிலப்பரப்பில் அமைந்திருந்தன. அங்குள்ளோர் வேலை செய்வது கட்டாயமாக்கப்பட்டது. எந்த ஒரு ஆரோக்கியமான மனிதனும் வேலை செய்யாமல் வாழ முடியாது என்ற விதி இருந்தது. உழைப்பின் மதிப்பும், அவ்வுழைப்பின் சமூகப் பரிமாண

மும் பங்களிப்பும் முக்கியமானதாக இருந்தது. 1940-ல் 53 தொழிலாளர் முகாம்கள் இருந்தன.

- இக்காலப்பகுதியில் 425 தொழிலாளர் காலனிகள் இருந்தன. இவை தொழிலாளர் முகாம்களை விட மிகச் சிறிய அலகுகளாகும். மிகுந்த சுதந்திரத்துடனும் மிகக் குறைவான மேற்பார்வையுடனும் இங்குள்ளோர் இயங்க அனுமதிக்கப்பட்டது. குறைந்த சிறைத்தண்டனை கொண்ட கைதிகள் இங்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் தொழிற்சாலைகளில் அல்லது நிலத்தில் சுதந்திரமாக வேலை செய்தனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவரது உழைப்பின் மூலம் பெற்றுக்கொண்ட ஊதியம் முழுவதும் கைதிக்கே சொந்தமானது.
- சிறப்பு திறந்த மண்டலங்கள் பொதுவாக நாடுகடத்தப்பட்டவர்களுக்கான விவசாயப் பகுதிகளாகும். இப்பகுதிகள் பெரும்பாலும் விவசாய மறுசீரமைப்பில் பறிக்கப்பட்ட நிலங்களாகும்.

இதனடிப்படையில் இனித் தரவுகளுக்கு வருவோம். ஆவணக் காப்பங்களில் இருந்து பெறப்பட்டுத் தொகுக்கப்பட்ட தரவுகளின் படி 1939-ல் அனைத்துமாகச் சேர்த்து இரண்டு மில்லியன் கைதிகள் இருந்துள்ளார்கள். இவர்களில் 454,000 பேர் அரசியல் குற்றங்களுக்காகத் தண்டனை பெற்றவர்கள். கான்குவெஸ்ட் சொல்வது போல 9 மில்லியன் அரசியல் குற்றவாளிகளல்ல. அதேபோல 1937-க்கும் 1939-க்கும் இடையே இம் முகாம்களில் மரித்தவர்களின் எண்ணிக்கை 160,000. கான்குவெஸ்ட் சொல்வது போல மூன்று மில்லியன் அல்ல. 1950-ல் 578,000 அரசியல் கைதிகள் இருந்தனர், 12 மில்லியன் அல்ல. இவை கான்குவெஸ்டின் புள்ளி விபரங்கள் மிகைப்படுத்தப்பட்டவை என்பதை மட்டுமல்ல,சோல்ஜெனிட்சினின் அண்டப் புளுகுகளையும் அம்பலப்படுத்தியுள்ளன.

கான்குவெஸ்டோ, சோல்ஜெனிட்சினோ சொல்வது போல இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்களவு மக்கள் கைதிகளாக இருந்துள்ளனர், மரித்துள்ளனர், தண்டிக்கப்பட்டுள்ளனர். இதை எவ்வாறு விளங்கிக் கொள்வது என்பது நியாயமான ஒரு வினாவாகும். இதைப் புரிந்து கொள்ள சில விடயங்கள் குறித்த தெளிவு வேண்டும்.

1917-ல் ரஷ்யப் புரட்சியைத் தொடர்ந்து சோவியத் யூனியன் தொடர்ச்சியாக அன்னிய சக்திகளால் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருந்தது. சோவியத்தின் பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு பல சக்திகள் முனைந்தன. குறிப்பாக வளமான விவசாய நிலங்கள், கனிம வளங்கள் என்பன பலரது கண்களை உறுத்தின. இதனால் சோவியத் தொடர்ச்சியாக நெருக்கடியில் இருந்தது.

1930-களில் ஏனைய மேற்குலக நாடுகளுடன் ஒப்பிடும் போது மிகவும் பின்தங்கிய ஒரு நாடாக சோவியத் யூனியன் இருந்தது. 1931-ல் ஸ்டாலின் இவ்வாறு சொன்னார்: 'நாம் முன்னேறிய நாடுகளை விட 50-100 ஆண்டுகள் பின்தங்கியுள்ளோம். அந்த இடைவெளியை 10 ஆண்டுகளில் நாம் மூடியாக வேண்டும். நாம் அதைக் கட்டாயம் செய்தாக வேண்டும் அல்லாவிடின் நாம் அழிக்கப்படுவது உறுதி'. இதைச் சொல்லிச் சரியாக பத்து ஆண்டுகளில் 1941-ல் சோவியத் மீது ஜேர்மனி படையெடுத்தது.

1930-களில் சோவியத் யூனியனின் சனத்தொகை 200 மில்லியன். இதில் 2.5 மில்லியன் பேர் தண்டனைக்கு ஆளாகியிருந்தனர். எனவே மொத்த சனத்தொகையில் 1.25% பேர் குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இத்தொகை மிகப்பெரிது. குறிப்பாக துரித வளர்ச்சியை எதிர்பார்த்திருக்கும் ஒரு நாட்டின் முக்கியமான உழைக்கும் மக்கள் தொகை குற்றவாளிகளாக இருப்பது பாதகமானது. ஆனால் அதே காலப் பகுதியில் உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது சனத்தொகை-குற்றவாளி வீதம் சோவியத்தில் குறைவானதே.

குலாக்குகளில் இறந்தவர்கள் இன்னொரு முக்கிய பேசுபொருள். கடுமையான சித்திரவதைகள், கடினமான பணி, மோசமான வாழ்விட நிலைமைகள் காரணமாகவே மக்கள் இறந்தார்கள் என்று இன்றும் சொல்லப்படுகிறது. 1934-ல் குலாக்களில் இருந்தோரில் 5.2 வீதத்தினர் மரணமடைந்தனர். இது 1953-ல் 0.3% ஆகக் குறைந்தது. தொழிலாளர் முகாம்களில் இறப்புகள் ஒட்டுமொத்த சமுதாயத்தில் உள்ள வளங்களின் பொதுவான பற்றாக்குறையால் ஏற்பட்டவை. குறிப்பாக தொற்று நோய்களை எதிர்த்துப் போராடத் தேவையான மருந்துகள் இருக்கவில்லை. இந்த பிரச்சினை தொழிலாளர் முகாம்களில் மட்டும் உரியனவல்ல. இது உலகப் பொதுவான பிரச்சினையாக அக்காலப்பகுதியில் இருந்தது என்பது கவனிப்புப் பெறுவதில்லை.

## நிறைவுக் குறிப்புகள்:

சோவியத் காலம் பற்றி குறிப்பாக ஸ்டாலின் காலம் பற்றிய புள்ளி விபரப் பொய்கள் இன்றும் நிலவுகின்றன. ஆனால் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் புத்தகங்களாகவும் இணையத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டவையாகவும் முன்னாள் சோவியத் காப்பகங்களில் இருந்து மிகப் பெரிய எண்ணிக்கையிலான ஆவணங்கள் இப்போது பொதுவெளியில் உள்ளன. கம்யூனிச எதிர்ப்பாளர்கள் மற்றும் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் மட்டுமல்ல, நிகிதா க்ருஷ்ச்சொவ் மற்றும் கொர்பச்சோவ் போன்ற பிரமுகர்களாலும் பரப்பப்பட்ட பல பொய்கள் குறித்து ஆதாரங்கள் நிறைந்து கிடக்கின்றன. உண்மை என்னவெனில் இன்றுவரை ஸ்டாலின் மீதான அவதூறுகள் தவறானவை என்பதற்கான ஆதாரங்கள் உண்டு. ஆனால் அவதூறுகளுக்கு ஆதாரங்கள் இல்லை. பெரும்பாலானவை மூலங்கள் எதுவுமற்ற கட்டுக் கதைகள். அதற்கு அறிஞர்கள் முதல் இலக்கியவாதிகள் வரை அனைவரும் பங்களித்துள்ளனர். ஸ்டாலின் குறித்தும் சோவியத் யூனியன் குறித்தும் கட்டமைக்கப்பட்ட பொய்யான கதைகள், அவதூறுகளை உருவாக்கிப் மக்களிடம் பரப்பியதில் கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், இலக்கியவாதிகள் அடங்குகிறார்கள். அறிவுத்துறையின் அயோக்கியத்தனத்திற்கு இதில் முக்கிய பங்குண்டு. அது குறித்து அடுத்த கட்டுரையில் நோக்கலாம்.



meenilankco@thaiveedu.com

# மட்டக்களப்புப் பயணத்தில் ஜேம்ஸ் கோடினர்


## ஆங்கிலத்தில் : வண. ஜேம்ஸ் கோடினர்

## தமிழில் : சா. திருவேணிசங்கமம்


**பிரித்தானியரான ஜேம்ஸ் கோடினர் 1799–1804 காலப்பகுதியில் இலங்கையில் வாழ்ந்தவர். அப்போதிருந்த பாடசாலைகளின் அதிபராகவும் ஆங்கில திருச்சபையில் இருந்த ஒரேயொரு மதகுருவாகவும் அவர் பணி புரிந்தார். அவர் இலங்கை பற்றிய அநுபவங்களையும் அதன் புவியியல் அம்சங்களையும் மக்கள் வாழ்வியலையும் விபரிக்கும் 'A Description of Ceylon...' என்ற நீண்ட தலைப்பு கொண்ட நூலை எழுதி 1807-ஆம் ஆண்டு வெளியிட்டார். அதில் வரும் எட்டாவது அத்தியாயத்தில் இலங்கையின் முதலாவது ஆளுநரான பிடெரெறிக் நோர்த்துடன் தங்கலையில் இருந்து மட்டக்களப்புக்கு பாய்மரக் கப்பலில் பிரயாணம் செய்ததை விபரிக்கிறார். அவர் பிரயாணம் செய்தது 1800 ஆண்டு ஓகஸ்ட் 30-ம் திகதியாகும். சிறிது காலம் மட்டக்களப்பில் தங்கியிருந்த அவர் தான் கண்ட, கேட்ட விடயங்களைப் பற்றி சொல்கிறார். அவை வாசிக்க சுவாரஸ்யமாக உள்ளன.**

**மக்கள் வெள்ளை மனது படைத்தவர்களாக உள்ளனர். புதியவர்களெனினும் அவர்கள், கேட்கும் விடயங்களை ஒழிவுமறைவின்றி கூறும் இயல்பினர். மட்டக்களப்பு, மக்களுக்கு திருப்தியான இணக்கமான வாழ்வியல் பிரதேசமாக இருந்ததென்று கூறுகிறார். அதனால் மக்கள் வாழ்வியல் நாடி வேறு பிரதேசங்களுக்கு நகரும் இயல்பு இல்லாதவர்கள். தானியங்களும் மீன் உணவுகளும் காய்கறி வகைகளும் வேட்டை இறைச்சி வகைகளும் கொள்ளை மலிவு என்றவர், மட்டக்களப்பில் இருந்து அவை பிற பிரதேசங்களுக்கும் பிற நாடுகளுக்கும் ஏற்றுமதியாகின என்றும் கூறுகிறார்.**

இலங்கை மாவட்டங்களில் மிகவும் காடடர்ந்த அபிவிருத்தியடையாத மாவட்டமான மாகம்பற்று எங்கள் முன்னே விரிந்து கிடந்தது. இதை ஆராய்ந்து அறிய வேண்டிய தேவை ஆளுநருக்கும் அவர் குழுவினருக்கும் இருந்தது. இந்த பாலைவனம் மாதிரியான நிலப்பரப்பில் எங்கு போனாலும் சொட்டுத் தண்ணீர் எடுப்பது அரிது. எந்த ஓர் இடத்திலும் சாப்பாட்டுக்கு தேவையான அரிசி தேடுவது முயற்கொம்பு. இவையெல்லாவற்றையும் சிந்தித்த ஆளுநர் அங்கு போவதை பின்னர் பார்த்து கொள்ளலாம் என்று அந்த எண்ணத்தை கைவிட்டு கடல் மார்க்கமாக போவதற்கு தீர்மானித்தார். 1800 ஓகஸ்ட் 30-ம் திகதி நடுராத்திரியில் தங்கல்லை விரிகுடாவிலிருந்து அவரும் பரிவாரமும் வேறு எட்டு கனவான்களும் படகில் ஏறி டிரிக் டாட்டார் என்ற பாய்மரக் கப்பலை அடைந்தனர். விடியற்காலை நாலு மணியளவில் பாய்மரக் கப்பலில் மூட்டை முடிச்சுகள் ஏற்றும் பணிகள் பூர்த்தியாகி பயணம் ஆரம்பமாகியது. அப்போது தென் மேற்கு பருவக் காற்று வீசத் தொடங்கியது. அது பாய்மரக் கலத்தின் பயணத்துக்கு சாதகமாக அமைந்ததால் மறுநாட் காலை குறித்த இலக்கை அடைந்தது. அதோடு படகில் பாரமில்லாததும் சேர்ந்து பயணத்தை இலகுவாக்கியது. இந்தப் பருவக் காற்று ஒவ்வொரு ஆறு மாதத்திற்கும் ஒரு தடவை இலங்கை கரையில் வீசும். கரையிலும் தரையிலும் வீசும் ஏனைய காற்றுகளையும் இந்த காற்று பாதிக்கிறது. கலப் பயணத்தின் வெற்றி இந்த தென்மேற்கு பருவக் காற்றினதும் மீகாமனதும் கைகளிலும் தங்கியிருந்தது. எங்களது குழுவில் எட்டுக் கனவான்கள் இணைந்திருந்தனர். அவர்களில் முக்கியமானவர்கள் திரு. வில்லியம் ஓர், திரு. ஜோண் வில்லே என்பவர்கள். சிவில் சேவை அதிகாரிகளான அவர்கள் மாகம்பற்றில் உள்ள தூர்ந்து போன குளங்கள், உப்பளங்கள், மற்றும் காட்டின் பொதுவான நிலவரங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நியமிக்கப்பட்டவர்கள்.

ஓகஸ்டு 31-ம் திகதி எங்களது கடற்கலமான டாட்டார் கரையோரம் வழியே விரைந்து கொண்டிருந்தது. அது இரவில் தரை தட்டினால் வில்லங்கமாக போய்விடும் என்று கொமாண்டர் பயந்தார். அதனால் கரையோரமாக கப்பலை நங்கூரமிட்டு நிறுத்தினார். கிழக்கு கரையோரமாக காணப்படும் நீரோட்டம் யாரையும் ஏமாற்றி விடக்கூடியது. மறுநாள் மாலை செப்ரெம்பர் முதலாம் திகதி ஆறு மணியளவில் நாங்கள் கரையை அடைந்தோம். கலம் ஓட்டும் குழுவில் இருந்த யாரும் முதலில் இங்கு வந்திருக்கவில்லையாதலால் வழியை கண்டு பிடித்து அதை சரியாகச் செலுத்துவது சிரமமாக இருந்தது. நாங்கள் ஃபிரியரின் ஹூட் மலையை கண்டு பிடிக்க பெரிதும் சிரமப்பட்டோம். எப்படியோ சிரமப்பட்டு சரியான இலக்கைக் கண்டுபிடித்து இரவு ஒன்பது மணியளவில்

துறைமுகத்தில் நங்கூரத்தை இறக்கினோம்.

அடுத்த நாட் காலை கலத்தில் உள்ள சாமான்கள் இறக்கப் பட்டன. கொடிகளும் தெரிந்தன. இந்தியாவில் கட்டப்பட்ட சிறிய படகுகள் பயணிகளையும் பொருட்களையும் கொண்டு செல்ல பயன்பட்டன.

ஒரு மணியளவில் நாங்கள் துறைமுகத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் இருப்பது தெரிந்தது. வருமானவரி முகவர் கப் டன் தோமஸ் யங் ஆளுநரை கரைக்கு அழைத்து செல்ல பெரும் படகுடன் வந்தார். காற்று பலமாக வீசியதால் துடுப்பை வலிப்பது கடினமாக இருந்தது. நாங்கள் கலிங்கோ துணியால் பாய் போடப்பட்ட பாதையால் ஒன் றரை மைல் கடந்து கரைக்கு வந்தோம். ஆளுநர் மட்டக்க ளப்பில் வாழும் மூன்று டச்சு கனவான்கள் புடைசூழ பிரித்தா னிய கொமாண்டரால் வரவேற்கப்பட்டார். அவரது வருகை பத்தொன்பது வெடி முழக்கத்துடன் அறிவிக்கப்பட்டது. அவர் வரிசையாக சிப்பாய்கள் அணிவகுத்திருக்கும் பாதையூடாக சென்று அரசாங்க வீட்டை அடைந்தார். மாலை துறைமுகத் திலிருந்து அரை மைல் தூரத்தில் இருக்கும் வருமான முக வர் வாழும் மண்டபத்தில் விருந்துபசாரம் நடத்தப்பட்டது. பின்னர் லெஃப்டினற் மக்டெனால்ட் வாழும் இடத்தில் வந்த வர்கள் எல்லாம் தங்க வைக்கப்பட்டனர்.

மட்டக்களப்புத் தீவு மூன்று மைல் ஐந்து பர்லாங் சுற்றளவு டையதாகும். அங்குள்ள மணல் கரையில் காலாற நடந்து செல்லலாம். அங்குள்ள கோட்டை சற்சதூர வடிவுடையது. கோட்டை சுவருக்கு வெளியே நூறு யார் தூரத்தில் பல குடி சைகள் கொண்ட கிராமம் உள்ளது. அங்கே சீருடையணிந்த காவற்காரர்கள் இருந்தனர். அத்தோடு இருபத்திநான்கு பீரங் கிகள் இருந்தன. மேலும் படைவீரருக்கான விடுதி, தானியக் கிடங்கு, ஆயுதக் கிடங்கு மற்றும் கொமாண்டருக்கான விசா லமான மண்டபம் ஆகியன அங்கிருந்தன. சில நூறு யார் கள் தள்ளி அங்கொன்றும் இங்கொன்றுமாக பல குடிசைகள் காணப்பட்டன. அதன் முனையில் இரண்டு சிறு போர்த்துக் கீச தேவாலயங்கள் உள்ளன. ஒன்று அந்த மீனவ மக்களுக் கானது. மற்றது ஏனையவர்களுக்கானது. இங்குள்ள பிரதிமை கள் சிறியதாக இருந்தாலும் அழகாக செய்யப்பட்டுள்ளன. இக் கட்டடங்கள் நேர்த்தியாக கட்டப்பட்டு வளைந்த ஓடுகள் போடப்பட்டவை. இதை போன்ற சிறு தேவாலயமொன்று எதிர்க் கரையிலும் இருந்தது.

இங்குள்ள மக்கள் இந்துக்களும் முகம்மதியர்களுமாவர். முகம்மதியர்கள் வெளித் தெரியக் கூடிய வணக்கத் தலங்கள் எதையும் கொண்டிருக்கவில்லை. சின்னக் குடிசைகளில் தமது வணக்கத்தை செய்கிறார்கள். எல்லோரும் மலபார் மொழியை பேசுகிறார்கள். அவர்கள் நெகிழ்ச்சியாக சுற்றப் பட்ட தலைப் பாகைகளை அணிகிறார்கள். அது கோரமண்ட லக் கரையில் உள்ளவர்கள் அணிவதை விட திறந்ததாகவும் மெல்லியதாகவும் உள்ளது. அவர்களது காதுகள் இளவய தில் துளையிடப்பட்டு அதற்குள் பனையோலை அல்லது மரத் துண்டு செருகிவிடப்படுகிறது. அவ்வோட்டை அவர்கள் பெரியாளாகும் போது ஒரு மனிதனின் கை போகக்கூடிய அளவு பெரிதாக தோன்றும். பணக்காரர்களும் கூட மஸ்ஸின் கரை போட்ட லொயின் துணியை முழங்கால் வரையும் தொங்கவிட்டிருப்பதை தவிர வேறு உடை அணிவதாக தெரி யவில்லை. மீன் பிடியை வாழ்வாதாரமாக கொண்ட பொது மக்கள் தமது நிர்வாணத்தை குறைந்த ஆடையை உடுத்தி சமாளித்துக் கொள்கிறார்கள்.

இந்த மாகாணத்தில் புரோடஸ்தாந்து கிறித்தவர்கள் மிகக் குறைந்த தொகையினரே உள்ளனர். ஆளுநர் இந்த மாகா ணத்துக்கு மலபார் போதகரை நியமித்தது அண்மைக் காலத் தில் தான். நீண்ட காலமாக கவனிக்கப்படாதிருந்த பாடசா லைகளை சீர்திருத்தி இப்போதுதான் நல்ல நிலைக்கு கொண்டு வந்துள்ளனர்.

மட்டக்களப்பை சூழ உள்ள கடல் உட்குழிவு முப்பது மைல் நீண்டு செல்கிறது. அங்கே மட்டக்களப்பு தீவை தவிர எரு மைத் தீவு, மான் தீவு ஆகிய தீவுகளும் உள்ளன. அவைக ளின் பெயர்கள் அத் தீவுகளில் வாழும் மிருகங்களின் பெய ரில் அமைந்துள்ளன. பக்கத்தில் உள்ள நிலங்கள் சமதரை யானவை. அவை ஆடு மாடு, மேய்க்க தோதானவை. வாவி ஓரத்தில் இருந்து நிலம் மேலெழும்பி ஃபிரெய்யரின் மலை, ஃபுனல் குன்று வரையும் உயர்கிறது. அவ்வாறு உயரும் போது உருவாகும் கிடையான சமவெளிகளில் ஒன்றில் கண்டி அரசனின் மாளிகை அமைந்துள்ளது.

ஆற்றில் படகுகள் பிரயாணம் செய்யக்கூடியவாறு இடைக் கிடை இடைவெளி அமைந்துள்ளது. தூரதிஷ்டவசமாக ஆற் றின் கழிமுகத்தில் மணல் திட்டு ஒன்று உள்ளது. அத் திட்டை ஆறு அடி அகலத்தில் உடைத்துக் கொண்டு கட லுக்குள் பாய்கிறது. அதில் சிறிய படகுகள் போக்குவரத்து செய்யலாம். நாங்கள் மட்டக்களப்பில் இருந்த போது பிரிக் டாட்டார் என்ற எழுபது தொன் நிறை உடைய எங்கள் கடற் கலம் அந்த மணல் திட்டை கடந்து வந்தது.

மட்டக்களப்பில் 60 சிப்பாய்களும் 50 ஐஸ்கர்களும் நிறுத்தப் பட்டிருந்தனர்.

செப்ரெம்பர் 4-ம் திகதி படகில் 10 மைலுக்கு அப்பால் உள்ள வண்டமால், ஏறாவூர் ஆகிய இடங்களை பரிசோதிப் பதற்காக ஆஸ்பத்திரி மேற்பார்வையாளருடன் சென்றேன். அங்கே பெரியம்மை பெருகி இருந்ததால் அவ்விடங்களில் வாழ்வதை மக்கள் கைவிட்டிருந்தனர். கணவர்கள் தமது மனைவிமாரை, தாய்மார் தமது பிள்ளைகளை, மகன்கள் தமது தந்தையர்களை பரிதாபத்துக்குரிய குடிசைகளில் கைவிட்டு சென்றனர். சில வேளைகளில் அவர்களுக்கு தேவையான பொருள்களை குடிசைகளில் வைத்துவிட்டு சென்றனர். பஞ்சம் எங்கும் தலைவிரித்தாடியது. காட்டு மிரு கங்கள் மனித உடல்களை இழுத்து சென்றன. டச்சுக்காரர் தடுப்பூசி போடுவதில் அக்கறையில்லாதவர்கள். அதைச் செய்வதற்கு உள்நாட்டவர்களை அவர்கள் ஊக்கப்படுத்த வில்லை.

கிராமங்களை விட்டு மக்கள் அகன்ற பின் அவைகள் யானைகள், பன்றிகள், சிறுத்தைகள் ஆகியவற்றின் வேட் டைக்களமாகின. யானைகள் வேலியை உடைத்து தென்னை கள், வாழைகள் ஆகியவற்றை அழித்து நிர்மூலமாக்கின. மட்பாண்டங்கள், கைத்தறிகள் சிதிலமாகி அங்கும் இங்கும் இறைந்து கிடந்தன. ஏறாவூரில் கைவிட்ட மூன்று மனிதர்க ளின் எலும்புக் கூடுகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக கிடந்தன. அவைகள் சிறுத்தைகளினாலோ பன்றிகளினாலோ குதறப்பட்டிருக்க வேண்டும். வண்டமலில் நாற்பது பேர்

வரை வைசூரியால் மாண்டுள்ளனர். பத்துப் பேர் வரை பிழைத்துள்ளனர். வைசூரி அடங்கிய பின் தங்களது அழிந்து போன குடிசைகளை திரும்பவும் கட்டிக்கொண்டுள்ளனர்.

இலங்கையில் அரசாங்கம் தாபிக்கப்பட்டவுடன் பெரியம்மை யின் தீவிரத்தை எப்படியும் குறைக்க நோர்த் நடவடிக்கை எடுத்தார். நாடெங்கிலும் நாலு பிரதான மாவட்டங்களை தெரிவு செய்து வைசூரிக்கெதிராக தடுப்பூசி போட நடவ டிக்கை எடுத்தார். மற்ற சிறிய இருபத்தி நான்கு மாவட்டங் களில் மருத்துவ மேற்பார்வையாளர்களை தமது வீடுகளில் அதை செய்ய ஆலோசனை வழங்கினார். இதனால் நோய் ஒரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது. கிட்டத்தட்ட ஐரோப் பிய நாடுகள் போல் நோய் குறைந்திருந்தது. வக்சீன் அதா வது தடுப்பூசி நடவடிக்கைகள் பம்பாயிலிருந்து அனுப்பப் பட்ட மருந்துப் பொருட்களை கொண்டு 1802 ஓகஸ்டில் திரு கோணமலையில் ஆரம்பிக்கப்பட்டன. பின்னர் சென்னையில் இருந்து வருவிக்கப்பட்ட மருந்துப் பொருட்களைக் கொண்டு நாடெங்கும் தடுப்பூசி போடும் செயற்பாடு முன்னெடுக்கப்பட் டது.

வண்டமாலில் கண்டியப் பிரதேசங்களிலிருந்து கொண்டு வரப்பட்ட பருத்தி நூல் கட்டுகளும் சுத்தப்படுத்தும் இயந்தி ரங்களும் எளிய தறிகளும் காணப்பட்டன. நெசவாளிகள் வேலையில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இங்கி லாந்தில் நடப்பதைப் போல அங்கும் நெசவு நடந்து கொண் டிருந்தது. இங்கு தயாரிக்கப்படும் துணிகள் தரமானவை என்று சொல்ல முடியாது. ஆயினும் உள்ளூர் தேவைக்கு பயன்பட்டன.

திரிகோணமலையில் போர்த்துக்கீச வம்சாவழியை சேர்ந்த இளைஞன் ஒருவன் காட்டுப் பன்றி இறைச்சியை உப்பிட்டு ஒரு இறாத்தல் ஒரு பணத்திற்கு அல்லது இரு பென்சுக்கு விற்றுக் கொண்டிருந்தான். சில வேளைகளில் உடன் வெட் டப்பட்ட பன்றி இறைச்சியையும் விற்றான். அது நல்ல ஆட் டிறைச்சி போல சுவையாக இருந்தது. அவன் வேட்டையாட எருமை மாடென்றினை பழக்கி வைத்திருந்தான். அந்த மாட் டில் மறைந்து போய் காட்டுப் பன்றிகளை இலகுவாகச் சுடு வான்.


தங்கல்லையிலிருந்து தரை வழியாக ஓகஸ்ட் மாதம் 27-ம் திகதி புறப்பட்டு திரு. ஜேண்வில் செப்ரெம்பர் 7-ம் திகதி மட்டக்களப்பை வந்தடைந்தார். அவரின் பரிவாரத்தில் பல்லக்கு தூக்குபவர்களும் உதவியாளர்களும் அடங்கியிருந் தனர். அவர் வசதி கருதி படகை பயன்படுத்தவில்லை. பாதை நினைத்ததைவிட நன்றாக இருந்ததாக கூறினார். அவர் புறப்பட்ட மூன்று நாள் வரையும் எந்த தென்னை மரத் தையும் காணவில்லையாம். பிரயாணத்தின் போது தனித்தனி யானைகளையும் பெருமளவு முதலைகளையும் கண்டதாக கூறினார். சிற்பங்களுடன் கூடிய இந்துக் கோயில் ஒன்றை யும் கண்டிருக்கிறார்.

செப்ரெம்பர் 8-ம் திகதி இந்த எழுத்தாளர் பெரிய துறையில் உள்ள ஒரு கிறித்துவ பாடசாலைக்கு விஜயம் செய்தார். பெரியதுறை மட்டக்களப்பு தீவிலிருந்து இரண்டு ஆங்கில மைல் தூரத்தில் உள்ளது. அங்கிருந்த மாணவர்களின் தோற்றம் திருப்தியளிக்க கூடியதாக இருந்தது. அங்குள்ள ஆசிரியருக்கு வயது வெறும் பதினைந்துதான் என்பது ஆச்ச ரியமானது. அவர் பொது நிறமானவர் சாந்த சுபாபமுள்ளவர் இனிமையாக பேசுபவர். மாணவர்கள் எதையும் கிரகிக்கும் ஆற்றல் உடையவர்களாக காணப்பட்டனர். அவர்கள் தலை முடி நன்கு வாரப்பட்டு, முடிச்சிட்டு ஒரு வெள்ளி ஊசியால் செருகப்பட்டு தலையின் இடப் புறத்திலோ வலப்புறத்திலோ கொண்டையிடப்பட்டிருந்தது. அவர்களின் உடை நேர்த்தியா னதாகவும் சுத்தமானதாகவும் இருந்தது. அவர்கள் வயதுக்கு வந்தவுடன் பக்கத்து கொண்டையை தலைக்குப் பின்னால் முடிந்துவிடுவர். உயர் வகுப்பை சேர்ந்த மாணவர்கள் கழுத் தில், காலில், புயங்களில் தங்க மாலை அணிந்திருந்தனர். மஸ்லின் துணியை இடையில் சுற்றியிருந்தனர். மாணவர்கள் பாயில் அமர்ந்திருந்தனர். கால்களை இடையே வைத்திருந்த னர். அவர்கள் பாடத்தை மிகுந்த சத்தம் போட்டு திரும்ப திரும்ப ஒப்புவித்தனர். அவர்கள் எழுத்தை சிங்களவர்கள் கற்பது போல் கற்றனர். இந்திய மொழிகளின் எழுத்துக்களை யும் கற்றனர். தமக்கு முன்னே தரையில் பரப்பப்பட்டிருக்கும் மணலில் எழுதிப் பழகினர். ஏ என்று எழுதினால் ஏ என்று சத்தம் போட்டு கத்தி சொன்னர். இவ்வாறு ஐந்து வயதான சிறுவர்கள் சிறப்பாக எழுதக் கற்றுக் கொண்டனர். அப்படி சிறப்பாக எழுதக் கற்றுக் கொண்ட மாணவர்களுக்கு ஓலை யில் எழுத்தாணி கொண்டு எழுத கற்பிக்கப்பட்டது. ஓலை எனப்படுவது எழுதக் கூடியவாறு கத்தரித்து எடுக்கப்பட்ட பனை அல்லது தளப்பத்து ஓலையாகும். எழுத்தாணி என் பது கூர்முனை கொண்ட இரும்பு குச்சியாகும். எழுதியவை கள் பாதுகாக்கப்பட ஒரு வகை இலைச்சாறு ஓலையில் பிழி யப்பட்டு காயவைத்து எடுத்து கட்டப்பட்டு வைக்கப்படும். இலைச்சாறு இடப்படுவது எழுத்து தெளிவாக தெரிவதற்காக வாகும்.

பெரியதுறையருகில் ஒரு இந்துக் கோயில் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. அக்கோயிலின் சுவரில் சில மனித மற்றும் யானையின் சித்திரங்கள் காணப்படுகின்றன. மண் இப்பகுதியில் மணற்பாங்கானது தென்னை மரங்கள் வளர வாய்ப்பானது. இங்குள்ள காடுகளில் முதிரை போன்ற பெறுமதியானதும் கப்பல் கட்டுமானத்துக்குரியதுமான மரங்க ளும் கருங்காலி போன்ற மரத்தளபாடங்கள் செய்யப் பொருத்தமான மரங்களும் விளைகின்றன. பக்கத்தில் உள்ள பிரதேசம் இலங்கையிலேயே மிகவும் மலிவானதும் வளமான துமான பகுதியாகும். இங்கே ஒன்றேகால் பணத்துக்கு ஒரு அளவு அரிசி வாங்கலாம். ஆனால் உள்நாட்டில் இதே அளவான அரிசியை வாங்க கிட்டத்தட்ட இரண்டு ஆங்கில பென்ஸ் தேவைப்படும். மட்டக்களப்பு மாகாணத்திலிருந்து பெருமளவு தானியங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு ஏற் றுமதியாகின்றன. இங்கே மீன்கள் மிக மலிவு. இரண்டு கடு மையான வேலையாட்களுக்கு போதுமான மீனை அரை பென்னிக்கு வாங்கலாம். தரமான இறாலும் மட்டியும் பெரும ளவில் கிடைக்கின்றன. வேட்டை மிருகங்களின் இறைச்சியும் சாதாரணமாக கிடைக்கிறது. பாக்கு, வெற்றிலை, புகையிலை மற்றும் மசாலாச் சரக்குகள் பெறுவது இங்கு அரிது. ஏனென் றால் இந்த மாகாணத்தில் இவைகளை விளைவிக்க யாரு மில்லை. ஆயினும் ஐரோப்பியர்களின் வாழ்க்கை தரத்திற்கு இவைகள் மலிவாக இருக்கின்றன.

இப்பிரதேச உள்ளூர் மக்கள் புதியவர்களோடும் கூட இணக் கமாக பழகும் தன்மை உள்ளவர்கள். வெள்ளை மனதுடன்

பிரதேசம் பற்றிய விபரங்களை சொல்வார்கள். இனிய சுபாவம் உடையவர்கள். கரையோரங்களில் நல்ல தரமான மீன்கள் கிடைப்பதால் அவர்களுக்கு ஆழ் கடலுக்கு போக வேண்டிய தேவை இல்லை. அவர்களிடம் திருப்தியும் மனநிறைவும் காணப்படுகிறது. அவர்களுக்கு தாம் பிறந்த இடத்தை விட்டு நகர துளியும் விருப்பம் இல்லை. அதற்கான தேவையும் இல்லை. அவர்களின் வாழ்வாதாரத்துக்கு தேவையானதை அவர்கள் உற்பத்தி செய்து கொள்கிறார்கள். இங்கே துறைமுகங்கள், மைதானங்கள், தோட்டங்கள்



தவிர மற்ற நிலங்கள் எல்லாம் தனியாருக்கு சொந்தமானவை.

இங்கே பல வகை தளப்பத்து மரங்கள் வளருகின்றன. அதிலொன்றின் படம் இங்கே வரையப்பட்டுள்ளது. இதுதான் ஓலையில் பெரிய வகையாகும். இது பனையோலை விசிறியை ஒத்ததாக இருந்தாலும் அளவில் மிகப் பெரிது. தளப்பத்து மரம் தடிப்பானதும் உயரமானதுமாகும். ஆறரை அடி சுற்றளவும் நூறு அடி உயரமுள்ளதாகவும் வளரும். உள்ளூரவர்கள் இதன் ஓலையை இலகுவான, இடவசதியான, குடையாகவும் கூடாரமாகவும் பயன்படுத்துகிறார்கள். இவ்வோலை மேலும் இந்திய மொழிகளில் புத்தகங்கள் எழுதவும் பயன்படுகிறது. கறுத்த இதன் பழம் பனைமரத்தின் பழத்தைவிட இரு மடங்கு பெரிதானது.

வாழை மரம் அபரிமிதமாக வீட்டுத் தோட்டங்களிலும் தோப்புகளாகவும் செய்கை பண்ணப்படுகின்றது. இத்தோட்டங்களிடையே பனை, தளப்பத்து, பலா, தென்னை மரங்களும் கலந்து காணப்படுகின்றன. இவைகளிடையே நடந்து போவது இனிமையான அனுபவமாக உள்ளது.

தத்துவஞான மனநிலை கொண்ட பெரியோர்கள் இலௌகி வாழ்வின் நெருக்கடிகளிலிருந்து விலகிப் போயிருந்து தியானம் செய்து பரவசமடைய இந்த மாதிரி இடங்கள் வாய்ப்பாக அமைகிறது. இவ்விடங்களில் மாலை நேரங்கள் அதிகம் பரவச நிலைக்கு அவர்களை ஆழ்த்துகின்றன.

ஒரு நாள் எனக்கு மட்டக்களப்பு உயர் நீதிமன்றத்தில் இலங்கை பிராமணர் ஒருவர் சத்தியம் செய்யும் காட்சியை காணும் சந்தர்ப்பம் வாய்த்தது. பனையோலையில் எழுதப்பட்டிருந்த அவர்களின் புனித நூலை மஸ்லீன்துணியால் பல மடங்கு சுற்றி ஒரு மேசையில் வைத்து கட்டி ஒரு இளைஞன் காவிக்கொண்டு வந்தான். அந்த மேசைக்கு ஆறு கால்கள் இருந்தன. முன் நான்கு கால்களுக்கிடையேயான பகுதியை -அது சுவடியை கொண்டிருக்கும் பகுதி - அவ்விளைஞன் தலையில் தூக்கிக்கொண்டு போக பின் இரு கால்களை சத்தியம் செய்விக்கப் போகின்ற பிராமணர் தூக்கிக்கொண்டு வந்தார். கடைசியில் அது தரையில் வைக்கப்பட்டு சுற்றியிருந்த துணிகள் பிரித்தெடுக்கப்பட்டு சுவடியை வெளியே எடுத்தனர். அந்தப் பிராமணர் சத்தியம் செய்கின்ற சூழ்நிலையை விளக்கி சில வார்த்தைகள் கூறி சத்தியம் செய்யப் போகின்றவரின் கைகளிலும் தலையிலும் தண்ணீரை தெளித்தார். பின்னர் அவன் தலை குனிந்து அந்த சுவடியை தொட்டு வணங்கியவுடன் அந்த நிகழ்வு நிறைவுற்றது. இந்த இருவரின் நடவடிக்கைகள் பக்திமயமாக இருந்தன. இதை படமாக வரைந்து வைப்பது நல்லதென்று திரு. நோர்த் அபிப்பிராயம் தெரிவித்தார். ஆனால் தகுதியான ஓவியர் கிடைக்கவில்லை. பின்னர் ஓர் ஓவியரிடம் எனது மனதில் பதிந்திருந்த அந்தக் காட்சியை விபரிக்க அவர் வரைந்த ஓவியமே இங்கே உள்ளது.

நாங்கள் மட்டக்களப்பை விட்டு புறப்பட தீர்மானித்த நாள் செப்ரெம்பர் 17-ம் திகதியாகும். அன்று கப்டன் யங் எங்களுக்கு காலை விருந்துபசாரம் அளித்தார். சிப்பாய்கள் அணிவகுத்து நிற்க ஆளுநர் கடற்கரையில் சிறிது நேரம் நடைப்பயிற்சி செய்தார். ஆளுநருக்கு சகலரும் மரியாதை செய்தனர். அதன் பின் படகில் ஏறி மாலை ஐந்து மணியளவில் அரச கப்பலான ரிடென்றை அடைந்தோம். அவரின் பரிவாரத்தில் அரைவாசிப்பேர் ரிடென்றில் ஏறிக்கொள்ள மீதிப் பேர் மற்றொரு கப்பலான டாட்டாரில் ஏறிக்கொண்டனர். ரிடென்றில் மூட்டை முடிச்சுகள் ஏற்றப்பட்டவுடன் கப்பலின் பாய் விரிக்கப்பட்டது. காற்று எங்களுக்கு சாதகமாக வீசியது. நடுச்சாமம் அளவில் நாங்கள் நடுக்கடலில் இருந்தோம். 18-ம் திகதி காலை நேரமளவில் குறிப்பிடத்தக்க அளவு தூரம் நாங்கள் பயணம் செய்திருந்தோம். பின்நேரம் 3 மணியளவில் ஃபவுல் முனையை நாங்கள் அடைந்தோம். அங்கிருந்த போது ஆளுநரின் வருகையை அறிவிக்கும் முகமாக தீர்க்கப்பட்ட வேட்டுகளின் சத்தம் கேட்டது. ஓஸ்ரன் பேர்க்கிலிருந்தும் திரிகோணமலையிலிருந்தும் புகை தெரிந்தது.

இரவில் ஃபவுல் முனைக்கு சற்று தொலைவில் பாய் இறக்கப்பட்டது. காற்றும் அடங்கியிருந்தது. ஏனென்றால் இரவில் பேக் குடாவுக்குள் கப்டன் கப்பலை செலுத்த விரும்பவில்லை. குடாவை பற்றி முன் அநுபவம் அவருக்கு இல்லை. அது பற்றி ஆலோசனை பெற யாரும் இல்லை. நல்ல தென்றல் வீசிக்கொண்டிருந்த அதிகாலை வேளையில் 19-ம் திகதி திருகோணமலை கரையை நாங்கள் அடைந்தோம்.




thiruvenysangamam@thaiveedu.com

# ஆராய்ச்சி முறையியல் சொற்களஞ்சியம்

ஆங்கில மூலம் : ஜயதேவ உயன்கொட
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம்

சமூக விஞ்ஞானங்கள், மனிதப் பண்பியல், சட்டம் ஆகிய புலமைத் துறைகளில் பின்பட்டப் படிப்பினைத் தொடரும் மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படக் கூடிய நூல் Writing Research Proposals: A Theoretical and Practical Quide (SSA 2010) ஆகும். இந் நூலின் ஆசிரியர் பேராசிரியர் ஜயதேவ உயன்கொட ஆவர். நூலின் பின்னிணைப்பாக முக்கியமான கலைச் சொற்கள் சிலவற்றிற்கு விளக்கம் தரும்



சொற் களஞ்சியத்தை 'Key Words' என்ற தலைப்பில் நூலாசிரியர் தந்துள்ளார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பைக் கீழே தந்துள்ளோம். தமிழில் ஆராய்ச்சி முறையியல், சமூகவியல், மெய்யியல் ஆகிய துறைகளில் ஆர்வம் உடையோரும், பொது வாசகர்களும் படித்துப் பயன் பெறக்கூடிய வகையில் இத் தமிழாக்கத்தைச் செய்துள்ளோம். 20 புதிய கலைச் சொற்களுக்கான விளக்கம் இங்கே தரப்பட்டுள்ளது.

**சொற்களஞ்சியம்:**
**விஞ்ஞான மெய்யியல் குறித்த முக்கியமான கலைச் சொற்களின் தொகுப்பு:**

## Critical Realism - விமர்சன யதார்த்தம்:

விஞ்ஞான மெய்யியலின் அண்மைக்கால வளர்ச்சிகளில் ஒன்றாக அமைவது, 1960-களில் தோன்றிய விமர்சன யதார்த்தம் என்ற சிந்தனைப் பிரிவாகும். இப்பிரிவினர் இயற்கை விஞ்ஞானத்தின் அனுபவவாதத்தையும், சமூக விஞ்ஞானங்களின் நேர்க்காட்சி வாதத்தையும் விமர்சனம் செய்தனர்.

றோய் பாஸ்கர் (Roy Bhasker) என்னும் பெயருடையவரும் இந்தியக் கலப்புடைய பிரித்தானியருமான மெய்யியலாளர் சமூக விஞ்ஞானங்களின் விமர்சன யதார்த்தம் சிந்தனையைத் தோற்றுவித்தவராவர். விமர்சன யதார்த்தம் பின்வரும் பிரதான கருத்துக்களை முன்மொழிகிறது.

- மனிதத் தன்னிலைக்கு (Human Subject) அப்பால் சுதந்திரமான புற உலகின் இருப்பு உள்ளது.
- புற யதார்த்தத்தை அறிகை (Cognition) வழி மனித மனத்தால் பெறமுடிகிறது.
- மனிதத் தன்னிலைச் செயற்பாடு (Praxis) மூலம் புறநிலை யதார்த்தத்தை மாற்றலாம்.
- புறநிலை யதார்த்தத்தின் கட்டமைப்பு, இயக்கம், போக்குகள் என்பனவற்றை ஆராய்வதே இயற்கை விஞ்ஞானங்களதும் சமூக விஞ்ஞானங்களதும் பணியாகும். றோய் பாஸ்கரின் விமர்சன யதார்த்தத்திற்கு மார்க்சிய மெய்யியல் அடிப்படைகளுடன் தொடர்பு உள்ளது.

## Empiricism - அனுபவவாதம்:

உறுதியான அறிவைப்பெறுவதற்கான நம்பகத்தன்மையுடைய ஒரே ஒரு வழி புலன்களால் பெறும் அனுபவமாகும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு முறையியல் அனுபவவாதம் எனப்படும். இம் முறையியல் புலன்கடந்த மெய்யியல் அல்லது அபௌதிகம் (Meta- Physics) என்பதை நிராகரித்து எழுச்சி பெற்றது. 16-ம் 17-ம் நூற்றாண்டில் உருவாக்கம் பெற்ற விஞ்ஞான மெய்யியலின்படி அறிவின் உற்பத்திக்கான வலிதுடைய முறையியலாக அனுபவாதத்தை இயற்கை விஞ்ஞானம் ஏற்றுக்கொண்டது. இயற்கை விஞ்ஞானங்களில் அறிவின் உற்பத்தி இம் முறையியலின்படி நடைபெற்றது.

## Epistemology - அறிவாராய்ச்சியியல்:

மனித அறிவின் இயல்பு, அதன் சாத்தியப்பாடுகளும் மட்டுப் பாடுகளும் என்பன குறித்து ஆராயும் மெய்யியல் பிரிவு அறிவாராய்ச்சியியல் எனப்படும். இச் சொல்லின் நேரடிப் பொருள் அறிவுக் கோட்பாடு என்பதாகும். மேற்கு நாட்டு மெய்யியலில் 19-ம் நூற்றாண்டு முதல் அறிவாராய்ச்சியியல் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது.

## Ethnomethodology - இனவியல் முறையியல் / எத்னோமெதடோலொஜி:


இம் முறையியல் பள்ளி சமூகவியல் துறை சார்ந்தது. ஹரோல்ட் ஹார்பிங்கேல் (Harold Garfinkel) என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. ரல்கொட் பார்சன்ஸ் என்னும் சமூகவி யலாளர் பிரதிநிதித்துவப்படுத்திய மைய நீரோட்ட அமெரிக் கச் சமூகவியலுக்கு மாற்றாக இம் முறையியல் முன்னிருத் தப்பட்டது. 'எத்னோ மெதடோலொஜி' என்ற சொல்லின் நேர டிப் பொருள் மக்களின் முறைகளைக் கற்றறிதல் (The Study of the Methods of the People) என்பதாகும். மனிதரின் அன் றாட வாழ்வின் சாதாரண உலகியல் விடயங்களையும் பொதுப் புத்தியின்பாற்பட்டவற்றையும் பொருள் கொள்வதை யும், புரிந்து கொள்வதையும் இம் முறையியல் நோக்கமாகக் கொண்டுள்ளது. தோற்றப்பாட்டியல் முறையியலினால் இனவி யல் முறையியல் சிந்தனை தூண்டுதல் பெற்றது. இது மக்க ளின் சொந்தக் கோட்பாடுகள், வகைமைகள், எண்ணக்கருக் கள் நடைமுறைகள், அறிகை வரைசட்டங்கள் (Cognitive Frame works) என்ற கருவிகளின் ஊடாக அறிவைப் பெறு வதை இலக்காகக் கொண்டுள்ளது. சமூகம் பற்றி ஆராயும் ஆய்வாளர் குறித்தவொரு சமூகத்திற்கு வெளியே இருப்ப வர். அவரால் அச் சமூகத்தின் மனிதரின் நடவடிக்கைகள் பற்றிய பொருள் விளக்கம் செய்தல் ஏற்புடையதன்று என இனவியல் முறையியல் நிராகரிக்கிறது.

## Falsification - பொய்ப்பித்தல்:

கார்ல் பொப்பரால் விஞ்ஞானத்தின் மெய்யியல் துறைக்கு இவ்வெண்ணக்கரு அறிமுகம் செய்யப்பட்டது. விஞ்ஞானக் கோட்பாடு அல்லது கருதுகோள் ஒன்றின் வலிதுடைமை, அத னைச் சான்றுகள் கொண்டு உறுதி செய்வதால் (Affirmation) நிறுவப்படுவதில்லை சான்றுகள் மூலம் அது பொய்பிக்கப் பட்டு நிராகரிக்கப்படுவதை எதிர்த்து நிற்கும் வலுவே அதனை நிலைத்து நிற்கச் செய்கின்றது என்பதைப் பிரதான வாதமாகப் பொப்பரின் இவ்வெண்ணக்கரு முன்வைத்தது. விஞ்ஞானத்திற்கும் விஞ்ஞானமல்லாத (Non–Science) அபௌதிகத்திற்கும் (Meta-Physics) இடையிலான எல்லைக் கோட்டைத் தீர்மானிப்பதற்கு உதவும் அளவுகோல், ஒரு கோட்பாடு பொய்பிக்கப்படக் கூடியதாயிருத்தல் (Falsifiability of a Theory) என்பதாகும். கோட்பாட்டைப் பரீட்சித்தலும் (Verification) உறுதிப்படுத்தலும் அல்லவென்றும் பொப்பர் கூறினார். அவர் தொகுத்தறிமுறையையும், அவதானித்தல் என்னும் விதியையும் (Law of Observation) நிராகரிப்பதன் மூலம் அனுபவவாத மரபில் ஒரு முக்கிய திருப்பத்தை ஏற் படுத்தினார்.

## Hermeneutics - பொருள்கோடலியல் / பொருள்கோளியல்:

இது 19-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய பின்னை நேர்க்காட்சிவாத மெய்யியலின் பின்புலத்தில் தோன்றிய முறையியல் ஆகும். 20-ம் நூற்றாண்டில் செல்வாக்குள்ள கோட்பாடாக இது வளர்ச்சி பெற்றது. 'ஹெர்மனூயிட்டிக்ஸ்' என்ற சொல்லின் நேரடிப் பொருள் விளக்கியுரைத்தல் விஞ் ஞானம் என்பதாகும். கிறிஸ்தவ மதம், யூத மதம் ஆகிய இரண்டினதும் சமயப் பனுவல்களை விளக்கியுரைத்துப் பொருள் கொள்வதாகப் பொருள்கோடலியல் இருந்து வந் தது. 19-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சமூக விஞ்ஞான




ஆய்வுகளில் இயற்கை விஞ்ஞானத்தின் விஞ்ஞான முறையை (Scientific Method) புகுத்துதல் தொடர்பான பெரு விவாதம் ஒன்று நடைபெற்றது. அவ் விவாதத்தின் பின்னணி யில் டில்தே (Dilthe) பொருள்கோடலியலை நேர்க்காட்சி வாதத்திற்கு மாற்றான முறையாக முன்வைத்தார். மனித அனுபவத்தின் அகப் பரிமாணங்களை விளக்கியுரைப்பதற்கு இக் கோட்பாடு உதவுவதாக அமைந்தது. டில்தேக்குப் பின் னர் ஹன்ஸ் ஜோர்ஜ் ஹடமர், மார்ட்டின் கீட்கர், போல் றிக்- கோர் என்போர் பொருள் கோடலியலை மேலும் வளர்ப்பதற் குப் பங்களிப்பு நல்கினர். ஹடமர், கீட்கரின் மெய்யியலால் கவரப்பட்டவராய் இருப்பு (Being), உள்ளதன் இயல் (Ontology) ஆகியன சார்ந்த விடயங்களையும் பொருள் கோடலி யலில் இணைத்துக் கொண்டார். இதனால் டில்தேயின் நோக் கில் முறையியலாக மட்டும் நோக்கப்பட்ட பொருள்கோடலி யல் புதிய பரிமாணத்தைப் பெற்றது.

## Hypothesis - கருதுகோள்:

விஞ்ஞான ஆய்வின் போது ஆய்வுப் பிரச்சினை ஒன்றைக் குறித்து முன்வைக்கப்படும் தற்காலிகமான விளக்கம் கருதுகோள் எனப்படும். ஆய்வாளர் முன்வைக்கும் கருதுகோளைத் தாம் அவதானித்தல் வழித்திரட்டிய தரவுகளைக் கொண்டு நிருபிப்பார். அல்லது அக் கருதுகோள் தவறானது என நிராகரிப்பார். இச் செயல்முறை கருதுகோளைப் பரீட்சித்தல் (Hypothesis Testing) எனப்படும். நேர்க்காட்சிவாத மரபைச் சாராதவர்கள் கருதுகோள், கருதுகோளைப் பரீட்சித்தல் என்பனவற்றில் சந்தேகங்களைக் கொண்டவர்களாய் மாற்று வழிகளை முன்மொழிந்தனர். தற்காலிகமான வாதம் (Tentative Argument), பிரதான கருத்து (Core Idea), பிரதான கருத்தேற்றம் / (Core Proposition) என்பன அவர்கள் முன்மொழிந்த மாற்றுக் கருத்துக்களாகும்.

## Induction / Inductive Method: தொகுத்தறி முறை:

தருக்கமுறை நியாயித்தலில் தொகுத்தறிமுறை என்பது ஒரே விதமான பல நிகழ்வுகளில் ஒரு தனி நிகழ்வை (Single Event) அவதானித்த பின்னர், அது பற்றிய பொதுமைப்படுத்துதலை (Generalisation) செய்வதைக் குறிக்கும். விஞ்ஞான மெய்யியலில் தொகுத்தறிமுறை, பகுத்தறிமுறை நியாயித்தலுக்கு எதிராக மேற்கிளர்ந்த முறையாகும். தொகுத்தறி முறை நிகழ்வுகளும் பொருட்களும், அவதானிக்கப்படுபவை, அவதானித்தல் மூலம் அவற்றை அறியலாம் என்றும் அனுமானத்தை அடிப்படையாகக் கொண்டது.

## Meta physics - புலன் கடந்த மெய்யியல் / அபௌதிகம்:

இவ்வுலகத்தின் இயல்பு, இருத்தல் (Existence) என்பதன் பொருள், மனித வாழ்க்கையின் அர்த்தம் போன்ற அடிப்படை விடயங்களை ஆராயும் மெய்யியல் துறை, புலன் கடந்த மெய்யியல் அல்லது அபௌதிகம் என அழைக்கப்படும். அனுபவவாதம் (Empiricism) என்ற ஆய்வு முறையியல் தோற்றம் பெற்ற பின்னர் அனுபவத்தின் மூலம் பெறப்படும் சான்றுகள் அறிவின் அடிப்படை எனக் கருதப்படலாயிற்று. இதனால் புலனறிவு அனுபவத்தால் பெறப்படும் சான்றுகள் கொண்டு உறுதிப்படுத்தப்பட முடியாத அறிவான புலன் கடந்த மெய்யியல் மதிப்பிழந்தது.

## Methodological Pluralism - முறையியல் பன்மைத்துவம்:

ஆய்வு முறைகள் பல உள்ளன. இவ்வாறு பல ஆய்வு முறைகள் இருக்கும் போது ஒரே ஒரு முறைதான் ஏற்புடையது என விடாப்பிடியாக ஒன்றையே பற்றிப்பிடித்து நிற்கும் (Dogmatic Adherence) ஆய்வு முறையியல் கொள்கையை நிராகரித்து, பல ஆய்வு முறைகளையும் ஆக்க பூர்வமான முறையில் ஒன்றிணைத்துக் கொள்வதை முறையியல் பன்மைத்துவம் எனக் குறிப்பிடுவர். அவ்வாறு பல முறைகளை ஒன்றிணைக்கும் போது போதிய அறிவாரய்ச்சியில் முறையியல் நியாயப்படுத்தலை முன்வைத்தலும் அவசியமாகும். பல முறைகளை ஒருங்கிணைத்தல் இடம்பெறும் போது வெவ்வேறு முறையியல் நோக்கு முறைகள் பற்றிய உரையாடல் இடம்பெறுவதுண்டு. ஆகையால் முறையியல் பன்மைத்துவம் விமர்சன நோக்குடையதாக அமையும். இதனால் அதனை 'விமர்சன முறையியல் பன்மைத்துவம்' (Critical Methodological Pluralism) எனவும் அழைப்பர்.

## Normal Science - இயல்புநிலை விஞ்ஞானம்:

தோமஸ் கூன் முன் மொழிந்த இயல்புநிலை விஞ்ஞானம் என்னும் எண்ணக்கரு, விஞ்ஞான அறிவு நீண்டகால எல்லையுள் ஒரு குறிப்பிட்ட கட்டளைப் படிமத்துள் (Paradigm) அல்லது மாதிரிக்குள் அமைந்து செயற்படுகிறது எனக் குறிப்பிடுகிறது. இயல்புநிலை விஞ்ஞானக் காலத்தில் விஞ்ஞானிகள் இருந்து வரும் ஒரு கட்டளைப் படிமத்தின் எல்லைக்குள் நின்றபடி புதிரான ஆய்வுப் பிரச்சினைகளை விடுவிக்கும் ஆய்வில் ஈடுபடுபவர். அவர்கள் அக் கட்டளைப் படிமத்தின் கோட்பாடுகளையும் அனுமானங்களையும் எதிர்த்துக் கேள்வி கேட்பதில்லை. ஆயினும் இயல்புநிலை விஞ்ஞானம் காலப் போக்கில் நெருக்கடி நிலையை அடைகிறது. விலகல்கள் (Anomalies) அதிகரித்து திரட்சியடையும் போது இந் நெருக்கடிநிலை தோன்றும். கூனின் கருத்தாக்கத்தின்படி விலகல்கள் என்றால் இருந்துவரும் கோட்பாட்டிற்கும் அவதானிக்கப்பட்ட தரவுகளிற்கும் இடையே முரண்பாடுகளும் வேற்றுமைகளும் இருத்தலாகும். விஞ்ஞானிகள் சமூகத்தின் எதிர்வினை முதற் தொடக்கத்தில் விலகல்களைக் காணும் போது அவற்றை அலட்சியப்படுத்துவதாக இருக்கும். ஆனால் விலகல்கள் அதிகரித்துச் சென்று திரளும் பொழுது இருந்துவரும் கட்டளைப் படிமத்தால் அவற்றுக்கு விளக்கம் கொடுக்க முடியாத நிலை தோன்றுவதால் இயல்புநிலை விஞ்ஞானம் நெருக்கடிக்கு உள்ளாகிறது.

## Objective / Objectivity - புறநிலை / புறநிலைத்தன்மை:

'புறநிலை' என்னும் எண்ணக்கரு, உள்ளதன் இயல் (Ontology), அறிவாராய்ச்சியியல், முறையியல் என்ற மூன்று துறைகளுடனும் தொடர்புடைய ஒன்றாகும், புறநிலை / புறநிலைத் தன்மை என்பதன் பொருளை விளங்கிக் கொள்வதற்கு பின்வரும் சொற் பிரயோகங்களை அவதானித்தல் பயன் உடையது: புறநிலை உலகம், புறநிலை யதார்த்தம், புறநிலை உண்மை (Objective Truth), புறநிலையான முறை (Objective Method). மனித மனத்திற்கு வெளியே, அதற்கு அப்பால் சுதந்திரமாக புறநிலை உலகம், அல்லது யதார்த்தம் உள்ளது என்ற கருத்தின் அடிப்படையிலேயே புறநிலை என்ற கருத்தாக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## Ontology - உள்ளதன் இயல்:

உலகின் இயல்பு பற்றி ஆராயும் மெய்யியல் பிரிவு உள்ளதன் இயல் எனப்படும். இது இருப்பு (Existence) அல்லது இருத்தல் (Being) தொடர்பான வினாக்களை எழுப்பி விடை காண முயல்கிறது. 'ONT' என்ற கிரேக்க மொழிச் சொல் 'இரு' என்ற கருத்துடைய சொல் இதனுடன் 'இயல்' என்ற கருத்துடைய 'Logy' சேரும் போது கிடைப்பது 'Ontology' என்னும் சொல்லாகும். 'உள்ளதன் இயல் வினாக்கள்' (Ontological Questions) என்னும் போது 'உலகின் இருப்பு' (Being in the world) பற்றிய வினாக்கள் என்ற பொருள் உணர்த்தப்படுகிறது.

## Participant Observation - பங்கேற்பு அவதானிப்பு / பங்கேற்பு அவதானம்:

பங்கேற்பு அவதானம் என்பது பண்பியல் ஆய்வு (Qualitative Research) முறைகளுள் ஒன்றாகும். சமூகச் செயலிகளின் (Social Actors) நோக்கு நிலையில் நின்று சமூகச் செயல்முறையின் அகநிலைப் பரிமாணங்களைப் புரிந்து

கொள்வதற்கு பங்கேற்பு அவதானம் என்னும் முறை உதவுகிறது. இந்த உபாயத்தைக் கையாளும் ஆய்வாளர் புரிந்துணர்வுப் புரிதலை (Empathic – Understanding) நோக்கமாகக் கொண்டு செயற்படுவார். ஆய்வாளர் குறித்தவொரு சமூகத்தில் நீண்ட காலம் தங்கியிருந்து, அம் மக்களோடு பழகி, அவர்களுள் ஒருவராகவே வாழ்ந்து, அவர்களது நோக்கு நிலை நின்று அம் மக்களது சமூக உலகை (Social World) விளக்கிப் புரிந்து கொள்வதனையே பங்கேற்பு அவதானம் என்பர். மக்களோடு ஒருவராக வாழ்தல் என்பது தற்காலிகமானதே, வாழ்நாள் முழுவதும் என்ற பொருள் உடையதன்று. நேர்முகம் காணல் என்ற முறையின் மட்டுப்பாடுகளை நீக்குவதற்கு சமூகவியலாளர்களும், மானிடவியலாளர்களும் பங்கேற்பு அவதானம் என்ற முறையைக் கையாண்டனர், நேர்முக உரையாடல் உத்தி சமூகச் செயலியின் அகவுலகில் இருப்பனவற்றைத் தொடர்ச்சியாக அவதானிப்பதற்கு உதவுவதில்லை. பங்கேற்பு அவதானம் அகவுலகத்தை செயலிகளின் பார்வையில் தொடர்ச்சியாக உற்று நோக்குவதற்கு உதவுகிறது.

### Phenomenology - தோற்றப்பாட்டியல்:

ஐரோப்பாவில், குறிப்பாக யேர்மனி தேசத்தில் தோன்றிய சிந்தனைப் பள்ளியாக தோற்றப்பாட்டியல் விளங்குகிறது. இம் மெய்யியல் பள்ளியைத் தோற்றுவித்தவர் எட்மன்ட் ஃஹஸ்ஸெரல் (Edmond Husserl) ஆவர். தோற்றப்பாட்டியல் நேர்க்காட்சிவாதத்தின் (Positivism) மறுப்புரையாக எழுச்சி பெற்றது. உலகம் மனிதரின் உணர்வு நிலையில் (consciousness) எவ்வாறு தோன்றுகிறதோ அதன்படி ஆய்வு செய்தலே தோற்றப்பாட்டியலின் நோக்கமாகும். அது மனித மனத்தின் முனைப்புடைய வகிபாகத்தை (Active Role of The Human Mind) வலியுறுத்துவது. இதன் பொருள் சமூக உலகத்தினை புரிந்து கொள்வதில் உணர்வு நிலைக்கு முக்கியத்துவம் அளித்தல் வேண்டும் என்பதாகும். விஞ்ஞானத்தின் மெய்யியலின் அகநிலைவாத நோக்கு மரபினைச் சார்ந்ததாக தோற்றப்பாட்டியல் விளங்குகிறது. இருபதாம் நூற்றாண்டில் மெய்யியல், சமூகவியல், மானிடவியல், உளவியல், சமயங்கள் பற்றிய கற்கை ஆகிய துறைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கும் முக்கிய சிந்தனைப் போக்குகளிற்கும் தோற்றப்பாட்டியல் உளத்தூண்டலை வழங்குவதாக அமைந்தது.

### Positivism – நேர்க்காட்சி வாதம்:

ஐரோப்பாவில் 18-ம் நூற்றாண்டில் நேர்க்காட்சிவாதம் சமூக விஞ்ஞான ஆய்வு முறையாக வளர்ச்சி பெற்றது. இவ்வாய்வு முறை இயற்கை விஞ்ஞானங்களில் பிரயோகிக்கப்பட்ட அனுபவவாத முறையை சமூக விஞ்ஞான ஆய்வுகளுக்கும் பிரயோகிப்பதை முனைப்புடன் செயற்படுத்தியது. பிரான்சு நாட்டைச் சேர்ந்த அகஷ்ட் கம்ட், எமில் தாக்கீம் என்னும் இரு சிந்தனையாளர்களும் நேர்க்காட்சிவாதத்தின் முன்னோடிகளாவர். நேர்க்காட்சிவாத மெய்யியல் என்னும் அறிவுத் திட்டத்தை முன்வைத்த அகஷ்ட் கம்ட் 'நேர்க் காட்சிவாதம்' (Positivism) என்ற சொல்லை அறிமுகம் செய்தார். சமூக விஞ்ஞானங்கள், இயற்கை விஞ்ஞானத்தின் அனுபவவாத முறையை (Empiricist Method) உபயோகித்து ஆய்வுகளைச் செய்தல் வேண்டும் என நேர்க்காட்சிவாதம் வலியுறுத்தியது. தேவையேற்படின் சமூக உலகின் ஆய்வுக்கு ஏற்றவகையில் அனுபவவாத முறையில் திருத்தங்களைச் செய்து கொள்ளலாம் என நேர்காட்சிவாதிகள் கூறினர். சமூகச் சிந்தனையில் பௌதிக விடயங்கள் அல்லாத அபௌதிகத்தை (Meta-Physics) புகுத்துவதை நேர்க்காட்சிவாதம் நிராகரித்தது. காலப்போக்கில் நேர்க்காட்சிவாதம் சமூக விஞ்ஞானத்துறைகளில் முதன்மை வாய்ந்த முறையியலாகவும், மேலாண்மையுடையதாகவும் வளர்ச்சி பெற்றது. சமூக விஞ்ஞானங்களில், இயற்கை விஞ்ஞானங்களின் அனுபவவாத முறையை உபயோகிக்க வேண்டும் என்று வாதாடும் நிலைப்பாட்டை நேர்க்காட்சிவாதம் எடுத்தது.

### Post – Structuralism - பின் அமைப்பியல்:

ஐரோப்பாவில் 1970-களில் பின் அமைப்பியல் ஒரு சமூகக் கோட்பாடாக (Social Theory) உருவாக்கம் பெற்றது. லெவிஸ் ஸ்ட்ராஸின் (Levis Strauss) அமைப்பியல் கோட்பாடு, லூயி அல்தூசரின் மார்க்சியக் கோட்பாடு என்பனவற்றுக்கு விமர்சன முறையியலில் எதிர்வினையாற்றுவதாக பின் அமைப்பியல் கோட்பாடு அமைந்தது. லெவிஸ் ஸ்ட்ராஸும், அல்தூசரும் முறையே சமூகவியல், மானிடவியல், மார்க்சீயம் என்பனவற்றில் பங்களிப்பைச் செய்திருந்தனர். இவர்களைத் தொடர்ந்து வந்த பின் அமைப்பியல் சிந்தனையாளர்களான மைக்கேல் ஃபுக்கோ (Michel Foucault), தெரிதா (Jaque Derrida), ஜீன் போதிர்லா (Jean Baudrillard) ஆகியோர் முக்கிய மானவர்கள். பின் அமைப்பியல் சமூகக் கட்டமைப்புகள் (Social Structures) பற்றிய ஆய்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அது கருத்தாடல் அல்லது சொல்லாடல் (Discourse) பற்றிய ஆய்வுக்கு முதன்மையளித்தது. இதனால் ஆய்வுக்குரிய விடயமாக (Object of Inquiry) சமூகக் கட்டமைப்புகளுக்குப் பதில் சொல்லாடல் அமைந்தது.

### Structuralism - அமைப்பியல் வாதம்:

1960-களிலும், 1970-களிலும் சமூக விஞ்ஞானங்களில் மிகுந்த செல்வாக்குள்ள சிந்தனையாக அமைப்பியல் வாதம் விளங்கியது. சமூகத்தின் ஒழுங்கமைப்பின் ஆழ்நிலைக் கட்டமைப்புகள் (Structures) உள்ளன எனவும், அவை மனிதச் செயல்களை (Human Action) நெறிப்படுத்தவும், அவற்றிற்கு அர்த்தம் கொடுக்கவும் உதவுகின்றன எனவும் அமைப்பியல் வாதம் கூறியது.

இக் கட்டமைப்புகள் மனித உணர்வு நிலை, மனிதச் செயல்கள் என்பனவற்றினின்றும் வேறுபட்ட சுதந்திரமான இருப்பை உடையன என்றும் அமைப்பியல் வாதம் கூறியது. மனித நனவு நிலைக்கு அப்பாற்பட்ட புறநிலையான கட்டமைப்புகளுடன் தொடர்புபடுத்தியே மனிதச் செயல்கள் பொருள் கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைப்பியல்வாதம் கூறியது. 1950-களிலும், 1960-களிலும் அமைப்பியல் வாதம் மார்க்சியவாதிகளிடமும், மார்க்சியவாதிகள் அல்லாதவர்களிடமும் செல்வாக்குப் பெற்றிருந்த கொள்கையாக விளங்கியது. சமூகச் செயல்முறைகளில் மனிதச் செயலி (Human Agency) மனித அகநிலை என்பனவற்றை முக்கியத்துவப்படுத்திய நோக்கு முறைகள் அமைப்பியல் வாதத்திற்கு அறைகூவல் விடுப்பனவாய் அமைந்தன.

### Subject - தன்னிலை, சுயம், அகம்:

அறிவாராய்ச்சியல் எண்ணக் கருவான தன்னிலை அல்லது சுயம் சுயாதீனமாகச் செயற்படும் சுதந்திரமான தனி நபரைக் குறிப்பிடுகிறது. தனித்துத் தானே செயற்படுபவரான சுதந்திரமுடைய தனிநபர் என்ற கருத்து அறிவொளிச் சிந்தனையுடன் தொடர்புடையது. தாராண்மைவாதம் (Liberalism) என்னும் மெய்யியலும், சுயாதீனமாகவும், சுதந்திரமாகவும் இயங்கும்

தனி நபர்களின் இருப்பையும், அத் தனி நபர்கள் தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் சுயநிர்ணயத் திறன் உடையவர்கள் என்பதையும் அடிப்படையாகக் கொண்டது. பின் அமைப்பியலும் பின் நவீனத்துவமும் சுயாதீனமான தனி நபரின் தன்னிலை என்பதை ஏற்றுக் கொள்வதில்லை.

### Subjective / Subjectivity - அகநிலைப்பட்ட / அகவயத்தன்மை:

உள்ளதன் இயல், அறிவாராய்ச்சியியல், முறையியல் ஆகிய மூன்று துறைகளுடனும் அகநிலைப்பட்ட / அகவயத்தன்மை என்னும் எண்ணக்கரு தொடர்புடையதாக உள்ளது. மனிதர் வாழும் உலகை உருவாக்குவதிலும், அதனைப் புரிந்து கொள்வதிலும் தனி நபருடையதும், அவருடைய மனம், உணர்வு நிலை என்பனவற்றினதும் முக்கியத்துவத்தை இவ் வெண்ணக்கரு முதன்மைப் படுத்துகிறது. அகநிலைப்பட்ட / அகவயத்தன்மை என்ற எண்ணக்கருவில் உள்ளடங்கியுள்ள பல்வேறு கருத்துக்களில் சில வருமாறு.

- மனித உணர்வு நிலையில் அகவயத் தன்மையுடையதாக சமூக உலகை உருவாக்கம் செய்தல்
- தனிநபரின் அகத்தில் சமூக உலகைப் பொருளுடைய தாக்குதல்
- சடப்பொருளை விட அகம் / மனம் முதன்மையுடையது.
- கட்டமைப்புக்களை (Structures) விட மனிதச் செயலி (Human Agency) முதன்மையானது.

அகவயப்பட்ட கூற்று ஒன்றினை மதிப்பிடுதல் (Judgement) அக்கூற்றின் படியே செய்யப்பட வேண்டும், அகத்திற்கு வெளியே உள்ள புறநிலை அளவு கோல்களால் அதனை மதிப்பிடுதலாகாது என்றும் கருதப்படுகிறது.



shanmugalingam@thaiveedu.com




# சாவகச்சேரி இந்துக்கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் - கனடா
# நடாத்தும்
# வசந்தத்தின் ஒன்றுகூடல் 2023

www.gotochc.com Email: canada@gotochc.com

03.07.2023 திங்கட்கிழமை நடைபெற இருக்கும் ஒன்று கூடல் நிகழ்விற்கு, சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் மற்றும் ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாள்: **Monday, July 03, 2023**
இடம்: Neilson Park (Neilson & Finch)
1555 Neilson Road
நேரம்: **9am - 6pm**

JULY
03
9am -6pm

**Food: Vegetarian and Non-Vegetarian foods will be served.**

முற்றிலும் வித்தியாசமாகவும், அனைத்து வயதினருக்கும் ஏற்ற பல நிகழ்வுகளுடன் கூடிய நாளாக இது அமையும்!

வாருங்கள், அனைவரையும் அழைத்து வாருங்கள்!!

உங்கள் பசுமை நிறைந்த கடந்த கால நினைவுகளை உங்கள் நண்பர்கள், நண்பிகளுடன் கலந்து உறவாடி மகிழ்ந்திடவும், உங்கள் சிறார்களை மற்றவர்களுடைய சிறார்களுக்கு அறிமுகப்படுத்தவும், உறவுகளை மேம்படுத்திக்கொள்ளவும் அத்துடன் பலதரப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளிலும் கலந்து உண்டு மகிழ்ந்து களித்திட வாருங்கள்.

ஒன்று கூடலினை திறம்பட நடாத்துவதற்கு கீழ் குறிப்பிட்ட இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | | | |
|---|---|---|---|
| தயா | : 416–457–2173 | சிறி | : 416–450–5011 |
| ரவி | : 416–835–7284 | யோகேந்தி | : 647–502–2320 |
| முருகன் | : 416–791–9531 | சிவகுமார்(குட்டி) | : 647–896–2157 |

# குருநாதர் புகழ் பாடிய கவிநாதர் பாரதி

- கிருங்கை சேதுபதி
ஓவியம்: ஜீவா

தமிழ் இலக்கியத் தடத்தில் பாரதியின் வரவு இயல்பாக அமைந்துவிட்டாலும், அவர்தம் இருப்பு மிகச் சிறப்பானதாக ஒளிர்வதற்குக் காரணம், அவர்தம் காலம் மட்டுமன்று. காலத் திற்கேற்பத் தன் கருத்துகளை வளர்த்துச் செழுமைப்படுத்திக் கவியாகத் தந்தமை. அதற்கான உந்தாற்றலை, அவர் தன் காலத்திற்கு முந்திய கவிகளிடமிருந்தும் கலைஞர்களிடமிருந் தும் பெற்றதோடமையாது, தன் காலத்து மாந்தர்களிடத்தும் இருந்து பெற்றார் கற்றார் கற்றவற்றை மற்றவர் அறியத் தர வும் செய்தார்.

பாரதிக்குள் புத்துயிர்ப்பை ஊட்டிய அவர்கள் பண்டிதர்க ளாக, பத்திரிகையாளர்களாக, அரசியலாளர்களாக, ஆன்மீ கப் பெரியர்களாக இருந்தனர். அத்துடன் சராசரி மனிதர்களி டமிருந்தும், தன் வாழ்வில் சந்தித்த எளிய மனிதர்களிடமிருந் தும் அவர் பெற்ற கலை, இலக்கிய, ஆன்மீக, வாழ்வியல் அனுபவங்களைத் தன் ஆக்கங்களிடையே அழகாகத் தந்தி ருக்கிறார். அதைவிடவும் சிறப்பு, அவர் காலத்து மனிதர்க ளும், இந்த அதிசயக் கவிஞரின் வரலாற்று ஆளுமையைப் புனைவின்றி உள்ளவாறே புலப்படுத்தியும் இருக்கிறார்கள். அந்த வகையில், தன்னைக் குறித்தும் தன் ஆக்கங்கள் குறித்தும் ஏராளமானவர்களை எழுத வைத்த ஆற்றல் பாரதி யாருக்கு உண்டு. அவர்தம் பன்முகப் பரிமாணங்களுள் ஒன்று, தன்னைச் சித்தர் என்று அவர், பிரகடனப்படுத்திக் கொண்டது.

*எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா*
*யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்*

இதனை எழுதியது பாரதிதான் என்றாலும், தன்னுள் புகுந்து எழுத வைத்தது, ‘மனோன்மணியாகிய மாசக்தி - அவள் வையத் தேவி’ என்கிறார் பாரதி.

இந்த அறிவிப்பை, கங்கை நதி பிரவகித்ததோடும் காசி நக ரத்திலிருந்து அவர் வெளியிடவில்லை. வேதபுரமாகிய புதுச் சேரியில் இருந்துதான் புலப்படுத்துகிறார்.

முற்றாகப் புறவுலகம் கைவிட்டுவிட்ட நிலையில், அகவுல கில் தன் நிலை குன்றாமல் சஞ்சாரம் செய்த பாரதி, புனை-வுலகில் ஞானரதம் ஓட்டி, குயிற்பாட்டிசைத்து, இதிகாசத்தை யதார்த்தத்தோடு இணைத்து பாஞ்சாலியைச் சபதம் செய்ய வைத்துத் தன்னை வெளிப்படுத்திக் கொண்ட இடம் புதுச் சேரி.

மணக்குள விநாயகர் மீது நான்மணி மாலை பாடியதும், பார ததேவிக்கு தசாங்கம் பாடியதோடு, நவரத்னமாலை சூட்டிய தும் காலத் தேவை அறிந்து ஆற்றிய கடப்பாடு தான். இந்த வரிசையில் தனிக் கவிதைகளாகவும், தொடர் பாடல்களாக வும் அவர் இயற்றியவை பக்தி மரபு சார்ந்தவை எனினும் புத்திலக்கியத்திற்கான கூறுகளைக் கொண்டவை.

தாயுமானவர், வள்ளற்பெருமான், கோபால கிருஷ்ணபாரதி யார், நாயன்மார்கள், ஆழ்வார்கள் உள்ளிட்ட தன் முன் னோர் மரபில் தன் பக்தியுணர்வை, பாரதியார் புலப்படுத்தி நின்றாலும், தன்னைச் சக்திதாசனாகவே உணர்ந்திருக்கிறார். அது, தேசியம் கலந்த தெய்வீக உணர்வு. பாரதமாதாவும் பராசக்தியும் ஒருவரே. இவர்க்கு முன்னால் இத்தகு உணர் வோடு பக்திப் பனுவல்கள் இயற்றியவர்கள் இருந்திருக்கி றார்களா என்பது ஐயமே. சக்தியைப் பாடியவர்களுக்கு மத் தியில், சக்தியே தன்னைப் பாடச் சொன்னதாகவும் இவர் பாடியிருக்கிறார். முந்தைய, பக்திக் கவிவாணர்களின் வாழ் வில் நிகழ்ந்தவை போல, இவர் தாம் வாழ்விலும் இயற்கை நிகழ்வுக்கு அப்பால், பல அதிசய அற்புதங்கள் நிகழ்ந்தே றியிருக்கின்றன. அவை யாவும் புதுச்சேரியில் நிகழ்ந்தவை என்பது இன்னுமொரு அதிசயம்.

இதற்கெல்லாம் காரணம் புதுச்சேரியில் இவர் சந்தித்த சித்தர் கள்.

தொடக்கத்தில், அரசியல் குருவாகத் திலகரையும், அரசிய லையும் ஆன்மீகத்தையும் இணைத்து ஞானம் புகட்டிய குரு வாக நிவேதிதா தேவியையும் ஏற்றுக் கொண்ட பாரதி, புது வைக்கு வந்த பிறகு, சித்தர் மரபில் தன்னைச் செலுத்தி ஆட்கொண்ட குருநாதர்களாக, குள்ளச்சாமி, கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்துச்சாமி ஆகியோரைக் கொள்கிறார்.

அவர்களுள், எத்தனையோ சித்தர்கள் வந்து அவதரித்த இந் தியத் திருநாட்டில் தன்னையும் ஒரு சித்தன் என்று பிரகட னப்படுத்திக் கொண்டு பாரதியாரைக் கவிபாடத் தூண்டிய சித்தர் குள்ளச்சாமியேயாவார். ஞான குருவாகிய அவர்தம்

புகழை விரித்தல் என்பது ஞாயிற்றைச் சங்கிலியால் அளப்பது ஒத்தது என்று சொல்லுமளவுக்கு பாரதியாருக்குள் ஞான ஆதிக்கம் செலுத்தியவர், அவர்.

பாரதியின் இயல்புப்படி, அவ்வளவு சீக்கிரத்தில் யாரையும் அவ்வாறு ஏற்றுக் கொள்கிறவர் அல்லர். ஆனால், குள்ளச்சாமி வழி பெற்ற ஞானத்தாலும் உற்ற அனுபவத்தாலும் அவர் இந்த நிலையை எய்தியிருக்கிறார் என்பதை பாரதியின் எழுத்தாக்கங்கள் எடுத்தியம்புகின்றன.

தன் அனுபவங்கள் மூன்றினாலும், தன் காலத்து மனிதர்களின் வாழ்வில் கண்ட அனுபவங்கள் நான்கினாலும் பெற்ற உணர்வுகளைத் தன் உரைநடையாக்கத்தில் பாரதி எழுதியிருக்கிறார். பாரதி அறுபத்தாறு பகுதியிலும் உணர்வு பூர்வமாகச் சித்திரித்திருக்கிறார்.

இவர்களது காலத்தில் வாழ்ந்த சிலரது ஆக்கங்களும் இவர்களுக்கு இடையில் இருந்த உறவு நுட்பத்தைப் புலப்படுத்தச் செய்திருக்கின்றன. அவை குறித்து இனி விரிவுறக் காணலாம்.

## குருவாக வாய்த்த குள்ளச்சாமி:

அலைபடு வாழ்வில் நிலையின்றித் தவித்த பாரதியின் ஆன்மா, அரசியல் சார்ந்த நிலையில் அடைக்கலமானது புதுவையில். தன்னொத்த போராளிகளையும் அப் பகுதிக்குக் கொண்டு வந்து சேர்த்து எடுத்த முயற்சிகள் யாவும் ஆங்கிலேயர்களின் அச்சுறுத்தலால், தீவிரக் கண்காணிப்பால் பயனின்றிப் போயின. யோகத்தில் ஸ்ரீஅரவிந்தரும், கம்பராமாயண ஆய்வில் வ.வே.சு. ஐயரும் ஆழ்ந்தனர். கவிதைப் பெருங்கனல் தகிப்பில் ஆழ்ந்து பாரதி படைத்த ஆக்கங்கள் ஒளிர்ந்தன. ஆயினும், அவரது ஆன்மா சொல்லொணாத் துயரில் ஆழ்ந்தும், மறைக்கவியலாத அச்சத்தில் தளர்ந்தும் தவித்தது. தனிப்பாடல்களில் அவற்றைத் தயக்கமின்றி எடுத்துரைக்கவும் செய்திருக்கிறார். அந்தச் சமயத்தில் தான், குள்ளச்சாமியின் தரிசனம் பாரதிக்கு வாய்க்கிறது.

பழவினைக் கட்டை முற்றாக ஒழித்து, பயனுடைப் பிறவியாய் இதனை ஆக்கி, புதிய ஆன்மாவாகத் தன்னை மீட்டுருவாக்கம் செய்த ஞானியாக அவரைக் கண்டு உணர்கிறார். அச்சம் அகன்றிட ஆண்மை ஒளி தர, சித்தர் மோனநிலை இவர் வசமாகிவிடுகிறது. அந்த அனுபவத்தினால், பாரதி பாடுகிறார்.

*மோனகுரு திருவருளால் பிறப்பு மாறி*
*முற்றிலும்நாம் அமரநிலை சூழ்ந்து விட்டோம்*
*தேன் அனைய பராசக்தி திறத்தைக் காட்டிச்*
*சித்தின் இயல் காட்டிமனத் தெளிவு தந்தான்.*
*வானகத்தை இவ்வுலகில் இருந்து தீண்டும்*
*வகைஉணர்த்திக் காத்தபிரான் பதங்கள் போற்றி!*

அது எங்ஙனம் என்பதை,

*நாளும்பல் காட்டாலும், குறிப்பி னாலும்*
*நலமுடைய மொழியாலும் விளக்கித் தந்தான்*

என்ற அடிகளால் விளக்கிக் காட்டுகிறார். அந்தக் குறிப்புகளை மேற்சுட்டிய கவிதை வரிகளில் தந்ததோடல்லாமல், தனது கட்டுரைகளில் சுட்டிக்காட்டியிருக்கிறார். பாரதியின் பரிமாணத்தில் இதுவொரு தனி அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும். அதனை விரித்தும் காண வேண்டும்.

## சித்தின் இயல் காட்டித் தெளிவு தந்த சித்தர் குள்ளச்சாமி:

முப்பாழுங் கடந்தபெரு வெளியைக் கண்ட தனது குருநாதரை, 'முக்தியெனும் வானகத்தே பரிதி' என்றும், 'தப்பாத சாந்தநிலை அளித்த கோமான் என்றும், 'தவ நிறைந்த மாங்கொட்டைச் சாமித் தேவன்' என்றும், 'குப்பாய ஞானத்தால் மரணமென்ற குளிர்நீக்கி தனைக் காத்த குமார தேவன்' என்றும் சிறப்புறப் போற்றுகிற பாரதி,

*தேசத்தார் இவன்பெயரைக் குள்ளச் சாமி*
*தேவர்பிரான் என்றுரைப்பார் தெளிந்த ஞானி*
*பாசத்தை அறுத்துவிட்டான், பயத்தைச் சுட்டான்*
*பாவனையால் பரவெளிக்கு மேலே தொட்டான்*
*நாசத்தை அழித்துவிட்டான் யமனைக் கொன்றான்*
*ஞானகங்கை தனைமுடிமீ தேந்தி நின்றான்,*
*ஆசையெனும் கொடிக்கொருதாழ் மரமே போன்றான்,*
*ஆதியவன் சுடர்பாதம் புகழ்கின் றேனே.*

என்று புகழ்கிறார். மேலும்,

*வாயினால் சொல்லிடவும் அடங்கா தப்பர்*
*வரிசையுடன் எழுதிவைக்க வகையும் இல்லை.*
*ஞாயிற்றைச் சங்கிலியால் அளக்க லாமோ?*
*ஞானகுரு புகழினைநாம் வகுக்க லாமோ?*
*ஆயிரநூல் எழுதிடினும் முடிவு றாதாம்*
*ஐயனவன் பெருமையை நான் சுருக்கிச் சொல்வேன்*
*காயகற்பஞ் செய்துவிட்டான் அவன்வாழ் நாளைக்*
*கணக்கிட்டு வயதுரைப்பார் யாரும் இல்லை.*

- பாரதி அறுபத்தாறு 20-21

என்று சொல்லித் தனக்கு அவர் உபதேசித்த வேதாந்த விளக்கத்தை விரிக்கிறார்.

## குரு தரிசனம்:

புதுவை நகரத்து, ஈசுவரன் தருமராஜா வீதியில் உள்ள சிறிய வீட்டில் பாரதியார் வசித்திருந்த காலம். அப்போது நாகையில் இருந்து வந்த இராஜாராம் ஐயர் என்பார், தனது தந்தையார் மொழி பெயர்த்து வைத்திருந்த உபநிடதத்தைத் திருத்தித் தர வேண்டும் என்று சொல்லிக் கொடுக்க, அதனை வாங்கிப் பார்த்துக் கொண்டிருக்கிறார் பாரதி. அப்போது அங்கு வருகிறார் குள்ளச்சாமி.

*அப்போது நான்குள்ளச் சாமி கையை*
*அன்புடனே பற்றியிது பேச லுற்றேன்*
*'அப்பனே, தேசிகனே, ஞானி என்பார்*
*அவனியிலே சிலர்நின்னைப் பித்தன் என்பார்*
*செப்புறுநல் லஷ்டாங்க யோக சித்தி*
*சேர்ந்தவனென்று உனைப்புகழ்வார் சிலர் என் முன்னே*
*ஒப்பனைகள் காட்டாமல் உண்மை சொல்வாய்*
*உத்தமனே, எனக்குநினை உணர்த்து வாயே*



*'யாவன் நீ? நினக்குள்ள திறமை என்னே?*
*யாதுணர்வாய்? கந்தைசுற்றித் திரிவது என்னே?*
*தேவனைப்போல் விழிப்பதென்னே? சிறியா ரோடும்*
*தெருவிலே நாய்களொடும் விளையாட் டென்னே?*
*பாவனையிற் பித்தரைப்போல் அலைவ தென்னே?*
*பரமசிவன் போல் உருவம் படைத்த தென்னே?*
*ஆவலற்று நின்றதென்னே? அறிந்த தெல்லாம்,*
*ஆரியனே, எனக்குணர்த்த வேண்டும்' என்றேன்.*

- பாரதிஅறுபத்தாறு- 24-25

அதற்குக் குள்ளச்சாமி ஏதும் கூறாமல், பாரதி பற்றிய கையைத் திருகிவிட்டு ஓடப் பார்க்கிறார். பாரதியாரும் அவரை விடவில்லை. சுற்று முற்றும் பார்த்த குள்ளச்சாமி பாரதியைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தபோது, பாரதியார் அவர்தம் பாதங்களைப் பார்க்க, மீளவும் அவர் திமிறிக் குதித்து ஓடி, அந்த வீட்டின் கொல்லைப் பகுதியைச் சேர்ந்துவிடுகிறார். விடாது துரத்திச் சென்ற பாரதிக்கு அந்தக் கொல்லைப் புறத்தில் ஓர் உபதேசம் கிட்டுகிறது.

## குள்ளச்சாமி செய்த உபதேசம்:

கொல்லைக்குப் பக்கத்தில் இருந்த வீட்டின் சுவர்கள் இடிந்து வீழ்ந்து பாழ்மனையாகிக் கிடக்கிறது. அந்தக் குட்டிச் சுவரைக் காட்டி, சூரியனையும் காட்டி, பின்னர் கிணற்றின் உள்ளே தெரிந்த பிம்பத்தையும் காட்டி, 'அறிந்தாயா?' என்று கேட்டிருக்கிறார். பாரதியும் 'அறிந்தேன்' என்று சொல்ல, மிக்க மகிழ்வோடு குள்ளச்சாமி சென்று விடுகிறார். பாரதியாரும், 'வேதாந்த மரத்தில் ஒரு வேரைக் கண்டேன்' என்கிறார்.

அது என்ன? அதனைத் தன் கவிதையில் விரிக்கிறார் மகாகவி.

*தேசிகன்கை காட்டிஎனக்கு உரைத்த செய்தி*
*செந்தமிழில் உலகத்தார்க்கு உணர்த்து கின்றேன்:*
*'வாசியைநீ கும்பகத்தால் வலியக் கட்டி,*
*மண்போலே சுவர்போலே, வாழ்தல் வேண்டும்*
*தேசுஉடைய பரிதிஉருக் கிணற்றின் உள்ளே*
*தெரிவதுபோல் உனக்குள்ளே சிவனைக் காண்பாய்*
*பேசுவதில் பயனில்லை, அனுப வத்தால்*
*பேரின்பம் எய்துவதே ஞானம்' என்றான்.*

- பாரதிஅறுபத்தாறு -28

இந்தச் செய்தி, பாரதியின் உரைநடைப் பகுதியில் இடம்பெறவில்லை. இது அவருக்கு வாய்த்த முதல் அனுபவமாய் இருக்க வேண்டும்.

இந்த அனுபவத்தின் நுனி பற்றி இறங்கிய பாரதிக்குள் பல் வேறு புதிய உணர்வலைகளைத் தூண்டிவிட்டவர் குள்ளச் சாமி. ‘வாயே திறவாத மௌனத்துள் பாரதி ஆழ்ந்து போன தற்கும், அந் நிலையில், புதுவை மணக்குள விநாயகர் மீது நான்மணி மாலை பாடுவதற்கும், தொடர்ந்து, பாரதி அறுபத் தாறு பாடுதற்கும் இந்தச் சிந்தனை மரபு, சிறப்பானதொரு ஆளுமையைப் பாரதிக்குள் செய்திருக்க வேண்டும்.

இதனோடு மட்டும் குள்ளச்சாமியின் புகழை நிறுத்திவிடாமல், மேலும் ஓர் அனுபவத்தை, இக் கவிதைத் தொடரில் பாரதி சுட்டுகிறார். அது ‘வண்ணான் தொழில்’ என்னும் கட்டுரை யில் தெளிவாகச் சித்திரமாகிறது.

## பாரதியின் படைப்பாக்க முறைமை:

இந்த இடத்தில் இன்னொன்றையும் சொல்லியாக வேண்டும்.

மகாகவி பாரதியின் படைப்பாக்க முறைமை என்பது, ‘பதி கம் பார்த்தொரு பதிகம்’ பாடுகிற செய்யுளாக்க மரபில் முகிழ்த்ததாக இல்லை. அவையெல்லாம் எட்டயபுர சமஸ் தானப் புலவர்களின் சகவாசத்தோடு ஒழிந்தன. இதழாளராக அவர் பரிணமித்த காலத்தில் உலகச் செய்திகள் அவரை முற்றுகையிட்டு எழுதவும் பேசவும் இயங்கவும் வைத்ததோடு கவிதை பாடவும் கட்டாயப்படுத்தின. அவை, இலக்கியத்தின் பல்வேறு வடிவங்கள் ஏற்றுத் தமிழை வளப்படுத்தின. அவற் றின் நடை, சொல்முறை, புலப்பாட்டுத் திறன் அக்கால நடைமுறைக்கேற்றனவாக இருந்தாலும், சத்தியத்தன்மை கொண்டிருப்பதால், அவை நிலைபேறு பெற்றுவிட்டது என்றே சொல்ல வேண்டும். அவற்றின் கனிச்சாறாக, அவரிட மிருந்து வெளிப்பட்ட கவிதைகள், அவரை உலக மகாகவிக ளின் வரிசையில் அமரவைத்துவிட்டன.

பாரதியார் உலகளாவிய நோக்கோடு, தேசியச் சிந்தனைக ளைத் தமிழ் மரபில் தந்தவர். அது குறுஞ்செய்தியாக, நடைச் சித்திரமாக, கதையாக, கட்டுரையாக, ஸம்பாஷணை என்னும் உரையாடலாக வளர்ந்து அவரிடமிருந்து வெளிப்பட் டன. அந்த உணர்வுகள் ஊறித் தெளிந்து நல்லமுதக் கவி தையாக, பாடலாகப் பின்னர் விளைந்தன. அதனால், பாரதி யின் பாடல்களில் ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண விழை வோர், அவர்தம் உரைநடை ஆக்கங்களில் உட்புகுந்து வந் ததாலே, அந்தந்தப் பாடல்களின், கவிதைகளின் தோற்றப் பின்புலம், காலக் கருத்தாக்கம், கருதியதுணர்தல் எளிதாகத் துலக்கமாகும். அந்த வகையில், முதலில் இந்தக் குள்ளச்-சாமி யார்? அவர் பின்புலம் யாது? என்பதை, பாரதியின் உரைநடைப் படைப்பாக்கத்திலேயே தரிசிக்கலாம்.

## பாரதியின் நடைச் சித்திரத்தில் துலக்கமாகும் குள்ளச்சாமி:

வேதபுரத்தில் குள்ளச்சாமி என்றொரு பரதேசியிருக்கிறார். அவருக்கு வயது ஐம்பதோ, அறுபதோ, எழுபதோ, எண் பதோ யாருக்கும் தெரியாது. அவருடைய உயரம் நாலரை அடியிருக்கும். கரு நிறம். குண்டு சட்டியைப் போல் முகம். உடம்பெல்லாம் வயிரக்கட்டை போலே. நல்ல உறுதியான பேர்வழி.

அவருக்கு வியாதியென்பதே கிடையாது. சென்ற பத்து வரு ஷங்களில் ஒரே தடவை அவர் மேலே கொஞ்சம் சொறி சிரங்கு வந்தது. பத்து நாளிருந்து நீங்கிவிட்டது. அந்த மனி தர் ஜடபரதருடைய நிலைமையிலேயிருப்பதாகச் சொல்ல லாம். பேசினால் பைத்தியக்காரன் பேசுவது போலிருக்கும். இழுத்திழுத்து, திக்கித் திக்கி, முன்பின் சம்பந்தமில்லாமல் விழுங்கி விழுங்கிப் பேசுவார் தெருவிலே படுத்துக் கிடப்பார் பசித்த போது எங்கேனும் போய்ப் பிச்சை வாங்கிச் சாப்பிடு வார்கள் குடிப்பார் கஞ்சாத் தின்பார் மண்ணிலே புரளுவார் நாய்களுடன் சண்டை போடுவார்.

வீதியிலே பெண் பிள்ளைகளுக்கெல்லாம் அவரைக் கண் டால் இரக்கமுண்டாகும். திடீரென்று ஒரு வீட்டுக்குள் நுழைந்து, அந்த வீட்டிலிருக்கும் குழந்தைகள் நெற்றியிலே திருநீற்றைப் பூசிவிட்டு ஓடிப் போவார். யாராவது திட்டினா லும், அடித்தாலும் பொறுத்துக்கொண்டு உடனே அவ்வி டத்தை விட்டு ஓடிப்போய் விடுவார்.

சாமானிய ஜனங்கள் அவருக்கு நூறு வயதுக்கு மேலே ஆகி விட்டதென்றும், நெடுங்காலமாக, இப்போதிருப்பது போலவே, நாற்பதைம்பது வயது போலேதான் இருக்கிறாரென்றும் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த வார்த்தை எவ்வளவு தூரம் நிச்சயமென்பதை நிர்ணயிக்க இடமில்லை.

அவர் கையால் விபூதி வாங்கிப் பூசிக்கொண்டால் நோய் தீர்ந்து விடுமென்ற நம்பிக்கையும் பலர் கொண்டிருக்கிறார் கள்.

இவர்தான் பாரதியார் கண்ட குள்ளச்சாமி. இனித்தான் இவர் களின் உறவாடல் உரையாடலாக மலர்கிறது.

## பாரதியின் வினாக்களும் குள்ளச்சாமியின் விளக்கங்களும்:

மேற்படி குள்ளச் சாமியார் ஒருநாள் தாம் வீதியில் நடந்து வரும்போது, முதுகின் மேலே கிழிந்த பழங்கந்தைகளை-யெல்லாம் ஒரு பெரிய அழுக்கு மூட்டை கட்டிச் சுமந்து கொண்டு வந்தார். இந்தச் சாமியாரைக் கண்டால் நான் கும் பிடுவது வழக்கம். அப்படியே கும்பிட்டேன். ஈயென்று பல் லைக் காட்டிப் பேதைச் சிரிப்புச் சிரித்தார். கண்ணைப் பார்த்தால் குறும்பு கூத்தாடுகிறது.

‘ஏ சாமி, உனக்கென்ன பயித்தியமா? கந்தைகளைக் கட்டி ஏன் முதுகிலே சுமக்கிறாய்?’ என்று கேட்டேன்.

‘நீ நெஞ்சுக்குள்ளே சுமக்கிறாய், நான் முதுகின் மேலே சுமக் கிறேன்’ என்று சொல்லி ஓடிப்போய் விட்டார். உடனே நான் பொருள் தெரிந்து கொண்டேன். அஞ்ஞானப் பழங்குப்பைக ளையும், பழங்கவலைகளையும், பழந்துன்பங்களையும்,

பழஞ்சிறுமைகளையும் மனதில் வீணாய்ச் சுமந்து திரியும் சாமான்ய மனிதருடைய அறிவீனத்தை விளக்கும் பொருட்டு மேற்படி சாமியார் இந்த திருஷ்டாந்தத்தைச் சொன்னாரென்று தெரிந்து கொண்டேன்.

இது ஒருநாள் கூத்து. பிறிதொருநாள் இதுபோல் இன்னும் ஓர் உரையாடல் வளர்கிறது. அதையும் இந்நடைச்சித்திரத்தி லேயே விளக்குகிறார் பாரதியார்.

பின்னொரு நாள் அவரிடம் பரிகாசமாக நான் ‘சாமி’ இப்ப டிப் பிச்சை வாங்கித் தண்டச்சோறு தின்று கொண்டு ஜீவனம் பண்ணுகிறாயே, ஏதேனும் தொழில் செய்து பிழைக்கக் கூடாதா?’ என்று கேட்டேன். அந்தப் பரதேசி சொல்லுகிறார். ‘தம்பி, நானும் தொழில் செய்துதான் பிழைக்கிறேன். எனக்கு வண்ணான் வேலை. ஐம்புலன்களாகிய கழுதைகளை, மேய்க் கிறேன். அந்தக்கரணமான துணி மூட்டைகளை வெளுக்கி றேன்’ என்றார்.’

இது குருவின் உரை. இதற்கு மேல் விளக்கம் எழுதுகிறார் பாரதி. அதில் அகத் தூய்மைக்கும் புறத்தூய்மைக்கும் உரிய செயல்பாடுகளை விரித்துச் செல்கிறார். துறவறத்தா ருக்கும் இல்லறத்தாருக்கும் இடையே உள்ள வேறுபாடு உணர்த்தி, எவரெவர்க்கு எவையெவை உரியவை என வகைப்படுத்திக் காட்டுகிறார்.

‘ஆம். பரிசுத்தப்படுத்துகிறவனே ஆசாரியன். அவனுடைய சொல்லை மற்றவர் ஆதரிக்க வேண்டும். மேலே சாமியாரு டைய புறநடைகள் குடும்பம் நடத்தும் கிருஹஸ்தர்களுக்குத் தகுதியல்ல. ஆனால் அவருடைய உள்ள நடையை உலகத் தார் பின்பற்ற வேண்டும். ஐம்புலன்களாகிய கழுதைகளை மீறிச் செல்லாதபடி கட்டுப்படுத்தி ஆள வேண்டும். உள் ளத்தை மாசில்லாதபடி சுத்தமாகச் செய்து கொள்ளவேண் டும்.

இதுவரையில் குள்ளச்சாமி உபதேசத்திற்கு உகந்தவாறு தத் துவ விளக்கம் தந்த பாரதி, அதற்கு அடுத்தகட்டமாக, சுற் றுச்சூழல் தூய்மை பேசத் தொடங்கிவிடுகிறார். காந்தியடிகள் பின்னர் இதனை நடைமுறைப்படுத்திய விதத்தையும் ஒப்பு நோக்கினால், பாரதியின் தொலைநோக்குப் பார்வை நன்கு புரிபடும்.

அழுக்குத் தீர்க்கும் தொழில் செய்வோர் நமது தேசத்தில் மாகாணத்துக்கு லக்ஷம் பேர் வேண்டும். ஹிந்துக்கள் தற்கா லத்தில் குப்பைக்குள் முழுகிப் போய்க் கிடக்கிறார்கள். வீட் டையும் தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவில்லை. ஜலதாரைகளை ஒழுங்குபடுத்தவில்லை. கிணறுகளையும், குளங்களையும், சுனைகளையும் சுத்தமாக வைத்துக் கொள் ளவில்லை. கோயிற் குளங்களில் ஜலம் புழுத்து நெளிகிறது. நாற்றம் குடலைப் பிடுங்குகிறது.

## மனுஷ்யாபிவிருத்தியாவது யாது?

புழுதியை நீக்கித் தரையைச் சுத்தமாக்குதல், அழுக்குப் போகத் துணியையும், நாற்றமில்லாதபடி குளத்தையும், பொதுவாக எல்லா விஷயங்களையும் சுத்தமாக்கி வைத்துக் கொள்ளுதல்.

இந்தப் பின்புலத்தில், ‘சந்தி தெருப்பெருக்கும் சாத்திரம் கற் போம்’ என்கிற பாரதியின் பாடல் அடிகளையும், வசன கவி தையில் புலப்படும் சூழல் தூய்மை குறித்த வரிகளையும் இணைத்துச் சிந்தித்தல் தக்கது.

மேலும், ‘பல கற்றும் பல கேட்டும் பயன் ஒன்றுமில்லையடி முத்துமாரியம்மா’ என்று பாடிய பாரதி,

***துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து***
***மாரியம்மா, எங்கள் முத்து மாரி!***
***தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து***
***மாரியம்மா, எங்கள் முத்து மாரி!***
***மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து***
***மாரியம்மா, எங்கள் முத்து மாரி!***
***மனம்வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து***
***மாரியம்மா, எங்கள் முத்து மாரி!***

என்று கேட்கிறார். அதற்கான வழி, குள்ளச்சாமியின் உபதேச மொழிகளில் கிடைத்துவிடுகிறது. அதையும் அவரே பின்வரு மாறு பதிவிடுகிறார்.

‘நான் மேற்படி சாமியாரிடம், ‘சாமியாரே, ஞானநெறியிலே செல்ல விரும்புவோன் முக்கியமாக எதை ஆரம்பத் தொழி லாகக் கொள்ள வேண்டும்?’ என்று கேட்டேன்.

## குள்ளச்சாமி சொல்லுகிறார்:

‘முதலாவது, நாக்கை வெளுக்க வேண்டும். பொய் சொல் லக்கூடாது. புறஞ்சொல்லக் கூடாது. முகஸ்துதி கூடாது. தற் புகழ்ச்சி கூடாது. வருந்தச் சொல்லலாகாது. பயந்து பேசக் கூடாது. இதுதான் வண்ணான் தொழில் ஆரம்பம். பிறகு அந்தக்கரணத்தை வெளுத்தல் சுலபம். சில இடங்களில் பொய் சொல்லி தீரும்படியாக இருந்தால் அப்போது மௌனத்தைக் கொள்ளவேண்டும். மௌனம் சர்வார்த்த சாத கம் அதை விட்டுப் பேசும்படி நேர்ந்தால் உண்மையே சொல்ல வேண்டும். உண்மை விரதம் தவறக்கூடாது. தவற வேண்டிய அவசியமில்லை. உண்மை கூறினால் தீங்கு நேரி டுமென்று நினைப்போர் தெய்வம் உண்மை யென்பதை அறிய மாட்டார்கள். தெய்வம் உண்மை. அதன் இஷ்டப்படி உலகம் நடக்கிறது. ஆதலால் பயப்படுகிறவன் மூடசிகா மணி. அந்தக்கரணத்தை வெளுத்தலாவது அதிலுள்ள பயத்தை நீக்குதல். அந்தக்கரணத்தைச் சுத்தி செய்துவிட் டால் விடுதலையுண்டாகும்’ என்றார்.’

இந்தத் தெளிவுதான் பாரதியின் உள்புகுந்து வதைத்துக் கொண்டிருந்த பல்வேறு பயங்களையும் போக்கித் தூய நம் பிக்கையை வலுப்படுத்திவிடுகிறது. ஒத்த மனமுடையவர்க ளின் கருத்துப்பரிமாறல் சித்தத்தில் வலுவேற்றிவிடுவது இயற்கை. அதிலும் தன்னிலும் வலிய ஆற்றல் உடையவர் களின் சார்பு அந்த நிலையில் இருந்து சரிந்துவிடாமல் காத் துவிடுகிறது. அதன் உறுதிப்பாட்டை உணர்ந்து கொண்ட பிறகு அவ்வுண்மையினை உலகறியச் சொல்லத் தூண்டுகி றது. பாட்டுக்காரர் அல்லவா, பாரதி. இந்தச் செய்தியை, பாப்பாப்பாட்டு வரைக்கும் கொண்டுபோய் விடுகிறார். குழந்தை மனத்துக்கேற்றவாறு, காக்கையை, கோழியை, குதி ரையை, பசுவினை நாயினை, சித்திரப்படுத்திக் காட்டி, நிறைவாக,

*உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்*
*உண்மை யென்று தான் அறிதல் வேணும்*
*வயிரமுடைய நெஞ்சு வேணும் - இது*
*வாழும் முறைமையடி பாப்பா*

என்று உபதேசித்துவிடுகிறார்.

## கற்றதும் கற்பித்ததும்:

போகிறபோக்கில், இந்தப் பாடலைப் புரிந்துகொள்வது வேறு. கால வளர்ச்சியில் இந்தக் கவிதையைப் பயில்கிற போது கிடைக்கிற பரிமாணமே வேறு.

‘தெய்வம் உண்மையென்று தான் அறிதல் வேணும்’ என்பது, ‘தெய்வம் என்பது பொய்யல்ல. உண்மையிலேயே தெய்வம் என்று ஒன்று இருக்கிறது என்பதை மற்றவர்கள் சொல்வதனால் மட்டுமல்ல, தானாகவும் அறிந்துகொள்ள வேண்டும்’ என்று புரிந்துகொள்வது தொடக்க நிலை.

‘தெய்வம் - உண்மை என்று தான் அறிதல்’ என்கிற நிலையில், ‘தெய்வமே உண்மை. உண்மையே தெய்வம்’ என்று தான் உணர்கிற நிலை அடுத்த கட்டம்.

’தெய்வம் - உண்மை என்று - தான் அறிதல்’ என்ற நிலையில், ‘தெய்வம் - அது உண்மை - அதுவே தான்’ என்று அறிதல் என்கிற உச்சம் தொடுகிறபோது, ‘தெய்வம் நீ என்று உணர்’ என்கிற அவர்தம் ஆத்திசூடி மந்திரம் மெய்யாகிவிடுகிறது. தான் என்பது நான் கடந்த பொதுமை என்கிற உறுதிப்பாடு வந்துவிடுகிறது.

அந்தத் தான் யார்? அல்லது எது? அதையே, பாரதி தன் வசன கவிதையில் நீளவும் விரிப்பார்.

*இவ்வுலகம் ஒன்று*
*ஆண், பெண், மனிதர், தேவர்,*
*பாம்பு, பறவை, காற்று, கடல்,*
*உயிர், இறப்பு - இவை யனைத்தும் ஒன்றே*
*ஞாயிறு, வீட்டுச் சுவர், ஈ, மலையருவி,*
*குழல், கோமேதகம் - இவ் வனைத்தும் ஒன்றே*
*இன்பம், துன்பம், பாட்டு,*
*வண்ணான், குருவி,*
*மின்னல், பருத்தி - இஃதெல்லாம் ஒன்று*
*மூடன், புலவன், இரும்பு, வெட்டுக்கிளி - இவை ஒருபெ-ாருள்*
*வேதம், கடல்மீன், புயற்காற்று, மல்லிகை மலர் -*
*இவை ஒருபொருளின் பலதோற்றம்.*
*உள்ள தெல்லாம் ஒரேபொருள், ஒன்று*
*இந்த ஒன்றின் பெயர் ‘தான்’*
*‘தானே’ தெய்வம்*
*‘தான்’ அமுதம், இறவாதது.*

தெய்வம் - உண்மை என்று - தான்’ அறிதல் என்ற தன்மையினை, நுண்மையாக உணர்த்தியவர் குள்ளச்சாமி. அவர் வழிநின்றுதான் பாரதி யறுபத்தாறில் பாரதி பாடுகிறார்.

*சாமி நீ: சாமி நீ:கடவுள் நீயே*
*தத்வமஸி தத்வமஸி நீயே அஃதாம்*
*பூமியிலே நீ கடவுள் இல்லை என்று*
*புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை*
*சாமிநீ அம்மாயை தன்னை நீக்கி*
*சதாகாலம் சிவோஹ’ மென்று சாதிப் பாயே!*

இப்படி பாரதியின் எழுத்துலகில் புகுந்து கலந்து உணர்கிற போது, அவர்தம் ஆழ்ந்திருக்கும் கவியுளம் தானாகவே துலக்கமாகிவிடுகிறது. அது மட்டுமன்றி, அந் நிலைமைக்கு நம்மையும் உய்வித்துவிடுகிற வலிமையையும் அவர் எழுத்து தந்துவிடுகிறது.

இந்த இடைவிளக்கங்களுக்குச் சற்றே நிறுத்திவிட்டு, பாரதியின் குள்ளச்சாமி குறித்த கட்டுரைக்குள் புகுந்தால் இவற்றுக்கு இன்னும் மேலானதொரு தெளிந்த விளக்கம் கிட்டிவிடுகிறது.

‘பின்னுமொரு சமயம் மேற்படி குள்ளச்சாமி என்னிடம் வந்து, ‘தம்பி, நீ இலக்கணக்காரனாச்சுதே! ‘வண்ணான்’ என்ற வார்த்தையை உடைத்துப் பொருள் சொல்லுவாயா?’ என்று கேட்டார்.

நான் நகைத்து, ‘சாமி, உடைக்கிற இலக்கணம் எனக்குத் தெரியாது’ என்றேன். அப்போது குள்ளச்சாமி சொல்லுகிறார்: ‘வண் + ஆன் = வண்ணான். ஆன் என்பது ரிஷபம். வள்ளலாகிய ரிஷபம் நந்திகேசுரர். அவருடைய தொழில் சுத்த ஞான மூர்த்தியாகிய சிவனைச் சுமந்து கொண்டிருத்தல். தமிழ்நாட்டில் ஞானாசாரியர்களுக்கு ஆதிமூர்த்தியும் வள்ளலுமாகி நிற்கும் இந்த நந்தி பகவானுடைய தொழிலாகிய ஆசாரியத் தொழிலையே நான் வண்ணான் தொழிலென்று சொல்லுகிறேன். எனக்கு வண்ணான் தொழில் என்று மேற்படி குள்ளச்-சாமி சொன்னார்.’ (சுதேசமித்திரன், 2.6.1917)

இந்த உரைச்சித்திரம், பாரதியின் கவியாக்கத்தில்,

*மற்றொருநாள் பழங்கந்தை அழுக்கு மூட்டை*
*வளமுறவே கட்டிஅவன் முதுகின் மீது*
*கற்றவர்கள் பணிந்தேத்தும் கமல பாதக்*
*கருணைமுனி சுமந்துகொண்டு என் எதிரே வந்தான்*
*சற்றுநகை புரிந்துஅவன்பால் கேட்க லானேன்:*
*‘தம்பிரானே இந்தத் தகைமை என்னே?*
*முற்றும்இது பித்தருடைச் செய்கை அன்றோ?*
*மூட்டைசுமந் திடுவதென்னே? மொழிவாய்’ என்றேன்.*
*புன்னகைபூத்து ஆரியனும் புகலு கின்றான்:*
*‘புறத்தேநான் சுமக்கின்றேன் அகத்தி னுள்ளே,*
*இன்னதொரு பழங்குப்பை சுமக்கி றாய்நீ’*
*என்றுரைத்து விரைந்தவனும் ஏகி விட்டான்.*
*மன்னவன்சொற் பொருளினையான் கண்டுகொண்டேன்*

- பாரதி அறுபத்தாறு- 30-31

இந்த இடத்தில் பாரதி புரிந்துகொண்டு நமக்குப் புரிய வைக்கிற பொருள் வேறு. உரைநடையில் பாரதி முன்னர் புரிந்துகொண்டு உணர்த்துகிற உண்மை வேறு என்பதை நாம் பிரித்தறிவது நல்லது. அதனைப் பின்னர் காணலாம்.



sethupathi@thaiveedu.com




## கற்பொழுக்கம்:

களவொழுக்கத்தைப் பேணிய தலைமக்கள் திருமணம் என்ற ஊரறிய நடத்தப்படும் சடங்கின் வழியாகக் கற்பொழுக்கத் தில் தடம் பதிப்பர். இது இருவகையால் நடைபெறும் என் பது தொல்காப்பியர் கூற்று.

கொள்ளுவதற்குரிய மரபினை உடையவன் தலைமகன். அவ னுக்குக் கொடுப்பதற்குரிய முறையைக் கொண்ட மரபினோர் தலைமகளைக் கொடுக்க நடப்பது ஊரறியும் திருமணம். அதேவேளை, திருமணத்துக்குப் பெற்றோர் இயையாவிடத்து, கொடுப்போர் (தலைமகளின் உறவினர்கள்) இன்றியும் திரும ணம் நடைபெறும் என்கின்றது தொல்காப்பியம். பெற்றோர் எவரும் உடன்படாதநிலையில் 'உடன்போக்கு' என்ற மரபுக்க மைய, தலைமக்கள் உறவுகளை விட்டுவிடுத்துத் தனித்துச் சென்று வாழ்வதுவும் உண்டு.

வள்ளுவர் வழிநடத்திச் செல்லும் தலைமக்கள், அகவாழ்வின் நுட்பமான உணர்வுகளையும் அழகநுபவத்தையும் அகவழி அறத்தையும் உலகத்தோருக்கு உணர்த்தவெனப் படைக்கப் பட்ட கதைமாந்தர். படைப்போட்டத்தின் உணர்ச்சிச் சிறப்பை எவ்விடத்திலும் மட்டுப்படுத்த விரும்பாத வள்ளுவர், தலை மக்களின் திருமணக் காட்சிகளைத் தவிர்த்துவிட்டுக் கற்பு நிலை சார்ந்த வாழ்வினைப் பிரிவாற்றாமையில் இருந்தே ஆரம்பிக்கின்றார்.

இல்லறவாழ்வில் இணைந்துவிட்ட தலைமக்கள், தடையேது மின்றி இன்புற்று மகிழ்வர். வாழ்வில் இன்பமும் அறனும் நிலைபெற வேண்டுமெனில், தலைமகன் பொருள் தேடிச் சென்றாகவேண்டும். 'பொருள்வயிற் பிரிவு' இளம் இல்வாழ் வாருக்குச் சாவுக்கொப்பான கொடுந்துயரைத் தருவது. குறிப் பாகத் தலைவியே பிரிவைத் தாங்காது அரற்றி அழுபவளாக இருப்பாள். பிரிவுக்குள்ளாகும் தலைவியின் துயரை வள்ளு வர் அழகுறத் தொகுத்தளிக்கின்றார்.

தொல்காப்பியம் தலைமகள் பிரிவை, சேயிடைப் பிரிவு, ஆயிடைப்பிரிவு வகைப்படுத்தி, சேயிடைப்பிரிவை, ஓதல், காவல், பகைதணிவினை, வேந்தர்க்குற்றுழி, பொருட்பிணி என வகைப்படுத்திக் கூறுகின்றது. இலக்கிய உணர்ச்சி மிக்க வள்ளுவர் பிரிவின் வகைப்பாடுகள் எவற்றையும் குறிப்பி டாது, தலைவியின் பிரிவுணர்வுக்குள் மட்டுமே மையமிட்டு, அதையே வகைப்படுத்திப் பலவாறாகக் காட்டுகின்றார்.

தலைவன் பிரிவுறப் போகின்றான் என்ற எண்ணமே தலைவி யின் இருப்பை ஐயுற வைக்கின்றது.

*'செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்*
*வல்வரவு வாழ்வார்க் குரை'*

'நீ பிரிந்தால் என்னுயிர் பிரியும்' என்பதே தலைவியின் வேண் டுகோள், எச்சரிக்கை. இவ்வுரை கேட்டபின்னரும் தலைவன் பிரிவானாகில், தலைவியின் துயரத் தொடர்ச்சி மிக நீளமா னது, ஆழமானது. அதனாற்தான் வள்ளுவர்,

படர்மெலிந்திரங்கல்
கண்விதுப்பழிதல்
பசப்புறுபருவரல்
தனிப்படர் மிகுதி
நினைத்தவர் புலம்பல்
கனவு நிலையுரைத்தல்
பொழுது கண்டிரங்கல்
உறுப்பு நலனழிதல்
நெஞ்சொடு கிளத்தல்
நிறையழிதல்
அவர்வயின் விதும்பல்

என்ற பதினொரு அதிகாரங்களில் தனித்திருக்கும் தலைவி யின் பிரிவுத்துயரையும் அதன் விளைவுகளையும் இலக்கிய நயம் சொட்டச் சொல்கின்றார். உள்ளத்தில் தோன்றிய துயர-நிலை, உடலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. அன்றாட நடத்தைகள் கூட மாற்றமுறுகின்றன. காணும் காட்சிகளும் கொள்ளும் கோலமும் மாறுபடத் தோன்றுகின்றன. தலைவ னின் வருகைக்காக, பெருந்தவமியற்றும் முனிபோல் துற

வுற்று வாழ்கிறாள். இவற்றை நயமிக்க சில குறள்கள்வழியே காண்போம்.

தலைவன் பிரிவுற்றவிடத்தே தலையின் உடல் தளர்ந்து மெலிவடையும். தலைவனின் பிரிவால் தலைவி வாடுகிறாள் என்பதை மறைக்கவே தலைவி முயல்கின்றாள். ஆனால் அது முடிவதில்லை.

*'மறைப்பேன்மன் யான் இஃதோ நோயை இறைப்பவர்க்கு ஊற்றுநீர் போல் மிகும்'*

'துயரை நான் மறைக்கவே முயல்கின்றேன். இறைக்க இறைக்க ஊறும் நீர் போல, மறைக்க முயலும் போதெல் லாம் ஊற்றாகிப் பெருகுகின்றதே துயரம்' என்கின்றாள். இர வுப்பொழுதோ, நீண்டு நெடுத்து, பிரிந்து கொடுமை செய்ப வரைவிடவும் கடும்கொடுமை செய்கின்றது எனப் புலம்புகின் றாள் தலைவி.

விளக்கணைந்தவுடன் சூழும் இருள்போல் தலைவன் கை நெகிழ்ந்தவுடன் உடலெங்கும் பரவும் தன்மையது பசப்பு.

*'விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு'*

தலைவன் அருகில்லாத இன்றளவில் அப்பசப்பானது, உட லெங்கும் பரவி, ஆழ விரவிக் கிடக்கின்றதே என அரற்றுகின்றாள்.

*'புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக்கொள் வற்றே பசப்பு'*

காதல் உணர்வைத் தூண்டுவதில் காலத்துக்குச் சிறப்பிடம் உண்டு. நெடுநல்வாடை என்ற இலக்கியப் பெயரே, அகத்து றையில் காலம் பெறுமிடத்துக்குச் சான்று. வள்ளுவர் இதற் குப் 'பொழுது கண்டிரங்கல்' என்றதொரு தனித்த அதிகா ரத்தையே படைத்திருக்கின்றார். அதில் இடம்பெற்ற,

*'காலை அரும்பப் பகல்எல்லாம் போதாகி மாலை மலரும் இந் நோய்'*

என்ற வரிகள், பொழுதுதோறும் வளர்கின்ற பிரிவுத்துயரைக் கூறுகின்றது. மாலைப்பொழுதைப் பெண்ணாகக் கருதும் தலைவி, தன்னையே பொருளாகக் கொண்டு அதனோடு பேசுகின்றாள்.

*'புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல் வன்கண்ண தோநின் துணை?'*

மாலைப்பெண்ணே, மாலையில் நீ ஒளியிழந்து தோன்றுகின் றாயே, நீயும் கடிய மனம்கொண்ட என் துணைவனைப் போன்ற துணைவனைக் கொண்டுள்ளாயா? என்கிறாள் தலைவி.

தலைவியின் துயருரைக்கும் நிறைவதிகாரமான 'அவர்வயின் விதும்பல்', தலைவியின் துயர உச்சத்தையும் தலைவன் வர விருப்பதையும் உணர்த்துகின்றது.

பிரிவினால் வருந்தி, வருந்தி, உள்ளம் சுக்குநூறாக உடைந் தபின், அவர் வருவார் என்ற உறுதி கிடைத்து என்ன பயன்? வந்தாலும் என்ன பயன்? (உடலும் உள்ளமும் சிதைந்திருக் கும்) உடலைத் தழுவி என்ன பயன்? என்று கூறுவதோடு, தலைவியின் பிரிவுத்துயரை நிறைவு செய்கின்றார் வள்ளுவர்.

சிறந்தவொரு இலக்கியச்சுவையை ஏற்படுத்தும் படைப்பா னது, உயர்ந்த உணர்வோட்டங்களைக் கொண்டிருக்கும். அறஞ்சான்ற அகவொழுக்கத்தில் சிறக்கும் தலைவியின் துயர்மிகு கூற்றுகள் துன்பியல் மிக்கவை. அடுத்துவரும் இன் பவுணர்களை மனத்திருத்தித் தோன்றும் மகிழ்வு, துன்பத்தை உணர்ந்தோருக்கே பெருநிறைவு தரும். இதுவே வள்ளுவரின் இலக்கிய உத்தி. பின்னால் வரவிருக்கும் புலவியும் ஊடலும் தலைவியின் அறியாமை எனக்கருதும் நிலை கற்போர் சிந்த னையில் தோன்றிவிடக்கூடாது எனில், தலைவிபால் மாறாத கருணையுணர்வு இருக்கவேண்டும். அதை ஏற்படுத்துவதே மேற்குறிப்பிட்ட பதினொரு அதிகாரங்களினதும் பணி. வள் ளுவர் அதனைச் செவ்வனவே செய்திருக்கின்றார்.

## புலவியும் ஊடலும் (கொஞ்சும் சண்டை - கொஞ்சச் சண்டை):

கற்பியல் நெறியில் தலைமக்களிடையே நிகழும் பிரிவின் வகைகளையும் அதைத்தொடர்ந்து நிகழக்கூடிய புலவியை யும் ஊடலையும் இலக்கணவழி நின்று, தொல்காப்பியம் விரி வாகவே பேசுகின்றது. வள்ளுவரோ, அகவொழுக்கத் தலை மாந்தரைத் தன் இலக்கியத்தில் கதைமாந்தராகவே படைத் துச் செல்லும் வழியில், நிகழ்வோட்டங்களுக்குப் பொருந்தவல்ல அகமரபுகளை மட்டுமே கையாண்டிருக்கின் றார்.

அகவொழுக்கச் சிறப்பை உரைக்க வள்ளுவர் வகுத்துக் கொண்டது இருபத்தைந்து அதிகாரங்களே. அவற்றுள் கள வினை விளக்கவும் தலைவியின் பிரிவுத்துயரை உணர்த்தவும் பத்தொன்பது அதிகாரங்களைச் செலவிட்ட வள்ளுவர், பிரி வின் பின்னர் கூடிய தலைமக்களின் உணர்வையும் தலைவி கொள்ளும் ஊடலையும் பின் தோன்றும் உவகையையும் உரைக்க ஆறு அதிகாரங்களைக் கொண்டுள்ளார்.

திருமணத்தின் பின் தலைவன், போர்த்தொழில் செய்யச் சென்றவனாகவே காட்டப்படுகின்றான். அவன் பிரிவானது, தொழில் சார்ந்து நிகழ்ந்தது. திரும்பி வந்தபின், தலைமக ளின் குறிப்புரைகளை உணர்ந்து, அவளுடன் கூடி மகிழ்கின் றான். 'பிரிவுக்காலத்தில் அவரைப் பலவாறாக இழிந்து ரைத்த நெஞ்சே நீ, அவரைக் கூடுவதற்குத் துணிகிறாயே' எனத் தன் நெஞ்சோடு புலக்கின்றாள். இந்நிகழ்வுகளைக் குறிப்புரைத்தல், புணர்ச்சி விதும்பல், நெஞ்சொடு புலத்தல் என்ற மூன்று அதிகாரங்களும் வெளிப்படுத்துகின்றன. பிரிந் தோர் கூடிய இன்பமும் இந்நிகழ்வுகளின் வழியே அழகுறப் புலப்படுகின்றது.

*'மலரினும் மெல்லியது காமம், சிலரதன்*
*செவ்வி தலைப்படு வார்'*

என்ற ஆழம்பொதிந்த குறள் 'புணர்ச்சி விதும்பல்' என்ற அதிகாரத்தில் இடம்பெறுகின்றது.

புலவியும் ஊடலும் ஒத்த பொருளுடையது எனக் கருதுவோரும் உள்ளனர். இரண்டும் வேறுபட்டவை என்கின்றார் பேரா.-மோகனராசு. அன்பொத்த காதலர் இருவரிடையே அன்புப் பெருக்கால் ஏற்படும் சிறிதான மன வேறுபாடே புலவி என்கின்றார். புலவின் அடுத்தநிலை ஊடல். இது சற்றே நீண்டிருப்பது. பெரிதும் தலைமகனின் தவறான ஒழுக்கத்தால் தலைவி உள்ளத்தில் நிகழும் மனவேறுபாடு. ஊடலின் முதிர் நிலை 'துனி' எனப்படுகின்றது. இது வாழ்வின் உயிரோட்டமாக அன்பின் பெருக்கத்தைத் தடுத்து, அது வற்றிவிடுவதற்கும் வழிசெய்யவல்லது.

தலைமக்கள் இருவரும் அன்பு சிறக்கக் கூடிவாழ்ந்தாலும் அவ்வப்போது சிறு பிணக்குகள், சிக்கல்கள், சிணுங்கல்கள் தோன்றத்தான் செய்யும். இவையே புலவி எனப்படுகின்றன. இவை கூடலின்பத்தை மிகுவிக்கவல்லவை. புலவிக்குப் பின்னான கூடல், தீரப் பசித்தவர் ஆரப் புசிப்பது போன்றது.

*'நீரும் நிழலது இனிதே*
*புலவியும் வீழுநர் கண்ணே இனிது' (1309)*

குளிர்ச்சியுடைய நீரானது நிழலிடை இருந்தாற்றான் இனிமை தரும். அதுபோல் அன்புடையாரிடையே ஏற்படும் புலவியும் கூடலுக்கு இன்பம் தருவதாகும் என்பது வள்ளுவர் மொழி.

முற்காலப் புலனறி வழக்கு, பரத்தையர் ஒழுக்கத்துக்கு வாழ்விலும் இலக்கியத்திலும் இடம் வழங்கியிருந்தது. தலைமகளைத் தலைவன் பிரிவதற்கும் இவ்வொழுக்கமே காரணமாயிற்று. புலவர்களின் படைப்பிலும் அது தவிர்க்கமுடியாத நிகழ்வே. இதைக் கருத்திற்கொண்டே இலக்கணிகள், அகத்துறையில் பிரிவு குறித்தும் அதற்கான காரணங்கள் குறித்தும் விரிவாகப் பேசியுள்ளனர். தலைமகள் தவிர்த்துக் காமக் கிழத்தியர். இற்பரத்தை. மாயப்பரத்தை, பரத்தை என்போருடைய உறவுகளைத் தொல்காப்பியம் பட்டியலிடுகின்றது. அக்காலச் சூழலில் அகவொழுக்கத்தில் தவிர்க்கமுடியாத அங்கங்களாக இவ்வுறவுகள் அமைந்திருக்கின்றன.

பிரிவு, ஊடல் குறித்துப் பல அதிகாரங்களை எழுதியிருக்கும் வள்ளுவர், எவ்விடத்திலும் பிரிவுக்கும் ஊடலுக்கும் பரத்தையரே காரணம் எனக் குறிப்பிடவில்லை. வள்ளுவர் படைக்க விரும்பும் இலக்கியத் தலைவன், அறம்மிக்க அக நெறியில் ஒழுகிச் செல்பவன், இளம் காதலர்களுக்கு முன்மாதிரியாகப் படைக்கப்பட்டவன். வள்ளுவர் வலியுறுத்தும் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற குடும்பக் கோட்பாட்டை பின்பற்றுபவன். தலைவி கொள்ளும் ஊடலுக்கான காரணம் தன்மீது கொண்ட அளவிறந்த பேரன்பே என்பதைப் புரிந்து, புலவியிலும் ஊடலிலும் அவள் சினக்கும் அழகை அனுபவித்து, அநுசரித்து வாழ்பவன். ஓர் இல்லானுக்குரிய அத்தனை அகச் சிறப்புகளையும் கொண்டவன். எனவேதான் தொல்காப்பியர் குறித்தவற்றுள், தன் குடும்பக் கோட்பாட்டுக்குப் பொருந்தாதவற்றைத் தவிர்த்தார் வள்ளுவர்.

தலைமகள் தலைவன்மேல் பேரன்பு பூண்டிருப்பவள். எக்காலத்திலும் கடக்கும் ஒவ்வொரு கணத்திலும் அவன் தனக்கு மட்டுமே உரித்துடையவன் என்பதில் உறுதிமிக்கவள். இந்த உரிமையே தலைவி தலைவன் மேல் கொள்ளும் புலவிக்கும் ஊடலுக்கும் அடித்தளமாகும். தலைவி புலத்தலிற்குக் காரணமேயில்லாதபோதும் நுட்பமான கற்பனைகளால் காரணத்தைப் படைத்துக்கொண்டு தலைவனுடன் ஊடிப் பேசுவாள். இதனையே வள்ளுவர் புலவி நுணுக்கம் என்கின்றார். இந்த அதிகாரத்தில் உள்ள பத்துக் குறட்பாக்களுமே தலைவி தலைவன்மேல் கொண்டுள்ள அன்பின் பேராழத்தைப் புலப்படுத்துகின்றன. தலைவன் தன் தோழனுக்குக் கூறும் சிறுகதைபோன்றே இவை அமைந்திருக்கின்றன.

'நான் உணவருந்தவென அமர்ந்தபோது தும்மல் வரவும் தும்மினேன். உடனே, அவள் மரபுக்கேற்ப வாழ்த்தினாள், வாழ்த்தியவள், உடனே அதை மாற்றி, உன்னையே நினைத்துக் கொண்டிருக்கும் நான் இங்கிருக்க, யார் நினைக்க நீ தும்மினாய்? எனக்கேட்டு அழத்தொடங்கிவிட்டாள். நான் ஒருவாறு அவளைச் சமாதானப்படுத்தினேன். சற்றுப் பொறுத்து, பாழாய்ப்போன தும்மல் மீண்டும் வந்தது. தும்மினால் மேலும் சீறுவாள் என்றெண்ணி அத்தும்மலைத் தும்மாது அடக்கினேன். அந்தோ.. அதையும் அவள் கண்டுவிட்டாள். 'கள்ளமில்லா உள்ளம் என்றால் தும்மல் வரத் தும்மியிருக்க வேண்டியதுதானே. உனக்கு வேண்டிய ஒருத்தி உன்னை நினைத்ததால்தானே நீ தும்மலை மறைத்தாய்' எனப் பெரிதாக அழத்தொடங்கினாள். மென்மை கொண்ட இனிமையான சொற்களைப் பேசி, அவள் ஊடலைத் தவிர்க்க முயன்றாலும் 'நீர் பிற மகளிரின் ஊடலையும் இவ்வாறுதானே தீர்ப்பீர்' என்று கூறி அதற்கும் சினந்து ஊடுகிறாள். சரி வேண்டாம் அமைதியாக இருப்போம் என்றெண்ணி அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன். 'உம்மால் காதலிக்கப்பட்டவர்களுள் யாருடைய அழகு எனக்கொப்பாகும் என்று பார்க்கின்றீரோ' எனக் கொந்தளிக்கின்றாள். நான் என்ன செய்வேன்?'

தான் உற்றதைத் தோழனுக்குரைக்கும் இச்சிறுகதைப் பாங்கு, இன்பத்துப்பாலின் இலக்கிய உத்திக்கு மற்றுமொரு

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

எடுத்துக்காட்டு.

ஊடலுவகை (உவகையைத் தரும் ஊடல்) என்பதே வள்ளுவரின் நிறைவதிகாரம். இந்த ஊடலே எங்கள் காதல் இன்பத்தை மிகுவிக்கின்றது எனக் கருதிய தலைமக்கள் இருவரும் ஊடலை உவந்து பேசுவதாகவே பத்துக் குறட்பாக்களும் அமைந்துள்ளன.

ஒருவரோடொருவர் தமக்குள் ஊடிக்கொள்வதே காமநுகர்ச்சிக்கு இன்பம் தருவதாகும். ஊடலின் முடிவில், ஊடல் நீங்க, கூடுவாராயின் அதுவே உயர் இன்பமாகும் என்பதை,

*'ஊடுதல் காமத்துக்கு இன்பம் அதற்கு இன்பம்*
*கூடி முயங்கப் பெறின்'*

என்ற குறள்வழியே உணர்த்தித் தம்பணியை நிறைவு செய்கின்றார் வள்ளுவர்.

## நிறைவுரை:

தொல்காப்பியரும் அவருக்கு முற்பட்ட இலக்கணக்காரரும் தத்தமது காலப் பின்னணிகளுக்கேற்ப, அகவிலக்கணங்களை வகுத்துள்ளனர். அவர்களின் முதன்மைக் குறிக்கோள், இலக்கியப் படைப்பாளர்களுக்கான பாடுபொருள்களுக்குரித்தான அகப், புற மரபுகளை வாழ்நிலம், காலம் என்பவற்றுக்கமைய வரையறுத்து வழங்குவதே. தொல்காப்பியருக்கு முன்பிருந்தோர் வகுத்தவற்றில் தொல்காப்பியர் தமது காலத்துக்கு ஏற்பச் சிற்சில மாற்றங்களைப் புகுத்தியிருக்கக்கூடும். தொல்காப்பியர் கூறிய அகப், புற மரபுகள் சில, அவருக்குப் பின்னால் தோன்றிய இலக்கியங்களில் மாற்றத்துக்குட்பட்டிருக்கின்றன.

வள்ளுவர் போற்றிச்செல்லும் அகத்திணை ஒழுக்கம், அவர் காலத்துக்குரிய மக்கள்வாழ்வை படியெடுத்துரைப்பதாகக் கொள்ளமுடியாது. வள்ளுவரின் அறமும் பொருளும் நல்வாழ்வுக்குரிய வழிகாட்டல்களும் முன்மொழியப்பட்ட சிந்தனைகளுமேயன்றி, அக்கால மக்களின் பண்பட்ட வாழ்வின் பதிவுகள் எனக் கருதுவது பொருத்தமன்று. வள்ளுவர் காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் பரவலாகத் தென்பட்ட ஒழுக்கங்களை, சமூக நடத்தைகளை, வள்ளுவர் ஒழுக்கக் குறைபாடுகளாகக் கருதினார். அவற்றைத் தவறெனச் சுட்டிக்காட்டி, மாந்தரை அறவழியில் ஒழுகச் செய்வதே வள்ளுவரின் குறிக்கோள். புலால் உண்ணாமை, கள்ளுண்ணாமை, பிறன்மனை விழையாமை போன்ற அதிகாரங்கள், வள்ளுவர் முன்மொழிந்த வழிகாட்டல்களேயன்றி, அக்காலச் சமூகத்தைப் பிரதிபலிப்பனவல்ல. அறத்துப்பாலையும் பொருட்பாலையும் போன்றே இன்பத்துப்பாலும் வள்ளுவரால் முன்மொழியப்பட்ட அறஞ்சான்ற அகவொழுக்கமே. வள்ளுவரால் படைக்கப்பட்ட தலைமகனும் தலைமகளும் அகத்தால் அன்புற்று இன்புற விழையும் இளைய காதலர்களின் முன்மாதிரிகளாகப் படைக்கப்பட்டவர்கள். வள்ளுவர் கனவில் சுமந்த அகத்திணைக் கோட்பாடுகளின் கதைமாந்த பிம்பங்கள். இவ்வகவொழுக்கத்தை உரைப்பதற்குத் தொல்காப்பியரின் அகத்திணையிலிருந்து தேவையான மரபுகளை மட்டுமே எடுத்தாண்டிருக்கின்றார் வள்ளுவர்.

வள்ளுவரின் இன்பத்துப்பால் தொடர்பான மேற்குறித்த புரிதல்கள், வள்ளுவத்தை வாசிப்போருக்கு மேலும் விளக்கத்தைத் தரும் எனக்கருதலாம்.

**உசாத்துணை:**
- தொல்காப்பியம் - நச்சினார்க்கினியர் உரை - அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு
- தொல்காப்பியம் - களவியல் உரைவளம் - க. வெள்ளைவாரணன்
- அகப்பொருள் மரபும் திருக்குறளும் - டாக்டர். சி. பாலசுப்ரமணியன் - சென்னைப் பல்கலைக்கழகம்
- தொல்காப்பியமும் திருக்குறளும் ஓர் ஒப்பாய்வு - பேரா. கு. மோகனராசு.
- சங்ககாலம் - முனைவர் கு. முத்துராசன்
- மலரினும் மெல்லியது - புதுக்கவிதையில் காமத்துப்பால் - பேரா. பெரியார்தாசன்.



vivekanandan.p@thaiveedu.com






திருக்குறளில் ஒவ்வொரு அதிகாரவைப்பிற்கும் முக்கிய மான காரணமிருப்பதாகக் கருதுகிறார். மாற்றிவைக்க முடியா தபடி இந்த வரிசைதான் சரியானமுறைவைப்பு என்ற கார ணத்தை எடுத்துக்காட்டுவார். ஒன்றையடுத்து வைக்கப்படும் அதிகார வைப்பிற்கானக் காரணங்களைக் கண்டு சொல்கி றார் பரிமேலழகர்.

உதாரணமாக: ‘ஒழுக்கமுடைமை’ அதிகாரத்திற்கு முன் அதி காரம், ‘அடக்கம் உடைமை’ இதற்குப் பரிமேலழகர், ‘அஃதா வது தத்தம் வருணத்திற்கும் நிலைக்கும் ஓதப்பட்ட ஒழுக்கத் தினை உடையர் ஆதல். இது மெய் முதலிய அடங்கி னார்க்கு அல்லது முடியாது ஆகலின் அடக்கம் உடைமை யின் பின் வைக்கப்பட்டது.’

‘பிறன் இல் விழையாமை’ அதிகாரத்திற்கு, ‘அதாவது காம மயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை. இஃது ஒழுக்கம் உடையார் மாட்டே நிகழ்வதாகலின், ஒழுக்கம் உடைமையின் பின் வைக்கப்பட்டது’ என்பார்.

அடக்கமுடையவனால் தான் ஒழுக்கமுடையவனாக இருக்க முடியும். ஒழுக்கமுடையவனாக இருப்பவன் தான் பிறன் இல் விழையாமல் இருப்பான். இது ஒருவித உளவியல், வளர்ப்பு, வழக்க முறைகளால் உருவாவது. இந்த படிநிலையைப் பரி-மேலழகர் உளவியல் நோக்கில் வைக்கிறார் எனலாம்.

மற்றொரு உதாரணத்தைப் பார்க்கலாம்:

‘நிலையாமை’ அதிகாரத்திற்கு ‘தோற்றம் உடையன யாவும் நிலையுதல் இலவாவம் தன்மை. மயங்கியவழிப் பேய்த்தே ரில் புனல் போலத்தோன்றி, மெய்யுணர்ந்த வழிக் கயிற்றில் அரவு போலக் கெடுதலின் பொய் என்பாரும், நிலை வேறு பட்டு வருதலால் கணந்தோறும் பிறந்து இறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவற்றான் வேறுபடாமையும் உடைமையின், நிலையுறுதலும் நிலையாமையும் ஒருங்கேயு டைய என்பாரும் எனப் பொருட்பெற்றி கூறுவார் பல திறத்த ராவர் அவர் எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பா டகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ச்சி அல்லது உடம்பாடகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார். இஃது உணர்ந்துழி அல்லது பொருள்களில் பற்றுவிடாது ஆகலின், இது முன்வைக்கப்பட்டது.

இதன் முன் அதிகாரம் ‘கொல்லாமை’ பின் அதிகாரம் ‘துறவு’ ஒவ்வொன்றிற்கும் உலகியல் காரணங்களைக் கூறி வைப்பு முறைகளை விளக்குகிறார் பரிமேலழகர்.

நிலையாமை என்பதின் தாத்ப்பரியம் அறிந்தவன் தான் துறவு மேற்கொள்ள முடியும். துறவு என்பது ஒரு தேடல். அப்படி தேடல் சிந்தனை உள்ளவன் தான் தன்னையே பரி சோதிப்பான். துறவின் பின் அதிகாரம் மெய் உணர்தல். ‘மெய் உணர்தல்’ அதிகாரத்திற்கு ‘அஃதாவது பிறப்பு வீடுக ளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களா னன்றி உண்மையான் உணர்தல். இதனை வடநூலாக ‘தத் துவ ஞானம்’ என்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றிய-வழி உளதாவது ஆகலின், அக்காரணம் ஒற்றுமை பற்றித் துறவின் பின் வைக்கப்பட்டது’ என்பார்.

பரிமேலழகருக்குள் ஒருவித அமைப்பியல் அணுகுமுறை செயல்படுகிறது. அது இன்று நாம் பேசும் ‘அமைப்பியல் - பின் அமைப்பியல்’ என்ற பொருளில் இல்லை. காரணகாரிய வழி நிற்கும் அமைப்பு முறை விளக்கம். வாழ்வியல் நிலை யிலிருந்து உருவாக்கிக்கொண்ட ஒரு அளவுகோல். ஸ்கேல், வரண்முறை. தர்க்கத்தின் துணைகொண்டு செயல்படும் அணுகுமுறை. கருவுற்றால் தான் குழந்தை பிறக்கும். குழந்தை தான் விடலை, வாலிப, பக்குவ நிலையினைப் படிப்படியாக அடைவதைப்போல.

தமிழண்ணல், ஒவ்வொரு அதிகாரத்திற்குள்ளும் ஒரு வைப்பு முறை வள்ளுவர் வைத்திருப்பதாகக் கருதுகின்றார். முதல் குறள் அந்த ஒட்டுமொத்த அதிகாரத்தின் சூத்திரம். அதா வது Definition. விளக்கமாக அமைகிறது. கடைசி குறள் தொகுத்த அதன் சாரமான முடிவு கூறலாக அமைகிறது. இடையில் பொருளின் செயல்பாடுகள் வைப்பதாகக் கூறு வார்.

உதாரணமாக வாய்மை அதிகாரத்தைப் பார்ப்போம். முதல் குறள்.

*‘வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்*
*தீமை இலாத சொலல்’*

இக்குறள் வாய்மை அதிகாரத்தின் ஒட்டுமொத்த சூத்திரம். விளக்கம். கடைசி குறள்.

*‘யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எணைத்தென்றும்*
*வாய்மையின் நல்ல பிற’*

இது வாய்மையின் முடிவு கூறல். இதன் இடையில் எட்டுக் குறளிலும் பல விளக்கங்கள் சொல்லப்பட்டு இறுதியாக ஒரு முடிவு கூறுகிறார் வள்ளுவர் என அதிகாரத்திற்குள் குறள் வைப்பிற்கு விளக்கம் தருவார் தமிழண்ணல்.

பரிமேலழகர் வேறு விதமான அணுகு முறையை முன்னமே கைக்கொண்டு விளக்குகிறார். அதிலிருந்துதான் தமிழண்ணல் விரிவுபடுத்திக் கொண்டுள்ளார் என்பது விளங்கும்.

வள்ளுவர் ஒவ்வொரு அதிகாரத்தையும் மூன்று நிலையில் அடுக்கி வைப்பதாக பரிமேலழகர் கருதுகிறார். பத்துப் பாடல்களை, முதலில் நன்மையை வற்புறுத்தி பின் தீமையைச் சொல்லி, இறுதியில் இன்றியமையாமையைச் சொல்ல குறள்களை ஒருவித தர்க்க நிலையில் அடுக்குவதாகக் கூறுகிறார்.

‘வெகுளாமை அதிகாரத்தின்’ பத்துப் பாடல்களை பரிமேலழகர் பகுப்பதைப் பாருங்கள்.

- 1. செல்லிடத்துக் காப்பான் சினம்காப்பான்
- 2. செல்லா இடத்துச் சினம்தீது செல்லிடத்தும்
- 3. மறத்தல் வெகுளியை யார் மாட்டும்
- 4. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்

முதல் குறளுக்கு ‘செல்லிடம்’, ‘அல்லிடம்’ என்று தவத்தால் தன்னின் மெலியாரையும் வலியாரையும் ‘வலியார்மேல் காவா வழியும், அதனான் அவர்க்கு வருவதோர் தீங்கு இன்மையின் காத்த வழியும் அறன் இல்லை ‘என்பார்’. காக்கின் என் காவாக்கால் என்’ என்றார்.

இதனால் வெகுளாமைக்கு இடம் கூறப்பட்டது.

முதல் இடத்தில் வைத்ததற்கும் விளக்கம் கூறுகிறார் பரிமேலழகர்.

2,3,4 ‘இவை மூன்று பாட்டாலும் வெகுளியது தீங்கு கூறப்பட்டது’ என்கிறார்.

- 5. தன்னைத்தான் காக்கின் சினம் காக்க
- 6. சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி
- 7. சினத்தைப் பொருள் என்று கொண்டவன்

‘இவை மூன்று பாட்டாலும் வெகுண்டார்க்கு வரும் தீங்கு கூறப்பட்டது’ என்கிறார்.

- 8. இணர்எரி தோய்வன்ன (இதனால் வெகுளாமை நன்மை கூறப்பட்டது).
- 9. உள்ளிய எல்லாம் (இதனால் வெகுளாதார்க்கு வரும் நன்மை கூறப்பட்டது’
- 10. இறந்தார் இறந்தார்...

‘இதனால் அவ்விருவர் பயனும் ஒருங்கு கூறப்பட்டது’ என்கிறார். பரிமேலழகரிடம் வைப்புமுறை அதாவது (திருக்குறள்) அமைப்பு முறை அணுகுமுறை செயல்படுகிறது.

## ஒப்பீட்டு அணுகுமுறை:

ஒன்றை விளக்கப் பிரிதொன்றை எடுத்துக்கூறுவது இதன் அடிப்படைகளில் ஒன்று. அதற்குப் பல நூல் அறிவு தேவை. பன்நூல் வாசிப்பில்லாதவர் ஒப்பியல் ஆய்வில் வெற்றிபெற முடியாது. ஒப்பியல் ஆய்வின் நோக்கம் இலக்கியப் பிரதியின் பல அம்சங்களில் ஓர் அம்சத்தை இம் முறையில் விளக்கும் போது அப்படைப்பிற்குப் புதிய தெளிவு கிட்டுகிறது. விளங்காத இடங்களை விளங்கிக் கொள்ள உதவுகிறது. சமூக, வரலாற்றுத் தன்மைக்கும், படைப்பிற்கும், படைப்பாளிக்கும் உள்ள உறவைக் கண்டுகொள்ள முடிகிறது. காலங்களும், இடங்களும் வேறுபட்டாலும் நெருக்கடியும் சமூகச் சூழலும் படைப்பின் நோக்கத்தை கண்டு தெளிய உதவுகிறது.

பரிமேழலகர் பன்நூல் படித்தவர். முக்கியமாக வடமொழியில் புலமை மிக்கவர்

‘நீத்தார் பெருமை’ (பாயிரம்) அதிகாரத்தில் ஏழாவது குறள்.

*‘சுவைஒளி ஊறுஓசை நாற்றமென் றைந்தின்*
*வகைதெரிவான் கட்டே உலகு’*
என்பதாகும்.

இக் குறளுக்கு உரை எழுதும் பரிமேலழகர்,

‘பூதங்கட்கு முதல் ஆகிய அவைதாம் ஐந்தும், அவற்றின் கண் தோன்றிய அப் பூதங்கள் ஐந்தும், அவற்றின் கூறு ஆகிய ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும் ஆக இருபரும் ஆம். ‘வகை தெரிவான் கட்கு’ என உடம்பொடு புணர்த்ததனால், தெரிகின்ற புருடனும் அவன் தெரிதற் கருவி ஆகியமாள் அகங்கார மனங்களும், அவற்றிற்கு முதல் ஆகிய மூலப் பகுதியும் பெற்றாம். தத்துவம் இருபத்தைந்தனையும் தெரிதல் ஆவது, மூலப்பகுதி ஒன்றில் தோன்றியது அண்மையின் பகுதியே ஆவதல்லது விகுதி ஆகாது எனவும், அதன்கண் தோன்றியமானும், அதன் கண் தோன்றிய அகங்காரமும், அதன்கண் தோன்றிய தன் மாத்திரைகளும் ஆகிய ஏழும், தத்தமக்கு முதலாயதனை நோக்க விகுதியாதலும், தங்கண் தோன்றுவனவற்றை நோக்கப் பகுதியாலும் உடைய எனவும், அவற்றின் கண் தோன்றிய மனமும், ஞானேந்திரியங்களும், கன்மேந்திரியங்களும் பூதங்களும் ஆகிய பதினாறும் தங்கண் தோன்றுவன இன்மையின் விகுதியே ஆவதல்லது பகுதி ஆகா எனவும், புருடன் தான் ஒன்றில் தோன்றாமையானும் தன்கண் தோன்றுவன இன்மையானும் இரண்டும் அல்லன் எனவும், சாங்கிய நூல் உள் ஓதியவாற்றான் ஆராய்தல் இவ் இருபத்தைந்து மல்லது உலகு எனப் பிறிதொன்று இல்லை என உலகினது உண்மை அறிதலின், அவன் அறிவின்கண் தாயிற்று.’ என்று சாங்கிய நூல் கொண்டு விளக்கமளிக்கிறார். இந்த விளக்கம்

தவறாக இருக்கலாம். சரியாகவும் இருக்கலாம். பரிமேலழக-ரின் ஒரு நோக்கம் குறளுக்குப் பட்டைத் தீட்டி அதை வாச கன் முன் ஒளிரவிடுவது. வேறு சில நோக்கங்கள் உண்டு. அதை அடுத்துச் சொல்லலாம்.

கடவுள் வாழ்த்தில் ஒன்பதாவது குறள்,

*'கோளில் பொறியிற் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை'*

என்பது 'எண் குணங்களாவன, தன்வயத்தன் ஆதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கை உணர்வினன் ஆதல், முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருள் உடைமை, முடிவு இல் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என இவை. இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது. 'அணிமாவை முதலாக உடையன எனவும், 'கடைஇலா அறிவை' முதலாக உடையன எனவும் உரைப் பாரும் உளர். 'காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயன் இல' எனத் தலைமேல் வைத்துக் கூறினார். கூறினாரேனும், இனம் பற்றி வாழ்த்தாத நாட்களும் அவ் வாறே பயன் இல் என்பதூம் கொள்க.'

'இடுக்கண் அழியாமையில்' நான்காம் குறள் இது

*'மடுத்தவாய் எல்லாம் பகடன்னன் உற்ற*
*இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து.'*

'மடுத்தவாய் எல்லாம்' என்பது பொதுப்பட நின்றமையின் சக டத்திற்கு அறற்று நிலம் முதலியவாகவும் வினைக்கு இடையூ றுகளாகவும் கொள்க. 'பகடு மருங்கு ஒற்றியும் மூக்கு ஊன் றியும் தாள் தவழ்ந்தும்' அரிதின் உய்க்குமாறு போலத்தன் மெய் வருத்தம் நோக்காது முயன்று உய்ப்பான் என்பார் பகடு அன்னான்' என்றார்.

*'மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்!*

என்ற குறளுக்கு குதிரையில் வந்த திருமாலின் (பரிமேலழ-கர்) எழுதிய உரையைப் பாருங்கள்.

'அன்பான் நினைவாரது உள்ளக் காலத்தின் கண் அவர் நினைத்த வடிவோடு விரைந்து சேறலின், 'ஏகினான்' என இறந்த காலத்தால் கூறினார் என்ன? 'வாராக் காலத்தும் நிக ழும் காலத்தும், ஓராங்கு வரூஉம் வினைசொற்கிளவி, இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல், விரைந்த பொருள்' என்மனார் புலவர் என்பது ஒத்தாகலின் இதனைப் 'பூமேல் நடந்தான்' என்பதோர் பெயர் பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற் றுவாரும் உளர். சேர்தல் - இடைவிடாது நினைத்தல்.

நான்கு குறளுக்குப் பரிமேலழகர் எழுதியுள்ள இந்த உரைக ளின் நுட்பங்களைச் சொல்ல நான் எடுத்தாளவில்லை. இதை விட ஆகச் சிறந்த விளக்கங்களை வேறு குறள்களில்தான் அழகர் சொல்லியிருக்கிறார். இவ்விடத்தில் நான் குறிப்பிட விரும்புவது குதிரைவாகனத்தாரின் பரந்து பட்ட வாசிப்பைத் தான். சாங்கியம், சைவாகமம், சீவகசிந்தாமணி, தொல்காப்பி யம் என பல ஆழமான நூற்களைப் பயின்றவராகவே குற ளெங்கும் தென்படுகிறார். ஒரு வைணவரான பரிமேலழகர், சமயக் காழ்ப்பாளர் என முத்திரைக்குத்திப் பார்க்கிறோம். ஆனால் அவரைப் போல இந்திய இலக்கியங்களைப் படித் துத் தெளிந்தவர் வேறொரு உரையாசிரியர் இல்லை. குற ளுக்கு மேலும் மேலும் ஒளியூட்டவே இந்த ஒப்புமை முறையை எடுத்தாளுகிறார். வைணவரான இவர் வைணவத் திற்குக் கொடி பிடிக்காமல் ஒரு சமண நூலுக்கு பட்டை தீட் டுவது ஏன்? திருக்குறள் மாபெரும் இலக்கியப் பிரதி என்ப தினால் தான் திருக்குறள் அவரை வசீகரிக்கிறது. இங்கு மதம் குறுக்கிடவில்லை. ஜாதி குறுக்கிடவில்லை. இன்று ஒரு நாவலை ஜாதி, குழு, சமயம் பாராமல் எந்த விமர்சகக்



கொம்பனும் அணுகுகிறானா? நாம் இந்த மனோபாவத்தாலே மேலான தமிழ்ப் படைப்புகளைச் சேற்றில் மிதித்துப் புதைக் கிறோம். காய்ந்த சேறு உதிர விக்கிரம் ஒருநாள் (பல நூற் றாண்டு கடந்து) வெளிப்படும் என நம்பிக்கையில் தான் தமி ழின் பெரும் படைப்பாளிகள் இயங்கிக் கொண்டிருக்கின்ற னர். தன் வைணவ மத உணர்வை உடைத்துக் கொண்டு இலக்கிய பிரதிமேல் காதல் கொண்டவனாக பரிமேலழகர்

இருக்கிறான். இது இன்று சாத்தியம் தானா?

இங்கு ஒன்றை சொல்லி விடுகிறேன். பரிமேலழகர் பிராமண ஜாதி உணர்வுமிக்கவர் தான். அவர் வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம் வைதீக மரபை இழுத்து வருகிறார் என்பதும் தெரிகிறது. ஆனால் தன் காதல் பிரதியான குறளை எவ்வளவு கொண்டாட முடியுமோ அவ்வளவு கொண்டாடிக் கொள்ளவும் அதைப் பயன்படுத்துகிறார். குறள்களுக்கு தூரத்தில் நிற்கும் விளக்க உரையாக வைதீக நூற்கள் நின்றாலும், பழுதடையவில்லை. அல்லது நமக்கு ஒவ்வவில்லை என்றால் பரிமேலழகர் வேறு குறள்களுக்குச் சொல்லும் அற்புதமான தரிசன உரைகளுக்குத் தாண்டிப் போய்விடலாம்.

மேலைத் தத்துவங்களை, கோட்பாடுகளைப் படிக்கிற நம் விமர்சகர்கள் அந்த பட்டாக் கத்திகளைத் தூக்கிக் கொண்டு வந்து சங்க இலக்கியங்களையும், சிலப்பதிகாரத்தையும், நவீனக் கவிதைகளையும், நாவல்களையும் கொத்துக்கறி போட்டு அதை வாசகன் முன் தட்டில் நீட்டி இப்படித்தான் நீ இதை பார்க்க வேண்டும், கொத்த வேண்டும். ருசிக்க வேண்டும் என கட்டளைகளைப் பிறப்பித்தபடியே இருக்கின்றனர்.

நவீன விமர்சகர்களை விட உரையாசிரியர்களே மூல நூல்களுக்கு ஒளியூட்டியுள்ளனர். பரிமேலழகருக்கும் தன்னை வெளிக்காட்டிக்கொள்ள ஆசையிருந்திருக்கிறது. குறளை மென்று துப்பி இதுதான் குறளின் சக்கை மலம் என காட்டாமல் கல்லை சிற்பமாக்கியவர். குறள் கொண்டிருக்கும் மௌனங்களைப் பேசும் சித்திரங்களாகத் தீட்டிக் காட்டுவதே அவரின் நோக்கமாக இருக்கிறது. வள்ளுவனின் குறளில் உள்ள இடைவெளிகளில் வெளிச்சத்தைப் பாய்ச்சுகிறார். சொல்லப்படாமல் விடப்பட்ட இடைவெளிகள் தேர்ந்தவாசகனுக்குப் புதிய பிரதிகளை உருவாக்கிக்கொள்ள இடமளிக்கின்றன. பரிமேலழகர் தனக்கு நேர்ந்த தரிசனங்களை வாசகனாக நின்று விரித்துப் பார்க்கிறார். வாசிக்கிற போது மௌனங்கள் பேருருக் கொள்கின்றன அவருக்கு. அதை உரையாக பதிவு செய்கிற இடங்கள் மிக முக்கியமானவை. இந்த அசலான தேடல், ஒப்பீட்டு முறைகளில் கிடைப்பதில்லை. தன் அனுபவம் என்ற உரைக்கல்லில் உரசிக் கொள்கிற போது பளிச்சென வெளிச்சம் பரவுகிறது. இருளின் மர்மங்கள் ஒளிர்கின்றன. குறளை மீறி அர்த்தப்பரிமாணங்கள் விரியும் இடங்களைக் கண்டடைகிறார் பரிமேலழகர். இந்த அனுபவத்தை எந்த விமர்சன வகையில் சேர்ப்பது? பிரதி தரும் பேரனுபவம் எனலாம். அல்லது குறளில் பெறும் பூரணத்துவம் எனலாம். வட நூலைக் கொண்டோ, தமிழின் இலக்கியத் தொன்மைகளைக் கொண்டோ விளக்காமல் தன் அனுபவத்தைக் கொண்டு விளக்கும் இடங்கள் கவித்துவம் பெறுகின்றன.

*எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு.*

என்ற குறளுக்கு 'ஒரு பொருளைப் பற்றி யார் சொன்னாலும் அதன் உண்மைப் பொருளை காண்பதுதான் அறிவாளியின் அடையாளம்' என்று பொது நிலையில் அர்த்தப்படுத்துகிறோம். பரிமேலழகர், 'குணங்கள் மூன்றும் மாறி மாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடுபொருள் நட்டார் வாயினும், ஒரோவழிக் கேட்கப்படுதலான், 'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்' என்றார். அடுக்கு பன்மை பற்றி வந்தது. 'வாய்' என்பது அவர் அப்பொருள்னிகண் பயிலாமை உணர நின்றது. மெய்யாதல் நிலைபெறுதல், செல்வாரது இயல்பு நோக்காது அப் பொருளின் பயன் நோக்கிக் கொள்ளுதல் ஒழிதல் செய்வது அறிவு என்பதாம்.' என்கிறார். யாருடைய வாயிலிருந்தும் மகத்துவமான பொருள் வெளிப்படும். உயர்ந்தோர் வாயிலிருந்துதான் உன்னத விளக்கம் வரும் என்பதில்லை. எனவே யார் சொல்கிறார் என்பது முக்கியமில்லை சொன்ன சொல்லில் என்ன மெய்மை இருக்கிறது என்பது தான் முக்கியம் என்று குறளுக்குப் புதிய பரிமாணத்தைக் காட்டுகிறார் அழகர்.

பரியார் இலக்கியப் பாடல்களைத் தன் உரைக்கு கையாளும் ஒப்பியல் அணுகுமுறையும் உண்டு. இது ஒப்பீடு அல்ல. சிறப்பாக குறளை விளக்க கையாளப்படும் ஒரு உத்தியாகத்தான் பயன்படுத்துகிறார். ஒப்பிட்டு குறளின் கருத்தை அரண் செய்வது அவருடைய நோக்கம். இரண்டாவது முன் உரையாசிரியரின் கருத்தைச் சரியாக மறுத்தல். அந்த மறுத்தல் நாகரீகமாகவே கையாளப்படுகிறது. மூன்றாவதாக வள்ளுவர் கருத்தை உள்வாங்கி தன் மேதைமையை நிலைநாட்டல் பரியாரிடம் இருக்கிறது. விமர்சனம் திறனாய்வு ஜொலிக்கும் இடம் என இவ்விடத்தைக் கூறலாம். மூன்றாவது நிலை என்பது ஒரு விமர்சன நிலை அல்ல. படைப்பாளியின் படைப்பனுபவத்திற்கு நிகரான மற்றொரு படைப்பனுபவம். திறனாய்வாளன் படைப்பாளியாக மாறும் இடம் இதுதான்.

தமிழ்த் திறனாய்வாளர்களில் தெ.பொ.மீ அவர்கள் 'முல்லைப்பாட்டு ஆராய்ச்சி குடிமக்கள் காப்பியம்' இரண்டு நூல்களிலும் அந்த இடத்தை எட்டியுள்ளார். நவீன விமர்சகர்களில் கைலாசபதி தொடங்கி அ. மார்க்ஸ் வரைக்கும் இந்தப் பக்கமே தலைவைத்துப் படுக்காதவர்களாகத்தான் இருக்கிறார்கள். இலக்கிய அனுபவம் என்பது இவர்களின் நூல்களில் வறண்ட பாலையாகவே தொடர்கிறது. முக்கியமாக தெ.பொ.மீ அவர்கள் தான் படித்த மேலைத்திறனாய்வு சித்தாந்த நூற்களின் அணுகு முறைகளைப் பொருத்திப் பார்ப்பதில்லை. அந்த வாசிப்பனுபவம் சங்க இலக்கியத்தின் மீதும் சிலப்பதிகாரத்தின் மீதும் பட்டு துலக்கம் பெறுகிறது. அவருக்கு புதிய அனுபவத்தைத் தருகிறது. அந்த அனுபவப்பதிவுகள் நமக்குத் தரிசனங்களாக மிளிர்கின்றன. சிலம்புக்குக் கூடுதல் பெருமை அதனால் வந்து சேர்கிறது.

புதுமைப்பித்தனுக்கு இப்படி கூடுதல் பெருமையைப் போய்கிற போக்கில் சேர்த்தவர் வெங்கட்சாமிநாதன். 'சூரியனாக இருந்தால் என்ன? குழந்தையின் பாதங்களுக்குத் தவம் கிடந்துதானே ஆகவேண்டும்' என்ற வரி கவித்துவ உச்சம் பெறும் இடத்தை அவர் சுட்டியபோது புதுமைப்பித்தனுக்கு ஒரு கம்பீரம் கிடைக்கவே செய்கிறது. அதேபோல தி. ஜானகிராமனுக்கும் அவர் பெருமை சேர்த்துள்ளார். ஆனால் அவரிடம் பரிமேலழகர் போல அனுபவம் ஒன்றுதிரண்டு பிரமிப்பை ஏற்படுத்துவதில்லை. எப்போதோ வெட்டிச் சென்ற மின்னலென மறைந்து விட்டது. அதிகமும் அவர் சவடால் தன்மைக்குப் போய் நீர்த்துப்போனார்.

*'பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு*
*அறனொன்றோ ஆன்ற ஒழுக்கு.'*

என்ற குறளுக்கு 'புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடை யார்க்கும் உட்பகை ஆகிய காமம் அடக்குதற்கு அருமை யின் அதனை அடக்கி ஆண்மையைப் 'பேராண்மை' என் றார். 'ஒன்றோ' என்பது எண்ணிடைச்சொல். செய்தற்கு அரிய அறனும் ஒழுக்கமும் இதனைச் செய்யாமையே பயக்கும் என் பதாம்' என பரியார் விளக்கம் தருகிறார்.

புற பிரச்சினையைச் சரியானபடி நின்று அணுகுவது ஆண்மை. மனிதனின் உட்பகையாகிய காமத்தை வெல்வது பேராண்மை எனப் பரிமேலழகர் ஆண்மைக்கு விளக்கமளிக் கும் இடம் அபாராம். பிறன்மனைவி மீது காமம் எழுவது இயல்பானது' அந்த உட்பகையை வென்ற பேராண்மையா ளரே சான்றோர், துறவி என்கிறார். குறளுக்குப் பரிமேலழகர் பட்டை தீட்டிய இடங்கள் ஆழம் பெறுகின்றன.

*'குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே*
*உடம்போடு உயிரிடை நட்பு'*

சில உரையாசிரியர் (மணக்குடவர்) இக் குறளுக்கு உரை எழுதும்போது 'கூட்டை உடைத்துக்கொண்டு கிளம்பிய பறவை திரும்ப கூட்டுக்குள் நுழையாதது போல உடம்பிற் கும் உளதாயிய நட்பு பறந்து போனால் திரும்பவராது' என் பர். பரிமேலழகர் கூட்டைவிட்டுப் பறந்து போன பறவை மீண்டும் திரும்பாது என்பது போல என்று கூறி அதற்கு மறு படி பழைய கூட்டில் மீண்டும் முட்டையிட்டு குஞ்சுபொரிக் காது என்ற அர்த்தத்தில் கூட்டிற்குத் திரும்பாது என்கிறார். உண்மையில் பழைய கூட்டில் பறவைகள் மீண்டும் முட்டை யிட்டு குஞ்சுபொரிக்காது என பறவையியல் நிபுணர்கள் நிரூ பித்துள்ளனர். நட்பை முட்டை ஓட்டுக்கு உவமையாக்கி விளக்கும் முறையை நாகரீகத்தோடு மறுத்து பறவை திரும் பாது போல நட்பு திரும்பாது என கூறுகிறார். இப் பாட லுக்கு மணக்குடவர் உரையே சரி என்றாலும் பரிமேலழகரின் சில பறவையின் வினோத பழக்கங்களைச் சொல்லும் போது நமக்கு வியப்பாக இருக்கிறது.

*'எய்தற்கு அரிய இயைந்தக்கால் அந்நிலையே*
*செய்தற்கு அரிய செயல்'*

முடிப்பதற்கு உரிய காலம் வரும்போது அதை பயன்படுத்தி செய்வதற்கு அரிதான அச் செயலைச் செய்துவிடு என்கிறது குறள். பரிமேலழகர், செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியமாக இருந்தாலும் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்க உரியவரை நாடிச் சென்று நிற்காதே. அதே சமயம் அந்த காரியத்திற்கு உரியவரே நெருங்கி வருகின்ற சமயம் பிசகாமல் கச்செனப்பிடித்து காரியத்தை முடித்துக்கொள்வது தான் மதிநுட்பம் என்கிறார். இனி அவருடைய பாஷையில் 'ஆற்றல் முதலியவற்றால் செய்து கொள்ளப்படாமையின் எய் தற்கு அரியது என்றும், அது தானே வந்து இயைதல் அரி தாகலின் இயைந்தக்கால் என்றும், இயைந்தவழிப் பின் நில் லாது ஒருதலின், 'அந்நிலையே' என்றும், அது பெறாவழிச் செய்யப்படாமையின் செய்தற்கு அரிய என்றும் கூறினார். இதனான் காலம் வந்துழி விரைந்து செய்க என்பது கூறப் பட்டது - என்கிறார். காரியம் சாதிப்பதற்கான உளவியல் பாங்கை, எவ்வளவு கணகச்சிதமாக விளக்கத்தில் வெளிப்ப டுத்தியுள்ளார் பாருங்கள்! உன்னிடம் வரும் போது விரைந்து செய் என்பது உலகியல் ஞானம் அல்லவா?

*'ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்*
*பொன்றுந் துணையும் புகழ்'*

தீங்கு செய்தவருக்குப் பாடம் புகட்ட பதிலடி கொடுத்துவிட் டால் அன்று ஒருநாள் இன்பம். பொறுமையாக இருப்ப வர்க்கு உலகம் இருக்கும் அளவும் புகழ் இருக்கும் என்பது பொருள். பரிமேலழகர் சொல்கிறார் 'ஒரு நாளை இன்பம் அந் நாளொன்றினும் கருதியது முடித்தோம் எனத் தருக்கியி ருக்கும் பொய்யின்பம்' என்கிறார். உண்மையான இன்பம் என்பது பொறுத்துக் கொள்ளுதல் இது அழியாத இன்பம். உலகம் அழியுமளவும் அழியாது இருக்கும் புகழ் இன்பம் என்கிறார் பரிமேலழகர்.

*'உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்*
*உள்ளத்துள் எல்லாம் உளன்'*

என்ற குறளுக்கு உள்ளத்திலே பொய் சொல்லாது வாழ்ந்து வந்தால் உலகத்தவரின் உள்ளத்தில் எல்லாம் இருப்பான் என்பது நேரடி பொருள். பரிமேலழகர் உள்ளம் என்பதை மனம், வாய், உடம்பு மூன்றாலும் பொய்யாது வாழ வேண் டும் என்று வரையறை செய்வார்.

திருவள்ளுவரைப் புரிந்துகொள்ள வேண்டுமானால் பரிமேலழ கரின் உரை கைவசம் உள்ள ஒளிவிளக்கு. அவரிடம் பிராம ணப்புத்தி உண்டுதான். சமஸ்கிருதத்தைத் தூக்கிப்பிடிக்கும் இடங்களும் உண்டுதான். ஆனால் அவரின் வாசக அனுப வத்தின் துலக்கம்பெறும் குறள்கள் ஒளிபெறுகின்றன என் பதை மறுக்கவே முடியாது.

ஜெயகாந்தனை உரத்துச் சொல்லும் கதை கருத்தாளர் என்றே நாம் கூறி வந்திருக்கிறோம். அவர் தீர்வுகள் சொல்வ தால் கலை என்ற அம்சம் இல்லாமல் போய்விடுகிறது என்று சு.ரா போன்றவர்கள் திரும்பத் திரும்ப உரத்துச் சொல்லி வந்திருக்கின்றனர். ஜெயமோகன் கதையின் முடிவுகளை வைத்து தீர்மானம் செய்யாமல் கதைக்குள் நிகழும் ஆழ்மன செயல்பாட்டை முன்வைத்து ஜெயகாந்தனின் கலை பெறுமா னத்தைச் சொல்லும் போது இதுவரை இல்லாத புதிய வெளிச்சம் அக் கதைகளில் வெளிப்படுவதை நாம் அனுப விக்க முடிகிறது. முடிவுகளைக் கைவைத்து மறைத்துக் கொண்டால் தமிழ்ச் சமூகத்தின் இருண்ட பகுதிகளின் கோக் குமாக்குகளைக் கண்டடையச் சென்ற வலுவான பயணம் இருப்பதை ஜெயகாந்தன் கதைகளில் காணமுடியும். இந்தத் தேடல் இந்த அளவு அவரின் சமகாலத்தவரின் படைப்புக ளில் இல்லை என்பதையும் நாம் இன்று உணர்ந்து கொள்ள முடியும்.

*அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்*
*களவறிந்தார் நெஞ்சில் கரவு.*

நல்லனவற்றை அளந்து அளந்து பார்ப்பவர் உள்ளத்தில் அறமும் பெருகி நிலைபெறும் அதுபோல களவு தொழி லைத் தேடிப்போகிறவர்களில் நெஞ்சில் வஞ்சனை பெருகும்

என்பது குறள். இதற்குப் பரிமேலழகர் உயிர் முதலியவற்றை அளந்தறிந்தார்க்குத் துறவறம் சலியாது வளர்ந்து நிற்கும் என அறத்திற்கு ஒரு விளக்கம் தந்து, களவும் அதுபோல மாறுபாடின்றி வஞ்சனையால் வளர்ந்து நிற்கும் என்கிறார். இரண்டு துருவங்களின் வேர்களைக் கண்டு சொல்கிறார் பரி மேலழகர்.

*'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு'*

எந்த பொருளும் எத்தகைய இயல்பைக் கொண்டிருந்தாலும் அதனுடைய மெய்யான பொருளைக் கண்டு சொல்வதுதான் அறிவு என்பது உடனடி விளங்கும் பொருள்.

பரிமேலழகர் சொல்கிறார் இதுவரை பொருள்தோறும் உல கத்தார் கற்பித்துக்கொண்டு வழங்குகின்ற கற்பனையான விளக்கத்தை, புரிதலைக் கழித்துவிட்டு அப்பொருளினுள்ளே நிற்கும் உண்மையான பொருளை காண்பதுதான் மெய் உணர்வாகும்' என்கிறார். அதற்கு உதாரணமாக, 'கோச்சேர மான் யானைக்கட் சேஎய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை' என்ற தொடரை எடுத்துக்கொண்டு விளக்குகிறார். 'அரசன் என்பதோர் சாதியும் சேரமான் என்பதொரு குடியும், வேழ-நோக்கினை யுடையான் என்பதோர் வடியும், சேய் என்பதோர் இயற்பெயரும், மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பதோர் சிறப்புப் பெயரும், ஒரு பொருளின்கண் கற்பனை ஆகலின், அவ்வாறு உணராது நிலம் முதல் உயிர் ஈறாகிய தத்துவங்க ளின் தொகுதி என உணர்ந்து, அவற்றை நிலம் முதலாகத் தத்தம் காரணங்களுள் ஒடுக்கிக்கொண்டு சென்றால் காரண காரியங்கள் இரண்டும் இன்றி முடிவாய் நிபந்தனை உணர்த லாம். 'எப்பொருள்' என்ற பொதுமையான் இயங்குதிணையும் நிலைத்திணையும் ஆகிய பொருள்கள் எல்லாம் இவ்வாறே உணரப்படும். இது மெய் உணர்தலின் இலக்கணம்' என விளக்குகிறார்.

ஒரு சொற்சேர்கையின் மேலோட்டமான பொருள் கூறாமல் அச்சொல் பிறத்தலின் அடிப்படையில் விளக்க வேண்டும் என்கிறார். நிலப் பிரதேசத்திற்கும் அச் சொல்லுக்கும் ஒரு பந்தம் இருக்கும். அந்த உறவிலிருந்து மெய்யான பொரு ளைக் கண்டடைய வேண்டும் என்கிறார். (திணை) நிலம், பொழுது, உரி இவற்றின் பிணைப்பில் வைத்துப் பொருள் கூற வேண்டும் என்கிறார். இது ஒரு சுயமான தேடல். நாம் மேலைநாட்டு இலக்கிய கொள்கைகளுக்கு நம் இலக்கியங்க ளில் பொருள் தேடுவது ஒரு கற்பனைதானேயொழிய மெய் யான பொருளாக இருக்க முடியாது. நம் வாழ்க்கைச் சூழ லில் வைத்து அர்த்தங்களைத் தேட வேண்டும் என்பத னையே நம் முன்னோன் வற்புறுத்துகிறான். 'கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை' என்ற தொடர் நம்மை மிரட்டினாலும், வசீகரமாக இருந்தாலும் சேர்க்கைகளைப் பிரித்து பொருள்கூறி கொண்டாட வேண்டி யதில்லை. மண்ணில் வைத்து பொருள்கூறு என்பதுதானே பொருள்.

*'எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்*
*மற்றன்ன செய்யாமை நன்று.'*

பின்னால் வருத்தப்படும்படியான செயல்களைச் செய்ய வேண்டாம். அப்படி செய்வானேல் பின்னால் வருத்தப்படும் படியான செயலைச் செய்யாமல் இருப்பது நன்று இது நேரடி பொருள்.

பரிமேலழகர், 'யான் செய்தது எத்தன்மைத்து! என்று பின் தானே இரங்கும் வினைகளை ஒருகாலும் செய்யாது ஒழிக் அன்றி ஒருகால் மயங்கி அவற்றைச் செய்யும் தன்மையி னான் ஆயின், பின் இருந்து அவ் இரக்கங்களைச் செய்யா தொழிதல் நன்று' என்கிறார்.

பின்னால் வருத்தப்படும்படியான ஒரு செயலைச் செய்யாதே. அப்படி வருத்தப்படும்படியான செயலைச் செய்துவிட்டு வருத்தப்படாமல் இருப்பதே நன்று. ஏனெனில் செய்யும்போது வருத்தப்படாமல் இப்போது ஏன் வருத்தப்படுகிறாய்? என்ன தேவை இருக்கிறது? அதனால் ஒரு பயனும் இல்லை. நீ வருத்தப்படாமலே இருந்துவிடுதலே மேல், அதாவது நீ வருத்தப்படுவதற்கும், அருகதை அற்றவன் என்கிறார் பரிமே-லழகர்.

'இரங்குவ' என முன் வந்தமையின் பின் அன்னவெனச் சுட்டி ஒழிந்தார் அவ் வினைகளது பன்மையான். இரக்கமும் பலவா யின. அச் செயலுக்குப் பின்னிருந்து இரங்குவானாயின், அது தீரும் வாயில் அறிந்திலன் எனவும், திட்பமிலன் என வும் பயனல்லன செய்கிறான் எனவும், தன் பழியைத் தானே தூற்றுகிறான் எனவும், எல்லாரும் இகழ்வதினால் 'பின் இரங் காமை' நன்று என்றார் வள்ளுவர். 'இதுவும் வினைத்தூயார் செயலாகலின் உடன் கூறப்பட்டது. பின் தொந்தற்குச் செய் வானாயின் அவை போல்வனவும் செய்யாமை நன்று எனப் பிறரெல்லாம் இயைபு அற உரைத்தார்' என மேலும் விளக் குவார்.

*'தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்*
*மெய்வருத்தக் கூலி தரும்.'*

தெய்வத்தாலே கொடுக்க முடியாத பயனை மெய்வருத்த முயன்று பாடுபட்டால் அதற்குரிய பயனை, கூலியைப் பெற லாம் என்பது கருத்து. பரிமேலழகர், 'எனினும்' என்பதற்குப் புதிய விளக்கம் தருகிறார். 'தெய்வத்தான் ஆயவழித் தன் அளவின் மிக்கப் பயனைத் தரும் என்பது உம்மையால் பெற்றம். இருவழியும் பாழாகல் இல்லை. தெய்வம் நோக்கி யிராது முயல்க என்பது கருத்து. அதாவது தெய்வம் ஓரளவு தரும். அதைவிட மெய்வருத்தப் பாடுபட்டால் தெய்வமே தர வில்லை என்றாலும் உழைத்தற்கு கூலி நிச்சயம் வந்தே சேரும் என்று விளக்குகிறார்.

பரிமேலழகர் என்றில்லை பல உரையாசிரியர்களிடமும் காணப்படும் செயல்படும் படைப்பாக்க நோக்கைத் தேடிக் கண்டடைவதற்கான முயற்சியாக இருக்கின்றன. மேலை விமர்சனங்கள் படைப்புச் செயல்பாட்டைப் பற்றியே அதிகம் பேசுகின்றனர்.



venugopal@thaiveedu.com

# கம்பனின் கருவூலம் திறந்து... 17

மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா

சென்ற இதழில் பாலகாண்டத்தின் 17-வது படலமாகிய உண்டாட்டுப் படலத்தில் தயரதனுடன் சென்ற சேனைகள் கள்ளுண்டு மகிழ்ந்து களிப்பெய்துகின்ற காட்சிகள் எடுத்து வரப்பட்டன. வரைக் காட்சிப் படலம், பூக்கொய் படலம், புனல் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் என்பன யாவும் காப்பிய இலக்கணத்துக்கு அமைவாகக் கம்பனின் கற்பனையில் படைக்கப்பட்டவையே என்பதை அறியலாம். இதனை அடுத்துவரும் 18-வது படலமாகிய எதிர்கொள் படலத்தில் மிதிலை நோக்கித் தனது பரிவாரங்களுடன் வருகை தந்த தயரதனை, சனக மகாராசன் எதிர் கொண்டு அழைத்துச் செல்கின்ற செய்திகளையும் இராமனும், இலக்குவனும் தந்தையையும் அன்னையரையும் எதிர்கொண்டு பணிந்து வணங்கி நின்ற செய்திகளையும் 34 செய்யுள்களில் கம்பர் சிறந்த அணிநயத்துடன் படைத்தளித்துள்ளார். அப்படலத்தை அடுத்துவரும் 19-வது படலமாகிய உலாவியற் படலத்தில் மிதிலை நகரத்து வீதியிலே இராமன் ஊர்கோலம் சென்றபோது நிகழ்ந்தவற்றை மிக அழகிய 54 செய்யுள்களில் கம்பர் தந்துள்ளார். அவற்றில் சிலவற்றை இங்கே எடுத்து வருகின்றேன்.

இராமன் வீதியிலே உலாச் சென்றபோது மிதிலை நகரத்து மகளிரெல்லாம் அவனைக் காண்பதற்காகத் திரள்கின்றார்கள். அதனைக் கம்பர் வருணிக்கும் செய்யுள்களிற் சில வற்றை இங்கு காண்போம்.

*'மானினம் வருவ போன்றும் மயிலினம் திரிவ போன்றும்*
*மீனினம் மிளிர்வ போன்றும் மின்னினம் இடைவ போன்றும்*
*தேனினஞ் சிலம்பி யார்ப்பச் சிலம்பினம் புலம்ப வெங்கும்*
*பூநனை கூந்தல் மாதர் பொம்மெனப் புகுந்து மொய்த்தார்.'*

- கம்ப. பால. 1147

பூக்களைச் சூடுதலால் ஈரமாகியுள்ள கூந்தலையுடைய மிதிலை நகரத்து மகளிர் மான்கள் கூட்டமாக வருவதைப் போன்றும், மயில்களின் கூட்டம் வந்து சேர்ந்ததைப் போன்றும், விண்மீன்களின் கூட்டம் ஒன்றாகி நெருங்கி வந்ததைப் போன்றும், மின்னல்களின் கூட்டம் ஒன்றாகி வந்ததைப் போன்றும், தாம் அணிந்துள்ள பூமாலைகளில் மொய்த்துள்ள வண்டுகளின் கூட்டங்கள் இசையொலித்து ஆரவாரிக்கவும், கால்களில் அணிந்துள்ள சிலம்புகள் ஒலிக்கவும் இராமன் வருகின்ற வழிகள் எல்லாம் விரைவாகப் புகுந்து நிறைந்து கொண்டார்கள் என அழகிய சிறந்த சொல்லாட்சி மிக்க செய்யுளோடு தொடங்குகிறது உலாவியற் படலம்.

அடிதோறும் சீர்தோறும் தலையாய எதுகை கொண்டு உவமையணியும் தன்மை நவிற்சியணியும் கலந்த சேர்வையணி கொண்ட அழகான செய்யுளாக இதனை வடித்துள்ள கம்பரின் கவிநயத்தை இங்கே காண்கின்றோம்.

அவ்வாறு திரண்டு வந்த மகளிர் இராமன் செல்லுமிடங்களை மொய்த்துக் கொண்ட வகையைக் கீழ் வருமாறு வருணனை செய்கிறார் கம்பர்.

*'விரிந்துவீழ் கூந்தல் பாரார் மேகலை யற்ற நோக்கார்*
*சரிந்தபூந் துகில்கள் தாங்கார் இடைதடு மாறத் தாழார்*
*நெருங்கினார் நெருங்கிப் புக்கு நீங்குமின் நீங்கு மின்னென்று*
*அருங்கலம் அனைய மாதர் தேன்நுகர் அளியின் மொய்த்தார்.'*

- கம்ப. பால. 1148

பெறுதற்கரிய அணிகலங்களைப் போன்று அழகு செய்கின்ற அந்நகரத்து மகளிர் விரைந்து வந்து கூடும்போது அவிழ்ந்து விழுகின்ற தங்கள் கூந்தலைக் கவனியாதவர்களாகவும், இடையைச் சுற்றி அணிந்திருந்த மேகலை அணிகள் அறுந்து சிந்துவன பற்றி அறியாதவர்களாகவும், தளர்ந்து சரிகின்ற பூப்போன்ற மெல்லிய துகில்களைச் சரிசெய்யக் கருதாதவர்களாகவும், தமது நுண்ணிய இடை நிலைகுலைதலை அறியாதவர்களாகவும் மிக நெருக்கமாக வந்து வழி விட்டு

விலகுங்கள் என்று ஒருவரையொருவர் கூறிக் கொண்டு, தேன் பருக வருகின்ற வண்டுகளைப் போல இராமனைச் சூழ்ந்து மொய்த்தார்கள் என்கிறார் கம்பர். இராமனைக் காணுதற்குக் கூடுகின்ற பரபரப்போடு மெய்மறந்த நிலையில் மகளிர் அவனைச் சூழ்ந்து மொய்த்ததை இவ்வாறு அழகாகக் காட்சிப்படுத்துகின்றார் கம்பர்.

**‘உலாவியற் படலத்திற் கூறப்படும் ஊர்கோலம் என்பது இக்காலத்தில் ‘மாப்பிள்ளை அழைப்பு’ என வழங்கப்படும் திருமணத்துக்கு முந்தியதாக நடைபெறும் மணமகன் ஊர்வலம் செய்வித்தலைக் குறிப்பதாக உள்ளது.’**

*‘வீதிவாய்ச் செல்கின் றான்போல் விழித்திமை யாது நின்ற*
*மாதரார் கண்கள் ஊடே வாவுமான் தேரிற் செல்வான்*
*யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்கும் கண்ணன் என்றே*
*ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்.’*

- கம்ப. பால. 1152

அந்நகரத்து வீதியிலே போகிறவன் போல இமையாது விழித்திருந்த மகளிரது கண்களுக்கு ஊடாகத் தாவிப் பாய்கின்ற குதிரைகளைப் பூட்டிய தேரின் மீது செல்பவனாகிய இராமன் எல்லாப் பொருள்களிலும் சிறந்த பெரியோர்கள் கண்ணன் என்று கூறிய திருப்பெயருக்குத் தகுந்த பொருள் தானேயென்று எல்லோர்க்கும் உணர்த்திவிட்டான் என்கிறார் கம்பர்.

கருநிறமுடையவனாக இருப்பதாலும், யாவர் மனத்தையும் கவர்ந்திழுக்கும் தன்மையாலும், கிருட்டினன் என்னும் வடமொழியின் திரிபாகக் கண்ணனென்னும் பெயர் திருமாலுக்கு வழங்கப் பெறுகிறது. எனினும் கண்ணன் என்னும் பெயர் தமிழில் எல்லோரிடத்தும் கண்ணோட்டமாகிய அருளை உடையவனென்றும், எல்லோர்க்கும் கண்ணையொத்து அருமையாக நிற்பவன் என்றும் பொருள்படும். இப்போது அப்பெயருக்கு எல்லா மகளிரினதும் கண்வழியே சென்றபடியால் கண்ணன் என்று பொருள்படும் படியாயிற்று என்கிறார் கம்பர். கண்ணன் என்னும் பெயருக்கு இயல்பாக உள்ள பொருளைத் தவிர்த்து வேறொரு பொருளைக் கூறியதால் இது பிறிநிலை நவிற்சியணி எனப்படும். பெயர்ச்சொற்களுக்கு இயல்பாக உள்ள பொருளைத் தவிர்த்து மற்றொரு பொருளைத் தந்து உரைப்பது இதன் இலக்கணமாகும்.

*‘பஞ்சணி விரலி னார்தம் படைநெடுங் கண்க ளெல்லாம்*
*செஞ்செவே ஐயன் மெய்யிற் கருமையைச் சேர்ந்த வோதாம்*
*மஞ்சன மேனி யான்தன் மணிநிற மாத ரார்தம்*
*அஞ்சன நோக்கம் பார்க்க விருண்டதோ அறிகி லேமால்.’*

- கம்ப. பால. 1156

செம்பஞ்சுக் குழம்பை அணிந்த விரல்களையுடைய அம்மகளிரது வேற்படை போன்ற பெரிய கண்கள் யாவும், இராமனைப் பார்த்ததனால் இராமனின் மேனியிலுள்ள கருநிறத்தை அடைந்தனவோ அல்லது மேகத்தையொத்த மேனியையுடைய இராமனது கருநிறத்தை அம்மகளிரது மைதீட்டிய கண்கள் பார்த்ததனால் அவ்வாறு கருமையடைந்ததோ அறியமுடியவில்லை எனக் கண்கள் ஐயமுறுவதாக இச்செய்யுள் கூறுகிறது.

இராமனது மேனியின் மிக்க கருநிறமும், அம்மகளிரது கண்களின் கருநிறமும் இங்கே நன்கு உணர்த்தப்பட்டது. மகளிரது கண்களின் நோக்கு இராமனது மேனியில் நன்கு பதியுமாறு இருந்ததைக் குறிப்பாக உணர்த்தி அவ்வாறு நோக்கியதால் அவர்கள் கண்கள் கருமை நிறமடைந்தனவா அல்லது அவர்களது கண்களால் அவனின் மேனி கருமை நிறமடைந்ததா என்னும் ஐயத்தைத் தற்குறிப்பேற்றமாக இங்கே கம்பர் வைத்துள்ளார்.

இராமனைக் கண்ட மகளிரது கண்களுடன் மனமும் பதிந்த விதத்தைக் கம்பர் மேலுமொரு மிக அழகான செய்யுளில் வருணிக்கின்றார்.

*‘தோள்கண்டார் தோளே கண்டார் தொடுகழற் கமலமன்ன*
*தாள்கண்டார் தாளே கண்டார் தடக்கைகண் டாருமஃதே*
*வாள்கொண்ட கண்ணார் யாரே வடிவினை முடியக் கண்டார்*
*ஊழ்கொண்ட சமயத் தன்னார் உருவுகண் டாரை யொத்தார்.’*

- கம்ப. பால. 1165

இராமனது தோளில் பதிந்த மகளிரது கண்கள் அவனது தோளின் அழகைச் சுவைப்பதை விட்டகலாது அங்கேயே நிலைத்துக் கொண்டன. வீரக் கழலை அணிந்த அவனது தாமரைமலர் போன்ற காலடிகளின் அழகைப் பார்த்தவர்களது கண்கள் காலடிகளிலேயே நிலைத்து விட்டன. நீண்ட கைகளின் அழகைப் பார்த்தவர்களது கண்களும் அக்கைக

ளின் அழகைப் பார்ப்பதை விட்டு நீங்காது தங்கிவிட்டன. ஒவ்வொரு மதங்களிலும் கூறப்படுவதுபோல் இறைவனின் ஒவ்வொரு வடிவத்தையும் பார்த்தவர்கள் இறைவனின் முழுவடிவத்தையும் பார்க்காததைப்போல வாளையொத்த கண்களையுடைய மகளிரது நோக்கு அவனது மேனியின் ஒவ்வொரு உறுப்பிலும் நிலை கொண்டு விட்டதால் அவனது உடலழகு முழுவதையும் பார்த்தவர்கள் எவருமில்லை என்பதாகக் கம்பரின் வருணனை செல்கிறது. இங்கே தோளையும், காலடியையும், கைகளையும் குறிப்பாகக் காட்டியது, தாடகை வதம் செய்த தோள்கள் இவையென்பதையும், அகலிகையின் சாபம் தீர்த்த காலடிகள் இவையென்பதையும், சிவதனுசை முறித்த கைகள் இவையென்பதையும் கண்டு சுவைத்த மகளிரது கண்கள் அவற்றிலிருந்து அகலாமல் நின்றுவிட்டன என்பதைக் கம்பர் குறிப்பாகக் காட்டுவதற்கே என்பதைத் தேர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறு இராமனைக் கண்ணுற்ற மகளிர் பலரும் அவனிடம் தம்மைப் பறிகொடுத்து அவனின் மேல் ஒருதலையாகக் காதல் கொண்டு உழன்ற அவர்களது மனோநிலையைப் பல செய்யுள்களில் கம்பர் சுவைபடத் தருகிறார். காதல் மோகத்தில் ஒரு பெண் இராமனைப் பழிப்பதாகக் கூறும் ஒரு செய்யுளை இங்கே பார்க்கலாம்.

*'மருண்ம யங்கு மடந்தையர் மாட்டொரு*
*பொருள் நயந்திலன் போகின்ற தேயிவன்*
*கருணை யென்பது கண்டறி யான்பெரும்*
*பருண தென்கொல் படுகொலை யானென்றாள்.'*

- கம்ப. பால. 1181

ஒன்றையும் விரும்பிப் பெறாதவனாய் இங்ஙனம் இவன் செல்வதென்பது சரியானதா? இவன் கருணையென்னும் குணத்தின் தன்மையைச் சிறிதளவும் அனுபவித்து அறிகின்றானில்லை. மகளிரைச் சிறிதும் விரும்பாத இவன் காமத்தை விட்டொழித்த தத்துவ ஞானியோ? இப்படிப் பெண்களை வருத்திக் கொல்கின்றவன் ஒரு கொடிய கொலைகாரனாக இருத்தல் கூடும் என ஒருத்தி புலம்புவதாகக் கம்பர் கூறுகிறார்.

இவனைக் கண்டு காதல் கொண்ட மகளிரிடம் எதனையும் விரும்பாது போகின்றானே. மகளிரெல்லோரும் தமது உடல், உயிர், செல்வம் இவற்றுள் இவன் எதை விரும்பினாலும் கொடுப்பதற்குச் சித்தமாக இருக்கின்றார்கள். ஆனால் இவனோ அவர்களைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லையே. இவன் கருணையற்றவனா? ஞானி என்போமென்றாலும் சீதையை விரும்பியிருக்கின்றானே. எப்படி அவளை விரும்பினான் என ஒருத்தி அங்கலாய்ப்பதாகக் கம்பர் கூறுவது நயம் மிக்கது.

மேலும், ஒரு அங்கதச் சுவை மிகுந்த செய்யுளைப் பார்க்கலாம்.

*'பெருத்த காதலிற் பேதுறு மாதரின்*
*ஒருத்தி மற்றங் கொருத்தியை நோக்கியென்*
*கருத்தும் அவ்வழி கண்டதுண் டோவென்றாள்*
*அருத்தி யுற்றபின் நாணமுண் டாகுமோ.'*

- கம்ப. பால. 1184

மிகுந்த வேட்கையினால் மதிமயக்கமடைந்த அம்மகளிருள்ளே ஒருத்தி மற்றொரு பெண்ணைப் பார்த்து நீங்கள் சென்ற வழியிலே இராமனின் உருவத்தை மாத்திரமன்றி அவ்விடத்தில் எனது உள்ளத்தையும் பார்த்ததுண்டா என்று வினவுகிறாள். ஆசை மிகுந்தபின் வெட்கம் விலகி விடுமல்லவா. 'ஆசை வெட்கமறியாது' என்பார்கள். நாணத்தையும் மறந்து கண்ணால் காணமுடியாத உள்ளத்தைக் கண்டீர்களா? எனக் கேட்பது காதல் வேட்கை மிகுதியினால் என்பதைக் கம்பர் இங்கே உணர்த்துகிறார்.

இவ்வாறு பல பருவத்து மகளிரும் நெருங்கி வந்து அவனைக் கண்டு களித்து நின்ற வழியைக் கடந்து சென்ற இராமன், வசிட்டர், விசுவாமித்திரர் ஆகியோர் வீற்றிருந்த மண்டபத்தைச் சென்றடைகின்றான். அச்சபா மண்டபத்தைத் தயரதனும் மற்றும் பல நாட்டின் அரசர்களும் வந்தடைகின்றார்கள். எல்லோரையும் மிகுந்த மகிழ்ச்சியுடன் சனக மன்னன் வரவேற்று உபசரிக்கின்றான். உலாவியற் படலத்திற் கூறப்படும் ஊர்கோலம் என்பது இக்காலத்தில் 'மாப்பிள்ளை அழைப்பு' என வழங்கப்படும் திருமணத்துக்கு முந்தியதாக நடைபெறும் மணமகன் ஊர்வலம் செய்வித்தலைக் குறிப்பதாக உள்ளது. 'வாரணமாயிரம் சூழ வலம் செய்து நாரணன் நம்பி நடக்கின்றான்' என்று திருமணத்துக்கு முன்பு உலாவரும் காட்சியை ஆண்டாளின் பாசுரத்தில் காணலாம். இந்த உலாவியற் படலமும் கம்பனின் கற்பனையில் உருவானதேயாகும்.

அடுத்த இதழில் 20-வது படலமாகிய கோலங்காண் படலத்தில் திருமண நிச்சயத்துக்காகச் சீதையை அவளது தோழிகள் அலங்காரம் செய்கின்ற நிகழ்ச்சிகளைக் கம்பனின் சிறந்த கவிநயம் மிக்க செய்யுள்களுடன் அறிந்து மகிழ்வோம்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# தொன்மையைத் தேடி 27

## ஆதித்தமிழர், திணை வழிக் குடிகள் - புறத்திணையியல் - 2

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

தொல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும் 'தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந் 'நூற்பாக்களில் பயின்று வரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

**கடந்தவை...**

தொல்காப்பியம் புறத்திணையியல், தமிழகத்தில் அரசு தோன்றி வளர்ந்த வரலாற்றைக் கூறும் ஆவணமாகும். புறத்திணையியலில் ஐந்நிலங்களின் போர் முறைகளும் கூறப்பட்டிருக்கின்றன.

- ஆதியில், தமிழ் நாட்டில், மக்கள், ஐவகை நிலங்களிலும் குழுக்களாக வாழ்ந்திருக்கிறார்கள், இதையே தொல்காப்பியம் திணைக் கோட்பாடுகளாக வகுத்திருக்கிறது. அகத்திணையியலில் மக்கள் அக வாழ்வியலின் பின்புலம் வகுக்கப்பட்டிருக்கிறது.
- அகத்திணையியல் காட்டும் ஐவகை நிலங்களினதும் பின்னணியில், அந் நிலங்கள் சார்ந்த அரசியல் அமைப்புக்களின் தளம் புறத்திணையியலில் கூறப்பட்டிருக்கிறது. புறத்திணையியல் கூறும் குறிஞ்சி நிலத்தின் அரசியல், வெட்சித் திணைப் பூசல்கள் வழி ஆராயப்பட்டது.
- வெட்சித் திணையின் 14 துறைகளும் கூறும் செய்திகள் ஒரு பெரும் போரைக் குறிப்பதாக இல்லை. ஆகோள், ஆநிரைகளைப் பங்கிட்டுக் கொள்ளுதல், ஆகொண்ட வெற்றியைக் கொண்டாடுதல், நிரைகளை இரவலருக்குப் பரிசாகக் கொடுத்தல் முதலிய செய்திகள் அரச உருவாக்க கால நிலையையே காட்டுகின்றன.
- வெட்சிப் போரில் காலாட்படை மட்டுமே கலந்து கொண்டிருக்கிறது. தொல்காப்பியரும் இதனை 'பூசல் மாற்று' என்றே குறிப்பிடுகிறார். வெட்சித் துறைகள் பற்றிய செய்திகளைக் கொண்டுகூட்டிப் பார்க்கும் போது, இவை, குழுக்களிடையே நடந்த பூசல்கள், அப் பூசல்களின் விளைவான குழுத் தலைமைகளின் தோற்றம், அவற்றின் வளர்ச்சியான அரச உருவாக்கம் என்பவற்றையே காட்டி நிற்கின்றன.

**தொடர்வது...**

### புறத்திணையியல் - வெட்சியும் கரந்தையும்:

தொல்காப்பியத்தில், வெட்சித் திணையைத் தொடர்ந்து கரந்தைத் திணையும் அதற்குரிய 21 துறைகளும் விளக்கப் படுகின்றன. ஆநிரைகள் கவர்ந்து செல்லப்பட்டதை அறிந்த முல்லை நிலத் தலைவனது படைகள் ஆநிரைகளை மீட்பதற்காக அவற்றைப் பின் தொடர்வது முதலான செயல்கள் ஒரு பூசலின் இருவேறு பகுதிகளாதலால் தொல்காப்பியர் கரந்தைத் திணையையும் வெட்சித் திணையின் ஒரு பகுதியாகவே கூறுகிறார். உரையாசிரியர் இளம்பூரணர் கருத்தும் அதுவே.

நச்சினார்க்கினியர், 'படையியங்கு அரவம், பாக்கத்து விரிச்சி; ..' (புறத்திணையியல் 5) என்னும் நூற்பாவில் கூறப்பட்ட 14 துறைகளையும், ஆகோளுக்கும், ஆநிரை மீட்டலுக்கும் பொதுவாக உரியதாக்கி 28 துறைகளாகக் கொண்டார். எடுத்துக்காட்டாக - படை இயங்கு அரவம் என்பதற்கு, ஆகோளுக்காகச் செல்லும் வீரர் செல்லும் ஓசை மட்டுமே கூறப்படுகிறது. இவர்கள், பாடிப் புறத்து ஓசைபடாது சென்று ஆநிரைகளைக் களவாகக் கொள்வதும், ஆநிரைகளை மீட்கச் செல்லும் வீரர், ஆநிரைகளைக் களவாடிச் சென்றவர் பின் விரைந்து செல்லும் ஓசையும் என இரண்டாகப் பொருள் கொள்வார்.

வெட்சித் திணைக்குக் கூறப்பட்ட 21 துறைகளில் ஆரமர் ஓட்டல், ஆ பெயர்த்துத் தருதல், வேந்தன் சிறப்பெடுத்து உரைத்தல், தன் போர் வலியால் நெடுமொழி கூறுதல், வருவார் தாங்கல், வாள் வாய்த்துக் கவிழ்தல் ஆகியவை நிரை மீட்டல் பொருண்மைத்தாகி கரந்தைக்கே உரியவையாகவும் ஏனைய துறைகள் பொதுவானவையாகவும் கொள்ளப்படுகிறது. மொத்தத்தில், இந்த ஆய்வின் தேவைக்காக, வெட்சியும் கரந்தையும் ஒரு பூசலின் இரு பக்கங்கள் என்பதை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

முல்லை நிலத்து ஆயர், ஆனிரைகளை, அடுத்துள்ள குறிஞ்சி நிலத்தில் மேச்சலுக்காக இட்டுச் செல்வர். அவர்கள், ஆனிரைகளுக்கு ஊறு நேராது காப்பதற்காகத் தம்முடன் ஒரு சிறு படையும் உடன் கொண்டு செல்வர். அவர்களிடம் 'கல்கால் கவண்' என்னும் பகைவரை அழிக்கும் அரிய படைக்கலம் இருந்ததாகப் பதிற்றுப் பத்து வாயிலாக அறியக் கிடக்கிறது. 'ஆரெயில் அலைத்த கல்கால் கவணை நார் அரிநறவின் கொங்கர்' (பதிற்றுப்பத்து 88). குறிஞ்சி நிலக் காடுகளுக்கு மேய்ச்சலுக்காக ஆநிரைகளைக் கொண்டு செல்லும் ஆயர் இரவில் தங்கியிருக்கும் பொருட்டு 'குறும்பு' என்னும் சிறு அரண் அமைத்து வாழ்வர். இவ்வரண் சிறு ஊர் போலக் காட்சியளிக்கும். ஆநிரை கவர வரும் வெட்சியார், முதலில் இச் சிறு அரண்களில் உள்ளவர்களை அழித்த பின்னரே ஆநிரைகளைக் கவர முடியும். இதனையே தொல்காப்பியர், வெட்சித் திணையுள் 'ஊர்க் கொலை' என்னும் துறையாகக் கூறுகிறார். இதுவே ஆதியில் நிலவிய வெட்சித் திணையின் பின்புலமாக இருந்திருக்க வேண்டும்.

வெட்சிப் போர் பற்றிப் புலவர் கா. கோவிந்தன் அவர்கள், பாலை நில மறவர் தமக்குப் பொருட் குறைபாடு ஏற்படும் போதெல்லாம், முல்லை நிலத்து ஆநிரைகளைக் கைப்பற்றிச் செல்வதே வெட்சிப் போர் என்றும், முல்லை நிலத்து ஆயர், அம் மறவர் பின் சென்று, கைகலந்து, ஆநிரைகளைப் மீட்டுக் கொண்டு வருதலே கரந்தை என்றும் நிரை கோடலையும் நிரை மீட்டலையும் பண்டு மேற்கொண்டிருந்தவர், முறையே பாலை நில மறவரும் முல்லை நில ஆயருமே என்றும் எனவே நிரைகோடலும் நிரை மீட்டலும் குறித்து எழும் போர் பாலை நிலத்தாருக்கும் முல்லை நிலத்தாருக்கும் இடையே நிகழ்ந்த போர் என்கிறார் (பண்டைத் தமிழர் போர் நெறி, பக். 85-86). 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து' என்னும் இளங்கோ அடிகளாரின் சிலப்பதிகார அடிகளை இங்கு நினைவிற் கொள்ளலாம். ஆதியில், பாலை நிலத்தாரும் குறிஞ்சி நிலத்தாரும் வெட்சிப் போர் செய்திருக்கலாம் என்ற முடிவிற்கே வரவேண்டியுள்ளது.

ஆனால் காலப்போக்கில் இம் முறை மாறி, தனக்குப் பணியாத அரசர் மேல் படையெடுக்கும் அரசன், போர் தொடுக்கப் போவதை அறிவிக்கும் வாயில்களுள் ஒன்றாக 'படையினை ஏவி, பகை நாட்டு ஆநிரைகளைக் கைப்பற்றிக் கொணர்வது' அமைந்தது.

ஆநிரை மீட்டலுக்குரிய அடையாளப் பூ, கரந்தை ஆகும்.

*'உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்*
*போந்தை, வேம்பே, ஆர் என வரூஉம்*
*மாபெரும் தானையர் மலைந்த பூவும்',*

- புறத்திணையியல் 63

என்னும் அடிகளால் சேர, சோழ, பாண்டியர்கள் தத்தம் அடையாளப் பூவால் குறிக்கப்படுகிறார்கள், இவ்வடிகளால் மன்னர் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை, பூசல் நிறைந்த சேர, சோழ, பாண்டியரின் அரச வளர்ச்சிக் காலத்தை இது குறிக்கிறது என்று கொள்ளக் கிடக்கிறது. இது, அடையாளப் பூ பற்றிக் கூறும் பொதுப் பகுதியாகும்.

தொல்காப்பியம், நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்தில் அரங்கேறியதாகத் தொல்காப்பியப் பாயிரம் கூறுவது உண்மையாயின், பொ.ஆ.மு. 711-ம் ஆண்டளவில் பாண்டிய மன்னர் தலைமையில் நிலையானதொரு பாண்டிய அரசு இருந்திருக்கிறது. பாண்டிய மன்னர் தமிழோடு இணைத்துப் பேசப்படும் நிலைக்கு உயர்ந்திருந்தார்கள் என்று கொள்ளக் கிடக்கிறது.

துடி கொட்டிச் செல்லுதல் நிரை கவர்ந்தவருக்கும் நிரை மீட்டவருக்கும் உரியது. அவ்வாறே உயிர் கொடுத்தும் குருதிப் பலி கொடுத்தும் வெற்றிக்காகப் பராவும் கொற்றவை நிலை இருவகை வெட்சிக்கும் பொது என்பார் நச்சினார்க்கினியர். தோற்றவர்கள், வெற்றி வேண்டியும், வென்றவர்கள், மேலும் வெற்றி வேண்டியும் கொற்றவையை வழிபடுவார்கள். இதனைத் தொல்காப்பியர் 'கொற்றவை நிலை' என்கிறார். அத்துடன் இவை, 'அனைக்குரி மரபினது கரந்தை' என்கிறார்.

வெட்சித் திணையினது துறைப் பகுதிகள் மூலம், பண்டைக் காலத்தில், திணைக் குழுக்களின் தொடக்க கால வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. பொது மன்றில் குழுக்களிடையே நடந்த ஆகோள் முன்னெடுப்புக்கள், முல்லை நிலத்தில் திருட்டுத்தனமாகப் புகுந்து, வேவு பார்த்தல், களவில் பசுக்களைக் கொள்ளுதல் முதலியவற்றைக் கூறும் பகுதிகள் தொடக்க காலத்தில் குழுக்களிடையே தேவைக்காக நடந்த பூசல்களைக் குறிப்பவையாக இருக்கின்றன. ஆதியில் குழுக்களிடையே, உணவுக்காக ஆனிரை கவரவும், கவரப்பட்ட ஆனிரைகளை மீட்கவும் நடந்த பூசல்களே நாளடைவில் ஆனிரைகள் செல்வமாகப் பார்க்கப்பட்டபோது போர்களாக உருவெடுத்தன. எனவே, ஆதியில் நடந்த வெட்சிப் போர்கள் எனப்படுபவை பூசல்களே.

## நடுகல் நாட்டல்:

கரந்தைத் திணை நூற்பாவின் முடிவில் நடுகல் நாட்டல் விரிவாகக் கூறப்பட்டிருப்பது வெட்சிப் பூசலுடன் பொருந்துவதாக அமைந்திருக்கிறது. விழுப்புண் பட்டு மடிந்த வீரனுக்காக அவன் வீரத்தைப் போற்றும் வகையில் அவனது வீரத்தைக் கல்லில் ஏற்றுவது மரபாக இருந்திருக்கிறது. இதனையே தொல்காப்பியரும்,

*'காட்சி, கல்கோள் நீர்ப்படை நடுகல்*
*சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல் என்று*
*இருமூன்று மரபில் கல்லொடு புணர ...'*

- புறத்திணை இயல், 5

நடுகல்லாதலுக்கு ஏற்ற கல் ஒன்றைத் தேடித் தேர்ந்தெடுத்து, அதனை நீராட்டி, அக் கல்லை உரிய சிறப்புக்களுடன் நடுதல் மரபாக இருந்ததைத் தொல்காப்பியர் பதிவு செய்திருக்கிறார்.

'பெருங் கற்படைச் சின்னங்கள் உருவாவதற்கு கற்கள் தேவைப்படுவதால், குறிஞ்சி, முல்லை நிலப் பகுதிகளி லேயே நடுகற்கள் அதிகம் காணப்படுகின்றன என்கிறார் பேரா.க. இராஜன் (தொல்கியல் நோக்கில் சங்ககாலம், பக். 11). அத்துடன், 'கொடுமணல் அகழாய்வில் காணப்பட்ட கற் பதுக்கைகளும் அக் கற்பதுக்கைகளுக்கு உள்ளே கிடைத்த இறந்தவரின் எஞ்சிய எலும்புத் துண்டுகளும் கற்பதுக்கைக ளைச் சுற்றக் கிடைத்த ஆயிரத்திற்கு மேற்பட்ட மட்பாண்டங் களும் சூதுபவள மணிகளும் (carnelian beads) எண்ணற்ற இரும்புப் பொருட்களும் தொல்காப்பியம் காட்டிய காட்சியை நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகின்றன,' (தொல் கியல் நோக்கில் சங்ககாலம், பக். 35) என்கிறார்.

நடுகற்கள், அவை நிறுவப்பட்ட கால மரபு, அரசுகள், மொழி, பண்பாடு, போர் முறைகள் முதலிய வரலாற்றுத் தக வல்களைத் தந்து நிற்கின்றன. தொல்காப்பியம் காட்டும் காலப் பகுதியில் எடுக்கப்பட்ட நடுகற்கள் மிகப் பழமை யான நாகரிகத்தின் தன்மையைக் காட்டுகின்றன. இக்கல் வெட்டுக்கள், ஆநிரை கவர்தல், ஆநிரை மீட்டல் முதயவற் றின் போது நடந்த பூசலில் வீர மரணம் அடைந்த வீரர்களுக் காக எடுக்கப்பட்டிருக்கின்றன. தொல்காப்பியரது கரந்தைத் திணை கூறும் நடுகற்கள் அவர் கால அரசியல் நிலையை உறுதி செய்யும் சிறந்த ஆவணங்களாகப் பயன்படுகின்றன.

## வஞ்சித் திணைப் போர்:

தொல்காப்பியம் புறத்திணையியலில் வெட்சியை அடுத்து வஞ்சித் திணை வைக்கப்பட்டுள்ளது.

*'வஞ்சி தானே முல்லையது புறனே*
*எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்*
*அஞ்சுதகத் தலைச்சென்று அடல்குறித் தன்றே'*

- புறத்திணையில் நூ. 6

மண்ணாசையால் பிறர் மண்ணைக் கவர நினைத்து, அவன் சோர்வுற்றிருக்கும் காலம் பார்த்திருக்கும் பகை மன்னன், தன் மேல் படையெடுத்து வருவதற்கு முன்பாகவே அவன் அஞ்சும் படியாக அவனை வென்று அடக்குவதற்கு ஏற்ற காலம், இடம், வலி பார்த்து அவன் நாட்டின் மேல் படையெ டுத்தல் நாடாளும் அரசன் கடமையாகும் என்பது இந்நூற்பா வின் பொருள். இளம்பூரணர் உரையும் இதுவே.

இதற்கு மாறாக நச்சினார்க்கினியர்: 'ஒருவன் மண்ணசையான் மேற்சென்றால் அவனும் அம் மண் அழியாமற் காத்தற்கு எதிரே வருதலின் இருவருக்கும் மண்ணசையால் மேற் சேறல் உளதாதலின் அவ்விருவரும் வஞ்சி வேந்தர் என்றுணர்க' என் றார்.

இவ்வாறு மாறுபட்ட உரை வகுக்கக் காரணம் 'எஞ்சா மண் ணசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச் சென்று அடல் குறித்தன்று' என்னும் நூற்பாவில் வரும் 'எஞ்சா மண் ணசை வேந்தனை' என்னும் பன்மொழித் தொடர் ஒருமையில் வருதலாகும். வஞ்சித் திணைக்குரிய இலக்கணத்தை ஆரா யுங்கால் இரு வேந்தருள் ஒருவனே மேற் போதற்கு உரிய வன் என்பது புலனாகிறது.

## வஞ்சிப் போர் துறைகள்:

வஞ்சித் திணையைத் தொல்காப்பியர், 'இயங்குபடை அர வம்' முதலாக 'தழிஞ்சி' ஈறாகப் 13 துறைகளாக விளக்கி யுள்ளார்.

- இயங்கு படை அரவம் - போருக்கு அணி வகுத்துச் செல் வோர் வீர உணர்வு பெற வேண்டி, பேரிசை முழங்கும் கருவிகளை இசைவாணர்கள் முழக்கிக் கொண்டு முன்னே செல்வது அக்கால வழக்கம். இதனைப் படையியங்கு அர வம் என்று நூல்கள் குறிப்பிடுகின்றன.
- எரிபரந்தெடுத்தல் - வளம் மிக்க நாட்டினை எரியூட்டி அழித்தல்.
- வயங்கயல் எய்திய பெருமை - மாற்றானை அழித்த பெருமை,
- கொடுத்தல் எய்திய கொடைமை - வேந்தர் படைவீரர்க ளுக்குக் கொடை செய்து மகிழ்தல்,
- அடுத்தூர்ந்து அட்ட கொற்றத் தானும் - படைவீரர் பகை- வரை அடுத்துக் கொன்ற வெற்றி,
- மாராயம் பெற்ற நெடுமொழி யானும் - படைவீரருக்கு அவர்கள் வீரத்தின் பரிசாக ஏனாதி, காவிதி முதலிய பட் டங்களும் நாடும் ஊரும் கொடுத்துப் பாராட்டப் படுதல்,
- பேராண் பக்கம் - பகைவரை ஒரு பொருட்டாக மதியாது படை செலுத்தும் பேராண்மைக்குரிய அரசர் திறம்.
- வருவிசைப் புனலைக் கற்சிறை போல ஒருவன் தாங்கிய பெருமை - தன் படை எதிரி படைக்கு ஆற்றாது உடைந்த போது, பெருவிசையுடன் வரும் பெருநீரைக் கல் லணை தாங்கினாற் போல தனி ஒருவனாக நின்று தாங் கிய திறமை,
- பெருஞ்சோற்று நிலை - மன்னன் படை வீரர்களுடன் உட னிருந்து உண்பது,
- வென்றோர் விளக்கம் - வென்றோர் வெற்றியைப் பாராட்டல்
- தோற்றோர் தேய்வு - தோற்ற மன்னரது குறை,
- கொற்ற வள்ளை - பகைவர் நாடு அழிதற்கு இரங்கித் தோற்றோன் சிறப்பின்மையைக் கூறிப் பாடும் வள்ளைப் பாட்டு (உரல் பாட்டு),
- தழிஞ்சி - தழிஞ்சி என்பது தழுவுதல். வென்றும் தோற்றும் மீண்ட அரசர் போரில் பாதிக்கப்பட்டவர்களிடம் சென்று அவர்களுக்குப் பொருள் கொடுத்தும் தழுவியும் அவர்கள் சேவையைப் பாராட்டுதல்.

இவை அனைத்தும் போருக்குச் செல்லல், போர் செய்தல், போரின் பின் விளைவு ஆகியவற்றை விளக்குவனவாக அமைந்திருக்கின்றன. முல்லை நிலத்தில் நடந்த வஞ்சிப் போர் நடவடிக்கைகள் அனைத்துமே பிறர் மண்ணைத் தம தாக்கிக் கொள்ளும் அரச விரவாக்கத்தையே காட்டி நிற்கின் றன.

## உழிஞைப் போர்:

*'உழிஞை தானே மருதத்துப் புறனே*
*முழு முதல் அரணம் முற்றலும் கோடலும்*
*அனைநெறி மரபிற்று ஆகும் என்ப'*

- புறத்திணையில் நூ. 8

உழிஞைப் போர் இருவகையாகப் பார்க்கப்படுகிறது. ஒன்று, வலிமிக்க கோட்டையைப் படையெடுத்து வந்த வேந்தன் முற்றுக்கையிடுதல், மற்றொன்று, கோட்டையின் உள் இருந்த வேந்தன் கோட்டையை எதிரி கைப்பற்றாதபடி காத்து நிற்றல். கோட்டையின் புறத்தில் நிற்பவனை, 'சென்ற வேந்தன்', 'புறத்தோன்', 'புறத்துழிஞையான்' எனவும் கோட்டையின் உட்புறத்தே இருப்பவனை 'இருந்த வேந்தன்', 'அகத்தோன்', 'அகத்துழிஞையான்' எனவும் சுட்டுவர்.

மலையும் காடும் அல்லாத சம தரையில் அமைந்திருப்பது மருத நிலம். மருத நிலத்தில் காவல் தளங்கள் பல நிறுவி பகைவர் இலகுவில் அணுக முடியாத முறையில் அமைக்கப்பட்டது அரண். அரணை அணுகுவதற்கு முன்னால் பகை அரசன் மிகவும் கடுமையான காவல் காட்டைக் கடந்து அதன் பின் அகழியைக் கடந்தே மதிலை நெருங்க முடியும். 'முழுமுதல் அரணம்' என்றதனால் தலையும் இடையும் கடையும் என மூவகைப்படும். நாட்டைக் கைப்பற்ற எண்ணிய வேந்தன் முதலில் வெளி அரணைத் தாக்கி அழிப்பான், வெளி அரணை வெற்றி கொண்ட பின் இடை அரணைத் தாக்குவான், இடையரண் கைப்பற்றப்பட்ட பின் கடை அரணை முற்றாக அழித்து நாட்டைத் தன்னகப்படுத்துவான். அழிவின் உச்சம் உழிஞையாகும்.

உழிஞைத் திணையின் துறைகள் 12 என்பார் தொல்காப்பியர்.

## புறத்தோன் பற்றிய துறைகள்:

- கொள்ளார் தேஎம் குறித்த கொற்றம்: பகை நாட்டை வெல்லுமுன்பே வென்றவன் போல் வேண்டியோர்க்குக் கொடுத்தல், இராமன் இலங்கையை விபீடணனுக்குக் கொடுத்தது போல.
- உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பு: நினைத்ததை முடிக்கவல்ல வேந்தன் சிறப்பை அவன் எடுத்துரைத்தல்.
- தொல்லெயிற்கு இவர்தல்: பழம்பெருமதிலை இன்று பகலுள் அழிப்பேன் என்று எண்ணுதலும் அழித்தலும்.
- தோலின் பெருக்கம்: மதில் மேல் ஏறிச் செல்கையில் கேடயமாகத் தோலினாலாகிய கேடயம் கொண்டு செல்லுதல்.

## அகத்தோன் பற்றிய துறைகள்:

- அகத்தோன் செல்வம்: மதிலினுள்ளேயுள்ள மன்னனது செல்வமும் போர்ப் படை, குடி, கூழ, அமைச்சு, நட்பு, நீர்நிலை, ஏமப்பொருள், மேன்மை முதலியன.
- புறத்தோன் அணங்கிய பக்கம்: செல்வத்தால் மட்டுமின்றிப் போர்த் தொழிலாலும் புறத்தோனை வருத்தியமை கூறல்.
- ஒருதான் மண்டிய குறுமை: மதிலகத்தோன் அரண் அழிவு தோன்றிய போது புறத்துப் போர் செய்யும் சிறுமை.
- வருபகை பேணார் ஆரெயில்: புறத்துழிஞையான் அரணுள் புகுந்துழி அவனது பகையைப் போற்றாது அகத்தோன் இகழ்ந்திருத்தற்குரிய மதிலரணின் சிறப்புக் கூறுதல்.

தொல்காப்பியர், இவை தவிரவும் 'குடையும் வாளும் ;..' (புறத்திணையியல் நூ.11) என்னும் நூற்பாவால் மேலும் 12 வகைத் துறைகளைக் கூறுகின்றார். இவை அனைத்தும் போர் சார்ந்தவையே. ஆனாலும் இந்த ஆய்வுக்கு நேரடித் தரவுகளைத் தராதவை. விரிவஞ்சித் தவிர்க்கப்படுகின்றன.

மேலே கூறப்பட்ட அனைத்துத் துறைகளுமே மதிலின் சிறப்பு, மதிலின் சொந்தக்காரனாகிய அகத்தோனது செல்வம், வீரம் முதலாய சிறப்புக்கள், அம் மதிலைக் கொள்ளக் கருதும் புறத்தோனது பொறாமை, அரணைக் கைப்பற்ற நினைக்கும் திண்மை என்று போரும் போர்க் காரணம் பற்றியவையாகவுமே அமைந்திருக்கின்றன.

மண் காரணமாகப் பொருத வஞ்சிப் போரையும், மதில் காரணமாகப் பொருத உழிஞைப் போரையும் கண்டோம்.

அடுத்து வருவன, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் திணைகள்.

- தொடரும்...



selvanayaki.s@thaiveedu.com



# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்

40

- நா. சுப்பிரமணியன்

இத்தொடரிலே சிலப்பதிகாரம் தொடர்பான பார்வையிலே இதுவரை, அவ்வாக்கம் தொடர்பான ஆய்வுகளின் வரலாற்றியக்கத்தைத் தெரிந்துகொள்ளத் துணை நிற்கும் வகையில் உருவான நூல்கள் சிலவற்றை நோக்கிவந்தோம். குறிப்பாகச் சிலப்பதிகாரம் வாசிக்கப்பட்டு வந்த முறைமை பற்றிக் கடந்த கட்டுரையிறுதியில் விரிவாகவே நோக்கினோம். இவ்வாறான பார்வையின் தொடர்ச்சியாக அமையும் இக்கட்டுரையிலே முதலில், 'சிலப்பதிகாரத்தைப் பண்டைத் தமிழரின் சமூக - பண்பாட்டு இயங்கு நிலைகளை அறிந்துகொள்ள உதவும் ஒரு ஆக்கமாக - அதாவது 'பண்பாட்டுப் பிரதி'யாக'த் தரிசிக்கும் வகையில் அமைந்தவற்றுள் முக்கியமானவை எனத்தக்க சில ஆக்கங்கள் கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன. அதனையடுத்து, சிலப்பதிகாரம் சார்ந்து கடந்த சில ஆண்டுகளில் எழுதப்பட்டுள்ள சில கட்டுரைகள் தரும் புதிய செய்திகள் சிலவற்றையும் இங்கு நோக்குவதோடு 'சிலப்பதிகார ஆய்வுகள்' என்ற வகையிலமைந்த இக்கட்டுரைப்பகுதி நிறைவுக்கு வரவுள்ளது.

முதலில் சிலப்பதிகாரத்தைப் 'பண்பாட்டுப் பிரதி'யாகத் தரிசிக்கும் முயற்சிகள் என்றவகையிலே குறிப்பாக இசை மற்றும் நாடகம்(கூத்து) ஆகிய துறைகள்சார்ந்து வெளிவந்துள்ள நான்கு நூல்கள் கவனத்துக்கு வருகின்றன.

இசை சார்ந்து வெளிவந்தவற்றுள் முக்கிமானவை டாக்டர் எஸ். இராமநாதன் (1917-1968) அவர்களின் 'சிலப்பதிகாரத்து இசைத்தமிழ்' மற்றும் டாக்டர் சேலம் எஸ். செயலட்சுமி, பி.எச்.டி, அவர்களின் 'சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள்' ஆகிய இரண்டுமாகும். இவற்றுள் முதலாவது ஆக்கமானது சென்னையிலுள்ள தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச்சங்கத்தின் வெளியீடாக 1981-ல் வெளிவந்தது. இரண்டாவது ஆக்கம் சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக 2000-ம் ஆண்டில் வெளியிடப்பட்டதாகும்.

நாடகம் சார்ந்து வெளிவந்தவற்றுள் முனைவர் வெ.மு. ஷாஜ-கான் கனி அவர்களின் 'அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி' என்ற நூலும் திரு. இளைய பத்மநாதன் என்பாரின் ஆக்கமான 'அரங்கத் திறம் - சிலப்பதிகாரம்' என்ற நூலுமே இங்கு கவனத்துக்கு வரவுள்ளன. இவற்றுள் முதலாவது நூலானது மேற்சுட்டிய சென்னை உலகத்தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடாக 2009-ல் வெளிவந்ததாகும். இரண்டாவது நூலானது சென்னை, 'களரி வெளியீட்டக'த்தால் 2020-ல் வெளியிடப்பட்டதாகும்.

மேற்படி நான்கு ஆக்கங்களின் வரலாற்று முக்கியத்துவம் என்றவகையில் இங்கு குறிப்பிடப்படவேண்டிய அம்சம், சிலப்பதிகாரத்தின் இசை மற்றும் நாடகம் ஆகியனசார் விடயப்பரப்புகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 'தனிநிலை நுண்ணாய்வுகள்' ஆக இவை அமைந்துள்ளன என்பதேயாகும். இத்தொடர்பிலான வரலாற்று நிலையிலான விளக்கமொன்று இங்கு அவசியமாகிறது.

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள இசை மற்றும் நாடகம் ஆகியனசார்ந்த விடயப்பரப்புகளை ஆய்வுநிலையில் நுனித்து நோக்கும் முயற்சிகள் அந்நூல் அச்சேறிய காலம் முதலே தோற்றங்கொள்ளத் தொடங்கிவிட்டன. தமிழ் இசையியலாய்வின் முன்னோடிகள் என்ற கணிப்புக்குரியவர்களான தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் மற்றும் பேராசிரியர் விபுலாநந்த அடிகளார் ஆகியோர் சிலப்பதிகாரத்தின் இசைப்பகுதியில் தனிக்கவனம் செலுத்தியவர்கள் என்பது பொதுவாக நாமறிந்த செய்தியேயாகும். ஆபிரகாம் பண்டிதரின் பெருநூலான கருணாமிருத சாகரம் (1917) சிலப்பதிகாரத்தின் இசைச் செய்தி களை உள்ளடக்கியது என்பதையும் விபுலா-நந்த அடிகளாரின் யாழ்நூல் (1947) என்ற ஆய்வுநூலின் உருவாக்கத்துக்குச் சிலப்பதிகாரம் முக்கிய ஆதாரங்களிலொன்றாகத் திகழ்ந்துள்ளது என்பதையும்கூட நாமறிவோம்.

இவற்றைப் போலவே சிலப்பதிகாரத்தின் கூத்து மற்றும் நாடகம்சார் விடயப்பரப்புகளை நுனித்துநோக்கும் முயற்சிகளும் கடந்த நூற்றாண்டில் பரவலாக நிகழ்ந்துவந்துள்ளன. இவற்றுள் ஆய்வுநிலைசார் முக்கிய ஆக்கங்களிலொன்றாகத் திகழ்வது பேராசிரியர் கா. சிவத்தம்பியவர்களின் டாக்டர் பட்ட ஆய்வேடான 'Drama in Ancient Tamail Society' (1970) ஆகும். இது பின்னாளில் தமிழிலே, 'பண்டைத்தமிழ்ச் சமூகத்தில் நாடகம்' என்ற தலைப்பிலே 2005-ல் வெளிவந்ததாகும். இதில் சிலப்பதிகாரத்தின் நாடகம்பற்றிய விடயப்பரப்பானது நுனித்து நோக்கப்பட்டுள்ளது. இவ்வாறமைந்த ஆய்வுப்பகுதியானது, 'சிலப்பதிகாரத்தில் காணப்பெறும் நாடகம் பற்றிய தகவல்களின் பகுப்பாய்வு' என்ற தலைப்பில் ஒரு தனிக்கட்டுரையாகச், 'சிலப்பதிகாரம் பன்முகவாசிப்பு' என்ற

கட்டுரைத் தொகுப்பில் பதிவாகியுள்ளது என்பதைக் கடந்த கட்டுரையிலே நோக்கியுள்ளோம்.

இவ்வாறெல்லாம் சிலப்பதிகாரத்தின் இசை மற்றும் நாடகப்ப குதிகள் முன்னரே ஆய்வுநிலையில் அணுகப்பட்டிருப்பினும் அம்முயற்சிகள் 'தமிழரின் இசை மற்றும் நாடகம் ஆகியன தொடர்பான பொதுவான வரலாற்றின் ஒரு பகுதிசார் தரவுக ளின் களஞ்சியம்' என்ற அளவிலேயே சிலப்பதிகாரத்தை நோக்கியுள்ளன என்பதே இங்குநாம் தெரிந்துகொள்ள வேண் டிய செய்தியாகும். ஆனால், இங்கு நாம் நோக்கியவையான டாக்டர் எஸ். இராமநாதன், டாக்டர் சேலம் எஸ். செயலட்சுமி, முனைவர் வெ.மு. ஷாஜகான் கனி மற்றும் திரு. இளைய பத்மநாதன் ஆகியோரின் நூல்கள் சிலப்பதிகாரம் என்ற ஆக்கத்தை மட்டுமே நுனித்து நோக்கும் முறைமையில மைந்த 'தனிநிலை நுண்ணாய்வுகள்' என்ற கவனத்துக்கும் கணிப்புக்குமுரியவையாகின்றன.

மேற்சுட்டிய நால்வரும் தாம் தாம் ஈடுபாடுகொண்ட துறை கள் சார்ந்த அநுபவ அறிவும் ஆய்வறிவும் கொண்ட புலமை யாளர்களாவர். டாக்டர் எஸ். இராமநாதன் அவர்களும் டாக் டர் சேலம் எஸ். செயலட்சுமியவர்களும் பல்கலைக்கழகங்க ளில் இசை கற்பித்துவந்தோருமாவர்.

எஸ் இராமநாதன் அவர்கள் 1950-களிலேயே 'சிலப்பதிகார இசை' பற்றிய ஆய்வில் தீவிர ஈடுபாடு காட்டிவந்தவராவார். இதற்கு முக்கியசான்றாக அமைவது 1956-ல் வெளிவந்ததான 'சிலப்பதிகாரத்து இசைநுணுக்க விளக்கம்' என்ற அவரது நூல். இவ்வாறு 'சிலப்பதிகார இசை' பற்றிய ஆய்வில் தொடர்ந்து ஈடுபாடு காட்டிவந்த அவர் 1970-களில் அமெரிக் காவின் வெஸ்லியன் பல்கலைக்கழகத்திலே அப்பொருண் மைசார்ந்து டாக்டர் பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண் டார். அவ்வாய்வின் நிறைவாக 'Music In Cilappatikaaram' என்ற தலைப்பிலே அவர் சமர்ப்பித்த ஆங்கில ஆய்வேடா னது பின்னர் அதே தலைப்பில் மதுரைக் காமராசர் பல்க லைக்கழகத்தால் நூல்வடிவில் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும்பல ஆய்வு முடிபுகளையும் இணைத்து அவரால் வெளியிடப்பட்ட ஆக்கமே 'சிலப்பதிகாரத்து இசைத்தமிழ்' என்ற ஆய்வு நூல். (தகவல்: இந்நூலின் முன் னுரை)

'இசைத்தமிழின் தொன்மை', 'ஆய்ச்சியர் குரவை', 'அரங்கேற் றுகாதை', 'வட்டப்பாலையின் இடமுறைத்திரிபு' முதலியன வாக அமைந்த ஒன்பது இயல்களில் இவ்வாக்கம் கட்டமைக் கப்பட்டுள்ளது. குறிப்பாக, 'வட்டப்பாலை' என்ற அமைப்பு நிலை சார்ந்து மேற்கொள்ளப்படும் இசைமுறைமை பற்றி இந்நூல் தனிக்கவனம் செலுத்தியுள்ளது.

இவருடைய இந்நூலாக்கத்துக்கு முன்னோடி முயற்சியான 'Music In Cilappatikaaram' என்ற ஆய்வேடானது மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தால் நூலாக வெளியிடப்பட்ட போது அதற்கு அப்பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் திகழ்ந்தவரான பேராசிரியர் வா.செ. குழந்தைசாமியவர்கள் சிறப்பானதொரு முன்னுரை வழங்கியுள்ளார். ஆங்கிலத்தி லான அம்முன்னுரையின் ஒரு பகுதி வருமாறு:

'Prof.S. Ramanathan has made a great and original contribution to unravel the music of the anceint Tamils. It is as extreamly commendable effort and breaks new ground in research in Tamil. The pioneering nature of tha endeavour is as important as the contribution.' (சிலப்பதிகாரத்து இசைத்தமிழ்: xxx viii)

டாக்டர் சேலம் எஸ். செயலட்சுமியவர்கள் 1960-களிலிருந்தே தமிழிசை ஆய்வில் தனிக்கவனம் செலுத்திவந்துள்ளார். அவ் வார்வத்தினடியாக அவர் மேற்கொண்டுவந்த ஆய்வுகளின் தொடர்ச்சியாக 1990-ம் ஆண்டில் அவரால் எழுதி முடிக்கப் பட்டதே 'சிலப்பதிகாரத்தில் இசைச் செல்வங்கள்' என்ற நூல் (தகவல்: இந்நூலின் என்னுரை). பத்தாண்டுகள் கழித்தே அவருடைய இவ்வாக்கம் நூலுருவில் அச்சேறி வெளிவந்துள் ளது.

தமிழரின் இசைமரபின் தொன்மையை வெளிக்கொணர்தல் வேண்டும் என்பதான ஆர்வத்தினடியாக உருப்பெற்றதான இந்நூல் முந்நூறு பக்கங்களுக்கு மேல் விரிந்துசெல்வது. சிலப்பதிகாரத்து இசைச் செய்திகள் பற்றிய தகவற்களஞ்சி யம் என்பதான கவனிப்புக்கும் கணிப்புக்குமுரியதாக இவ் வாக்கம் திகழ்கிறது.

முனைவர் வெ.மு. ஷாஜகான் கனி அவர்களும் இளைய பத்-மநாதன் அவர்களும் நாடகத் துறையில் - குறிப்பாக அதன் ஒரு கூறான 'அரங்கியல்' துறையில் - ஆழ்ந்த கவனம் செலுத்திவந்தவர்களாவர். ஷாஜகான் கனி அவர்கள் கல்லூ ரிப் பேராசிரியராகத் திகழ்ந்த கல்வியாளருமாவார். தமிழில் மேடை நாடகங்கள் பற்றி ஆய்வுநிகழ்த்தி முனைவர்ப் பட் டம் பெற்றவருங்கூட. சிலப்பதிகாரத்தின் 'அரங்கேற்றுக்கா தை'யின் மீது அவர் கொண்டிருந்த பேரீடுபாட்டின் வெளிப் பாடாக அமைந்ததே 'அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி' என்ற தலைப்பிலான அவருடைய ஆக்கம்.

சிலப்பதிகாரத்தின் மூன்றாவது இயலான 'அரங்கேற்றுக் காதை' காட்சிப்படுத்தும் மாதவியின் ஆடல் நிகழ்வானது 'தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றிலே முதன்முதலாகத் நமது கவ னத்துக்குவரும் அரங்க நிகழ்வு' என்ற பெருமைக்குரியதா கும். அந்த ஆடல் மகளின் ஆளுமையம்சங்கள், அவள் அதனை வெளிப்படுத்தியுள்ள முறைமைகள் மற்றும் அதற் குக் களமாக அமைந்ததான அரங்கச்சூழல் ஆகியவற்றை அக்காதையானது 'நேர்முக வருணனை' எனத்தக்க எடுத்து ரைப்பு முறையிலேயே வாசகரின் கட்புலக் காட்சிக்கு இட்டு வந்துள்ளது.

'அரங்கின் அமைப்பு', அவ்வரங்கிலே 'மாதவியின் ஆடலுக் குத் துணைநிற்கும் பாடலாசிரியர், இசையோன், தண்ணுமை யாசிரியர் முதலிய துணைநிலைக் கலைஞர்களின் ஆளுமை யம்சங்கள்' ஆகியன அக்காதையிலே விரிவாக எடுத்துரைக் கப்படுகின்றன. மாதவி ஆடிய பல்வகைக் கூத்துகள் பற்றிய விரிவான செய்திகளையும் அக்காதை தருகிறது. இவ்வாறான எடுத்துரைப்பினூடாக இளங்கோவடிகள் தன்னை ஒரு 'காவி யப்புலவனாக' மட்டுமன்றி 'முத்தமிழ் வித்தக'னாகவும் அடை யாளப்படுத்திக் கொண்டுள்ளார் என்பதை அந்நூலை வாசித் தோர் நன்கறிந்திருப்பர். இவ்வாறாக இளங்கோ காட்சிப்ப டுத்திய அரங்கநிகழ்வுச்சூழலின் ஒட்டுமொத்த அம்சங்களை யும் முனைவர் வெ.மு. ஷாஜகான் கனி அவர்கள் நமதுகால அரங்கியல் ஆய்வுப் பார்வைகளின் ஊடாகத் தமது மேற் சுட்டிய 'அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி' என்ற நூலிலே விரி வாகவே நமக்குக் காட்சிப்படுத்தியுள்ளார்.

இவ்வாய்வு நூலின் தொடக்கத்திலமைந்துள்ள ‘ஆராய்ச்சி முன்னுரை’ என்ற பகுதியிலே மேற்படி ‘அரங்கேற்றுக்கா தை’க்குரிய வரலாற்று முக்கியத்துவம் என்றவகையில்- குறிப் பாக தமிழரின் பண்டைய நாடக மரபுசார் வழக்காறுகள் பற் றிய வரலாற்றில் அக்காதைக்குரிய முக்கியத்துவம் என்றவ கையில் - முனைவர் ஷாஜகான் கனி அவர்கள் முன்வைத் துள்ள குறிப்பொன்று இங்கு சுட்டத்தக்க முக்கியத்துவமுடை யதாகும். அக்குறிப்பு வருமாறு:

‘நாடகம் அரங்கேற்றுபவர் தகுதிகள், நாடகப் பயிற்சியைத் தொடங்கும் அகவை, பயிற்சி மேற்கொள்ளும் ஆண்டுகள், பயிற்சிதரும் ஆடலாசிரியர் தகுதிகள், அரங்கேற்றத்தின்




போது பின்புலத்தில் ஒருங்கிணைந்து செயற்படும் கலைஞர் களான இசையோன் தண்ணுமையாசிரியர், குழலோன், யாழா சிரியர் முதலியோரின் தகுதிகள், ஆடலரங்கிற்கான இடத் தேர்வு, அதன் நீள அகல உயரங்களின் அளவு, மேடையிலி ருந்து அதன் உத்தரப்பலகையின் உயரம், அதிலிருந்த ஓவி யம், திரைகளின் வகைகள், விளக்கு அமைத்து ஒளிதரும் முறை, தலைக்கோலின் பெருமை, தலைக்கோல் சடங்குகள், நாடகக் கதைப்பாடல் புனைந்த கவிஞருக்கு அரசு செய்த மரியாதை, ஊர்வலம், அரங்கில் கலைஞரும் அவையில் மன்னர் முதலான மக்களும் நின்ற - அமர்ந்த நிலை முறை கள், நாடகத்தின் தொடக்க நிகழ்வு முறைகள், தோரிய மக ளிர் கடவுள்வாழ்த்துப் பாடுதல், குழலும் யாழும் தண்ணுமை யும் முழவும் எனப் பல்வேறு இசைக்கருவிகள் முழங்கப், பாலைப்பண் இசைக்க, அந்தரக்கொட்டு ஆட, அதன்பின் மாதவி உருக்காட்டி, நாட்டிய நன்னூல் நன்கு வகுத்த முறையில் நாடகத்தை நிகழ்த்துதல் எனத் தொடர்நிகழ்ச்சிக ளாகத் தொன்றுதொட்டுவரும் தமிழ்நாடக வழக்காறுகளை விளக்குகிறது அரங்கேற்றுக்காதை’ (அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி: ப.3).

திரு. இளைய பத்மநாதன் அவர்கள் பல நாடகங்களை எழு தியும் அரங்கேற்றியும் பெற்ற அநுபவங்கள் ஊடாக அரங்கி யல் பற்றிய தனது அறிவை அகலப்படுத்திக்கொண்ட கலை ஞராவார். குறிப்பாக அனைத்துலக அரங்கியல்கள் பற்றி விரிவாகவே தெரிந்து தெளிந்தவர், அவர். இவ்வாறான அறி வாற்றலுடன் சிலப்பதிகாரத்தின் கூத்து மரபுகள் பற்றி விரி வாகவே நோக்க முற்பட்டவர். அவருடைய இம்முயற்சியின் தேறலாக அமைந்ததே அவரின் ‘அரங்கத்திறம் - சிலப்பதி காரம்’ என்ற நூலாக்கம். இவ்வாக்கமும் மேலே நாம் நோக் கிய அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி என்ற முனைவர் ஷாஜ- கான் கனி அவர்களின் நூலைப்போலவே சிலப்பதிகாரத்தின் ‘அரங்கேற்றுக்காதை’யை மையப்படுத்திய ஒரு நுண்ணாய் வுதான். ஆயினும், நோக்குநிலையில் முன்னதிலிருந்து இது குறிப்பிடத்தக்க வேறுபாடு கொண்டதாகத் திகழ்கிறது. முன் னையது ‘அரங்கேற்றுக்காதை’யின் பொதுக்கட்டமைப்பை நமது கால அரங்கியல் சூழலுக்கு ஏற்ப விளக்கியுரைக்கும் நோக்கில் உருவானதாகும். ‘மாதவி-குலப்பிறப்பு’, ‘பின்புலக் கலைஞர்’, ‘நாடக அரங்கு’, ‘அரங்கேற்ற மரபுகள்’ முதலிய னவாகத்தொடரும் அதன் உள்ளடக்க நிலைகள் நமக்கு உணர்த்தும் செய்தி இதுவே.

மேற்படி நோக்கிலிருந்து திரு. இளைய பத்மநாதன் அவர்க ளின் ‘அரங்கத்திறம் - சிலப்பதிகாரம்’ என்ற ஆக்கம் குறிப்பி டத்தக்க அளவுக்கு வேறுபட்டு நிற்பதை அதன் பொருளடக் கம் தெளிவாகவே உணர்த்துகிறது. அது, மேற்படி ‘அரங் கேற்றுக்காதை’ சுட்டிநிற்கும் ‘கூத்து’ என்ற அம்சத்தை மையப்படுத்தி, அத்தொடர்பிலான பல்வேறு கூறுகளையும் விளங்கியுரைக்கும் செயற்பாடாக அமைந்ததாகும். ‘கூத்து’, ‘கூத்தக்கை’, ‘ஆடுகளம்’, ‘அரங்கேற்றம்’ என அமையும் அதன் இயல் தலைப்புகள் இதனையே உணர்த்திநிற்கின் றன.

(மேற்படி இருநூல்களைப் பற்றியுமான எனது பொதுவான அவதானிப்புகளே இங்கு முன்வைக்கப்பட்டன. இவற்றைப் பற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் விரிவாக எழுதும் எண் ணம் உள்ளது.)

சிலப்பதிகாரம் சார்ந்து கடந்த சில ஆண்டுகளில் எழுதப்பட் டுள்ள கட்டுரைகளிற் சில தரும் புதிய செய்திகள்.

இவ்வகையில் கடந்த சில ஆண்டுகளில் எழுதப்பட்டவற்றுள் முக்கியமானவை எனக்கருதும் நான்கு மட்டுமே இங்கு கவ னத்துக்கு இட்டுவரப்படவுள்ளன. இவற்றுள் மூன்று கட்டுரை கள் ‘நூல் மதிப்புரை’ என்ற வகையில் அமைவன. இவ் வகை சார்ந்தவற்றுள் முதலாவது கட்டுரையானது சிலப்பதி காரத்துக்கு வந்துள்ள புதிய பதிப்பொன்று பற்றிய மதிப்பீடா கும். இப்பதிப்பு முயற்சியானது ‘சிலப்பதிகாரம் - எல்லோ ருக்குமான எளிய உரையுடன்’ என்ற தலைப்பிலே திரு.ப.- சரவணன் அவர்களால் மேற்கொள்ளப்பட்டதாகும். இது பற் றிய மதிப்பீட்டை முன்வைத்தவர் எழுத்தாளர் ஜெயமோகன் அவர்கள். ‘சிலப்பதிகாரம், ஒரு புதிய பதிப்பு’ என்ற தலைப் பிலமைந்த இக்கட்டுரை jeyamohan.in .Ny 10-03-2009 அன்று பதிவாகியுள்ளது.

நூல் மதிப்புரை என்ற வகைசார்ந்த ஏனைய இரண்டில் ஒன்று, 'சிலப்பதிகாரம் கவிதையியல் நோக்கு - பண்பாட்டி யல் - மொழியியல் - அரசியல்' என்ற தலைப்பிலான நூலாக் கம் பற்றியதாகும். இவ்வாக்கமானது புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு நிறுவனத்தால் 'செம்மொழித் தமிழும் சிலப்பதிகா ரமும்' என்ற தலைப்பில் நிகழ்த்திய கருத்தரங்கில் படிக்கப் பட்ட கட்டுரைகளின் தொகுப்பாக்கும். இந்நூல் தொடர்பான இம்மதிப்புரையை எழுதியவர் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரம- ணியன் ஆவார். இது 'உங்கள் நூலகம்' 2014 மார்ச் - ஏப்ரல் இதழ்களில் பதிவாகியுள்ளது.

இன்னொரு மதிப்புரையானது பேராசிரியர் தி.சு. நடராசன் அவர்கள் எழுதிய 'சிலப்பதிகாரம் மறு வாசிப்பு' என்ற ஆய் வுநூல் பற்றியதாகும். கீற்று இணைய இதழில் 2017 செப்டம் பர் 2-ம் திகதி பதிவாகியுள்ள இம் மதிப்புரையை எழுதியவர் ஆய்வாளர் இ. கலைக்கோவன் ஆவார்.

நான்காவது கட்டுரையானது நாட்டார் வழக்கிலுள்ள 'கோவ- லன் - கண்ணகி கதைகளில் ஒன்றைப்பற்றிய களஆய்வு நிலையிலான பதிவாகும். 'மலைப்புலையர் சொன்ன கோவி- லன் - கண்ணகி கதை' என்ற தலைப்பிலான இக்கள ஆய் வுப் பதிவானது பேராசிரியர் ஆ. கார்த்திகேயன் அவர்களால் எழுதப்பட்டதாகும். இது 'உங்கள் நூலகம்' 2018 நவம்பர் இதழில் இடம்பெற்றுள்ளது.

மேற்படி நான்கு கட்டுரைகளின் சாராம்சங்களே இங்கு தொகுத்துத் தரப்படவுள்ளன.

திரு. ப. சரவணன் அவர்களுடைய 'சிலப்பதிகாரம் - எல்லோ ருக்குமான எளிய உரையுடன்' என்ற நூல் பற்றிய ஜெயமோ கனின் மதிப்புரையிலே நமது கவனத்துக்கு இட்டுவரப்பட் டுள்ள முக்கியவிடயம் இவ்வாக்கமானது, 'மரபான தமிழ்ப் புலமைசார் ஆய்வுப் பார்வைகளுக்கும் 'மொழி வெறி' மற் றும் 'இனவெறி' ஆகியனசார் அணுகுமுறைகளுக்கும் அப் பாலான புத்தாக்க முயற்சி என்பதேயாகும். அதாவது சிலப்ப திகாரத்தை இதுவரை பதிப்பித்தோர் பலரும் மேற்படி பார் வைகள் மற்றும் அணுகுமுறைகள் கொண்டிருந்தவர்கள் என் பதால் சரியான - நேர்மையான - சிலப்பதிகாரப் பிரதிகள் கிடைக்காதிருந்த நிலையில் திரு. சரவணன் அவர்களின் இவ்வாக்கம் அத்தேவையை நிறைவுசெய்துள்ளது என்பதே இங்கு ஜெயமோகன் தரும் செய்தியாகும். இச்செய்தியை உள்ளடக்கியமைந்துள்ள அவருடைய கூற்று வருமாறு:

'சிலப்பதிகாரம் இன்னும் கண்டடையப்படாத எத்தனையோ பண்பாட்டு ஆழங்கள் கொண்ட ஒரு மூலநூல். அத்தகைய ஆய்வுகளை மரபான தமிழறிஞர்களிடம் இருந்து இனிமேல் எதிர்பார்க்கவியலாது. அவர்களின் வழக்கமான தமிழாய்வுக்கு வெளியே புதிய நோக்குகள் நிகழவேண்டும்.

அதற்குச் சமகாலத் தமிழ் நடையில் அமைந்த, மிகையான பாண்டித்தியப் பிரகடனங்கள் இல்லாத, இனப்பெருமை, மொழிவெறி என்றெல்லாம் வழிவிட்ட தாவல்கள் இல்லாத நேர்மையான சிலப்பதிகாரப் பிரதி அவசியம். அந்தத் தேவையைச் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார் சரவணன்.' (jeyamohan .in 10-03-2009)

'சிலப்பதிகாரம் கவிதையியல் நோக்கு - பண்பாட்டியல் - மொழியியல் - அரசியல்' என்ற கட்டுரைத் தொகுப்பானது ஆய்வாளர்கள் பலரால் எழுதப்பட்டவையான 28 கட்டுரைக ளைக் கொண்டதாகும். நூலின் தலைப்புக்கேற்றவகையில் இக்கட்டுரைகள் பொருண்மைநிலையில் 'கவிதையியல்' - 'பண்பாட்டியல்' - 'மொழியியல்' - 'அரசியல்' என நான்குவ கைகளில் அமைந்துள்ளன. இவ்வாறமைந்த இந்நூலாக்கத் தின் முக்கியத்துவம் தொடர்பான பொதுவான மதிப்பீடுசார் தகவல்களை முதலிலே முன்வைத்துள்ள பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்கள் அதனைத் தொடர்ந்து, மேற் படி நால்வகைகளில் இரண்டாவதான 'பண்பாட்டியல்'சார் கட் டுரைகள் தொடர்பாக விரிவான விமர்சனக் குறிப்புகளையும் முன்வைத்துள்ளார். 'அவ்வியல்சார் கட்டுரைப்பகுதியே இந் நூலின் சிறப்பான பகுதி' என்பதான தமது கணிப்பையும்கூட அவர் இங்கே பதிவு செய்துள்ளார். இவ்வாறான இவரது கணிப்புக்குக் காரணிகளாகத் திகழும் இவ்வியலின் கட்டுரை களுள் நான்கு கட்டுரை பற்றிய தகவல்களை மட்டும் இங்கு இக்கட்டுரையின் தேவைக்கேற்றவகையில் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள முயல்கிறேன்.

மேற்படி கட்டுரைகளிலொன்று, 'கண்ணகி கதைகளும் வழிபா டும்' என்ற தலைப்பில் டாக்டர் நசீம்தீன் அவர்களால் எழுதப் பட்டதாகும். இது கேரளத்தின் பழங்குடிகளிடையே கண்ணகி தொடர்பாக வழங்கிவரும் கதைகள் மற்றும் வழிபாட்டு மரபு கள் ஆகியவற்றை மையப்படுத்திய ஆய்வாகும். மேற்படி கண்ணகி வழிபாட்டு மரபுகளில் வைதிக சமயத்தினர் நிகழ்த் திவந்துள்ள தாக்கங்களையும் இக்கட்டுரை கவனத்துக்கு இட்டுவந்துள்ளதாக ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். அவர் கவனத்துக்கு இட்டுவந்துள்ள அடுத்த இருகட்டுரை கள் ஈழத்தின் கண்ணகி (கண்ணகை) வழிபாடு தொடர்பான வையாகும். இவற்றிலொன்று பேராசிரியர் நா. சண்முகலிங்- கன் அவர்களால் எழுதப்பட்டதாகும். இன்னொன்று, சண்முக- ராஜா சிறீகாந்தன் அவர்களால் எழுதப்பட்டதான 'பௌத்த மரபில் பத்தினித் தெய்யோ - கணநாத் ஒபயசேகர ஆய்வு' என்ற கட்டுரையாகும்.

இவற்றுள் சண்முகலிங்கன் அவர்களின் கட்டுரையின் முக்கி யத்துவம் என இங்கே ஆ. சிவசுப்பிரமணியன் குறிப்பிடும் செய்தி ஈழத்தின் தமிழர், சிங்களவர் ஆகிய இருசாராரிடையி லும் நிலவிவரும் கண்ணகி வழிபாட்டுமரபுகளைத் தொகுத்து ஒப்பிட்டுள்ள முறைமையாகும். இலக்கியச் செய்திகள் வர லாற்றுச் சான்றுகள் மற்றும் கள ஆய்வுத் தரவுகள் ஆகிய வற்றை ஆதாரங்களாகக் கொண்டதான இக்கட்டுரையானது கண்ணகிவழிபாட்டில் நிகழ்ந்துவந்துள்ள மாற்றங்களையும் பதிவுசெய்துள்ளமை ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களால் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் சிங்களச் சமூகம் சார்ந்த பேராசிரியரான கண- நாத் ஒபயசேகர அவர்கள் மானிடவியல் துறைசார்ந்த பேரறி ஞர்களுள் ஒருவராவார். அவர் 1984-ல் வெளியிட்ட The Cult Of Goddes Pattini என்ற ஆங்கில நூல் பற்றிய பார்வையாக அமைந்ததே மேற்சுட்டிய சண்முகராஜா சிறீகாந்தன் அவர்க ளின் கட்டுரை. கணநாத் ஒபயசேகர அவர்களின் மேற்படி நூலானது ஈழத்தில் 'பௌத்த - சிங்கள'ச் சூழலில் நிலவிவ ரும் 'பத்தினித் தெய்யோ' எனப்படும் பத்தினித்தெய்வ வழி

பாட்டையும் தமிழ்ச் சூழல்களின் கண்ணகி வழிபாட்டு மரபுகளையும் உள்ளடக்கியமைந்த நுண்ணாய்வாகும். இவ்வாறான இந்நூலின் உள்ளடக்கநிலை தொடர்பாக இக்கட்டுரையாசிரியரான சண்முகராஜா சிறீகாந்தன் அவர்கள் தரும் செய்தியொன்று ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களால் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளது. அதன் ஒருபகுதி வருமாறு:

'குறிப்பாக இந்நூல் இலங்கையின் மேல், தென் மற்றும் சப்பிரகமுவா மாகாணங்களில் கிராமிய வழிபாட்டு மரபாக நிலவிவருகின்ற பத்தினித் தெய்வ வழிபாட்டினைப் பிரதானமாகக் குவிமையப்படுத்துகிறது. ஆனாலும் கிழக்கு, மத்திய மாகாணங்களில் நடைமுறையிலுள்ள வழிபாட்டு மரபு தொடர்பாகவும் ஆராய்கின்றது; குறிப்பாக இலங்கையில் சிங்கள பௌத்தர்களின் மத்தியிலுள்ள பத்தினித்தெய்யோ வழிபாட்டுடன் தொடர்புடைய முதன்மையான ஆறு சடங்கியல் மரபுகளை இவ் ஆய்விற்கான பிரதான மூலமாகக் கொண்டுள்ளார். ஆயினும் இலங்கையின் பிற மட்டக்களப்பு, கண்டி, யாழ்ப்பாணத்தில் நிலவும் சடங்கியல் வழிபாட்டு மரபுகள் தொடர்பான தகவல்களையும் உள்ளடக்கியுள்ளார். இவற்றுக்கு அப்பால் பத்தினித் தொன்மத்துடன் இணைந்த நாடகங்கள் வழிபாட்டு இடங்கள், மூல இலக்கியங்கள் போன்ற இன்னும் பல்வேறு மூலங்களின் துணையுடனேயே இந்நூலை எழுதியுள்ளார். (சிலப்பதிகாரம் கவிதையியல் நோக்கு; ப.144).

இவ்வாறமைந்ததான கணநாத் அவர்களின் நூல்தரும் முக்கிய செய்திகளிலொன்றாக இங்கு எடுத்துக்காட்டப்படுவது, 'பத்தினி வழிபாட்டு மரபின் தோற்றத்தை இந்து மரபுக்கு அப்பாலான ஒரு தளம்சார்ந்ததாகவே அவர் காண முயன்றுள்ளார்' என்பதாகும். அவ்வகையில் அவர் அதனைப் பௌத்த மரபுடன் தொடர்புறுத்திக் காட்டியுள்ளார். குறிப்பாகப் பத்தினியைப் பௌத்த தெய்வமாகவே அவர் அடையாளங் காண்கிறார்.

இக்கருத்தை நிறுவுவதற்கான சான்றுகளைச் சிலப்பதிகாரத்திலிருந்தே அவர் தேர்ந்துகொண்டுள்ளார். கணநாத் ஒபயசேகர அவர்களின் மேற்படி ஆங்கில நூலாக்கம் தொடர்பாகச் சண்முகராஜா சிறீகாந்தன் அவர்கள் பதிவுசெய்துள்ள கருத்துகளில் முக்கியமானவையாக ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களால் நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ள செய்திகள், இவை.

'சிலப்பதிகாரம் கவிதையியல் நோக்கு - பண்பாட்டியல் - மொழியியல் - அரசியல்' என்ற கட்டுரைத் தொகுப்பில் இடம்பெற்றவற்றுள் முக்கியமானவையாகப் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்களால் கணிக்கப்பட்டவற்றுள் நான்காவதாக நான் இங்கு சுட்ட விழைவது பேராசிரியர் பக்தவத்சல பாரதியின் ஆக்கமான 'குன்றக்குரவை இனவரைவியல் ஆய்வு' என்பதாகும். இது சிலப்பதிகாரம் பற்றிய 'இனமரபியல்' என்ற அறிவுத்துறை சார்ந்த பார்வையாகும். 'குன்றக்குரவை' என்ற காதையை மையப்படுத்தியமைந்ததான இக்கட்டுரையானது அக்காதை சுட்டும் குறவர்களது தொல்குடிச் சமயநிலை, அதிலேற்பட்ட படிமலர்ச்சி ஆகியன பற்றிய நுண்ணாய்வாக அமைந்ததாகும். இவ்வாறாக இக்கட்டுரையை நமக்கு அறிமுகம் செய்யும் ஆ. சிவசுப்பிரமணியன் அவர்கள் மேற்படி கட்டுரையின் பின்னுரையிலே முனைவர் பக்தவத்சல பாரதியவர்கள் 'சிலப்பதிகாரத்தின் வரலாற்று முக்கியத்துவம்' என்றவகையில் முன்வைத்தவற்றையும் நமது கவனத்துக்கு இட்டுவந்துள்ளார். அப்பதிவு வருமாறு:

'தமிழிலக்கியப் படிமலர்ச்சியில் சிலப்பதிகாரம் மிக முக்கியமான காப்பியமாகும். இதுவொன்றுதான் தமிழர் சமூகத்தின் அனைத்துத் தன்மைகளையும் ஒருசேர விவரிக்கிறது. இதுவே இக்காப்பியத்தின் தலையாய பண்பாகும். உயர்சமூகத்தாரையும் நாட்டாரையும் இனக்குழுச் சமூகத்தாரையும் சம முக்கியத்துவத்துடன் கண்டு ஒரு முழுமையான தமிழ் அகிலத்தை நம்முன் கொண்டு வருகிறது. தமிழில் வேறு எந்தவோர் இலக்கியமும் இந்த முழுமையை முன்னெடுக்கவில்லை. முழுமையை விழையும் பனுவலாக இது உருவாக்கம் பெற்றது என்பதே நாம் உய்த்துணரவேண்டிய கருத்தாகும்.' (சிலப்பதிகாரம் கவிதையியல் நோக்கு; ப.233)

பேராசிரியர் தி.சு. நடராசன் அவர்கள் எழுதிய 'சிலப்பதிகாரம் மறுவாசிப்பு' என்ற ஆய்வுநூல் 'மார்கஸியம்' மற்றும் 'பின் நவீனத்துவம்' ஆகிய சிந்தனைத் தளங்களின் ஊடாகச் சிலப்பதிகாரத்தைப் புரிந்துகொள்ளும் முயற்சியாக அமைந்ததாகும். குறித்த ஒரு ஆக்கத்தை வாசிப்பவர் தனது புரிதலுக்கும் உலக நோக்கிற்குமேற்ப அதனை மறுகட்டமைப்புச் செய்யும் முயற்சியே திறனாய்வுலகில் 'மறுவாசிப்பு' கலைச்சொல் மூலம் சுட்டப்படுகின்றது. இங்கு திரு இ. கலைக்கோவன் அவர்களுடைய மதிப்புரை ஊடாக நமது கவனத்துக்கு வந்துள்ளதான தி.சு. நடராசன் அவர்களின் மேற்படி ஆக்கமும் அத்தகையதொரு முயற்சியேயாம். சிலப்பதிகாரம் எழுந்த காலப்பகுதி, அது புலப்படுத்திநிற்கும் சமூக - பண்பாட்டுச் சூழல் மற்றும் அதன் கதையம்சத்தினூடாகப் புலப்படக்கூடியதான அரசியல் ஆகியவற்றை நுனித்துநோக்கி, அவற்றின் பின்புலத்தில் இளங்கோவின் காப்பியக் கட்டமைப்புக்கு நமது காலக் கண்ணோட்டங்களுடனான புரிதலொன்றை தி.சு. நடராசன் அவர்கள் தரமுயன்றுள்ளார் என்பதே திரு இ. கலைக்கோவன் அவர்கள் தரும் செய்தியாகும்.

சமூகவரலாற்று நோக்கிலே - குறிப்பாக, 'மார்க்ஸிய அடிப்படையிலான சமூகவரலாற்றுப் பார்வை'யிலே - சிலப்பதிகாரத்தை அணுகுபவர்கள் அந்நூல் காட்டும் சமுதாயச் சூழலைப் பொதுவாக வணிக வர்க்கம் எழுச்சிபெற்ற காலகட்டமாகவே கணித்து வந்துள்ளனர். குறிப்பாக, 'நிலவுடைமைச் சமூகத்தைச் சார்ந்திருந்த அரசுக்கு எதிராக வணிகவர்க்கம் எய்தியிருந்த வளர்ச்சியின் ஓர் அடையாள'மாகவே சிலப்பதிகாரத்தை அவர்கள் தரிசித்துவந்துள்ளனர். இதனை, மார்க்ஸியர்களான திரு. கே. முத்தையா மற்றும் தொ.மு.சி. ரகுநாதன் ஆகியோரின் ஆக்கங்கள் பற்றிய பகுதியிலே (37-வது கட்டுரையிலே) நோக்கியுள்ளோம். இங்கு நாம் நோக்கும் தி.சு. நடராசனின் இம் மறுவாசிப்பும் மேற்படி மார்க்ஸிய அடிப்படையிலான பார்வையை மேலும் புதிய கோணங்களில் வலியுறுத்தும் வகையிலான ஒரு செயற்பாடாகவே கொள்ளக்கூடியதாகும். குறிப்பாக, மார்க்ஸியத்துடன் 'பின்நவீனத்துவம்' என்ற பார்வையையும் இணைத்தே தி.சு. நடராசன் அவர்கள் இம்மறுவாசிப்பை மேற்கொண்டுள்ளார் என்பதே திரு இ. கலைக்கோவன் அவர்கள் தரும் செய்தியாகும்.

மேற்சுட்டியவாறான தி.சு. நடராசன் அவர்களின் மறுவாசிப் பில் புலப்படுத்தப்படும் முக்கிய பார்வைகள் எனக் கட்டுரை யாளர் இ. கலைக்கோவனவர்கள் சுட்டுவனவற்றுள் மூன்றை மட்டும் சுருக்கமாக இங்கு குறிப்பிட விழைகிறேன். அவற்று ளொன்று, 'கண்ணகி பாண்டியன்முன் வழக்குரைத்த நிகழ்வு' பற்றியது. இன்னொன்று, 'அவள் தனது இடதுமுலையைத் திருகியெறிந்து மதுரையைத் தீயிட்டது' பற்றியதாகும். மூன் றாவதாக இங்கு கவனத்துக்கு வருவது, 'சேரநாட்டில் கண்ண கிக் கோட்டம் உருவாவதற்குப் பின்புலமாக இருந்த நுண்ண ரசியல்' பற்றியதாகும். இவற்றுள் முதலிரு நிகழ்வுகளும் சிலப்பதிகாரத்தின் 'மதுரைக் காண்டம்' சார்ந்தவையாகும். மூன்றாவது நிகழ்வு 'வஞ்சிக்காண்ட'த்தில் இடம்பெறுவது.

கண்ணகி பாண்டியன்முன் வழக்குரைத்த நிகழ்வானது, 'வணி கவர்க்கமானது அரசுடன் நேருக்குநேர் மோதிநின்ற வரலாற்று நிலையின் காட்சியாக' இந்நூலில் தரிசிக்கப்பட்டுள்ளது. 'கண்ணகி முலையைத் திருகியெறிந்ததாக அமைந்த கதை யம்சமானது அக்கால அதிகாரவர்க்கத்துக்கு எதிரான கையறு நிலையின் வெளிப்பாடாக - அதாவது பாலியல் நிர்க்கதி சார்ந்த - உடல்மொழியாக' இங்கு சுட்டப்பட்டுள் ளது. கண்ணகிக் கோட்டம் உருவாவதற்குப் பின்புலமாயி ருந்த நுண்ணரசியல்' என்பது 'வைதிக சமய எதிர்ப்புணர்வு 'என்பதே இந்நூல்தரும் செய்தியாகும். வைதிக வழிபாட்டு மரபுகள் செல்வாக்குப் பெற்றுவந்த சூழலில் அதற்கு எதிரா கப் தமிழரின் பண்டைய 'நடுகல் வழிபாட்டுமரபு' மற்றும் 'தாய்த்தெய்வ வழிபாட்டு மரபு' ஆகியவற்றை மீட்டுருவாக் கம் செய்யும் முயற்சியாகவே கண்ணகிக் கோட்ட உருவாக் கம் அமைந்துள்ளது. பேராசிரியர் தி.சு. நடராசன் அவர்க ளின் 'சிலப்பதிகாரம் மறுவாசிப்பு' என்ற ஆய்வுநூல் புலப்ப டுத்தப்படும் முக்கிய பார்வைகள் தொடர்பாக திரு இ. கலைக்- கோவனவர்கள் நமது கவனத்துக்கு வந்துள்ள முக்கிய செய் திகள், இவை.

அடுத்து, பேராசிரியர் ஆ. கார்த்திகேயன் அவர்களால் எழு தப்பட்ட 'மலைப்புலையர் சொன்ன கோவலன் - கண்ணகி கதை' என்ற தலைப்பிலான கள ஆய்வுப் பதிவு பற்றி நோக் குவோம்.

இப்பதிவானது, கேரள மாநிலத்தின் இடுக்கி மாவட்டம் சார்ந்த ஆதிவாசி மக்களில் ஒரு சாராரின் மத்தியில் வழங்கி வரும் கண்ணகி கதை மரபு பற்றியதாகும். இந்த மாவட்டத் தில் உள்ள மங்கலதேவி கோயில்தான் சேரன்செங்குட்டுவ னால் கட்டுவிக்கப்பட்ட கண்ணகிக் கோட்டம் என்பது தமிழ் ஆய்வுச் சூழலில் நிலவிவரும் பொதுவான கருத்தாகும். இவ் வாறான கண்ணகி வழிபாட்டுச் சூழலில் காலம்காலமாக நில விவந்துள்ள கதையொன்றையே பேராசிரியர் ஆ. கார்த்திகே யன் அவர்கள் இக்கட்டுரையூடாக நமது கவனத்துக்கு இட்டு வந்துள்ளார். மேற்படி கதையானது கண்ணம்மா என்ற காவ லாளியின் வாய்மொழியூடாக இக்கட்டுரையில் பதிவாகியுள் ளது. அவர் அச்சூழலின் 'பொங்கம்புளி' என்ற ஆதிவாசிக் குடும்பம் சார்ந்தவுராவார். அவர்சொன்ன கதையானது அவ ருடைய கிளைமொழியிலேயே இங்கு பதிவுசெய்ப்பட்டுள்ளது எனக் கட்டுரையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பதிவாகியுள்ள கண்ணகி கதையின் முக்கியத்துவம் என்றவகையில் இங்கு குறிப்பிடப்படவேண்டிய விடயம், இது ஈழத்தின் கண்ணகிவழிபாட்டுச் சூழல்களிலே வழக்கிலிருக் கும் கதைமரபுகளுடன் ஒத்த பண்புகள் கொண்டதாகத் திகழ் கின்றது என்பதாகும். ஈழத்தின் கிழக்கு மாகாணத்திலே கண் ணகி வழக்குரை என்ற பெயரில் வழங்கப்பட்டுவரும் இவ் வாக்கமானது யாழ்ப்பாணக் குடாநாட்டுச் சூழலில் கோவல னார் கதை என்ற பெயரிலும் வன்னிமண்ணிலே சிலம்பு கூறல் என்ற பெய ரிலும் வழங்கப்பட்டு வருவதாகும். இதன் கதையம்சமானது 'தெய்வமே மானுடமாக வருவதான' - அதா வது சைவசமயத்தின் அன்னைத் தெய்வமாகிய உமையம் மையே கண்ணகியாக அவதரிப்பதான - செய்தியைத் தருவ தாகும். இவ்வகையில் ஈழத்துக் கண்ணகி கதைமரபானது சிலப்பதிகாரக் கதையம்சத்தினின்று பெரிதும் வேறுபட்டதா கும்.

இங்கு, மேற்படி 'மலைப்புலையர் சொன்ன கோவிலன் - கண்ணகி கதை' என்ற தலைப்பிலான கள ஆய்வுப் பதிவும் ஈழத்துக் கண்ணகிக் கதைமரபு போல கண்ணகியை அவதார மாகத் தரிசிப்பதேயாகும். அவ்வகையில் அதுவும் சிலப்பதி காரத்திலிருந்து பெரிதும் வேறுபட்டே அமைந்துள்ளமை வெளிப்படை. எனவே ஈழத்தின் கண்ணகி வழக்குரை என்ற காப்பியத்தின் கதையம்சங்களுடன் பெரிதும் ஒத்து நோக்கப் படக்கூடியதாக இவ்வாக்கம் தெரிகிறது என்பதே இங்கு நமது கவனத்திற்குரிய செய்தியாகும். அவ்வகையில் ஈழத் தின் கண்ணகிக் கதைமரபுகளை ஆராய்வோர் ஒப்பியல் நோக்கிலே கவனத்துட்கொள்ள வேண்டிய முக்கியமான ஒரு ஆக்கமாக மேற்படி 'மலைப்புலையர் சொன்ன கோவிலன் - கண்ணகி கதை' என்ற பதிவு அமைந்துள்ளது என்பதை இங்கு சுட்ட விழைகிறேன்.

சிலப்பதிகார ஆய்வுகள் பற்றிய இக்கட்டுரைப்பகுதியை நிறைவுசெய்யும் நிலையில் 'ஈழத்தின் கண்ணகி வழிபாட்டு மரபு' தொடர்பாகப் புதிதாக எனது கவனத்துக்கு வந்துள்ள இரு கட்டுரைகளைப்பற்றிய தகவல்களை மட்டும் இங்கு பதிவுசெய்ய விழைகிறேன்.

- 'பத்தினித் தெய்வமும் சுனாமியும் - கிழக்கிலங்கையின் பாணமைக் கிராமம் பற்றிய ஓர் ஆய்வு' (நூல்: இலங் கையின் சமூக பண்பாட்டு வரலாறு)
- 'பத்தினித்தெய்வ வழிபாடும் சிங்களப் பௌத்த பண்பா டும்' (இலங்கையில் பௌத்தமும் தேசியவாதமும் என்ற நூலில் இடம்பெற்ற 2-வது கட்டுரை.) இவ்விரண்டும் ஆய் வாளர் திரு. க. சண்முகலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட வைகளாகும். இவற்றின் உள்ளடக்க அம்சங்கள் பற்றிப் பின்னொரு சந்தர்ப்பத்தில் எழுதும் எண்ணம் உள்ளது.)

இத்தொடரிலே 'சிலப்பதிகார ஆய்வுகள்' என்ற பொருண்மை சார் பார்வை இத்துடன் நிறைவுக்கு வருகிறது. இத்துடன் இத்தொடர் தற்காலிகமாக நிறைவுபெறுகிறது. சில மாத இடைவெளிக்குப்பின் மீண்டும் இத்தொடரைத் தொடரும் எண்ணம் உள்ளது.



subramanian.n@thaiveedu.com

# தமிழ்வலை - 93


'தாய்வீடு' சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் 'தமிழ்வலை'யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-93 வினா

### இடமிருந்து வலம்

1 யாழ் பல்கலைக்கழக மூல்கர்த்தா
4 அகம்
5 கதிரவன்
6 ஓர் ஈழ திறனாய்வாளரின் முதலெழுத்துகள் (1-1)
7 மாப்பிள்ளை
8 கிளையிலிருந்து கீழிறங்கும் வேர்
9 ஒரு தாவரம் (2-4)
12 பூ
13 ஒரு பிராணி
16 வரிசை

### மேலிருந்து கீழ்

1 கருத்து
2 கணநேரம்
3 செயல்
4 வேந்தன்
5 தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவர்
7 ஒரு பருவகாலம்
8 ஒருவகை மீன்
10 ஒரு நீர்த்தாவரம்
11 படை
13 ஓர் உண்டிவகை

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
**தொலைநகல்: 416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை - 92க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | வி | ன் | 2 பி | ங் | | 3 வே | ந் | 4 த | ன் |
| றி | | | ன் | | | | | ரு | |
| ற | | 5 அ | ந் | க | ந் | த | சா | மி | |
| ர் | | | வீ | | | | | | |
| 6 க | த் | தா | னை | ந் | த | 7 பா | ர | தி | |
| | | | த் | | | வ | | | 8 ஒ |
| 9 க | ண் | ட | து | ம் | 10 கே | ட் | ட | து | ம் |
| ய | | | லை | | 11 க | டை | | | பு |
| 12 வா | 13 க | ட | ம் | | ய | | 14 மா | 15 மா | |
| 16 கு | னி | | | 17 கொ | ம் | ப | ன் | சு | றா |

## தமிழ்வலை-92 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

குமரகுரு நவநீதம், மார்க்கம்.
நவஜோதி தவராஜா, மொன்றியால்
கவிதா சண், ரொறன்ரோ.

### பரிசுபெறும் போட்டியாளர்

## சாரதாதேவி சண்முகம்,

**ரொறன்ரோ.**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






அடுக்கு மாடிக் குடியிருப்பின் நான்காவது தளத்தில் பனி பூத்திருந்த கண்ணாடி யன்னலை மெதுவாகத் திறந்து கொண்டு வெளியே எட்டிப் பார்க்கிறேன். கடுங்குளிர் முகத்தில் அறைகிறது. வெளியே 'சினோ' கொட்டிக் கொண்டிருக்கிறது. எங்களுடைய வீடு அமைந்திருக்கின்ற இந்த மலையை வெள்ளைக் கம்பளியால் போர்த்தது போல பனி மூடியிருக்கிறது. எனக்குப் பொதுவாக இந்தக் 'கிளைமெட்' நன்றாகப் பிடிக்கும். ஆனால், இப்போது ஏனோ அதை அனுபவிக்கத் தோன்றவில்லை.

இந்த நோர்வே நாட்டில் மார்கழி மாதம் பிறந்தாலே கிறிஸ்மஸ்க் கொண்டாட்டங்கள் களைகட்டத் தொடங்கிவிடும். வீதிகள், தேவாலயங்கள், நட்சத்திர உணவு விடுதிகள், சொப்பிங் மால்கள் என்று எங்கு சென்றாலும் விதவிதமாக வர்ண மின்விளக்குகளால் அலங்கரித்து வைத்திருப்பார்கள். அதற்கென அமைக்கப்பட்ட மேடைகளில் இசை நிகழ்ச்சிகளும், பிரபல நடனக் கலைஞர்களின் நடனங்களும் எனக் கேளிக்கைக்குக் குறைவேயிருக்காது. அழகாக நடனமாடிக் கொண்டே... 'சாண்டா கிளாஸ்', அதுதான் கிறிஸ்மஸ் தாத்தாக்கள் குழந்தைகளுக்குச் சாக்லேட்டுகளையும் பரிசுப் பொதிகளையும் கொடுத்து மகிழ்விப்பார்கள்.

இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை என்னை சொப்பிங் கூட்டிக் கொண்டு போகச் சொன்னேன். பேக்கரியில் 'காஃப் டே' போட்டுவிட்டு நேரத்தோடு வீட்டுக்கு வந்து, காரிலேற்றிக் கொண்டு போவதாகச் சொல்லிச் சென்றவரை மணி நான்காகியும் காணவில்லை. இனியனும் நித்திலாவும் இன்னும் அப்பா வரவில்லை என்று எனக்குக் குடைச்சல் தரத் தொடங்கி விட்டார்கள்.

கிறிஸ்மஸ் சீசன் வேறு. பேக்கரியில் வேலை அதிகமாக இருக்கலாம். அந்த வெள்ளைக்கார முதலாளி இவரை நம்பித்தான் பேக்கரியை விட்டுவிட்டு குடும்பத்தோடு லண்டனுக்குச் சுற்றுலா சென்றிருக்கிறார். வருவதற்கு இரண்டு வாரம் கூட ஆகலாம். முதலாளி இடத்தில் இருந்து கணக்கு வழக்குகளையெல்லாம் கவனித்துக் கொண்டு, ஐம்பதுக்கும் அதிகமான வேலையாட்களையும் மேற்பார்வை செய்வதென்றால் சும்மா காரியமா என்ன?

கல்யாணமாகிய இந்தப் பத்து வருடங்களில் ஒரு நாளாவது அவர் என்னுடைய பழைய கதைகளைச் சொல்லிக் குத்திக் காட்டியதோ, எனக்கு கைநீட்டி அடித்ததோ கிடையாது. என்னையும் பிள்ளைகளையும் அக்கறையாகப் பார்த்துக்கொள்கிறார். நல்ல வசதியான வீடு, நகை நட்டுகள், உடுபுடவைகள், நேரத்துக்கு நேரம் விரும்பிய சாப்பாடு. எனக்கு இங்கே என்ன குறை?

வசதி வாய்ப்பிருந்தால் மட்டும் போதுமா? மனதில் நிம்மதி இல்லையே? எப்போது பார்த்தாலும் என் மூத்த 'ஆண்குஞ்சின்' நினைவுகள் என்னை அலைக்களிக்கிறதே! என் பிள்ளை இப்போது எப்பிடியிருப்பானோ? எங்கேயிருந்து கஸ்டப் படுகிறானோ? என்று நினைத்தால் பெற்ற வயிறு நோகுது.

அந்தப் பழைய கதைகளையெல்லாம் மறக்க வேண்டும் என்று தான் நினைக்கிறேன். ஆனால் எப்படி மறப்பது? அன்றைக்கு என்னால் என் குடும்பம் பட்ட அவமானம் கொஞ்ச நஞ்சமா? என் அம்மா அழுது வடித்த கண்ணீருக்கு அளவிருக்கிறதா? நான் என் தலையில் மட்டுமா மண்ணை வாரிப் போட்டேன்? என் இரண்டு தங்கச்சிமார் வாழ்கையிலேயும் சேர்த்தெல்லோ மண்ணை வாரிப் போட்டேன்.

அதற்கெல்லாம் பரிகாரம் செய்வதுபோல இவரை கல்யாணம் கட்டி நோர்வேக்கு வந்த பிறகு என்னுடைய குடும்பத்தை ஊரில் யாருமே நினைக்காத அளவிற்கு நல்ல நிலைமைக்குக் கொண்டு வந்து விட்டேன். அம்மாக்கு ஊரி-லேயே ஒரு காணி வாங்கி பெரிய கல்வீடு கட்டிக் கொடுத்தேன். மூத்த தங்கச்சி சங்கீதாவுக்கு நகை நட்டுப் போட்டு, அரசாங்க உத்தியோகம் பார்க்கிற நல்ல மாப்பிளையைக் கல்யாணம் செய்து வைத்துவிட்டேன். அவளுக்கு இப்போது இரண்டு பெண் பிள்ளைகள். இரண்டாவது தங்கச்சி இந்துவையும் நன்றாகப் படிக்க வைத்து, அவளுக்கும் காலாகாலத்துக்கு ஒரு கல்யாணம் செய்து வைத்தால் என் மனதிற்கு நிம்மதி. அதற்கெல்லாம் இவர் என்ன தடை போட்டிருக்கிறார்? இவரைப் போல எங்கள் குடும்பத்தைத் தன் குடும்பம் போல பார்க்கும் மனசு எந்த ஆம்பிளைக்குத் தான் வரும்?

என் வாழ்க்கையே ஒரு சீட்டாட்டம் போல ஏதேதோவெல்லாம் நடந்து போச்சு. பதினொரு வருடங்களுக்கு முதல் அந்த சுமன் மட்டும் என் வாழ்க்கையில் வந்திருக்காவிட்டால்... அவனை நான் காதலித்திருக்காவிட்டால்... அசடு மாதிரி



அவன் கூப்பிடுகிற இடங்களுக்கெல்லாம் போய் அவன் ஆசைக்கு இணங்கியிருக்காவிட்டால்... நான் இப்படியெல் லாம் துன்பப் பட்டிருப்பேனா?

இனிக்கப் பேசும் நாவும் இரக்கமற்ற இதயமும் கொண்ட அவன் என்னை நன்றாக அனுபவித்து விட்டு, எனக்கு வயிற் றிலே உண்டாகிய பிறகு, தனக்கும் எனக்கும் சம்மந்தமே இல்லையென்று சொல்லிவிட்டுப் போனானே... அது ஊரெல் லாம் பரவி என் குடும்ப மானமே கப்பலேறி... சீ சனியன் போல இப்போது ஏன் அதையே நினைத்துக் கொண்டிருக்கி றேனோ? அவன் மீதே முழுப் பழியையும் சுமத்துகிறேனே... ஒரு குமர்ப்பிள்ளை ஆண்களிடம் எட்டமாக இருக்கவேண்டும் என்கிற அறிவு எனக்கு இருந்திருக்க வேண்டாமா?

மடந்தைப் பருவத்தில் ஒரு தடவை எல்லை மீறினால் அவ் வளவு தான். தவறு ஒன்றைத் திரும்பத் திரும்பச் செய்யும் போது அதன் அடர்த்தியும் அதனால் ஏற்படும் விளைவுக ளும் நமக்கு புலப்படுவதில்லை. புலன்களுக்குக் கிடைக்கும்

இன்பம் கண்களை மறைத்து விடுகிறது. அது தான் எங்கேயோ படித்திருக்கிறேனே? 'தவறுகள் செய்வதெல்லாம் நொடிகளில் தான். தண்டனைகள் தான் யுகங்களுக்கு' இது எனக்கு நன்றாகவே பொருந்தும்.

அன்றைக்கு மண்ணெண்ணெய் விலை குறைந்ததை விடவும் நான் கெட்டுப் போய் 'வயித்தில புள்ளை வாங்கினது' தான் அயலட்டத்துக்குப் புளுகு! குழாயடிக்குத் தண்ணீர் பிடிக்க வந்து எங்களுடைய வீட்டைப் பார்த்துக் காறித் துப்புகிறவர்களையும் சீறி எறிகிறவர்களையும் எத்தனையோ தடவைகள் கண்டிருப்பேன்! அம்மா பாவம் என்னைப் பெற்ற குற்றத்துக்கு அது பட்ட பாடு... முன்பின் வீட்டுப் படலையடி தெரியாதவர்களெல்லாம் சொந்தம் என்று சொல்லி மூஞ்சியைத் தொங்கப் போட்டுக் கொண்டு துக்கம் விசாரிக்க வந்தார்கள்.

'அவன் ஆரு பொடியன்? என்ன சாதியாக்கள்?'

'அந்த... எப்பபாரு வெத்தில வாயோடு... றோட்டுறோட்டாத் துப்பிக் கொண்டு திரியுற பொடியனோ?'

'இல்லையெண்டால் இந்தப் பக்கத்து பனைகளில கள்ளு இறக்க வாற ஒரு கறுவல் பொடியனாக்கும்' நான் வாயே திறக்காமல் விசரி போல மூலைக்குள் முடங்கி அழுது கொண்டேயிருந்தேன்.

'உன்ர வடிவுக்கும் குணத்துக்கும் நீ எங்கயோ இருக்க வேண்டியனி! வெளிநாட்டு மாப்பிள்ளைய கட்டிக் கொண்டு ராசாத்தி மாதிரி வாழ வேண்டியனி...' இப்படிச் சொன்ன அத்தைக்கு ஊரில் நாலு ஆம்பிளைப் பொடியள். ஒருத்தனையாவது எங்களில் ஒருத்திக்குக் கல்யாணம் கட்டித்தரச் சொல்லிக் கேட்டு அம்மாவுக்கு ஆயுளில் அரைவாசி போச்சு.

'புள்ள நீ வாயத் திறந்து உள்ளதச் சொன்னா தான் நாங்களும் ஏதும் செய்யலாம். வயித்த பாத்து வைத்தியம் பார்க்க ஏலாது. நீயும் அவனும் நிறையத்தரம் ஒண்டாயிருந்தனிங்களா? உனக்கு வயித்தில வந்து எத்தனை மாதமிருக்கும்? கடைசியா எப்பயம்மா ஏலாமல் வந்தது?' ஏதோ நர்ஸ்சுக்கு படிச்சவ போல எத்தனை கேள்விகள். எல்லாம் என்மேலுள்ள அக்கறையாம்.

சிலபேர், 'அடி விசரி தப்புத் தான் பண்ணிப் போட்டாய். வயித்தில புளுப்பூச்சி தான் வந்திட்டு. ஒரு 'பப்பாசிப்' பிஞ்சோட சோலிய முடிச்சிருக்க வேண்டியது தானேடி மடச்சி?' உரிமையோடு திட்டுகினமாம்!

'அது சரி நீ ஒரு வெள்ளந்தி. இப்பத்தப் பெண்டுகள் ஏதேதோவெல்லாம் செய்யுறாளுவ. அதெல்லாம் ஊருக்குத் தெரியுதா? புள்ளையப் பெத்து நடு வீட்டுக்குள்ளேயே வெட்டித் தாட்டதுகளும் ஊருக்குள்ள இருக்குதுகள். நீ பாரு அசட்டுத்தனமாக இருந்திட்டு இப்ப குடும்பத்தையே சந்தி சிரிக்க வச்சிட்டாயே' எண்டு சொல்லி நீலிக் கண்ணீர் வடித்தனர் சிலர்.

'மூணு மாசம் கழிஞ்சா என்ன? கொழும்புக்குப் போனால் இப்பையும் இதக் கலைக்கலாமாமே! கூட்டிக் கொண்டு போங்க மச்சி... சித்தி... சின்னம்மா... குஞ்சியம்மா...' இல்லாத முறையெல்லாம் சொல்லிக் கொண்டு பல பேர் அம்மாக்கு அட்வைஸ்.

'ராசாத்தி அக்கா, செல்லம் கொஞ்சிக் கொஞ்சி நீ குடுத்த இடம்தான் மூத்தவள் சீரழிஞ்சு போய் நிக்கிறாள். மற்ற இரண்டு பெண்டுகளையாவது அடக்கத்தில வச்சிரு'.

'அடுத்தவள் சங்கீதாவும் ஆரோடையோ 'மோட்டச் சைக்கிள்'ல ஏறிக் கொண்டு திரியுறாளாம் எண்டு ஊராக்கள் கதைக்கினம்...' இப்பிடி இல்லாத பொல்லாததெல்லாம் சொல்லி எரியுற நெருப்பில் எண்ணெய் வார்த்த சொந்தக்காரர் தான் அதிகம். அப்பா ஊருக்குள் மரியாதையோடு இருந்த மனுசன். மேசன் வேலைக்குப் போய் உடம்பை வருத்தி உழைத்து எங்களையெல்லாம் ஒரு குறையில்லாமல் வளர்த்தவர். இந்த அவமானம் தாங்காமல் குடிச்சுக் குடிச்சே ஓடாகத் தேய்ந்து போனேர். 'எல்லாரும் படிச்சுக் கிழிச்சது காணும்' என்று தங்கச்சிகளைப் பள்ளிக்கூடப் பக்கம் போகாமல் செய்துவிட்டார்.

இழவு வீடு போல எல்லோர் முகங்களிலும் சோகம் அப்பிக் கிடந்தது. மாதக் கணக்காக வீட்டில் அடுப்பே மூட்டவில்லை. திரு இருதய ஆண்டவர் படத்துக்குத் திரி விளக்கு ஏற்றுறதும் இல்லை. அம்மா நெற்றியில் பொட்டும் கூட வைப்பதில்லை. 'நடந்தது நடந்து போச்சு அதுக்காக ஏன் நீ விதவை போல பொட்டில்லாமல் நாலு சுவருக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறாய்...?' என்று சில வாய்கள் கேட்கும். அம்மா பொட்டு வைத்துக் கொண்டு பக்கத்து கடைத் தெருவுக்கு போனால் 'மகளின்ர கதை சந்தி சிரிக்குதாம், ஆத்தை இங்க பெரிய பொட்டும் வச்சுக் கொண்டு பூசி மினிக்கிக் கொண்டு திரியுறாவாம்' என்று காதடிபடவே சில வாய்கள் பேசும்.

நான் வயித்தில பிள்ளையோடு பட்டினியாகக் கிடந்தது போல எந்தப் பொம்பிளைக்கும் வரக்கூடாது ஏதோ அந்த நேரம் பார்த்து என்னைக் காப்பாற்றவென்று வேளாங்கண்ணி மாதாவே அனுப்பிய மனுசன் தான் அந்தோனி ஐயா.

அவர் பக்கத்து ஊர். அப்பாவுக்கு நீண்ட காலத்து பழக்கம். இப்பிடி கேள்விப்பட்டு வீட்டிற்கு வந்து ஆறுதல் சொல்லி, ஏதோ அப்பாவோடு பேசிச் சம்மதம் வாங்கிக் கொண்டு புறப்பட்டவர், அடுத்த நாளே காலையில் வந்து என்னைக் கூட்டிக் கொண்டு, தேவையான உடுபுடவைகளையும் அம்மாவிடம் கேட்டு வாங்கிச் 'சந்திரிக்கா பாக்' (Bag) ஒன்றில் வைத்துத் தானே சுமந்துகொண்டு என்னோடு நடக்கத் தொடங்கினார். நான் தெருவால் புள்ளியாகி மறையும் வரைக்கும் அம்மா படலையருகில் அழுது கொண்டே நின்றாள். இப்போது அதை நினைக்கும் போதெல்லாம் கண்கள் பனிக்கும்.

அந்தோனி ஐயா என்னை பஸ்சில் ஏற்றிக் கொண்டு காப்பகம் ஒன்றிற்குக் கூட்டிச் சென்றார். அங்கே தான் மேரி என்று ஒரு அருட்சகோதரியை நான் சந்திக்க நேர்ந்தது. நாற்பது வயதிருக்கும். சாந்தமும் கனிவும் கொண்ட தோற்றம். அவள் முதலில் எங்களை அன்போடு வரவேற்றுக் குடிப்பதற்கு நெல்லி ரசம் தந்து உபசரித்தாள். 'மனிதர்கள் எல்லாருமே தவறு செய்பவர்கள் தான். நம் தவறுகளை உணர்ந்து திருத்திக் கொண்டு புதிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். உன் கவலையை இறைவன் வெகு விரைவில்

மகிழ்ச்சியாக மாற்றுவார். உன் கண்ணீரைத் துடைப்பார் என்று கூறி என்னை உள்ளே அழைத்துக் கொண்டு போனாள்.

அங்கே என்னைப் போலவே பிரச்சினையுடைய பலர் இருந் தார்கள். என்னை விடவும் வயது குறைந்த பெண்களும் இருந்தார்கள். சொந்த அண்ணனால் துஸ்பிரயோகம் செய் யப்பட்டுக் கர்ப்பமாக்கப்பட்ட பதினாறு வயது நிர்மலாவைப் பார்க்க எனக்கே பரிதாபமாக இருந்தது. அப்போது எனக்குப் பத்தொன்பது. என்னை விடவும் வயதில் மூத்த பெண்களும் இருந்தார்கள். கர்ப்பமாகிய பின் கணவனால் கைவிடப்பட்ட வர்கள், கூட்டுப் பாலியல் வல்லுறவுக்கு ஆளானவர்கள் எனப் பல விதமான பிரச்சினைகளில் பலர்... ஒவ்வொருத்த ருக்கும் ஒவ்வொரு கண்ணீர் கதை.

ஆரம்பத்தில் அங்கே இருப்பதென்பது கடினமாகத் தான் இருந்தது. போகப் போக அருட்சகோதரி மேரி எனக்கு இன் னொரு தாயாகினார். அங்கே இருந்த ஏனைய வயது குறைந்த அருட்சகோதரிகளும் அன்பாகப் பழகுவார்கள். மனதிற்கு ஆறுதலாகக் கதைப்பார்கள். வேளாவேளைக்கு உணவு கிடைத்தது. தினமும் அருட்தந்தை ஒருவர் வந்து வழிபாடுகளும் திருப்பலியும் நிகழ்த்துவார். நானும் அவற் றில் கலந்து கொள்வேன். வாராவாரம் வைத்தியரும் தாதி யர்களும் வந்து எங்களைப் பரிசோதிப்பார்கள்.

கர்ப்பிணிகள் குழந்தையை நல்லபடியாகப் பெற்றெடுத்த சில மாதங்களில், யாராவது திருமணமாகிப் பல வருடங்களா கியும் குழந்தைப் பேறற்ற தம்பதிகள் காப்பகத்திற்கு வந்து அந்தக் குழந்தையைத் தத்தெடுப்பதற்குரிய சட்ட நடவடிக் கைகளை முடித்து விட்டு, தாய்க்கு ஒரு தொகைப் பணமும் கொடுத்துவிட்டு, அருட்சகோதரி மேரி மூலமாகக் குழந்தை யைப் பெற்றுக் கொண்டு குதூகலத்தோடு போய்விடுவார் கள். நான் அங்கிருந்த காலத்தில் பலரும் தங்கள் குழந்தை யைத் தத்துக்கொடுத்துவிட்டு காப்பகத்திலிருந்து சென்றனர்.

எனக்குப் பெறுமாதம் வந்தது முள்ளந்தண்டு வலியும் குத் தும் பேயாய்ப் படுத்தியது. அம்மா அருகில் இல்லையென்ற ஏக்கத்தோடே நிமிடங்களை யுகமாய்க் கடக்க வேண்டி இருந்தது.

அந்த நடு இராத்திரியில் என்னை ஏற்றிச் சென்ற ஆம்பு லன்ஸ் வண்டியின் அலறல் சத்தம் இப்போதும் என் காதுக் குள் ஒலிக்கிறது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட் டேன்... ஆண் குழந்தை. என் நிம்மதியைக் கெடுக்க வந்த வன் என்று திட்டிக் கொண்டேயிருப்பேன். இரண்டு நாட்களில் என்னையும் குழந்தையையும் மீண்டும் காப்பகத்திற்கே கூட் டிக் கொண்டு சென்றார்கள்.

சிரித்துக் கொண்டே என் முலைகளில் பால் குடிப்பான். என் ஒற்றை விரலைத் தன் பிஞ்சுக் கைகளால் பற்றிக் கொண்டே தூங்குவான். அவனுக்கு எப்போதும் தன்னை என் மார்புச் சூட்டில் அணைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

அவனுக்குத் தான் எப்படிப் பிறந்தானென்று தெரியுமா? தனக்கு அப்பா யாரென்று தெரியுமா? அவன் என் வயிற்றில் வந்து துலைந்ததால் நான் பட்ட பாடு... என் குடும்பம் பட்ட அவமானம்... என் அம்மா வடித்த கண்ணீர்... என்ன தான் தெரியும்? இல்லையென்றால் நான் அவனை யாருக்காவது தத்துக் கொடுத்து விட்டு எப்போது ஓடித் தப்புவேன் என்ற எண்ணத்தோடு இருக்கிறேன் என்பது தான் தெரியுமா? அவன் எதுவும் அறியாமல் நிம்மதியாகத் தூங்குவான்.

ஒரு நாள் அப்படி அவன் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டி ருந்த போதே காப்பகத்திற்கு வந்திருந்த ஒரு நடுத்தர வய துத் தம்பதியருக்கு அவனைத் தத்துக் கொடுப்பதற்கான ஆவணப் பதிவுகளெல்லாம் நடந்தது. அவர்கள் ஏதோ வெளிநாட்டிலிருந்து வந்திருப்பதாக அருட்சகோதரி மேரி கூறினாள். அவர்கள் எங்கிருந்து வந்தால் எனக்கென்ன என்ற எண்ணத்தில் காட்டுகின்ற இடத்திலெல்லாம் கடகடவெனக் கையொப்பம் போட்டேன். நடப்பது எதுவும் தெரியாது அந் தப் பாலகன் தன் பிஞ்சு விரல்களால் என் ஒற்றை விரலை பிடித்துக் கொண்டே கண்மூடிக் கிடந்தான்.

எனக்கு வேண்டியதெல்லாம் என்னை அவமானப்படுத்திய எல்லாருக்கும் நான் வாழ்ந்து காட்டவேண்டும். இந்தச் சுமையை இறக்கி விட்டு எங்காவது சென்று இடைநிறுத்திய கல்வியைத் தொடர வேண்டும். வேலையொன்றில் சேர்ந்து கைநிறையச் சம்பாதிக்க வேண்டும்.

பதிவுகளெல்லாம் பூர்த்தியாகிய பின் குழந்தையைக் கொண்டு செல்ல வந்திருந்த பெண்ணிடம் அவனை நீட்டு கின்ற போது மனதில் ஏதோ இனம்புரியாத மெல்லிய சோகம் துளிர்விட்டது. அந்தப் பெண் புன்முறுவலோடு இரண்டு கைகளாலும் குழந்தையை ஏந்திக் கொண்டாள். அப்போதும் அவன் என் கைவிரலை விடாமல் இறுகப் பற்றிக் கொண்டே தூக்கிக் கொண்டிருந்தான். மெதுவாக அந்தப் பிஞ்சு விரல்க ளிடமிருந்து என் விரலை விடுவித்துக் கொண்டேன். 30,000 ரூபாப் பணம் கொடுத்தார்கள்.

அப்பாடா எப்படியோ என்னைப் பிடித்த சனியன் இன்றோடு தொலையப் போகிறது என்ற எண்ணம் தான் எனக்கு. அவர் கள் குழந்தையைத் தூக்கிக் கொண்டு அருட்சகோதரி மேரி யிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியில் நின்ற கறுப்புக் கார் ஒன்றில் ஏறிப் புறப்பட்டார்கள்.

முப்பது வெள்ளிக் காசுக்காக யேசுவைக் காட்டிக் கொடுத்த யூதாசை விட முப்பதாயிரம் ரூபாயை வாங்கிக் கொண்டு பெற்ற பிள்ளையையே தத்துக் கொடுத்த நான் பெரும் பாவி தானே?

அன்று நான் செய்த தவறை நினைத்துக் காலம் முழுவதும் கண்ணீர் விடுவேன் என்று அப்போது எனக்குத் தெரியாது. என் ஆண் குஞ்சுக்கு இப்போது பதினொரு வயது. அவன் எங்கிருப்பானோ? எப்படி இருப்பானோ? பெற்றெடுத்தவள் தன்னைத் தத்துக் கொடுத்த கதையெல்லாம் அவனுக்குத் தெரிந்திருக்குமோ? ஒருவேளை அது அவனுக்குத் தெரிந்தி ருந்தால் என்னை ஒரு இரக்கம் இல்லாத பாதகி என்று தானே நினைத்துக் கொண்டிருப்பான்?

ஓ! நான் இரக்கமில்லாதவள் தானே? பாதகி தானே? கல் நெஞ்சக்காரி தானே? இல்லையென்றால், அந்தப் பாலகனின் கள்ளமற்ற சிரிப்பைக் கண்டும், என்னை அன்பொழுகப் பார்க்கும் அவனின் சின்னக் கண்களைக் கண்டும் இம்மியள வேனும் இரங்காது இருந்திருப்பேனோ?

உன் அம்மாவை மன்னித்து விடடா என் செல்லமே! நான் அன்று இருந்த நிலைமையில் அப்படித் தவறாக முடிவெடுத்து விட்டேனடா. என்னை மன்னிப்பாயா?

என்னை அம்மா என்று கூப்பிடுவாயா?

எனக்கு ஒரு முத்தம் தருவாயா?

'ஏனம்மா அழுறீங்க?' என்று கேட்கிறான் இனியன்.

'ஒன்றுமில்லை. அம்மாவிற்கு கண்ணுக்குள் ஏதோ தூசு விழுந்துட்டு. நீ போய் நித்திலாவோட விளையாடு'.

அதெல்லாம் நடக்கும் போது எனக்குப் பத்தொன்பது வயது. அந்த வயதில் எந்தப் பெண்ணாக இருந்தாலும் நான் எடுத்த இதே முடிவைத்தானே எடுத்தாக வேண்டும்? நானே வாழ நாதியில்லாமல் இருந்து கொண்டு குழந்தையும் கையுமாக என்ன செய்வது? வீட்டிற்கும் போக இயலாது. ஊருக்குள் தலைகாட்டவே முடியாது. வீதிவீதியாகச் சென்று பிச்சைதான் எடுத்திருக்க வேண்டும் அல்லது யாரையும் பார்த்துப் பல்லிளித்திருக்க வேண்டும். அதற்கு என் பிள்ளையை அந்தப் பணக்காரக் குடும்பத்திற்குத் தத்துக் குடுத்ததே நல்லது. இப்போது அவன் எங்கிருந்தாலும் வசதிவாய்ப்புகளோடு மகிழ்ச்சியாக இருப்பான். இனி அவனை நினைத்து அழக்கூடாது...

இடைநிறுத்திய கணினிக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்துவிட்டு வவுனியாவில் 'காமன்ஸ்' ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்தபோது பல ஆண்கள் என்னைக் காதலித்தார்கள். வாழ்கையில் ஒரு முறை செய்த பிழையை இன்னொரு தடவை செய்யக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன்.

அப்போதுதான் இவர் நோர்வேயில் இருந்து இலங்கைக்கு வந்திருந்த போது அருட்சகோதரி மேரி மூலமாக எனக்கு அறிமுகம் ஆனார். என்னைப் பற்றி முழுவதுமாக அறிந்த பிறகும் என்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். முறையாக எங்கள் வீட்டிற்குச் சென்று பேசினார். பின்னர் இருவரும் சில தடவைகள் சந்தித்துக் கொண்டோம். ஆடம்பரமின்றி எங்களுக்குத் திருமணமும் நடந்தது.

நான் எந்தநாளும் என் மூத்தவனின் நினைவிலேயே மூழ்கிப் போய்த் துன்பப்படுவது அவருக்கும் நன்றாகத் தெரியும். ஒரு நாள் இரவிரவாக நான் அழுதுகொண்டிருந்தபோது 'உன் பிள்ளை இப்போது எங்கிருக்கிறான் என்பதை அறிந்து கொள்ள முயற்சி செய். எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை உரியவர்களோடு தொடர்புகொண்டு பேசி, உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும் நான் உன்னைக் கூட்டிக் கொண்டு சென்று அவனைச் சந்திக்க வைக்கிறேன். அவர்கள் சம்மதித்தால் நீ அவனை நம்முடைய வீட்டிற்குக் கூட்டிக் கொண்டு வந்தாலும் எனக்குச் சம்மதம்' என்று சொன்னார். எனக்கு அது ஆச்சரியமாகத் தான் இருந்தது.

நானும் இலங்கையில் உள்ள அருட்சகோதரி மேரியோடு அழைத்துப் பேசினேன். 'சிஸ்டர் இப்பயெல்லாம் எனக்கு என் பிள்ளை நினைப்பாகவே இருக்குது. என் குழந்தை எங்கேயிருக்கிறான்? நான் ஒருமுறையாவது அவனைப் பார்க்க வேண்டும்' என்று கதறி அழுதேன்.

'நான் இப்போது காப்பகத்தில் இல்லையம்மா. நான் வேறு பணிக்கு இடம் மாற்றப்பட்டு இரண்டு வருடங்களாகிறது. அவர்களின் முகம் கூட எனக்குச் சரியாக நினைவில் இல்லை. தொடர்புகளும் இல்லை. அவர்கள் இப்போது எங்கேயிருக்கிறார்கள் என்ற விடயங்கள் எல்லாம் எனக்குத் தெரியாதம்மா'.

'சிஸ்டர் முடிந்தால் எனக்காக இந்த உதவியை மட்டும் செய்யுங்கள்...'

சிறிது நேரம் மௌனம்...

'சரி உனக்காக நான் காப்பகத்தில் பேசுறேன். பழைய பதிவுகளை எடுத்துப் பார்த்து அவர்களுடைய விபரங்களைக் கேட்டறிகிறேன். ஆனால் இந்த விடயம் எவ்வளவு பாரதூரமானது என்பது உனக்குத் தெரியும். ஆனாலும் உன்னில் எனக்கு நம்பிக்கையிருக்கிறது. எனக்குக் கொஞ்சம் கால அவகாசம் கொடு. விபரங்கள் கிடைத்ததும் நானே உனக்கு அழைத்துப் பேசுவேன்' என்று கூறினார். ஆனால் இன்று வரை அருட்சகோதரி மேரி எனக்குத் திரும்ப அழைக்கவே இல்லை.

வாறது இவற்ற கார் போல தான் இருக்கு. ஓ... இவர் தான்.

இனியன்... நித்திலா... அப்பா வாறேர்.

இவர் காரில் என்னையும் பிள்ளைகளையும் ஏற்றிக் கொண்டு வேகமாகப் பயணித்து ஒரு சொப்பிங் மாலின் வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்துகிறார். கிறிஸ்மஸ் சீசன் என்பதால் கூட்டம் நிரம்பி வழிகிறது. இப்போது நாங்கள் குழந்தைகளுக்கான ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் கண்ணாடி அறையில் நிற்கிறோம்.

நான் பதினொரு வயது ஆண் குழந்தைகளுக்கான ஆடைப் பகுதிக்குள் கண்களை ஊர விடுகிறேன். அந்தப் பொம்மைக்கு மாட்டியிருக்கும் சிவப்பு நிறச் சேர்ட் என் மூத்த ஆண் குஞ்சுக்கு உடுத்தினால் அழகாக இருக்கும். அவனுக்கு நாளைக்குப் பிறந்த நாள்.

அவனுடைய ஒவ்வொரு பிறந்தநாளுக்கும், பண்டிகைகளுக்கும், ஆடைகளை வாங்கி வாங்கி வைப்பதால் என்னதான் இவளுக்கு வந்துவிடப் போகிறது? என்று என் கணவர் கூட நினைக்கலாம். நான் அவனுக்காக வாங்கும் ஆடைகளை உடுத்திக் கொண்டு தானே அவன் என் கனவுகளில் வருகிறான்.

என்றோ ஒருநாள் என் பிள்ளையைச் சந்திக்க நேர்ந்தால் அவனுக்காக நான் ஆசையாக வாங்கிய ஆடைகளைப் பார்த்தாலாவது... என் இத்தனை ஆண்டுகாலக் காத்திருப்பும் தவிப்பும் அவனுக்குப் புரிந்து விடாதா?



jenath.e@thaiveedu.com

# சாம்பரில் திரண்ட சொற்கள்

15

– தேவகாந்தன்

ஓவியம்: ஜீவா

வெய்யில் கொழுத்திய பதினொரு மணிப் பொழுதில் வீடு வந்து சேர்ந்தனர். சாய்வான பின் முற்றப் பாதையால் கீழிறங்கியிருந்தார் சிவயோகமலர். கூட வந்திருந்த செல்லத்தம்பு, சாந்தரூபிணி, சுந்தரமென யாரின் உதவியுமின்றி, வீட்டின் முன்புற கார் நிறுத்தத்திலிருந்து தன்னறை வரையான சுமார் நூறு அடி தூரத்தை, நடந்து கடந்ததிலான ஒரு திருப்தி அவர் முகத்தில் ஜோதித்துக்கொண்டு இருந்தது. அதன் பிரதிபலிப்பு மற்றவர் முகங்களிலும் காணக் கிடந்தது.

மூன்று நாட்களுக்கு முந்தி இருள் சூழும் ஒரு பொழுதில் அதே வழியில் தான் ஸ்ட்றெச்சரில் வைத்துக் காவிக் கொண்டு செல்லப்பட்டதையெண்ண அத் திருப்தியின் அலைகள் மகிழ்ச்சியாய்ப் பரிணமிக்கத் துவங்கின. உண்மையில் இன்னும் தன்னால் சிறிது தூரம் யாரின் கைத் தாங்கலுமின்றி கைத்தடியுடன் மட்டும் நடந்து செல்ல முடியும் போல் சிவயோகமலர் உணர்ந்துகொண்டிருந்தார்.

முதல் நாள் மதியமளவில் மகேந்திரசிவம் அவரைப் பார்க்க ஒட்டாவாவிலிருந்து வந்திருந்தான். தனியாகத்தான். 'அங்கயிருந்து காரில தனியவே வந்தனீ?' என்ற தாயின் கேள்வியில், தன் மனைவி பிள்ளைகளை அழைத்து வரவில்லையேயென்ற ஆதங்கம் பொதிந்திருந்ததை அவன் கண்டான். அதை உணர்ந்தாலும், 'தனியத்தான்' என்றான் நிர்விகற்பமாய்.

'பிள்ளையளையாச்சும் கூட்டி வந்திருக்கலாமென அவன் தன் மனநிலையைப் புரிந்து கொள்ளாத வருத்தமும் சேர அம்மா சொன்னார். 'பாத்து எத்தினை வருஷமாச்சு!'

'சரஸ்வதியை பிள்ளையிலகூட நீங்கள் பாக்கேல்ல. கிருஷ்ணாவைப் பாத்தும் பதினெட்டு வருஷம்.' வருத்தம் தொனிப்பதுகூட அந்த எல்லை வைத்துக் கொள்ளும் உறவுக்கு அதிகமென்பது போல ஒரு சோர்வினை அவன் தன் குரலில் இழையவிட்டான்.

அவ் விரக்தியின் அளவிகந்த பாரத்தை அவரால் புரிந்து கொள்ள முடியும். அவை யாவும் கருதாப் பிழைகளின் அடையாளங்களாக அப்போது உருப்பெருத்து நிற்கின்றன.

பேச்சறுந்தது அவரிடத்தில். முக வெளிர்ப்பு சீணித்தது.

மகேந்திரசிவத்திற்கு, நோய்ப் படுக்கையிலிருப்பவரை துயர்ப்படுத்துகிறோமேயென்று வருத்தமாகியது. 'ஏனம்மா எல்லாத்தையும் மறைச்சுவைச்சுக் கதைக்கிறியள்? வெளிவெளியாய்ச் சொல்லுறதுதான, பிள்ளையளையும் குயின்ஸியையும் கூட்டிக்கொண்டு வரச்சொல்லி.'

'உனக்கு விளங்கிதுதான? அடுத்தமுறை கூட்டிக்கொண்டு வா.'

அது மகிழ்ச்சியான விஷயம். தன் பிடிவாதங்களுக்காய் தான் கொடுத்த விலை அதிகமென்பதை உணரும்போது அம்மா இன்னும் வருந்துவாரென அவன் எண்ணினான். குயின்ஸியை சம்மதிக்கவைப்பதும்கூட மிகுந்த சிரமமாகவேயிருக்கும். ஆயினும் செய்துவிடலாம்.

எல்லாம் ஒரு நேருக்கு வந்தாயிற்று.

எல்லா மனவுணர்களும் இறுக்கம் தளர்ந்துபோயிருந்தன. சுந்தரம்கூட எங்கோ பராக்குப் பார்த்துக்கொண்டில்லாமல், அவர்களை மாறிமாறி நேராய்ப் பார்த்தபடி புன்னகைத்துக் கொண்டிருந்தார். அந்தச் சூழ்நிலை வேறொரு பிரபஞ்சத்தின் பிரவேசமாய்த் தோன்றியது சிவயோகமலருக்கு.


சாந்தரூபிணியும் செல்லத்தம்புவும் பிறகு வருவதாகச் சொல்லிக்கொண்டு சென்றனர்.

சுந்தரத்தின் முகம் மிகவும் தெளிந்து போயிருந்தது. அது வரை நிலவியிருந்த பிடுங்குப்பாடுகளுக்கு இனி வாய்ப்பில்லையென எண்ணியதில் அதுவென சிவயோகமலர் புரிந்தார்.

இன்னொரு விஷயமும் அவருக்கு அப்போது ஞாபகமாயிற்று. ஆஸ்பத்திரியிலிருந்த அந்த மூன்று இரவுகளிலும் வீட்டில்போல் தான் சுயம் மறந்து உளறிக்கொட்டவில்லை என்பதேயது. அது சுந்தரத்திற்கு மகிழ்வளிப்பதாய் இருக்குமாவென அவரால் நிச்சயப்பட முடியாமலிருந்தது. தன் மனவேக்காட்டு வெடிப்புகள் எரிந்த சாம்பலிலிருந்து சொல்லாய்த் திரளும் ரஸவாதத்தை மிக உன்னிப்புடன் அவதானிப்பவராய் அவர் இருப்பதை சிவயோகமலர் அறிந்தேயிருக்கிறார்.

வெளியின் அமைதியில் உள்ளும் அமைதி கண்டிருக்கலாம். புதிய இடத்தின் பிரக்ஞைகூட அவர் வாயை அடைத்துப் போட சந்தர்ப்பமமைத்திருக்கலாம். எப்படியோ அது நடந்திருக்கிறது. அதுதான் முக்கியம்.

அப்போது சுந்தரத்தின் போனுக்கு ஓர் அழைப்பு வந்தது. சிறிது நேரம் உரையாடியவர் புவனேஸ்வரி பேச விரும்புவ



தாகச் சொல்லி, போனை தரவாவென்று சிவயோகமலரைக் கேட்டார். பேசுவதா வேண்டாமாவென யோசித்து தாமதித்த வர் பிறகு போனை வாங்கிக்கொண்டார். சிறிய சுக விசாரிப் போடு அந்த உரையாடல் முடிந்து போயிற்று. இருவர் மன தின் விளிம்புகளும் ஏதோ தயக்கத்தில் ஓசையெழாமல் உர சுப்பட்டிருக்கவேண்டும்.

புவனேஸ்வரியை நினைக்கையில் அவரைத் தீயில்போல் சுட் டெரித்த 2007-ன் மார்ச் 07-ம் தேதிய சம்பவமும் ஞாபகமாகி விடுகிறது. அந்த எரியாத பக்கங்களிலிருந்துதான் அவரது இருப்பு அடையாளமாகிக்கொண்டு இருக்கிறது.

உடல் நலமில்லையென கிடந்த அனுபவமேதும் அவருக்கு

சின்ன வயதிலும் இருந்ததில்லை. அன்றைய நிலைமையில் அவருக்கு உயர் இரத்தவழுத்தம், வாதம், நாரிப் பிடிப்பு, இதய பலவீனம், நுரையீரல் தொற்றுவெனவும், எல்லாவற்றிற் கும் மேலாக சிறுநீரகப் பாதிப்பெனவும் நூறு வருத்தங்கள்.

படுக்கையில் வீழ்த்தியது அந்த வருத்தங்களா, 2007 மார்ச் இலங்கையில் நடந்த சம்பவங்களாவென அவர் அடிக்கடி நினைப்பதுண்டு. பதில் கிடைக்காமல் கிடந்து தவிப்பதுண்டு. ஆனால் பதில் கிடைக்கும்போது தன் பங்குக்குப்போல் மன நெருப்பில் தன்னை எரிப்பார். ஆம், அந்த வருத்தங்களை உண்டுபண்ணியதில் அந்த 2007 மார்ச் 07 சம்பவத்திற்கு பெரும் பங்குண்டு. அது புவனேஸ்வரியால், அவளது கரு ணையின்மையால், விளைந்தது. அவளுக்கு குறையாத தீங்கு செய்தவன் அவளது தம்பி மயில்வாகனம். இருவரை யுமே மன்னிக்க மாட்டாள். புவனேஸ்வரியை மன்னித்தாலும் மயில்வாகனத்தை என்றைக்கும் மன்னிக்கமாட்டாள்.

அன்றைக்கு உடம்பும் மனமுமிருந்த தெம்பில், இலங்கையி லிருந்து வந்த புவனேஸ்வரியின் போனுக்கு பிறகு, பத்தாண் டுகளுக்கு முன்பாய் நடந்த அந்த இலங்கை நிகழ்வுகளை எண்ணிப்பார்க்கும் தவனம் அவருக்குத் தோன்றியது. சில நிகழ்வுகளை அந்த மனநிலையில் ஆழமாக ஊடுருவி அடி யுண்மைகளைத் தொடமுடியலாம்.

இரவில் கனவாக அவை மீட்சி பெற்றுவிடக்கூடாதென்ற பிரார்த்தனையுடன் மனத்தின் சுவருக்கு மெல்லிய உடைப்பு வைத்தார்.

அன்றைய தினம் ஒரு புதன் கிழமையாகயிருந்தது. காலையி லேயே லொட்ஜைவிட்டு வெளியேறுவதென்பது முதல்நாளி ரவே அவர் எடுத்த தீர்மானம்.

நேரடியாக யாழ் செல்லும் மினிபஸ்ஸில் அல்லது சி.ரி.பி. பஸ்ஸில், எது காரணத்தாலாவது பஸ்ஸோட்டம் தடைப்பட்டி ருந்தால் ஒரு வாடகை வானை அமர்த்திக்கொண்டு, யாழ் நகர் போய்விடுவது அவரது திட்டமாகயிருந்தது.

இரவு லொட்ஜில் கசிந்த கதைகளிலிருந்து அன்றைய பய ணம் இலகுவாகயிருக்குமென அவர் எண்ணியிருக்கவில்லை. ஆனால் தமிழராயிருந்தாலும் ஒரு வெளிநாட்டுப் பிரஜைக்கு பெரிய ஆபத்தேதும் வந்துவிடாதென அவர் நம்பினார்.

காலையில் சூட்கேஸை இழுத்துக்கொண்டு காலி பிரதான வீதிக்கு வந்தபோது அதுவரை இருந்திருந்த மனத் தெம் பெல்லாம் அவரிடத்தில் உருகிக் கரைந்துவிட்டது. பத்தோடு பதினொன்றாக தன்னிலையும் இருக்குமென்ற அவரது எண் ணத்தில் அடி விழுந்துவிட்டது. சூட்கேஸை இழுத்துக் கொண்டு வந்து யாரும் தெருவில் நின்றிருக்கவில்லை.

பலமெல்லாம் உறிஞ்சப்பட்டு விட்டாற்போல் கால்கள் இடுப் புக்குக் கீழே தளர்ந்து நடுங்கின. தலை சுற்றி, கண்ணில் பிம்பங்கள் நெளிந்து உருக்குலைந்தன.

அவ்வதிகாலைக் கடற்காற்று அவ்வளவு மூர்க்கமாய் அடித் துக்கொண்டிருந்ததில் அவருடம்பு குளிரெடுத்தது. அந்த நேரத்தில், பெரிய அறைகூட வேண்டாம், எங்காவதோரிடத் தில் ஒரு பாய் போடுகிற அளவு இடமிருந்தால்கூட போதும் போல் இருந்தது. ஒரு புகலிடம். பசி தூக்கங்கள் மறந்து அந்தப் புகலிடத்தில் அவர் ஒதுங்கிவிடுவார்.

ஆனால் யாருடையதேனும் புகலிடம் மட்டுமல்ல, தெரிந்த மனிதர்களின் முகங்கள்கூட அவ்வேளை அவருக்கு ஞாப கத்தில் வர மறுத்தன. மீறிவரும் முகங்கள் கைகளால் தம் முகம் மறைத்தன அல்லது அவள் வரவை கைவீசித் தடுத் தன.

ஒரு துண்டில் குறித்து கைப்பையில் வைத்திருந்த புவனேஸ்-வரியின் போன் நம்பர் ஞாபகம் வந்தது. அந்த நெருங்கிய உறவுகளுக்கிடையில் என்றோ விழுந்த விலகலொன்று அன் றும் உயிர்கொண்டிருந்து ஒரு தடங்கலைச் செய்தது. புதிதா கவும் சில தடங்கல்கள். ஊரிலே ஒரு பெயரிருந்தது புவ னேஸ்வரிமேல். அது அபாண்டமா, குற்றமாவென அவருக் குத் தெரியாது. ஆயினும் அந்த நிலையில் அணுகுவதிலும் தப்பில்லை. அவருக்கு வேறு புகல் இல்லை.

துண்டையெடுத்து செல்போனில் எண்களை அமுக்கினார்.

புவனேஸ்வரியே அழைப்புக்கு பதிலளித்தார். ‘இக்கட்டான இந்த நேரத்தில என்ன செய்விரோவெண்டு யோசித்துக் கொண்டு இருந்தன்.’

‘என்ன செய்யலாம், புவனேஸ்? போக இடமில்லாம நடுத் தெருவில நிக்கிறன்’ என்றார் சிவயோகமலர். அடக்கியிருந்தா லும் ஒரு விம்மல் துளி வெடித்துப் பறந்தது.

‘இந்த நேரத்தில ஆரால, என்ன செய்யேலும், மலர்? மூத்த வன் இல்லாமப்போன பிறகும், இயக்கத்திலயிருந்தானெண்டு இப்பவும் எங்களுக்குக் கஷ்ரம்தான் வந்துகொண்டிருக்கு. நட்ட நடு ராத்திரியில வீடு செக் பண்ண ஆமியும் பொலிசும் மாறி மாறி வாறாங்கள். இன்னொரு பக்கத்தால ஜே.வி.பி.-யின்ர தொல்லை. இந்த நிலமையில என்னால என்ன செய் யேலும், யோசிச்சுப் பாரும்.’

‘எனக்கு விளங்கிது, புவனேஸ். எண்டாலும், தன்னந்தனிய னாய் சூட்கேஸோட வந்து நடு றோட்டில நிண்டுகொண்டிருக் கிறன். லோங் ட்றிப் பஸ்களும் ஓடேல்லயெண்டு கதைக்கி றாங்கள், என்ர நிலமையையும் கொஞ்சம் யோசிச்சுப் பாரும்;

மௌனம் ஓடிக் களைத்தது சிறிது நேரம். அதன் பின்னால் தொடர்ந்தது புவனேஸ்வரியின் பதில். ‘இப்பிடிச் சொல்லுற னேயெண்டு கோவிக்காதயும், மலர். என்ர ரண்டு இளந்தாரிப் பிள்ளையளயும் காப்பாத்திற பொறுப்பு, அவரும் இல்லாமப் போன பிறகு, முழுக்க முழுக்க என்ர தலையில ஏறியிருக்கு. அதால; இப்ப இஞ்ச வரவேண்டாமெண்டு சொல்லமாட்டன்; உம்மட அந்தரமான நிலைமையை நினைச்சுச் சொல்லுறன்; இண்டைக்குமட்டும்; இஞ்ச வந்து நிக்கலாம் விடிய வெள் ளெண உம்மட வழியைப் பாத்துக்கொண்டு போயிடவேணும். இதுக்கு மேல என்னால எதுவும் ஏலா, குறை நினைக்காத யும். என்ர விலாசமிருக்கெல்லே;?’

அவள் போனை வைத்துவிட்டாள்.

அது ஓர் அவமானம்.

வரச்சொல்லிவிட்டுச் செய்கிற அவமரியாதை.

ஒரு யுத்த காலம் அதற்குமேல் இழகாதென்பதை சிவயோகம லரும் யோசிக்கும் நிலைமையிலில்லை. தான் அந்தரித்து

நின்ற சமயத்தில் ஆதரவு நல்கவில்லையென்பது பெருங்குறையாய், வளர்ந்து பெருங்கோபமாய், பின் அகங்கார வடிவெடுத்து உச்சமடைந்தது.

அப்போது எங்கிருந்தென்று தெரியாவண்ணம் திடீரென வந்து அவர் அங்கே தோன்றினார்.

அவள் எதிர்பார்க்கவில்ல. 'மாமா;!' நாடிகந்து அலைந்துழலும் ஓர் அகதி புகலொன்று கண்ட ஆசுவாசம் அக் கணத்தில் வெடித்து அவரில் பொங்கியது. 'நீங்கள் இஞ்சயெப்பிடி;?'

'என்ர விஷயமிருக்கட்டும். நீயேன் இப்பிடி நடுறோட்டில;?'

'லொச்சில வெளிக்கிடச் சொல்லியிட்டாங்கள். அதுதான் கர வெட்டி போக நிக்கிறன்.'

'நானும் கரவெட்டிதான் போகவேணும் ஆனா இண்டைக்குப் போகேலுமெண்டு நெக்கேல்லை˙ நாளை நாளையிண்டைக்கும் கஷ்ரமாய்த்தான் இருக்கும்போல கிடக்கு. நிலைமை சரியானோடன போவம் அதுமட்டும்; இடம் பிரச்சினையெண்டா என்னோட தங்கலாம்' என்றார்.

ஒருவேளை துரதிர்ஷ்டம் முந்தானையைப் பற்றிக்கொண்டு அவரைத் தொடராது இருந்திருந்தால், புவனேஸ்வரிக்கு போனெடுப்பதன் முன்னராக அந்தாளின் வருகை அங்கேயிருந்திருக்கும். அப்போது, சிவயோகமலரின் பதிலும் வேறாக இருக்க வாய்ப்பேற்பட்டிருக்கும். ஆனால் புவனேஸ்வரியின் பதிலில் சூடுபட்டுப்போயிருந்த சிவயோகமலருக்கு, அகங்காரத்தின் முன்மொழிவின்படி நடப்பதுதான் முடிந்திருந்தது.

'சரி.'

'சிங்கள றைவராயிருந்தாலும் தமிழ் தெரிஞ்சிருப்பாங்கள் அதால ஓட்டோவில ஒண்டும் கதைக்கவேண்டாம்' என்று அவள் காதில் ஓர் எச்சரிக்கையை முணுமுணுத்துவிட்டு பம்பலப்பிட்டியிலிருந்து வந்த ஓர் ஓட்டோவை நிறுத்தி சிவயோ-கமலரை ஏறச்சொன்னார். பின், தன் முதுமையின் இயலாமையையும் மீறி வேகமாய் உள்ளே பாய்ந்தார்.

சிவயோகமலர் பக்கப்பாட்டில் கடற்கரைவரை ஓடிய புவனேஸ்வரியின் வீடிருந்த தெருவை ஒருமுறை திரும்பிப்பார்த்தார்.

'கொயித, மாத்தயா?'

'பாணந்துற பஸ் ஸ்ராண்டக்க.'

ஓட்டோ பாணந்துறையை நோக்கிப் புறப்பட்டது.

அது சனியனின் திசையாக சிவயோகமலரறியாமலே ஆகிப் போயிற்று.



devakanthan@thaiveedu.com



# அவனைப் போன்ற இன்னொரு மனிதன்

- ஜியுன் லீ

தமிழில் : என். கே. மகாலிங்கம்

ஓவியம் : ஜீவா

ஃபஷன் சஞ்சிகைக்காக எடுத்த புகைப்படங்களில் உள்ள பெரும்பான்மையினரைப் பார்க்கிலும் அந்தப் பெண் அழகானவளாக இருக்கவில்லை. அவளுக்கு அழகாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றவும் இல்லை. அவள் புகைப்படத்தைப் பார்த்தவர்கள் எவரும் அப்படித் தான் சொல்வார்கள். அதே காரணத்தால் தான் ஆசிரியர் ஃபே உம் மேலும் பக்கங்களை திருப்பாமல் அவளை ஊன் றிப் பார்த்துக் கொண்டிருந்தார். அவளுக்குக் கட்டையாக வெட்டப்பட்ட, அடங்காத தலை முடி. அண்மையில் வைத்து எடுத்த புகைப்படத்தில் பெரிய கண்களால் கமெராவைக் கூசிக் கொண்டு பார்த்த பார்வை. இன்னொரு புகைப்படத் தில் படுக்கையறைக் கதவின் முன்னால் நின்று கொண்டிருந் தாள். கமெராவுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு. கைகள் கதவைச் சற்று தள்ளி திறந்து கொண்டிருந்தன. ஒரு கட்டி லும் அதன் மேல் விரிக்கப்பட்ட இளஞ்சிவப்பு நிற விரிப்பும் கலை நயத்துடன் அதன் பின்னால் மங்கலாக மறைக்கப் பட்டிருந்தது. அவள் அணிந்திருந்த கறுத்த ரீ சேட் கூர்மை யாகக் கவனப்படுத்தப்பட்டிருந்தது. அதில் வெள்ளை நிறத் தில் அச்சிடப்பட்ட எழுத்துக்கள் தெரிந்தன: 'என் அப்பா பன்றி அல்லது நாயிலும் பார்க்கிலும் குறைந்த ஓர் உயிரி னம். ஏனென்றால் அவர் பிறன்மனையாளை விழைபவர்.'

அந்தப் பெண்ணுக்கு வயது பத்தொன்பது. ஆசிரியர் ஃபே அந்தக் கட்டுரையிலிருந்து அதை அறிந்து கொண்டார். அவ ளுடைய பெற்றோர் மூன்று வருடத்திற்கு முன் விவாகரத்துப் பெற்று விட்டார்கள். இன்னொரு பெண் அவள் தந்தையை தன்வசப்படுத்திக் கொண்டாள் என்று அவள் சந்தேகப்பட் டாள். அந்தப் பெண் தந்தையின் மச்சாள் ஒருத்தி. அவள் தன்னுடைய பதினெட்டாவது வயதுப் பிறந்த நாளில் தந் தைக்கு எதிராக ஒரு வழக்கைத் தொடர்ந்திருக்கிறாள். பதி னெட்டு வயதின் பின் தான் சட்டரீதியாக வழக்குத் தொடர அனுமதி இருந்தது. அவள் செய்தியாளருக்கு விளங்கப்ப டுத்தியதன்படி தந்தை கொம்யுனிசக் கட்சியின் அங்கத்தவர். அவர் தன் குடும்பத்தைக் கைவிட்டதற்காக அவரைத் தண் டிக்க வேண்டும். மேலும் அவர் ஒரு வைப்பாட்டியை எடுத்த அந்த ஒழுக்கக் கேடான செயலுக்காக தண்டிக்கப்படவும் வேண்டும். தன் தந்தையைச் சிறையில் போட வேண்டும் என்ற அந்த முயற்சி தோல்வியடையவே அவள் ஒரு வலைப் பதிவைத் துவங்கினாள். அதற்கு 'துரோகம் இழைத்த கண வன்மார்களுக்கு எதிரான ஒரு போர்ப் பிரகடனம்' என்று தலைப்பும் வைத்தாள்.

'இந்தப் பைத்தியக்காரப் பெண்ணுக்கு என்ன வேணும்?' என்று ஆசிரியர் ஃபே உரத்துச் சொன்னார். அந்தப் பெண் அதற்கான பதிலைச் சொல்வதற்கு முன்பே அப்படிக் கேட் டார். தந்தை தொழிலை இழக்க வேண்டும். அதோடு தன் சமூக அந்தஸ்தையும் சுதந்திரத்தையும் இழக்க வேண்டும். முடிந்தால் தன் வைப்பாட்டியையும் இழக்க வேண்டும். அத் துடன் அவர் வந்து தன்னைத் திரும்பச் சேர்த்துக் கொள்ளும் படி தன் மனைவியிடமும் தன்னிடமும் கெஞ்ச வேண்டும். அவளும் மகள் என்ற ரீதியில் வாழ்நாள் முழுவதும் அவரை வைத்துக் காப்பாற்றுவாள். ஆனால் அவர் தன் மனம் திருந்தி மன்னிப்புக் கேட்க வேண்டும். அதற்கு முன் அவ ளும் தாயும் வருந்தியது போல அவரும் எவ்வளவு வருந்த முடியுமோ அவ்வளவு வருந்த வேண்டும்.

அவளுக்கு எத்துணை தீய நோக்கம் என்று ஆசிரியர் ஃபே எண்ணி, அறையின் எதிர்ப்பக்கம் அந்தச் சஞ்சிகையை கோபத்துடன் வீசினார். அப்போது அவருடைய புத்தக அலு மாரியிருந்து ஒரு படம் விழுந்தது. தனக்கு சடுதியாக வந்த கடும் கோபத்தை எண்ணி அவர் ஆச்சரியப்பட்டார். தன் அறுபத்தாறு வயதில் அர்த்தமற்ற உணர்வெழுச்சிகளுக்கு இடம் கொடுக்காமல் உலகத்தில் பலவற்றைக் கண்டு விட் டேன் என்று அவர் நினைத்திருந்தார். அப்போது அது பால் காரனா என்று அவருடைய தாயார் வீட்டின் முன் கூடத்திலி ருந்து கேட்டாள். பால்காரர்கள் பேஜிங்கில் பல காலத்துக்கு முன்னரே இல்லாமல் போயிருந்தனர். இப்பொழுது கடைக ளின் பால் தாராளமாகக் கிடைக்கின்றது. தாய் தொண்ணூறு வயதை எட்டியிருந்தாள். தனக்குக் கூப்பனுக்குக் கிடைத்த இரண்டு போத்தல் பாலை அயலவரோ வழிப்போக்கரோ எடுத்துக் கொண்டு போய் விடுவார்களோ என்று இப்பொழு தும் பயப்பட்டாள். அவர்களுக்குக் கிடைத்த இரண்டு போத் தல்களைத் திருப்பிக் கொடுக்காததால் அவர்களுக்கு தண் டம் விதிக்கப்பட்டது. அது அவளுக்கு நினைவிருக்கிறது. ஆசிரியர் ஃபே உள்ளே நுழைந்தபோது அவள் அப்படிக் கேட்டாள். அவள் அப்போது பழைய சாய்மனைக் கதிரை யில் கிடந்தாள். அந்தக் கதிரையில்த்தான் ஃபேயின் தந்தை யும் கடைசி நாட்களில் கிடந்தார். தாய் சொன்னதை அவர் காது கொடுத்துக் கேட்கவில்லை. ஆனால் அவள் கேட்ட



கேள்வி அவர் நெஞ்சில் மனப்பாடமாக இருந்தது. அவர் ஓம் என்றார். அந்த போத்தல்கள் அங்கே வைக்கப்பட்டவுடன் அவர் அவற்றை எடுத்து குளிர் தண்ணீர் பேசினிக்குள் வைத்து விடுவார். பால் கெட்டுப் போகாமல் இருப்பதற்காக அப்படிச் செய்ய வேண்டும் என்று அவள் அவரைக் கட்டாயப்படுத்தி இருந்தாள். அவர் அவளுக்கு முன்னால் நின்று அவளின் கைகளைத் தடவி அவற்றை மடித்து அவள் மடியில் வைத்தார். எதைப்பற்றியும் கவலைப்படத் தேவையில்லை என்று அவளை ஆறுதல் படுத்தினார். தன் மெலிந்த விரல்களால் அவருடைய விரல்களைச் சுற்றிப் பிடித்து. 'இந்த உலகத்தைப் பற்றிச் சொல்ல எதுவுமில்லை,' என்றாள் மெதுவாக.

'எனக்குத் தெரியும்,' என்றார் ஆசிரியர் ஃபே. குனிந்து அவளுடைய கைகளைப் பற்றி அவள் மடியில் திரும்பவும் வைத்தார். 'பாலைக் கொஞ்சம் சூடாக்கித் தரவா?' என்று கேட்டார். அதற்குள் அவள் தன்னுடைய பகற்கனவுக்குள் ஆழ்ந்துவிட்டாள் என்பதை அவர் கண்டார். அது அவள் மனதை சிறிது நேரத்திலேயே சுத்தப்படுத்தி விடும். சிலவேளைகளில் அவளுடைய சுருங்கிக் கொண்டு போகும் தசைகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக அவளை மெல்ல அடி எடுத்து வைக்கத் தூண்டி நடக்கப் பயிற்சி கொடுக்கவும் ஊக்கப்படுத்துவார். ஒரு சில ஆண்டுகளின் முன்னால் அவளுடைய உலகம் அரை மைல் தூரத்திற்கு அப்பால் இருந்த பூங்காவிற்கு நடந்து போய் வருவதாக மட்டுமே இருந்தது. பிறகு அடுக்ககத்திற்கு மறுபுறம் இருந்த கல் மேசைக்குப் போய் வருவதாக மட்டும் சுருங்கி விட்டது. இப்போது அது அவர்களின் ஐந்தாவது மாடியிலுள்ள பல்கனி வரை மட்டுமாகச் சுருங்கி விட்டது. ஆசிரியர் ஃபே காலப் போக்கில் தன் தாயை இந்த அடுக்ககத்தில் அமைதியாகச் சாவதற்கு விடுவார் என்பது உண்மை. அவளுக்கு அந்நியர்களை பிடிக்காது. மருத்துவமனையிலுள்ள நெருக்கமாக இருக்கும் கட்டில்கள் ஒன்றில் தாய் படுத்திருப்பதை அவரால் கற்பனை செய்து பார்க்க இயலவில்லை.

ஆசிரியர் ஃபே தன் படிப்பறைக்குச் சென்றார். அந்த அறை தான் தந்தை சாகும்வரை அவருடைய இராச்சியமாக இருந்தது. அவருடைய தாயார் அந்த அறைக்குப் போவதை பல காலத்திற்கு முன்பே நிறுத்தி விட்டாள். அதனால் ஆசிரியர் ஃபே தான் தட்டுக்களில் இருந்த புத்தகங்களை பாதுகாத்து வந்தார். அவற்றை எடுத்து மஞ்சளாகிப் போய்க் கொண்டிருக்கும் பக்கங்களை வருடத்திற்கு இரண்டு முறை பல்கனியில் வைத்து காற்றில் உலர வைப்பார். இருந்தும் சில புத்தகங்கள் மிகவும் பழசாகிப் போனதால் அவற்றை அவரால் காப்பாற்ற இயலவில்லை. அவற்றுக்குப் பதிலாக அவர் இப்போது வாங்கும் ஃபஷன் சஞ்சிகைகளை அவ்விடத்தில் வைப்பார்.

நிலத்தில் விரித்துக் கிடந்த சஞ்சிகையில் இருந்து, கறுப்பு சட்டை அணிந்த அந்தப் பெண் அவரைக் குத்திப் பேசித்

தொந்தரவுக்குள்ளாக்கிக் கொண்டிருந்தாள். அதைத் தூக்கி மேசையில் கவனமாக வைத்தார். அதன்பின் மேசையின் இழுப்பறைக்குள்ளிருந்த மைக்கூட்டைத் தடவி எடுத்தார். மையைக் கன காலம் அவர் பாவிக்கவில்லை. சஞ்சிகையின் அந்தப் பக்கத்தின் ஓரத்தில் தேள் ஒன்றை வரைந்தார். அதன் கொடுக்குகள் அந்தப் பெண்ணின் கண்களை குத்த அருகில் சென்றன. அவர் சித்திர ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்று ஆறு ஆண்டுகளாகிவிட்டன. சுய விருப்பப்படி வரைந்து ஏறக்குறைய நாற்பது ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர் தான் வரைந்ததைப் பார்த்தார். அவர் கைகள் ஒரு முதியவரின் நடுங்கும் கைகளைப் போல இருக்கவில்லை. அந்தத் தேளை வரையாமல் அந்தப் பெண்ணை கணுக்கா லியாக வரைந்திருக்கலாம். அப்படியான செயல் அவரின் தரத்தைக் குறைத்துவிடும். ஏனென்றால் ஆசிரியர் ஃபே எந்த ஒரு பெண்ணையும் சபித்தது கூட இல்லை. வார்த்தைகளால் மட்டுமல்ல, எந்தவிதமான செயல்களாலும். அத்துடன் ஒரு பெண்ணை கேலியாக வரைந்து அதைத் துவங்க அவர் விரும்பவில்லை.

அயலவரான திருமதி லூாவோ அவருடைய தாயாரைக் கவ னிக்க வந்தாள். அவள் நாற்பது வயதுகளில் உள்ள ஒருத்தி. அவள் உள்ளூரிலிருந்த மின்னணுத் தொழிற்சாலை யிலிருந்து தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தாள். அவள் வந்தவுடன் அண்மையிலிருந்த இணையத்தள கஃபேக்கு ஆசிரியர் ஃபே சென்றார். அப்போது நேரம் இரண்டு மணியைக் கடந்திருந்தது. அந்த நேரம் கஃபேயில் ஆட்கள் நடமாட்டம் குறைவாகவே இருந்தது. மேலாளன் சூடான வெயிலில் தூங்கி வழிந்து கொண்டிருந்தான். ஒரு சில நடுநிலைப்பள்ளி மாணவர்கள் ஒரு கணினியைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள். அதிகம் கூடினால் பன்னி ரண்டோ பதின்மூன்றோ வயதினராக இருப்பார்கள். அடங் கிய குரலில் கதைத்துக் கொண்டிருந்தார்கள். இடைக்கிடை கெக்கிலி கொட்டிச் சிரித்தார்கள். ஆசிரியர் ஃபேக்கு இப்படி யான மாணவர்களைப் பற்றித் தெரியும். அவர்கள் தங்கள் செலவுக்குக் கிடைத்த சில்லறைகளை ஒன்றாகச் சேர்த்துக் கொண்டு பள்ளிக்குக் கள்ளம் அடிக்கிற நேரத்தில் அரட்டை அறையில் தங்கள் நேரத்தைச் செலவழிப்பார்கள். பிடிபடா மல் இருப்பதற்காக தங்கள் வயதை ஆள்மாறாட்டம் செய்து கூட்டிச் சொல்லியிருப்பார்கள். அப்படிப்பட்ட மோசடி பண் ணும் மற்றவர்களுடன் அவர்கள் சேர்ந்தும் கொள்ளுவார்கள். ஆசிரியர் ஃபேயும் தன் பாடசாலைக் காலத்தில் வகுப்புக ளுக்குச் செல்லாமல் உல்லாசமாக இருப்பதற்காக கள்ளம் அடித்துவிட்டு தன் நண்பர்களுடன் சேர்ந்து திரிந்தவர்தான். வசந்த காலத்தில் புல்வெளிகளிலும், இலையுதிர்கால காடு களிலும் திரிந்தவர். ஐம்பது ஆண்டுகளில் கணினியைச் சுற்றி வரும் இந்தப் பிள்ளைகள், இயந்திரங்களில் புனையப் பட்ட உலகத்தையா கடந்த கால ஏக்க நினைவுகளாகத் தங் கள் மனதில் பதிந்து வைத்திருப்பார்கள் என்று ஆசிரியர் ஃபே நினைத்தார். அழகான ஏப்ரில் மாத பிற்பகலை அந்த மாணவர்கள் கவனிக்காமல் இருப்பதற்கு யாரைக் குற்றம் சாட்டுவது? ஆசிரியர் ஃபே திருமதி லூாவோவை ஒரு மணி நேரம் தன் தாயைப் பார்த்துக் கொள்வதற்காகக் கூலிக்கு அமர்த்தியருந்தார். அப்போது நடைப்பயிற்சி செய்வதற்கு அது உதவியாக இருக்கும் என்று நினைத்தார். ஆனால்



ஜியுன் லீ - 1972-இல் சீனாவின் பெஜிங்கில் பிறந்தார். அமெரிக்காவிற்குக் மேற்கல்வி கற்பதற்காக 1996-இல் வந்தார். அவரின் தாய் ஓர் ஆசிரியை. தந்தை அணு இயற் பியலாளர். இவர் பெஜிங் பல்கலையில் பி.எஸ். பட்டம் பெற்றார். மக்கள் விடுதலை இராணுவத்தில் ஓராண்டு கட்டாய சேவை யில் கடமை ஆற்றினார். 2000-ஆம் ஆண்டு ஐயோவா பல்கலையில் எம்.எஸ். பட்டம் பெற்றார். பின் ஐயோவா பல்கலையில் புனைவு, அபுனைவில் எம்.எவ்.ஏ பட்ட மும் பெற்றார். இவருடைய குறிப்பிடத்தக்க புனைவு கள்: A Thousand Years of Good Prayers, The Vagrants, The Book of Goose.

அவர் இணையத்தளத்தை கண்டுபிடித்த பின்னர் திருமதி லூாவோ வேலை செய்யும் நேரத்தை அதிகரித்தார். இப்பொ ழுது அவள் பிற்பகல்களில் மூன்று மணி நேரம் தாயைக் கவனிப்பதற்கும் அவர்கள் இருவருக்குமாகச் சமைப்பதற்கும் செலவிடுகிறாள். இணையத்தள கஃபே மேலாளன் ஆசிரியர் ஃபே ஒரு கணினியை சொந்தமாக வாங்கி வைத்திருப்பது நல்லது என்று அவருக்கு ஆலோசனை வழங்கினான். அதைப் பூட்டித் தருவதற்கும் அவன் முன் வந்தான். அது தனக்கு நட்டம் என்றாலும் ஒரு நல்ல வாடிக்கையாளன் பணத்தைச் சேமித்தால் அது தனக்கு மகிழ்ச்சியை அளிக் கும் என்று நினைத்ததாகச் சொன்னான். ஆசிரியர் ஃபே அந்த தாராள உதவியை நிராகரித்தார். தாய் யதார்த்தத்தின் பிடியிலிருந்து படிப்படியாக நழுவிக் கொண்டிருந்தாலும் அவளின் முன்னிலையில் எந்த விதமான நேர்மையீனமான செயலையும் அவர் செய்ய விரும்பவில்லை.

ஆசிரியர் ஃபே அந்தப் பெண்ணின் வலைப்பதிவை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் கண்டு பிடித்து விட்டார். அங்கே அவளுடைய பல படங்கள் இருந்தன. சில படங்கள் அவளு டைய தாயாருடன் எடுத்தவை. முதிய தாய் கமெராவுக்கு முன் நிற்பதற்கு அசௌகரியப்பட்டாள். அதை எவரும் எளி தாகக் கண்டு பிடித்து விடலாம். அவளுடைய மகள் இன்றி ருப்பதைப் பார்ப்பதிலும் பார்க்க தாய் அவளுடைய இள மைக் காலத்தில் மிகவும் கவர்ச்சியாக இருந்திருப்பாள் என் பது தெரிந்தது. ஆனால் தாயின் முகத்தில் தெரிந்த தன்னம் பிக்கையின்மையினால் தான் அவளுடைய முகத்தோற்றத்தி லுள்ள சில அம்சங்கள் மென்மையாகத் தெரிந்திருக்கலாம். அவளுடைய மகளைப் பொறுத்தவரையில் அவளுடைய பெரும் கோபம் முகத்தில் அதிக தாக்கத்தைச் செலுத்தியி ருக்கலாம். 'மகிழ்ச்சியான நாட்கள்' என்ற தலைப்பின்கீழ் ஆசிரியர் ஃபே அந்தக் குடும்பப் புகைப்படத்தைக் கண்டார். அதில் இருந்த அந்தச் சிறுமிக்கு மூன்றோ நாலோ வயது இருக்கலாம். அவள் உயர்ந்த முக்காலியில் இருந்தாள். அவளுடைய பெற்றோர் அவளுக்கு இரு பக்கமும் நின்றார் கள். அவர்களுக்கு பின்னாலிருந்த சுவரில் ஒரு தோட்டம் இருந்தது. அதை அதிக ரசனை இல்லாத ஓர் ஓவியன் வரைந்திருந்தான். ஆசிரியர் ஃபேயால் அதை உடனேயே சொல்ல முடியும். சிறுமி பற்கள் அதிகம் இல்லாத வாயால் சிரித்துக் கொண்டிருந்தாள். தாய் அடக்கமாக புன்னகைத்துக்

கொண்டிருந்தாள். திருமணம் முடித்த பெண் ஒருத்தி புகைப் படக்காரனின் முன் அப்படித்தான் நிற்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது போல. தந்தையும் அழகானவனாக இருந்தான். சிறப்பான வடிவத்திலுள்ள கன்ன எலும்புகளும், சீனர்களுக்கே இருக்கும் ஆழ்ந்த இரு கண்களும் கொண்ட வனாக இல்லாமல் இருந்தான். ஆனால் வலிந்து வரவ ழைத்த அவனுடைய புன்முறுவலும் கண்களில் தெரிந்த சோர்வும் அவர்களின் திருமணம் மகிழ்ச்சியற்றது என்று மகள் சுட்டிக் காட்டியது போல தெரிந்தது.

ஆசிரியர் ஃபே தலையை ஆட்டி விட்டு அந்த மனிதனின் பெயரையும், முகவரியையும் வீட்டின் தொலைபேசி இலக்கத் தையும், வேலைத்தளத்தின் முகவரியையும் ஒரு சிறு துண் டில் குறித்து வைத்தார். அவை எல்லாவற்றையும் அந்தப் பெண் ஒரு பட்டியலில் இட்டிருந்தாள். அவள் தந்தையின் குடியிருப்பாளர் உருவப் படமும் அதில் காட்சிப்படுத்தப் பட்டிருந்தது. ஆசிரியர் ஃபே அந்த மனிதனின் வயதைக் கணித்துப் பார்த்தார். நாற்பத்தாறு. அதையும் தாளில் குறித் துக் கொண்டார். அந்தப் பெண்ணின் வலைத்தள அறிவிப் புப் பலகைக்குச் சென்று பார்த்து அதில் அண்மையில் பதிவு செய்யப்பட்ட சில இடுகைகளையும் வாசித்தார். அதில் அவளில் அனுதாபப்பட்ட சில பெண்கள் தாங்களும் அப்படியாகத் துரோகம் இழைக்கப்பட்ட கணவன்மாராலோ கைவிடப்பட்ட தந்தைமாராலோ புண்பட்டவர்கள் என்று எழு தியிருந்தனர். 'அன்பான குழந்தையே,' என்று ஓர் இடுகை துவங்கியது. 'இன்னொரு துரோகம் இழைக்கப்பட்ட மனைவி' என்று தன்னை அழைத்த ஒரு பெண் எழுதியிருந்தார். அவள் அந்த இளம் பெண்ணை, 'துணிந்த நீதி தேவதை' என்று புகழ்ந்திருந்தாள். அந்தப் பெண்கள் அவளின் தந்தை யின் தொலைபேசி இலக்கத்தை அழைப்பார்கள் அல்லது தடித்த பதாகைகளில் கண்டன வார்த்தைகளை எழுதி அவற் றைத் தூக்கிக் கொண்டு அவனுடைய வேலை இடத்திற்குச் சென்று ஆக்ரோஷமாக நாலா பக்கமும் வீசிக் காட்டுவார்கள் என்று ஆசிரியர் ஃபே கற்பனை செய்தார். 'இந்தப் பைத்தி யக்கார இளம் பெண்ணின் காரியத்துக்கு ஆதரவு கொடுப்ப வர்கள் அனைவருக்கும்' என்று அவர் இணையப் பக்கத்தின் அடிப்பகுதியிலுள்ள பெட்டியில் தட்டச்சுச் செய்தார். 'அவசர மான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தாமல் உண்மை யைக் கண்டு கொண்டால் உலகம் நல்லதொரு இடமாக இருக்கும்,' என்று எழுதினார்.

'அக்கறையுள்ள ஒருத்தன்,' என்று ஆசிரியர் ஃபே அந்தச் செய்தியின் இறுதியில் கையொப்பம் இட்டார். இந்தப் பெண் களால் வெவ்வேறு கருத்துக்களைக் கேட்க முடியாது. ஆனால் மூளை உள்ள ஒருத்தன் உண்மையைத் தெரியப்ப டுத்தவே வேண்டும். அந்த இணைய கஃபேயில், நடுப்பள் ளியில் கற்கும் கூட்டத்தில் உள்ள ஒரு மாணவி ஆசிரியர் ஃபேயைப் பார்த்து தன் தோழியின் காதில் எதையோ குசுகு சுத்தாள். அவளும் அவரை ஏளனமாகப் பார்த்து விட்டு திரும்பவும் கணினித் திரையைப் பார்ப்பதில் ஆழ்ந்தாள். தலைமுடி இல்லாத சுருக்கங்கள் விழுந்த முதியவர் என்று தான் ஆசிரியர் ஃபேயை அந்தச் சிறுமிகள் நினைத்திருப் பார்கள் என்று அவர் கற்பனை செய்தார். அத்துடன், சலிப் பைத் தருபவன் அதேவேளை சலிப்படைந்தவன் என்றும் எவ் வகையாலும் விரும்பப்படாதவன் என்றும் நினைத்திருப்பார் கள். இணையத் தளத்தில் அந்தச் சிறுமிகளின் இதயங்க ளைத் துடிக்க வைத்துக் கொண்டிருக்கும் அந்த வசீகரமான இளைஞன் எங்கே? இழிவான இந்த முதியவன் எங்கே? என்று நினைத்திருப்பார்கள்.

அன்று மாலை ஆசிரியர் ஃபே ஒரு கதகதப்பான துண்டை வெந்நீரில் அமிழ்த்தி பிழிந்து தன் தாய்க்குக் கொடுத்தார். தாய் திரைக்குப் பின்னால் ஒரு கட்டிலில் இருந்து கொண் டிருந்தாள். சற்று உடல் தெரிய ஆடை அணிந்த அவளை யும் அவரையும் அந்தத் திரை மறைத்தது. அப்போது அவர் அந்த இரண்டு சிறுமிகளையும் அவர்களின் இளமை அவர்க ளுக்கு கொடுத்த அலட்சிய மனோபாவத்தையும் நினைத்துக் கொண்டார். எதிர்நோக்கப் போகும் ஏமாற்றங்களை எல்லாம் கடந்து அவர்கள் உயிர் வாழ்ந்தால் தங்கள் இளமையற்ற முதிய உடலில் தான் அவர்களும் வாழ வேண்டி இருக்கும் என்று எண்ணினார்.

'உனக்கு காப்பென்ரர் சாங்கை நினைவிருக்கிறதா?' என்று திரைக்கு மறுபுறம் இருந்து ஆசிரியர் ஃபேயிடம் தாய் கேட் டாள். கிழமைக்கு மூன்று முறை திருமதி லூாவோ ஆசிரியர் ஃபேயின் தாயைக் குளிப்பாட்டி விடுவாள். மற்ற மாலைக- ளில் அவருடய தாய் திரைக்குப் பின்னால் இருந்து பூப்பஞ் சுத் துண்டால் தன்னைத் துடைத்து கழுவுவதுடன் அந்த வேலை முடிந்து விடும். அதற்கு அவர் உதவி செய்வார். அப்பொழுது நீண்ட காலத்திற்கு முன் இறந்தவர்களைப் பற்றி அவள் நினைவு கூருவாள். மகன் அதைக் கேட்டுக் கொண்டிருப்பான். சிலவேளை அரை மணி நேரம், சில வேளை ஒரு மணி நேரம் அப்படி செலவாகும். திரைக்கு மறுபுறம் இருந்து தாய் கழுவிக் கொண்டும் கதைத்துக் கொண்டும் இருப்பாள். சிலவேளை அவள் மறுபுறம் இருந்து இன்னும் விபரமாகச் சொல்லச் சொல்லி அவனை கட்டாயப் படுத்துவாள். இந்த நேரத்தில் தான் அவர்கள் இருவரும் அதிகம் கதைப்பார்கள். தாயின் உடம்பு பலவீனமாக இருந் தபோதிலும் அவளுடைய மனம் நினைவுகளால் ஒன்றுக்குள் ஒன்று குழம்பி இருந்தபோதிலும் அவள் இன்னும் அதே வசீ கரமான பெண் தான். அவள் நிதானமாக அவசரப்படாமல் கதை சொல்லும் போது, சங்கடமானவற்றைக் களைந்து விடு வாள். வாழ்நாள் முழுவதும் மணமாகாத வளர்ந்த மகனான ஆசிரியர் ஃபே அவளைக் கவனித்துக் கொள்ள வேண்டியி ருந்தது.

வயது முதிர்ந்த காலத்தில் தன் ஒரேயொரு துணை தன் தாயாகவே இருக்க வேண்டி இருக்கும் என்று ஆசிரியர் ஃபே கற்பனை செய்திருக்கவில்லை. ஆனால் அதை எந்தப் புகா ரும் இல்லாமல் இப்போது அவர் ஏற்றுக்கொண்டு விட்டார். அவளுடன் உரையாடுவதில் மகிழ்ச்சி அடைந்தார். அப் போது உலகத்தில் மறந்து போன பழையவை எல்லாம் அவள் ஆழமற்று உள்ளிழுக்கும் காற்றைப் போல வெளியே வரும்: ஒரு கதையில், முடி திருத்தும் இடத்தில் வாடிக்கை

யாளர்களின் வியர்வையை நீக்கி புத்துணர்ச்சி கொடுப்பதற்காக இரண்டு பணியாளர்கள் மிகப்பெரிய அட்டை விசிறியை மேலும் கீழும் இழுப்பார்கள். அப்போது அவளுடைய பாட்டனார் தினமும் செய்யும் சவரத்திற்காகக் காத்துக் கொண்டு கடற்கரையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருப்பார். அதை இளைஞனான ஃபே அவளுக்குக் கண்ணடித்து காட்டுவான். அவளுடைய தந்தை வீட்டின் முன்மண்டபத்தில் மிதிகட்டையை உதைக்க ஓடும் ஓர் இயந்திரத்தைப் பூட்டியிருந்தார். அந்த இயந்திரம் நீளமான குழாய் வடிவான சூடான மென்மையான ரொஃப்பி மிட்டாயை சிறு சிறு கன சதுரத் துண்டுகளாக வெட்டும். அவை கடினப்பட்டவுடன் அவற்றை செலோபேன் தாளில் அவளும் அவளுடைய நாலு சகோதரிகளும் சுற்றுவார்கள். அவளுடன் ஒரு காலத்தில் விளையாடிய அவளுடைய மச்சாள்மார்களும் அங்கே வேலை செய்தார்கள். அவளுடைய பெற்றோர் அவர்களுக்கு உணவளித்து, உடை கொடுத்து, அவளுடன் பாடசாலைக்கும் அனுப்பி வளர்த்தார்கள். ஆனால் அவர்கள் வளர்ந்து ஆளாகியவுடன் அவர்களைக் குழந்தைத் தொழிலாளிகளாக அவளுடைய முதலாளித்துவ தந்தை சுரண்டினார் என்று சொன்னார்கள். ஆசிரியர் ஃபேயின் தந்தைக்கு அவளுடன் நடந்த திருமணத்திற்கு அந்த நாட்களில் நன்கு அறியப்பட்ட அறிஞர்கள் பலரும் கலந்து கொண்டார்கள். ஆனால் அந்தத் திருமணம் பொருத்தமில்லாதது என்று அவளுடைய தாயும் உறவினரும் புலம்பினார்கள். அப்படிப் பல கதைகள்.

ஆசிரியர் ஃபேயின் தந்தை தான் அவளுக்குப் பேசி வந்த மணமக்களிலேயே வயது கூடியவரும் வறுமையானவரும். அவளிலும் பார்க்க இருபது வயது கூடியவர். உயர் வர்க்கத்தினர் கற்கும் பள்ளியில் பகுதி நேர ஆசிரியராகவும் வேலை செய்தார். அங்கே தான் அவளும் அவளுடைய சகோதரிகளும் கல்வி கற்றார்கள். அவரை அவள் முதலில் நிராகரித்த போது பெயர் பெற்ற ஓர் அறிஞர் அவளுக்கு மணமகனுக்காக ஒரு கடிதம் எழுதினார். அந்தப் பதினாறு வயதுச் சிறுமியின் புரிதலுக்கு அப்பாற்பட்டதாக அது இருந்தது. ஆசிரியர் ஃபேயின் தந்தை நாட்டில் மிகவும் முக்கியமான தத்துவவாதியாக வருவார் என்றும் இறக்கும்வரை அவளில் பிரியமானவராக, அர்ப்பணிப்புள்ள கணவராக இருப்பார் என்றும் எழுதியிருந்தார்.

அறிஞரைத் திருப்தி செய்யத்தான் ஆசிரியர் ஃபேயின் தந்தையை தாய் மணம் முடிக்க சம்மதித்தார் என்பதை ஆசிரியர் ஃபே எப்போதுமே சந்தேகப்பட்டார். ஒரு வருடத்திற்குள் அவர்கள் இருவரும் மணம் முடித்தார்கள். அதன் பிறகு ஆசிரியர் ஃபேயின் தந்தை ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு பதவி எடுக்க முன்பே அவரின் தாயார் தன் சீதனத்தை உபயோகித்து கிராமப்புறத்தில் இருந்த கணவனின் பெற்றோருக்கும் சகோதர சகோதரிகளுக்கும் உதவி செய்தாள். அவளால் குழந்தை பெற்றுக் கொள்ள முடியாதபோது ஒரு ஆண் குழந்தையை சுவீகாரம் எடுத்துக் கொண்டாள். அது தான் ஆசிரியர் ஃபே. தன் கணவனின் குடும்பத்தில் வந்த மச்சான்மார், உடன்பிறவாச் சகோதரர்கள், சகோதரிகள் உள்ள நீண்ட வரிசையில் ஒருத்தர் தான் ஆசிரியர் ஃபே. அந்தக் குடும்பம் திரும்பத் திரும்ப கட்டப்பட்ட சுற்று மதிலுக்குள் நாலு பரம்பரையாக ஒன்றாக வாழ்ந்து வந்தது. அந்த உண்மையை ஆசிரியர் ஃபேயின் தாய் ஒருபோதுமே மறைக்கவில்லை. எட்டு வயதில் அவருடைய அப்பாவின் சொந்தக் கிராமத்திற்கு ஒருமுறை போனபோது அவர் மட்டுமே தன் உறவினரிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்டிருந்தார் என்ற உண்மையை ஃபே அறிந்து கவலை அடைந்தார் என்பது அவருக்கு நினைவிருக்கிறது. அவருடைய உறவினர்கள், உண்மையான பெற்றோர் உட்பட அவர்களை மரியாதையுடனும் ஏன் பிரமிப்புடன் கூட நடத்தினார்கள். இரண்டு சோடிப் பெற்றோரும் இரண்டு உலகமும் அவருக்குக் கிடைத்தது அதிர்ஷ்டம் என்று அவருடைய உண்மையான தாய் அவரை ஆறுதல் படுத்தினாள்.

ஒரு கணம் தாய் தன் பகற்கனவில் தோய்ந்து போய், பாவம் அவன் என்று சொன்னாள். ஆசிரியர் ஃபே பழிவாங்கும் அந்த மகளைப் பற்றி தன் தாயிடம் சொல்லி இருக்கிறேனா என்று நினைத்தார். ஆனால் தாயார் இன்னும் அந்தத் தச்சனைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பது நினைவுக்கு வந்தது. அந்தத் தச்சன் தன் குழந்தைகளுக்கு ஐந்து சவப்பெட்டிகளைச் செய்திருக்கிறான். அவர்கள் அத்தனை பேரும் ஒரு கிழமைக்குள் ரைஃப்பொயிட் காய்ச்சலால் இறந்திருக்கிறார்கள். அந்தத் தச்சனின் மனைவிதான் ஆசிரியர் ஃபேய்க்கு தன் உண்மையான தாயைப் பிரிந்து இந்த வீட்டுக்கு வருவதற்கு முன்பு பால் கொடுத்த செவிலித் தாயாக இருந்திருக்கிறாள். அதை அவன் ஒரு முறை கிராமத்திற்குச் சென்றபோது அறிந்தான். அந்தப் பெண் சித்த சுவாதீனமடைந்து கிழவியாகப் போன பின்னரும் பலருக்கும் சொல்லி வந்திருக்கிறாள். அதை ஆசிரியர் ஃபே பத்து வயதாக இருந்தபோது அறிந்து கொண்டார். அப்படிப்பட்ட அப்பாவிகள் தான் வாழ்க்கையின் கொடூர விதிக்கு அடிக்கடி இரையாகி இருக்கிறார்கள் என்று ஆசிரியர் ஃபே தன் தாய்க்குப் பதிலளித்தார். தாய் அதற்கு பதில் எதுவும் சொல்லாதபோது அந்தச் சஞ்சிகையிலிருந்த சிறுமியின் கதையை அவளுக்குச் சொன்னார். அப்போது அவனுடைய தாய் பஜாமா அணிந்திருந்தாள். யன்னல் திரையை இழுத்து விட்டார். அவர் தான் சொன்ன கதையை ஒரு கணம் நிறுத்தினார். எல்லாமே கனவுலகத்தில் தான் நடக்கிறது என்றாள். அவர் சொன்ன கதை அவளுக்குக் கேட்டதா என்பது அவருக்குத் தெரியவில்லை. ஆனால் அவளைக் கட்டிலில் கிடத்தி போர்த்து விட்டபோது தலையணையில் கிடந்து அவரைப் பார்த்து, ‘அந்தச் சிறுமியை நினைத்து நீ வருத்தப்படாதே,’ என்றாள்.

தான் வருத்தப்படவில்லை என்று பதிலளித்தார், ஆசிரியர் ஃபே. அந்தப் பெண்ணின் வெறுப்பு மிகவும் அசாதாரணமானது என்று எண்ணுகிறேன் என்றார். தாய் தன் தலையை சற்று ஆட்டி விட்டு கூரையைப் பார்த்தாள், அவனுடைய பொய்யை எதிர்கொண்டு அவனுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தாது இருப்பதற்காக அப்படிப் பார்த்தாள். ‘பலவீனமான மனதுள்ளவர்கள் தான் வெறுப்பை தெரிவு செய்கிறார்கள். அதுதான் மிகவும் குறைந்தளவான நோவைக் கொடுப்பது,

இல்லையா?' என்றாள்.

களைத்துப் போனவள் போல தன் கண்களை மூடிக் கொண்டாள். இந்த நாட்களில் அரிதாகவே அவள் அப்படித் தெளிவாக உரையாடுகிறாள். இந்த உலகம் அவளுக்கு அத்தனை சுவாரசியமாக இல்லாததால் அதை அலட்சியப்படுத்த முடிவு செய்துவிட்டாளா என்று அவர் வியந்தார். அவள் பேசும் வரை காத்திருந்தார். அவள் கண்களைத் திறக்காததால் சுகமான தூக்கம் வரட்டும் என்று சொல்லி விட்டு கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த விளக்கை அணைத்தார்.

'பலவீனமான மனம் படைத்தவர்கள் தான் வெறுப்பைத் தங்கள் ஆயுதமாகத் தெரிவு செய்கிறார்கள்,' என்பதை ஆசிரியர் ஃபே தன் நாட்குறிப்பில் அன்றிரவு எழுதி வைத்தார். பல வருடங்களாக தன் தாயின் சொற்களை குறித்து வைப்பது அவரின் வழக்கம். 'இந்த உலகத்தைப் பற்றி எனக்குச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை.' அதையும் எழுதி வைத்தார். அந்த வரியே அவர் அதிகம் எழுதி வைத்த வரி. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவருடைய தந்தை தன் சாய்மனைக் கதிரையில் நாள் முழுவதும் இருந்து ஆழ்ந்து சிந்தித்திருந்தார். அவரும் அதையே சொன்னார். ஒரு போத்தல் நித்திரை மாத்திரைகளைச் சாப்பிட்டு அவர் இறப்பதற்கு முன் சொன்ன கடைசி வார்த்தைகளும் அவைதான். ஆசிரியர் ஃபேயின் தாய் அன்று மாலை அவரை அழைத்து தந்தையின் இறப்பை அறிவித்தபோது அவள் அதைக் கவலையுடன் தெரிவித்ததாகவோ அழுததாகவோ தெரியவில்லை. அவள் அந்தத் தற்கொலைக்கு நேரடியான உடந்தையாக இல்லாவிட்டாலும் குறைந்தது அவளுக்கு அந்த தற்கொலை திட்டம் தெரிந்திருக்க வேண்டும் என்று ஆசிரியர் ஃபே சந்தேகித்தார். இரு புறமும் பார்த்தாலும் அதில் எது வித வித்தியாசமும் இல்லை. ஏனென்றால் அவர்களின் திருமண பந்தத்தில் இருந்த உறவு எப்பொழுதோ போய் விட்டது. ஆனால் ஆசிரியர் ஃபேயை ஆச்சரியப்படுத்தியது என்னவென்றால் அவருடைய தாய் மேலும் வாழ்வதற்கு விரும்பியதுதான். தந்தையின் மரணத்திற்குப் பின் அவளைப் போய்த் தினமும் அவர் பார்த்து வந்தார். ஒரு வருடத்திற்குள் அவளுடன் போய்ச் சேர்ந்து வாழவும் வெளிக்கிட்டார். அவளுடைய அனைத்து அர்த்தமுள்ள வசனங்களையும் பதிவு செய்யவும் அவற்றை அலசிப் பார்க்கவும் துவங்கினார். அவற்றில் அவளின் கடைசிப் பிரியாவிடையைப் பற்றிய துப்பு ஏதாவது கிடைக்கிறதா என்றும் பார்த்தார். வேண்டுமென்றே தாய் எடுக்கும் மாத்திரைகள் பற்றி கவலைப்படாமல் இருந்தார். ஏனெனில் அவனுடைய தந்தையின் இறுதி நாட்களில் தாய் அங்கே இருந்திருக்கிறாள் என்று அவர் நம்பினார். அவர்களுடைய குடும்பம் எப்பொழுதுமே தூக்கமின்மையால் பாதிக்கப்பட்ட ஒன்று. ஆனால் தன் தந்தையின் ஐந்தாவது இறந்த தினத்தில் ஆசிரியர் ஃபே தாயைக் கவனிப்பதை நிறுத்திக் கொண்டார். உலகத்தைப் பற்றி ஒன்றுமே சொல்வதற்கில்லை என்று அன்று அவள் சொன்னாள். அதைத் தவிர்க்கமுடியாது என்பதால் தான் அப்படிச் சொன்னாள். பொழுதுபோக்குக்காக அல்ல. அவள் தன் வாழ்க்கையை முடித்துக் கொள்ள மாட்டாள் என்று அவருக்கு அப்போது புரிந்தது.

அடுத்த நாள் அந்த இணையத்தள கஃபே கணினியில் அந்தப் பெண்ணின் இணையத்தளத்தை ஆசிரியர் ஃபே பார்வையிட்டபோது அவர் விட்ட செய்தியைக் காணவில்லை. அவர் ஏன் ஆச்சரியப்பட்டார்? இருந்தும் அவள் ஒரு தந்திரமான பொய்க்காரி என்று இன்னொரு செய்தியை அச்சடித்தபோது அவருடைய கைகள் நடுங்கின. அப்பொழுது பதினேழோ பதினெட்டோ வயதுக்குக் கூடாத ஓர் இணையர் இன்னொரு கணினியிலிருந்து ஆசிரியர் ஃபே கணினி விசைப்பலகையை கடுமையாக தட்டுவதை ஒருவித ஒவ்வாத பார்வையால் அவரைப் பார்த்தார்கள்.

இணைப்பின் நகல் எடுக்கப்பட்டது.

அவர் வழமையாக பாவிக்கும் கணினி அரட்டை அறைகளில் அவருக்கு இன்று கவர்ச்சியானதொன்றும் இருக்கவில்லை. ஒரு வியாபாரம் காரணமாக வெளி நாட்டுக்குப் போவதாக ஓர் அரட்டை அறையில் இருந்த ஒரு சிநேகிதியிடம் சொன்னார். அந்தச் சிநேகிதி தன்னை வாசனை அழகி என்று அழைத்துக் கொள்பவள். பின் அடுத்த அரட்டை அறைகளில் அதே பெயரில் இருந்தவர்களிடமும் அந்த செய்தியைத் திரும்பச் சொன்னார். அப்படிச் செய்தால் சரசமாடுவதற்குக் காத்துக் கொண்டு வீணாகக் காத்திருக்கும் ஆண்களை கண்டு பிடிக்கலாம் என்று அவர்களுக்குத் தெரியும். முதல் நாளிரவு தன்னுடைய செய்திக்கு அந்தப் பெண்ணினதும் அவளுடைய பெண் தோழிகளினதும் எதிர்வினைகள் எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்தார். குறுகிய மனம் படைத்த பெண்களுக்கு சிறந்த எதிருரை ஒன்றை எழுதினார். அந்தச் செய்தியையும் அவள் அழித்து விடுவாள் என்பது அவருக்குத் தெரியும். அதை அவரால் நிறுத்தவும் முடியாது அவளின் நேர்மையின்மையை அம்பலப்படுத்தவும் முடியாது. ஆசிரியர் ஃபே கணினியைப் பூட்டி விட்டு சுற்றுமுற்றும் பார்த்தார். அப்போது ஒரு சிறுமியின் சுவெற்றறுக்குள் ஒரு சிறுவன் தன் கையை விட்டு அப்படியும் இப்படியும் தடவிக் கொண்டிருப்பதைக் கவனித்தார். அவளுடைய ப்றாவின் கொக்கியை தேடி அதைக் கழற்ற அலைவதாக இருக்கலாம். அந்தச் சிறுமி கணினியின் திரையை நேராகப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய உடம்பு அவன் கையுடன் ஒத்துழைத்தது. அது அவளின் இன்ப அனுபவத்தைக் காட்டிக் கொடுத்தது.

அந்த சிறுமி ஆசிரியர் ஃபே கவனிப்பதைக் கண்டு தன் நண்பனை நிறுத்தச் சொல்லி சமிக்ஞை செய்தாள். அவன் கையை எடுக்காமல் ஆசிரியர் ஃபேய்க்கு ஏதோ சொல்லி அச்சுறுத்தினான். ஆசிரியர் ஃபே தன் கைகளை உயர்த்தி சரணடைவது போல காட்டி விட்டு அவ்விடத்தை விட்டு போவதற்கு எழும்பினார். அந்த இணையரைக் கடந்து போகும் போது தன் பெரு விரல் ஒன்றை உயர்த்தி அந்தச் சிறுவனைப் பார்த்து புன்னகைத்து முறுவலித்தார். இருவரும்

சேர்ந்து சதி செய்யும் தோழர்கள் போல. அந்தச் சிறுவன் எதிர்பாராமல் பிடிபட்டதால் தன் முகத்தை மறுபக்கம் திருப் புவதற்கு முன் இனிமையாக இளித்தான்.

ஆசிரியர் ஃபே ஒருபோதுமே ஒரு பெண்ணின் முலைகளைக் கைகளால் பொத்திப் பிடித்தவரில்லை. ஒரு கணம் மந்திர சக்தியால் அந்தச் சிறுவனை காணாமல் செய்து விட்டு அந் தப் பெண்ணுக்குப் பக்கத்தில் தான் நிற்பதகாக எண்ணிக் கொண்டார். தெருவோரம் இருந்த ஒரு கடையில் சோடா அருந்தினார். எப்படிப்பட்ட முட்டாள்த்தனம் என்று தன் னையே நொந்து கொண்டார். கடும் கோபம் கொண்ட அந் தப் பெண்ணும் அவளுடைய மோசடியும் தான் அவருடைய அமைதியைக் கெடுத்தது என்றும், இந்த உலகத்திலுள்ள அருவருப்புகளிலிருந்து தன்னைப் பாதுகாக்க, தான் தன் அம்மாவின் உண்மையான மகனாக பிறந்திருக்க வேண்டும் என்றும் அவளுடைய உயர்குடி இரத்தமும் அமைதியும் தன் நரம்பில் ஓடிக் கொண்டிருக்க வேண்டும் என்றும் விரும்பி னார்.

தன்னுடைய தாய் அவருக்கு ஒருமுறை அளித்த நல்வாய்ப்பு அதிக காலம் அவரிடம் நீடிக்கவில்லை. பதினெட்டு வயதில் அவர் ஓர் ஓவியக் கலை மாணவனாக இருந்து நாட்டின் மிகச் சிறந்த ஓவியக் கல்லூரி அனுமதிக்காக காத்திருந்தார். ஒருவருடத்திற்கிடையில் பிற்போக்கு அறிவு ஜீவிகள் சங்கத் தின் முன்மாதிரியான அங்கத்தவரான அவருடைய தந்தை பேராசிரியர் பதவியிலிருந்து கழிவறை சுத்தம் செய்பவராக தரமிறக்கப்பட்டார். அத்துடன் ஆசிரியர் ஃபேயின் கல்வியும் நிறுத்தப்பட்டது. அடுத்து வந்த இருபதாண்டுகள் ஆசிரியர் ஃபேயின் தாய் அவருடைய தந்தையுடன் ஒரு கட்டடத்திலி ருந்து இன்னொரு கட்டடத்திற்கு சென்றாள், ஒரு கையைச் சுத்தம் செய்யும் கருவிகள் இருந்த வாளியும் மறு கை கண வனுடைய கையையும் பிடித்திருந்தது. ஏதொவொரு விருந் துக்குப் போவது போல. இருந்தும் இறுதியில் அவளுடைய கணவனை அவரின் மனக் கசப்பிலிருந்து காப்பாற்ற முடிய வில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் பல்கலைக்கழகத் தில் அவரை மீண்டும் பழைய பதவியில் அமர்த்திய போதும் அவர் தற்கொலை செய்து கொண்டார்.

அடுத்த நாள் அந்தப் பெண்ணுக்கு அனுப்பிய அவருடைய இரண்டாவது செய்தியையும் இணைய உலகம் பறித்துக் கொண்டது. அதில் ஒரு வித்தியாசம் இருந்தது. ஒரு பெண் அந்தப் பெண்ணை நவீன சீனாவின் ஒழுக்கத்தின் காவலாளி என்று புகழ்ந்து எழுதியிருந்தாள். அந்தச் செய்தி தடித்த எழுத்துக்களில் ஆசிரியர் ஃபேயைப் பார்த்து கேலி செய்தது.

அவர் அவசரமாக இன்னொரு இணைய அஞ்சலை எழுதி னார். பின்னர் அதை மென்மையான தொனியில் வெவ்வேறு வார்த்தைகளில் மறுவாக்கம் செய்ய இருபது நிமிடங்கள் செலவிட்டார். ஆனால் இன்னொரு நாள் அந்த செய்தியை யும் அழித்தபோது அவருக்கு ஆத்திரம் பொங்கியது. ஒரு புதிய செய்தியில் 'பெண் தேள்' என்றழைத்தார். அவளை எவனும் மணம் முடிக்க போவதில்லை என்றும் எவனும் அந் தப் பிழையை விட்டு அவளுடைய விஷக் கடிக்கு ஆளாகப் போவதில்லை என்றும் எழுதினார். அவளுடைய தந்தையின் மீது அவர் மிகவும் இரக்கம் கொண்டார். ஏனென்றால் அவ ளைப் போன்ற தீமையான ஒரு மகள் எந்தவொரு தந்தை யையும் நரகத்தில் தான் உழல விடுவாள் என்று நினைத் தார்.

ஆசிரியர் ஃபே தட்டச்சுவதை நிறுத்தினார். அப்போது புகைப்படத்தில் அந்தத் தந்தையின் மகிழ்ச்சியற்ற முகம் நினைவுக்கு வந்தது. அவளின் தந்தையை அவனுடைய வேலைத்தளத்திற்கு கிட்டவுள்ள வீதியில் உள்ள தொலைபே சிச் சாவடியிலிருந்து அழைக்கத் தீர்மானித்தார். அந்த வேலைத்தளம் பிரச்சார அமைச்சுடன் இணைந்த ஒன்று. மறு புறத்தில் ஒரு பெண் பதிலளித்தாள். ஆசிரியர் ஃபே அந்த மனிதனின் பெயரைச் சொல்லி அவளிடம் கேட்டபோது எதற் காக அவரை அழைக்கிறாய் என்று அவள் கேட்டாள். அவன் தன்னுடைய பழைய பாடசாலை நண்பன், அவனுடன் உள்ள தொடர்பு அறுந்துவிட்டது என்று சொன்னார். அவனு டன் தொடர்பு கொள்ள அதை விட வேறு இலக்கம் தன்னி டம் இல்லை என்றும் மன்னிப்பும் கேட்டார்.

அந்தப் பெண் முதலில் தாமதித்தாள். பின் அவனைக் காத் திருக்கும்படி சொன்னாள். திரும்பவும் தொலைபேசியை அவள் எடுத்தபோது ஆசிரியர் ஃபே அங்கிருந்த குரலைக் கேட்டு ஆச்சரியப்பட்டுப் போனார். அந்தக் குரல் மிகவும் வயதுபோன ஒருத்தரின் குரலாக இருந்தது. ஆசிரியர் ஃபேயின் பெயரை அந்தப் பெண்ணின் தந்தை கேட்டபோது தன்னுடைய பெயர் அவசியமில்லை என்றும் ஒரு மனிதன் தன்னைப் போன்ற இன்னொரு மனிதன் துன்பத்தில் இருக்கி றபோது அனுதாபப்பட்டு அழைப்பதாகச் சொன்னார். நேரடி யாகச் சந்திக்க முடியுமா என்று ஆசிரியர் ஃபே அவனைக் கேட்டார். அதைச் சொல்லிக் கொண்டிருக்கையில் நடு வச னத்தில் தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டு விட்டது.

திருமதி லூாவோ அடுத்த நாள் வந்தபோது ஆசிரியர் ஃபே அன்று மாலையில் சற்று நேரம் தாமதமாக நிற்க முடியுமா என்று அவளைக் கேட்டார். கூடுதலாக வேலை செய்யும் நேரத்திற்கு இரண்டு மடங்கு பணம் தருவதாகவும் சொன் னார். திருமதி லூாவோ தனக்கு அது சிரமம் என்று சொல் லிக் கொண்டு ஒத்துக் கொண்டாள். ஆசிரியர் ஃபேயைப் போன்ற ஒருத்தருக்கு தன் தாயைக் கவனிப்பதிலிருந்து அவ் வப்போது ஓய்வு தேவைப்படும் என்றும் சொன்னாள். அதைச் சொல்லும்போது திருமதி லூாவோ தன் குரலைத் தாழ்த்த வில்லை. அப்போது ஆசிரியர் ஃபே தன் தாயைப் பார்த் தார். அவள் சாய்மனைக் கதிரையில் இருந்து கொண்டிருந் தாள். அவள் கண்கள் நிலத்தில் சூரியக் கதிர் விழுத்திய ஒரு சதுரமான பொட்டில் பதிந்திருந்தன. திருமதி லூாவோ வுக்கு முன் கீழ்ப்படிவுள்ளவளாக அமைதியாக இருப்பாள். திருமதி லூாவோவும் பலரைப் போல ஆசிரியர் ஃபேயின் தாய், மறதி நோயால் நீண்ட காலமாக வேறொரு உலகத்

தில் இருக்கிறாள் என்று நம்பினாள்.

அவனைப் போன்ற இன்னொரு மனிதன்! வீதியில் சென்று கொண்டிருந்தபோது ஆசிரியர் ஃபே திருமதி லூாவோவின் வார்த்தைகளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். அவனைப் போன்ற இன்னொரு மனிதன் என்றால் என்ன? தன் இரத்தத்தை கடத்துவதற்கு வாரிசாக மகன் இல்லாத ஒரு பிரமச்சாரி மகனா? ஓய்வு பெற்ற ஓவிய ஆசிரியரா? அவரிடம் ஆரம்ப பாடசாலையில் ஓவியம் படித்த மாணவர்கள் மேல் வகுப்புக்குச் சென்றவுடன் அவரை மறந்து விடும் ஒருத்தனா? செய்தித்தாள் விற்பனையாளனிடம் ஃபஷன் சஞ்சிகை வாங்கும் அவமானகரமான முதியவனா? தன் பின் மதியங்களை பதின்ம வயதினர் செலவிடும் இணையத்தளத்தில் செலவிடுபவனா? புதிய பெயர்களையும் கதைகளையும் உருவாக்கி கற்பனாவாதப் பொய்களை இணையத்தில் அனுப்புபவனா? எதற்கு அவன் தகுதியானவன்? அவனுடைய தாயை அவள் சாகும் வரை கவனிப்பது மட்டுமே உலகத்தில் அவனுக்கிருக்கும் ஒரேயொரு காரணம். அதைத் தவிர அவன் எதற்குத் தகுதியாவன். இந்த உலகில் இலக்கற்று நடப்பதற்கா? அவனைப் போன்ற ஒருத்தன் போவதற்கு வேறு இடங்கள் இருக்கின்றன. மலிவாக பாதம் பிடித்து விடும் இடங்கள், அழுக்கான திரைக்குப் பின்னால் கிராமத்திலிருந்து அழைத்து வந்த களைத்து சோர்ந்து போன இளம் பெண் தன் கைகளால் அவன் சொல்லும் இடங்களில் பிடித்து விடுவாள். அப்போது அவள் திரைக்குப் பின்புறம் இன்னொருத்தியுடன் கதைத்துக் கொண்டும் இருப்பாள். அல்லது, அவன் கொஞ்சம் கூடுதலாக செலவளிக்கத் தயாராக இருந்தால் - அவனால் அது முடியும். அவனுக்கு சஞ்சிகை வாங்குவதையும் இணையத்தள கஃபேக்குப் போகிறதைத் விட வேறு செலவில்லை - பல காலத்திற்கு முன்பே விலை கூடிய தூரிகைகளையும் தாள்களையும் வாங்குவதை நிறுத்திவிட்டான். அவை தான் ஓர் ஓவியன் என்று நடிப்பதற்கு தேவையாக இருந்தன. குளியல் அரண்மனைகள் தமது சூடான கதகதப்பைத் தருவதற்கு அவனை வரவேற்கும். அங்கே அவன் தெரிவுக்கு ஏற்ற ஒரு பெண் அவனுக்குச் சேவை செய்யக் காத்துக் கொண்டிருப்பாள். அவையா?

ஆசிரியர் ஃபே அந்த நிறுவனத்தை அடைந்தபோது ஐந்து மணி கடந்து சில நிமிஷங்கள் ஆகி இருந்தது. அந்தச் சிறுமியின் தந்தை மற்றவர்களைப் போல வேலை முடிந்தவுடன் வீட்டுக்கு ஓடிப் போகிற ரகம் அல்ல என்பது ஆசிரியர் ஃபேயின் அனுமானம். அப்படிப் போவதற்கும் அவருக்கு அதிக காரணமும் இருக்கவில்லை. ஆசிரியர் ஃபே வந்ததை அறிவிப்பதற்காக ஒரு காவலர் போனபோது அவர்கள் திரும்பி வரும் வரை ஆசிரியர் ஃபே, நிறுவனத்தின் வாசலில் இருந்த பெயர்ப் பலகையை வாசித்துக் கொண்டிருந்தார். ‘மாக்சிச இயங்கியல் பொருள் முதல்வாத சங்கம்’ என்று அதில் எழுதப்பட்டிருந்தது. தன்னுடைய தந்தை இப்பொழுது உயிரோடு இருந்திருந்தால், சீன தத்துவ வாதிகள் உருவாகாமல் செய்தவர்கள் தான் இப்படியான நிறுவனங்களில் உள்ள ஒட்டுண்ணிகள் என்று சொல்லியிருப்பார் என்று நினைத்தார்.

‘என்னைப் பிழையாகப் புரிந்து கொள்ளாதீர்கள். நான் ஒரு நியாயமான மனிதன்,’ என்று ஆசிரியர் ஃபே அந்தப் பெண்ணின் தந்தை வந்தபோது சொன்னார். அதாவது, ‘உங்களுடைய நிலைமையில் உள்ள ஒருவரில் மிகவும் அனுதாபம் கொண்ட ஒருத்தன் நான்,’ என்றார்.

‘எனக்கு உங்களைத் தெரியாது,’ என்றார் அந்த மனிதர். ஆசிரியர் ஃபேக்கு அந்த மனிதனின் வயது தெரிந்திருக்காவிட்டால் அவருக்கு அறுபது வயதுக்கு மேல் இருக்கும் என்று ஊகித்திருப்பார். அவருடைய தலை மயிரில் கறுப்பிலும் பார்க்க நரை முடிகள் அதிகமாக இருந்தன. முதுகு பயந்த சுபாவத்தால் கூனி இருந்தது. அவருடைய வயதில் உள்ளவர்கள் அநேகரிலும் பார்க்க அவர் மரணத்திற்கு அருகாமையில் இருந்தார். சிலவேளை சாவில் அமைதி காணலாம் என்று அவர் எதிர்பார்த்து இருக்கலாம் என்றும் நினைத்தார்.

ஒருத்தனுடைய மனைவியோ மகளோ ஒருத்தனுக்கு கொடிய எதிரியாக இருக்கலாம் என்றால் ஒரு அந்நியன் அவனுக்கு உண்மையான உயர்ந்த நண்பனாகக் கூட இருக்கலாம் என்று ஆசிரியர் ஃபே பதிலளித்தார். இருவரும் தேநீர் அருந்த அல்லது மது அருந்தப் போகலாமா என்று கேட்டார். அந்த நேரம் ஒரு சிறு கூட்டம் தொழிலாளர்கள் அந்த நிறுவனத்திலிருந்து எதிர்ப்பக்கம் இருந்த பேருந்து நிறுத்தும் இடத்திற்கு அவர்களைக் கடந்து போய்க் கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்திலிருந்த இரண்டு பெண்கள் அவர்களைத் திரும்பிப் பார்த்து ஏதோ குசுகுசுத்தார்கள். பெண்ணின் தந்தை பின்வாங்கினார். அவர் ஏற்கெனவே சிறையில் வாழ்வதும் வீதியில் செல்பவர்களுக்கு அந்தச் சிறையின் கம்பிகள் கண்ணுக்குத் தெரியாது என்பதும் அவளுக்குத் தெரியுமா என்று ஆசிரியர் ஃபே நினைத்துக் கொண்டார்.

ஆறுதலாகக் கதைப்பதற்கு அவனுடைய அலுவலுகத்திற்குப் போகலாமா என்று ஆசிரியர் ஃபே அவரிடம் கேட்டான். அதை அவர் விரும்ப மாட்டார் என்று ஆசிரியருக்குத் தெரியும். பதிலாக அருகாமையிலிருக்கும் ஒரு உணவத்திற்குச் செல்லலாம் என்று அவர் அவசரமாக ஒத்துக் கொண்டார். அவரைப் போன்ற ஒருவரைத்தான் இந்த உலகம் எளிதாகக் கொடுமைப்படுத்தும் என்று ஆசிரியர் எண்ணினார். பிழையான ஒருத்தரை தான் தேடி வரவில்லை என்ற திருப்தி அவருக்கு இருந்தது.

உணவகத்தில் பெண்ணின் தந்தை வாசலுக்கு வெகு தூரத்திலிருந்த ஒரு மூலையை இருப்பதற்காகத் தெரிவு செய்தார். அங்கிருந்து மங்கிய வெளிச்சத்தில் மேசையை ஓரக் கண்ணால் பார்த்து மேசையிலிருப்பதற்கு முன் அதிலிருந்த எண்ணெய்ப் பசையை துடைத்தார். பரிசாரகி வந்தபோது ஆசிரியர் ஃபே அரிசி மதுவும் துண்டு துண்டாக வெட்டப்பட்ட குளிர்ந்த இறைச்சித் துண்டு ஒரு கோப்பையும் கேட்டார்.

ஆசிரியர் ஃபே மது குடிப்பவர் அல்ல. அத்துடன் உப்பில் ஊறவைத்த பன்றியின் கல்லீரலோ நாக்கோ சாப்பிட்டதும் இல்லை. ஆனால் இரண்டு ஆண்களுக்கு இடையே உருவாகும் நட்பு கடுமையான மதுவுடனும் வெவ்வேறு இறைச்சியுடனும் ஆரம்பமாக வேண்டும் என்று எண்ணினார்.

இருவரும் ஒரு கணம் பேசாமல் இருந்தார்கள். அவர்கள் கொடுத்த ஆணை வந்தவுடன் ஆசிரியர் ஃபே பெண்ணின் தந்தையின் கிளாசுக்குள் கொஞ்ச மதுவை ஊற்றி, நல்ல மது எல்லா நோவுகளையும் துடைத்து விடும் என்றார். பிறகு தனக்கும் ஒரு கிளாஸ் மதுவை ஊற்றிக் கொண்டார். ஆனால் இருவருமே மதுவையோ இறைச்சியையோ தொடவில்லை என்பது மிக விரைவாகவே தெரிந்து விட்டது. பெண்ணின் தந்தைக்கும் அதேபோல ஆசிரியர் ஃபேக்கும் அந்த இருளடைந்த உணவகத்தில் இருக்கப் பிடிக்கவில்லை என்பதும் தெரிந்தது.

‘நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?’ அவர்கள் இருவருக்கிடையே அமைதி நிலவியதைக் கண்ட நடுத்தர வயதுடைய உணவக பெண் உரிமையாளர் துருவித் துருவி அறிய விரும்பும் பார்வையுடன் அவர்கள் பக்கம் திரும்பியபோது ஆசிரியர் ஃபே கேட்டார். அந்தப் பெண் உரிமையாளர் காசு மேசையில் இருந்து உணவு மேசைகளில் இருந்தவர்களை கவனித்துக் கொண்டிருந்தார்.

பெண்ணின் தந்தை தன் தலையை ஆட்டி, ‘எனக்குக் கேள்வி புரியவில்லை,’ என்றார்.

‘நீங்கள் உங்கள் மகளில் வழக்குத் தொடர வேண்டும்,’ என்றார் ஆசிரியர் ஃபே. அதைக் கேட்டவுடன் தந்தை பகைமையால் உறைந்து போவதைப் போலத் உறைந்து போனார். சிலவேளை இன்னொருவரும் அப்படியான ஆலோசனையை அவருக்கு வழங்கி இருக்கலாம். அல்லது அவளின் ஆத்திரத்தைப் பயன்படுத்தி தந்திரமானதொரு சட்டத்தரணி தன்னலத்திற்காக அவளுடைய தந்தைமீது வழக்குத் தொடர்ந்திருக்கலாம்.

தன்னால் எந்தவித சட்டவுதவியையும் செய்ய முடியாது என்று விளங்கப்படுத்தினார் ஆசிரியர் ஃபே. ஓய்வு பெறுவதற்கு முன்பு தான் ஓர் ஆரம்ப பாடசாலையில் ஓவிய ஆசிரியராக இருந்தார் என்றார். அந்தத் தந்தையைப் புண்படுத்தவோ அந்த நிலைமையில் அவருக்கு உதவி செய்யும் நிலைமையிலோ தான் இல்லை என்பதையும் சொன்னார். அவருடைய மகளின் கதையை சமூக வலைத்தளத்தில் பின்தொடர்ந்து வாசித்தார் என்பதையும் அவர்களுடைய குடும்ப புகைப்படத்தைப் பார்த்தபோது தான் அவருக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று விரும்பினார் என்பதையும் தவிர வேறொரு நோக்கமும் தமக்கு இல்லை என்றார். ‘இந்த உலகத் தில் எத்தனை பேர் இந்த மனிதரின் வேதனையை புரிந்து கொள்வார்கள்?’ என்று உங்கள் படத்தைப் பார்த்தபோது நான் என்னையே கேட்டுக் கொண்டேன்’ என்றார்.

பெண்ணின் தந்தை நெளிந்தார். ‘நீங்கள் நினைப்பது போன்ற மனிதன் நான் அல்ல,’ என்றார்.

‘என்ன?’ என்றார் ஆசிரியர் ஃபே அவர் சொன்னதன் பொருள் புரியாமல். ஆண்களில் நட்புக் கொள்பவன் நான் இல்லை, ஆகவே அந்த நட்புக் கதையைத் தயவு செய்து நிறுத்துங்கள் என்றார் பெண்ணின் தந்தை. அவ்வேளை பக்கத்து மேசைகளில் உள்ள சோயா சோஸ் போத்தில்களை பரிசோதித்துக் கொண்டிருந்த பெண் உரிமையாளர் இவர்கள் இருவரும் அடங்கிய குரலில் கதைத்த போதிலும் தன் காதுகளைக் கொடுத்துக் கேட்கத் துவங்கினாள்.

அவர் சொன்னதைப் புரிந்து கொள்ள ஆசிரியர் ஃபேக்கு ஒரு கணம் சென்றது. நீங்கள் நினைப்பது போல நானும் அப்படியான ஆள் இல்லை என்று எதிர்ப்புத் தெரிவிக்க நினைத்தார். ஆனால் ஏன் அப்படிச் செய்ய வேண்டும்? ஏனென்றால் கேலிக்கிடமான இந்த உலகத்தவர்களிடம் இருந்து தன்னைப் பாதுகாக்க எதிர்ப்புத் தெரிவிக்கத் தேவையில்லை என்ற தீர்மானத்தைப் பல காலத்திற்கு முன்பே எடுத்திருந்தார்.

பெண் உரிமையாளர் அந்த மேசைக்கருகில் வந்து உணவு மது ஆகியவற்றின் தரம் எப்படி இருக்கிறது என்று கேட்டார். பெண்ணின் தந்தை அதற்கும் பதிலளிக்கவில்லை. ஆசிரியர் ஃபே நன்றாக இருக்கிறது என்றார். அவள் ஒரு கணம் கால நிலை பற்றி அவர்களுடன் பேசி விட்டு தன் மேசைக்குச் சென்றாள். அதன் பின்பு தான் பெண்ணின் தந்தை வீட்டுக்குப் போவதற்கு நேரமாகி விட்டது என்று சொன்னார்.

‘யார் உங்களுக்காக வீட்டில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்?’ என்று கேட்டார் ஆசிரியர் ஃபே, அவரைப் பார்த்து. ‘ஒரு நிமிசம் நிற்க முடியுமா?’ என்றார் திரும்பவும். அவருடைய கோரிக்கை பரிதாபமாகத் தோன்றியிருந்தாலும் அதைப் பற்றி அவர் கவலை கொள்ளவில்லை. ‘நீங்களும் நானும்..’ அவர் மெதுவாகச் சொல்லத் துவங்கினார், உணவகத்தின் வாசலை நோக்கியபடி. அங்கே இரண்டு கல்லூரி மாணவர்கள் ஒரு ஆணும் பெண்ணுமாக, சுவரில் மாட்டியிருந்த உணவுப்பட்டியலை வாசித்துக் கொண்டிருந்தார்கள். ‘ஒருத்தர் வந்து எங்கள் கழுத்தை நெரிக்கும்போது எங்களைப் போன்ற மனிதர்கள் கால்களை உதைக்கவோ கைகளை அங்குமிங்கும் எறியவோ மாட்டார்கள். நாங்கள் திருப்பிச் சண்டை பிடிக்காவிட்டால் நாங்கள் குற்றவாளிகள் என்று பலரும் கருதுவார்கள். சிலர் நாங்கள் முட்டாள்கள் அல்லது பைத்தியக்காரர்கள் என்று கூட நினைப்பார்கள். ஒரு சிலரே எங்களைக் கண்ணியமானவர்கள் என்று எண்ணுவார்கள். ஆனால் உங்களுக்கும் எனக்கும் தான் தெரியும் அவர்கள் எல்லோரும் தவறு என்று, இல்லையா? என்றார் ஆசிரியர் ஃபே.

மேசையில் சில காசுத்தாள்களை விட்டுச் செல்ல நினைத்த பெண்ணின் தந்தை மனம் மாறி தன் விரல்களை இறுக்கிப் பிடித்துக் கொண்டார். ஆசிரியர் ஃபே கல்லூரி மாணவர்கள் ஜன்னலின் பக்கத்தில் உள்ள இருக்கைகளில் இருப்பதை கவனித்தார். ஒரு மாணவன் ஒரு மாணவியின் கைகளை தன் கைகளால் சுற்றிப் பிடித்திருந்தான். பெண்ணின் தந்தை திரும்பவும் இருந்தவுடன் ஆசிரியர் ஃபே நன்றியுடன் தன் தலையை ஆட்டினார். தன்னுடைய ஈரமான கண்களை அவர் பார்த்து விடுவார் என்ற பயத்தினால் அவர் பெண்ணின் தந்தையை நிமிர்ந்து பார்க்க விரும்பவில்லை. ‘எனக்கு இருபத்து நான்கு வயதாக இருக்கையில் நான் ஒரு மாணவியுடன் காதலில் விழுந்தேன் என்று குற்றம் சாட்டப்பட்டேன்,’ என்றார். அந்தப் பள்ளி கோவையில் அதை, ‘குழந்தைகளிடம் பாலியல் எண்ணத்துடன் நடந்து கொண்டவர்’ என்று எழுதியிருந்தார்கள். அவருக்குப் பின்னால் அவரைப் பற்றிய உரையாடல்களில் அதை மறைமுகமாகக் குற்றம் சாட்டினார்கள். அந்தச் சிறுமிக்கு பத்தரை வயது. சாதாரணமான ஒரு மாணவி. அவள் மற்ற மாணவர்களிலும் திறமையான மாணவியோ அல்லது அவர்களிலும் பார்க்க கல்வியில் குறைந்தவளோ அல்ல. கற்பித்தலின் போது நாங்கள் காணும் ஒரு மாணவி தான். அவளுடைய முகத்தை அவள் மற்றவர்களுடன் கலந்திருக்கும்போது வேறாகக் கண்டுபிடிக்கவும் முடியாது. அவளுடைய பெயரை பலமுறை தவறாகவும் அழைப்பார்கள். அப்படியிருந்தும் அவள் முகத்தில் ஏதோவொரு அமைதி காணப்பட்டது. ஒருவித அமைதி. அது கூச்சத்தால் அல்லது கவனக் குறைவால் வந்ததல்ல. அவளுடைய வயதுக் குழந்தைகளிடம் காணப்படுவது தான். அது ஆசிரியர் ஃபேயில் ஓர் ஆர்வத்தை ஏற்படுத்தியது. அவளை பதினைந்து, இருபது, முப்பது வயதுகளில் வைத்துக் கற்பனை செய்து பார்க்க அவரைத் துாண்டியது. வேறு எந்த முகத்தையும் கற்பனை செய்யத் துாண்டாத அந்த முகத்தைப் பற்றி புரிந்து கொள்வதற்காக அவரைக் கற்பனைச் செய்யத் துாண்டியதே அல்லாமல் அவளின் மேல் அவருக்கு எந்த விழைவும் இருக்கவில்லை. ‘நீங்கள் மணம் முடித்து இருந்த போது இன்னொரு பெண்ணையும் வைப்பாட்டியாக வைத்திருந்தீர்களா என்று நான் கேட்காதது போல நீங்களும் என்னை வேறு எந்தக் கேள்வியையும் கேட்காதீர்கள். உங்கள் மச்சாளுக்கும் உங்களுக்கும் என்ன நடந்தது என்பதோ எனக்கும் அந்த மாணவிக்கும் என்ன நடந்ததோ அது பிரச்சினையே இல்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் எல்லாம் குற்றம் சாட்டுபவர்களுக்குத் தேவை என்றபடியால் தான் உயிர் வாழ்கின்றன. உங்களுடைய மச்சாள் இல்லாவிட்டால் நீங்கள் உங்களுடைய மனைவியைப் போதியளவு விரும்பவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுவதற்கு இன்னொரு பெண் வந்திருப்பாள், இல்லையா?’

கிளாசிலிருந்து மதுவைக் கொஞ்சம் உறிஞ்சி விட்டு அதை வைக்கும்போது கொஞ்ச மது கீழே கொட்டியது. நயமற்ற தன் செயலுக்காக அவர் மன்னிப்புக் கேட்டார்.

‘இந்த நாட்டில் வாழ்பவர்கள் குற்றங்களை கண்டுபிடிப்பதில் மிகவும் திறமையுள்ளவர்கள் என்று எனது தாய் சொல்லுவார். ஆனால் அதிலும் பார்க்க அதற்குரிய தண்டனையையும் கண்டுபிடிப்பதிலும் திறமையானவர்கள்,’ என்றார் ஆசிரியர் ஃபே.

அவரும் அவருடைய மச்சாளும் இளம் குழந்தைகளாக இருந்த காலத்தில் இருவரும் ஒருவரை ஒருவர் திருமணம் முடிப்பதாக சபதம் பூண்டிருந்தார்கள் என்றார் பெண்ணின் தந்தை. அதுவொரு குழந்தைகள் விளையாட்டு. ஏறக்குறைய. ஏனென்றால் அந்த நேரம் வந்தபோது அவர்கள் வேறு வேறாகப் பிரிந்து சென்று விட்டிருந்தனர். அவர்கள் திரும்பவும் சந்தித்தபோது அவள் ஒரு விதவையாகி இருந்தாள். அப்போது அவளுக்கு நகரத்தில் ஒரு வேலை எடுக்க அவர் சிறிது முயற்சி எடுத்தார். ஆனால் அவள் ஒருபோதுமே அவருடைய வைப்பாட்டியாக இருக்கவில்லை.

‘இவற்றை எனக்கு விளங்கப்படுத்தத் தேவையில்லை. உங்களில் எனக்கு நம்பிக்கை இருந்திருக்காவிட்டால் உங்களைத் தேடி வந்திருக்க மாட்டேன்,’ என்றார் ஆசிரியர் ஃபே. ஒருத்தன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஆயிரம் காரணங்களைக் கூறலாம். ஆனால் தன் மகள் உட்பட பலரும் அவனுடைய முகத்துக்கு முன்னாலேயே ஏளனமாகச் சிரித்து விட்டு அவனைப் பொய்யன் என்று அழைப்பார்கள். ஆசிரியர் ஃபேயைப் பற்றிய குற்றச்சாட்டில் ஒரு பதினொரு வயது மாணவி தன் பெற்றோர்களிடம் சென்று இளம் ஆசிரியரான ஃபே தன்னுடன் படிக்கும் சக மாணவியின் மீது பொருத்தமற்ற கவனம் செலுத்துகிறார் என்று சொல்லியிருக்கிறாள். பிறகு மற்றச் சிறுமிகளை இது பற்றி விசாரித்தபோது அவர்களும் அந்தக் கற்பனையில் எளிதாகத் தொற்றி அப்படியே சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர் ஃபேயை அதிபர் விசாரித்தபோது அவள் எப்படியானவள் என்பதில் மட்டும் தான் ஆர்வமாக இருந்தேன் என்று கூறியிருக்கிறார். ஒரு முகத்தில் அத்தனை மர்மங்கள் எப்படி வெளிப்படையாகத் தெரிந்தன என்று திரும்பவும் அவரை அழுத்தி விசாரித்தபோது அவரால் அதை விளங்கப்படுத்த இயலவில்லை. அவருடைய அந்தத் தயக்கம் பெற்றோர்களுக்கும் சக ஆசியர்களுக்கும் பெரும் கோபத்தை உண்டாக்கியது. முடிவில் அவருடைய கோவையில் ‘குழந்தைகளில் பாலியல் ஈர்ப்பாளன்’ என்று எழுதி இருந்தார்கள்: குழந்தைகளிடம் காட்டும் தீய விழைவு தான் காரணம் என்று குற்றம் சுமத்தியவர்களிடம் அவனைப் பற்றி எண்ண வைக்கப்பட்டது.

‘உண்மையை பார்க்க முடியாதவனால் அதைப் பார்க்க வைக்க முடியும் என்று நம்ப முடியாது,’ என்றார் ஆசிரியர் ஃபே. ‘எல்லாக் குற்றங்களையும் என்னால் மறுத்திருக்க முடியும். ஆனால் மறுத்திருந்தாலும் என்ன வித்தியாசத்தை கண்டிருக்க முடியும்?’

‘அப்படியானால் எந்த ஆதாரமும் இல்லையா?’ என்று முதன் முறையாக அந்தக் கதையில் ஆர்வம் கொண்டு பெண்ணின் தந்தை கேட்டார்.

‘என்னைச் சிறையில் போடுமளவுக்கு ஒரு காரணமும் இருக்

கவில்லை,' என்றார் ஆசிரியர் ஃபே.

'ஒருத்தர் உன்னைப் பற்றித் தகவல் தெரிவித்திருக்கிறார்கள்?'

'ஒரு இளம் சிறுமியின் கற்பனையை எங்களால் குற்றம் சாட்ட முடியாது, இல்லையா?' என்றார் ஆசிரியர் ஃபே.

பெண்ணின் தந்தையின் கண்கள் ஆசிரியர் ஃபேயின் கண்களைச் சந்தித்தன. அப்படியான ஒன்றைத் தான் அவருடைய மகளும் செய்திருக்கலாம் என்றார் பெண்ணின் தந்தை. 'உங்களை உங்களுடைய வேலையில் இருந்து நீக்க வேண்டும் என்று அதைச் செய்திருக்கலாம்,' என்றார் அவர், ஒரு கசப்பான புன்முறுவலுடன். அவருடைய நகைக்சுவை ஆசிரியர் ஃபேயை ஆச்சரியப்படுத்தியது. மேலும் 'நீங்கள் ஓர் அதிர்ஷ்டசாலி என்று நினைத்துக் கொள்ளுங்கள்' என்றார்.


ஆசிரியர் ஃபே தலையை ஆட்டினார். அவர் ஒவ்வொரு ஆண்டும் மாவட்டச் சுவரோவியப் போட்டியில் பள்ளிகூடத்திற்காக பரிசு வென்று கொடுத்திருக்கிறார். அவருடைய ஓவியத்தில் இருந்த இலட்சியமும் பயிற்சியும் இறுதியில் அவரை ஒரு கைவினைஞர் ஆக்கி இருக்கிறது. ஆனால் அவர் தலைவர் மாவோவின் உருவப்படத்தைத் திறமாக வரைந்து மாவட்டத்திலேயே முதலாவதாக வந்திருக்கிறார். அது அவர் தன் தொழிலை இழக்காமல் காப்பாற்றியது. அது நல்லதிர்ஷ்டமல்லவா? பின் திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கும் நேரம் வந்து போய் விட்டது. ஒரு பெண்ணின் எதிர்காலத்தைக் கெடுக்க எந்தத் திருமணத் தரகரும் விரும்பவில்லை. அவருடைய நற்பெயர் அப்படிப்பட்டதாக இருந்தது. இருந்தும் அவருடைய பெற்றோர் அவரை மென்மையாகவும் மரியாதையாகவுமே நடத்தினார்கள். ஒருபோதும் அவரைக் கேள்வி கேட்கவில்லை. ஆனால் பொதுக் கழிவறைகளைச் சுத்தமாக்குபவர்களான அவர்கள் அவருக்கு ஆறுதல் சொல்ல இயலவில்லை. பதிலாக அவரின் தனிமையைக் குலைக்காமல் அவரை அப்படியே இருக்க விட்டு விட்டார்கள். உண்மையில் தான் ஓர் அதிர்ஷ்டக்காரரர் தான் என்று இப்போது ஆசிரியர் ஃபே சொன்னார். அவர் ஒருபோதுமே மணம் செய்யவில்லை. அதனால் அவர் மனைவிக்கு விசுவாசமற்ற கணவன் என்றோ மோசமான தந்தை என்றோ அவரைக் குற்றம் சாட்டவில்லை.

'நான் மணம் முடித்து ஒரு குடும்பத்தை உருவாக்கியது விவேகமற்ற செயல், இல்லையா?' என்றார் பெண்ணின் தந்தை. 'நான் விவாகரத்துச் செய்வதற்கு முன்பு, மூன்று காரியங்களைச் செய்வேன் என்று என்னுடைய மகள் சொன்னாள். முதலாவது, உன்னில் வழக்குத் தொடர்ந்து உன்னைச் சிறையில் அடைப்பேன். அது நடக்காவிட்டால் உன்னுடைய குற்றத்தை உலகம் முழுக்க அறியச் செய்வேன். அதுவும் என்னைத் தன் தாயிடம் திரும்பச் செய்யாவிட்டால் உன்னைக் கொல்ல எலிப் பாஷாணத்துடன் வருவேன் என்றாள். இப்போ உனக்குச் சொல்கிறேன். அவள் முதல் இரண்டு விசயங்களையும் செய்து விட்டாள். அவளுடைய மூன்றாவது வாக்குறுதியை எப்போ நிறைவேற்றுவாள் என்று காத்துக் கொண்டிருக்கிறேன். என்னுடைய வாழ்க்கையில் எந்தவித மர்மமும் இனி இல்லை என்பது நல்லதிர்ஷ்டம் என்றே எண்ணுகிறேன்.

கல்லூரி மாணவர்கள் காசு மேசைக்குச் சென்று தங்கள் கட்டணத்தைத் செலுத்துவதை ஆசிரியர் ஃபே பார்த்தார். மாணவன் கட்டணம் செலுத்துவதற்காக நாணயங்களை எண்ணிக் கொண்டிருந்தான். மாணவி உணவகத்தை நோட்டம் விட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய கண்கள் ஆசிரியர் ஃபேயின் மேலும் படிந்து சென்றன. மாணவன் அவர்களைக் கவனிக்கவில்லை. 'இந்த உலகத்தைப் பற்றிச் சொல்ல எனக்கு ஒன்றும் இல்லை,' என்றார் ஆசிரியர் ஃபே.

எனக்கும் அப்படித்தான் என்று பெண்ணின் தந்தையும் சொன்னார். பின்னர் இருவரும் ஒன்றும் பேசாமல் மௌனமாக நெடுநேரம் இருந்தார்கள். பெண் உரிமையாளர் வந்து இன்னும் ஏதாவது உணவு வேணுமா என்று அவர்களைக் கேட்கும்வரை அப்படி இருந்தார்கள். பின் இருவரும் தங்கள் பணப் பையை வெளியே எடுத்தார்கள். 'நான் கொடுக்கிறேன்,' என்றார் ஆசிரியர் ஃபே. மற்றவர் ஒரு கணம் தயங்கினார். ஆனால் வாதிடவில்லை.

அந்திப் பொழுதில் மெல்லிய மூடுபனி காற்றில் கலந்திருந்தது. இருவரும் கைகுலுக்கி விட்டுப் பிரிந்தனர். ஒருவருக்கொருவர் சொல்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை. மற்றவர் வீதியில் இறங்கி நடப்பதை ஆசிரியர் ஃபே பார்த்துக் கொண்டு நின்றார். அவர்களின் குறைந்தளவு நேரச் சந்திப்பில் எதுவும் மாறாது என்று ஆசிரியர் ஃபேக்குத் தெரியும். தன்னுடைய தாயைப் பற்றிச் சிந்தித்தார். அவர் திரும்பி வருவதற்காக அவர் காத்துக் கொண்டிருப்பார். அந்தப் பதற்றத்தை திருமதி லூவோவுக்கு அவர் காட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை. தன்னைக் காட்டிக் கொடுத்த சிறுமியைப் பற்றி சிந்தித்தார். அவளுக்கு இப்போது வயது ஐம்பத்திரண்டு இருக்கும். நிச்சயமாக ஒரு மனைவியாகவும் ஆகி இருப்பாள். தாயாகியும் இருப்பாள். அவர் அப்படி நினைப்பதில் தவறில்லை. அவனுடைய தாயைப் போல பெண்ணாகியும் இருப்பாள். அவளைத் திரும்பவும் அவன் சந்திக்கவே இல்லை. அவள் அவனிலும் பார்க்க அதிக காலம் வாழ்வாள். அவனுடைய தந்தையை விடத் தாய் வாழ்வது போல. பெற்றோரின் அழகும் அறிவும் தன் தந்தையை போன்ற ஒருத்தரை நற்கதி சேர்த்தது போல அவனையும் நற்கதி சேர்க்கும். ஆனால் பெண்ணின் தந்தை, வீதி விளக்குகளைச் சுற்றி செம்மஞ்சள் நிற ஒளிவட்டம் விழும் இரவைப் பார்த்துக் கொண்டு, ஏக்கமோ பயமோ இல்லாமல், மகளின் பழி வாங்கும் திட்டத்தை தெரிந்து கொண்டு, மன நிம்மதியுடன், எப்போது அதை நிறைவேற்றுவாள் என்பதை எதிர்பார்த்துக் கொண்டு, அதற்கு ஒத்துழைப்பதற்கான விருப்பத்துடன் நடந்து கொண்டிருந்தார்.



mahalingam.k@thaiveedu.com

# மிரட்டிப் போன மொங்கோலியப் பேரரசு

**– நிமால் நாகராஜா**




தென்னாசியாவில் சோழப் பேரரசின் தர்பார் கொஞ்சம் கொஞ்சமாக நலிவடைந்து போய்க் கொண்டிருந்த காலங்களில், மத்திய ஆசியாவில் ஒரு தனி மனித புரட்சி நடந்தது. அந்தப் புரட்சி அடுத்த நூற்றாண்டு கால உலக வரலாற்றை தலைகீழாக மாற்றிப் போட்டது.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் அது. அமெரிக்க கண்டம் கண்டுபிடிக்கப்படாத காலம். ஆசியாவும், ஆபிரிக்காவும், ஐரோப்பாவும் மட்டுமே உலகம் என்றிருந்த காலப்பகுதி. இன்றைய ஈரான், துருக்கி, வடக்கு பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய Khwarezmian எனும் பேரரசு மத்திய ஆசியாவில் பலம் பெற்றிருந்த வரலாற்றுப் பகுதி. பேரரசன் மொஹமட்டின் கீழ் பரந்திருந்த இந்த சாம்ராஜ்ஜியத்தின் போர் வீரர்கள் மட்டுமே நாலு இலட்சம் பேர்கள். அத்தனை வலிமையான அரசு.

ஒருநாள் ஐந்நூறு வணிகர்கள் கொண்ட குழு ஒன்று இந்த பேரரசின் கிழக்கு எல்லைக்கு வந்து சேர்கிறது. பேரரசன் மொஹமட்டுக்கு ஏராளமான தங்க, வெள்ளி, பட்டு பரிசுகளுடன் வந்திருந்த இந்த வணிகர்களை அனுப்பி வைத்தவன் மொங்கோலிய நாட்டு அரசன் ஒருவன். பேரரசன் மொஹமட்டின் பிரதேசத்தில் வாணிகம் செய்ய அனுமதி கேட்டு வந்திருந்த அவர்கள் அத்தனை பேரையும் அந்த நகர தளபதி கொலை செய்கின்றான்.

செய்தி மொங்கோலிய மன்னனுக்கு எட்டுகிறது. மனம் தளராத அவனோ மூன்று தூதுவர்களை நேரடியாக பேரரசனை சந்திக்க அனுப்பி வைக்கின்றான். சக்ரவர்த்தி மொஹமட்டின் முன்னால் மூன்று தூதர்களும் விநயமாக வணங்கி நிற்கின்றார்கள். தங்கள் வணிகர்களுக்கு எல்லையில் நடந்த கொடுமையை கூறி, தங்கள் நாடு பேரரசுடன் வியாபாரம் செய்ய ஆவலாக இருப்பதாய் சொல்கிறார்கள். அவர்கள் மூவரையும் புழுக்களாய் பார்க்கின்ற பேரரசன் மொஹமட், மூவருக்கும் மொட்டையடிக்க உத்தரவிடுகிறான். பின் ஒருவன் சிரச்சேதம் செய்யப்படுகிறான். அவனது தலை மற்றைய இருவரிடமும் கொடுத்தனுப்பப்படுகிறது.

உலக வரலாற்றில் ஒரு மன்னன் செய்த மகாபெரிய தவறு இதுவாகத்தான் இருக்க முடியும்.

கொய்யப்பட்ட தலையுடன் தன் முன்னே நின்று கொண்டிருந்த இரண்டு தூதர்களையும் தன் இடுங்கிய கண்களால் உற்று நோக்குகின்றான் மொங்கோலிய மன்னன். இம்முறையும் பேரரசன் மொஹமட்டினை சந்திக்க மொங்கோலியாவிலிருந்து குழு ஒன்று புறப்படுகின்றது. ஆனால் பேச்சுவார்த்தைக்காக அல்ல, போருக்காக. படைக்கு தலைமை தாங்குபவன் மொங்கோலிய அரசன். படை வலிமை இரண்டு இலட்சம் போர்வீரர்கள்.

இந்தப் போர் பதியப்பட்ட வரலாற்றுப் பக்கங்களிலிருந்து இன்றும் குருதி வழிந்து கொண்டிருக்கும் அளவுக்கு மனித குலம் சந்தித்த மாபெரும் அழிவு அது. மூன்று முனைகளில் முன்னேறிய மொங்கோலிய படைகளின் அகோரத்தை எவராலும் தடுத்து நிறுத்த முடியவில்லை. எதிர்ப்பட்ட அத்தனை பேர்களும் கொல்லப்பட்டனர். நகரங்கள் தரை மட்டமாக்கப்பட்டன. கொய்யப்பட்ட தலைகள் கோபுரங்களாய் எழுந்தன. தனது தவறு ஒன்றினால் முழு சாம்ராஜ்ஜியமே உலக வரைபடத்திலிருந்து முற்றாக துடைத்தெடுக்கப்படுவதை பார்த்துக் கொண்டே பேரரசன் மொஹமட் பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தான். ஓடுவதைத் தவிர அவனால் வேறு ஒன்றும் செய்திருக்க முடியாது. ஓடி, ஓடி களைத்த மொஹமட் இறுதியில் அநாதரவாக இறந்து போகின்றான். பல இலட்சம் மக்கள் கொல்லப்படுகின்றார்கள். இந்தப் பேரரசின் ஓர் அங்கமாக இருந்த இன்றைய ஈரான் தேசம் தனது பழைய மக்கள் தொகையை மீண்டும் எட்டுவதற்கு எழுநூறு ஆண்டுகள் எடுக்கும் அளவுக்கு அத்தனை அழிவு.

அந்த காலகட்டத்தில் மத்திய ஆசிய அரசுகள் அத்தனைக்கும் சிம்ம சொப்பனமாய் இருந்தவனும், ரோமர்கள் நானூறு வருடங்களில் சாதித்ததை வெறும் இருபத்தைந்து வருடங்களுக்குள் சாதித்து காட்டியவனும், உலகில் இதுவரை தோன்றிய சிறந்த போர் வீரர்களின் வரிசையில் மிக இலகுவில் முதலிடத்தை பெறக்கூடியவனுமான அந்த மொங்கோலிய மன்னனின் பெயர் ஜெங்கிஸ்கான். அடிமை வாழ்க்கையிலிருந்து, அசைக்க முடியாத சக்ரவர்த்தியாய் உயர்ந்த அவன், பெருந்தொகை மக்களால் மகா வீரனாகவும், வெற்றி கொள்ளப்பட்டவர்களினால் குரூர வில்லனாகவும், வரலாற்று ஆசிரியர்களினால் அசாத்திய ஆற்றல் உள்ளவனாகவும் சித்தரிக்கப்படுகின்றான். ஒரு தனிமனிதன் உலக வரலாற்றை எவ்வாறு திருப்பிப் போடலாம் என்பதற்கு இவன் மிகப்பெரும் ஒரு சாட்சி.

அந்த நேரத்தில் மொங்கோலியா என்று ஒரு நாடு கிடை



யாது. பரந்த புல்வெளிகளிலும், மலைப் பிரதேசங்களிலும் ஏராளமான குழுக்களாய் மக்கள் பிரிந்திருந்தனர். ஒரே மொழியை பேசிய போதும், ஒரே குணவியல்புகளை கொண்டிருந்த போதும், அந்த குழுக்களிடையே பெரும் பகைமை நிலவியது. அடிக்கடி கொலைகளும், கொள்ளைகளுமாய் அந்தக் குழுக்கள் சிதறிக் கிடந்தன.

அந்த நாடோடிக் குழு ஒன்றின் தலைவராக இருந்த ஜெங்கிஸ்கானின் தந்தை எதிர்க்குழு ஒன்றினால் விஷமூட்டிக் கொல்லப்படுகின்றார். அப்போது தேமுஜின் என்ற இயற் பெயர் கொண்ட சிறுவன் ஜெங்கிஸ்கானுக்கு வயது ஒன்பது.

பரம்பரை வழி வரும் தலைமைப் பொறுப்பு தேமுஜினுக்கு மறுக்கப்படுகின்றது. எதிர் காலத்தில் போட்டியாக வரக்கூடும் என்ற அச்சத்தில் அவனின் குடும்பம் முற்று முழுதாக கிராமத்திலிருந்து விரட்டியடிக்கப்படுகின்றது. தேமுஜினின் கரடு-முரடான வாழ்க்கை ஆரம்பிக்கின்றது. பட்டினியும், துன்பமாகவும் அவனது வாழ்க்கை ஓடுகின்றது. இதனிடையே அவன் வேறு ஒரு குழுவினால் சிறை பிடிக்கப்பட்டு அடிமையாக்கப்படுகின்றான். ஏறத்தாழ ஐந்து வருடங்கள் அடிமை வாழ்வு.

அடிமை வாழ்வு முடிந்ததும் இளைஞன் தேமுஜினின் பெருங்கால கனவின் பயணம் தொடங்குகிறது. அத்தனை மொங்கோலியா குழுக்களையும் ஒன்றிணைக்கும் கனவு அது. சரியான திட்டமிடல், சிறந்த போர் ஆளுமை, போர் வீரர்கள் அனைவருக்கும் சம உரிமை, பரம்பரையாக அன்றி தகுதியுள்ளவர்களையே தலைமைக்கு நியமிக்கும் புதுமை, இவைகளே இவனின் பலங்கள். குழுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக இணைகின்றன. மொங்கோலியா எனும் நாடு முதன் முதலில் உருவாகுகின்றது. எழுத்து வடிவை தங்களது மொழிக்கு அறிமுகப்படுத்துகின்றான். சிறந்த சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மிகச் சிறந்த ஆட்சி. குழுக்களாய் சிதறியிருந்தவர்கள் தகைமை உள்ள தனி ஒருவனுக்கு பின்னால் மலைகளாய் எழுந்து நிற்கின்றனர். ‘பேரரசன்’ எனும் பொருள் தரக்கூடிய ஜெங்கிஸ்கான் எனும் பெயர் பூணுகிறான் தேமுஜின்.

ஜெங்கிஸ்கானுடைய பார்வை அகலமாக விரிகின்றது. மொங்கோலிய அரசை நிர்மாணித்தாயிற்று. அவனது புஜ வலிமைக்கு இது முடிவாக இருக்க முடியாது. மிகச் சிறந்த படையணிகள் உருவாகுகின்றன. ஏறத்தாழ இரண்டு இலட்சம் போர் வீரர்கள்.

இந்த வீரர்களைப் பற்றி ஒன்று சொல்லியாக வேண்டும். ‘பயம் என்ன விலை’ எனக் கேட்டபடி இவர்கள் குதிரைகளில் பாய்ந்து வருவதை தடுப்பதற்கு அந்தக் காலத்தில் எவரும் இருந்திருக்கவில்லை. குதிரைகள் தங்கள் முழு வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கும் போதே முன்னாலும், பின்னாலும் அம்பெய்யக் கூடிய அசாத்திய வீரர்கள். இயல்பாகவே போராற்றல் மிக்க இவர்களுக்கு புதுமையான போர் நுணுக்கங்களை கொண்ட பெருவீரன் ஜெங்கிஸ்கான் தலைமை தாங்குகிறான். விளைவு... வரலாறு விடை தருகிறது.

மொங்கோலியா எல்லையில் இரண்டு பெரும் சீனப் பேரரசுகள், Western Xia மற்றும் Jin பேரரசுகள். இந்த இரு பேரரசுகளும் வெறும் இரு வருடங்களுக்குள் ஜெங்கிஸ்கானின் வீரத்துக்கு இரையாகிப் போகின்றன.

மொங்கோலிய பேரரசு தொடர்ந்தும் விரிகின்றது. சுற்றியிருந்த குட்டிக் குட்டி அரசுகள் தங்கள் கோட்டைக் கதவுகளை தாங்களாகவே திறந்து விடுகின்றன. தனது பேரரசுக்குள்ளே வணிகத்தை விருத்தி செய்யும் ஜெங்கிஸ்கான் அதன் தொடர்ச்சியாகவே Khwarezmian பேரரசுடன் தொடர்புகளை ஏற்படுத்த முயற்சி செய்தான். பேரரசன் மொஹமட்-டின் தவறினால் அந்த சாம்ராஜ்ஜியத்தினையே வெற்றி கொள்ளும் ஜெங்கிஸ்கானின் படைகள் இப்போது மத்திய கிழக்கு பிரதேசத்தில் நிற்கின்றன.

போர் முடிந்ததும் படைகள் இரண்டாக பிரிக்கப்படுகின்றன. தளபதி சுபோடாய்-இன் தலைமையில் இருபதினாயிரம் போர் வீரர்கள் வடக்கு திசையில் பயணிக்கின்றனர். ஜெங்-கிஸ்தானின் தலைமையில் மற்றைய படையணி தெற்கு நோக்கி நகர்கிறது. வடக்குப் படையணி தனது வழியில் அகப்பட்ட அத்தனை அரசுகளையும் மென்று தின்கின்றது. ஆர்மேனியா, அஜர்பைஜான், ஜோர்ஜியா போன்ற அரசுகளுக்கு என்ன நடக்கிறது என தெரிய முன்பே வெற்றி கொள்ளப்படுகின்றன.

ரஷ்யா நாட்டு கீவ் பேரரசு தனது என்பதினாயிரம் படை வீரர்களுடன் போருக்கு வருகின்றது. பதுங்கு குழிகளுக்குள் தங்களை மறைத்துக் கொண்டு போருக்கு தயாராகவிருக்கும் ரஷ்ய போர் வீரர்களை நோக்கி மொங்கோலிய படையணி பாய்ந்து வருகின்றது. மிக அருகில் வந்ததும், பயந்தது போல் பாசாங்கு காட்டியபடி வெகு வேகமாக பின்வாங்குகின்றது. இங்கே தான் ரஷ்ய வீரர்கள் பெரும் தவறொன்

றைச் செய்தார்கள். எதிரிகள் பயந்து ஓடிவிட்டார்கள் என நினைத்து பதுங்கு குழிகளில் இருந்து வெளியே வந்து வெற்றிக் கூச்சல் போடுகின்றார்கள். கண் மூடித் திறப்பதற்குள் மொங்கோலிய குதிரை வீரர்கள் மூன்று பக்கத்தாலும் சுற்றி வளைக்கின்றார்கள். அடுத்த சில மணித் துளிகளில் மொத்த ரஷ்ய போர் வீரர்களும் மண்ணில் வீழ்ந்தார்கள்.

வெற்றி கொண்ட கீவ் அரசுக்கு அடுத்ததாக இருப்பது ஹங்கேரி அரசு. அதற்கு அடுத்தது ஐரோப்பிய தேசம். இத் தேசங்களை பற்றி அப்போது தான் கேள்விப்படும் மொங்கோலிய படைகள் அவற்றையும் வெற்றி கொள்ள தயாராகுகின்றனர். இதனிடையே ஜெங்கிஸ்கானிடமிருந்து நாடு திரும்புமாறு கட்டளை வருகின்றது.

தெற்கே ஜெங்கிஸ்கானின் பெரும் படையணி ஆப்கானிஸ்தானையும், இந்தியாவின் வடக்கு பகுதிகளையும் வெற்றி கொண்டவாறு மொங்கோலியாவிற்கு திரும்புகின்றது. இரண்டு படையணிகளும் பயணித்த மொத்த தூரம் எட்டாயிரம் மைல்கள். இத்தனை தூரத்தை இவ்வளவு குறுகிய காலத்திற்குள் எந்தவொரு படையணியும் இன்றுவரை கடந்ததில்லை.

தனது வாழ்வின் பெரும் பகுதியை போர்முனைகளில் கழித்த ஜெங்கிஸ்கானுக்கு இப்போது வயதாகி விட்டது. ஒரு சிறு குழுவிலிருந்து தொடங்கி ஒரு பெரும் பேரரசை நிறுவியவன் விடைபெறும் காலம் வருகின்றது. பெரும் புகழுடன், தனது அறுபத்தைந்தாவது வயதில் மரணமடைகின்றான். அவனது உடல் அவனது விருப்பப்படியே அடையாளம் தெரியாத கல்லறையொன்றில் புதைக்கப்படுகின்றது. எவ்வளவோ தேடியும் இன்றுவரை அவனது கல்லறை கண்டு பிடிக்கப்படவேயில்லை.

போர்களில் தன்னை எதிர்த்தவர்களுக்கு குரூரத்தின் எல்லையை காட்டிய போதும், ஜெங்கிஸ்கான் நிறைய நல்ல மாறுதல்களை மக்களுக்கு செய்திருக்கிறான். குழந்தைகளையும், பெண்களையும், படித்தவர்களையும், கைவினைஞர்களையும், மதத் தலைவர்களையும் பொதுவாகவே கொல்வதில்லை என்ற கொள்கையை பின்பற்றியவன். சரணடையும் எதிரிப் படைகளினை கொல்லாது தனது படையணிகளில் இணைத்துக் கொண்டவன். இதைவிட எல்லா வரலாற்று ஆசிரியர்களும் வியந்து கொள்வது இவனது ஆட்சியில் எல்லா மதங்களிடையேயும், இனங்களுக்கிடையேயும் மிகப் பெரிய ஒற்றுமை இருந்ததைத்தான். சகல மதங்களையும் சரிசமமாக மதித்ததோடு மட்டுமல்லாமல், எல்லா மதங்களை சேர்ந்தவர்களையும் அதிகார பொறுப்புகளில் அமர்த்தியவன். இந்த உரிமைகள் அன்றைய ஐரோப்பிய நாடுகளிலே கூட இருந்திருக்கவில்லை.

ஜெங்கிஸ்கானின் மறைவின் பின் அவனது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் மொங்கோலியப் பேரரசை இன்னும் விரிவாக்குகின்றனர். பேரனான குப்பிளாய்கான் சீன நாட்டின் யுவான் பேரரசை ஸ்தாபித்ததோடு, கொரியா நாட்டினையும் கைப்பற்றுகின்றான். சுமார் நூற்றைம்பது ஆண்டு காலம் மொங்கோலிய பேரரசு செல்வாக்கு செலுத்துகின்றது.

மொங்கோலிய பேரரசு மறைந்த பின்னும் அது விட்டுப் போன வீரம் மறையவில்லை. பிற்காலத்தில் துருக்கிய, மொங்கோலிய பரம்பரையில் வந்த தைமூர் இந்தியாவை ஒரு வழி பண்ணினான். அதன் பின்னர் தைமூரின் வழிவந்த தந்தைக்கும், ஜெங்கிஸ்கானின் வழிவந்த தாய்க்கும் பிறந்த ஒரு சூரப்புலி பிற்காலத்தில் இந்தியாவில் பெரும்புகழ் பெற்ற மொகலாய சாம்ராஜ்ஜியத்தை நிறுவியது. இந்தியாவின் வரலாற்றையே மாற்றிய அந்த வீரனின் பெயர் பாபர்.

காதல் கோட்டையான தாஜ்மகாலை கட்டிய சாஜகானின் எள்ளுப் பாட்டாவான பாபரின் வரலாறு மெய்சிலிர்க்க வைக்க கூடியது. இந்து தேசமான இந்தியாவை அந்நிய தேசத்திலிருந்து வந்து அடக்கியாண்டது மட்டுமன்றி அடுத்த இருநூறு வருடங்களுக்கு அசைக்க முடியாத சாம்ராஜ்ஜியத்தை நிறுவிக்காட்டிய அற்புதமான வீரம் நிறைந்த வரலாறு பாபருடையது.



nimal.nagaraj@thaiveedu.com





BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Off:416.491.4002
YS
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை

✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது

✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.

✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

CSC Credit Solution Centre

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com




BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE
Visit your one stop solution center
for all your super visa insurance needs...
SuperVisa.Today
www.supervisa.today
#416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS 4 REAL ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER
416.301.5555
RAJ SIVARAJAH BROKER
416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE
416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LePAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
RMG
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

**18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்**

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

**வாங்கப் போகிறீர்களா?**

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

**விற்கப் போகிறீர்களா?**

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்



















## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
info@vela4homes.com
www.vela4homes.com

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8




அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
Gas Furnace
CO
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners, Thankless Water Heater, Gas line install
Licensed Technician ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E: aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280


Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani - Judy
Real Estate
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
Narasinghan
Realtor
416.937.8090


SABONA



Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
www.ceycantranship.com
Kumar (905) 673-9863
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com


Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141


Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HomeLife/Champions Realty Inc. Brokerage
RAVEEN VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE


LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough


Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
Tel: 416-287-2222
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage



NO MEDICAL
UP TO $500,000
50 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INUSRANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
* வாங்க * விற்க * வாடகைக்கு...
Residential | Commercial
* BUY * SELL * LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
List your property with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet



நியூ
ரங்கனாஸ் நகைமாடம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
21
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
LOTUS
Funeral and Cremation Centre Inc.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC.
Kethes
Sivasubramaniyam
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5



DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"










நீங்கள் வீடு வாங்கும்போது
$8475.00
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chan, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

























